# INDEX TO
# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

SIXTY-FIRST SESSION OF THE LEGISLATIVE COUNCIL
UNDER THE CONSTITUTION OF INDIA.

B-No-137

VOLUME CLXXXII (Nos. 1 to 4)

2nd, 4th to 6th February 1982.

©
GOVERNMENT OF TAMIL NADU
1983

*Legislative Council Department*
*Fort St. George, Madras-600 009.*

CB *Rupee* : 1

VR11.32 N82
No. 1282
122050

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES.

## SIXTY-FIRST SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA

2nd, 4th to 6th February 1982.

VOLUME CLXXXII (Nos. 1 to 4)

TABLE OF CONTENTS.

*Tuesday, 2nd February 1982.*


| | PAGES |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... | i—v |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council ... ... ... ... ... | vii |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies ... ... | ix—xi |
| 1. Obituary References ... ... ... ... | 1—2 |
| 2. Condolence Resolution re— | |
| Death of Thiru P. Kakkan, former Minister of Tamil Nadu and Thiru Mohanlal Sukhadia, former Governor of Tamil Nadu ... ... | 2—20 |
| 3. Announcements— | |
| (1) Swearing in of new member ... ... | 20 |
| (2) Decision of the Business Advisory Committee | 46 |
| (3) Amendments to Motion of Thanks for Governor's Address ... ... ... | 46 |
| (4) Election of Members to the Senate of Madurai Kamaraj University ... ... ... ... | 47 |
| (5) Panel of Vice Chairmen ... ... ... | 47 |
| 4. Questions and Answers ... ... ... | 1—11 |
| 5. Discussion on the Governor's Address ... | 48—72 |
| 6. Papers laid on the table of the House ... | 73—86 |

PAGES

*Thursday, 4th February* 1982.

1. Questions and Answers ... ... ... 121—143

2. Point of Order *re*—

Statement in Governor's Address re assent by the President to the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1980 ... ... ... .. 143—145

3. Call Attention Notice—

Indefinite closure of Muthiah Polytechnic in Annamalai Nagar, due to strike by students ... 145—14

4. Discussion on the Governor's Address—*cont.* 147—20

5. Papers laid on the table of the House ... 203—20

*Friday, 5th February* 1982

PAGE

1. Questions and Answers ... ... ... 207—22

2. Call Attention Notice—

Direct action launched by Graduate teachers at 3 stages, pressing their 7-point demands ... 225—22

3. Discussion on the Governor's Address—*cont.* 227—22
246—29

4. Announcement *re*—

Decision of the Business Advisory Committee ... 24

5. Papers laid on the table of the House ... 291—29

*Saturday, 6th February* 1982.

1. Questions and Answers ... ... ... 295—32

2. Announcement *re*—

Election of Members to the Senate of the Madurai Kamaraj University ... ... ... ... 321

3. Call Attention Notice—

Certain attrocities commbitted on teachers by the management of Kamarajar Higher Secondary School, Nalumavadi, Tiruchendur Taluk in Tirunelveli district ... ... ... ... 321—323



*Saturday, 6th February* 1982—*cont.*

PAGES

4. Information *re*—

Portions expunged from proceedings of the House ... ... ... ... ... 323

5. Papers laid on the table of the House ... 376

6. Inex. ... ... ... ... ...381—419

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR OF TAMIL NADU.

Thiru SADIQ ALI.

*Members of the Council of Ministers.*

1. THE HONOURABLE THIRU M. G. RAMACHANDRAN, Chief Minister, in charge of Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses and Archealogy.

2. THE HONOURABLE DR. V. R. NEDUNCHEZHIYAN, Minister for Finance, in charge of Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. THE HONOURABLE THIRU S. RAMACHANDRAN, Minister for Electricity, in charge of Electricity, Iron and Steel Control.

4. THE HONOURABLE THIRU K. A. KRISHNASWAMY, Minister for Rural Industries, in charge of Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. THE HONOURABLE THIRU S. D. SOMASUNDARAM, Minster for Revenue, in charge of Revenue, Commercial Taxes, Excise and Census.

6. THE HONOURABLE THIRU R. M. VEERAPPAN, Minister for information and Religious Endowments, in charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests and Cinchona and Grant of Liquor Permits.

7. THE HONOURABLE THIRU C. ARANGANAYAGAM, Minister for Education, in charge of Education including Technical Education, Official Language and Handlooms.

8. THE HONOURABLE DR. K. KALIMUTHU, Minister for Agriculture, in charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, [illegible] மற்றும் [illegible].

8. மாண்புமிகு டாக்டர் க. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

வேளாண்மை, வேளாண்மை உற்பத்தி, வேளாண்மை பொறியியல் பிரிவு, மற்றும் [illegible] பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், [illegible] பற்றி சட்டம் இயற்றல், [illegible] உள்ளிட்ட [illegible] நிலையாணை, மற்றும் கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

நகராட்சிகள், மாநகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, [illegible], பூமிதானம், கிராமதானம் மற்றும் [illegible].

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

தொழிலாளர், வீட்டுவசதி, குடிசைமாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர்—வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் —

மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு க. இராசாமுகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ப்.

14. மாண்புமிகு திரு. க. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் —

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. க. திருநாவுக்கரசு (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் —

பெருந்தொழில்கள், சுரங்கமும்-கனிவளமும் மற்றும் நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் (கதர் மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் —

கதர், மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக) பயண இசைவுச் சீட்டு, பொதுப்பணித்துறை மற்றும் பொதுப்பணித் துறை அலுவல்கள் சம்பந்தமாக.

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

ஆதிதிராவிடர் நலம், எழுதுபொருள்—அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூகநலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள் வெளி நாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்.

---

மாண்புமிகு மேலவைத் தலைவர்.

டாக்டர் ம.பொ. சிவஞானம்.

மேலவைத் துணைத் தலைவர்.

புலவர் புலமைப்பித்தன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.*

1. திரு. சி. பா. [illegible].
2. திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி.
3. திரு. எ. ஜெ. தாஸ்.
4. திரு. சி. இராமலிங்கம்.

மேலவைச் செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

சார்புச் செயலாளர்.

திரு. த. ப. செல்லதுரை, பி.எஸ்ஸி., பி.எல்.

விவாதப் பதிப்பாளர்.

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

தலைமை நிருபர்.

திரு. ச. சுவாமிநாதன்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
| --- | --- |
| (1) | (2) |
| 1 அருணாசலம், திரு. க. .. | நியமனம். |
| 2 ஆறுமுகம், திரு. சோ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 3 ஆற்காடு வீராசாமி, திரு. நா. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 4 ஆனந்தம், திரு. வி.வி.வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 5 இராகவானந்தம், திரு. எஸ். (தொழிலாளர் நல அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 6 இராசா முகமது, திரு. கா. (பாசனத்துறை அமைச்சர்.) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 7 இராமமூர்த்தி, திரு. க. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 8 இராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 9 இராதா, திரு. எஸ். ஆர். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 0 கண்ணப்பன், திரு. காடுவெட்டி | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 1 சங்கரலிங்கம், திரு. ம. | திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 2 சண்முகம், திரு. ப. உ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 3 சந்தோஷம், திரு. த. | தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் தொகுதி. |
| ( ஜனார்த்தனம், டாக்டர் இரா. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 5 சிவஞானம், டாக்டர் ம.பொ. (மாண்புமிகு தலைவர்). | நியமனம். |
| சீத்தாபதி, திரு. ஆர். டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| சீதாதேவி கிருஷ்ணசாமி, திருமதி. | நியமனம். |

தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

இந்திய அரசியல் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட சட்டமன்ற மேலவையின் அறுபத்தி மூன்றாவது கூட்டத் தொடர்.

---

செவ்வாய்க்கிழமை, 1982 பிப்ரவரி 2.

தை 20, துன்மதி, திருவள்ளுவராண்டு—2013.

[illegible] மண்டபத்தில் முற்பகல் 9-30 மணிக்கு, [illegible] (டாக்டர் ம. பொ. [illegible]) [illegible] கூடியது.

I. இரங்கல் குறிப்புகள்.

[illegible] மற்றும் [illegible] ஆகியோர் [illegible].

மாண்புமிகு மேலவைத் தலைவர் [illegible] [illegible] முன்னாள் [illegible].

[illegible] முன்னாள் [illegible] 1981 [illegible] இயற்கை எய்தினார். அவர் 1952-53 [illegible] இருந்தார்.

திரு. [illegible] அவர்கள், 26-11-1981 [illegible] இயற்கை எய்தினார். அவர் [illegible] 1960 முதல் 1966 வரை இந்த அவையின் [illegible] இருந்தார்.

1 D II—C 95—1

9. THE HONOURABLE THIRU C. PONNAIYAN, Minister for Co-operation and Law, in charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. THE HONOURABLE THIRU P. KOLANDAIVELU, Minister for Local Administration, in charge of Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. THE HONOURABLE THIRU S. RAGHAVANANDAM, Minister for Labour in charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. THE HONOURABLE DR. H. V. HANDE, Minister for Health, in charge of Health.

13. THE HONOURABLE THIRU K. RAJA MOHAMMED, Minister for Irrigation, in charge of Agro-Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. THE HONOURABLE THIRU S. MUTHUSWAMY, Minister for Transport, in charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. THE HONOURABLE THIRU S. THIRUNAVUKKARASU, Minister for Industries, in charge of Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. THE HONOURABLE THIRU S. N. RAJENDRAN, Minister for Public Works and Khadi, in charge of Khadi, Prohibition excluding grant of liquor permits, Passports, Public Works Department and Establishment matters relating to Public Works Department.

17. THE HONOURABLE THIRU M. VIJAYASARATHI, Minister for Adi Dravidar Welfare, in charge of Adi Dravidar Welfare, Stationery and Printing, Government Press, News-print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. THE HONOURABLE THIRUMATHI GOMATHI SRINIVASAN, Minister for Social Welfare, in charge of Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

# தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

## தமிழ்நாடு ஆளுநர்

### திரு. சாதிக் அலி.

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு திட்டம் சர்க்கரைப் பாகு, கழிவு, மற்றும் [illegible].

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்.—

நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன் வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

மின்சாரம், மற்றும் இரும்பு எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

கிராம, குடிசை சிறுதொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்கத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

வருவாய், வணிக வரிகள், ஆயத்துறை, மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா, மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி |
|---|---|
| (1) | (2) |
| 18 சுவாமிநாதன், திரு. ஜி. | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 19 தாமஸ், திரு. பா. ரா. | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி. |
| 20 தாமோதரன், திரு. ஏ. ஆர். | தமிழ்நாடு வடக்கு பட்ட தாரிகள் தொகுதி. |
| 21 தாரா செரியன், திருமதி. | நியமனம். |
| 22 தாஸ், திரு. ஏ. ஜே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 23 துரைசாமி, திரு. ஓ. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 24 நல்லசிவன், திரு. ஆ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 25 நீலநாராயணன், திரு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 26 புலமைப்பித்தன், புலவர் (துணைத் தலைவர்.) | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 27 மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி, திருமதி. | நியமனம். |
| 28 மாணிக்கம், திரு. ப. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 29 மியாகான், திரு. ஜே. எம். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 30 மீனாட்சிசுந்தரம், திரு. க. | தஞ்சாவூர் — திருச்சிராப்பள்ளி புதுக்கோட்டை ஆசிரியர்க தொகுதி. |
| 31 முத்து, திரு. எஸ். .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 32 முத்துசாமி, திரு. செ. .. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூ நீலகிரி ஆசிரியர்கள் தொகு |
| 33 முத்தையா செட்டியார், டாக்டர், எம். ஏ. | நியமனம். |
| 34 முனுசாமி, திரு. பி. .. | நியமனம். |
| 35 லீலாவதி, செல்வி. அ. | சென்னை-செங்கல்பட்டு ஆசி யர்கள் தொகுதி. |
| 36 லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா. | வட ஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர்கள் தொகுதி. |
| 37 வசந்த பை, திரு. ஜி. | சென்னை மாவட்டப் பட் தாரிகள் தொகுதி. |
| 38 வள்ளிமுத்து, திரு. ஈ. வெ. அ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 39 வீரப்பன், திரு. இராம. (செய்தி—அறநிலையத் துறை அமைச்சர்.) | மாநிலச் சட்டமன்றப் பேரவை |



| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 40 வெங்கடேசன், திரு. ஈ. எஸ். | நியமனம். |
| 41 ஹண்டே, டாக்டர் எச். வி. (மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.) | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி. |
| 42 ஜேப்பியார், திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 43 வெற்றிடம் .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 44 ஷை | ஷை |
| 45 ஷை .. | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 46 ஷை .. | ஷை |
| 47 ஷை .. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 48 ஷை .. | ஷை |
| 49 ஷை .. | செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50 ஷை .. | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51 ஷை .. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 52 ஷை .. | ஷை |
| 53 ஷை .. | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 54 ஷை .. | ஷை |
| 55 ஷை .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 56 ஷை .. | ஷை |
| 57 ஷை .. | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58 ஷை .. | ஷை |
| 59 ஷை .. | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 ஷை .. | ஷை |
| 61 ஷை .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62 ஷை .. | ஷை |
| 63 ஷை .. | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

திரு. ஆர். சக்திமோகன், மேலவை முன்னாள் உறுப்பினர் அவர்கள் 4—12—1981 அன்று மதுரையில் இயற்கை எய்தினார். அவர் 1972 முதல் 1978 வரை இந்த அவையின் உறுப்பினராக இருந்தார். அவர் ஒரு சிறந்த பத்திரிகையாளராகவும், எழுத்தாளராகவும் விளங்கினார்.

திரு. அப்துல் ஹமீத் பகுருதீன், மேலவை முன்னாள் உறுப்பினர் அவர்கள், 1—1—1982 அன்று சென்னை, பல்லாவரத்தில் இயற்கை எய்தினார். அவர் 1926-ல் மத்திய சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு உறுப்பினராகப் பணியாற்றினார். 1946 முதல் 1952 வரை இந்த அவையின் உறுப்பினராக இருந்தார். 1951—52 ஆம் ஆண்டுகளில் சட்டமன்ற மேலவையின் எதிர்க் கட்சித் தலைவராக இருந்தார்.

திரு. எ. சோமசுந்தர செட்டியார், மேலவை முன்னாள் உறுப்பினர், 18—1—1982 அன்று திருச்சியில் இயற்கை எய்தினார். அவர் 1952 முதல் 1964 வரை இந்த அவையின் உறுப்பினராக இருந்தார்.

இவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பங்களுக்கு நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த பெரியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(அவை உறுப்பினர் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினர்.)

## 2. இரங்கல் தீர்மானங்கள்.

### தமிழ்நாடு முன்னாள் அமைச்சரான திரு. பி. கக்கன் மற்றும் தமிழ்நாடு முன்னாள் ஆளுநர் திரு. மோகன்லால் சுகாதியா ஆகியோரின் மறைவு குறித்து.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

" அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினராகவும், 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரை அன்றைய ஒருங்கிணைந்த சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகவும் 1952-லிருந்து 1957 வரை அரியலூர் தொகுதி



யிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு நாடாளுமன்ற உறுப்பினராகவும், 1957 முதல் 1962 ஆம் ஆண்டு வரை மேலூர் தொகுதியிலிருந்தும் 1962 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரை சமயநல்லூர் தொகுதியிலிருந்தும் தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டும், 1957 முதல் 1967 ஆம் ஆண்டு வரை திரு. காமராஜர் மற்றும் திரு. பக்தவத்சலம் ஆகியோரின் அமைச்சரவைகளில் அமைச்சராகவும் பணியாற்றிய திரு. பி. கக்கன் அவர்கள் எளிமையான வாழ்க்கையை மேற்கொண்டவர். அவர் 23—12—1981 அன்று சென்னையில் இயற்கை எய்தியது குறித்து இந்த மேலவை தனது ஆழ்ந்த துயரைத் தெரிவித்துக் கொள்கிறது. அன்னாரது மறைவால் வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு இம்மேலவை தனது ஆழ்ந்த இரங்கலையும், பரிவுணர்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறது "

என்ற தீர்மானத்தையும்,

" 1976 ஆம் ஆண்டு முதல் 1977 ஆம் ஆண்டு வரை தமிழ் நாட்டின் ஆளுநராக இருந்த திரு. மோகன்லால் சுகாதியா அவர்கள் இன்றைய தினம் காலையில் இயற்கை எய்தினார் என்பதை அறிந்து இந்த அவை தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. அன்னாரது மறைவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு இம்மேலவை தனது ஆழ்ந்த இரங்கலையும் பரிவுணர்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறது "

என்ற தீர்மானத்தையும் முன்மொழிகிறேன்.

ஆளுநர் அவர்களின் கூட்டுக் கூட்டத்திற்குப் பிறகு ஆளுநர் உரையின்மீது விவாதத்தைத் தொடங்கக்கூடிய முதல் நாள் நிகழ்ச்சியை இந்த அவை எதிர்நோக்கி இருக்கும் சூழ்நிலையில் இரண்டு பெரியவர்கள் இயற்கை எய்தினமை குறித்து இரங்கல் தீர்மானங்களை முன்மொழிந்து அதற்குப் பிறகு அவையை ஒத்தி வைக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

இதற்கு முன்பும், சில இரங்கல் தீர்மானங்களை நாம் நிறைவேற்றியபோது, பல கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறோம். பொது வாழ்க்கையில் முன்னோடியாக வாழ்ந்து கொண்டிருக்கும் அல்லது வாழ்ந்து காட்டிய பெருமகன்கள் எல்லாம் ஒருவர் பின் ஒருவராக மறைந்து வருவதென்பது நமக்கெல்லாம் ஒரு பேரிழப்பு என்பதோடு நாட்டுக்கும் ஒரு துரதிருஷ்டமான சூழ்நிலையை உண்டாக்கியிருக்கிறது. அந்த வகையில் மறைந்த திரு. கக்கன் அவர்கள்

[திரு. கா. இராசா முகமது] [1982 பிப்ரவரி 2

மிகவும் எளிமையான பொதுவாழ்க்கையை மேற்கொண்டவர். அவர் பொறுப்பில் இருந்தபோது, அரசியல் காரணங்களுக்காக அவர்மீது பல குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியவர்கள்கூட, அவர் பொறுப்பிலில்லாதபோது எவ்வளவு சிரமமான நிலையில் இருந்தார் என்பதை உணர்ந்து தாங்கள் பொறுப்பற்ற நிலையில் பேசியதற்காக வருத்தப்படத்தக்க சூழ்நிலையை அவர் உருவாக்கினார். அவரைவிட ஒருவர் எளிமையாக வாழ்ந்துவிட முடியும் என்று நாம் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது என்ற அளவுக்கு ஒரு நல்ல முன்மாதிரியாக வாழ்ந்து காட்டினார். அப்படிப்பட்டவர் மறைந்தது என்பது நமக்கெல்லாம் ஒரு மிகப் பெரிய இழப்பாகும் என்பதை இந்த நாடு நன்கு உணர்ந்திருக்கிறது. அந்த வகையில் இப்பேரவை தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

அதைப் போலவே தமிழ் நாட்டில் ஆளுநராக இருந்த திரு. மோகன்லால் சுகாதியா அவர்கள் பாரதப் பிரதமர் அவர்களின் நம்பிக்கைக்கு உரிய ஒரு சிறந்த நிர்வாகியானவர். தொடர்ந்து பல ஆண்டுகள் அவர் இராஜஸ்தான் மாநிலத்தின் முதலமைச்சராகவும், வேறு பல முக்கிய பொறுப்புகளிலும் நீண்ட நெடுங்காலமாக இருந்து வந்தவர். அவரும் இன்றைக்கு மறைந்துவிட்டார். இந்திய அரசியலில் அவரது மறைவு ஒரு பெரிய இழப்பு என்றுதான் கருதப்பட வேண்டும்.

அவர் நமது மாநில ஆளுநராக இருந்தபோது, ஒரு மிகச் சிறந்த முன்மாதிரியைக் கடைப்பிடித்துக் காட்டினார்கள். இப்போதும் நாம் தொடர்ந்து நடத்தி வரும் காவிரி நீர்ப் பிரச்சினையில் நமது மாநில உரிமையைக் காப்பதிலும் அவர் தீவிரம் காட்டினார். அப்போது மாநிலச் சட்டமன்றம் கலைக்கப்பட்டதன் காரணமாக, அப்போது ஆளுநராக இருந்த அவர் மீண்டும் மக்களுடைய ஆதரவைப் பெற்று வரும் புதிய அமைச்சரவை வந்த பிறகே இந்தப் பிரச்சினையைக் குறித்துப் பேச முடியும் என்று அப்போது குறிப்பிட்டார். அன்றைய தினம் ஓரளவுக்கு நமக்குப் பாதகமாக அமைந்துவிடுமோ என்று நாமெல்லாம் அச்சப்பட்டுக் கொண்டிருந்த அந்த ஒப்பந்தத்தையே நிறுத்தி வைத்து, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அடுத்த ஆட்சி வரட்டும் என்று சொல்லி மிகச் சிறந்த முன்னுதாரணத்தைக் கடைப்பிடித்து இந்த மாநிலத்தின் உரிமையைக் காப்பாற்றினார். இதை எண்ணிப் பார்க்கிறபோது, இப்படிப்பட்ட ஒரு பெருமகனார் நம்மைவிட்டு மறைந்துவிட்டார்



1982 பிப்ரவரி 2] [திரு. கா. இராசா முகமது]

என்கிற செய்தி நமக்கு மிகுந்த கவலையை அளிப்பதாக இருக்கிறது. அவருடைய மறைவு நமக்கெல்லாம ஒரு பேரிழப்பு. அன்னாரது மறைவால் வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கும் நமது ஆழ்ந்த இரங்கலையும் பரிவுணர்ச்சியையும் இந்த அவை தெரிவித்துக் கொள்கிறது.

(முற்பகல் 9.40)

**திரு ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்து அந்த இலக்கணத்திற்கு ஓர் இலக்கியமாக வாழ்ந்த முன்னாள் அமைச்சர் திரு. கக்கன் அவர்கள் நம்மிடையே இருந்து மறைந்துவிட்டார்கள். விடுதலைப் போரில் தன்னை ஒரு தொண்டனாக, போர் வீரனாக, தளபதியாக ஆக்கிக்கொண்ட பெருமகனார் அவர்.

மதுரையை அடுத்த மேலூரில் அவர் வாழ்ந்திருந்தாலும்கூட, தமிழகத்தின் பல சட்டமன்றத் தொகுதிகளிலிருந்தும், பாராளுமன்றத் தொகுதிகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுகிற ஒரு நிலையை எய்தியிருந்தார் என்பது தமிழ் நாட்டு மக்களிடையே அவர் பெற்றிருந்த செல்வாக்கிற்கு ஓர் அடையாளமாக அமைந்திருந்தது. இந்திய விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்டு இடையறாது போராடி, நமக்கு விடுதலையைக் கொண்டு சேர்த்த பெருமகான்களில் தலைசிறந்தவர் அவர். அது மட்டுமல்லாமல், பொறுப்புக்கு வந்த பிறகு, சட்டமன்ற உறுப்பினராகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும், இருந்து, பின்னர் அமைச்சர் பொறுப்பை ஏற்று அவர் சிறப்பாகப் பணியாற்றிய நிலையை நாம் உணர்ந்திருக்கிறோம். அவர் பல்வேறு பொறுப்புக்களில் இருந்திருந்தாலும், தன்னை காந்தியடிகளின் உண்மையான சிஷ்யனாக ஆக்கிக் கொண்டு, எளிமையான வாழ்க்கையைக் கடைப்பிடித்து, பொது வாழ்க்கையில் ஈடுபடுகிறவர்கள் பின்பற்ற வேண்டிய வழிமுறைக்கு வழிகாட்டியாக தானே அமைந்து பணியாற்றியிருக்கிறார். அப்படிப்பட்டதொரு சிறந்த பெருமகனார் இன்று நம்மிடையே இருந்து மறைந்திருக்கிறார்.

அதைப் போலவே இராஜஸ்தான் மாநிலத்தில் 17 ஆண்டுக்காலம் முதலமைச்சராகவும், அதற்கு முன்னால் பல்வேறு பொறுப்புகளையும் வகித்த பெரியவர் நம்முடைய மாநிலத்தில் இரண்டாண்டு காலம் ஆளுநராக

## தமிழ்நாடு முன்னாள் அமைச்சரான திரு. பி. கக்கன் மற்றும் தமிழ்நாடு முன்னாள் ஆளுநர் திரு. மோகன்லால் சுகாதியா ஆகியோரின் மறைவு குறித்து

[திரு. ப. சங்கரலிங்கம்] [1982 பிப்ரவரி 2

இருக்கின்ற நிலையை நாம் பெற்றிருக்கிறோம். அவரும் இன்று நம்மிடையே மறைந்திருக்கிறார். அவருடைய சிறப்புகளைப்பற்றி அவை முன்னவர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

அவர் பம்பாயில் படிக்கிறபோது, சிறந்த விளையாட்டு வீரராக, கிரிக்கெட் வீரராக இருந்தார். பல ஆண்டுகாலம் முதலமைச்சராகவும், அதற்கு முன்னால் பல ஆண்டுகாலம் அமைச்சராகவும், அதற்குப் பின்னால இரண்டாண்டு காலம் ஆளுநராகவும் இருந்துவிட்டுச் சென்ற பிறகு, தான் வகித்த பெரும் பொறுப்புகளோடு நிறுத்திக்கொள்ளாமல், மீண்டும் அந்த மாநில அரசியலில் சாதாரண தொண்டரோடு இணைந்து செயல்பட்டார் என்றால், அவர் ஒரு விளையாட்டு வீரராக இருந்த காரணத்தால்தான் அவரால் அப்படிச் செயல்பட முடிந்தது என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. அப்படி தன்னை இந்த நாட்டின் வளர்ச்சிக்காக, இந்த நாட்டின் பெருமைக்காக அர்ப்பணித்துக்கொண்ட பெரியவர் இன்று நம்மிடையே இல்லை. இவ்விரு பெரியவர்களும் இந்த நாட்டின் விடுதலைக்காக தங்களை ஆட்படுத்திக்கொண்ட விடுதலை வீரர்கள். அவர்களுடைய மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இரங்கல் தீர்மானத்தில், முன்னவர் அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிற உணர்வோடு நானும் ஒன்றி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எங்களுடைய இரங்கலையும் தெரிவித்து, இவ்விரு பெரியவர்களுடைய குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும், ஆறுதலையும் தெரிவித்து அமைகிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இன்று மேலவையில் கொண்டுவரப்பட்டுள்ள இரங்கல் தீர்மானத்தோடு ஒருங்கிணைந்து, ஆசிரியர்கள்—பட்டதாரிகள் முற்போக்கு முன்னணியின் சார்பாக என்னுடைய இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காலஞ்சென்ற திரு கக்கன்ஜி அவர்கள் அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினராகவும் மாநிலச் சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்து செயலாற்றியதோடு மட்டுமல்லாமல், அமைச்சராகப் பொறுப்பேற்று, தமிழகத்திலே அமைச்சர்கள் எவ்வாறு எளிமையாக வாழ வேண்டும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக வாழ்ந்து சென்ற பெரியவர் [illegible] ம் உயர்த்தாமல்



## தமிழ்நாடு முன்னாள் அமைச்சரான திரு. பி. கக்கன் மற்றும் தமிழ்நாடு முன்னாள் ஆளுநர் திரு. மோகன்லால் சுகாதியா ஆகியோரின் மறைவு குறித்து

1982 பிப்ரவரி 2] [திரு. பா. ரா. தாமஸ்]

தமிழகத்தின் பெருமையையே அவர் உயர்த்தினார். அது மட்டுமல்லாமல, அவர் சார்ந்திருந்த காங்கிரஸ் கட்சியின் சிறந்த தலைவராகவும், பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் உண்மையான சீடராகவும் திகழ்ந்தார்.

மதுரை மாவட்டம், மேலூர் பகுதியில் பிறந்து வளர்ந்து, பசுமலை உயர்நிலைப் பள்ளியில் கல்வியைக் கற்றார் என்பதை அனைவரும் அறிவோம். படிக்கும் காலத்திலேயே உழைப்பின் மூலமாகத்தான் உயர்வு பெற முடியும், உழைப்பின் மூலமாகத்தான் ஊதியத்தை ஈட்ட முடியும் என்பதை எடுத்துக் காட்டினார். பள்ளியில் படிக்கும் காலத்திலே "பெல் மானிட்டராகவும்" "மெஸ் மானிட்டராகவும்" தன்னைத்தானே ஆக்கிக் கொண்டு, படிக்கும் போதே ஊதியத்தை ஈட்டிக் கொண்டு வாழ்க்கையிலே உயர்ந்தார். கடைசி வரையில் தூய்மையான வாழ்க்கையை வாழ்ந்து காட்டிய சிறந்த பெரியவர் அவர் என்பதை யாவரும் அறிவார்கள்.

அவருடைய கடைசிக் காலத்தில் அவருக்கு சிக்கல்கள், தொல்லைகள் ஏற்பட்டபோது தமிழக அரசு எந்த அளவிற்கு அவருக்கு உதவியது என்பதை நாம் பத்திரிகை வாயிலாக அறிந்தோம். அதைப் போலவே அவரை இழந்து வாடும் அவருடைய குடும்பத்தார் வாழ வழி வகுக்க வேண்டியது இந்த ஆட்சியின் பொறுப்பு என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

திரு. மோகன்லால் சுகாதியா அவர்கள் ஒரு வித்தியாசமான சூழ்நிலையில், அதாவது அவசர நிலை இருந்த சமயத்தில் நம்முடைய மாநிலத்தில் ஆளுநராக இருந்தபோதிலும் கூட, அவை முன்னவர் அவர்கள் கூறியதைப் போல, இந்த மாநிலத்தின் உரிமைகளைச் சிறப்பாகப் பாதுகாப்பதிலே முக்கிய பங்கு வகித்திருக்கிறார்.

ஆக இப்படி இவ்விரு பெரியவர்களும் கடைசி வரையில் உண்மையாகத் தொண்டாற்றிய முறை நிச்சயமாக நமக்கு ஒரு முன்மாதிரியாக அமையும் என்று கருதுகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் இத்தகைய பெரியோர்களின் முறைகளைக் கண்டு வழியை வகுத்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்து, மறைந்தவர்களுடைய குடும்பத்தாருக்கும், அவர்களுடைய நெருங்கிய உறவினர்களுக்கும் என்னுடைய இரங்கலைத் தெரிவித்து, அமைகிறேன்.

[1982 பிப்ரவரி 2

* **திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காந்தியடிகளுடைய சக்தியால் ஈர்க்கப்பட்டு, விடுதலை இயக்கத்தில் ஒருங்கிணைந்து நின்று, மிகப் பெரிய இன்னல்களை அனுபவித்த பெரும் தியாகிகள் மறைந்திருக்கிறார்கள்.

திரு. கக்கன்ஜியைப் பொறுத்த வரையில், விடுதலை இயக்கப் போராட்டத்தினுடைய கொடுமைகளை உடலாலும், உள்ளத்தாலும் ஏற்றுத் தாங்கியவர் என்பதை இந்த நேரத்தில் நினைவுபடுத்துவதை என்னுடைய கடமையாகக் கருதுகிறேன். அவர் உடல் நலம் இழந்ததற்குக் காரணம், விடுதலை இயக்கப் போராட்ட காலத்திலே வெள்ளை ஏகாதிபத்தியத்தின் அடிகளை உடலால் தாங்கியதுதான். சிறையிலே அனுபவித்த சித்திரவதைகளால்தான் இந்த நிலை உருவாகியது என்றாலும், கொஞ்சம் கூட மனம் தளராமல் நிலையாக நின்று தேசிய உணர்வோடு பாடுபட்ட உயரிய தலைவர் அவர். தேசிய உணர்வோடு விடுதலைக்குப் பாடுபட்ட அந்தத் தலைவர் அதிகாரத்திலே அமர்கின்ற வாய்ப்பு ஏற்பட்டபோது, தம் கைகளிலே அதிகாரத்தை ஏற்று செயல்படுகிற வாய்ப்பு ஏற்பட்டபோது, அதிகார வலிமை எவ்வளவுதான் இருந்தாலும், காந்தியடிகளோடு அவருடைய இயக்கத்திலே நின்றதற்கு எடுத்துக்காட்டாக, மிகுந்த எளிமையோடு, ஏழைகளின் எண்ணங்களைப் பிரதிபலிப்பவராக சிறப்பாக வாழ்ந்து காட்டினார் அவர். மிக எளிமையோடு பெரிய பதவிகளை வகித்து தன் காலத்தை முடித்திருக்கிறார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் பொறுப்பிலேயிருந்து ஆற்றிய பணியும், சட்டமன்ற உறுப்பினராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும், மாநில அமைச்சராகவும், மற்றும் பல்வேறு பொறுப்புகளிலும் இருந்து அவர் ஆற்றிய பணி பொது வாழ்க்கைக்கு இலக்கணமாக அமைந்திருக்கிறது. அவர் பதவியில் இருந்த போதும் சரி, பதவியில் இல்லாதபோதும் சரி, தாம் ஏற்ற தலைவனுக்கு உறுதுணையாக இருந்தார். பெருந்தலைவர் காமராஜரோடு கைகோர்த்து நின்ற தலைவர் இன்று நம் மத்தியிலே இல்லை என்பதை எண்ணிப் பார்க்க மனம் அஞ்சுகிறது. தேசியத்திற்கு எடுத்துக்காட்டாக தமிழகத்திலே விளங்கிய அந்தப் பெருமகனுக்கு என்னுடைய அஞ்சலியைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். காங்கிரஸ் பேரியக்கம் இது போன்ற தலைவர்களுடைய பெருமையால் நிமிர்ந்து நிற்கிற அளவிற்கு அமைந்திருக்கிறது என்கிற பெருமிதத்தோடு காங்கிரஸ் கட்சியினுடைய சார்பிலே அவருக்கு அஞ்சலியைச் செலுத்துகிறேன்



1982 பிப்ரவரி 2] [திரு. க. இராமமூர்த்தி]

மறைந்த முன்னாள் ஆளுநர் திரு. மோகன்லால் சுகாடியா அவர்களைப் பொறுத்த வரையில், அவர் இரண்டாண்டு காலம்தான் அரசியல்ரீதியாக நமது இந்த மாநிலத்தில் புதிய சூழ்நிலையில் ஆளுநராகப் பொறுப்பேற்றிருந்தார் என்றாலும்கூட, அவரோடு எனக்கிருந்த தொடர்பின் காரணமாக, அவர் ஒரு தந்தையின் ஸ்தானத்தில் நின்று எனக்கு வழிகாட்டினார் என்பதை உரிமையோடு நினைவு கூர்கின்றேன். அவருடைய செயல் திறனைப் பொறுத்த

(முற்பகல் 9-50)

வரையிலும், 17 ஆண்டுக் காலம் இராஜஸ்தான் மாநிலத்தில் தொடர்ந்து முதலமைச்சராகப் பணியாற்றியிருக்கிறார். அதற்கும் மேலாக அவருடைய திறனுக்கு ஒரு சம்பவத்தை நான் இங்கே நினைவுகூர்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். நமது பெருந்தலைவர் திரு. காமராஜர் அவர்கள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியினுடைய தலைவராகப் பொறுப்பேற்ற போது, அவருக்கு ஒரு முழுமையான உரிமை தரப்பட்டது. அவருடைய செயலாளரை நியமித்துக்கொள்வதற்கு அப்போது பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், திரு. காமராஜர் அவர்களுக்கு முழுமையான உரிமையைக் கொடுத்திருந்தார்கள். அப்பொழுது அவர் விரும்பிக் கேட்டு தேர்ந்தெடுத்துக் கொண்ட செயலாளர், அன்றைக்கு இராஜஸ்தான் மாநிலத்தின் முதலமைச்சராகப் பணியாற்றிக்கொண்டிருந்த திரு. மோகன்லால் சுகாடியா அவர்கள்தான் என்பதை இந்த நேரத்தில் நினைவுகூர்கிறேன். அதற்குப் பிறகு அந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அவரையே தங்களுக்குத் திரும்பப் பெற்றுக் கொடுக்க வேண்டுமென்று தொடர்ந்து வற்புறுத்தியதற்கு இணங்க, பெருந்தலைவர் அவர்கள் விட்டுக்கொடுத்தார். திரு. மோகன்லால் சுகாடியா அவர்கள் டெல்லிக்கு வந்து பொறுப்பேற்கவும் தயாராக இருந்தார்கள். அது கட்சிப் பணியாக இருந்தாலும் சரி, ஆட்சிப் பணியாக இருந்தாலும் சரி, எங்கே அதிகாரம் இருக்கிறது, எங்கே அதிகாரம் இல்லை என்ற உணர்வுகளையெல்லாம் கடந்து நின்று நாட்டுமக்களுக்குப் பணியாற்றுகின்ற அளவிலே தான் முழுமையாகச் செயல்பட முடியும் என்பதைச் செயலில் காட்டினார். அவர் இரண்டாண்டு காலம்தான் நம் மாநிலத்தின் ஆளுநராக இருந்தார் என்றாலும் தமிழகத்தில் அவர்கள் போகாத மாவட்டமே கிடையாது. அவர்கள் தமிழகத்தினுடைய அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று மக்களுடைய குறைகளைக் கேட்டு அறிந்தார்கள். மறைந்த திரு. மோகன்லால் சுகாடியா அவர்களுடைய பணி ஓர் ஆளுநர் எவ்வளவு சிறப்பாகச் செயல்படமுடியும் என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டாக அமைந்தது என்று நான் சொல்வதில்

தவறில்லை என்று கருதுகிறேன். அன்று நெருக்கடி காலத்திலே சில தவறுகள் நடைபெற்றன என்றாலும்கூட, அந்தத் தவறுகள் அவர் ஆளுநராகப் பொறுப்பேற்றிருந்தபோது, அவருடைய கவனத்திற்கு வந்த உடனே, அவைகளைக் களைய எந்த அளவுக்குத் தீவிரமாக முயன்றார் என்பதை அந்தச் சிக்கல்களுக்கு உள்ளானவர்களே உணர்ந்திருக்கிறார்கள். அவர் ஜனநாயகத்திற்கு எடுத்துக்காட்டாக இருந்தார் என்பதற்கு ஓர் உதாரணம் சொல்ல விரும்புகிறேன். அவர் ஆளுநர் பதவியில் இருந்தபோது, ஆட்சி மாறியது, அவரை ஆளுநராக நியமித்த ஆட்சி பதவியிலிருந்து விலகியபோது, உடனடியாக "நான் ஏற்கெனவே இருந்த ஆட்சி என்மீது வைத்த நம்பிக்கையின் காரணமாக ஆளுநர் பொறுப்பேற்றேன். இப்போது நான் பதவி விலகுகிறேன்" என்று சொல்லி தாமாகவே முன்வந்து தமது பதவியை ராஜிநாமா செய்தார். அவர் எந்த அளவுக்கு ஜனநாயக மரபுகளைக் காப்பதிலே உண்மையாக முதன்மையானவராக நின்றார் என்பதையும், எவ்வளவு எளிய வாழ்க்கை வாழ்ந்து பதவி அதிகாரத்தைச் செயல்படுத்தினார்கள் என்பதையும் நாம் நினைவு கொள்ள வேண்டும். ஒரு பெரும் தேசியவாதியாக, பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய உற்ற தோழராக வாழ்ந்த, அவர்கள் மறைந்திருக்கிறார்கள். அவருடைய குடும்பத்தினருக்கு இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவரை இழந்தது நாட்டுக்கே பேரிழப்பு என்பதையும், அவர் நமக்கு ஒரு வழிகாட்டியாக நின்றார் என்பதையும் எடுத்துக்கூறி, என்னுடைய காங்கிரஸ் கட்சியின் சார்பில் அஞ்சலியைத் தெரிவித்து, அமைகிறேன்

**திரு. ப. மாணிக்கம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னவர் அவர்கள் கொண்டுவந்துள்ள, மறைந்த முன்னாள் அமைச்சர் திரு. கக்கன் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் தீர்மானத்திலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னுடைய அஞ்சலியையும் இணைத்துக்கொள்கிறேன். தமிழ் நாட்டு விடுதலை இயக்க வரலாற்று விவரங்கள் மிகக் குறைவாக இருக்கின்ற நேரத்தில், இந்த விடுதலை இயக்கத்திலே பங்கு பெற்றிருந்த ஜீவனுள்ள ஒருவர் மறைந்துவிட்டார். அது மட்டுமல்லாமல், தமிழகத்திலே அரிஜனங்கள் நல முன்னேற்ற இயக்கத்திற்காகப் பாடுபட்டவரான பெரியவர் மதுரை வைத்தியநாத ஐயரால், கல்வி முதல் அரசியல் வரை பயிற்றுவிக்கப்பட்டு வளர்க்கப்பட்டவர் திரு. கக்கன் அவர்கள். இளம் பிராயம் முதல் காங்கிரஸ் இயக்கத்தில் பாடுபட்டு வளர்ந்து முன்னேறியவர். அவர் தமிழகத்தின் பொது வாழ்க்கையில், விடுதலை இயக்கத்தில் பங்குபெற்ற





வர்கள் பெறவேண்டிய சகல பதவிகளையும் பொறுப்புகளையும் பெற்று வாழ்ந்தவர். அது எல்லாவற்றையும்விட, இளம்பிராயத்தில் அவர் ஏற்றுக்கொண்ட காந்தியடிகளின் நெறிமுறைகளுக்குட்பட்டு கடைசி வரையில் வாழ்ந்து மறைந்தார் என்பது அவருடைய வாழ்க்கையின் சிறப்பாகும். அப்படிப்பட்டவர் மறைந்தார் என்பதை விட அவர் வாழ்ந்து மறைந்த விதத்திலே நமக்கெல்லாம் அவர் ஒரு கலங்கரை விளக்கமாக அமைந்திருக்கிறார் என்ற முறையிலே நாம் மீண்டும் அவருக்கு அஞ்சலி செலுத்துகிறோம்.

அதேபோல, நம்முடைய மாநில ஆளுநராகச் சில காலம் இருந்து மறைந்த திரு. சுகாடியா அவர்களைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அவர் இராஜஸ்தான் மாநில முதலமைச்சராக இருந்தார் என்பது உண்மை. நம்முடைய மாநிலத்தில் ஆளுநராக இருந்தார் என்பதும் உண்மை. மாண்புமிகு முன்னவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, தமிழகத்தினுடைய உரிமைகள் விட்டுக்கொடுக்காத நிலையை அவர்கள் மேற்கொண்டார்கள். அவருடைய வாழ்க்கையினுடைய சிறப்பு ஒன்று உண்டு. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் சமஸ்தான மன்னர்கள் நம்முடைய விடுதலை இயக்கத்திற்குப் பல்வேறு இடையூறுகளைச் செய்த காலத்தில், நாடு விடுதலையைப் பெற முடியாமல் தடுப்பதற்கு பல தடைகளை ஏற்படுத்தினார்கள். அவர்கள் மூலம் பிரிட்டிஷ் ஆட்சி விடுதலை பெறுவதைத் தடை செய்ய முயற்சித்தபோது, அந்த சமஸ்தான மன்னர்களை எதிர்த்துப் போராடிய தலைவர்களில் ஒருவர் திரு. சுகாடியா அவர்கள். இராஜஸ்தான் மாநிலம் இப்போது இராஜஸ்தானாக இருந்தாலும், அன்று பிரிட்டிஷ் காலத்தில் சமஸ்தான மன்னர்கள் வசமிருந்த காலம். அது பிரிட்டிஷ் ஆட்சிக்கு அஸ்திவாரமாக விளங்கிய காலம். அந்த மன்னர்களை எல்லாம் எதிர்த்துப் போராடிய இரண்டு பெரியவர்களில் ஒருவராக திரு. சுகாடியா இருந்தார். அதிலே அவர் ஏற்ற சோதனைகள் ஏராளம். பிரிட்டிஷ் ஆட்சிக்குப் பலமாக இருந்த சமஸ்தானாதிபதிகளை எதிர்த்துப் போராடியவர் அவர். அவர்களை எதிர்த்துப் போராடிய தலைவர்களில் அவரும் ஒருவராக இருந்தார். அப்படி விடுதலை இயக்கத்தில் ஜீவ சின்னமாக விளங்கியவர் மறைந்து விட்டார்கள். அவருக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில், மாண்புமிகு முன்னவர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தில் இணைந்து என் அஞ்சலியையும் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

[1982 பிப்ரவரி 2

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் முன்மொழிந்த அனுதாபத் தீர்மானத்தில் இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே என்னுடைய அனுதாப உணர்வுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கக்கன் அவர்கள் தமிழ்நாட்டிலே பொது வாழ்க்கையில் தியாகத்திற்குச் சிறந்த சின்னமாக விளங்கினார்கள். அவர்கள் அரிசன சமூகத்திலிருந்து வந்திருந்தாலும், தமிழ் நாட்டில் அரசியல் பொது வாழ்க்கையில் ஓர் உன்னதமான நிலையை எய்தினார்கள். நாம் எல்லோரும் கூடி இப்போது அவருக்குச் செலுத்தக்கூடிய மரியாதை என்பது ஒரு சம்பிரதாயமானதாக இல்லாமல், நம்முடைய இதயபூர்வமானதாக இருப்பதற்குக் காரணம், அவர் செய்துகொண்ட சபதங்களை வென்று நின்றவர் என்பதால்தான். இன்று நாம் அவருடைய தியாகத்திற்கு மரியாதையைச் செலுத்துகிறோம். திரு. கக்கன் அவர்கள் தலைவர் காமராஜர் அவர்களுடைய வாழ்க்கை முறையைப் பின்பற்றி வாழ்ந்து மறைந்தவர். அன்னாருக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் என்னுடைய அனுதாப உணர்வுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு முன்னர் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் பேசியதுபோல, நாட்டிலே தேசிய காங்கிரஸ் ஒரு பக்கமும், சமஸ்தானதிபதிகள் இயக்கம் ஒரு பக்கமும் போராட்டங்கள் நடத்திக்கொண்டிருந்தன. சமஸ்தானாதிபதிகள் இயக்கம் இன்றைய காஷ்மீர் முதலமைச்சராக இருக்கும் திரு. ஷேக் அப்துல்லா அவர்கள் தலைமையிலே இருந்தது. தேசிய இயக்கத்திற்கு பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் தலைமை தாங்கியிருந்தபோது, சமஸ்தானாதிபதிகள் இயக்கத்திற்குத் தலைமையேற்று நடத்திய தலைவர்களில், இருவரில் ஒருவராக திரு. மோகன்லால் சுகாடியா அவர்கள் இருந்தார்கள். அவர்கள் நம் மாநிலத்தின் ஆளுநராக இருந்தபோது, நம்முடைய மாநில மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து வந்திருக்கிறார்கள்.

இந்த இரண்டு தேசிய தலைவர்களின் மறைவிற்கான இரங்கல் தீர்மானத்தில் என்னுடைய கட்சியின் சார்பில் அனுதாப உணர்வுகளைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

**THIRU J. M. MIAKHAN**: Mr. Chairman, I, on behalf of the Indian Union Muslim League, completely associate myself with the condolences that have been expressed in this House. Thiru Kakkan lived a very simple life throughout his lifetime and dedicated himself to the welfare of c country. As the material



dissolves itself completely in water, he completely associated himself with the welfare of the people during his lifetime. He has not left any property behind and his children are practically in the streets. I would request the Government to extend the same help to his family as he was being given during his life-time, as a special case. He was a shining example to show how a politician should behave and how he should lead his life.

Similarly Thiru Sukhadia was a prominent all-India personality and was very honest and upright. Because of his righteousness and ability, he was able to remain as Chief Minister continuously for 17 years. When he was the Governor of Tamil Nadu, he acquitted himself very well and earned the admiration and love and affection of the people of Tamil Nadu. As the Hon. the Leader of the House has expressed, he did not take any hasty action till the normal course of democracy began to function and he left behind many things that should be decided only by a democratic Government. He was keeping the Government in order and was concerning himself with the maintenance of law and order situation. We, the Indian Union Muslim League, completely associate ourselves with the condolences expressed in this House not only on the demise of these two persons but also in relation to the demise of the other five persons who have been mentioned earlier, and particularly, Thiru Rengasami and Thiru Abdul Latif Farookhi. Thiru Farookhi was a colleague of my father and he was a Member of this House for some time. He was in the Muslim League for some time and later he was not in the party. He was a very great soul and he lived a full life of 90 years. I know him very well because he happened to live in Pallavaram which is near my place, Chromepet. I once again associate myself, on behalf of my party, with the condolences expressed in this House.

(முற்பகல் 10.00)

திரு. பி.வி.வி. ஆனந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த பெரியவர்களின் நினைவாக அனுதாபத் தீர்மானத்தை முன்மொழிந்துள்ள மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுடைய கருத்துடன் மறைந்த பெரியவர்களுக்கு நாங்களும் எங்களுடைய காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக இணைந்து அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். மறைந்த பெரியவர் திரு. கக்கன் அவர்கள் பொது வாழ்வில் ஈடுபடுபவர்களுக்கு முன்னுதாரணமாக விளங்கினார். எளிமை, நேர்மை போன்ற அரிய குணங்களைப் பெற்றிருந்தார். நமது மாபெரும் தலைவர் மூதறிஞர்

[திரு. வி. வி. வி. ஆனந்தம்] [1982 பிப்ரவரி 2

மக்களுடைய பேரன்பினையும், பாராட்டுதலையும் பெற்றிருந்தார். அதோடு பெருந் தலைவர் காமராஜர் அவர்களுடைய பாராட்டினையும் பெற்றிருந்தார். சுதந்திரப் போராட்ட காலத்தில் சிறை சென்ற தியாகியாகத் திகழ்ந்தார். காந்தியடிகளுடைய உண்மையான தொண்டன் என்பதற்கேற்ப அவர் பொது வாழ்க்கையில் எளிமையையும், நேர்மையையும் தனது வாழ் நாளின் இறுதி மூச்சுவரை பின்பற்றி வந்தார். அவர் அமைச்சராக இருந்த காலத்தில் எல்லோரிடமும் அனுதாபமும் அன்பும் காட்டினார். எளிமையைக் கடைப் பிடித்தார். யார், எப்படிப்பட்டவர்கள், எந்த நிலையில் உள்ளவர் களாக இருந்தாலும், அவர்களுக்குள்ள குறைகளை அவரிடம் சொன்னால், உடனே அவர் அதை அனுதாபத்துடன் கேட்டு அதற்குரிய நிவாரணத்தை உடனடியாகக் கண்டு வந்தார். அந்த அரிய தலைவர் மறைந்தது குறித்து இங்கே மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கொண்டுவந்துள்ள அனுதாபத் துடன் எங்களுடைய காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக அனுதாபத்தை இணைத்து, அவருடைய குடும்பத்திற்கும் எங்களுடைய கட்சி யின் சார்பாக அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அடுத்து, மறைந்த முன்னாள் ஆளுநர் திரு. சுகாதியா அவர்கள் 17 ஆண்டு கள் இராஜஸ்தான் மாநிலத்தின் முதல்வராக இருந்தவர். சிறந்த நிர்வாகி யாக இருந்து எல்லோருடைய பாராட்டையும் பெற்றவர். நமது மாநிலத்தில் சிறிது காலமே ஆளுநராக இருந்தாலும் கூட, அந்தச் சமயத்தில் அவசர நிலை இருந்தது. அப்போது அதிகாரிகள் செய்த தவறுகளை அவருடைய கவனத்திற்குக் கொண்டு வந்தபோது, அதை உடனடியாகக் களைந்து, பாதிக் கப்பட்டவர்களுக்குத் தகுந்த நிவாரணம் அளித்தார். அவருடைய மறைவு குறித்தும் மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுடைய அனுதாபத்துடன், எங்கள் கட்சியின் அனுதாபத்தையும் இணைத்து அமைகிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஒரு பெரிய தலைவராக, தமிழ் நாட்டினுடைய பொதுவாழ்க்கையில் ஈடுபடுகிறவர் களுக்கு ஒரு முன் உதாரணமாக விளங்கிய, கக்கன்ஜி என்று காங்கிரஸ்காரர் களால் அன்புடன் அழைக்கப்பட்ட பெரியவர் இன்றைக்கு மறைந்துவிட்டார். கட்சி சார்பாக இருக்கின்ற இந்த அரசு அவர் வேறு கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் கூட, அவருடைய பொதுவாழ்க்கையின் நேர்மையைப் பாராட் டித்தான் அவருக்கு மானியம் வழங்கி வந்தது. அந்த வகையில் அவர் எந்தக் கட்சிக்கும் அப்பாற்பட்ட நிலையில் இருந்துகொண்டு சிறப்பான முறையில் சேவை செய்து வந்தார். பெருந்தலைவர் காமராஜ் அவர்களுடைய அன்புக்



1982 பிப்ரவரி 2] [திரு. செ. முத்துசாமி]

குரிய நல்ல தொண்டனாக விளங்கினார். தமிழக அரிசன மக்களிடத்தில் தோன்றிய ஒரு தலைவராக இருந்தாலும் கூட, அவர் சிறப்புக்குரியவராக, எல்லோருடைய பாராட்டுதலையும் பெற்றவராக விளங்கினார். அவருடைய மறைவுக்கு ஆசிரிய சமுதாயத்தின் சார்பாக அனுதாபத்தைத் தெரிவித்து அமைகிறேன் வணக்கம்.

THIRU G. VASANTHA PAI : Sir, I join the Condolence Resolution regarding the demise of both Thiru Kakkan and Thiru Mohanlal Sukhadia. They have been good examples not only in the Congress field but also in public life in general. Especially, Thiru Kakkan led a very simple life. I had the pleasure of meeting Thiru Kakkan when he approached me, along with several other Congress leaders, to appear for the students against the busmen in the quarrel between the students and the transport workers which happened in 1967 soon after the D M K Government came to power. In that connection, I have seen him. He was simple and unostentatious and he used to come to my place to instruct me. He also used to work like an ordinary person labouring in the field, quite unmindful of the high position he had occupied. I have always admired the shining example of his simplicity which marked him out and which characterised his approaches in matters of public interest. I have always had a very high regard for him through I never knew, till today, that he was a great Harijan. It was only today that I knew that he was a Harijan. I would say that by the way in which he behaved he has set up a shining example for persons belonging to that community to follow and achieve g eat things.

I extend my heartfelt condolences to the members of his family and I join Thiru Miakhan in saying that, should the family be unprovided, this Government should extend their help to them. Thank you.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தேசிய இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவரும், கொண்ட கொள்கையிலே இருந்து கடைசி வரை வழுவாமல் இருந்தவருமான பெரியவர் திரு. கக்கன் அவர்களுடைய மறைவுக்கு ஆசிரிய சமுதாயத்தின் சார்பிலே நான் இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். "இருப்பதை இழப்பவனும், வருவதைத் தடுப்பவனும்தான் பொது வாழ்க்கையிலே தூய்மையான பணியை ஆற்ற முடியும்" என்று ஒரு பெரியவர் சொன்னார். அந்த இலக்கணத்திற்கு இலக்கியமாகத் திகழ்ந்தவர்தான் அவர்.

[திரு. [illegible]] [1982 பிப்ரவரி 2

[illegible] அவர்கள் [illegible]. நான் ஆசிரியர் [illegible] 1962-ல் ஆண்டு என்று நினைக்கிறேன். பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது, ஆசிரியர்களை [illegible] 15 ஆசிரியர்கள் வேலை இழக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. அந்தச் சூழ்நிலையை பெருந்தலைவர் அவர்களிடத்தில் எடுத்துச்சொல்லச் சென்ற ஆசிரியர் குழுவில் திரு. கக்கன் அவர்கள் ஒரு பிரதிநிதியாக இருந்து எடுத்துச்சொல்லி அதே நாளில், அதே ஆணையின் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண எங்களுக்கு உறுதுணையாக இருந்தார். அப்படிப்பட்ட பெரியவருடைய மறைவுக்கு ஆசிரியர் சமுதாயத்தின் சார்பாக இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு அவருடைய குடும்பத்திற்கும் எங்களுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மறைந்த திரு. மோகன்லால் சுகாடியா அவர்கள் இங்கே [illegible] காலத்திலே ஆளுநராக இருந்தவர். அந்தக் காலத்திலே அதிகாரிகளை [illegible], பொதுமக்களும் இன்னும் சொல்லப்போனால் யாருமே அவரை அணுக முடியாத நிலைமை இருந்தது. அந்த நேரத்திலே நான் [illegible] ஆசிரியர் [illegible] ஒரு குழுவினராக டெல்லி நோக்கிப் பயணம் செய்தோம். அவ்வாறு டெல்லி செல்வதற்கு முன்பு மறைந்த திரு. மோகன்லால் சுகாடியா அவர்களை நேரில் சந்தித்தோம். ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் சார்பாக இந்த அவையில் பிரதிநிதிகள் வருவதற்கு வாய்ப்பு இல்லாத நிலைமையை ஆளுநர் அவர்களை நேரில் கண்டு விண்ணப்பித்தோம். அதன்பிறகு நாங்கள் டெல்லிக்குப் புறப்பட்டோம். நாங்கள் கொடுத்த விண்ணப்பத்தை அவர் ஏற்று டெல்லிக்குப் பரிந்துரை செய்தார். நாங்கள் அந்தப் பரிந்துரையை டெல்லிக்குப் போனபோது பார்க்க முடிந்தது. அந்த

(முற்பகல் 10-10)

நெருக்கடி நேரத்தில் கூட அதை நிறைவேற்ற முயற்சி செய்த பெரியார் மறைந்துவிட்டார் என்று எண்ணும்போது, ஆசிரியர் சமுதாயம் உண்மையிலேயே வருத்தப்படுகிறது. அவருடைய குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் தெரிவித்து அமைகிறேன்.

* THIRUMATHI TARA CHERIAN: Hon. Chairman, Sir, on behalf of the lady-Members of this august House, I rise to join the previous speakers in paying my tributes to the lives and service of the two great men who are no more with us.



1982 பிப்ரவரி 2] [Thirumathi Tara Cherian]

I fully endorse the sentiments expressed by each one of those who spoke before me. Instead of repeating everything said, all I would like to add is that these two gentlemen, Thiru Kakkan who hailed from the South and Thiru Sukhadia who hailed from the North, had a lot of similarities in the way they lived. In power and out of power, their loyalty to their Party and their dedication to work are things that we can emulate. They were loyal to the very end of their lives. Sometimes people come to occupy high posts and then they forget what they have to do. But, both Thiru Kakkan and Thiru Sukhadia stuck to their guns. Thiru Sukhadia was a great admirer of our Prime Minister and his loyalty to the Prime Minister, her family and her cause is very well-known.

I would like also to add my sincere condolences to the families of the other people who belonged to this House, who are no more. Thiru Krishna Rao and Thiru Farookhi were known to me and to my husband. Thiru Kakkan was a Minister in this House during the period of my husband's association with this House. I will always remember Thiru Kakkan for his simplicity and for the way in which he lived for a cause. I will never forget his face which always had a lively smile on it (புன்சிரிப்பு). I have never seen him getting angry.

I am sure that the House would join me when I say that the lives of these two great men and the examples set by them could be easily emulated. I would like to offer my sincere condolences to the bereaved families. Any amount of comforting like this will not console the sobbers. But, they will feel comforted to know that we are also sharing their grief. I once again offer my sincere condolences to the bereaved families. Thank you.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இன்று இரண்டு பெரிய தியாகிகளை, விடுதலை வீரர்களை, தேசபக்த பாரம்பரியத்தின் முந்தைய தலைமுறையைச் சார்ந்தவர்களை இழந்துவிட்ட துக்கத்தையொட்டி இரங்கல் தீர்மானம் போடும் ஒரு சங்கடமான நிலையை நாம் அடைந்திருக்கிறோம். அவர்களிலே நம்மோடு நம் மத்தியிலே பிறந்து, நம்மோடு நீண்ட காலம் வாழ்ந்து, என்னைப் போன்றவர்களோடு ஒன்றுக்கு மேற்பட்ட முறை சிறைச் சாலையிலே தியாக வாழ்க்கை நடத்தி, இந்த மாநிலத்தின் அமைச்சராக இருந்து, ஆளும் கட்சியின் மாநிலத் தலைவராக இருந்து, தாழ்ந்த சமுதாயத்தில் தோன்றியவர்களும் கூட, உயர்ந்த ஒழுக்கத்தில் வாழ முடியும்

[மாண்புமிகு மேலவைத் தலைவர்] [1982 பிப்ரவரி 2

என்று உயர்ந்த ஜாதியினர்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக வாழ்ந்த ஒப்பற்றவராகத் திகழ்ந்த திரு. கக்கன் அவர்கள் மறைந்த வருத்தம் நமக்கு மறைவதற்கு நெடுநாட்களாகும். நான் அவரோடு நெருங்கிப் பழகியிருக்கிறேன். பலமுறை அவர் என்னை அவருடைய ஊரான மேலூருக்கு அழைத்துச் சென்று கூட்டங்கள் நடத்தி, அப்போதெல்லாம் தன் வீட்டில் வைத்து என்னை உபசரித்து, அன்புகாட்டிய அந்த நாட்கள் எல்லாம் என் நினைவிற்கு வருகின்றன. மருத்துவமனையில் அவரைப்போய் முதன் முதலாகப் பார்த்தபோது, அவருடைய மனைவியார் அவர்கள் என்னுடைய பெயரைச் சொல்லி "வந்திருக்கிறார்" என்று சொன்னபோது, அவருக்கு உணர்வற்ற நிலை, அந்த நிலையிலும் ஏதோ பார்ப்பதற்கு முயற்சிப்பவர் போல ஒரு பார்வையைக் காட்டினார். அந்த அம்மையார் சொன்னார்கள், "ஐயா பெயரைச் சொன்னவுடனே அவருக்கு ஏதோ ஓர் உணர்ச்சி வருகிறது" என்று. அப்போதுதான், உணர்வு அடங்கியிருக்கும்போது ஆன்மா என்பது உயிர்த் துடிப்போடு இருக்கிறது என்ற உண்மையை, தத்துவத்தை நான் அவரிடமிருந்து உணர்ந்தேன். எனக்கு முன்னர் பேசிய எல்லோரும் சொன்னதுபோல, அவர் ஏற்றுக்கொண்ட தத்துவத்திற்கு, சித்தாந்தத்திற்கு அவர் கடைசி வரை விசுவாசியாக இருந்தார். அது காந்திய சித்தாந்தம். அந்த வகையில் அவரும் நானும் ஓர் குலம், ஓர் குடும்பம், ஓர் தாய் வயிற்றுப் பிள்ளைகள் என்ற உண்மையோடு வாழ்ந்தோம். அந்த உணர்வோடு அவருக்கு நான் அஞ்சலி செலுத்துகிறேன். அவர் பெரிய பதவியில் பல்லாண்டுகள் இருந்தாலும் கூட, அந்தப் பதவிக்குப் போவதற்கு முன்பு அவருடைய குடும்பம் என்ன பொருளாதார நிலையிலே இருந்ததோ அதே நிலைமையிலேதான் பதவியை விட்டுச் சென்ற பிறகும் அவர் இருந்தார் என்பது பொது வாழ்க்கையிலே இருக்கும் எல்லோருக்கும் வழிகாட்டி. அதைப் பாராட்டும் பொருட்டு கூட நம்முடைய தமிழக அரசு அவருடைய குடும்பத்திற்கு மாத உதவியாக ரூ. 500 வழங்கி வந்தது. இன்றைக்கு இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எனக்குத் தகவல் அனுப்பியிருக்கிறார், அந்த உதவித் தொகை தொடர்ந்து அவருடைய மனைவிக்கு வழங்கப்படும் என்று இங்கே அறிவிக்கும்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னை அனுமதித்திருக்கிறார்கள். அதை இந்தத் துக்கத்திலும் ஒரு மகிழ்ச்சியான செய்தியாக நான் அறிவிக்கிறேன். அந்த அம்மையாரும் கூட அவருக்கு ஏற்ற குணவதியாக, அவரைப் பார்க்கும்போதெல்லாம், சாதாரண பொதுவாழ்க்கையில் இருக்கும் அம்மையாரைப்போல எந்த விதமான அலங்காரமும் இல்லாமல், அணிகலனுமில்லாமல் வாழ்ந்த



1982 பிப்ரவரி 2] (மாண்புமிகு மேலவைத் தலைவர்)

வாழ்க்கையைப் பார்த்தால், அவரும் இந்த உதவித்தொகையைப் பெறுவதற்குத் தகுதியுடையவர்கள்தாம். அவருக்கு இந்த உதவித்தொகையை அரசாங்கம் வழங்குகிறது என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. அவருடைய குடும்பத்தினருக்கு என்னுடைய அனுதாபத்தையும், இந்த அவையினுடைய அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, திரு. மோஹன்லால் சுகாடியா அவர்கள் இந்த மாநிலத்தில் இந்த மாநிலம் வரலாறு காணாத அளவிலே ஒரு சங்கடமான சூழ்நிலையில் இருந்த காலத்தில் ஆளுநராக இருந்தார்கள். அதற்கு முன்பு அப்படிப்பட்ட சங்கடமான சூழ்நிலை ஏற்பட்டதில்லை. மக்கள் ஆட்சி இல்லாத ஒரு நிலையில் குடியரசுத் தலைவர் அவர்களின் ஆட்சி இந்த மாநிலத்தில் முதன் முதலாக இருந்தபோது, மக்களை ஆளுகின்ற ஒரு பொறுப்பை அவருக்கு முன்பு இருந்த ஆளுநர் அவர்கள் சில மாதங்கள் வகித்து இவரிடம் விட்டு விட்டுப் போனார்கள். இந்த மாநிலத்திற்கு முற்றும் புதியவராகத்தான் அவர்கள் இங்கே வந்தார்கள் என்றாலும் கூட, அவர் இருந்த அந்த ஓராண்டு காலத்திலே அவர் எல்லோரிடத்திலேயும் நல்லமுறையில் பழகி, எல்லோருடைய நட்பையும் பெற்றுவிட்டார். பதவி ஏற்றவுடனே என்னை அவருடைய மாளிகைக்கு அழைத்து சில நேரம் பேசினார். "இந்த மாநிலத்தின் நிலைமையை நடுநிலைமையோடு சொல்லக்கூடிய ஒருவர் என்ற நம்பிக்கையோடு உங்களை அழைத்து விவாதிக்க, பேச, உண்மை நிலைகளை அறிந்து கொள்ள விரும்புகிறேன்" என்று சொல்லி, மனம்திறந்து அவர் பேசியது என் நினைவிற்கு வருகிறது. அந்த நிகழ்ச்சியை நான் நினைவூட்ட விரும்புகிறேன். உங்களுக்கெல்லாம் தெரியாமல் போய்விட்ட ஒன்று அது. அவர், "வடக்குக்கும் தமிழுக்கும் கலாச்சார, மொழிப் பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன" என்று சொன்னபோது, நான் சொன்னேன், "இராமாயணம், மகாபாரதம் என்று எத்தனையோ வடமொழி இலக்கியங்களை தமிழகம் ஏற்றுக்கொண்டு கௌரவித்தது. அந்த அளவிற்கு தெற்கு இலக்கியங்களை, மொழியை, வடக்கே இருப்பவர்கள் கௌரவிப்பது இல்லை. அந்தக் குறைபாடுகள் எல்லாம் நீக்கப்படுவதன் மூலம் தான் ஒருமைப்பாட்டை ஏற்படுத்த முடியும்" என்று சொன்னேன். அப்போது அதை அவர்கள் ஏற்றுக் கொண்டு, தமிழ் நாட்டில் உள்ள மூன்று சிறந்த தமிழ்ப் புலவர்களுக்குச் சிறப்பு அளிக்கும் வகையில் அவர்களை உத்தரப் பிரதேசத்திற்கு அனுப்பி, அங்கே அரசாங்கமே அவர்களைக் கௌரவித்து அனுப்பும் வகையில் ஒரு முயற்சிக்கு அவர் ஏற்பாடு செய்தார். அப்போது உத்தரப் பிரதேசத்தில் டாக்டர் சென்னா ரெட்டி அவர்கள் கவர்னராக இருந்தார்கள். அவரிடம்

கலந்து பேசி ஏற்பாடு செய்துகொண்டு, "அந்த மூன்று பேரில் ஒருவராக நீங்கள் இருக்க வேண்டும்" என்று சொன்னார்கள். அரசாங்கக் கோப்பிலே இதற்கு ஆதாரம் இருக்கிறது. ஆனால், பேசிமுடித்த சில மாதங்களுக்கு உள்ளாக அவர் பதவியிலிருந்து விலக வேண்டியிருந்ததால், அதற்குப் பிறகு அதை அமுல்படுத்த இயலவில்லை. இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், இங்கே வந்த ஒருசில மாதங்களுக்குள்ளாகவே இங்கே என்னென்ன பிரச்சினைகள் இருக்கின்றன என்று அவர் அறிந்துகொள்ள எடுத்த முயற்சி, அவைகளை அறிந்துகொண்டபோது கலாச்சாரத்தைப் பொறுத்தவரையில் தெற்கை வடக்கு மதிக்கவில்லை என்ற குறைபாட்டைத் தெரிந்து அதை நீக்குவதற்கு அவர் துணிகரமாக எடுத்த முயற்சி என்னை மிகவும் கவர்ந்தது. அதை நினைவில் வைத்துக்கொண்டு இன்றைக்கு அந்தச் செய்தியைக் கேட்டபோது நான் மிகவும் வருத்தமடைந்தேன். அவருடைய குடும்பத்தினருக்கு நம்முடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மறைந்த பெரியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் 2 நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அவ்வாறே, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் 2 நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.

தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மறைந்த பெரியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மேலவை 15 நிமிடங்கள் ஒத்தி வைக்கப்பட்டு, மீண்டும் 10-35-க்கு கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

அவை, மீண்டும் காலை 10-35 மணிக்குக் கூடியது.

### 3. அறிவிப்புகள்.

#### (1) புதிய உறுப்பினர் பதவி ஏற்பு.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அரசிலமைப்பின் 188 வது பிரிவின் படி இன்று காலை 9 மணிக்கு திரு. ப. உ. சண்முகம் அவர்கள் மேலவை உறுப்பினராக எனது அறையில் உறுதிமொழி எடுத்துக்கொண்டு மேலவை விதி 3-அ-வின்படி பதிவேட்டில் கையொப்பமிட்டார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



### 4. வினாக்கள்—விடைகள்.

#### உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Assistance from UNICEF.*

*1. *Q*.—THIRU K. ARUNACHALAM (on behalf of THIRU K. RAMAMOORTHY) Will the Hon. the Minister the Finance be pleased to state the details of the schemes and the programmes, that are being executed in the State, with the assistance or grant of the UNICEF ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

#### ஒரு நபர் குழு.

* 2. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளிலுள்ள முரண்பாடுகள் குறித்து ஆராய அமைக்கப்பட்ட ஒரு நபர் குழு தனது அறிக்கையை அரசுக்கு சமர்பித்து விட்டதா ?

(இ) ஆம் எனில், அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய பரிந்துரைகள் யாவை ?

(உ) அவற்றின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) & (உ) விவரங்கள் 1981-82 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளன.

திரு சி.ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள விவரங்களைத் தவிர வேறு ஏதேனும் முக்கியமான பரிந்துரைகளை ஒரு நபர் குழு சொல்லியிருக்கிறதா ? அந்தப் பரிந்துரைகளில் எத்தனை அமல்படுத்தப்படுகின்றன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இங்கே அறிவிக்கப்பட்டதைத் தவிர, ஆராய்ந்து பார்த்து சம்பந்தப்பட்ட துறைகள் முடிவெடுக்க வேண்டுமென்று சொல்லி, சில கருத்துகள்மீது ஒரு நபர் குழு கருத்து தெரிவித்

@ 87-88 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திருக்கிறது. அவற்றின்மேல் நடவடிக்கை எடுக்க அறிக்கையின் உரிய பகுதிகள் தலைமைச் செயலகத் துறைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதனுடைய விவரம் வந்த பிறகு அறிவிக்கப்படும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : ஒரு நபர் குழு அறிக்கை என்பது மிக முக்கியமானதாகும். அதை அவை முன் வைக்கவோ அல்லது உறுப்பினர்களுக்கு அளிக்கவோ நடவடிக்கை எடுக்கப்படுமா ? அப்படி அது முடியாவிட்டால், அறிக்கையினுடைய எந்தப் பகுதி ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதோ அதனுடைய விவரத்தையும், எந்தப் பரிந்துரைகளை அமலாக்கியிருக்கிறார்களோ அந்த விவரங்களையும் உறுப்பினர்களுக்கு அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அரசுக்குப் பல்வேறு கோரிக்கைகளை வைக்கும்போது, அதிலுள்ள சங்கடங்களை ஆராய்ந்து, முடிவெடுக்க சாதகமாக இருக்க வேண்டுமென்றுதான் குழு அறிக்கை இருக்கிறது. பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இன்னும் சில நடவடிக்கைகளை எடுக்க உரிய துறைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னது போன்று, எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பற்றியும், எடுக்க இருக்கிற நடவடிக்கைகளைப் பற்றியும் கூற இயலுமா என்பதை ஆராய்ந்து, அதுபற்றி நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மூன்றாவது ஊதியக்குழு, ஒரு நபர் குழு ஆகியவற்றின் முன்னாலே பல்வேறு ஊழியர் சங்கங்கள் தங்களுடைய கோரிக்கைகளை வைத்துள்ளன. அதிலே சிலவற்றைப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அவற்றிலே சிலவற்றை அரசு அமல்படுத்த முயற்சி செய்திருக்கிறது. எந்தெந்த கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிந்தால், மீண்டும் மீண்டும் அவற்றையே சொல்ல வேண்டியிராது என்பதைக் கவனத்தில் கொண்டு, அந்த அறிக்கையை உறுப்பினர்களுக்கு அல்லது கேட்கின்ற சங்கங்களுக்கு அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றித்தான் நான் குறிப்பிட்டேன். சிலபல பரிந்துரைகளைப் பொறுத்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அறிவிக்கப்பட்டிருக்கின்றன. மேற்கொண்டு சில பரிந்துரைகள் பற்றி நடவடிக்கை எடுப்பதற்கு கருத்து தெரிவிக்க, சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அதுபற்றி ஆராய்ந்தறிந்து, பிறகு அவை முன்வைக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.



திரு. பா. ரா. தாமஸ் : தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் சார்பிலே ஒரு நபர் குழுவிடம் முறையீடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அதன் அடிப் படையில் மேலவையில் பிரச்சினை எழுப்பப்பட்டபோது, மாண்புமிகு நிதி யமைச்சரவர்கள், அது பற்றி விளக்கமாக வேண்டுகோள் கொடுத்தால், ஆராய் வோமென்று சொன்னார்கள். ஒரு நபர் குழுவிடம் கொடுத்த கோரிக்கைகளின் அடிப்படையிலே செய்யப்பட்ட மேல் முறையீடு எந்த அளவிலே இருக்கிறது ? அவர்கள்அடிப்படை ஊதியத்தை மாற்றும் எண்ணம் அரசின் கவனத்தில் இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : குறிப்பிட்ட பிரச்சினை பற்றி தனிக் கேள்வி கேட்டால், அதுபற்றி முழு விவரம் அறிந்து சொல்லப் படும்.

திருச்சி—தஞ்சை சி.எஸ்.ஐ திருமண்டலம்

* 3. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சி—தஞ்சை சி.எஸ்.ஐ திருமண்டலத்தின் நிர்வாகத்தின் கீழ் பணிபுரியும் ஆசிரியர்கட்கு இழைக்கப்படும் அநீதிகளைக் களைய வேண்டு மென்று அரசுக்கு கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) திருச்சி-தஞ்சை சி.எஸ்.ஐ. திருமண்டலத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள ஆசிரியர்கள் மாற்றம் குறித்து விண்ணப்பம் பெறப்பட்டது.

(இ) நிர்வாகம் தனது ஆளுகையின் கீழ் உள்ள பள்ளிகளில் ஆசிரியர்களை மாற்றும் அதிகாரம் பெற்றுள்ளது என்று நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப் பட்டுள்ளதால், மேல் நடவடிக்கை ஏதும் எடுக்க இயலவில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, திருச்சி-தஞ்சை சி.எஸ்.ஐ. திருமண்டலத்தின் நிர்வாகத்தின்கீழ் பணியாற்றுகின்ற ஆசிரியர் களுக்கு மாறுதல் மூலமாக அநீதி மட்டுமல்ல, மாதந்தோறும் மதப் பிரசாரத் திற்கு என்று ஒரு தொகையைப் பிடிப்பதும், அரசு ஆணைப்படி பதவி உயர்வு வழங்க மறுப்பதும் என்பது போன்ற நிலை இருக்கிறது. அதைப்பற்றி

அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மாறுதல் ஆணை கூட திரு லாரன்ஸ் அவர்கள் இயக்குநராக இருந்தபோது ஏற்பட்டதுதான். எல்லாப் பள்ளிகளையும் ஒரு யூனிட்டாகக் கொண்டு மாறுதல் வழங்கலாமென்று ஆணை அப்போது போடப்பட்டதுதான். அதைத் தடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஒரே நிர்வாகத்தின்கீழ் இருக்கின்ற பள்ளிகளில் பணி புரிகிற ஆசிரியர்கள், மாறுதல் என்ற அடிப்படையிலே பயன்பெறாமல் போவதில்லை. வேறு சில நல்ல பயன்களும் அவர்களுக்கு இருக்கின்றன. ஆகவே 10 பள்ளிகளை உள்ளடக்கிய நிர்வாகத்தின் கீழேயுள்ள ஆசிரியர்கள் பதவி உயர்வு போன்ற பயன்களைப் பெறுகின்ற வாய்ப்புகள் இருக்கின்றன. இதிலே இருக்கின்ற நல்லது, கெட்டது இரண்டையும் ஆராய்ந்து பார்க்கின்றபோது, ஒவ்வொரு பள்ளியையும் தனித்தனி யூனிட்டாக ஆக்கவேண்டுமென்ற கோரிக்கை சரியாக இராது. மேற்கொண்டு வேறு சில பிரச்சினைகளைச் சொன்னார்கள். அதைப்பற்றி அரசு ஆராய்ந்து, நடவடிக்கை எடுக்கும்.

**திரு. பா. ரா. தாமஸ் :** பொதுவாக இவ்வாறு உள்ள பள்ளிகளிலிருந்து மற்றொரு பள்ளிக்கு மாற்றும்போது, அரசுப் பள்ளிகளிலிருந்து ஆசிரியர்களை மாற்றும்போது, அவர்களுக்கு அளிக்கப்படும் ஜாயினிங் டைம், பயணப்படி ஆகியவை கிடையாது. எனவே இந்த அதிகாரத்தை தனியார் பள்ளி நிர்வாகத்திற்கு வழங்குவது சரியா, முறையா என்பதைச் சீர்தூக்கிப் பார்க்கும்போது, ஆசிரியர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பது தெரிய வருகிறது. மேலும் அவர்களுக்கு ஊதியத்தை நேரிடையாக வழங்கினால் பல பிரச்சினைகள் இராது. இந்த இரண்டு பிரச்சினைகளையும் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாறுதல் என்று அவர்கள் மட்டும் செய்யவில்லை. நாமும்தான் செய்துகொண்டிருக்கிறோம். பல பள்ளிகளை நடத்தும் நிர்வாகத்தில் மாறுதல் என்பது மிக மிகத் தேவை. சில சமயங்களில் ஆசிரியர்கள் உபரியாக இருக்கிறார்கள். அவர்களை மாற்ற வேண்டியிருக்கிறது. தேவை உள்ள இடங்களுக்கு தேவையான ஆசிரியர்களை மாற்ற வேண்டி இருக்கிறது. எனவே மாறுதல் தேவையாக இருக்கிறது. அந்த நிர்வாகங்களுக்கு அரசே இந்த அதிகாரத்தைத் தரவில்லை, மண்டலம் என்ற



முறையில் பல பள்ளிகளை நடத்தும் அதிகாரத்தை அவர்கள் இயல்பாகப் பெறுகிறார்கள். தனியார் பள்ளிகளில் உள்ள சில பிரச்சினைகளைப் பற்றிச் சொன்னார்கள். பொதுவாக சில நடவடிக்கைகளை எடுத்து, கட்டுப்படுத்த முடியும். மைனாரிட்டிப் பள்ளிகள் என்று வரும்போது, அவர்களுக்குள்ள விசேட உரிமைகள் காரணமாக சர்க்கார் எடுக்கும் நடவடிக்கைகளினால் உரிய பயனை ஆசிரியர்கள் பெறுவதற்கில்லாமல் இருக்கும் நிலை இருக்கிறது.

**திரு க. மீனாட்சிசுந்தரம் :** ஏற்கெனவே அந்தத் திருமண்டலத்தின் கீழேயுள்ள பள்ளிகள் தனித்தனி யூனிட்டுகளாகத்தான் இருந்தன. ஆசிரியர்கள் நியமனம் செய்யும்போது, அவ்வாறு ஒப்பந்தம் இருக்கிறது. அதற்குப் பின்னால் இயக்குநர் அவர்கள் போட்ட உத்தரவின் அடிப்படையிலே மாற்றம் செய்கிறார்கள். பதவி உயர்விற்காகச் செய்வதில்லை. பொதுவாகப் பழி வாங்கத்தான் செய்கிறார்கள். எனவே மாறுதல் பற்றி மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டு, அரசு அதை ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10.45)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, நான் மீண்டும் ஒன்றைத் திரும்பச் சொல்ல ஆசைப்படுகிறேன். மாறுதல் செய்வது என்பது ஒரு நிர்வாக நடைமுறை. அதன் காரணமாக சில ஆசிரியர்கள் தனிப்பட்ட முறையில் பழிவாங்கப்படுகிறார்கள் அல்லது பாதிக்கப்படுகிறார்கள் என்ற நிலைமையை மட்டும் கருத்தில் கொண்டு பொதுவாக மாறுதல் செய்யும் நடைமுறையையே எதிர்ப்பதென்பது சரியல்ல என்பதுதான் என் கருத்து. எல்லோரும் வைத்துக் கொண்டிருப்பதைப் போலவே அந்த நிர்வாகத்தினரும் இந்த முறையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் சில நல்லதும் ஏற்படலாம், கெட்டதும் ஏற்படலாம். சில ஆசிரியர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்றால், அது குறித்து அவர்களிடம் நாம் தனியாகப் பேச வேண்டுமே தவிர, ஆசிரியர்களை மாறுதல் செய்கிற உரிமையையே எடுத்துவிட வேண்டும் என்று கோருவது சரியல்ல. அப்படிச் செய்வதன் மூலம் நிர்வாகங்களும் பல கஷ்டங்களுக்கு உள்ளாக நேரிடும். எனவே ஆசிரியர்களின் நலன்களை மட்டுமே கருத்தில்கொண்டு பேசிக் கொண்டிருப்பதன் மூலம் இந்தப் பிரச்சினைக்குச் சரியான தீர்வு காண முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1982 பிப்ரவரி 2

THIRU G. SWAMINATHAN: Sir, as per the Constitution of India, the minority institutions enjoy certain rights. May I know what the rights that the minority institutions enjoy independent of the Government are, and what the areas are where this Government have got control over the minority institutions, especially regarding the service conditions of the teachers ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** சிறுபான்மைப் பள்ளி நிருவாகங்களுக்கு என்னென்ன உரிமைகள் இருக்கின்றன என்பதைச் சொல்ல வேண்டுமென்றால், அவர்கள் இன்றையதினம் தங்கள் இஷ்டம்போல் பள்ளிகளை ஆரம்பிக்கலாம் என்பதோடு அத்தகைய பள்ளிகளுக்கு அரசு அனுமதியும் நிதியுதவியும் அளிக்க வேண்டும் என்ற அளவுக்கு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ்:** அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களை மாறுதல் செய்யும்போதும்கூட, பொதுவாக கணவன் மனைவியாக உள்ள குடும்பத்தைப் பிரிக்கக் கூடாதென்று, முடிந்தவரை அவர்களை ஒரே இடத்தில் பணியாற்ற அனுமதிக்க வேண்டும் என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கிறோம். ஆனால், தனியார் நிர்வாகங்களும் இத்தகைய திருமண்டலங்களும் இத்தகைய மாறுதல் செய்யும் அதிகாரத்தையே பறிவாங்கும் உணர்ச்சியோடு பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். கணவன் மனைவியைப் பிரித்து விடுகிறார்கள். திருமண்டலங்களுக்கு மாறுதல் செய்யும் அதிகாரத்தை அரசுதான் வழங்கியிருக்கிறது. எனவே மாறுதல் செய்யும்போது, இம்மாதிரியான சில விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும் என்று நிர்வாகங்களுக்கு அரசு ஆணையிடுமா? அதற்காக நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வாரா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** திருமண்டலங்கள் என்னும்போதே, அவர்கள் அனைவரும் மதச்சார்புள்ளவர்கள்தாம். அங்கேதான் அன்பும் பறமும் அதிகமாக அவர்களால் பேசப்படுகிறது. எனவே அவர்களுக்குக் குடும்பங்களைப் பற்றியும் கஷ்டங்களைப்பற்றியும் நன்கு தெரிந்திருக்கக்கூடும். எனவே எங்களைவிட அவர்கள் இவைகளை அதிகமாகத் தெரிந்துவைத்திருக்கக் கூடியவர்கள் என்ற நம்பிக்கையில்தான் நான் பதிலளித்திருக்கிறேன்.



1982 பிப்ரவரி 2]

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** ஒரு தனியார் நிருவாகம் 10 பள்ளிகளை நடத்தினாலும் அவை அனைத்தையும் ஒரே ‘Corporate body’ யாகப் பதிவு செய்தால்தான் ஆசிரியர்களை அத்தகைய பள்ளிகளுக்குள் மாற்றலாம் என்றும், அவ்வாறு அவை அனைத்தும் ஒரு corporate body யாகப் பதிவு செய்யப்படாவிட்டால், அந்த பத்து பள்ளிகளுக்குமே ஒவ்வொரு Independent body ஆகக் கருதப்பட்டு ஆசிரியர்களின் மாறுதல்கள் அனுமதிக்கப்படக் கூடாது என்பதும் விதியாகும். இம்முறையில் இன்டிபெண்டன்ட் பாடியாகப் பதிவு செய்யப்பட்ட நிர்வாகங்களுக்குள்ளேகூட ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கு ஆசிரியர்களை மாற்றுவது என்பது சட்ட விரோதமானது. எனவே இதை பள்ளிக் கல்வித் துறை அனுமதிப்பதைத் தடுத்து நிறுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** ‘இன்டிபெண்டன்ட்’ ஆக இருக்கக்கூடிய பள்ளிகளிலிருந்து இப்படிப்பட்ட மாறுதல்கள் செய்யப்படக்கூடாது என்பதுதான் உண்மை. ஆனால், அதற்கு மாறாக அப்படிப்பட்ட பள்ளிகளிலிருந்து மாற்றப்பட்டதாக விவரங்கள் தரப்படுமானால், அரசு அவைகளைப் பற்றி விசாரிக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அது குறித்த விவரங்களைத் தருவது நல்லது.

இடைநிலை ஆசிரியர்களுக்கும் எழுத்தர்களுக்கும் ஊக்க ஊதிய உயர்வு

* 4. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் & திரு. பா. ரா. தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) பள்ளிகளில் பணிபுரியும் எழுத்தர்கள் மற்றும் இடைநிலை ஆசிரியர்களில் புலவராகவோ, பட்டதாரியாகவோ, தகுதியை உயர்த்திக் கொண்டவர்களுக்கு ஊக்க ஊதியம் Incentive Increment வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போதிருந்து வழங்கப்படும்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) மற்றும் (இ): புலவராகவோ அல்லது பட்டதாரியாகவோ தகுதியை உயர்த்திக் கொண்ட இடைநிலை ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதியம் வழங்கும் செயற் குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன. பட்டதாரியாகவோ புலவராகவோ, தகுதியை உயர்த்திக் கொண்ட எழுத்தர்களுக்கு ஊக்க ஊதியம் அளிப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் இல்லை

[1982 பிப்ரவரி 2

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, தற்போது 4 ஊக்க ஊதிய உயர்வுகள்தான் வழங்கப்படலாம் என்று ஒரு உச்ச வரம்பு விதிக்கப்பட்டுள்ளது. இடை நிலை ஆசிரியராக இருந்து அந்த ஆசிரியர் பட்டதாரி ஆசிரியராக ஆகும்போது, அவருக்கு இந்த ஊக்க ஊதிய உயர்வு அளிக்கப்படுவதில்லை. மீண்டும் அவர் பி. எட். படித்தால்தான் வழங்கப்பட வேண்டும் என்றிருக்கிறது. முன்பு ஒருமுறை நான் கல்வி அமைச்சர் அவர்களை இயக்கத்தின் சார்பாகச் சந்தித்துப் பேசும்போது, பி.எ., பி.எட். எம்.எ., எம்.எட்., என்று பிரித்து நான்கு ஊக்க ஊதிய உயர்வுகளைத் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டபோது, அப்போது அதை ஏற்பதாகச் சொன்னார். அது இப்போது எந்த அளவில் இருக்கிறது என்பதை அறிவிப்பாரா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** ஊக்க ஊதியம் வழங்கப்படுவது குறித்த செயற்குறிப்பு பரிசீலனையில் இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறேன். அதோடு இந்தக் கருத்தும் பரிசீலனை செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பா. ரா. தாமல்:** இடைநிலை ஆசிரியர்களாகப் பணியாற்றுவோர் பி.எ., பி.டி. தகுதி பெற்றால், அவர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு வழங்கப்படுகிறது. ஆனால், இடைநிலை ஆசிரியர்களாகப் பணியாற்றுவோர், புலவர் பட்டம் பெற்றால், அவர்களுக்கு இந்த ஊக்க ஊதிய உயர்வு வழங்கப்படுவதில்லை. புலவர் பட்டம் என்பது பி.எ., பி.டிக்குச் சமமானது என்று கருதப்படுகிறது. ஆகவே இடைநிலை ஆசிரியர்கள் புலவர் பட்டம் பெறும் போதும், அவர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு அளிக்கப்படுவதற்கான ஆணையை அமைச்சர் அவர்கள் பிறப்பிப்பார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இதையும் சேர்த்துப் பரிசீலிப்போம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் முதுகலைப் பட்டத்திற்குப் பிறகு எம்.எட். தேர்ச்சி பெற்றால், அவர்களுக்கும் ஊக்க ஊதிய உயர்வு அளிக்கப்படுகிறது. ஆனால், மேல்நிலைப் பள்ளிகளில் மேல்நிலை வகுப்புகளுக்குக் கல்வி கற்பிக்கும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் எம்.எட். தேர்வு பெற்றால், அவர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு வழங்கப்படுவதில்லை. இதன் காரணமாக அவ்வாசிரியர்கள் குறைவான ஊதியம் பெறும் நிலை இருப்பதால், இதையும் அரசு பரிசீலித்து அவர்களுக்கும் ஊக்க ஊதியம் வழங்க முன்வருமா?



1982 பிப்ரவரி 2]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இதையும் அரசு ஆராயும்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** அமைச்சர் அவர்களின் பதிலில் எழுத்தர்களுக்கு இத்தகைய ஊக்க ஊதிய உயர்வு கொடுப்பது பரிசீலனையில் இல்லை என்றும், இடைநிலை ஆசிரியர்கள் தங்கள் கல்வித் தகுதியை உயர்த்திக் கொண்டால் மட்டும் அவர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு கொடுக்கப்படுவதுபற்றி பரிசீலனையில் உள்ளது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, ஆசிரியர்களைப் பற்றி நான் கேட்காமல் பள்ளிகளில் பணியாற்றும் எழுத்தர்களைப் பற்றி மட்டும் கேட்க விரும்புகிறேன். எழுத்தர்கள் தங்கள் குறைந்தபட்சக் கல்வித் தகுதியிலிருந்து உதாரணமாக பி.காம். போன்ற பட்டம் பெற்றால், அவர்களுக்கும் ஊக்க ஊதிய உயர்வு கொடுக்கலாம். ஆசிரியர்களுக்கு கல்வித் தகுதிக்கு மேல் மிஞ்சிய கல்வித் தகுதியைப் பெற்றால், அவர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு வழங்குவது அவர்களின் தரத்தை உயர்த்தவும் துறையின் தரத்தை உயர்த்தவும் பயன்படும். எனவே துறை சிறப்பாகப் பயன்படுவதற்கு உறுதுணையாக இதையும் அரசு புனர்பரிசீலனை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** ஆசிரியர்கள் தங்களின் கல்வித் தகுதியை உயர்த்திக் கொள்ளும்போது, தாங்கள் செய்யும் சொல்லிக் கொடுக்கும் தொழிலுக்கு அது பயன்படுகிறது என்ற முறையில் அந்தக் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு அதன் அடிப்படையில் பல்வேறு கோரிக்கைகளைப் பரிசீலிக்கிறோம். ஆனால் எழுத்தர்களாகப் பணி புரிகிறவர்கள் குறைந்த பட்சத் தகுதியைப் பெற்று அந்தப் பதவியில் பணியாற்றுகிறார்கள். மேற்கொண்டு அவர்கள் தங்களின் கல்வித் தகுதியை உயர்த்திக் கொள்வதன் மூலம் அது ஆசிரியர்களைப் போல் தொழிலுக்குப் பயன்படாது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதோடு இது ஒரு பொதுவான பிரச்சினையாகும். எனவே இதில் கல்வி அமைச்சர் என்ற முறையில் நான் எந்த வாக்குறுதியையும் கொடுத்துவிட முடியாது. எழுத்தர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு அளிப்பது என்பது எல்லாத் துறைகளோடும் தொடர்புள்ள ஒரு பிரச்சினையாகும். எனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள், இப்பிரச்சினை எல்லாத் துறையோடும் சார்ந்திருக்கிற காரணத்தால், இதைக் குறித்து கல்வியமைச்சரான என்னிடம் கேட்காமல் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று கருதுகிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ் :** எழுத்தர்களைப் பொறுத்தவரையில், அரசு அலுவலகங்களில் எஸ்.எஸ்.எல்.சி. படித்த ஊழியர்கள் பி.ஏ பட்டம் பெற்றால், அவர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு வழங்கப்படுகிறது. அதைத் தான் கல்வித் துறையிலும் வழங்க வேண்டும் என்று கேட்கிறோம். எனவே இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசிலனை செய்வாரா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இது கல்வித் துறையை மட்டும் பொறுத்த பிரச்சினையல்ல. இது ஒரு பொதுப் பிரச்சினை. எனவே அந்த மட்டத்தில் கேட்கப்பட்டு பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## பட்டதாரி ஆசிரியர் கழகத்திடமிருந்து புகார்கள்

* 5 வினா—**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மேல் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் நியமனத்தில் தனியார் பள்ளிகளில் பின்பற்றப்படவேண்டிய, 15—6—1978 நாளிட்ட கல்வித் துறை அரசு ஆணை எண் 1091-ல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள், தென் ஆற்காடு மாவட்டத்தில் மீறப்பட்டுள்ளதாக தென் ஆற்காடு மாவட்ட பட்டதாரி ஆசிரியர் கழகத்திடமிருந்து, 1978 ஆகஸ்டு-அக்டோபர் மாதங்களில, அரசுக்குப் புகார்கள் வந்துள்ளன என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அவைகளின்மீது எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) மற்றும் (இ) : கேள்வியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, பட்டதாரி ஆசிரியர் கழகத்திடமிருந்து அரசுக்கு புகார்கள் வரவில்லை. ஆனால் இவ்வினாவை எழுப்பியுள்ள உறுப்பினரிடமிருந்து ஆசிரியர் கூட்டணியின் செயலாளர், கொறடா, என்று குறிப்பிடப்பட்டு அரசாணைகள் 1091, 1092, நாள் 15—6—1978-ல் உள்ள விதிமுறைகள் தென்னாற்காடு மாவட்டத்தில், தனியார் மேல்நிலைப்பள்ளிகளின் ஆசிரியர்கள் மாற்றங்களில் மீறப்பட்டுள்ளன என்று புகார்கள் வந்தன. அவை தென்னாற்காடு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, சம்பந்தப்பட்ட ஆசிரியர்களின் குறைகள் நீக்கப்பட்டு விட்டன.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, அரசாணை எண் 1091-ல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மீறப்பட்டிருப்பதாகத் திட்டவட்டமாக சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அதிகாரி அவர்களிடம் தெரிவித்தும், அந்த அரசாணையைக் காட்டியும், விளக்கியும்கூட, அந்த



அதிகாரி பிடிவாதமாக ஆசிரியர்களுக்குத் தொல்லை கொடுத்தார்கள் என்பது தான் என்னுடைய புகார் மனுவில் சொல்லப்பட்டிருக்கும் பொருளாகும். இதை அரசுக்கும் கல்வித் துறைக்கும் நான் தெரிவித்திருக்கிறேன். எனவே தவறைத் தெரிந்தே செய்த அந்த அதிகாரி மீது ஏதாவது நடவடிக்கை எடுக்க அமைச்சர் முன்வருவாரா ?

(முற்பகல் 10-55)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அரசு அலுவலராக இருக்கின்ற முதன்மைக் கல்வி அலுவலர், சில ஆசிரியர்கள் உபரியாக இருக்கின்றனர் என்ற அடிப்படையில், அவர்களை மாற்றியிருக்கிறார். அதற்குப் பிறகு, 1 : 40 என்ற விகிதத்தைச் சுட்டிக்காட்டியதன் அடிப்படையில், ஆசிரியர்கள் உபரியாக இல்லையென்ற உண்மையைப் புரிந்து கொண்டதற்குப் பிறகு, முதன்மைக் கல்வி அலுவலர் அந்தக் குறையைப் போக்கி ஆசிரியர்களுக்கு நியாயம் வழங்கியிருக்கிறார்.

அலுவலர்களாக இருக்கின்றவர்கள் அரசாணைகளைத் தெரிந்தே மீறுவார்களேயானால், புறக்கணிப்பார்களேயானால், அதன் மூலம் பாடுபடுகிற ஆசிரியர்களுக்குப் பாதகம் விளைவிப்பார்களேயானால், கடுமையான குற்றமாகக் கருதப்பட்டு, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உறுதியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அதிகாரிகள் ஆசிரியர்களுக்கு வீணான தொந்தரவு தராதவண்ணம் நடந்து அனுதாபத்தோடு, ஆதரவோடு இருக்கக் கூடிய வகையிலே பணிபுரிய வேண்டுமென்று இந்த அவையின் மூலமாக அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** சில தனியார் பள்ளிகளில் அரசு விதிமுறைப்படி பிற்பட்டவர்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் நியமனம் தராமல் இருக்கிறார்கள். அதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மூலக் கேள்விக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பிற்பட்டவர்களுக்கும், தாழ்த்தப் [illegible]ர்களுக்கும் விகிதாச்சார அடிப்படையிலே வாய்ப்புகள் தர வேண்டு[illegible] கொள்கையை அரசு பின்பற்றி வருகிறது. இதே கொள்கையை தனியார் பள்ளிகளும், கல்லூரிகளும் பின்பற்றுகின்றன. அரசு கூட இது நிறைவேறுகிறதா என்பதைப் பார்த்துக்கொண்டு வருகிறது.

[1982 பிப்ரவரி 2

## உயர்நிலைப் பள்ளிகளில் பொறியியல் ஆசிரியர்கள்.

*** 6 வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன், திரு. ஜி. சுவாமிநாதன் &** திரு. பா. ரா. தாமலை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) 11—9—1978 நாளிட்ட பொதுப் பணித் துறை அரசாணை எண் 1116-ன்படி உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பொறியியல் ஆசிரியர்களுக்கு ரூ. 350 ஆரம்ப ஊதியமாகக் குறிப்பிடப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அது கல்வித் துறையில் நிறைவேற்றப்படவில்லை என்பது உண்மையா ?

(உ) அதை அமல்படுத்தவேண்டுமென பொறியியல் ஆசிரியர் பேரவையிடமிருந்து கல்வித்துறைக்கு கோரிக்கை ஏதும் வந்துள்ளதா ?

(எ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ), (இ), (உ) மற்றும் (எ)—22—1—1977 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 106 பொதுப் பணித் துறை, மற்றும் 11—9—1978 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 1116 (பொதுப் பணித் துறை) ல் அனுமதிக்கப்பட்ட ஊதிய விகிதம் ரூ. 350—15—425—20—525—25—700 பள்ளிக் கல்வித் துறையில் அனைத்து நிர்வாகங்களின் கீழ் இயங்கும் பள்ளிகளில் பணி புரியும் பொறியியல் ஆசிரியர்களுக்கும் பொருந்தும் என்று 11—6—1980 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 1042 (கல்வி)யில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி நீண்ட காலத்திற்கு முன்பு கேட்கப்பட்ட கேள்வி. இந்தக் கேள்வியின் கோரிக்கையை அரசு ஏற்றுக்கொண்டு ஆணை பிறப்பித்தமைக்காக அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுப் பணித்துறையில் பணியாற்றுகிற பொறியாளர்களுக்கு அளிக்கப்படுகிற அதே ஊதிய விகிதத்தை மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பொறியியல் ஆசிரியர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்றுக்கொண்டதைப் போல, விவசாயத் துறையில் பணியாற்றுகின்ற பி.எஸ்ஸி. (அக்ரி) படித்தவர்களுக்குக் கொடுக்கின்ற அதே ஊதிய விகிதத்தை மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற பி.எஸ்ஸி.(அக்ரி.) படித்த ஆசிரியர்களுக்கும் வழங்கும் கோரிக்கையை அனுதாபத்தோடு பரிசீலித்து, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் ஆணையை வழங்குவார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன். [illegible]



1982 பிப்ரவரி 2]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இந்த ஆசிரியர்களுடைய நிலை வேறு, அது வேறு என்று கருதுகிறேன். பொறியியல் படித்த நபர்கள் ஆசிரியராகவும் வரலாம், பொதுப் பணித் துறையில் பொறியாளர்களாகவும் வரலாம். ஆசிரியர்கள் தேவையென்ற நிலைமை இருக்கும்போது, அவர்கள் பொதுப் பணித் துறைக்குப் போகாமல் கல்வித் துறைக்கு வரக்கூடிய நிலையில் ஊதிய விகிதம் இருக்க வேண்டும். ஏற்கெனவே இருந்த ஊதிய விகிதம் கவர்ச்சி தராத காரணத்தால், ஆசிரியர் பணியிடங்கள் பல காலியாக இருக்கின்றன. பாலிடெக்னிக்குகளில் பல இடங்கள் காலியாக இருக்கின்றன. இதனால் மாணவர்களுடைய கல்வி பாதிக்கப்படுகிறது. அந்த அடிப்படையிலே பொறியியல் துறை ஆசிரியர்கள் சம்பள விகிதம் குறித்து சிறப்பான நடவடிக்கை எடுக்கவேண்டிய கட்டாயம் இருக்கிறது. நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அதே போல நிலைமை இருந்தால், இவர்களுக்கும் பரிசீலிக்கலாம். ஆனால் அப்படிப்பட்ட நிலைமை இல்லையென்று கருதுகிறேன்.

## இளியூர்—பெருமத்தூர் வாய்க்கால் பாசனம்.

*** 7 வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், பெரம்பலூர் வட்டம், இளியூர்—பெருமத்தூர் வாய்க்கால் மோட்டணை 1964-க்குப் பிறகு பழுது பார்க்கப்படாததால், 150 ஏக்கர் நிலம் பாசனமின்றி பாழாவதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** (அ) மற்றும் (இ) இளியூர் மற்றும் பெருமத்தூர் வாய்க்கால்கள் மூலம் பாசனம் பெறும் நிலங்கள் 104 ஏக்கர்கள் ஆகும். போதுமான மழையின்மையால் இந்நிலங்கள் பாசனம் பெறவில்லை. இவ்வாய்க்கால்கள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. நடப்பு ஆண்டு பராமரிப்புப் பணிகள் வறட்சி நிவாரண நிதியில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

## New Irrigation Schemes

8. *Q*.—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Irrigation be pleased to state:

(*a*) the number of Irrigation (New) Schemes taken up by the Government in each district, from 1977 ;

(*b*) the estimate of these schemes ;

(*c*) the number of schemes that are under execution ; and

(*d*) the number of those, which have been challenged in the Court of Law ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. க. இராமமூர்த்தி : இந்த விவர அறிக்கையில், தர்மபுரி மாவட்டம், ஓசூர் வட்டம் கெலவரப்பள்ளி கிராமத்திற்கு அருகில் பொன்னையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் கட்டுவதற்கு அரசு ஒப்புதல் அளித்ததற்குப் பிறகு, சில நிலங்களை அரசு கையகப்படுத்துவதை எதிர்த்து நிலச்சொந்தக்காரர்கள் உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்திருக்கிறார்கள் என்ற தகவல் தரப்பட்டிருக்கிறது. அரசு திட்டத்திற்கு ஒப்புதல் கொடுப்பதற்கு முன்னதாக நிலம் கையகப்படுத்தப்படுகிறதா அல்லது ஒப்புதல் அளித்த பிறகு நிலம் கையகப்படுத்தப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன். ஒப்புதலுக்குப் பிறகு நிலத்தைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கிறபோது, திட்டத்தை நிறைவேற்ற முடியாமல் போகிறது. சில நில உடைமையாளர்கள் அதிக ஈட்டுத் தொகை கேட்கிறபோது, இந்த சிக்கல் ஏற்படுகிறது. அதைத் தவிர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவது இப்போது நீதிமன்றத்திலே வழக்கு தொடரப்பட்டு தடை செய்யப்பட்டிருக்கிற கெலவரப்பள்ளி அணையைப்பற்றி என்று கருதுகிறேன். இது குறித்து அரசு ஏற்கெனவே பல்வேறு நில உடைமையாளர்களின் ஒப்புதலைப் பெற்று பணியைத் துவங்கியிருக்கிறது. ஆனால் குறிப்பிட்ட ஒரு பகுதிக்கு மட்டும் தங்களுக்கு உரிமை இருப்பதாகச் சொல்லிக்கொண்டிருக்கக்கூடியவர்கள், " அணை கட்டுவது பற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால் ஏற்கெனவே நில உடைமையாளர் யார் என்ற பிரச்சினை சுப்ரீம் கோர்ட்டில் இருப்பதால், அந்தத் தீர்ப்பு வருகிற வரையில் காத்துக்கொண்டிருக்க வேண்டிய

@ 89-91 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



அவசியமில்லை, எனவே அணையைக் கட்டலாம்" என்று வாய்மூலமாகத் தெரிவித்துவிட்டார்கள். கிட்டத்தட்ட அணை கட்டிமுடிக்கப்பட்டு, மையப் பகுதியில் இறுதியாக 20 சதவிதம் முடிக்கப்பட வேண்டிய சூழ்நிலையில், ஒப்புதலை எழுத்து மூலமாகத் தரவில்லை என்று கூறி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து தடை கோரியிருக்கிறார்கள். இது குறித்து வழக்கு மன்றத்திலே முடிவு செய்யலாமா, அல்லது ஏற்கெனவே அவர்கள் தடை பெற்றபோது ஒரு குழுவை நியமித்து, அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய ஈட்டுத் தொகையைக் கொடுத்து உடனடியாக நிறைவேற்றலாம் என்று சொல்லப்பட்டதை இப்போது செய்யலாமா என்று அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

அடுத்து, நில உடைமையாளர்கள் ஒப்புதலைப் பெறாத காரணத்தால், முக்கியமான திட்டங்கள் தடைப்படுத்தப்படுகிறதே, அதை நீக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று கேட்டிருக்கிறார்கள். இது முக்கியமான ஒன்று. பொதுவாக நன்மையைக் கருதி குறிப்பிட்ட பகுதிகளில் நீர்த்தேக்கத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று வருகிறபோது, அந்தப் பகுதியிலே இருக்கக் கூடிய நில உடைமையாளர்கள் அது வரையில் தாங்கள் பயன்படுத்தாமல் வைத்திருந்த நிலத்திற்கு திட்டத்தினால் மதிப்பு வந்துவிடுவதால், கூடுதலான தொகை கொடுக்க வேண்டுமென்று கேட்பதும், அப்படி தரவில்லையென்றால் ஒப்புதல் தர மறுப்பதும், பிறகு கட்டாயமாக நில ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுப்பதும் போன்ற சூழ்நிலைகள் ஏற்படுவதால், நல்ல திட்டங்கள் நிறைவேற்றப்படுவது காலந் தள்ளப்படுகிறது. ஆகவே, இவைகளையெல்லாம் ஒன்பதாவது ஷெட்யூலில் கொண்டு வந்து, விவசாயச் சீர்திருத்தம் என்ற முறையில் அவசரச் சட்டத்தின் மூலமாக மேற்கொள்ள முடியுமா என்று அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. இலாபம் தரக்கூடிய முறையிலே, அதுவும் அந்தப் பகுதியிலே உள்ள மக்களின் நன்மைக்காக நல்ல திட்டங்களை நிறைவேற்றுவதற்காக நிலத்தை மேற்கொள்ளும்போது, நிலச்சுவாந்தார்கள் ஏதாவது காரணம் காட்டி, அதிகமான உதவித் தொகையைக் கேட்டு, திட்டத்தைத் தடை செய்ய முன் வந்தால், கண்டிப்பான முறையிலே நடவடிக்கை எடுக்கலாம். இது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. க. இராமமூர்த்தி : இந்த அணையைக் கட்டுவது தொடர்பாக இந்த அரசு செலவிட்டிருக்கிற மொத்தத் தொகை எவ்வளவு ? இதிலே நில உடைமையாளர்களிடமிருந்து நிலத்தைக் கையகப்படுத்தாமல் அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று அணையைக் கட்டுகிற வேலையைத் துவங்க வேண்டிய அவசியம் அரசுக்கு எப்படி ஏற்பட்டது ? அதைத் தவிர்க்காமல் போனது எந்தச் சூழ்நிலையில் என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-05)

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** முதலிலே இது வழக்கு மன்றத்திலே இருக்கிறது. சில கருத்துக்களை விளக்கமாகச் சொல்லவேண்டாமென்று நினைக்கிறேன். அதற்காக தலைவர் அவர்கள் அனுமதிக்க வேண்டும்.

ஆனால், பொதுவாக நில உடைமை உரிமை ஒருவருக்கு இருக்கிறதா என்பதைப்பற்றிய பிரச்சினை உச்ச நீதிமன்றத்திலே இருக்கின்றபோது, அவருடைய ஒப்புதலைப் பெற்று நடவடிக்கையில் இறங்க வேண்டுமென்பதில்லை. ஆனால் அவர்களுடைய ஆதிக்கத்திலே, பொசஷனில் இருந்திருக்குமானால், 4(1) நோட்டிபிகேஷன் கொடுக்கலாம். நாம் சட்ட ரீதியாகச் செயல்படவேண்டுமென்ற அளவிலேதான், 4(1) நோட்டிபிகேஷனில் வைத்து அந்த நிலத்தை அணை கட்டுவதற்காகப் பயன்படுத்த இருக்கிறோம் என்று கேட்டதற்கு, அவர்கள் ஆட்சேபிக்கவில்லை. முதலிலே அவர்கள் பொறியாளர்களிடம், “எங்களுடைய உரிமை பற்றிய வழக்கு உச்ச நீதிமன்றத்திலே இருக்கிறது. எனவே நீங்கள் கட்டுவதிலே ஆட்சேபணை இல்லை. நல்ல திட்டம் தானே” என்று வாய் மொழியாக ஒப்புதல் கொடுத்ததன் காரணமாக மற்ற நடவடிக்கைகளில் இறங்கினோம். ஆனால், அவர்கள் எதுவோ திட்டமிட்டுச் செய்ததுபோல தெரிகிறது. கடைசியாக அணை கட்டி முடிக்கக்கூடிய சூழ்நிலையில் அவர்கள் உயர்நீதி மன்றம் சென்று தடை பெற்றிருக்கிறார்கள். ஒரு தனி மனிதன் அரசிடமிருந்து கூடுதல் தொகை வாங்குவதற்கான முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அல்லது வேறு ஏதாவது நடந்திருக்கிறதா என்பது தெரியவில்லை. ஆனால் ஒரு தனிமனிதன் இந்த அரசை அச்சுறுத்தி கூடுதல் பணம் வாங்க நிச்சயமாக இடம் தரமாட்டோம். ஆயினும், சட்ட ரீதியாக நடக்கவேண்டியதாக இருப்பதால், இரண்டு கோணங்களிலேயும் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

**திரு. க. இராமமூர்த்தி :** எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டிருக்கிறது என்பது பற்றி விவரங்கள் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** முதலிலே திட்டங்கள் போட்டு கிட்டத்தட்ட ரூ. 3 கோடி அளவுக்குச் செலவு செய்ய இருக்கிறோம். இதுவரையில் சுமார் ஒரு கோடி 80 லட்சம் ரூபாய் வரையிலே செலவு செய்துவிட்டோம். மீதித் தொகையைச் செலவு செய்ய முயற்சி எடுத்தபோதுதான் இந்தத் தடை ஏற்பட்டிருக்கிறது. அதுவும் கிட்டத்தட்ட மூன்று





ஆண்டு ஆகிவிட்டது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்றால், இன்னும் நான்கு கோடி ரூபாய் அளவுக்குச் செலவு செய்யவேண்டியிருக்கிறது. இந்த ஆண்டுக்குள்ளேயே முடியாவிட்டால், அடுத்து வருகின்ற விலைவாசி ஏற்றம் மற்ற காரணங்கள் காரணமாக அந்தச் செலவு 5 கோடி ரூபாய் அளவுக்குப் போகலாம். அதனாலே அரசுக்குப் பெரும் இழப்பு வந்துவிடக்கூடாது என்ற அளவில் அவர்கள் கேட்பதும் நியாயமாக இருந்தால், பொறியாளர்கள் அல்லது ஓய்வு பெற்ற நீதிபதிகள் குழு ஒன்றை அமைத்து, அந்தக் குழுவினர் என்ன தொகை தரச் சொல்கின்றார்களோ அப்படிக் கொடுக்கலாம் என்று இருக்கிறோம். சட்ட ரீதியாக வழக்குமன்றம் போவோமானால், இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகிவிடுமோ என்ற அச்சமும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவேதான் இரண்டு கோணங்களிலேயும் அதை நாம் பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, வினாவில் “ஒவ்வொரு மாவட்டத்திலும் 1977 லிருந்து அரசு எடுத்துக் கொண்ட புதிய பாசனத் திட்டங்களுடைய எண்ணிக்கை யாது?” என்று கேட்கப்பட்டிருக்கிறது. அதற்குத் தரப்பட்ட விவர அறிக்கையிலே கன்னியாகுமரி மாவட்டத்தில் அனந்தனாறு கால்வாயையும் மற்றும் கோதையாறு திட்டத்தின்கீழ் உள்ள கிளை நதிகளையும் நவீனப்படுத்துதல் என்று இருக்கிறது. அது இருக்கின்ற பாசனத் திட்டத்தை நவீனப்படுத்துகின்ற ஒரு திட்டமே தவிர, புதிய திட்டம் அல்ல. கன்னியாகுமரி வளர்ச்சி மன்றத்திலிருந்து புதிய நீர்ப்பாசனத்திட்டமாக மாம்பழத்து அணைத் திட்டம், பச்சையாறு திட்டம், கன்னி வாய்க்கால் திட்டம் என்று திட்டங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதையெல்லாம் சேர்க்காமல் கால்வாய்களிலே சிமெண்ட் பிளாஸ்டரிங் போடுகின்ற, இருக்கின்ற கால்வாய்களைச் செப்பனிடுகின்ற திட்டங்கள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நாங்கள் கேட்ட அந்த 3 திட்டங்கள் இங்கே சேர்க்கப்படாமல் கைவிடப்பட்டுவிட்டனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** நவீனப்படுத்துவது என்பதேகூட புதிய திட்டம் தான். காரணம் இந்தப் பகுதிகளிலே முழு சதவிகிதம் நீரையும் பயன்படுத்த வேண்டும் என்பதுதான் நம் திட்டம். அதிலேயும் கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையிலே அங்கே புதிய திட்டங்கள் உருவாக்க வேண்டுமானால், 5 சதவிகிதம், 10 சதவிகிதம் திட்டங்கள்தான் இருக்கின்றன. எல்லாமே மேம்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்ட ஆறுகள் பற்றிய திட்டம் தான் இருக்கின்றன. கூடுதலாக ஆயக்கட்டுகளைக் கூட்டி கால்வாய்களை நவீனப்படுத்துவது என்பதுகூட ஒரு மிக

முக்கியமான திட்டம் தான். நவீனப்படுத்துவது என்பதுகூட தேவையான திட்டம் தான். சாதாரணமாக ஆயிரம் ஏக்கருக்குப் பாசன வசதி செய்து தரக்கூடிய திட்டத்தால், நவீனப்படுத்துவதன் மூலம் 1,500 ஏக்கருக்கு பாசன வசதி கொடுக்க முடியும். அதுவும் புதிய திட்டத்தில் சேர்வதுதான் உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய திட்டங்களையும் கை விடுவதாக இல்லை. திட்டம் நிறைவேற்றுவதில் உள்ள பிரச்சினை நிலத்தைக் கையகப் படுத்துவதில் மக்கள் ஒத்துழைப்பு கொடுப்பதில்லை. இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதிலே இப்படி சில சிக்கல்கள் இருக்கின்றன. அதிலே மக்கள் ஒத்துழைப்பு தருவார்கள் என்றால், அந்தத் திட்டங்களை அரசு பரிசீலிக்க லாம்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகுமேலவைத் தலைவர் அவர்களே, தொப்பையாறு நீர்த்தேக்கம் பற்றிக் குறிப்பிடவில்லை. அதைப் போலவே, சேலம் மாவட்டத்தில் ஆனைமடுவு, கரியகோயில் நீர்த்தேக்கம் பற்றி என்ன முடிவு, நடவடிக்கை அரசு எடுத்திருக்கிறது? தொப்பையாறு பற்றி அரசு என்னென்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? பாம்பிக்குளம் ஆழியாறு திட்ட ஆயக்கட்டுகளின் விரிவாக்கம் என்ற திட்டத்தில் மேலும் அதிகமா ஆயக்கட்டுக்களைக் கட்டும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று கேட்டு கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தலைவர் அவர்களே, விவர அறிக்கையை அவர் பார்த்திருக்கிறார். ஆனால் சரியாகப் பார்க்கவில்லை என்று நினைக்கிறேன். அதிலே தொப்பையாறு நீர்த்தேக்கம் என்று குறிப் பிட்டு, 365 லட்சம் ரூபாய் அதற்கு ஒதுக்கியிருக்கிறோம். அது தருமபுரி மாவட்டத்திற்குப் பயன்படுகிறதா என்று கேட்டார்கள். அது தர்மபுரி மாவட்டத்திற்கும் பயன்படுத்தப்பட்டுவருகிறது. தர்மபுரி தொகுதியைச் சேர்ந்த கிட்டத்தட்ட 3,000 ஏக்கர் நிலத்திற்குப் பயன்படுத்தப்பட்டு பிறகு சேலம் மாவட்டத்திலுள்ள தாரமங்கலம் செல்கிறது. எனவே தொப்பையாறு விடப்படவில்லை. அது இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இரண்டு திட்டங்கள் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். அவை அரசினு டைய பரிசீலனையில் இருந்து வருகிறது. இப்போது எடுத்துக்கொள்ள லாமா என்ற ஆய்விலே இருக்கிறது. அதிலே ஆனை-மடுவு நீர்த்தேக்கத் தைப் பொறுத்த வரையிலே, 422 லட்சம் ரூபாய் செலவு செய்து அந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ளலாம் என்றும், அதிலே சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்றும் அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது. கரியகோயில் நீர்த்தேக்கத்தைப் பொறுத்த வரையிலே, அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.



**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் சேர்வலாறு நீர் மின் சக்தித் திட்டம், பாசனத் திட்டம் இரண் டும் ரூ. 511 லட்சம் செலவில் செய்வதாகக் குறிப்பு இருக்கிறது. பல ஆண்டு காலமாக இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டு வருகிறது. அந்தத் திட்டம் இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றது. இப்போது எந்த நிலையில் இருக்கிறது? இப்போதாவது அதற்குத் தேவையான நிதி ஒதுக்கப்பட்டிருக் கிறதா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** பொதுவாக இந்தப் பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதிலே நிதி ஆதாரம் என்பது ஒரு பிரச்சினை அல்ல. இவைகள் முன்னுரிமை பெற்ற திட்டம் என்ற காரணத்தினாலே, நிதி இல்லாத காரணத்தினாலே இந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை என்ற பிரச்சினை தமிழகத்திற்குக் கிடையாது. ஆனால், இந்த சேர்வலாற்றைப் பொறுத்தவரையிலே, முதலிலே வனப் பாதுகாப்பு என்ற அடிப்படையிலே அங்கே உள்ளே நுழைந்து ஆய்வு செய்வதற்கே கிட்டத்தட்ட ஒரு வருடம் ஆகிவிடுகிறது. கேட்டால் அங்கேயிருக்கின்ற குதிரைவால், சிங்கவால், குரங்குவால் பகுதிகளைப் பாதுகாக்க வேண்டும் என்று சொல்கின்றார்கள். ஆனால் வனங்களைப் பாதுகாக்காமலேயே திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு போனால், அந்தத் திட்டம் வெற்றிபெறாமல் போய்விடும். அதன் காரணமாக மழை அளவு குறைந்துபோகுமானால், நாம் எதிர்பார்க்கக்கூடிய அளவுக்கு நீர் அளவு இருக்காது போகும். அந்த அளவில் வனங்களைப் பாதுகாக்க வேண்டும் என்று இருக்கிறது. சேர்வலாறு வனத்திற்குப் பாது காப்பு தரவேண்டுமென்ற அளவிலே அதிகமான சேதம் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகவும், இரண்டு துறைகளைச் சேர்ந்தவர்களும் கலந்து பேசி திட்டங்களைக் கடைசியிலே செயல்படுத்த வேண்டும் என்று அரசு இருக் கிறது. 1982 இறுதி அல்லது 1983 மார்ச்சுக்குள் முடிவாகிவிடும் என்ற தகவல் வந்திருக்கிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர் களே, கொடுக்கப்பட்ட விவர அறிக்கையிலே வட ஆற்காடு மாவட்டத்திலே எந்தவிதமான புதிய பாசனத் திட்டமும் அறிவிக்கப்படவில்லை. அந்த மாவட்டத்திலே புதிய திட்டம் எதுவும் இல்லை என்று மாநில அரசாங்கமே முடிவு எடுத்து விட்டதா? மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து பரிந்துரைக்கப்பெற்ற திட்டங்கள் ஏதாவது அரசினுடைய பரிசீலனையில் இருக்கின்றனவா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

[1982 பிப்ரவரி 2

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையிலே, பெரிய அணைக்கட்டுகளைக் கட்டி திட்டங்கள் நிறைவேற்றுவதற்கான சாத்தியக் கூறுகள் குறைவு. ஆனால் பாலாற்றில் வரக்கூடிய தண்ணீரைப் பயன்படுத்தி, ஊற்று நீர்ப் பாசனம், குளத்து நீர்ப் பாசனம் இவைகள்தான் அங்கே அதிகமாக நடந்து வருகின்றன. தமிழகத்திலே எக்ஸ்-ஜமீன் டாங்குகள் அதிகமாக உள்ள மாவட்டங்களில் வட ஆற்காடு மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் இவைகள்தான் முன்னணியில் இருக்கின்றன. இவர்களுக்குத் தேவையான நீரை பாலாற்றின் மூலமாகக் கொண்டு செல்வது என்பது மிக முக்கியமான திட்டம். பில்லூர் என்ற இடத்தில் 18 கோடி ரூபாய் செலவில் ஸ்டோரேஜ் ரிசர்வாயர் திட்டம் என்று திட்டம் வகுத்து தமிழக அரசு ஆய்வு செய்து வருகிறது. அதற்கு ஆந்திர அரசினுடைய அனுமதிக்காக காத்திருக்கிறது. அது வருமானால், அதிகமான மழைபெய்யும் காலங்களிலே கிடைக்கக்கூடிய உபரி நீரை பில்லூர் அணையிலே தேக்கி வைத்து, ஒருவேளை பருவ மழை பொய்த்து பாலாற்றிலே நீர் இல்லை என்றால், அதன் காரணமாக ஊற்றுப் பாசனம், குளத்துப் பாசனம் செய்ய முடியாமல் இருக்கிறது என்றால், இந்த பில்லூர் அணையிலிருந்து திறந்துவிட்டு பாலாறு முழுவதும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் அளவுக்கு இந்தத் திட்டத்தை வைத்திருக்கிறார்கள். இதற்கு 18 கோடி ரூபாய் வரை செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த 600 ஏக்கர் இதிலே ஒருவேளை 'சப்மெர்ஜ்' ஆகும் என்ற அச்சம் தெரிவித்திருக்கிறார்கள். அது சம்பந்தமாகப் பேச்சு வார்த்தைகள் நடத்திக்கொண்டிருக்கிறோம். மொத்தத்தில் ஒரே திட்டமாக 18 கோடி ரூபாயில் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தஞ்சை மாவட்டத்தைப்பற்றி இதிலே எந்த விதமான குறிப்பும் இல்லை. அந்த மாவட்டத்தைப் பொறுத்த அளவில், ஏதாவது திட்டங்கள் போடுவதாக அரசுக்கு நோக்கம் உண்டா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திற்கு என்று எல்லாத் திட்டங்களும் அங்கே தான் இருக்கின்றன. தமிழகத்திற்குத் தேவையான நெல்லே அங்கேதான் உற்பத்தி செய்யப்படுகிறது. திட்டம் போடக்கூடாது என்று இல்லை. திட்டங்கள் போடுவதற்கு ஏதாவது சாத்தியக் கூறு இருக்கிறதா என்று உறுப்பினர் அவர்கள் சொன்னால், அதை நிச்சயமாகப் பரிசீலனை செய்யலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



1982 பிப்ரவரி 2]

**திரு. பா. ரா. தாமஸ் :** மதுரை மாவட்டத்திலே சென்ற ஆண்டு அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் கோடை ரோட்டிற்குப் பக்கத்திலே திருமலையாற்றுப் பகுதியிலே ஒரு நீர்த்தேக்கம் வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். அதைப்பற்றி அரசு ஏதாவது முடிவு எடுத்திருக்கிறதா? அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** திருமலை ஆற்றுத் திட்டத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. எனவே இப்போது பூர்வாங்கமான மதிப்பீடுகள் தயாரிக்கப்படுகின்றன.

**திரு. ஆ. நல்லசிவன் :** திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குனேரி தாலுக்காவில் களக்காடு என்ற பகுதியில் நம்பியாற்றின் மீது ஒரு அணை கட்டும் திட்டத்திற்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அடிக்கல் நாட்டப்பெற்றது. அது எந்த நிலையில் இருக்கிறது?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** திருநெல்வேலி மாவட்டத்தில் இதுபோன்ற இரண்டு, மூன்று திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பெற்று அந்த அடிக்கல்கள் மட்டும்தான் அங்கே இருக்கின்றன. அணைக்கட்டுக்கள் கட்டப்படவில்லை. அதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. அதிலே மிக முக்கியமானது, நில உடைமையாளர்களின் தடைதான், மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் சொன்னதுபோல, நில உடைமையாளர்கள் பச்சையாறு திட்டத்திலேகூட, தங்களுடைய சொந்தப் பாதிப்பை மனதிலே கொண்டு, குறுக்கீடு செய்து, நிறுத்தி வைக்கக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. அதனால்தான் இந்தச் சூழ்நிலையெல்லாம் வந்தது. இன்னொன்று நீர் அளவைப்பற்றி முதலிலே சரியாகக் கணக்கு எடுக்காமல் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதாக அறிவித்துவிட்டு, பிறகு அதிலே ஒன்றும் செய்ய முடியாமல் போய்விட்டிருக்கிறது. இப்போது நீர் அளவை எல்லாம் எடுக்கப்பட்டிருக்கிறது. 1983-லேதான் இந்தத் திட்டத்தைப் பற்றி இறுதி செய்ய முடியும். அது வரை உறுப்பினர் அவர்கள் பொறுத்திருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தத் திட்டங்களை எடுத்துக் கொள்ள முடியுமா என்பதைப்பற்றியும் ஆய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 11-15)

**திரு. சி. இராமலிங்கம் :** வட ஆற்காடு மாவட்டத்திலிருந்து தென் ஆற்காடு மாவட்டத்திற்கு வரக்கூடிய நந்தன் கால்வாய் திட்டம் நிறைவேற்றப் பட்டுள்ளதா அல்லது நிறைவேற்றப்படாமல் விடுபட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். நிறைவேற்றப்படவில்லை என்றால், அது எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : நந்தன் கால்வாய் என்றாலே இடையூறு எல்லாம் இருக்குமென்று கருதுகிறேன். (சிரிப்பு) அதுபற்றி தனிக் கேள்வி போடவும்.

### தாலிக்கு தங்கம் வழங்குதல்.

* 9 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) கலப்புத் திருமண தம்பதிகளுக்கு தாலி செய்வதற்கு, தங்கம் வழங்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : கலப்புத் திருமணம் செய்துகொள்ளும் தம்பதிகளுக்கு ஊக்கம் கொடுக்கின்ற வகையில் அவர்களுடைய திருமணத்திற்கான தாலிச் செலவை ஏற்றுக்கொள்ள அரசு முன்வந்தால், அது நல்லதாக இருக்கும். இந்தத் திட்டம் குறித்து இப்போது அரசு பரிசீலனை செய்யவில்லை என்றாலும், இனிமேலாவது அது குறித்து அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : கலப்புத் திருமணம் செய்துகொள்ளும் தம்பதிகளுக்கு அரசின் சார்பில் பல்வேறு சலுகைகள் ஏற்கெனவே அளிக்கப்பட்டு வருகின்றன. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற சலுகையை தற்போது அளிக்கின்ற நிலையில் அரசு இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : இன்று ஆட்சிப் பொறுப்பிலே இருக்கும் கட்சி தேர்தலைச் சந்தித்தபோது, தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றாக எல்லோருக்கும்—ஏழைகளுக்கு தாலிக்குத் தங்கம் கொடுப்போமென்று சொல்லி, அதை மக்கள் நம்பி, வாக்களித்ததால் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். இந்த நிலையில், எல்லோருக்கும் கொடுக்க முடியவில்லை என்றாலும், கலப்புத் திருமணம் செய்துகொள்ளும் ஏழைகளுக்கு மட்டுமாவது தாலிக்குத் தங்கம் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : வருங்காலத்தில் அரசின் நிதிநிலை பொறுத்து இதுகுறித்து நடவடிக்கை எடுக்கலாம்.



திரு. க. மீனாட்சிசுந்தரம் : கலப்புத் திருமணத் தம்பதிகளுக்கு பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தச் சலுகைகள் என்னென்ன என்பதை அறிய விரும்புகிறேன். அவற்றிலே ஒன்றாக கலப்புத் திருமணம் செய்துகொள்ளும் தம்பதிகளின் குழந்தைகளுக்கு வேலை வாய்ப்பிலே முன்னுரிமை அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கேள்வி, 'தாலிக்குத் தங்கம்' அளிப்பது பற்றித்தான்.

### Part time Pre-vocational Instructions.

* 10. *Q*.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Adi Dravidar Welfare be pleased to state:

(*a*) whether it is a fact that, though Pre-vocational Instructors serving as Part-time teachers, are eligible for a pay of Rs. 100 per month, such Part-time teachers in Harijan Welfare Department, are paid only Rs. 75 ;

(*b*) if, so, the number of such Part time teachers; and

(*c*) the reason for this disparity?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆதி திராவிடர் நலத்துறையில் பணியாற்றும் பகுதி நேரத் தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு 1—1—1981 முதல் ரூ. 100 மாதச் சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது. இதற்கான உத்தரவு 1—4—1981 அன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பா. ரா. தாமஸ் : அரசு நிதித்துறை அரசாணை 1950-ன் படி 1—4—1978 அன்றிலிருந்தே பகுதி நேர ஆசிரியர்கள் 100 ரூபாய் பெற வேண்டுமென்று இருக்கிறது. ஆனால், அந்த அரசு ஆணையை அமுல் படுத்தும் துறைகள் என்று ஆதி திராவிடர், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை என்று குறிப்பிடப்படாததால், காலம் கடந்தே, அதாவது 1981 ஆம் ஆண்டிலிருந்துதான் அந்தத் துறையின்கீழ் பணியாற்றும் பகுதிநேர ஆசிரியர்களுக்குக் கொடுக்கிறார்கள். பிற பகுதி நேர ஆசிரியர்கள் 1—4—1978 லிருந்து 100 ரூபாய் பெறும் போது, ஆதி திராவிடர் நலத் துறையில் பணியாற்றும் பகுதிநேர ஆசிரியர்கள் 1981 லிருந்து பெறுவது நியாயமல்ல. எனவே அவர்களும் 1—4—1978 லிருந்து பெறும் வகையில் அரசு ஆணையிடுமா ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் தற்போது நடவடிக்கை எடுக்க முடியாதென்ற குறிப்பு இருந்தாலும், வருங்காலத்தில் இது குறித்து ஆதி திராவிடர் நலத்துறையிலே பணியாற்றும் ஆசிரியர்களுக்கு அந்தச் சலுகையை வழங்குவது குறித்து பரிசிலனை செய்யுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு அமைச்சரவர்களின் உறுதிமொழிக்கு நன்றி. ஏற்கெனவே, மாநிலத்திலே ஒரு பகுதியினர் 1—4—1978 லிருந்து ரூபாய் 75 க்கு பதிலாக ரூபாய் 100 பெறுகிறார்கள். ஆனால் ஆதி திராவிடர் நலத் துறையில் பணியாற்றும் பகுதி நேர ஆசிரியர்கள் அவ்வாறு பெற வில்லை. அவர்களுக்கு நீதி வழங்கும் முறையிலே, இதனால் அதிக பண இழப்பு இராதென்ற நிலையிலே, 1—4—1978 லிருந்து அவர்களுக்கும் இந்தச் சலுகையை வழங்க அமைச்சரவர்கள் ஆணை பிறப்பிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** நான் ஏற்கனவே சொன்னது போன்று, இது குறித்து பரிசிலனை செய்வோமென்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### உடுக்குறியிடாத வினாக்கள்.

### தகுதிபெற்ற தமிழாசிரியர்களை தலைமையாசிரியர்களாக நியமித்தல்.

**1. வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் முழுத் தகுதிபெற்ற தமிழாசிரியர்களில், பட்டதாரி தகுதிபெற்று, தலைமையாசிரியர்களாக நியமனம் செய்யப்பட தகுதி பெற்றுள்ளவர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்கட்கு தலைமையாசிரியர் பதவி வழங்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?



விடை.—(அ) 265 பேர்.

(இ) முதனிலை மொழி ஆசிரியர்கள், செயலக உதவியாளர்கள், பொறியியல் போதகர், வேளாண்மை போதகர் மற்றும் உடற்கல்வி இயக்குநர்கள் ஆகியோர்களில் பின்வரும் தகுதிகளை பெற்றவர்களை, உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களாக பதவி உயர்வு அளிக்கலாமென ஜூலைத் திங்கள் 1981 ஆம் ஆண்டு ஆணையிடப்பட்டுள்ளது :

(1) ஏதேனும் ஒரு மொழி அல்லது பாடத்தில் பட்டம்.

(2) ஆசிரியர் பயிற்சிப் பட்டம்.

(3) ஆசிரியர் பயிற்சிப் பட்டம் பெற்றபின் 5 ஆண்டு பயிற்றுவிப்பு அனுபவம்.

### *B.C.|S.C. Candidates Selected in the General Quota in 1980, for admission in Engineering Colleges*

2. *Q.*—THIRU K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Education be pleased to state the number of Backward Class and Scheduled Caste candidates, who were selected in the general quota for admission into Engineering Colleges in the year 1980 ?

விடை.—1980-81 ஆம் ஆண்டு பொறியியற் கல்லூரிக்கு தேர்வு செய்யப்பட்ட மாணவர்களில், பொது ஒதுக்கீட்டில் பின் தங்கிய வகுப்பைச் சார்ந்தவர்கள் 185 பேரும், ஆதி திராவிட வகுப்பினைச் சார்ந்தவர்களில் ஒருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

### *Cement Permits*

3 *Q.*—THIRU K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(*a*) the total number of permits and the number of Cement bags issued by the Commissioners of Malam, Ol kk Vanur and Merkanam Panchayat Unions, every month in the past two years; and

(*b*) the purposes for which the applications for Cement permits were made ?

விடை.—(அ) மற்றும் (இ) அவையின் முன்பு ஒரு அறிக்கை @ வைக்கப் பட்டுள்ளது

---

@ 42-43 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது

### தமிழில் எம். ஏ. பட்டம் பெற்றுவேலைத் தேடித்தரும் அலுவலகங்களில் பதிவு செய்துள்ளோர்.

**4. வினா.—திரு. ஜி.சுவாமிநாதன் :** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழில் எம்.ஏ. பட்டம் பெற்ற மாநிலத்திலுள்ள வேலை தேடித் தரும் அலுவலகங்களில் பதிவு செய்துள்ளோர் எத்தனை பேர்?

**விடை.**—6—12—1980 ஆம் தேதி நிலவரப்படி தமிழில் எம்.ஏ. பட்டம் பெற்ற 1,567 நபர்கள் மாநிலத்திலுள்ள வேலை தேடித்தரும் அலுவலகங்களில் பதிவு செய்துள்ளனர்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடம்பெறும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (2) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி விபரம் முடிவு செய்யப்பட்டது.

3—2—1982—கூட்டம் இல்லை.

4—2—1982 முதல் 6—2—1982 வரை—ஆளுநர் உரையின்மீது விவாதம்.

மேற்கொண்டு நிகழ்ச்சி விபரம் பின்னர் முடிவு செய்யப்படும்.

### (3) ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான திருத்தங்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான திருத்தங்கள் 1982 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 4 ஆம் நாள் வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னதாக செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.



### (4) மதுரை காமராஜ் பல்கலைக் கழகப் பொதுக் குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** டாக்டர் இரா. சனார்த்தனம், மற்றும் திரு. ஈ. எஸ். வெங்கடேசன் ஆகியோரின் பதவிக் காலம் மதுரை-காமராஜ் பல்கலைக் கழகப் பொதுக் குழுவில் 28—10—1981 அன்று முடிவடைந்து விட்டதால் மதுரை-காமராஜ் பல்கலைக் கழகப் பொதுக் குழுவில் ஏற்பட்ட காலியிடத்தை நிரப்ப வேண்டி, தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களால் விகிதாச்சார பிரதிநிதித்துவ கோட்பாட்டிற்கிணங்க, ஒற்றை மாற்று வாக்கு முறை மூலம் அப்பல்கலைக் கழகப் பொதுக் குழுவிற்கு இரண்டு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அதற்காக கீழ்க்கண்ட நாட்களை நேரடி வாக்குப் பதிவு மூலம் தேர்தல் நடைபெறும் நாட்களென நிர்ணயிக்கிறேன்:—

வேட்பு மனுக்கள் பெற்றுக்கொள்வதற்கான கடைசி நாளும், நேரமும் 4—2—1982 முற்பகல் 11-30 மணி.

வேட்பு மனுக்கள் ஆய்வு செய்வதற்கான கடைசி நாளும், நேரமும் 4—2—1982 பிற்பகல் 12-30 மணி.

வேட்பு மனுக்கள் திரும்பப் பெறுவதற்கான கடைசி நாளும், நேரமும் 5—2—1982 முற்பகல் 11-30 மணி.

தேவை ஏற்படின் வாக்குப் பதிவு நடைபெறும் நாளும், நேரமும் 8—2—1982 முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை.

வேட்பு மனுக்களை செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

### (5) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளில் 6-வது விதியின்கீழ் மேலவையின் 61-வது கூட்டத் தொடருக்கு கீழ்க்காணும் உறுப்பினர்களை, மேலவை மாற்றுத் தலைவர் பட்டியலில் இடம் பெறுமாறு நான் நியமித்துள்ளேன்:—

1. திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்.
2. திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி.
3. திரு. ஏ. ஜே. தாஸ்.
4. திரு. சி. இராமலிங்கம்.

## 5. ஆளுநர் உரையின்மீது விவாதம்.

**திரு. சி. இராமலிங்கம் :** மாண்புமிகு தலைவரவர்களே, 1982 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 1 ஆம் நாள் மேதகு ஆளுநர் அவர்கள் இரண்டு அவைகளையும் ஒன்றாகக் கூட்டி நிகழ்த்திய ஆளுநர் உரையின்மீது பேசு வதற்கு எனக்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி தெரிவித்து, தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"1982 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1 ஆம் நாள் ஆளுநர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரை@ நிகழ்த்தியதற்காக, தமிழ்நாடு சட்ட மன்ற பேரவை உறுப்பினர்கள் தங்களுடைய நன்றியை ஆளுநர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றனர்".

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவர் அவர்களே, நான் அதை வழி மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"1982 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1 ஆம் நாள் ஆளுநர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரை நிகழ்த்தியதற்காக, தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் தங்களுடைய நன்றியை ஆளுநர் அவர்களுக் குத் தெரிவித்துக்கொள்கின்றனர்."

**திரு. சி. இராமலிங்கம் :** தலைவரவர்களே, பல நாட்கள் உணவு இல்லா மல், தாய் தந்தையற்ற அனாதைப் பிள்ளை, நல்ல உணவிற்காக ஏங்கியிருக் கும் சூழ்நிலையிலே, அவனை ஒரு தாய் தத்து எடுத்துக்கொண்டால் எவ்வளவு பெருமகிழ்ச்சி கொள்வாளோ அந்த முறையில் ஆளுநர் அவர்கள் உரை அமைந் திருக்கிறது.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 11-25)

உணவுப் பொருள்கள் பற்றாக்குறையை நமது மாநிலம் 1981 ஆம் ஆண்டு திறமையாகச் சமாளித்திருக்கிறது. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், தமிழகத்தை விட ஆந்திராவில் நல்ல விளை நிலங்கள் இருக்கின்றன. அங்கே நம்மை விட விளைச்சலும் கண்டிருக்கிறது இருந்தும் அங்கே விலைவாசி அதிகமாக இருக்கிறது. அங்கே அரிசி கிலோ ஒன்று 4 ரூபாய் அளவுக்கு விற்கிறது. அதே நேரத்தில் தமிழகத்திலே குறைந்த விலையில் அதாவது

@ 94-119 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டது.





கிலோ ரூபாய் 2½க்கு அரிசி கிடைக்கிறது. நாம் உணவுத் திட்டத்தைத் திறமையாகச் சமாளித்திருக்கிறோம். அவர்களும் கூட இதை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அதேபோல வளர்ச்சிப் பணியில் நமது மாநிலம் மற்ற மாநிலங்களை விட நல்லமுறையில் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், பல சம்பவங்களைச் சொல்ல முடியும். நான் சமீபத்திலே பல மாநிலங்களுக்குச் சென்று வந்திருக்கிறேன். அங்கே யெல்லாம் நகரங்களிலே கூட பஸ்கள் சரியாக ஓடுவதில்லை. அப்படியே ஓடினாலும், 4 பஸ்கள் கூட ஒரு நாளைக்கு ஓடுவதில்லை. நமது மாநிலத் தில்லா பஸ்கள் பட்டி தொட்டிகளிலெல்லாம் ஓடுகின்றன. இதுதான் பெரு வளர்ச்சி என்று காட்டிக்காட்டுவதற்காக நான் இதைச் சொல்லவில்லை. அதே நேரத்திலே பஸ்கள் அதிகமாக ஓடினால், விவசாயிகளுக்குத் தேவையான பொருள்களை வாங்கிச் செல்ல, விற்பனை செய்ய வாய்ப்பாக இருக்கும். அதுபோல் நகரத்திலிருந்து கிராமத்திற்கும், கிராமத்திலிருந்து நகரத்திற்கும் வந்து போக, தங்கள் தேவையைப் பூர்த்தி செய்ய, பஸ்கள் ஓடினால் விவசாயிகளுக்கு வாய்ப்பாக இருக்கும். இந்தப் பெரு வளர்ச்சி மற்ற எல்லா வளர்ச்சிகளிலும் தொக்கி நிற்கிறது. பஸ்கள் ஓடுகின்றன என்றால், சாலை கள் சரியாக, சிறப்பாகப் பராமரிக்கப்படுகின்றன என்று பொருள். தண்ணீர் தேக்கங்கள் நிறைந்த இடங்களில் எல்லாம் பாலங்கள் கட்டப்பட்டு பஸ்கள் ஓடுகின்றன என்று பொருள். சாலைகள் பராமரிக்கப்பட்டு, தண்ணீர் தேக்கங்கள் இருக்கிற இடங்களில் எல்லாம் பாலங்கள் கட்டப்பட்டால் தான், பஸ்களை எடுத்துச் செல்ல முடியும். ஒருவனுடைய வாழ்வை அறிய வேண்டுமென்றால், ஒன்றைச் சொல்வார்கள். "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்று சொல்லுவார்கள். அப்படிச் சொல்கின்ற நேரத்தில் சென்னை நகரிலே அளவுக்கதிகமாகப் பேருந்துகள் ஓடுகின்றன. குறிப்பாக என்னுடைய தொகுதியைப் பற்றிச் சொல்கிறேன். பரங்கிமலைப் பகுதியிலே ஒட்டியம்பாக்கம் என்ற ஊர் இருக்கிறது. பரங்கிமலை தொகுதிக்கு பேரறிஞர் அண்ணா புரட்சி தலைவர் அவர்கள் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலே, உறுப்பினராக இருந்திருக் கிறார்கள். அந்த ஊருக்கு உள்ளே பஸ் போகாது. அந்த ஊருக்குச் செல்ல வேண்டுமென்றால், பஸ்ஸிலிருந்து இறங்கி இடுப்பு அளவு தண்ணீர் ஆழத்திலே நடந்துதான் செல்ல வேண்டும். தாய்மார்களாக இருந்தாலும் சரி, ஆடவர் களாக இருந்தாலும் சரி, பெண்களாக இருந்தாலும் சரி, இளைஞர்களாக இருந்தாலும் சரி, ஒட்டியம்பாக்கத்திற்கு அவர்கள் ரொம்ப சிரமத்துடன்தான் போய் வர வேண்டியிருந்தது. அங்கு பாலம் கட்ட ஊராட்சி ஒன்றியம்

[திரு. சி. இராமலிங்கம்] [1983 பிப்ரவரி 2

ஒரு வருஷத்தான் நிதி கொடுக்கும். அதைக்கூட தனியார் அல்லது யார் கட்ட வேண்டுமென்று கேட்கிறார்களோ அவர்களுக்கு அந்த கிராமத்தார் தான் நிதி கொடுக்க வேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக் காலத்திலே அந்தக் கிராமத்திலுள்ள மக்கள் ரொம்ப சிரமப்பட்டார்கள். 1967 ஆம் ஆண்டிலே அந்தக் கிராமத்தார் அதற்குத் தேவையான பணத்தைக் கொடுக்க முடியாமல் அந்தப் பாலம் கட்டப்படாத நிலையில் ஓடுகின்ற வெள்ளத்தால் தாய்மார்களை, குழந்தைகளை அழைத்துக் கொண்டு தாம்பரத்திற்கு வரக் கூடிய நிலை இருந்தது. அப்போது புரட்சித் தலைவர், திரு. எம். ஜி. ஆர். அவர்கள் அந்தத் தொகுதியின் உறுப்பினராக இருந்தார்கள். பேரறிஞர் அண்ணா தமிழக முதல்வராக இருந்தார்கள். இன்றைக்கு இந்த ஆட்சியை எதிர்த்து ஒவ்வொரு நாளும் விடிந்தால் போராட்டம், அஸ்தமித்தால் போராட்டம் என்று அறிவிக்கிற கலைஞர் அவர்கள் தான் அன்றைய இலாகா பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தார். அன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்கள், போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த கலைஞர் அவர்களிடத்தில் தன்னுடைய பணத்தைக் கொடுத்து அந்த பஸ் போகாத ஊருக்கு பஸ் போக்குவரத்து ஏற்பாடு செய்தார்கள்.

திரு. ஆர். டி. சீத்தாபதி: மாண்புமிகு உறுப்பினர் "தும்மினால் போராட்டம்" என்று சொன்னார். அப்படி ஒரு போராட்டம் நடத்துவதாகத் தெரியவில்லை. தும்மினால் கூட போராட்டம் வருமா? (சிரிப்பு)

திரு. சி. இராமலிங்கம்: "ஆகாத மனைவி கை பட்டால் குற்றம் கால் பட்டால் குற்றம்" என்று சொல்வார்கள். அதுபோல் நாளைக்கு அந்தமுறையில் தும்மினால் கூட போராட்டம் வரலாம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மனைவி என்றால் கல்யாணம் ஆன மனைவியா அல்லது கல்யாணம் ஆகாத மனைவியா? (சிரிப்பு)

திரு. சி. இராமலிங்கம்: கல்யாணம் ஆனால்தான் மனைவி என்று பொருள். (சிரிப்பு) ஆக, அன்றைய கலைஞர், இன்றைய கலைஞர் அல்ல. முந்தைய ஆட்சியாளர்கள் விட்டுச் சென்ற குறையைக் கண்டுபிடித்து புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி நிறைவேற்றி வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். எடுத்துக்காட்டாகத்தான் நான் ஒன்றை இங்கே குறிப்பிட்டுச் சொன்னேன். உணவு நிலைமையை தமிழக அரசு சிறந்த முறையில் சமாளித்து வருகிறது. மத்திய அரசு நமக்குக் கொடுக்க வேண்டிய அளவு கொடுக்காமல் குறைந்த அளவு உணவுப் பொருள்களைக் கொடுத்திருக்கிறது. இன்று உணவுப் பஞ்சம் இல்லாமல், பட்டினி இல்லாமல் நம்முடைய



[திரு. சி. இராமலிங்கம்] 1982 பிப்ரவரி 2]

தேவையைப் பூர்த்தி செய்கின்ற அளவுக்கு உணவு நிலைமையைத் திருப்திகரமாக வைத்துக் கொண்டு வருகிறோம். இது மகிழ்ச்சிக்குரிய ஒன்று என்று மேதகு ஆளுநர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

அதேபோல எண்ணெய் பெருக்கத் திட்டம் என்ற முறையில், ஏழை எளிய மக்களுக்கு பட்டா கொடுக்கின்ற நேரத்தில் ஒரு தென்னங் கன்றும் கொடுப்போம் என்கின்ற வளர்ச்சித் திட்டத்தை சிந்தித்து உருவாக்கியிருக்கிறார்கள். காடு வளர்க்கப்பட வேண்டும். மரம் வளர்ந்தால்தான் மழை பெய்யும். அதற்குத் தேவையான மரங்கள் வளர்க்கப்பட வேண்டும். பொருளாதார வளர்ச்சி காண மரங்கள் அதிக அளவில் நட வேண்டும். "ஒரு முருங்கை மரமும் ஒரு எருமை மாடும் இருந்தால், ஒரு குடும்பம் பிழைக்கும்" என்று சொல்வார்கள். அதற்கேற்ப 3 சென்ட் நிலத்திற்கான பட்டா கொடுக்கும் போது, ஏழை எளிய மக்களுக்கு ஒரு தென்னங் கன்றும் கொடுக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். தென்னை மரத்தை கள் மரம் என்றும், காமதேனு என்றும் சொல்வார்கள். நான் தென்னை மரத்தை "காமதேனு" என்று சொல்கிறேன். "காமதேனு"வை ஏழையெளிய மக்களுக்குக் கொடுக்கின்ற திட்டத்தை நான் பாராட்டுகிறேன்.

அதைப்போல நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அதற்கான சட்ட முன்வடிவு இங்கே நிறைவேற்றப்பட்டு டெல்லிக்குப் போன பிறகு என்ன காரணத்தினாலோ தெரியவில்லை அதற்கு அங்கே அனுமதி கொடுக்கப்படவில்லை. சுதந்திரம் கிடைத்து 34 ஆண்டுகள் ஆகின்றன. இங்கே தலைவராக அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு சிலம்புச் செல்வர் அவர்கள் என்னென்ன தியாகங்களை இந்த நாட்டுக்காகச் செய்திருக்கிறார் என்பதை நான் புரிந்து கொண்டிருப்பவன். இங்கே சற்று நேரத்திற்கு முன்பு மறைந்த அமரர்களுக்கு இரங்கல் தெரிவித்து அவர்களுடைய சேவைக்காக நன்றியைத் தெரிவித்துக்கொண்டோம். இந்த நாடு எப்படி இருக்க வேண்டுமென்று கனவு கண்டார்களோ அதற்கேற்ப இந்த அரசு நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்து, அதனை நிறைவேற்றி, மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைத்தது. அந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்திற்கு மாறாக என்று நான் சொல்லமாட்டேன்—அவர்களுக்கு ஆலோசனை சொல்கின்ற சிலர் அந்த ஏழையெளிய விவசாயிகளிடையே, அந்தச் சட்டம் அமுலுக்கு வந்தால் ஆண்டான்-அடிமை என்ற அந்தஸ்து மாறிவிடுமோ என்று எண்ணி, அதனை நிறைவேற்றிக் கொடுக்க விடாமல் தடையாக இருக்கிறார்கள் என்று மேதகு ஆளுநர் அவர்கள் வருத்தத்தோடு தெரிவித்திருக்கிறார்கள்.

[திரு. சி. இராமலிங்கம்] [1982 பிப்ரவரி 2

இங்கே மேதகு ஆளுநர் அவர்கள் பல அரிய ஆலோசனைகளையும் திட்டங்களையும் சொல்லியிருக்கிறார்கள். அதிலே காவிரி நீர் பிரச்சினையும் ஒன்று. காவிரி நீர் பிரச்சினை சம்பந்தமான ஒப்பந்தம் நான் பிறந்த நேரத்திலே அதாவது 1924 ஆம் ஆண்டிலே செய்துகொள்ளப்பட்டது என்று என்னுடைய தகப்பனார் சொல்வார். 50 ஆண்டுகள் ஆன போது, இதற்கு முன்பு ஆட்சியில் இருந்த அரசு அதைச் சுமுகமாக பேச்சுவார்த்தையின் மூலம் பேசித் தீர்த்திருக்கலாம். ஆனால், இன்றைக்கு வழக்கு என்றும், கோர்ட்டு என்றும், மாநாடு என்றும், விவாதம் என்றும் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்கிறது. பிறமாநில அரசு விழித்துக் கொண்டு நன்மை செய்வதாகச் சொல்கிறார்களே தவிர நன்மை ஏற்படவில்லை. அதை மத்திய அரசு முன்னின்று நல்லமுறையில் தீர்த்து வைக்க வேண்டுமென்று மேதகு ஆளுநர் அவர்கள் வேண்டுகோள் விடுத்திருப்பதை நான் வரவேற்கிறேன். இந்த அவையினரும் வரவேற்பார்கள் என்று நினைக்கிறேன்.

அடுத்து, தன்னிறைவுத் திட்டம் என்கிற திட்டத்தைப் பார்த்தாலும், குறிப்பாக ஊராட்சி ஒன்றியங்களில் எல்லாம், ஊருக்குத் தேவையான, கிராமங்களுக்குத் தேவையான பல்வேறு திட்டங்களையும் இந்த அரசு செயல்படுத்திக்கொண்டு வருகிறது என்பதை என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. நான் இதை மிகைப்படுத்திப் பேசவில்லை. பத்திரிகைகளில் இன்றைக்கு வருகின்ற செய்திகளையும், தேர்தலில் நான் சென்றிருந்த நேரத்தில் அங்கே நிலவும் போக்குநிலையையும் வைத்துப் பார்த்தால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் ஏதோ அந்தத் திட்டத்தை தங்களுடைய தன்னிறைவுக்காகப் பயன்படுத்துகிறார்கள் என்கிற மாதிரி பேசுகிறார்கள், எழுதுகிறார்கள். ஆனால், இன்றைக்கு தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்றுவதைப் பொறுத்தவரையில், ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள காண்டிராக்டர்கள், பி.டபிள்யூ.டி. காண்டிராக்டர்கள், ஹைவேஸ் காண்டிராக்டர்கள் இப்படி காண்டிராக்டர்களாக இருக்கிறவர்களைப் பொறுத்தவரையில் நாம் பார்ப்போமேயானால், ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் நூற்றிலே ஒன்றிரண்டு பேர்தான் இருப்பார்கள். ஆனால் ஏதோ "தன்னிறைவு" நடைபெறுவதாகப் பேசப்படுகிறது என்று கூறுகின்ற மாற்றுக் கட்சியினரை நான் கேட்பதெல்லாம் தயவுசெய்து எங்கேயாவது தவறு நடைபெறுவதாகத் தெரிய வந்தால், அவைகளைத் தொகுத்து, குறிப்பிட்டுக் காட்டி, அரசிடம் தாருங்கள் என்பதுதான். இந்த ஆட்சியில் பஸ் போக்குவரத்து எவ்வளவு வெற்றிகரமாக நடைபெறுகிறது என்பதை நான் முதலிலேயே சுட்டிக்காட்டியிருக்கிறேன்.

**திரு. ப. மாணிக்கம்:** மாற்றுக் கட்சியினர் யாருமே அப்படிச் சொன்னதாக நான் நினைக்கவில்லை.



1982 பிப்ரவரி 2]

**திரு. சி. இராமலிங்கம்:** நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கத்தைச் சொல்லவில்லை. நடைமுறையில் பார்க்கும்போது, அப்படி எழுவது யார் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

(முற்பகல் 11-35)

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** எனக்குப் புரியவில்லை. யார் என்று சொன்னால் புரிந்துகொள்ள வசதியாக இருக்கும்.

**திரு. சி. இராமலிங்கம்:** இந்த மாதம் 22 ஆம் தேதி காலையிலே சென்னையிலேயிருந்து புறப்பட்டு தஞ்சாவூர் சென்றேன். வழியிலே ஊராட்சி ஒன்றியம் முன்னாலே உண்ணாவிரதம் இருப்பதாக உட்கார்ந்துகொண்டு, மாலையிலே 5 மணிக்கு மேல் மைக்கை வைத்துக்கொண்டு பேசினார்கள். தஞ்சாவூரிலே உள்ள என்னுடைய பங்காளிக் கட்சியினர் அழகாகப் பேசினார்கள், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் பேசினார்கள். அதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன்.

ஆதி திராவிடர்களுக்கு இந்த அரசு நல்ல பல திட்டங்களைக் கொண்டு வந்து சிறப்பாக நிறைவேற்றி வருகிறது. மகாத்மா காந்தி அவர்களும், தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும், எந்த சமுதாய மக்களுக்காக இந்த நாட்டிலே இந்த ஆட்சியை அமைக்கிறோம் என்று பாடுபட்டு, போராடி ஆட்சியை அமைத்து, பெயர் மாற்றங்களையெல்லாம் செய்து வைத்தார்களோ, அந்த இலட்சியம் நிறைவேறுவதில் மகாத்மா காந்தி அவர்களின் ஆத்மா சாந்தி அடைகிறதோ இல்லையோ, பெரியார் அவர்களின் ஆத்மா சாந்தி அடைகிறதோ இல்லையோ, பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆத்மா சாந்தி அடைகிறதோ இல்லையோ, அரிசனங்களுக்கு இவ்வளவு இடம், பெண்களுக்கு இவ்வளவு இடம் என்று சொன்னவுடனே, கோர்ட்டுக்குப் போய் பஞ்சாயத்துத் தேர்தல்களை நடத்தக்கூடாது என்று தடையுத்தரவு வாங்கியிருக்கிறார்களே, அவர்களுடைய ஆத்மா இப்போது சாந்தியடைந்திருக்கிறது. பொதுத் தொண்டிலே ஈடுபட்டுள்ள கொள்கைக்கு மாறாகத்தான் வாழவேண்டும் என்றா காந்தியடிகள் வாழ்ந்தார்கள்? பிற்படுத்தப்பட்ட மக்கள் என்னைப் போன்றவர்கள், திரு. முத்தண்ணன் போன்றவர்கள், அந்த வரிசையை எடுத்துக் கொண்டால், அங்கிருக்கும் பிற்படுத்தப்பட்ட மக்கள், திரு. திண்டிவனம் இராமமூர்த்தி போன்றவர்கள் எல்லாம் பல நன்மைகளைப் பெற வேண்டும், அவர்களுக்கெல்லாம் பல நன்மைகளைச் செய்யவேண்டும் என்றுதான் புரட்சித் தலைவர் அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அரிசன மக்களிலே ஏழைகள் எப்படி இருக்கி

றார்களோ அதுப்போலத்தான் எல்லா நிலைமைகளிலேயும் ஏழைகள் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஏழைகளுக்கு உதவியளிக்கும் வகையில் பல திட்டங்களை அரசு கொண்டு வந்திருக்கிறது. அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கிறது. மேலும் 9 ஆயிரம் ரூபாய் வரை வருட வருமானம் உள்ளவர்களின் பிள்ளைகளுக்கு கல்லூரிகளிலே சேர்ப்பதில் சலுகை அளிப்பதாகச் சொன்னார்கள். இன்றைக்கு காந்தியார்களின் வழி நடப்பவர்கள் இதை எதிர்க்கிறார்கள். அதன் காரணமாக என்னைப் போன்றவர்களுக்கு இடம் இல்லை. இன்றைக்கு கல்லூரிகளில் சேர்ப்பதற்கு மார்க்கை அடிப்படையாக வைத்திருக்கிறார்கள். அதை நான் குறையாகச் சொல்லவில்லை. அப்படிப் பார்த்தால், என்னுடைய பிள்ளை 85 மார்க் எப்படி வாங்க முடியும்? அந்த வருமான அடிப்படை வைத்திருந்தால், என்னுடைய பிள்ளைகளுக்கும் இடம் கிடைத்திருக்கும். பின் தங்கியவர்களுக்கு இந்த அரசு செய்யும் எல்லா காரியங்களுக்கும் முட்டுக்கட்டையாக நிலைமைகள் ஏற்பட்டு வருகின்றன. இந்த அரசு பின்தங்கியவர்களுக்கு நல்ல காரியங்களைச் செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். உங்களிலும் ஏழைகள் இருக்கிறார்கள். இன்றையதினம் நாங்கள் சொல்லிக் கொண்டு சென்றால், தலைநகரத்திற்குச் சென்றால் அங்கே பார்ப்பது.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் குறுக்கிட்டுக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் பின்தங்கியவர்கள் பற்றிக் குறிப்பிட்டதைப் பற்றி ஏதோ சொல்லிக்கொண்டிருந்தார்.)

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களின் சின்ன மாமனார் யார்? திரு. இராமமூர்த்தி அவர்கள் பணக்காரர். ஆனால் . . .

**திரு. க. இராமமூர்த்தி :** "எங்களில் ஏழைகள்" என்று முதலில் சொன்னார்கள். இப்போது "எங்களிலே ஏழைகள்" என்று சொல்கிறார் இந்த ஏழை என்பதை எந்த அடிப்படையிலே சொல்கிறார் என்பது தெரியவில்லை.

**திரு. சி. இராமலிங்கம் :** நான் பின்தங்கிய இனத்தில் திரு. இராமமூர்த்தி அவர்களைச் சேர்க்கேன். பின்தங்கியவராக இருந்தால், எங்களோடு சேர்த்திருப்பார். டெல்லி நகரத்திலே பின்தங்கியவர்கள், தமிழ் நாட்டிலிருந்து அங்கே போனவர்கள், நடுங்குகின்ற குளிரிலும் பிளாட்பாரத்திலே படுத்துக் கொண்டு வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பற்றி நாம் எப்போதாவது சிந்தித்தது உண்டா? அவர்களை இந்த நாட்டுக்கு வரவழைக்க வேண்டும் என்று எண்ணியது உண்டா? அந்த வகையிலேதான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 9 ஆயிரம் ரூபாய் வருமான வரம்பு என்று கொண்டு வந்தார்கள். பம்பாயிலே இருக்கும் குடிசைகளைப்





பார்த்தால், நிலைமை தெரியும். முன்பு ஒரு முறை பம்பாயிலே குடிசைகளைப் பிரித்தார்கள். அதனால் பாதிக்கப்பட்டவர்கள் யார் என்று பார்த்தபோது, அவர்கள் அனைவரும் தமிழ்நாட்டிலே சேலம் மாவட்டத்தையும், தென்னார்க்காடு மாவட்டத்தையும் சார்ந்தவர்கள் என்று சொன்னார்கள். மத்திய அரசு என்ன நடவடிக்கை எடுத்தது? நிலைமைகள் இப்படி இருக்கும்போது, பின்தங்கிய மக்களுக்காக புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்த திட்டங்களை ஏன் ஒழிக்கப் பாடுபட்டார்கள் என்று தெரியவில்லை. பெரியார் வழி வந்தவர்கள், அறிஞர் அண்ணா வழி வந்தவர்கள் அதை ஒழிக்க முன் நின்றிருந்தார்கள்.

மொழிப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், இரண்டு மொழி வேண்டும் என்று சொன்னோம். நாம் மட்டும்தானா அப்படிக் கொண்டு வந்திருக்கிறோம்? கேரளாவிலே போய்ப் பார்த்தால், அங்கேயுள்ள பேருந்துகளிலேயும், கடைகளிலேயும் பெயர்ப்பலகைகளை மலையாளத்திலேதான் எழுதி வைத்திருக்கிறார்கள். கர்நாடகத்திலே போய்ப் பார்த்தால் கூட, கன்னடத்திலேதான் எழுதி வைத்திருக்கிறார்கள். குஜராத்திலே போய்ப் பார்த்தால், அங்கே ஆங்கிலமும் கிடையாது, இந்தியும் கிடையாது. ஆனால் பஸ்களிலேயும், கடைகளிலேயும் குஜராத்தியிலேதான் எழுதியிருக்கிறார்கள். முன்னாள் பிரதமர் மொரார்ஜி அவர்கள் அங்கேதான் இருக்கிறார்கள். தமிழகத்திலே இரண்டு மொழி ஆட்சி என்று சொன்னவுடனே எவ்வளவு பேர் சலசல என்று சொல்லி, இந்தியைக் கொண்டு வரவேண்டும் என்று சொல்கிறார்கள்! "இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன்" என்று ஒரு கம்பெனி இருக்கிறது. அது இந்தியா முழுவதுக்கும் ஒரு தாக்கீது அனுப்பியிருக்கிறது. எல்லா இடங்களிலேயும் இந்தியிலேதான் எழுத வேண்டும் என்று அது தாக்கீது அனுப்பியிருக்கிறது. நம்முடைய இருமொழித் திட்டத்தை பெரியார் அவர்களும், அண்ணா அவர்களும் கொண்டு வராமல் இருந்திருந்தால், மணிப்பிரவாளம் என்று சொல்லும் மலையாளத்தைப் போல இங்கும் என்ன பிரவாளம் வந்திருக்குமோ தெரியாது.

பஞ்சாயத்துத் தேர்தல்கள் இப்போது தள்ளி வைக்கப்பட்டிருக்கின்றன. மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போல நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. தேர்தல்கள் நடக்கக் கூடாது என்று கோர்ட் போட்டிருக்கும் தடையுத்தரவை நீக்கவேண்டும் என்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லியிருக்கிறது. திராவிட முன்னேற்றக்

[திரு. நீலநாராயணன்] [1982 பிப்ரவரி 2

இந்த உரையில் மேதகு ஆளுநர் அவர்கள் சிலவற்றை மிகப் பெருமிதத்தோடு சுட்டிக்காட்டியதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

சென்ற ஆண்டு மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டையொட்டி, தமிழ் உணர்ச்சியோடு சென்ற ஆண்டு ஆளுநர் அவர்களின் உரை நிகழ்த்தப்பட்டது. இந்த ஆண்டு பாரதியாருடைய நூற்றாண்டு என்பதை நினைவில் கொண்டு பாரதி இந்த நாட்டுக்குத் தெரிவித்த கருத்துக்களை, கவிதைகளை இங்கே எடுத்துக் கூறி, அதன் அடிப்படையில் இந்த அரசு செயல்படும் என்று ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் பேசும்போது, பல நாள் பசித்திருந்தவனுக்குக் கிடைத்த பழம் போல் இந்த ஆளுநர் உரை இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அது பழமா, அல்லது காயா என்பது வேறு. பல நாள் பசித்திருந்தவர் என்று தன்னைப்பற்றி திரு. இராமலிங்கம் அவர்கள் குறிப்பிட்டுக்கொண்டார்கள். அதை எதற்காகக் குறிப்பிட்டார் என்று எனக்குத் தெரியாது. ஆனால் என்னைப் பொறுத்தவரையில், இந்த மன்றம் ஜனநாயகப் பாரம்பரியப்படி இதற்கு முன்னாலேயே ஒரு முறை கூட்டப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு இந்த அவை கூட்டப்படாமல், நீண்ட நெடிய தாமதத்திற்குப் பிறகு கூட்டப்படுவதன் மூலம் மீண்டும் நாமெல்லாம் சந்தித்து நம் நாட்டு நிலைமைகளைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும் வாய்ப்பினை மேதகு ஆளுநர் அவர்கள் அளித்திருக்கிறார்கள். இந்த நீண்ட நெடிய இடைவெளியைத்தான் அவர் பல நாள் பசித்திருந்ததற்கு ஒப்பிடுகிறாரோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. ஆனால் என்னைப் பொறுத்தவரையில், நான் அப்படித்தான் கருதுகிறேன்.

இந்த ஆண்டு பாரதியின் நூற்றாண்டு என்ற காரணத்தாலோ என்னவோ பல ஆசை வார்த்தைகளையும் உறுதிமொழிகளையும் பக்கம் பக்கமாக இந்த உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அவைகளெல்லாம் எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட இருக்கின்றன என்பதைப் பொறுத்துதான், அவைகளைப் பாராட்டுவதும் அவைகளுக்காக நன்றி தெரிவிப்பதுமான தன்மை இருக்கும் என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1982 பிப்ரவரி 2] [திரு. நீலநாராயணன்]

"கூட்டத்தில் கூடி நின்று கூவிப் பிதற்றலன்றி
நாட்டத்தில் கொள்ளாரடி — கிளியே
நாளில் மறப்பாரடி"

என்று பாரதியார் அழகாகக் குறிப்பிட்டார். அவர் குறிப்பிட்ட "நாளில் மறப்பாரடி" என்ற வார்த்தைகளுக்கு எடுத்துக்காட்டாகத்தான் இந்த நாட்டையாளும் அரசு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று நான் சுட்டிக் காட்டினால் அது மிகையாகாது என்றுதான் கருதுகிறேன். இந்த வகையில பற்பல உதாரணங்களை என்னாலே சுட்டிக்காட்ட முடியும். இதற்கு முன்னால் இந்த ஆட்சியாளர்கள் எந்தெந்தப் பிரச்சினைகளில் எப்படியெல்லாம் எக்காளமிட்டுக் கூறினார்கள் என்பதையும் இன்றைய தினம் அத்தகைய திட்டங்களெல்லாம் எந்த அளவுக்குச் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதையும் பட்டியல் போட்டு என்னாலே எடுத்துச் சொல்ல முடியும். அந்த வகையிலே இங்கே நடைபெற்றிருப்பவை எல்லாம் நமக்கு உகந்தவைதானா என்பதையும், சொன்னதையெல்லாம் இவர்கள் செய்தார்களா என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க கடமைப்பட்டிருக்கிறோம்.

பாரதியார் சொன்ன சுதந்திரமும், சமத்துவமும் நாம் அனைவரும் அறிந்ததாகும். இவற்றின் அடிப்படையில்தான் இந்த ஆட்சி நடைபோட்டுக் கொண்டிருக்கிறது என்று உரையில் குறிப்பிட்டிருக்கிறது. எனக்கு உண்மையிலேயே ஒரு சந்தேகம் வருகிறது. எந்த அளவுக்கு நாம் இங்கே சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் செயல்பட முடிகிறது என்பதையும், இந்த ஆட்சி நம்மை எந்த அளவுக்கு அனுமதிக்கிறது என்பதையும் ஒரு சிறிதாவது எண்ணிப் பார்த்தால், இந்த உரையில் சொல்லப்பட்டிருப்பது உண்மையா அல்லது அதற்குப் புறம்பானதா என்பதை உணர முடியும்.

நான் இங்கே சுதந்திரம் என்று குறிப்பிடும்போது, நாட்டுச் சுதந்திரத்தைக் குறிப்பிடவில்லை. அதை மனதில் வைத்து மேதகு ஆளுநர் அவர்களும் குறிப்பிட்டிருக்கமாட்டார்கள் என்றுதான் நான் நம்புகிறேன். இந்த நாட்டில் சமீப காலத்தில் ஓர் அவசரச் சட்டத்தின் மூலமாக பத்திரிகைச் சுதந்திரம் என்பது எந்த அளவுக்குப் பறிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன். கிரிமினல் சட்டத்தின் 292-எ பிரிவு சமீபத்தில் திருத்தப்பட்டது. பத்திரிகைகள் அவதூறாக எதையாவது எழுதினால், அவைகளுக்கு இழைக்கப்படக் கூடிய கொடுமைகளைக் குறித்தும் அளிக்கப்படக்கூடிய தண்டனைகளைப்பற்றியும் குறிப்பிட்டு ஓர் அவசரச்

சட்டம் பிறப்பிக்கப்பட்டது. பத்திரிகைச் சுதந்திரம் படும் பாடு இது! அந்தச் சட்டத்தின் அடிப்படையில் இந்த மன்றத்தில் வீற்றிருக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் "எதிரொலி" பத்திரிகையில் ஏதோ எழுதப்பட்டது என்ற காரணத்திற்காக, பத்திரிகையின் உரிமையாளர் என்பதற்காக அவரோடு சேர்ந்த மற்ற டைரெக்டர்களையும் வழக்கறிஞர் திரு. இராதாகிருஷ்ணன் அவர்களையும் இந்த அரசு கைது செய்தது. இது தேவைதானா? பத்திரிகைச் சுதந்திரத்திற்கு இது எடுத்துக்காட்டா என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

(முற்பகல் 11-55)

இங்கே அழகாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பாரதியார் சொன்ன சுதந்திரத்தை நாங்கள் இந்த நாட்டிற்கு வழங்கியிருக்கிறோம், அந்தத் தன்மையிலே இந்த ஆட்சி அமைந்திருக்கிறது என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதற்குப் பொருத்தமானதுதானா இப்படிப்பட்ட நிலவரங்கள்? பத்திரிகையில் அவதூறு இருந்தால், அதைத் தடுக்க ஏற்கெனவே பல சட்டங்கள் இருக்கின்றன. பத்திரிகையில் அவதூறான செய்தி வெளியிட்டிருந்தால், அதற்காக அந்தப் பத்திரிகை ஆசிரியர் மீது வழக்கு போடலாம், பிரசுகர்த்தா மீது வழக்குப் போடலாம். ஆனால், அப்படியில்லாமல் பத்திரிகை உரிமையாளரைக் கைது செய்திருப்பது தேவைதானா? இதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டாமா? சமத்துவம் என்று கூறுகிறார்களே, அது எந்த அளவிற்கு அளிக்கப்பட்டிருக்கிறது? சட்டத்திற்கு முன்னால் அனைவரும் சமம் என்று சொல்லப்படுகிறதே தவிர, ஆனால் உண்மையில் அப்படி நடக்கிறதா? சட்டம் பல முனைகளிலே பாய்ந்து கொண்டிருக்கிறது. பல்வேறு விதமாக, இடத்திற்குத் தகுந்த மாதிரி, ஆளுக்குத் தகுந்த மாதிரி சட்டங்கள் வளைந்து கொண்டிருக்கின்றன என்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில், திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமல்லாமல், தமிழகத்திலே தமிழன் என்ற உணர்வு உடையவர்கள் அனைவரும் தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக அவர்கள் ஒரு போராட்டத்தை நடத்தினார்கள். இதற்காக இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த இளைஞர் அணி பிரிவினர் உண்ணாவிரதம் மேற்கொண்டார்கள். அவர்களும் போராட்டத்தை நடத்தியிருக்கிறார்கள். அப்போது போலீஸ் குறுக்கிட்டதா? ஆனால் இங்கே வீற்றிருக்கிற மாண்புமிகு உறுப்பினர், திராவிட முன்னேற்றக் கழக சென்னை மாவட்டச் செயலாளர், திரு. சித்தாபதி அவர்கள்





உண்ணாவிரதம் இருப்பதற்கு, மறியல் நடத்த அனுமதி கேட்டார்கள். அவருக்கு அனுமதி மறுத்ததோடல்லாமல் அவரைக் கைது செய்து நாற்பது நாட்களுக்கு மேலாக சிறையில் தள்ளிய கொடுமையை இந்த அரசு செய்ததா, இல்லையா? இலங்கை தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்காக தங்களுடைய கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு, அரசும் இதிலே ஈடுபாடு கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டு, அடையாள மறியல் செய்ய வேண்டுமென்று முனைந்த கால கட்டத்திலே இந்தச் சட்டம் எப்படியெப்படி வளைந்தது என்பதைப் பார்த்தோம். இவைகளையெல்லாம் எண்ணிப் பார்க்கிறபோது, ஆளுநர் உரையிலே வார்த்தைகளை அலங்காரமாகக் கூறியிருக்கிறார்களே தவிர, பயன்தரக்கூடிய வகையிலே குறிப்பிடவில்லை.

மற்றொன்றையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். "உடன் பிறப்பு உணர்வோடு இந்த ஆட்சி நடைபெறும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை அதிகமாக நான் விளக்க விரும்பவில்லை. ஒரு காலத்திலே ஒரே கூடாரத்திலே இருந்தவர்கள் நாம். இன்று நடைமுறையில் அந்த உணர்வு எந்த அளவிற்கு இருந்துகொண்டிருக்கிறது என்பதை இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்னால் மீனம்பாக்கம் விமானக் கூடத்தில் என்னால் காண முடிந்தது. இந்த நாட்டின் எதிர்க் கட்சித் தலைவர், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் அவர்களுடைய குடும்பம் எந்த அளவிற்கு காவல் துறை அதிகாரிகளால் அவமானப்படுத்தப்பட்டது என்பதை எண்ணிப் பார்க்கிறபோது, "உடன் பிறப்பு உணர்வோடு" இந்த ஆட்சி நடக்கிறதா என்று கேட்கத் தோன்றுகிறது. நான் இதை மேலும் அதிகமாக விவரிக்க விரும்பவில்லை. அதை அவர்களுடைய தீர்ப்புக்கே விட்டுவிடுகிறேன். ஆனால் இவர்கள் சொல்லுவது ஒன்று, செய்வது வேறு என்பதை பொதுமக்கள் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய எழுத்துக்கும், செயல்படுகிற செயலுக்கும் சம்பந்தம் இல்லை என்பதை இந்த நாட்டு மக்கள் சரிவரப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். நம்முடைய நண்பர் மிக நல்ல முறையில் உணவு தானியங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மற்ற மாநிலங்களைவிட நாம் சுபிட்சமாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அரிசி நல்ல முறையில் கிடைத்துக் கொண்டிருக்கிறது. பற்றாக்குறை இல்லை" என்று சுட்டிக்காட்டினார்கள். உண்மை, இதை நான் மறுக்கவில்லை. ஆனால், இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதே மன்றத்திலே 1980 ஆம் ஆண்டிலே

[திரு. நீலநாராயணன்] [1982 பிப்ரவரி 2

உணவு நிலைமை குறித்து விவாதம் நடைபெற்றபோது, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் ஒன்றைச் சுட்டிக்காட்டினார்கள். ஜூலை திங்கள் 24 ஆம் நாள் என்று கருதுகிறேன். "இந்த நாட்டைப் பொறுத்தவரையிலே, உணவுப் பொருள் அபரிதமாக இருந்துகொண்டிருக்கிறது. வெளிநாடுகளுக்கு ஐம்பதாயிரம் டன் பச்சரிசியை ஏற்றுமதி செய்ய காத்துக் கொண்டிருக்கிறோம். அதைப்போலவே 55 ஆயிரம் டன் குறுணை ஏற்றுமதி செய்யத் தயாராக இருக்கிறோம். கென்யா நாட்டிற்கு இருபதாயிரம் டன், பெரு நாட்டிற்கு பத்தாயிரம் டன், கியூபா நாட்டிற்கு இருபதாயிரம் டன், மேற்கு ஜெர்மனிக்கு ஐந்தாயிரம் டன்" என்று "டன்" "டன்" என்று இங்கே குறிப்பிட்டுக் கூறினார்கள். அந்தச் சமயத்தில் நான் ஒன்றைச் சுட்டிக்காட்டினேன். "இது கேட்பதற்கு இனிமையாக இருக்கிறது. ஆனால் எதிர்காலத்திற்காகச் சேமித்து வைத்துக்கொண்டால், நலமாக இருக்கும். அப்படி சேமித்து வைத்த பிறகு வெளிநாடுகளுக்கு அனுப்பினால் நலமாக இருக்கும்" என்று அன்றையதினம் நான் குறிப்பிட்டிருக்கிறேன். ஆனால் இன்று "வெளி மாநிலத்திலிருந்து இறக்குமதி செய்தோம்" என்று அறிக்கையிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். 1980 ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்திருக்கிறோம். 1981 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்திருக்கிறோம். 1980 ஆம் ஆண்டு சேமித்து வைக்கத் தவறிய காரணத்தாலே, 1981 ஆம் ஆண்டு வறட்சி ஏற்பட்டபோது, வெளி மாநிலத்திலிருந்து நாம் இறக்குமதி செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அதாவது செய்தார்களே, அதற்காக நான் பாராட்டுகிறேன். ஆனால், அன்றைக்கே உணவுப் பொருளைச் சேமித்து வைத்திருந்தால், இந்த நிலை வந்திருக்காது என்பது என்னுடைய குற்றச்சாட்டு.

வேளாண்மையைப்பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் எல்லாவற்றைப் பற்றியும் இங்கே பேச விரும்பவில்லை. ஒரு சிலவற்றைப் பற்றி மட்டும் சொல்ல விரும்புகிறேன். வேளாண்மைக்கு சிறப்பிடம் அளிக்கப்பட்டிருப்பதாகவும், உற்பத்தியைப் பெருக்குவதற்குரிய சகலவிதமான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாகவும் இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். வேளாண்மைத் துறையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் இன்றையதினம் எந்த அளவிலே இருந்து கொண்டிருக்கிறார்கள்? உண்மையிலே அவர்களுக்குரிய சிறப்பிடம் அளிக்கப்பட்டிருக்கிறதா உற்பத்திப் பெருக்கம் ஏற்பட்டிருக்கிறதா? அதற்குரிய வாய்ப்பும், வசதியும் அளிக்கப்பட்டிருக்கிறதா? இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்தால், நிச்சயமாக



1982 பிப்ரவரி 2] [திரு. நீலநாராயணன்]

இல்லையென்றுதான் கடந்தகால வரலாறு சுட்டிக்காட்டுகிறது. வரியை வசூலிப்பதற்காக போலீசார், இராணுவத்தினரைப் போல, பயன்படுத்திய அடக்குமுறைகள் ஒவ்வொரு விவசாயினுடைய நெஞ்சத்திலும் நிலைத்து நிற்கின்ற, நீங்காத காட்சியாகும். மின்சாரம் துண்டிக்கப்பட்டது. வீட்டுப் பொருள்கள் ஜப்தி செய்யப்பட்டன. இப்படிப்பட்ட நிலையில் விவசாயி எப்படி விவசாயத்தில் மன ஊக்கத்தோடு, உற்சாகத்தோடு ஈடுபடுவான் என்று எதிர்பார்க்கிறார்கள்? வேளாண்மை மிக முக்கியமான ஒன்று. அதைப் பற்றி எல்லோரும் குறிப்பிடுவார்கள். ஆனால், இதில் ஈடுபட்டிருக்கிற விவசாயிகளுக்கு இந்த அரசு கடந்த காலத்திலே செய்திருக்கின்ற நிலைமைகள் என்ன? இவைகளையெல்லாம் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(பிற்பகல் 12.05)

அடுத்து இங்கே நான் அதைச் சொல்லவேண்டாமென்று கருதி இருந்தேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் இங்கே பேசினார்கள், நில உச்ச வரம்புச் சட்டத்தைப்பற்றி இங்கே சுட்டிக்காட்டினார்கள். அதற்கு மத்திய சர்க்காராலே அனுமதி அளிக்கப்படவில்லை. அதற்குரிய ஏற்பாடுகளை இந்த அரசு இன்னும் செய்துகொண்டிருக்கிறது. அதையும் இந்த ஆளுநர் அவர்கள் உரையிலே சுட்டிகாட்டியிருக்கிறார்கள் என்று அவர்கள் பேசும்போது எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலே அதையொட்டி வேறு சில கருத்துக்களை இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். இந்த அரசுக்கு நான் பணிவோடு சொல்லிக்கொள்வேன். அவசரக் கோலத்திலே அள்ளித் தெளிப்பதுதான் இந்த ஆட்சி முறையிலே அமைந்திருக்கிறதே தவிர்த்து, அடிப்படையிலே எந்தெந்த வகையிலே பணியாற்ற வேண்டுமென்பதை ஆராய்ந்து விட்டு, அதற்குப் பிறகு செயல்படவில்லை என்று குற்றஞ் சாட்ட விரும்புகிறேன். இந்தச் சர்க்கார், இந்தச் சட்டம் எந்த அளவுக்கு உறுதியானது, தெளிவானதாக இருக்கும் என்பதைப் புரிந்துகொள்ள முடியாத அளவில் இருக்கிறது. தமிழகத்தினுடைய சட்ட அறிவைப்பற்றி பல்வேறு மாநிலங்களிலே பாராட்டிய காலம் இருந்தது. ஆனால், இன்றைய தினம் அது எங்கே போயிற்று? அதை இயக்குகின்றவர்கள் சரியாக இல்லாததால்தான் மங்கிவிட்டது என்ற குற்றச் சாட்டைச் சொல்ல ஆசைப்படுகிறேன். சென்ற தடவை இந்தச் சட்ட மன்றத்திலே இந்தச் சட்ட முன்வடிவு வந்தபோது எங்கள் கட்சி உறுப்பினர் நெல்லிக்குப்பம் கிருஷ்ண மூர்த்தி அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். இப்போது 21 ஆண்டுகள் கழித்து

இந்தச் சட்டம் வருகிறது. ஏப்ரல் மாதம் 1960-ம் வருடத்திலே முதல் முதலிலே மூலச் சட்டத்தை தலைவர் காமராஜர் அவர்கள் கொண்டு வந்தார்கள். ஒவ்வொருவரும் 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர்தான் வைத்துக்கொள்ள வேண்டும் என்று கொண்டு வந்தார்கள். அதற்குப் பின்னாலே திராவிட முன்னேற்றக் கழகம், அதனுடைய ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலே இதையே 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று மாற்ற முதல் திருத்தம் கொண்டு வந்தார்கள். இப்போது 1980 ஆம் வருடம் இந்த இரண்டாவது திருத்தத்தையும் கொடுத்திருக்கிறார்கள். அதையும் நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். ஆனால், அதிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற 'ரிட்ராஸ்பெக்டிவ் எபக்ட்' 1958-லேயே என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சினை எங்கே போய் முடியும்? இதற்குள் எத்தனை பேர் நிலத்தை விற்றிருப்பார்கள்? எத்தனை பேர்கள் கைகளைக் கடந்து போயிருக்கும்? இப்போது இருக்கின்ற விஷயங்களைப் பார்க்கின்றபோது, நாட்டிலே பெரிய குழப்பம்தான் உருவாகும். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். அன்றைக்கு கோளக்காதினராக இருந்தீர்கள். இன்றையதினம் அந்தச் சட்டத்திற்கு அனுமதிக்காகக் காத்துக் கிடக்கிறீர்கள், அனுமதி கிடைக்கவில்லையே என்றும் ஏங்குகிறீர்கள். மத்திய சர்க்காரைக் குறை சொல்வதிலே பயனில்லை. இன்னொன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பஞ்சாயத்துத் தேர்தலைப்பற்றிச் சுட்டிக்காட்டினார்கள். அதற்காக என்னென்ன ஏற்பாடுகளைச் செய்து விட்டோம், அதைத் தடுத்தது யார்? இப்படியெல்லாம் பிரச்சினைகளைக் கிளப்பினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் குறிப்பிட்டார்கள். மகாத்மா காந்தி அவர்களுடைய ஆத்மா சாந்தி அடையுமா, பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆத்மா சாந்தி அடையுமா என்றெல்லாம் கேட்டார்கள். ஆனால், சிலருடைய உள்ளம் சாந்தி அடைந்திருக்கிறது. அது இந்த அவைக்கே தெரியும். நான் சொல்கின்றேன். உண்மையிலே இந்த அரசு இந்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்த வேண்டும். இந்த நடைமுறையிலே பஞ்சாயத்துத் தேர்தல் நடைபெற வேண்டும் என்ற எண்ணம் இருந்திருக்குமானால், அந்தச் சட்டத்திலே எங்கே ஓட்டை உடைசல் இருக்கிறது என்பதைக் கண்டறிந்து, அந்தச் சட்ட முன்வடிவை முதலிலேயே தெளிவாகக் கொண்டு வந்திருக்கலாம். இங்கே



இருக்கின்ற சட்ட வல்லுநர்களால் கவனிக்க முடியாமல் கோர்ட்டுக்குப் போய்த்தான் அடிபட வேண்டுமா? இப்படி நடைபெற வேண்டுமென்ற கருத்தில்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்களா? திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையிலே, நான் அறிவித்துக் கொள்வேன். இந்த மன்றத்திலே மட்டுமல்ல, வெளியிலேயும் நாடெங்கும் இருக்கின்ற மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். இந்தப் பஞ்சாயத்துத் தேர்தல் இந்தத் தேதியில் நடக்கும் என்று அறிவித்த உடனேயே, திராவிட முன்னேற்றக் கழகம்தான் 367 ஒன்றியங்களுக்கும் அதனுடைய வேட்பாளர்களை நிறுத்தி வைத்த கட்சி என்பதை நான் பெருமையோடு மார்தட்டிச் சொல்ல முடியும். அப்படி ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்ல முடியுமா? உண்மையான எண்ணம் இருந்தால், தயாராக இருந்தார்களா? அதை எண்ணிப் பார்க்க வேண்டாமா? இந்தச் சட்டம் நிச்சயமாகத் தடைபட்டுவிடும் என்று அவர்களுக்கே தெரியும். அவர்களுடைய மனச்சாட்சிக்குத் தெரியும். ஆனால் இன்று அவர்கள் மாற்றிப் பேசலாம். "நாங்கள் அடிப்பதுபோல அடிக்கிறோம், அழுவதுபோல அழுங்கள், சட்டங்களைக் கொண்டு வருவதுபோல் கொண்டு வருகிறோம், தடை வந்தாலும், தாங்கிக் கொள்கிறோம்" என்பது போலச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே உள்நோக்கத்துடன்தான் இதை நிறைவேற்றுவதாகச் சொல்கின்றார்கள். அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, அவர்கள் ஆட்சிக் காலத்திலேகூட சென்னை நகராட்சித் தேர்தல் தடையுத்தரவுக்குச் சென்று திரும்பி வந்திருக்கிறது அல்லவா? அவைகள் எல்லாம் உள்நோக்கத்தோடு செய்யப்பட்ட காரியங்கள் என்று சொல்லலாமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. நீலநாராயணன்:** ஆனால் இந்த மாதிரி எதுவும் அப்பட்டமாக நடந்ததாகத் தெரியவில்லை. ஆனால் மன உறுதியோடு, உண்மையான கருத்தோடு ஒரு காரியத்திலே ஈடுபட்டிருந்தால், அதைத் தொடர்ந்து இந்தக் காரியம் வெற்றிபெற்றிருக்கும் என்பதை நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். இப்போது நடைபெற்றிருப்பதைப் பாருங்கள். ஹைக்கோர்ட்டிலே தடை போடப்பட்டிருக்கின்றது. அப்படிப்பட்ட நிலைமைகள் இருப்பதையும் பாருங்கள். அதுபோலவே கட்சியினுடைய நடவடிக்கைகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆளுங்கட்சியில் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? உண்மையிலே தேர்தல் நடைபெறும்

என்று நம்பிக்கை இருக்குமானால், வேட்பாளர்களை அறிவித்திருக்க வேண்டாமா? ஏன் அறிவிக்கவில்லை? அதற்குத் தடையாகிவிடும் என்று உங்களுக்குத் தெரியும். அதிலே என்னென்ன ஓட்டைகளைச் சேர்க்க வேண்டுமோ, அவைகளையெல்லாம் அதிலே சேர்த்தீர்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமா?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** வேண்டாம்.

**திரு. ஜேப்பியார் :** உதாரணம் சொல்லட்டும்.

**திரு. நீலநாராயணன் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் "சொல்லுங்கள்" என்று சொல்கின்றார்கள். இரண்டாம் தேதி வேட்பு மனு கொடுக்கும் தேதி முடிகிறது. அது இந்த அவைக்கும் தெரிந்ததுதான். முன்னாள் பஞ்சாயத்து பிரசிடெண்ட்களுக்கு 30 பேர்களுக்கு மேல் போட்டியிட உரிமையில்லை என்று தீர்ப்பு வழங்கப்படுகிறது. ரிட்டர்னிங் ஆபீசர்களால் தீர்ப்பு வழங்கப்படுகிறது. ஆனால், அதற்கு மறுநாள் இங்கே ஒரு சட்டம் உருவாகிறது. அவர்களும் தேர்தலுக்கு நிற்கலாம். வேட்பு மனு செய்யும் தேதி முடிந்துவிட்ட பிறகு, அரசு சார்பிலே இங்கேயிருந்து இப்படி ஒரு தாக்கீது அனுப்பப்படுகிறது என்று சொன்னால், அந்தத் தேர்தலுக்கு மனு செய்தவர்கள் வழக்கு போடுவார்களா, மாட்டார்களா? இதையெல்லாம் சட்டத்தைக் கொண்டு வருபவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டமா? இதைப் போல் எவ்வளவோ உதாரணங்கள் சொல்லிக்கொண்டிருக்கலாம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மேலும் மேலும் சொல்ல வேண்டாம். போதும்.

**திரு. நீலநாராயணன் :** இதிலே இன்னொன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மத்திய சர்க்கார் நிறுத்தி வைத்திருக்கிறது, நிறுத்தி வைத்திருக்கிறது என்று சொல்கின்றார்கள். ஆனால், மத்திய சர்க்கார் அண்மையிலே ஓர் 20 அம்சத் திட்டத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே இந்த நிலச் சீர்திருத்தத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்ற சட்டத்தை ஏன் நிறுத்தி வைத்திருக்கிறார்கள்? அது நமக்குத் தெரிகிறது. அப்படி நிலச்சீர்திருத்தத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறவர்கள் தமிழகத்திலே உள்ள சட்டத்தை மட்டும் நிறுத்தி வைத்திருப்பது ஏன்? அது ஏன் என்று பார்க்க வேண்டாமா? யாராவது அது எதற்காக



என்று போய்க் கேட்க வேண்டாமா. இந்த நிலைமைகள் ஏன் உருவாகியிருக்கின்றன என்பதைப்பற்றிப் பேசிப் பார்த்தீர்களா? அங்கே இப்படிப் பட்ட நிலைமைகள் உருவாகியிருக்கிறதே, அதிலே இருக்கின்ற ஓட்டை உடைசல்களைத் திருத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உணவுப் பண்டங்களின் விலைவாசியைப்பற்றி இந்த ஆளுநர் அவர்களின் அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். விலைவாசி ஏறிவிட்டிருக்கிறது. அதையும் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். ஆனால், காரணத்தைச் சொல்லும்போது, இறைக்கு மத்திய சர்க்கார் எடுத்திருக்கின்ற முடிவுகள்தாம், நடைமுறைகள் தாம் காரணம் என்று சொல்கின்றார்கள். அதுதான் முக்கியமான முழுமுதற் காரணம் என்று சொல்கின்றார்கள். அதுதான் பொருளாதாரம் அறிந்தவர்கள, வல்லுநர்கள் தெரிந்த உண்மை. ஆளுநர் அவர்கள் உரையிலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நான் மறுக்க விரும்பவில்லை. நான் கேட்பதெல்லாம் இந்த மன்றத்திலே பலமுறை உணவு அமைச்சர் அவர்களும் சரி, ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்களும் சரி உறுப்பினர்களும் சரி கேட்டிருக்கிறார்கள். இந்த அரசு விலைவாசியைத் தன்னால் இயன்ற அளவுக்குக் குறைக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என்று தேர்தல் அறிக்கையிலேகூட கூறியிருக்கிறார்கள். நமக்கு அதிலே பங்கு இல்லையா? எல்லாமே மத்திய சர்க்கார் வேலையா? மனதிலே கை வைத்துப் பேசுங்கள். விலைவாசியை குறைக்க வேண்டுமென்று இதற்கு முன்னால் இருந்த ஆட்சியின்போது எதிர்த்துப் போராடவில்லையா நீங்கள்? மத்திய சர்க்காரை எதிர்த்தா போராடினீர்கள்? அப்போது இந்தப் பொருளாதாரக் கண்ணோட்டம் இல்லையா? இப்போது ...ன் ஒரு புதிய பொருளாதாரத்தைப் புரிந்துகொண்டிருக்கிறார்களா? மாநில ...சிடமும் அதிகாரம் இருக்கிறது. அதை இந்த அரசு நிறைவேற்ற முடியும்

(பிற்பகல் 12-15)

...ன்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஓட்டல்களிலே பண்டங்களின் ...லையை ஏற்றியிருக்கிறார்கள். இட்டிலியின் விலை 40 காசிலிருந்து 50 ...சாக உயர்ந்திருக்கிறது. வடை 50 காசிலிருந்து 60 காசாகியிருக்கிறது. ...ப்பி 50 காசிலிருந்து 60 காசாகியிருக்கிறது. பஜ்ஜி 70 காசிலிருந்து 80 ...சாகியிருக்கிறது. இப்படி வரிசையாக எல்லாம் உயர்ந்திருக்கிறது. இதை ...மால் கட்டுப்படுத்த முடியாதா? கட்டுப்படுத்துவோமென்று நிதி அமைச்சர் ...வர்களும், உணவு அமைச்சரவர்களும் சொன்னார்களே. இதே மன்றத்திலே,

[திரு. நிலநாராயணன்] [1982 பிப்ரவரி 2

நாங்கள் கட்டுப்படுத்துவோமென்று சொன்னார்கள். இன்றைக்கு ஓட்டல் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் திரு. புருஷோத்தமன் அவர்கள் இதுபற்றி முதலிலேயே சர்க்காருக்குச் சொல்லிவிட்டோம், சர்க்கா மௌனமாக இருந்துவிட்டார்கள், மௌனம் சர்வ சம்மதம் என்று நினைத்து விட்டோம், எனவே நாங்கள் ஏற்றிவிட்டோம், இப்போது நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். இந்திரா காங்கிரஸ்காரர்க அப்போதே குரல் கொடுத்தார்கள். அவர்கள் மத்திய அரசு, மாநில அர என்று பார்க்கவில்லை. இங்கேயுள்ள குப்பன் பாதிக்கப்படுகிறான். அத அவர்களுக்குத் தெரிந்தது. அவர்கள் மறியல் செய்தார்கள். என்ன நடந்தது மறியல் நடந்த இடத்தில், தேவை சென்னையில், அவர்களை அரெஸ்ட் செய்து காவல் நிலையத்தில் உதைத்து, வெளியே அனுப்பினார்கள். இது நடந்த சமாசாரம். அவர்களே அறிக்கை விட்டிருக்கிறார்கள். இளைஞர் காங்கிரஸ் தலைவர் அறிக்கை விட்டிருக்கிறார். விலைவாசியைக் கட்டுப்படுத்த நம்மாலே முடியவில்லை. இந்த அரசைப் பார்த்து ஒன்று கேட்க விரும்புகிறேன். விலைவாசிக்கு யார் காரணம் என்ற வாதத்திற்குள் நான் போக விரும்ப வில்லை. நம்மிடம் உள்ள அதிகாரத்தை வைத்து எந்த அளவிற்குச் செய்ய முடியுமென்பதைக் கருத்தில் கொண்டு அத்தியாவசியப் பொருள்களின் விலையைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசு இதற்காக ஏதாவது செய்ய வேண்டுமென்றால், அத்தனை கட்சிகளும் சேர்ந்து குரல் கொடுப்போம். இது உயிர்ப் பிரச்சினை . . .

* **திரு. எஸ். முத்து :** இந்த மன்றத்தில் உள்ள எல்லாக் கட்சிகளும் சேர்ந்து மத்திய அரசை எதிர்க்கத் தயாராக இருக்கிறோம் என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கிறார்கள். அதை மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம மூர்த்தி அவர்கள் ஒத்துக்கொள்கிறார்களா ?

**திரு. க. இராமமூர்த்தி :** எங்களுடைய ஆட்சியை எதிர்க்க நான் ஒத்துக் கொள்வேன் என்று எதிர்பார்ப்பது சரியல்ல. மற்றவர்களுடைய நினைவுக்கு நான் குறுக்கே நிற்க முடியாது என்றாலும், பொருளாதாரக் கண்ணோட் டத்தில், இந்த மாநிலம் எந்த அளவிற்குப் பாதை தவறிப் போய்க் கொண்டிருக்கிறதென்பதை எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் உணர்வது நல்லது.



1982 பிப்ரவரி 2]

**திரு. நிலநாராயணன் :** மத்திய அரசை எதிர்த்து குரல் கொடுக்க வேண்டுமென்றால், நம்முடைய உரிமையைப் பெறுவதற்குத்தான் எதிர்ப்பு என்றாலே பயங்கரமாக நினைக்கிறார்கள். எதற்காக இந்த அளவிற்குப் பயப்படுகிறார்கள் என்று தெரியவில்லை. உரிமைக்குக் குரல் கொடுக்க வேண்டும், உறவுக்குக் கை கொடுக்க வேண்டும். உரிமை என்று வரும்போது, விட்டுக்கொடுக்காமல் குரல் கொடுப்பவன்தான் அரசியல்வாதியாக இருக்க முடியும். எனவே போராட்டம் என்றாலே, பயங்கரமான வன்முறைச் செயல் என்று கருத வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின் கட்டணம் உயர்த்தப்படுமென்று ஆளுநர் அவர்கள் உரையிலே சூசக மாகக் கூறியிருக்கிறார்கள். எனக்குத் தெரிந்த வரையிலே, மின்சார வாரியத்தைப் போன்ற ஒரு சீர்கேடான நிர்வாகம் தமிழகத்திலே வேறு எந்த அமைப்பிலும் இருப்பதாகத் தெரியவில்லை. மின்வெட்டு என்று சொல்லி அதிகாரபூர்வமாக ஒரு நேரத்தைச் சொல்லுகிறார்கள். ஆனால் அந்த நேரம் தவிர, மற்ற நேரங்களிலும் மின்சாரம் தடைப்படுகிறது. கடைசியிலே, ஆளுநர் அவர்கள் உரையிலே ஒரு பாராவிலே ஒன்றைச் சொல்லி முடித்து விட்டார்கள். தனியார் துறையில் யாராவது இதை இலாபகரமாக நடத்த முன்வந்தால், அவர்களுக்குக் கொடுப்பதற்கு அரசு சிந்தித்துக்கொண்டி ருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய மனதுக்கு மிகுந்த வேதனை தரக்கூடிய வாசகம் இது. இதற்கு நன்றி சொல்ல வேண்டுமா என்று எண்ணிப் பார்க்கிறேன். நன்றி சொன்னாரே அருமை நண்பர் திரு. இராம லிங்கம் அவர்கள், அவர்களைப் பார்த்து ஒன்று கேட்க விரும்புகிறேன். அண்ணா கூறிவிட்டுச் சென்றார்கள், என்ன கூறிவிட்டுச் சென்றார்கள் ? பொது நிறுவனங்கள் எந்த அளவிற்குப் பெருக வேண்டுமோ அந்த அளவிற்கு நாட்டிலே பெருகினால்தான். அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தால்தான், எதிர்காலத்திலே ஏழை எளிய மக்களுக்கு, நடுத்தர மக்களுக்கு வாய்ப்பான அரசாக இருக்க முடியும், துணையான ஒன்றாக இருக்க முடியும் என்று சொல்லி, பல திட்டங்களைக் கொண்டு வந்தார்கள். ஆனால், இன்றைய தினம் அண்ணாவின் பெயரிலே இருந்துகொண்டிருக்கிற கட்சி, அரசாங்கத்திடம் இருக்கின்ற பொது நிறுவனத்தையும் தனியார் கையிலே கொடுத்துவிடலாமா என்று யோசித்துக்கொண்டிருக்கிறது. இதிலிருந்து ஒன்று நிச்சயமாகத் தெரிகிறது. இந்த அரசு, இந்த விஷயத்தில் தோல்வி அடைந்துவிட்டது. அதை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக மகிழ்ச்சியடைகிறேன். தோல்வியை மறைப்பதற்கு அதை தேசிய மயம் என்ற தன்மையிலிருந்து

மாற்றி, பொது நிறுவனம் என்ற தன்மையிலிருந்து மாற்றி, தனியார் உடைமைக்குக் கொண்டு செல்லுவது சரிதானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அண்ணாவின் கொள்கை ஒரு பக்கம் இருக்கட்டும். இந்த அறிக்கையின் இன்னொரு பக்கத்திலே ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் கொண்டு வந்துள்ள 20 அம்சத் திட்டத்தை மனமார வரவேற்கிறோமென்று சொல்லியிருக்கிறார்கள். 20 அம்சத் திட்டத்தில 20-வது திட்டம் என்ன ? பொது நிறுவனங்களை ஊக்குவிப்பது, அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவது என்பதுதான். அதை வரவேற்கிறபோது, இதைத் தனியாருக்கு விட சிந்திப்பானேன் ? இந்த அரசினுடைய செயல் முன்னுக்குப் பின் முரணாகத் தெரியவில்லையா ? இதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும் ? இதற்கு எப்படி நன்றி சொல்லுவது ? எண்ணிப் பார்க்க வேண்டாமா ? . . . .

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** இந்திய அரசின் பொருளாதாரக் கொள்கை 'மிக்ஸட் எகானமி' என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் அறிவார்களா ?

**திரு. நீலநாராயணன் :** மிக்சட் எகானமி என்பது எங்களுக்குத் தெரியும். அது ஏற்றுக்கொண்ட ஒன்றுதான். அதற்காகப் பொது நிறுவனமாக இருக்கும் ஒன்றை தனியாரிடம் கொடுக்க வேண்டுமென்பதில்லை. அது மத்திய அரசின் நோக்கமல்ல, அண்ணாவின் நோக்கமல்ல. அவர்கள் வழியில் நடப்பதாக இருந்தால், தயவு செய்து திட்டத்தைப் புனராய்வு செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நீர்ப்பாசனம் பற்றி கேள்வி நேரத்தில் சொன்னார்கள். அதைப்பற்றி அதிகமாகச் சொல்லத் தேவையில்லை. அது பெரிய பிரச்சினையாகிவிட்டது. தொழில் வளர்ச்சிபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். 1981 என்று நினைக்கிறேன், நிதிநிலை அறிக்கையிலே 80 விண்ணப்பங்கள், நடுத்தர பெரிய தொழில்களுக்கான விண்ணப்பங்கள் இந்த சர்க்காராலே பரிந்துரை செய்யப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பப்படுகின்றன. அவர்கள் அனுமதிக்காகக் காத்திருக்கிறோம், அனுமதி கிடைத்துவிடுமென்று சொல்லியிருந்தார்கள். அதுபற்றி இந்த ஆண்டு என்ன நிலவரம் என்பது தெரியவில்லை. தொழிலமைச்சரவர்கள் வெளி மாநிலங்களுக்குப் போய் வந்ததாகத் தகவல்கள் இருக்கின்றன. இதுதான் தொழில் வளர்ச்சியா ? எனவே உருப்படியாகக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்றுதான் இதைச் சுட்டிக்காட்டுகிறேன்.



இன்னொன்று, போன ஆண்டுகூட அனுபவித்தோம். இந்த ஆண்டும் அனுபவிக்க இருக்கிறோம். கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ஆம் தேதி தமிழ் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டது. அதற்காக பெரிய விழா எடுத்தார்கள். பத்திரிகையில் செய்திகள் வந்தன. என்னவென்றால் பல்கலைக் கழக மானியக் குழுவின் அனுமதி பெறாமலேயே தமிழ் பல்கலைக் கழகத்தை நிறுவியிருக்கிறார்கள். அதற்கு அரசுத் தரப்பிலேயிருந்து மறுப்பு வருகிறதா என்று பார்த்தேன். அதற்கு மறுப்பு காணோம். பல்கலைக் கழக மானியக் குழுவின் அனுமதி பெறாமல், எப்படி நடைமுறைப்படுத்த முடியும் ? என்ன வாயிற்று ? புதிதாக அனவுன்ஸ்மென்ட் வேறு செய்திருக்கிறார்கள். அடிப்படையிலேயே சரியாகவில்லை. எதுவும் மன சுத்தமாக, அழுத்தம் திருத்தமாக, உண்மையாக, உளமாற, செய்ய வேண்டுமென்று எண்ணமிருந்தால், எல்லாவற்றையும் முதலிலேயே செய்திருப்பார்கள். அப்படியில்லாமல் ஏதோ ஆசை வார்த்தைகள் சொல்லி, காலத்தை ஓட்டலாமென்ற முறையில் இந்த அரசின் நடவடிக்கைகள் அமைந்திருப்பதாக நான் கருதுகிறேன்.

(பிற்பகல் 12.25)

அடுத்து, சட்டம் ஒழுங்குபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இதைப்பற்றி மட்டும் சொல்லிவிட்டு முடித்துக்கொள்கிறேன். அதற்கு மாண்புமிகு துணைத் தலைவரவர்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்திலே இன்றையதினம் சட்டம் ஒழுங்கு உண்மையிலேயே இருக்கிறதா ? அதைப் பராமரிப்பதற்கென்று தமிழகத்திலே ஒரு துறை இருக்கிறதா ? இன்றைக்கு பத்திரிகைகளில் பல விஷயங்கள் வருகின்றன. ஆனால், வருகின்ற செய்திகளுக்கு மறுப்பு இல்லை. சில நிலவரங்கள் உண்மையாக இருக்கலாம். நாம், தமிழ்—தமிழ் என்று உயிரை விட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால், தமிழில் தீவிரமாக எழுதியதற்காக தீவிரவாதி என்று சொல்லி, ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அதைக்கூட நான் எடுத்துச்சொல்ல விரும்பவில்லை. ஆனால், அவரைத் துன்புறுத்தும்போது "நீ சொல்கின்ற கருத்துக்களை ஏன் ஆங்கிலத்திலே எழுதக்கூடாது ? ஏன் தமிழில் எழுதுகிறாய் ? அதனால் தானே தமிழ்நாட்டு மக்கள் புரிந்துகொள்கிறார்கள்" என்று சொல்லிச் சொல்லி அடித்திருக்கிறார்கள். சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றுகிறோம், உணர்ச்சியுள்ள, தமிழ்ப் பற்றுள்ள தமிழ் நாட்டிலே இருக்கிறோம். அண்ணாவின் பெயரைக் கூறுகிறோம். அவர் பெயரை வைத்து ஆட்சி நடத்துகிறீர்கள். ஆனால் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நாம்

[திரு. நீலநாராயணன்]



செய்ய வேண்டிய கடமை என்ன என்பதைப்பற்றி யாராவது விசாரித்தார்களா? இப்படியே போய்க்கொண்டிருந்தால், எதிர்காலம் எப்படி இருக்கும்? அண்ணாவைப்பற்றி அதிகமாகப் பேசுகிறார்கள். ஆனால், ஒன்றை இங்கே நான் நினைவுபடுத்துகிறேன். செப்டம்பர் 15-ல் அண்ணா பிறந்த நாள் அன்று அண்ணாவின் சிலைக்கு மாலை போட முயற்சி பண்ணினேன். கழகத் தலைவர், டாக்டர் கலைஞர், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் முயற்சி எடுத்துக் கொண்டார்கள். டாக்டர் கலைஞர் அவர்கள் அண்ணா சிலைக்கு மாலை போட்டுவிடக் கூடாது என்பதற்காக வீட்டிலேயே அவரைக் கைது செய்திருக்கிறார்கள். மாலை போட வீட்டிலிருந்து புறப்பட்ட போது, அவர் கைது செய்யப்பட்டார். மாலை போட்ட எனக்குக் கிடைத்த பரிசு "டியர் கியாஸ் செல்". அவை என்னுடைய உடலிலே பாய்ந்தன. முன்னாள் உறுப்பினராக இருந்த திரு. அறிவழகன் அவர்கள் மீதும் பாய்ந்தன. இன்னும் பல தோழர்களுடைய உடல்கள் அன்றையதினம் 'டியர் கியாஸ் செல்' மூலம் அடித்து நொறுக்கப்பட்டன. என்றாலும் நான் மாலையைப் போட்டுவிட்டு, ஊர்வலம் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலையை அன்றையதினம் உருவாக்கினார்கள். இதை அண்ணாவின் பெயரால் ஆட்சி செய்துகொண்டிருக்கின்ற ஆட்சி, சட்டம்-ஒழுங்கைப் பாதுகாக்கின்ற ஆட்சி எண்ணிப்பார்த்ததா? கொலை, கொள்ளை நடைபெற்றுக்கொண்டிருப்பதற்கான பட்டியல் என்னிடம் இருக்கிறது. எங்கெங்கே களவு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதற்கான பட்டியலும் என்னிடத்தில் இருக்கிறது நேரம் ஆகிவிட்டது என்று மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் அடிக்கடி சுட்டிக்காட்டுகிறார்கள் என்பதற்காக நான் அவைகளையெல்லாம் இங்கே சொல்லவில்லை என்று சொல்லி, ஆட்சியாளர்கள் அவற்றையெல்லாம் தடுத்து நிறுத்த முன்வர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் 1982 பிப்ரவரி மாதம் 4-ம் தேதி (வியாழன்) காலை 9.30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 12-29).



## *A. Statutory Rules and Orders.*

£ 1. Notification issued with G.O. Ms. No. 1515, Housing and Urban Development, dated the 20th November 1980 in regard to variations to the Shenoy Nagar Town Planning Scheme of Madras City. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

£ 2. Notification issued with G.O. Ms. No. 748, Education, dated the 2nd May 1981 in regard to certain amendments to the Tamil Nadu Recognised Private Schools (Regulation) Rules, 1974 relating to suspension. [Laid on the table of the House under section 57 (2) of the Tamil Nadu Recognised Private Schools (Regulation) Act, 1973 (Tamil Nadu Act 29 of 1974)].

£ 3. Notification issued with G.O. P. No. 732, Commercial Taxes and Religious Endowments, dated the 27th June 1981 in regard for exemption in respect of the tax payable on the purchase of oil seeds. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959)].

£ 4. Notification issued with G.O. Ms. No. 1253. Rural Development and Local Administration, dated the 8th July 1981 in regard to declaration of certain villages as Gramdhan Villages. [Laid on the table of the House under section 28 (4) of the Tamil Nadu Bhoodan Yagna Act, 1958 (Tamil Nadu Act XV of 1958).]

£ 5. Notification issued with G.O. Ms. No. 388, Housing and Urban Development, dated the 6th June 1981 in regard to variations to S. No. 10 point and 17 point of Periakudal Village and S. No. 43 point and 44 point of Aminjikarai Village. (English and Tamil). [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

£ 6. Notification issued with G.O. Ms. No 935, Revenue, dated the 22nd April 1981 in regard to an amendment to the Tamil Nadu Land Reforms (Compensation for Surplus Land) Rules, 1966. [Laid on the table of the House under section 112 (2) of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961)].

£ 7. Notification issued with G.O. Ms. No. 124, Prohibition and Excise, dated the 20th July 1981 in regard to an amendment to the Madras Liquor (Licence and Permit) Rules, 1960. [Laid on the table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937)].

££ 8. Notification issued with G.O. Ms. No. 168, Home, dated the 23rd January 1980 in regard to an amendment to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955)].

££ 9. Notification issued with G.O. Ms. No. 1208, Home (T. R. I.), dated the 30th May 1981 regarding concessional rate of tax payable in respect of the vehicle D E P 3233 belonging to Indian Red Cross Society. (Thanjavur East District Branch), Nagapattinam. [Laid on the table of the House under section 25 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974)].

££ 10. Notification issued with G.O. Ms. No. 101, Personnel and Administrative Reforms (Per-M), dated the 7th February 1981 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 in Volume I of the Tamil Nadu Services Manual, 1977. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India)].

15. As mentioned earlier, the State Government has utilised almost all possible sources of hydel power and is also considering various schemes for thermal power generation. In view of the difficulties involved in transport of coal over long distances for the thermal plants, the State Government has suggested that a second atomic power station may be set up in Tamil Nadu. It has also suggested Kudankulam in Tirunelveli district as one of the suitable sites for setting up the plant. We hope that the committee set up by the Government of India to select the site will soon take a favourable decision. Government is examining possibilities of putting up an integrated power and desalination plant to provide potable water and utilise thermal energy released in the process to generate electricity.

16. The State Electricity Board is having very serious financial difficulties. This has been mainly due to the poor financial returns. Time and again the Union Planning Commission has been urging the State Government to revise electricity tariff which is one of the lowest in the country. The Planning Commission has emphasised that unless the financial resources of the State Electricity Board are strengthened, modernisation of equipment, implementation of plan projects and maintenance of the existing installations and transmission lines would suffer very badly. Increased power generation is essential for development of Agriculture, Industry and Commerce. This can be done only if the resources of the Electricity Board are improved through higher returns, which in turn, can be achieved only by the revision of electricity tariff. The State Government has been assisting the Electricity Board through a heavy dose of financial assistance running to hundreds of crores of rupees in the last few years, to keep the activities of the Electricity Board at a reasonable level. But it will be impossible for the Government to continue the financial assistance indefinitely because it is bound to have serious adverse effects on implementation of plan programmes and other developmental activities. Particularly when the input cost is rising regularly every year, as a result of the Government of India increasing the railway freight and oil price, apart from imposing higher taxes on various commodities needed by the Electricity Board, the State Government is left with no alternative except to revise the existing low electricity tariff. The Government has decided to permit private industrialists to take up generation of power for their own consumption. The Government would also like to consider any proposal for generation of power by private entrepreneurs, if it can be done profitably.

17. The dispute relating to the sharing of Cauvery waters has still not been resolved. On the suggestion of the Government of India, bilateral talks have been held between Tamil Nadu and Karnataka on this issue. But unfortunately, the talks have not been conclusive. It is hoped that Government of India would use their good offices to find a fair and equitable solution to this long standing issue. Recently, the Government of India have decided to hold discussions to resolve this problem. The Government hopes that a final and equitable decision would be taken in this conference as a result of the discussions and that the quantity of water now used for irrigation in Tamil Nadu would be assured. The State Government will also continue to request the Government of India to act early on the recommendations of the Technical Committee



Y211,32'N82 N83-182;2

onstituted by them to examine the feasibility of diversion of surplus f waters of the west flowing rivers in Kerala to provide irrigation acilities to Tamil Nadu.

18. While the inter-State river problems are pending settlement, le State Government is doing its utmost to improve irrigation acilities within Tamil Nadu. Since the major portion of surface rigation potential has been utilised the emphasis is now on nodernisation of irrigation systems for which an outlay of Rs. 48.59 crores exists in the Sixth Plan. Around Rs. 12 crores re also expected to be spent on special minor irrigation programme nd desilting-cum-reclamation schemes during the Sixth Plan period Vhile everything possible has been done to put the available water o maximum use, the State Government is exploring the possibilities f diverting to the dry areas of Pudukkottai and Ramanathapuram istricts. the flood waters in certain seasons now flowing into the ea. Investigations have already been started by the Public Works Department in this regard.

19. For the rapid development of industries in the State, special rogrammes and incentives have been evolved recently to attract stablishment of new industrial units in Tamil Nadu. The Industries Minister recently visited the States of Maharashtra and Gujarat or explaining to the entrepreneurs in those areas, about the vailability of various incentives, skilled manpower, infrastructural acilities, etc., in Tamil Nadu. The Government has also announced pecial concessions to facilitate the growth of industries. The xisting ceiling on interest-free sales tax loans to industries has een increased from Rs. 50 lakhs to Rs. 1 crore. Industrial omplexes are being developed at Cuddalore, Pudukkottai, Manamadurai, Tuticorin and Gummidipoondi where new industrial nits will enjoy the facility of exemption from power cut for the rst five years. A subsidy is also being given for creation of new ssets in the field of Electronics, Drugs and ancillary automobile ndustries. It is hoped that these attractive concessions would nthuse industrialists to start new ventures in Tamil Nadu.

20. In order to equip the educated persons b[illegible] for employ-nent, the Government has been implementing schemes giving mportance to technical education. In the current financial year, n Engineering College has been established at Tirunelveli and Six olytechnics have started functioning in various parts of the State. During the Bharathi Centenary celebrations, the Government has nnounced its decision to set up a Polytechnic for Women in

Ettayapuram area in Tirunelveli district. These technical institutions would provide necessary infrastructure for industrial development in Tamil Nadu.

21. Apart from the importance given to technical education, the State Government is also encouraging general education. Legislations for constituting Bharathiar University at Coimbatore and Bharathidas University at Tiruchirappalli have been passed and the assent of the President has also been obtained for these Acts. Preliminary action for acquisition of land and for identifying the various requirements of the Universities has already been started. As Honourable members are aware, a Tamil University has been inaugurated on the 15th of September, 1981 at Thanjavur. It is also proposed to start a Women's University in Tamil Nadu. The Government is taking steps to start a University at Karaikudi as promised by Late Anna combining all the educational institutions there.

22. In consonance with Arignar Anna's two language formula, the Government has been taking active steps to establish Tamil as the official language and adopt the language in all the wings of the Government. In pursuit of this policy, the Government has ordered that from today all judgements, decrees and orders in Civil Courts will be written in Tamil.

23. The recent under-sea archaeological exploration conducted by the State Archaeological Department in collaboration with the National Institute of Oceanography off the coast of Kaveripoompattinam has yielded interesting results. The survey which extended upto Tranquebar (Taranganpadi) seems to suggest that there are buildings and ship wrecks at Poompuhar and Vanagiri areas, lying submerged under the sea. It is proposed to continue this survey.

24. The State Government will be launching from the coming academic year, a massive screening programme to detect the incidence of leprosy among school going children. At the time of admission to schools, children will be checked up for any incidence of this disease and suitable curative measures will be taken.

25. In pursuance of the progressive labour policy of this Government, a number of legislative measures were introduced for the benefit of the workers. The Minimum Wages (Tamil Nadu Amendment) Act, 1981 came into force on 1st October 1981. The Tamil Nadu Payment of Subsistence Allowance Act, 1981 and the Tamil Nadu Industrial Establishments (Conferment of Permanent



Status to Workmen) Act, 1981 came into force with effect from 1st January 1982. The Tamil Nadu Handloom Workers (Conditions of Employment and Miscellaneous Provisions) Act, 1981 will also be brought into effect as soon as the rules are finalised. For the Industrial Disputes (Tamil Nadu Amendment) Bill, 1981, the President's assent is awaited. The State Government proposes to extend Employees' State Insurance Scheme to the districts of Dharmapuri and the Nilgiris and widen its coverage in some other areas.

26. For improving the socio-economic conditions of the Adi-Dravidars, the Government is implementing the Special Component Plan since 1980-81. During the last financial year, the size of the Plan was of the order of Rs. 71.64 crores and in the current year it is Rs. 83.04 crores and during the next financial year it will be Rs. 114.04 crores. About 1.67 lakhs of Adi-Dravidar families will be covered during the next financial year. Under Special Central Assistance, income generating schemes for Adi-Dravidars are being implemented. During the last financial year, the sum ear-marked was Rs. 9.56 crores while during the current financial year it is expected to be Rs. 10 crores. During 1982-83, the Special Central Assistance is likely to be of the order of Rs. 15 crores. Apart from socio-economic measures for improving the life-style of Adi-Dravidars, the Government is also establishing special courts to try offences against Adi-Dravidars under the P.C.R. Act. The Government is firmly resolved to improve the living conditions of the Adi-Dravidars in the State through various schemes as mentioned above.

27. Many schemes for the benefit of the Backward Classes are now under implementation in Tamil Nadu. Apart from educational concessions, measures have also been taken for their economic development. The Government has recently formed the Backward Classes Economic Development Corporation to finance schemes and trade activities taken up by them. During last year, the Government had announced that preference would be given to widows in indigent circumstances for employment in medical institutions. Seats have also been reserved in professional and arts Colleges for them. A proposal to give suitable preference for admission in educational

institutions and in employment to the children born of inter-caste marriages is now under consideration. During last year, which was the year of the physically handicapped, various schemes for the benefit of physically handicapped had been started. Certain specific posts in Government and Local Body institutions have been reserved for the physically handicapped persons. They have been accorded suitable priority for sponsorship by the employment exchanges against State Government vacancies. Three per cent of vacancies in public services and educationals have been reserved for the physically handicapped. Though the year of the physically handicapped is over, schemes for their welfare will continue to be implemented.

28. With the intention of holding the elections to Panchayats early, the Government had made arrangements for conducting them by the end of January this year. After consulting leaders of all political parties, the Government had taken a policy decision to reserve the seats for Adi-Dravidars and women and a suitable Ordinance was promulgated. As a result of the stay granted by the High Court on certain Writ Petitions, the elections could not be held. As soon as the Court clearance is obtained, the Government is ready to conduct the elections.

29. The development schemes implemented by this Government in the last few years contain many programmes like expansion of irrigation facilities, increasing the production of oilseeds, implementation of land ceiling laws and compilation of land records, implementation of programmes for development of Scheduled Castes and Scheduled Tribes, maximisation of power generation, augmentation of primary health care facilities, control of leprosy, implementation of programmes for the welfare of women and expansion of public distribution system all of which form part of the twenty point programme recently announced by the Prime Minister of India. The State Government welcomes this twenty point



programme which aims at improving the condition of the poorer and weaker sections of the Society. This Government will give all its support to the Government of India in the active implementation of this Programme.

30. The law and order situation in the State has been satisfactory. The activities of extremists have been curbed and the anti-social elements have been kept under control. The Government has started various projects for the welfare of Policemen. Construction of houses for Policemen through the Police Housing Corporation is one of these projects. About 150 acres have been taken possession initially in Navalpattu village in Tiruchirappalli district, where about 700 houses will be constructed. Suitable lands in other parts of the State are also being located by the Police Housing Corporation for putting up additional houses for the Policemen. A new scheme has been introduced during Pongal this year, for award of the Chief Minister's Police Medals to Constables and Head Constables who have rendered meritorious services. About 1,500 Police Constables and Head Constables will benefit from this Scheme, which provides for the award of a medal and a monthly allowance.

31. As mentioned by me earlier, the State has gone through a trying period because of the severe drought during the last year. But the situation is changing now, due to favourable monsoons which have helped in filling up the various tanks and reservoirs throughout the State, excepting a few isolated pockets. My Government has been doing its best through various socio-economic policies to improve the living conditions of the people of the State.

32. I hope the deliberations of this House will be useful and constructive and contribute to the progress of the State. I wish you success in your endeavours.

Vanakkam.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே, [1982 பிப்ரவரி

1982 ஆம் ஆண்டின் முதல் கூட்டு அவைக்கு உங்களை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.

நான் சென்றமுறை சட்டமன்றக் கூட்டு அவையில் உங்கள் முன் உரையாற்றியபோது, வரலாற்றுச் சிறப்புமிக்க வகையில் உலகத் தமிழ் மாநாடு மதுரையில் வெற்றிகரமாக நடந்து நிறைவு பெற்றிருந்த பெருமிதத்தில் நாம் அனைவரும் திளைத்திருந்ததை நினைவு கூர்வீர்கள். தணியாத நம் தமிழ் ஆர்வத்திற்கும், மாறாத நம் மொழிப் பற்றிற்கும் சான்றாகத் திகழ்ந்தது அம் மாநாடு. நம் மொழிப் பற்று கனிந்து நாட்டுப் பற்றோடு இரண்டறக் கலப்பதை நிலைநிறுத்தும் வகையில், இந்த ஆண்டு, நாம் தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியின் நூற்றாண்டு நிறைவு விழாவை ஆண்டு முழுவதும் ஆர்வமூட்டும் வகையில் கொண்டாடத் திட்டமிட்டுள்ளோம். சுதந்திரம், சமத்துவம், உடன் பிறப்புணர்வு ஆகியவற்றை அடிநாதமாகக் கொண்டு பாரதியார் நமக்குப் படைத்துத் தந்த பாடல்கள், சாதி, சமய வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட புதியதொரு சமுதாயத்தைப் படைக்கும் வீறார்ந்த உறுதியை நமக்கு ஊட்டுகின்றன. பாரதியார் நூற்றாண்டை நாட்டின் ஒருமைப்பாட்டின் ஆண்டாகக் கொண்டாடத் தமிழக அரசு முடிவு செய்து, ஆக்கபூர்வமான இந்த ஆலோசனையை மத்திய அரசின் முன்னும் வைத்துள்ளது. நம் மாநிலத்தில் ஊராட்சி ஒன்றிய மட்டத்திலிருந்து, தலைநகர் வரையிலும், நாட்டின் பல்வேறு மாநிலங்களிலும், கடல் கடந்து அயல் நாடுகளிலும், பாரதிக்கு விழா எடுத்து, அவர் கண்ட பாரதத்துக்கு அஞ்சலி செலுத்தும் பணியின் முன்னணியில் தமிழ்நாடு திகழ்வது நம் அனைவருக்கும் மன நிறைவு அளிப்பதாகும்.

2. பருவ மழை பொய்த்ததன் காரணமாக புதுக்கோட்டை, வடார்க்காடு மாவட்டங்களின் சில பகுதிகளில் வறட்சி நிலை இருந்து வந்ததை எனது சென்ற ஆண்டு உரையில் குறிப்பிட்டேன். ஆனால், தமிழ் நாட்டில் மொத்தமுள்ள 16 மாவட்டங்களில் 13 மாவட்டங்களிலே வறட்சி நிலை அந்த ஆண்டில் நாளடைவில் பரவியது. குடி தண்ணீர் தட்டுப்பாடும் பயிர் விளைச்சல் குறைந்துபோனதும் இம்மாநில நகர்ப் பகுதிகளையும் கிராமப் பகுதிகளையும் பெரிதும் பாதித்தன. வறட்சிப் பாதிப்புப் பகுதிகளில் மக்களின் துயரத்தைப் போக்கத் துயர் தணிப்பு—மறுவாழ்வுத் திட்டத்தைப் பெரிய அளவில் அரசு மேற்கொண்டது. இம்மாநிலத்தின் சில மாவட்டங்களைச்







சுற்றிப் பார்த்த மத்திய அரசின் குழு, தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிலவி வந்த மிகச் சிரமமான நிலைமைகளை நன்கு உணர்ந்து பரிந்துரை செய்ததன் பேரில், வறட்சித் துயர் தணிப்பிற்காக 48.90 கோடி ரூபாய் செலவிடுவதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்தது. வறட்சித்துயர் தணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள 1981 டிசம்பர் இறுதி வரை இம்மாநில அரசு 55.24 கோடி ரூபாய் செலவு செய்துள்ளது. வறட்சித் துயர் தணிப்புப் பணிகளை மேற்பார்வையிட ஆங்காங்கு அனைத்து அரசியல் கட்சிகளையும் சார்ந்த தலைவர்கள் அடங்கிய குழுக்கள் அமைக்கப்பட்டு, அக்குழுக்கள் துயர் தணிப்புப் பணிகள் செம்மையாக நடக்கப் பெரிதும் உதவின. அரசின் பல்வேறு துறைகள் மூலம் பல இடங்களிலும் ஏராளமான ஆழ்துளைக் கிணறுகளை உருவாக்கியது, வறட்சிப் பாதிப்பு மாவட்டங்களில் குடிதண்ணீர் எளிதில் கிடைப்பதை உறுதிப்படுத்தியது. இம்மாநிலத்தில் இருந்த வறட்சி நிலைமை இவ்வாறு நல்ல முறையில் சமாளித்தது பற்றி இவ்வரசு பெருமை கொள்ள முடியும். வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாகத் துயர் தணிப்பு அளித்ததுடன், மேற்கொள்ளப்பட்ட பணிகள், குடிநீர் ஆதாரங்கள், சாலைகள் மேம்பாடு, பாசன ஏரி, குளங்கள் முதலிய நிலையான சொத்துக்களையும் ஏற்படுத்தின.

3. 1981 ஆம் ஆண்டில் பெரும்பாலான பகுதியில் வறட்சி நிலை நீடித்ததென்றாலும் திறமையான பொதுப் பங்கீட்டு ஏற்பாடு மூலம், உணவு தானியங்கள் போதிய அளவில் கிடைப்பதை மாநில அரசு உறுதி செய்தது. இந்திய உணவுக் கழகத்தின் மூலம் இன்னும் அதிக அளவில் உணவு தானியங்களை ஒதுக்கிக் கொடுக்குமாறு மத்திய அரசை இம்மாநில அரசு தொடர்ந்து வேண்டிக் கொண்டு வந்திருக்கிறது. ஒதுக்கீடு செய்யப்பட்ட அரிசியின் அளவுகூட நமக்கு முழுவதும் வந்து சேர்வதில் நடைமுறையில் பல சிக்கல்கள் ஏற்பட்டன. பொதுப் பங்கீட்டு ஏற்பாட்டின் மூலம் பொதுமக்களுக்கு வழங்குவதற்காக திங்கள் ஒன்றுக்கு 10,800 டன் கோதுமையை ஒதுக்குமாறு மாநில அரசு மத்திய அரசைக் கேட்டு வருகிறது. எனினும், மத்திய அரசு 4,000 டன் கோதுமையை மட்டும் ஒதுக்கி வருகிறது. மேலும், கோதுமைப் பொருட்களைத் தயாரிப்பதற்காக மாநிலத்தில் உள்ள உருளைமாவு ஆலைகளுக்கு ஒதுக்கும் கோதுமையின் அளவையும் மத்திய அரசு 65,000 டன்னிலிருந்து 30,000 டன்னாகக் குறைத்தது.

4. பொதுப் பங்கீட்டு ஏற்பாடு மூலம் சனவரித் திங்களில் 25,000 டன் அரிசி மட்டுமே பொதுமக்கள் வாங்கியிருக்க, அதன் பின் இந்த அளவு திங்கள் ஒன்றுக்கு 79,000 டன்னாக உயர்ந்தது. பொதுமக்களின் இத் தேவையை ஈடுசெய்ய இம்மாநிலத்தில் உணவு தானியங்களைக் கொள்முதல் செய்வதுடன் மட்டுமன்றி, வெளி மாநிலங்களிலும் உணவு தானியங்களை பொதுச் சந்தையின் மூலமும் விலைக்கு வாங்க இவ்வரசு நடவடிக்கை மேற் கொண்டது. உணவு தானியங்களை விலைக்கு வாங்குவதில் கூட்டுறவு சங்கங்களின் பணியும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. இவ்வாறு பற்பல நடவடிக்கைகளை ஒருமித்து எடுத்ததன் மூலம், வறட்சிக் காலத்தில் உணவு முறையில் இருந்த இடர்ப்பாடுகளை நீக்க இயன்றது.

5. இம்மாநிலத்தில் வளர்ச்சிப் பணிகள் விரைந்து நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. நடப்பாண்டுக்கு ஏற்பளிக்கப்பட்ட ஆண்டுத் திட்டம் 51... கோடி ரூபாய் அளவினதாக இருந்த போதிலும், வறட்சித் துயர் தணிப்புப் பணிகள் நீங்கலாக 600 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்யப்படும் நிலை ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த நிதி ஆண்டுக்கு 711 கோடி ரூபாய் அளவிலான பெருந் திட்டத்தை இவ்வரசு தீட்டியுள்ளது. நடப் பாண்டுத் திட்டத்தை இம்மாநில அரசு போற்றிப் பாராட்டும் வகையில் நிறை வேற்றியுள்ள காரணத்தால், அடுத்த ஆண்டுக்கு என இம்மாநில அரசு தீட்டி யுள்ள திட்டத்தைத் திட்டத்தை அது கேட்ட அளவுக்கு மத்திய திட்டக் குழு ஒப்புக்கொண்டுள்ளது.

6. இம்மாநில அரசு, வேளாண்மைக்குத் தொடர்ந்து உரிய சிறப்பிடத்தை அளித்து வருகிறது. வேளாண்மை உற்பத்திப் பெருக்கம் விரைந்தும் தொடர்ந் தும் இருக்கச் செய்யும் பொருட்டு, இம் மாநிலத்தில் எட்டு மாவட்டங்களில் "பயிற்சி-பார்வையிடல் திட்டம்" 1981 செப்டம்பர் திங்கள் முதல் நாளி லிருந்து செயலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள மாவட்டங் களில் இத்திட்டம் 1982 சூலைத் திங்கள் முதல் நாளிலிருந்து செயலுக்கு வரும். இத்திட்டம் சுமார் 36 கோடி ரூபாய் செலவில் உலக வங்கி உதவி யுடன் ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் செயலாற் றும் வேளாண்மை விரிவாக்கப் பணியாளருக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப் படும். சிறப்புப் பயிற்சி பெற்ற இப்பணியாளர், பண்ணை நடைமுறைகள் குறித்த புதிய, முறைப்படியான ஆலோசனைகளை உழவர்களுக்கு அளிப்பர். வேளாண்மை விளைபொருள் விற்பனைக்கு வசதிகள் செய்து கொடுக்கும்



பொருட்டு, கிராமக் கிடங்குகள் அதிக எண்ணிக்கையில் கட்டப்படுவதுட ஒழுங்குமுறை அங்காடிகளும் ஒருங்கிணைந்த வகையில் மேம்படுத்தப்ப உலக வங்கியின் உதவியுடன் 102 கோடி ரூபாய் செலவில் வேளாண்ன பொருள் விற்பனையை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தும் திட் ஒன்றை இவ்வரசு மேற்கொள்ளக் கருதியுள்ளது. உணவுப் பொருள் சே புக் கிடங்குகள் உட்பட, இப்போதுள்ள ஒழுங்குமுறை அங்காடிகளில் தரத் உயர்த்துவது, விரைவில் அழுகும் பொருள்களுக்கு அங்காடிகள் ஏற்படுத் வது, ஒழுங்குமுறை அங்காடிகளைப் புதிதாகத் தொடங்குவது, கிடங் வசதி, பதப்படுத்தும் வசதி அளிப்பது ஆகியவை இத்திட்டத்தில் அடங்கு திட்ட அறிக்கை இப்போது மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வை கப்பட்டுள்ளது.

7. வேளாண்மை விளைபொருள் விற்பனை குழுக்களின் நடவடிக் களை ஒருங்கிணைப்பதற்காக, தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்ம விளை பொருள் அங்காடிகள் சட்டத்தைத் திருத்தி, மாநில வேளாண்மை பொருள் விற்பனை வாரியத்தைச் சட்ட முறைமையானதாக அமைப்பதெ மாநில அரசு முடிவு செய்துள்ளது. பால் பண்ணை வளர்ச்சி, கோ வளர்ப்பு, ஏனைய கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள ஊக் மும் ஆக்கமும் அளிக்கப்பட்டுள்ளன. சமையல் எண்ணெய் உற்பத்தியை பெருக்கி, விலைகளை நிலைப்படுத்த, தமிழ்நாடு எண்ணெய் வித்துக்க உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம், தேசிய பால் பண்ணை வளர்ச்சி வாரிய தின் நிதி உதவியுடன் இந்த நிதி ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளது. பாசன பெறும் எண்ணெய் வித்துப் பயிர்கள் விளைவிக்கப் படும் பரப்பளவை பெருக்குவதன் மூலம் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை உயர்த்தக் கருத பட்டுள்ளது. சமையல் எண்ணெய் உற்பத்தியை மேலும் உயர்த்துப பொருட்டு, சிறந்த வகைத் தென்னங்கன்றுகளைப் பெரும் அளவில் உற்பத் செய்வதும் வழங்குவதும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ஏழை எளிய மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கும்போது ஒவ்வொருவருக்கும் ஒரு தென்னங்கன்றை இலவசமாக வழங்குவது என்று முடிவு செய்யப் பட்டுள்ளது.

8. உழவர்களின் கடன் சுமையைக் குறைப்பதற்காக நடப்பு நிதி ஆண்டிலும் தொடர்ந்து அரசு முயற்சிகளை மேற்கொண்டது. குறுகிய காலக் கடன் வாங்கியுள்ள சிறு உழவர்கள் அக் கடன் முழுவதையும் 30—6—1981 தேதிக்குள் திருப்பிச் செலுத்திவிட்டால், அவர்கள் அக்கடனுக்குச் செலுத்த வேண்டிய சாதாரண வட்டியையும் அபராத வட்டியையும் செலுத்த வேண்டா மெனத் தள்ளிவிடுவது என்று அரசு முடிவு செய்தது. குறுகிய காலக் கடனுக் குரிய சாதாரண வட்டியையும் அபராத வட்டியையும் 1—4—1980 க்குப பின்னர் செலுத்தியிருந்தால் அவற்றைத் திருப்பிக் கொடுத்துவிடவும் அரசு ஒப்புக் கொண்டது. பிற உழவர்களுக்கு வழங்கப்பட்ட குறுகிய காலக் கடனுக குரிய அபராத வட்டி, அந்த உழவர்கள் கடன் தொகை முழுவதையும் சாதாரண வட்டியுடன் 30—6—1981-க்குள் திருப்பிச் செலுத்திவிட்டால், தள்ளுபடி செய்யப்படும். இவ்வசதிகள் அனைத்தும் 30—6—1981 வரை தான் இருக்குமென விதி இருந்த போதிலும், உழவர்களுக்கு உதவும் பொருட்டு இதனை இவ்வரசு 1—12—1981 வரை நீட்டித்தது. இச்சலுகைகளினால், பல இலட்சக்கணக்கான உழவர்கள் பயன் பெற்றனர்.

9. கடந்த சில ஆண்டுகளாகவே, உழவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு முற்போக்குக் கருத்துள்ள நிலச் சீர்திருத்தச் சட்டங்களை இவ்வரசு கொண்டு வந்துள்ளது. இக்கொள்கையின் அடிப்படையில், இம்மாநில சட்ட மன்றம் நிறைவேற்றிய தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாவது திருத்தச் சட்ட வரைவு குடியரசுத் தலைவரின் இசைவு பெறுவதற்காக மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப் பட்டது. நில உச்சவரம்பு குறித்து முன்பு உத்தேசித்திருந்த சட்டத்தை ஏமாற்றும் பொருட்டு 1958ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1ஆம் நாளிலிருந்து 1960ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6ஆம் நாள் வரையில் செய்யப்பட்ட நில உரிமை மாற்றங்களை வெளிப்படுத்துவதே இச்சட்ட வரைவின் நோக்கமாகும். இச்சட்ட வரைவு சட்டமாகிவிட்டால், உபரியாகக் கிடைக்கும் நிலங்களை நிலமற்ற உழவர்களுக்குப் பகிர்ந்தளிக்கலாமெனக் கருதப்பட்டது. ஆனால் நமது எண்ணத்திற்கு மாறாக, இச்சட்ட வரைவுக்குக் குடியரசுத் தலைவரின் இசைவு தரப்படவில்லை. அதற்கான காரணங்கள் மாநில அரசிற்கு இது வரையில் அறிவிக்கப்படவில்லை. சட்ட வரைவு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தால், இந்த உபரி நிலங்களை நிலமற்ற உழவுத் தொழிலாளர் ஏராளமானவர் களுக்குப் பகிர்ந்தளித்து அவர்களுக்கு உதவி செய்யலாமென்ற இவ்வரசின் எண்ணம் ஈடேறவில்லை.





10. நிலப் பதிவேடுகளில் நில உரிமையாளர், குத்தகைக்காரர் முதலிய விவரங்களை நாளது வரை எழுதிவைக்கும் திட்டம் 1979 சூன் 1ஆம் தேதி யன்று தொடங்கியது. இத்திட்டத்தின்கீழ் 72,000 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள நிலம் குறித்த பெரும் பணி இன்னும் செய்து முடிக்கப்படாமல் உள்ளது. இந்தத் திட்டம் உழவர்களுக்குப் பயன் விளைவிக்குமாதலால் அவர்கள் தங்கள் உரிமைகளைச் சரியாக அறிந்து கொள்ளவும் நிதி உதவி நிறுவனங்களிடமிருந்து அவர்கள் எளிதில் கடன் பெறவும் உதவுமாதலால்— இத்திட்டத்தை இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள் நிறைவேற்றி முடிப்பதற் கான விரைவுத் திட்டம் ஒன்றை மேற்கொள்வதென அரசு முடிவு செய்துள்ளது.

11. மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவைப்படும் இன்றியமையாப் பொருட்களின் விலைவாசிகள் உயர்ந்துவரும் போக்கினைக் கண்டு இந்த அரசு மிகுந்த கவலை கொண்டுள்ளது. விலைவாசிப் பிரச்சினை நாட்டின் பொருளா தாரக் கொள்கைகளுடன் பின்னிப் பிணைந்து நிற்பதால், இக்கொள்கைளை வகுக்கும் உரிமை பெற்றிருக்கும் மத்திய அரசே விலைவாசிப் பிரச்சினைக்கு நிரந்தரமாக ஒரு தீர்வு காண முடியும் என்பது பொருளாதார வல்லுநர்கள் கண்ட முடிவு. அதே சமயத்தில், இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் தனக்குரிய பங்கை ஏற்பதில் மாநில அரசும் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. குறிப்பாக, விவசாயப் பெருமக்களுக்கு, சாகுபடிச் செலவுக்கு ஏற்ப, நியாய மான விலை கிடைக்க வேண்டும் என்பது இப்பிரச்சினையின் ஒரு பகுதி. இன்றியமையாப் பொருட்கள் நயமான விலைக்குப் பொதுமக்களாகிய நுகர் வோருக்குக் கிடைக்க வேண்டுமென்பது இப்பிரச்சினையின் மறு பகுதி. இவ் விரு சாரார் நலனையும் [illegible] வர்த்தகச் சூதாட்டங்களில் ஈடுபடும் இடைத்தரகர்களை [illegible] உற்பத்தியாளர்கள் கூட்டுறவு அமைப்பின் [illegible] விற்பனைப் பொறுப்பை [illegible] விலை [illegible] உற்பத்தியாளர் களுக்கு [illegible] நுகர்வோருக்கு இன்னல் ஏற்படாத நிலையும் [illegible]. இதில் வெற்றி காணவேண்டுமென்றால், பெரும் [illegible] தனியார் கைகளிலுள்ள இந்த இன்றியமையாப் பொருட்களின் வர்த்தகம் [illegible] அமைப்பின் வசம் வரவேண்டும். இந்த நோக்கத்தோடு, உற்பத்தி யாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களை அமைக்க, வரும் ஆண்டில் முயற்சி கள் மேற்கொள்ளப்படும்.

12. கிராம மக்களுக்கு உதவும் தன்னிறைவுத் திட்டம் தற்போது கடந்த இரண்டு ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. 1980—81-ல் முதல் கட்டமாக 69 வளர்ச்சி வட்டாரங்களில் இத்திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்திய பின்னர், நடப்பு நிதி ஆண்டில் 150 வளர்ச்சி வட்டாரங்களில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இந்த 219 வளர்ச்சி வட்டாரங்களில் இந்த நிதி ஆண்டு முடிவிற்குள் 136 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலையான சொத்துக்கள் ஏற்படுத்தப்படும். இந்த 219 வளர்ச்சி வட்டாரங்களில் 18,000 கி.மீ. இணைப்புச் சாலைகள் அமைக்கப்படும்; ஆதி திராவிடர்களுக்காக 25,000 வீடுகள் கட்டித் தரப்படும்; 2,717 பள்ளிக் கட்டிடங்கள் கட்டித் தரப்படும். எஞ்சியுள்ள 159 வளர்ச்சி வட்டாரங்களில் தன்னிறைவுத் திட்டம் அடுத்த நிதி ஆண்டில் நிறைவேற்றி முடிக்கப்படும். இத்திட்டத்தினால் மக்களுக்குக் கிடைத்துள்ள நன்மையைக் கருத்தில் கொண்டு பேரூராட்சிகளும் நகராட்சிகளும் தன்னிறைவு அடையும் வகையில் ஒரு திட்டத்தை வரும் ஆண்டுகளில் செயல்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான ஆயத்த நடவடிக்கைகளை இவ்வரசு மேற்கொண்டுள்ளது.

13. வேளாண்மை வளர்ச்சியில் மின் உற்பத்திப் பெருக்கத்திற்குப் பெரும் பங்கு உண்டு. சாதாரண பருவநிலை காரணமாக 1981 ஜூன் முதல் மின் விசை நிலைமை சீரடையத் தொடங்கி, 1981 ஜூன் 25 ஆம் நாளில் மின்வெட்டு நீக்கப்பட்டது. குறைந்த மின் அழுத்தத் தொழில்கள் மீதான உச்சத் தேவைக் கட்டுப்பாடுகள், கிராமப்புற மின்சுமை மீதான கட்டுப்பாடுகள், வேளாண்மைக்கு மின் விசையைப் பயன்படுத்துபவர்கள் தொடர்பான நேரக் கட்டுப்பாடுகள், இருபத்துநான்கு மணி நேரமும் தொடர்ந்து செயல்பட வேண்டிய நிலை அல்லாத தொழில்களுக்கு உயரழுத்த மின்சாரத்தின் மீதான உச்ச நேரக் கட்டுப்பாடுகள் 1981 ஆகஸ்டு முதல் நாளிலிருந்து நீக்கப்பட்டன. இக்கட்டுப்பாடுகள் அனைத்தும் முழுமையாக நீக்கப்பட்டமை இதுவே முதல்முறையாகும். முந்தைய ஆண்டுகளில் ஒன்று அல்லது பல கட்டுப்பாடுகள் செயலில் இருந்தன. புனல் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் நீர்த்தேக்கங்களில் நீரின் அளவு போதுமானதாக இருக்கிறது. இதனால் புனல் மின்விசை உற்பத்தி வாய்ப்புகள் போதிய அளவு திருப்திகரமாக இருக்கும். தென்மேற்குப் பருவமழை தொடங்கும் வரை அடுத்த சில மாதங்களுக்கு மின்விசை நிலைமை 1981 ஆம் ஆண்டு நிகரான கால அளவில் இருந்ததைவிடச் சீராக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



14. தமிழ் நாட்டில் அதிக அளவு புனல் மின்விசை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதனை மேலும் அதிகப்படுத்துவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு. அனல் மின் ஆதாரங்கள் மூலம் அதிகச் செலவில் மின்விசை உற்பத்தி செய்யும் நிலைக்கு மாநில அரசு தள்ளப்பட்டுள்ளது. இத்திட்டங்களுக்கு அதிக மூலதனச் செலவு ஆகும். பெரிய அளவிலான அனல் மின் திட்டங்களுக்கு மாநில அரசு தனது நிதி ஆதாரங்களிலிருந்து செலவு செய்வது கடினமானதால், மாநில அரசு அனல் மின் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு மத்திய அரசு நிதியுதவி அளிக்குமானால் மிகவும் பயனுள்ளதாயிருக்கும். கடந்த ஆண்டு நவம்பரில் நடைபெற்ற மின்விசை அமைச்சர்கள் மாநாட்டில் நடந்த விவாதத்தில் மாநில அரசு புதிய அனல் மின் திட்டங்களைத் தொடங்கவும், தற்போதுள்ள திட்டங்கள் சிலவற்றை விரிவுபடுத்தவும் மத்திய அரசு கொள்கை அளவில் ஒப்புக்கொண்டுள்ளது. வட சென்னையில் (5 x 210 மெ. வா.) அனல் மின் நிலையம் தொடங்குதல், மேட்டூரில் அனல் மின் நிலையத்தை விரிவுபடுத்தல் (2 x 210 மெ. வா.), தூத்துக்குடி அனல் மின் நிலையத்தை விரிவுபடுத்தல் (ஒரு 210 மெ. வா., ஒரு 500 மெ. வா. திறனுடன்) ஆகியவை பரிசீலனையில் உள்ளன.

15. ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளவாறு, புனல் மின் சக்தியை உற்பத்தி செய்வதற்கான எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்தியுள்ளது; அனல் மின் சக்தி உற்பத்திக்கான பல்வேறு திட்டங்களையும் அரசு ஆராய்ந்து வருகிறது. அனல் மின் நிலையங்களுக்காக நீண்ட தொலைவிலிருந்து நிலக்கரியைக் கொண்டுவருவதில் உள்ள இடர்ப்பாடுகளைக் கருத்தில் கொண்டு, தமிழ் நாட்டில் இரண்டாவது அணு மின் நிலையத்தை நிறுவும்படி மத்திய அரசை இவ்வரசு கோரியுள்ளது. அணு மின் நிலையத்தை நிறுவுவதற்குப் பொருத்தமான இடங்களில் ஒன்றாக திருநெல்வேலி மாவட்டத்தில் கூடன்குளத்தைத் தேர்ந்தெடுத்து மத்திய அரசுக்குத் தெரிவித்துள்ளது. இடம் தேர்ந்தெடுக்க மத்திய அரசினால் அமைக்கப்பட்டுள்ள குழு, விரைவில் தன் முடிவுகளை அறிவிக்கும் என்றும், அம்முடிவு நமக்கு ஆதரவாக இருக்குமென்றும் எதிர்பார்க்கின்றோம். கடல் நீரைக் குடி நீராக மாற்றுவதற்கும், அப்போது வெளிப்படும் வெப்ப சக்தியைப் பயன்படுத்தி மின் சக்தி உற்பத்தி செய்வதற்கும் ஏற்ற நிலையத்தை அமைக்கும் உத்தேசமும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

16. மாநில மின்வாரியம் கடுமையான நிதிப்பற்றாக்குறையில் உள்ளது. முதலீட்டிற்குக் குறைந்த அளவு வருவாய் கிடைப்பதாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. நாட்டிலேயே குறைந்த அளவு மின் கட்டணம் வசூலிக்கும் மாநிலங்களில் ஒன்றான நமது மாநிலத்தில் மின் கட்டண விகிதங்களைத்

திருத்தி அமைக்குமாறு மத்திய திட்டக்குழு பலமுறை மாநில அரசிடம் வ யுறுத்தி வந்துள்ளது. மாநில மின்வாரியத்தின் நிதி ஆதாரங்களை வலு படுத்தினாலன்றி, சாதனத்தை நவீனப்படுத்தல், திட்டப் பணிகளைச் செய படுத்தல், தற்போதுள்ள மின் நிலையங்களையும் மின்விசை கொண்டு செ லும் மின்கம்பித் தொடர்களையும் பராமரிப்பது ஆகியவை மிகக் கடுமையா பாதிக்கப்படும் என்று திட்டக் குழு வலியுறுத்தியுள்ளது. வேளாண் தொழில், வாணிகம் வளர்ச்சியடைவதற்குக் கூடுதல் மின் உற்பத்தி மிக அவசியமானதாகும். மத்தியதிட்டக் குழு வலுவாகப் பரிந்துரை செ துள்ள வண்ணம் மின் கட்டண விதங்களை மாற்றியமைப்பது மூலம்தா மின் வாரியத்திற்குப் போதிய வருவாய் கிடைக்கும். போதிய வருவா கிடைத்தால்தான், மின் வாரியத்தின் நிதி ஆதாரங்கள் சீரடையும். அ போதுதான் மின் உற்பத்தியை அதிகரிக்க இயலும். மின்வாரியத்தி நடவடிக்கைகளைக் கணிசமான அளவுக்குத் தொடர்ந்து நடைபெறச் செய் மாநில அரசு கடந்த சில ஆண்டுகளாகவே நூறு கோடி ரூபாய்க்கும் அதி மாகவே நிதி உதவி அளித்து வந்துள்ளது. நிதி உதவியைக் காலவரையற ின்றி வழங்குவது மாநில அரசுக்கு இயலாது. ஏனெனில், அரசின் நி ஆதாரங்களைப் பெருமளவு அடிப்படையாகக் கொண்ட திட்டப் பணிகளை ும், பிற வளர்ச்சி நடவடிக்கைகளையும் செயல்படுத்துவதை இது கடுமை யாகப் பாதிக்கும். மேலும், மின்வாரியத்திற்குத் தேவைப்படும் பல்வே பொருள்களின் மீது அதிக வரிகளை மத்திய அரசு விதிப்பதன் மூலமு இரயில்வே கட்டணம், எண்ணெய் விலைகள் முதலியவற்றை அதிகரிப்பதன் மூலமும், ஆண்டுதோறும் மின் உற்பத்திச் செலவு உயர்ந்து வருகிறது எனவே, தற்போதுள்ள குறைந்தளவு மின் கட்டண விதங்களை மாற்றி அமைப்பதைத் தவிர மாநில அரசுக்கு வேறு வழியே இல்லை. தொழில் துறையில், தனியார் தங்கள் தொழிலுக்குத் தேவையான மின் உற்பத்தி செய்வதை அரசு அனுமதிக்க முடிவு செய்துள்ளது. தனியார் இலாபகரமா மின் உற்பத்தி செய்ய முன்வருவார்களானால், அரசு அதைப் பரிசீலித்து பார்க்கவும் விரும்புகிறது.

17. காவிரி நீரைப் பங்கிட்டுக் கொள்வது தொடர்பான தகராறு இன்னும் தீர்க்கப்படாமலுள்ளது. மத்திய அரசின் ஆலோசனையின் பேரில் இத குறித்து தமிழ் நாட்டிற்கும் கர்நாடகத்திற்கும் இடையே இரு தரப்புப் பேச வார்த்தைகள் நடைபெற்றன. ஆனால், துரதிருஷ்டவசமாக இப் பேச் வார்த்தைகள் இதுவரை வெற்றியடையவில்லை. நீண்ட காலமாகத் தீர்க்கப் படாமல் உள்ள இப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண மத்திய அர உதவி செய்யும் என நம்புகிறோம். அண்மையில் இப்பிரச்னைக்குத் தீர்





காண ஒரு மாநாடு நடத்த இந்தியப் பேரரசு முன்வந்துள்ளது. அதில் நியாயமான இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும், இப்போது பாசனத்திற்குப் பயன்படுத்தப்படும் தண்ணீருக்கு உத்தரவாதம் தரப்படும் என்றும் இந்த அரசு நம்புகிறது. கேரள மாநிலத்தில் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் உபரி நீரைத் தமிழகத்தில் பாசனத்திற்காகத் திருப்பி விடுவதற்கான சாத்தியக்கூறு பற்றி பரிசீலிக்க மத்திய அரசு அமைத்த தொழில் நுட்பக் குழுவின் பரிந்துரைகள் மீது விரைந்து நடவடிக்கைகள் எடுக்குமாறு மத்திய அரசை இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தி வரும்.

18. அண்டை மாநிலங்களுக்கிடையே ஆற்றுநீர்ப் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுத்து வரும்போதே இந்த அரசு தமிழ் நாட்டில் பாசன வசதிகளை மேம்படுத்தத் தன்னால் ஆன முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்டு வருகிறது. ஆற்றுப் பாசன ஆதாரங்கள் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டுள்ளதால், பாசன ஏற்பாடுகளை நவீன மயமாக்குவதில் தற்போது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஆறாவது திட்ட முதலீட்டில் பாசன ஏற்பாடுகளை நவீனப்படுத்தும் திட்டங்களுக்கு 48.59 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பாசனச் சிறப்புத் திட்டம், தூர் வாருதல்—பண்படுத்தல் திட்டத்திற்கு 12 கோடி ரூபாய் செலவு செய்யப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. குடிநீர் திட்டங்களுக்கும் பாசனத் திட்டங்களுக்கும் தமிழ் நாட்டில் தண்ணீர் பற்றாக்குறை இருப்பது அனைவரும் அறிந்த ஒன்றே. இதன் காரணமாக, அண்டை மாநிலங்களில் கிடைக்கின்ற உபரி நீரை இம்மாநிலத்தின் பயனுக்காகத் தந்துதவுமாறு அம்மாநிலங்களை நாம் கேட்டுக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம். கிடைக்கின்ற நீரை அதிக அளவுக்குப் பயன்படுத்திக் கொள்ள இயன்ற முயற்சிகள் அனைத்தும் மேற்கொள்ளும் நிலையில், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த வறண்ட பகுதிகளின் பயனுக்காக, சில பருவகாலங்களில் கடலில் போய் வீணாகக் கலக்கும் வெள்ள நீரைத் திருப்பிவிடும் சாத்தியக் கூறுகளையும் மாநில அரசு ஆராய்ந்து வருகிறது. பொதுப்பணித் துறை இதற்கான ஆய்வுகளைத் தொடங்கியுள்ளது.

19. இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சி விரைந்து ஏற்படுவதற்காகத் தமிழ் நாட்டில் புதிய தொழிற் கூடங்களைத் தொடங்குவதற்கு ஊக்கம் அளிக்க அண்மையில் சிறப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழ் நாட்டில் தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்குப் பல்வேறு ஊக்கத் திட்டங்கள், தேர்ச்சி பெற்ற தொழிலாளர், அடிப்படை வசதிகள் முதலியவை கிடைப்பது குறித்துத் தொழில் முனைவர்களுக்கு விளக்கிக் கூறுவதற்காக மகாராஷ்டிரம், குஜராத் மாநிலங்களுக்குத் தமிழ் நாட்டுத் தொழிலமைச்சர் சென்று வந்தார்.

இம் மாநிலத்தை விரைவில் தொழில் மயமாக்குவதற்காக, சிறப்புச் சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. விற்பனை வரி அடிப்படையில் வட்டி இல்லாக் கடன் மீதான உச்ச வரம்பு 50 இலட்சம் ரூபாயிலிருந்து ஒரு கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. கடலூர், புதுக்கோட்டை, மானாமதுரை, தூத்துக்குடி, கும்மிடிப்பூண்டி ஆகிய இடங்களில் தொழிற்பகுதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. அந்த இடங்களில் அமைக்கப்பெறும் புதிய தொழிற்கூடங்கள், முதல் ஐந்தாண்டுகளுக்கு மின் வெட்டு விலக்கு வசதிகளைப் பெறும். மின்னணுவியல், மருந்துப் பொருள்கள், மோட்டார் வண்டித் துணைத் தொழில்கள் ஆகிய துறைகளில் புதிய தொழிற் கூடங்களைத் தொடங்குவதற்கு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் புதிய தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு இச்சலுகைகள் ஊக்கம் அளிப்பவையாக இருக்குமென நம்புகிறோம்.

20. படித்த இளைஞர்களிடையே வேலை வாய்ப்புகளுக்கான தகுதிகளை மேலும் அதிகரிக்கச் செய்ய, தொழில் கல்விக்கு இவ்வரசு முக்கியத்துவம் அளித்துத் திட்டங்களைச் செயலாக்கி வருகிறது. நடப்பு நிதி ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் பொறியியற் கல்லூரி ஒன்று நிறுவப்பட்டுள்ளது. மேலும் ஆறு பல்தொழில் பயிற்சி நிறுவனங்கள் தொடங்கி நடத்தப்பட்டு வருகின்றன. அண்மையில் நடந்த பாரதி நூற்றாண்டு விழாவில் பெண்களுக்கெனப் பல்தொழில் பயிற்சி நிலையம் திருநெல்வேலி மாவட்டத்தில், எட்டையபுரம் பகுதியில் அமைக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்கு, இப்பயிற்சி நிலையங்கள் பெரிதும் வழிகோலும்.

21. மாநில அரசு தொழில்நுட்பக் கல்விக்கு முக்கியத்துவம் அளிப்பதுடன் பொதுக் கல்விக்கு ஊக்கமளித்து வருகிறது. கோயம்புத்தூரில் பாரதியார் பல்கலைக் கழகத்தையும், திருச்சிராப்பள்ளியில் பாரதிதாசன் பல்கலைக் கழகத்தையும் அமைப்பதற்குச் சட்டங்கள் இயற்றப்பட்டு, குடியரசுத் தலைவரது ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. நிலங்களைக் கையகப்படுத்துவதற்கும் பல்கலைக் கழகங்களின் பல்வேறு தேவைகளைக் கண்டறிவதற்கும் தொடக்க நடவடிக்கைகள் ஏற்கெனவே எடுக்கப்பட்டுள்ளன. தஞ்சாவூரில் 1981 செப்டம்பர் 15 ஆம் நாளன்று தமிழ் பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டுள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். தமிழ் நாட்டில் மகளிர் பல்கலைக் கழகம் ஒன்றைத் தொடங்கவும் அரசு கருதியுள்ளது. காரைக்குடியில் உள்ள கல்வி நிறுவனங்களை ஒருங்கிணைத்து, அமரர் அண்ணா உறுதி அளித்தவாறு, பல்கலைக் கழகம் ஒன்றைத் தொடங்கவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.



22. அறிஞர் அண்ணாவின் இருமொழிக் கொள்கையைப் பின்பற்றி, ஒவ்வொரு துறையிலும் நடைமுறையில் தமிழ் மொழியை முழுமையாகப் பயன படுத்தவும், தமிழை ஆட்சிமொழியாக நிலைநாட்டவும், அரசு முனைப்பாக நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. இந்தக் கொள்கையின் அடிப்படையில், இன்று முதல் எல்லா உரிமை இயல் நீதிமன்றங்களிலும் தீர்ப்புகளும் ஆணைகளும் தமிழில் வரையப்பட வேண்டும் என்று அரசு பணித்துள்ளது.

23. கடல் சார்ந்த ஆய்வினை மேற்கொள்ளும் தேசிய நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் மாநிலத் தொல்பொருளியல் துறை காவிரிப்பூம்பட்டினத்திற்கு அப்பாலுள்ள கடலுக்கடியில் அண்மையில் நடத்திய தொல்பொருள் ஆய்வு பயனுள்ள முடிவுகளை அளித்துள்ளது. தரங்கம்பாடி வரை நடத்தப்பட்ட ஆய்விலிருந்து பூம்புகார், வானகிரி பகுதியில் கடலுக்கடியில் கட்டிடங்களும், மூழ்கிப்போன கப்பல்களும் புதைந்து கிடக்கின்றன என்பதாகத் தெரிய வருகிறது. இந்த ஆய்வினைத் தொடர்ந்து மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

24. பள்ளிக் குழந்தைகளிடையே தொழுநோய் பரவியுள்ளதா என்று கண்டறிய, வரும் கல்வி ஆண்டிலிருந்து விரிவான சோதனைத் திட்டம் ஒன்றை அரசு தொடங்கும். குழந்தைகள் பள்ளிகளில் சேரும் போது அவர்களுக்கு அந்நோய் கண்டிருக்கிறதா என்று மருத்துவ சோதனை செய்வதுடன் சிகிச்சைக்குத் தேவையான தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

25. இந்த அரசின் முற்போக்கான தொழிலாளர் நலக் கொள்கையை ஒட்டி, தொழிலாளர்களின் நன்மைக்காகப் பல சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. 1981 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டம் 1—10—1981 முதல் செயலுக்கு வந்தது. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மழ்க்கைச் செலவுப்படி கொடுப்பதற்கான சட்டமும், தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களைப் பதவியில் நிலைப்படுத்தும்) சட்டமும் 1—1—1982 முதல் செயலுக்கு வந்தன. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கைத்தறி நெசவாளர்கள் (பணி நிலைமை, பல்வகை விதித் துறைகள்) சட்டம், அதன்கீழ் வகுக்கப்பட வேண்டிய விதிகள் முடிவு செய்யப்பட்டவுடன் செயலுக்குக் கொண்டு வரப்படும். 1981 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்ட வரைவு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் அரசுக் காப்புறுதித் திட்டத்தை தர்மபுரி, நீலகிரி மாவட்டங்களுக்கு நீட்டிக்கவும். வேறு சில பகுதிகளில் அதன் பயன்பாட்டை விரிவுபடுத்தவும் அரசு [illegible] கருதியுள்ளது.

26. ஆதி திராவிடர்களின் சமூக, பொருளாதார நிலைகளை மேம்படுத்த 1980-81ஆம் ஆண்டிலிருந்து சிறப்புக் கூறுகள் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. கடந்த ஆண்டில் இத்திட்டத்தின் அளவு ரூ. 71.64 கோடியாக இருந்தது. நடப்பாண்டில் இது ரூ. 83.04 கோடியாக உள்ளது. அடுத்த நிதியாண்டில் இது ரூ 114.04 கோடியாக இருக்கும். அடுத்த நிதியாண்டில் 1.67 இலட்சம் ஆதி திராவிட குடும்பங்கள் பயனடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய அரசின் சிறப்பு நிதியுதவியுடன் ஆதி திராவிடர்களுக்கான வருவாய் பெருக்கத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த நிதியாண்டில் இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 9.56 கோடியாகும். நடப்பாண்டில் இது ரூ. 10 கோடியாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 1982-83 ஆம் ஆண்டில் மத்திய அரசின் சிறப்பு நிதியுதவி ரூ. 15 கோடியாக இருக்கக்கூடும். ஆதி திராவிடர்களின் வாழ்க்கை முறையை மேம்படுத்த, சமூக, பொருளாதார நடவடிக்கைகள் எடுப்பதோடு, ஆதி திராவிடர்களுக்கெதிராக இழைக்கப்படும் குற்றங்களை, மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் விசாரிக்க தனி நீதிமன்றங்களை அரசு ஏற்படுத்தி வருகிறது. இம் மாநிலத்திலுள்ள ஆதி திராவிடர்களின் வாழ்க்கை நிலையை மேற்சொன்ன பல்வேறு திட்டங்கள் மூலம் மேம்படுத்துவதென அரசு உறுதி கொண்டுள்ளது.

27. பின்தங்கிய வகுப்பினர் நலனுக்காகத் தற்போது தமிழ் நாட்டில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. கல்வி வசதி பெறுவதில் பல சலுகைகளை அளிப்பதுடன் அந்த வகுப்பினர் பொருளாதார வகையிலும் முன்னேற்றம் காணவும் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த வகுப்பினர் மேற்கொள்ளும் வணிகம், தொழில் போன்ற திட்டங்களுக்கு நிதி உதவி செய்ய, பின்தங்கிய வகுப்பினர் பொருளாதார முன்னேற்றக் கழகம் ஒன்றை அரசு அண்மையில் நிறுவியுள்ளது. ஆதரவற்ற ஏழை விதவைகளுக்கு மருத்துவ நிலையங்களில் வேலைக்கு முன்னுரிமை அளிக்கப்படுமென அரசு சென்ற ஆண்டு அறிவித்தது. தொழில் கல்லூரிகளிலும் கலைக் கல்லூரிகளிலும் அவர்களுக்காக இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களின் மக்களுக்கு வேலை வாய்ப்புகளிலும் கல்வி நிலையங்களிலும் முன்னுரிமை அளிக்கும் கருத்துரு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. சென்ற ஆண்டு ஊனமுற்றோர் ஆண்டாகக் கருதப்பட்டு அவர்களுக்குப் பல புதிய திட்டங்கள் செயலுக்குக் கொண்டு வரப்பட்டன. அரசு நிறுவனங்களிலும் உள்ளாட்சி நிறுவனங்களிலும் சில குறிப்பிட்ட பதவிகளை ஊனமுற்றோர்க்கென ஒதுக்கியுள்ளது. அரசுப் பணி காலிப் காலி இடங்களுக்கு, வேலை வாய்ப்பகம் மூலம் ஆட்களை அனுப்





பும்போது, ஊனமுற்றோருக்குத் தகுந்த முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. கல்வி நிலையங்களிலும் பொது நிறுவனங்களிலும் ஊனமுற்றோர்க்கு 3 சதவீதம் இட ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது. ஊனமுற்றோர் ஆண்டு முடியுற்ற போதிலும் அவர்களின் நலனுக்கான திட்டங்கள் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வரும்.

28. ஊராட்சித் தேர்தல்களை விரைவில் நடத்துவதில் முனைப்பாக ஆர்வம் கொண்டுள்ள இந்த அரசு இவ்வாண்டில் சனவரி திங்கள் இறுதியில் இத்தேர்தல்களை நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருந்தது. அனைத்துக் கட்சித் தலைவர்களுடனும் கலந்து ஆலோசித்து, அவர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கு ஏற்ப, ஆதி திராவிடர்களுக்கும் பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்ய இந்த அரசு கொள்கை முடிவு எடுத்து அதற்கு வகை செய்யும் அவசரச் சட்டம் ஒன்றைப் பிரகடனம் செய்தது. இட ஒதுக்கீடுகள் பற்றி சில பிரச்சினைகளை எழுப்பி, நீதிமன்றங்களில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளதையொட்டி, நீதிமன்றம் விதித்துள்ள இடைக்கால தடை ஆணைக்கேற்ப, தேர்தல்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. நீதிமன்ற அனுமதி கிடைத்தவுடன் இத்தேர்தல்களை நடத்த அரசு ஆயத்தமாக உள்ளது.

29. பாரதப் பிரதமர் அண்மையில் அறிவித்த இருபது அம்சத் திட்டத்தில் இடம் பெற்றுள்ள பாசன வசதிகளை விரிவாக்குதல், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியைப் பெருக்குதல், நிலச் சீர்திருத்தச் சட்டங்களைச் செயல்படுத்தல், நிலப் பதிவேடுகளைச் சீராக்குதல், ஆதி திராவிடர்களுக்கான திட்டங்களை நிறைவேற்றுதல், தன்னிறைவுத் திட்டத்தில் குடிநீர் வழங்குதல், மின் உற்பத்தியைப் பெருக்குதல், பொது சுகாதார வசதிகளை விரிவாக்குதல், மகளிர் நலனுக்காக திட்டங்களைச் செயலாக்குதல், பொது விநியோக அமைப்பை விரிவாக்குதல் போன்ற பல அம்சங்கள் ஏற்கெனவே இவ்வரசு சில ஆண்டுகளாகச் செயல்படுத்திவரும் வளர்ச்சித் திட்டத்தில் முக்கிய இடம் பெற்றுள்ளன என்பது நமக்கு மன நிறைவு அளிக்கக் கூடியது. சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ளவரும் நலிந்தோரும் வாழ்வும் வளமும் பெற்று உய்யும் வகை செய்ய வகுக்கப்பட்டுள்ள இந்த இருபது அம்சத் திட்டத்தைத் தமிழக அரசு உளமார வரவேற்கிறது. இத்திட்டத்தை முனைப்பாகச் செயல்படுத்துவதில், இவ்வரசு மத்திய அரசுக்கு முழு ஒத்துழைப்பை நல்கும்.

30. இம்மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கு நிலைமை பொதுவாகச் சீராக உள்ளது. தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. சமூக விரோத சக்திகள் அடக்கப்பட்டுள்ளன. காவலர்களின் நலனுக்காகப் பல்வேறு திட்டங்களை அரசு தொடங்கியுள்ளது. காவலர் வீட்டு வசதிக்

கழகத்தின் மூலம் காவலர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பது இத்திட்டங்களில் ஒன்றாகும். திருச்சிராப்பள்ளி மாவட்டம் நாவல்பட்டு கிராமத்தில் முதற்கட்டத்தில் 150 ஏக்கர் நிலத்தில் சுமார் 700 வீடுகள் கட்டப்படும். காவலர்களுக்கு இன்னும் கூடுதலாக வீடுகள் கட்டிக் கொடுக்க, காவலர் வீட்டு வசதிக் கழகம் இம்மாநிலத்தின் ஏனைய பகுதிகளில் தகுந்த நிலங்களைக் கண்டறிந்து வருகிறது. இம்மாநிலத்தில் பணிபுரியும் காவலர், தலைமைக் காவலர்களின் நற்பணிக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் முதலமைச்சர் காவலர் விருது என்ற புதியதொரு திட்டம் இவ்வாண்டு பொங்கல் திருநாளின் போது கொண்டுவரப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி அவர்களுக்குப் பதக்கம் அளிப்பதோடு மாதாந்திரப்படியும் அளிக்கப்படும். இதனால் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 1,500 காவலர்களும், தலைமைக் காவலர்களும் பயனடைவர்.

31. முதலில் நான் தெரிவித்தபடி, இம்மாநிலம் கடும் வறட்சியாலும், அதன் பின்னர் ஏற்பட்ட இடர்ப்பாடுகள், இன்னல்கள் ஆகியவற்றாலும், நிலவிய சோதனையான கால கட்டத்தைக் கடந்து வந்துள்ளது. நல்ல பருவ மழையால் இப்போது நிலைமை மாறி வருகிறது. சில பகுதிகள் தவிர இம்மாநிலத்தின் மற்ற எல்லா பகுதிகளிலும் உள்ள பல்வேறு ஏரிகள், நீர்த் தேக்கங்கள் நிரம்புவதற்கு இது பெரிதும் உதவியுள்ளது. மேலும், இம்மாநில மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்த, பல்வேறு சமூக, பொருளாதாரக் கொள்கைகள் மூலம் என்னுடைய அரசு தன்னால் இயன்ற அனைத்தையும் செய்து வருகிறது.

32. இச்சட்ட மன்றத்தில் நடைபெறும் விவாதம் சிறந்த பயன் தருவதாகவும், ஆக்கபூர்வமானதாகவும் நம் மாநிலத்தின் வளர்ச்சிக்கு உதவுவதாகவும் அமையும் என்று நம்புகிறேன். உங்களது முயற்சிகளில் வெற்றியடைய வாழ்த்துகிறேன்.

வணக்கம் 

---

தமிழ் நாடு சட்டமன்ற மேலவை

---

வியாழக்கிழமை, 1982 பிப்ரவரி 4.

(தை 22, துன்மதி—திருவள்ளுவராண்டு 2013)

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற மேலவை மண்டபத்தில் முற்பகல் 9.30 மணியளவில், மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Fixation of Pay of Junior Assistants*

* 11. Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether it is a fact that, as per letter No. 74803/Pay II/80.2, dated 12th August 1980 of the Finance Department, Junior Assistants acquiring Degree after reaching the stage of Rs. 380 in the scale of pay of Rs. 350-10-420-15-600 are not entitled to any higher start;

(b) if so, the reasons therefor; and

(c) whether the Government have any proposal to extend the benefit to those who have reached Rs. 380 also?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(ஆ) & (இ) பட்டதாரி அல்லாத உதவியாளர்கள் அனுபவத்தின் மூலம் பிறகு வேலையைக் கற்றுக்கொள்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பட்டதாரி தகுதியைப் பெறுவதன் மூலம் அரசுக்கு எந்தவிதமான லாபமும் இல்லை. மேலும், ரூ. 380 அடிப்படைச் சம்பளம் அடைந்துவிட்டவர்களின் சம்பளத்தை மேலும் உயர்த்துவதன் மூலம், முதுநிலை உதவியாளர்விட அதிக சம்பளம் வாங்கும் நிலை ஏற்படும்.

திரு. பா. ரா. தாமஸ் : தலைவர் அவர்களே, பொதுவாக எல்லாத் துறைகளிலுமே தங்களுடைய தகுதியை உயர்த்திக்கொள்வதற்கு ஊக்கம் அளிக்கப்படுவது போன்றுதான் இதுவும் வழங்கப்படுகிறது. அந்த அடிப்படையில் இந்த ஊழியர்களுக்கும் முன்பு வழங்கப்பட்டது. அதை மேலும் தொடர்ந்து வழங்குவதன் மூலமாக அந்த ஊழியர்கள் மேலும் தங்களுடைய தகுதியை உயர்த்திக்கொள்ள வாய்ப்பிருக்கும் என்பதால், அந்த அடிப்படையில் மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12 ஆம் நாள் இதுபற்றி தெளிவுபடுத்தி அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

(1) Graduate Junior Assistants, Typists and Steno-typists who were appointed afresh between 1st April 1978 and 30th September 1978 are eligible for fixation of pay at Rs. 390 per mensem in the scale of pay Rs. 350-10-420-15-600.

(2) Graduate Junior Assistants, Typists and Stenotypists who were appointed afresh on or after 1st October 1978 will be given a higher start at three stages above the minimum of the scale of pay, i.e. at Rs. 380 in the scale of pay of Rs. 350-10-420-15-600.

(3) Junior Assistant, Typists and Stenotypist who acquired degree qualification on or after 1st October 1978 will also hav[e] their pay fixed at Rs. 380 if their pay is less than Rs. 380—that is, the pay of the persons drawing Rs. 350, 360, and 370, o[n] acquiring degree qualification after 1st October 1978 will also b[e] fixed at Rs. 380 in the scale of pay of Rs. 350-10-420-15-60[0] from the date following the last day of the Degree Examination.

(4) Persons acquiring degree qualifications after reachin[g] the stage of Rs. 380 in the scale of pay of Rs. 350-10-420-15-60[0] are not entitled to any higher start.

இவ்வாறு 4 விதமாகத் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. வேலையில் சே[ரும்] போது இந்தப் பதவிக்கு எஸ். எஸ். எல். சி. தகுதி போதும். ஆனா[ல்] வேலையில் சேரும்போது, டிகிரி பெற்றிருப்பார்களேயானால் அவர்களுக்கு ஊக்கம் தரவேண்டும் என்பது மட்டுமல்லாமல், டிகிரி பெற்று இந்த வேலை[யில்]





எடுப்பிலேயே வேலையில் சேர்ந்தால் வந்தவர்கள், டிகிரி முடிந்து அடுத்த அவர்கள் அந்த வேலையில் இருப்பதற்கு அவர்களுக்கு ஊக்கம் தருவதற்கு, ரூ. 380-ல் அவர்களின் சம்பளத்தை மூன்று நிலை அதிகமாகக் கொடுத்து வைக்கப்பட்டது. ஆனால் வேலையில் சேர்ந்து நிர்ணயிக்கலாம் என்று நல்ல அனுபவம் கிடைத்துவிடுகிறது. எடுத்த ஆண்டுகளானால் இவர்களுக்கு 'அட்மினிஸ்ட்ரேட்டிவ் எக்ஸ்பீரியன்ஸ்' எடுப்பிலேயே டிகிரி இருந்தால், மூன்று ஆண்டு காலத்திற்குள்ளாக இருக்க வேண்டும் என்று வைக்கப்பட்டது. ரூ. 350 என்று தகுதி பெற்றால், ரூ. 360 என்று இருக்கும்போது 380 என்றும், வைக்கப்பட்டது. இருக்கும்போது தகுதி பெற்றால் ரூ. 380 என்றும் ரூ. 380-க்குப் பிறகு டிகிரி தகுதி பெற்றால், அதற்கு மேலும் ரூ. 30 என்று வைத்தால் அவருக்கு மேல் உதவியாளராக இருக்கும் சீனியர் குறைந்த சம்பளம் வாங்கும் 'அனாமலி' எல்லாம் ஏற்படும். ஆகவே, பலமுறை ஆராய்ந்துதான் இவ்வாறு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மிகவும் தெளிவாக விளக்கம் அளித்தமைக்கு நன்றி. நிர்வாகப் பொறுப்பு உள்ள அலுவலகங்களில் பணிபுரிகின்றவர்கள் எம்.பி.ஏ., பி.காம், எம்.காம். பட்டம் பெற்றிருந்தால், அவர்களுக்கு வழங்கப்படுகிறது. சீனியர் ஜூனியரைவிட குறைந்த அளவு ஊதியம் பெற்றால், அதைச் சமன செய்யும் அளவுக்கு அரசு இதை மறுபரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வேலைக்கு வருபவர்கள் வேலையைச் சிறப்பாகச் செய்ய, சிறப்புத் தகுதி அவர்களிடத்திலே இருப்பது நல்லது என்ற அளவிலும், இப்போது இருப்பவர்களுக்கு அந்தத் தகுதிகள் இல்லாமல் இருக்கிறது என்று முடிவுக்கு நாம் வந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று பரிசீலிக்கலாம். இப்போது இந்தப் பதவிக்கு எஸ். எஸ். எல். சி. போதும் என்று வைத்திருக்கிறோம். அந்த அடிப்படையில் தான் இப்போது காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எஸ.எஸ்.எல்.சி. படித்தவர்களைவிட, பட்டதாரிகளும் இருக்கலாம் என்ற அளவிலேதான் இப்போது இப்படி வைத்திருக்கிறோம். எம்.பி.ஏ., பி.காம். எம்.காம். படித்தவர்கள் இருப்பதன் மூலம்தான் அந்தக் குறிப்பிட்ட பணி செய்ய முடியும் என்ற நிலை இல்லை. அப்படி ஒரு நிலை வந்தால், அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

சென்னையில் பெரிய மீன் காட்சிசாலை.

*12. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையிலும் சிறுவர்களுக்குக் கல்விப் பயன் அளிக்கும் வகையிலும் சென்னையில் பெரிய அளவில் மீன் காட்சி சாலை (Aquarium) அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மீன் காட்சிசாலை மிகவும் சிறப்பான அளவில் பம்பாய், திருவனந்தபுரம் போன்ற இடங்களில் அமைக்கப்பட்டு, சிறுவர்களுக்கு மட்டுமல்லாமல் எல்லோருக்கும் பயனுள்ளதாக இருக்கிறது. அதுபோன்றதொரு அமைப்பு சென்னையிலே இருக்க வேண்டும் என்பது நம்முடைய விருப்பம். இதுபற்றிய செயற்குறிப்பு இப்போது இல்லா விட்டாலும், இனிமேலாவது இப்படிப்பட்ட மீன் காட்சிசாலையை சென்னை யிலே அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சென்னைக் கடற்கரையில் இப்போது ஒரு மீன் காட்சிசாலை இருக்கிறது. அது சாதாரணமான அளவில்தான் இப்போது இருக்கிறது. மிகவும் அண்மையில் 1 லட்சத்து 18 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் அது ஓரளவுக்கு மேம்படுத்தப் பட்டிருக்கிறது. மிகப் பெரிய அளவில் இராமேஸ்வரத்திற்குப் பக்கத்தில் இருக்கும் தீவுகளில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் அளவில் மீன் காட்சி சாலை அமைக்கலாம் என்ற பரிசீலனை இருக்கிறது. அதற்கான செயற் குறிப்பும் பரிசீலனையில் இருக்கிறது. சென்னையில் 'ஓஷ்யனோரியம்' அமைக்க வேண்டும் என்ற அடிப்படையில் மீன் வகைகள் மட்டுமல்லாமல், கடலில் இருக்கும் உயிர் வாழ்வன அனைத்தையும் காட்சியில் வைக்க வேண்டும் என்ற அளவிலே கருத்துரு இருக்கிறது. அதற்கு 75—80 லட்சம் ரூபாய் செலவாகும். இப்போது சென்னைக் கடற்கரையை மேம்பாடு செய்வதற்காக





திட்டங்களை வகுக்க ஒரு தனிக் குழு (ஸ்பெஷல் கமிட்டி) நியமிக்கப் பட்டிருக்கிறது. மேற்படி திட்டத்திற்கான செயற்குறிப்பை அந்த சப்-கமிட்டி பரிசீலிக்கட்டும் என்று அவர்களிடம் விட்டிருக்கிறோம். அந்தக் கமிட்டி பரிசீலித்து வருகிறது. மீதித் திட்டங்கள் வகுக்கப்படும்போது, அந்த 'ஓஷ்யனோரியம்' அமைக்கப்படும்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோன்ற, சிறுவர்கள் மட்டுமல்ல பொதுமக்கள் அனைவரும் காணவும், கடல்வாழ் உயிரினங்களைப் பற்றிச் சரிவரப் புரிந்து கொள்ளவும் வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU G. VASANTHA PAI : Sir, talking about Oceanorium in the Governor's Address, there was a suggestion that near Tranquebar–Poompuhar, there were ship-wrecks and all that. Will the Hon. Minister consider the feasibility of having a Sea-viewing Boat with glass bottom as a part of Oceanorium so that we may be able to see things under the sea. It could be in a place like Poompuhar and the aquarium could be located in a place like the crocodile farm, instead of having it in the sea-shore which could be kept clean.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற யோசனை நல்ல யோசனை. அதற்கான செயற்குறிப்பு பற்றி முழுவதும் ஆராய்ந்து முடிந்த பிறகு, இதையும் பரிசீலித்து எந்த இடத்திலே அதைச் சிறப்பாக வைக்கலாம் என்று யோசிக்கலாம்.

(முற்பகல் 9.40)

திரு. ம. சங்கரலிங்கம் : தற்போது தூத்துக்குடியில் மீன்வளக் கல்லூரி ஒன்று செயல்பட்டு வருகிறது. அண்மையில் மத்திய அரசு ரூ. 2.62 கோடி ரூபாய் செலவில் கன்னியாகுமரியிலிருந்து 2 மைல் தொலைவிலுள்ள சின்ன முட்டம் என்னுமிடத்தை மீன்பிடி துறைமுகமாக அமைக்க அனுமதியளித் திருப்பதாகச் செய்தித்தாள்களில் பார்த்தேன். எனவே இக்கல்லூரி இருக்கும் தூத்துக்குடியிலோ அல்லது மீன்பிடி துறைமுகமாக அமைக்கப்படும் சின்ன முட்டத்திலோ மத்திய அரசின் உதவியையும் பெற்று பெரியதொரு மீன் காட்சிசாலையை அமைக்க அரசு முன்வருமா ? மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பை அவர்கள் கிளாஸ் படகுகளில் போய் கடலுக்கடியில் ஆழ்ந்து பார்த்து மீன் இன வகைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்வதுபற்றிக் குறிப் பிட்டார்கள். அவ்வாறு 'டிரான்ஸ்பரண்ட் போட்' மட்டுமின்றி கடலுக்

குள்ளும் ஆழ்ந்து சென்று ஊடுருவிப் பார்க்கும் நீர்மூழ்கிப் படகு மூலம் கடலில் வாழும் மீன்களின் வாழ்க்கை முறையைப் புரிந்துகொள்ளும் அமைப்பு முறையையும் அரசு அமைக்க முன்வருமா? அதுமட்டுமல்லாமல், வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மூலம் மீன் வளர்ச்சிக்கு மத்திய அரசு நிதி ஒதுக்கி இருப்பதாகத் தெரிகிறது. இந்தத் தொகையையும் அரசு பயன் படுத்தி ஒரு "காம்ப்ரஹென்சிவ்" திட்டம் தயாரித்து மேற்சொன்ன வைகளை உருவாக்கிட அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முதலில் குறிப்பிட்டது இயற்கை வளம் பொருந்திய சுற்றுலாத் தலங்களில் சுற்றுலாப் பயணிகளை அதிகமான அளவுக்கு ஈர்க்கும் இத்தகைய காட்சி சாலைகளை அமைக்கலாம் என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் இராமேஸ்வரத்திற்குப் பக்கத்தில் ஒரு மீன் காட்சிக் கூடம் அமைப்பதைப்பற்றிக் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல், தூத்துக்குடியில் மீன்துறைக் கல்லூரி ஒன்று செயல்படுவதால், அங்கேயும் சிறிய அளவில் மீன் காட்சிச் சாலை ஒன்று இருக்கத்தான் செய்யும், வைக்கத்தான் போகிறோம். அது மீன்துறைக் கல்லூரிக்குப் பயனுடையதாக இருக்கும்.

இராமேஸ்வரம் தீவிற்குப் பக்கத்தில் இத்தகைய மீன் காட்சி சாலை அமைந்த பிறகு, அந்தத் திட்டம் எந்த அளவுக்குச் சிறப்பாகச் செயல் படுகிறது என்பதையும், அப்போதுள்ள வாய்ப்பு வசதிகளையும் பொறுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் "ஃபைபர் கிளாஸ்" மூலம், கண்ணாடி மூலம் பார்க்கிற முறையை மேலை நாடுகளில் வைத்திருப்பதைப்போல், ஏற்படுத்துவதுபற்றிப் பரிசீலிக்கலாம். எனவே இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்ட பிறகுதான் இதைப்பற்றி நாம் ஆலோசிக்க முடியும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தற்போது ஊட்டியில் மீன் காட்சிச் சாலை ஒன்று அமைக்கப்பட்டிருப்பதைப்போல் மாவட்டத் தலைநகர்கள் தோறும் மீன் காட்சிசாலைகளை அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முதலில் எங்கெங்கே சுற்றுலாப் பயணிகள் அதிக எண்ணிக்கையில் வருகிறார்களோ அங்கெல்லாம்



அமைத்துவிட்டால், அதற்குப் பிறகு பொருளாதார வசதியையும் மற்ற பிற நிலைமைகளையும் கருத்தில் கொண்டு இந்த யோசனை பரிசீலிக்கப்பட வேண்டும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சென்னையில் "கடல்வாழ் உயிரினங்கள் காட்சி நிலையம்" ஒன்று அமைப்பது பற்றிக் குறிப்பிட்டதை வரவேற்கிறேன். இது தொடர்பான ஆய்வு நிலையம் ஒன்று தென்னாற்காடு மாவட்டத்தில் பரங்கிப்பேட்டையில் அண்ணாமலை பல்கலைக் கழகக் கல்விப் பிரிவின் பகுதியாக அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலையத்தை இன்னமும் பெரிய அளவுக்கு கடல்வாழ் உயிரினங்கள் காட்சி நிலையம் போல் மேம்பாடு செய்து, பொதுமக்களும் அதை வந்து பார்த்துப் பயன் பெறும் அளவுக்கு மாற்றியமைப்பதுபற்றி அரசு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தோடு தொடர்பு கொண்டு முயற்சிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நீண்ட காலமாக பரங்கிப் பேட்டைக்கு அருகில் அண்ணாமலை பல்கலைக் கழகத்தைச் சார்ந்த மீன் ஆய்வு நிலையம் செயல்பட்டுக்கொண்டு வருகிறது. அது டாக்டர் பட்டம் பெறும் மாணவர்களுக்கும் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களுக்கும் உதவும் வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

மாவட்டங்கள்தோறும் ஒரு மீன் காட்சிச்சாலை அமைப்பது என்ற திட்டம் வருகிறபோது தென்னாற்காடு மாவட்டத்திற்கான மீன் காட்சிச்சாலையை அங்கே வைப்பது பொருத்தமாக இருக்கும். ஆனால் பொதுமக்களும் வந்து பார்வையிட்டு பயன்பெறும் வகையில் அதை மாற்றியமைப்பது பற்றி, அதற்குப் பல்கலைக் கழகம் எந்த அளவுக்கு உறுதுணையாக இருக்கும் என்று தெரியவில்லை. எனவே ஆராய்ச்சிக்குப் பயன்படும் [illegible] பொதுமக்களின் பார்வைக்குப் பயன்படும் வகையில் அமைக்கப் [illegible] ஏற்படும்போது, அரசு இந்தக் கருத்தைப் [illegible]

## Polytechnic Teachers' Association

* 13. Q.—THIRU K. MEENAKSHISUNDARAM AND THIRU M. SANKARALINGAM:

Will the Hon. the Minister for Education, be pleased to state:

(a) whether any representation was made by the Polytechnic Teachers' Association for (i) the regularisation of all teaching staff (ii) parity of pay scales with their counterparts in Engineering and Arts Colleges and (iii) representation for their Association in the State Board of Technical Education; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) (i) தற்காலிகப் பல்தொழில் பயிற்சி ஆசிரியர்களின் [illegible] வரன்முறைப் படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

(ii) பல்தொழில் பயிற்சி ஆசிரியர்களின் பல்கலைக் கழக மான்யக் குழுவின் திருத்திய சம்பள விகிதங்கள் மேலும் அரசாணை, நிலை, 1626, கல்வி, நாள் 30—3—1979 வாயிலாக மாற்றப்பட்டுள்ளது.

(iii) மாநிலத் தொழில் நுட்பக் கல்வி வாரியத்தில் பல்தொழில் பயிற்சி பயிலக ஆசிரியர்களின் பிரதிநிதி இடம் பெறும் கருத்துரு அக்குழுவின் அடுத்த கூட்டத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

### நாற்றங்கால் பள்ளிகளை அங்கீகரித்தல்.

* 14. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 3 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் படிக்கும் நாற்றங்கால் பள்ளிகளை (Nursery Schools) அங்கீகாரம் செய்யும் உத்தேசம் ஏதும் அரசுக்கு உள்ளதா ?

(இ) ஆம் எனில், அப்பள்ளிகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களையே [illegible] வேண்டும் என்றும் அவர்களுக்குரிய [illegible] என்றும் அரசு வற்புறுத்துமா ?





மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (இ) இப் பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அண்மையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 4000 நர்சரிப் பள்ளிகளைப் புதிதாக உருவாக்க இருப்பதாகப் பேசியதைப் பார்த்தேன். அந்தச் செய்தி உண்மைதானா? அவ்வாறு நர்சரிப் பள்ளிகள் உருவாக்கப்படும்போது, தற்போது ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் செயல்படுகின்ற "பாலவாடி" பள்ளிகளை நர்சரிப் பள்ளிகளாக மாற்றியமைத்து அங்கே பணியாற்றும் ஆசிரியர்களுக்கு, ஆசிரியர்களுக்கான குறுகிய காலப் பயிற்சியை அளித்து நியமிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஊராட்சி ஒன்றியங்களில் செயல்பட்டுவரும் குழந்தைகள் பாதுகாப்பு நிலையங்களை நர்சரி பள்ளிகளாக மாற்றுகிற யோசனை அரசுக்கு இருக்கிறது. அதன் மீதான பரிசீலனை முடிந்த பிறகு, இதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆசிரியர்கள், பாடத்திட்டம் போன்ற மற்றவைகளைப்பற்றி ஆராய்ந்து சொல்ல ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் அறிக்கையைப் பரிசீலித்து பின்னர் உரிய முடிவுகள் எடுக்கப்படும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தற்போது பல நர்சரிப் பள்ளிகள் போதுமான சுகாதார வசதிகள் இல்லாமல் பல்வேறு முறைகேடுகளோடு நடத்தப்பட்டு வருகின்றன. இவைகளையெல்லாம் கட்டுப்படுத்தும் வகையில் அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது? அது மட்டுமல்லாமல், நர்சரிப் பள்ளிகளில் தமிழே கற்றுத் தரப்படாமல் ஆங்கிலம் மட்டுமே குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கும் நிலை தமிழகத்தில் இருக்கிறதே, அதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை மேற்கொள்ள இருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசே நர்சரிப் பள்ளிகளைத் [illegible]போது, ஆங்கிலம் மட்டுமே சொல்லிக் கொடுக்கப்படும் நிலை [illegible]ம். நர்சரிப் பள்ளிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு [illegible] பெறப்பட்டிருக்கிறது. அதில் சொல்லப்பட்டிருக்கும் பரிந்துரை[illegible] அடிப்படையில் இத்தகைய நிலைமைகளைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

திரு. செ. [illegible] : நர்சரிப் பள்ளிகள் என்பவை முழுக்க முழுக்க [illegible] நடத்தப்படுகின்றன. ஆகவே இந்த நர்சரிப் பள்ளி[illegible] [illegible]களை கல்வித் துறையே நன்கு

அறியும். அங்கீகரிக்கப்பட்ட நர்சரிப் பள்ளிகளில் உள்ள நிலைமைகளை நன்கு அறிந்த கல்வித் துறை, தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் நர்சரிப் பள்ளிகளைத் தடை செய்து முற்றிலுமாக அரசின் சார்பிலேயே அவற்றையும் மேற்கொண்டு நடத்தும் கொள்கை அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் நர்சரிப் பள்ளிகளைப் முழுவதுமாகத் தடை செய்வது என்பது முடியாது. அத்தகைய அதிகாரம் அரசுக்கு இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினரே நன்கு அறிவார். மைனாரிட்டிகளின் உரிமைகள் என்கிற வகையில் அவர்கள் நர்சரிப் பள்ளிகளை நடத்திக் கொண்டுதான் இருப்பார்கள். எனவே அவர்களை முழுவதுமாகக் கட்டுப்படுத்துவது என்றில்லாமல், அவர்களுடைய ஒத்துழைப்போடு நர்சரிப் பள்ளிகளில் உள்ள குறைபாடுகளைப் போக்க சீர்செய்யும் முறையில் அரசு நடவடிக்கை எடுக்கும். இது எல்லோருக்கும் பயனுள்ளதாகவும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : குழந்தைகள் வளர்ச்சிபற்றி ஆராய்ந்த வல்லுநர்கள் 5 வயதிற்கு முன்னால் குழந்தைகளுக்குக் கல்வி கற்பித்து அவர்களின் வளர்ச்சியைக் குன்றச் செய்யக்கூடாது என்று கருத்து தெரிவித்திருக்கிறார்கள். வீடுகளில் தங்களின் குழந்தைகளை வைத்துப் பாதுகாப்பது தொல்லையாக இருப்பதால், அவர்களை எப்படியாவது நர்சரிப் பள்ளிகளில் சேர்த்து விடும் பழக்கம் இப்போது இருந்து வருகிறது. அவ்வாறு நர்சரிப் பள்ளிகளில் அவர்களைச் சேர்ப்பதன் நோக்கம் அங்கே சில நல்ல பழக்க வழக்கங்களை அவர்கள் கற்றுக் கொள்வதற்காகத் தானே தவிர, கல்வி கற்றுக் கொடுப்பதற்காக அல்ல. ஆனால் இப்போது அதற்கு நேர்மாறான நிலைமைதான் இருந்து வருகிறது. நர்சரிப் பள்ளிகள் என்பவை மாதம் 30 ரூபாய் பெற்றுக் கொண்டு மாணவர்களைச் சிறையில் அடைத்து வைக்கும் இடங்களாக இருக்கின்றன. எனவே 5 வயதுக்கு முன்னால், பெற்றோர்களுக்கு உதவக்கூடிய வகையில் " பால்வாடிகள் " கிராமங்களில் மட்டுமன்றி நகரங்களிலும் ஏற்படுத்தி, குழந்தைகளைப் பராமரிக்கிற முறையை உருவாக்கினால் நல்லது. எனவே இதை அரசு பரிசீலிக்குமா, நர்சரிகள் என்பவைகளை மாற்றி குழந்தைகள் பராமரிப்பு நிலையம் என்று மாற்றியமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : எனக்குத் தெரிந்த வரை, கல்வித் துறை நிபுணர்கள், குழந்தைகளைப்பற்றி ஆய்வு செய்தவர்கள், அனைவருமே 0 முதல் 9 வயதிற்குள் ஒரு குழந்தையின் அறிவு வளர்ச்சி அதிகமாக



இருக்கிறதென்றும், 3 முதல் 7 வயதிற்குள் ஒரு மனிதனுடைய அறிவு வளர்ச்சியில் 40 சதவிதம் ஏற்படுகிறது என்றும் தெரிவித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில்தான் நர்சரிப் பள்ளிகளும் நாட்டில் ஒரு நல்ல பணியைச் செய்து வருவதாகக் கருதுகிறேன். இதன் காரணமாகவே, அரசும் நர்சரிப் பள்ளிகளை நடத்த முன்வந்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல், சமுதாயத்தில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைப் போக்குவதற்கு பிற்காலத்தில் நடவடிக்கை எடுப்பதைவிட ஆரம்ப காலத்திலேயே அறிவு வளர்ச்சியில் சமத்துவத்தை ஏற்படுத்துவதன் மூலம் இதற்கு ஒரு பரிகாரம் காண முடியும் என்று நம்புகிறோம். நர்சரிப் பள்ளிகளில் சாதாரண வீட்டுக் குழந்தைகளுக்கும் மற்ற வீட்டுக் குழந்தைகளைப் போல் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தால், பிற்காலத்தில் அவர்களிடையே வித்தியாசம் குறைவாக இருக்கும் என்று இதில் ஈடுபட்டிருக்கிறோம்.

குழந்தைகள் பாதுகாப்பு என்பது கல்விக் கூறு குறைவாக உள்ள திட்டம். நர்சரிப் பள்ளிகள் என்பது கல்விக் கூறு அதிகமாக உள்ள திட்டம். இப்போதிருக்கிற நிலையில் கல்விக் கூறு அதிகமாக இருக்கும்படி இருக்கும். அதில் குழந்தைகளுக்கான விளையாட்டுகள், ஓய்வு, உணவு தருதல் போன்ற நிலைமைகள் நிச்சயமாக இருக்கும்.

(முற்பகல் 9-50)

திரு. க. மீனாட்சிசுந்தரம் : ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள பால்வாடி பள்ளிகளை நர்சரிப் பள்ளிகளாக ஏற்றுக்கொள்கிற திட்டம் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்காக நான் அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அந்தப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு வேலை இழப்பு ஏற்படாமலிருக்க, அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்து அவ்வாசிரியர்களுக்குப் பணி வாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் உரிய ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதைப்பற்றி குழு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அந்தப் பரிசீலனையின் அடிப்படையில்தான் இப்போது பணிபுரிந்து கொண்டிருக்கிறவர்களின் நிலையைப் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. இப்போது இருக்கின்றவர்களுடைய நிலையை அனுதாபத்தோடு பரிசீலிப்போம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தனியார் பள்ளிகளில் ஆசிரியரல்லாத ஊழியர்களுக்கு தேர்வுநிலை, சிறப்புநிலை.

* 15. வினா—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியரல்லாத ஊழியர்களுக்கு தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியரல்லாத ஊழியர்களுக்கு தேர்வு நிலை வழங்கப்பட்ட நாளில் இருந்து, தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியரல்லாத ஊழியர்களுக்கும் வழங்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (இ) இது பற்றி அரசாணை நிலை எண் 364, கல்வி, தேதி 28—2—1981-ல் தக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## தனியார் உயர்நிலைப் பள்ளிகளில் அலுவலக ஊழியர்களுக்கு தேர்வுநிலை.

* 16. வினா—திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தனியார் உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் அலுவலக ஊழியர்களுக்கு தேர்வுநிலை வழங்கப்பட வேண்டுமென தனியார் பள்ளிகள் ஆசிரியரல்லாத ஊழியர் சங்கத்திடமிருந்து அரசுக்கு 28—6—1980 நாள் அளவில் கோரிக்கை ஏதும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுத்துள்ள முடிவு என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) தனியார் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் இளநிலை உதவியாளர்கள் 10 ஆண்டுகள் பணிபுரிந்திருந்தால் தேர்வு நிலை வழங்கப்படும். இவர்கள் தேர்வுநிலை பெற துறைத் தேர்வுகளில் தேர்வுபெற வேண்டியதில்லை என 28—2—1981-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.







திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிற ஆணையில் தேர்வு நிலை குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர, சிறப்பு நிலையைப்பற்றிக் குறிப்பிடப்படவில்லை. சிறப்பு நிலை வழங்க அரசு ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுபற்றிய செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. செ. முத்துசாமி : சிறப்பு நிலை, தேர்வு நிலை என்பது கூடுதல் பணிப் பொறுப்பு இல்லாதது என்று அரசு கூறுகிறது. ஏதாவது பதவி உயர்வு வரும்போது, பதவி உயர்வு வேண்டாம் என்று சொல்வார்களே யானால், அப்படிப்பட்டவர்களுக்கு சிறப்பு நிலை, தேர்வு நிலை கொடுக்கக் கூடாது என்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. இது முரணானதாக இருக்கிறது. ஆகவே அதை அரசு மறுபரிசீலனை செய்யுமா? அந்த உத்தரவினை நீக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

திரு. பா. ரா. தாமஸ் : இருபது ஆண்டுகள் பணி முடித்திருந்தால், சிறப்பு நிலையும், தேர்வு நிலையும் எல்லாப் பிரிவினர்களுக்கும் வழங்க அரசு உத்தரவிட்டிருக்கிறது. ஆனால், இந்தப் பிரிவினருக்கு மட்டும் அத்தகைய சிறப்பு நிலை, தேர்வு நிலை அறிவிக்காத காரணத்தால், அவர்கள் அனுபவிக்க முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே 20 ஆண்டுகள் பணி முடித்திருந்தால், அவர்களும் சிறப்பு நிலை, தேர்வு நிலை பெறலாம் என்ற வகையில் ஆணை பிறப்பிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இது குறித்து பரிசீலித்துத்தான் [illegible] போட்டிருக்கிறோம். ஆகவே மேற்கொண்டு இதிலே எந்தவிதமான [illegible] மாறுதலும் செய்வதற்கில்லை.

## பக்கிங்காம் கால்வாய்.

*17. வினா—திரு. வி. வி. வி. ஆனந்தம் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—.

பக்கிங்காம் கால்வாயை வேதாரண்யம் வரை அகலப்படுத்தியும் ஆழப் படுத்தியும் படகுப் போக்குவரத்துக்குப் பயன்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தமிழ் நாட்டில் பக்கிங்காம் கால் வாய், தற்போது தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள மரக்காணம் வரையில்தான் அமைந்து உள்ளது. இதனை வேதாரண்யம் வரை நீட்டிக்கும் திட்டம் இல்லை. பக்கிங்காம் கால்வாயைச் சீரமைத்து படகுப் போக்குவரத்திற்கு மேலும் நன்கு பயன்படுத்துவதற்கான திட்டம் மாநில அரசின் ஆய்வில் உள்ளது.

**திரு. வி. வி. வி. ஆனந்தம் :** ஆந்திர மாநிலத்தில் பக்கிங்காம் கால்வாயில் சரக்குப் போக்குவரத்து பெரும்பாலும் நடைபெறுகிறது. இப்போது டீசல் போன்ற எரிபொருள்களுக்கு பற்றாக்குறை இருக்கிறது. மேலும் விலையும் அதிகமாக இருக்கிறது. ஆகவே லாரி போக்குவரத்து நடத்துவதற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. இரயில்வே வேகன்களும் கிடைப்பதில்லை. ஆகவே செலவு இல்லாத படகுப் போக்குவரத்திற்கு ஏற்பாடு செய்தால், தமிழகத்தில் வேதாரண்யத்திலிருந்து சென்னை வரையில் இந்தப் பாதையின் மூலமாக போக்குவரத்து நடைபெறும். இது மிகவும் வரப்பிரசாதமாக அமையும். இந்தப் போக்குவரத்தின் மூலம் விறகு, உப்பு, விக்கோ கரி போன்றவற்றைக் கொண்டு வரலாம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் கேள்வியாகக் கேட்க வேண்டும்.

**திரு. வி. வி. வி. ஆனந்தம் :** ஆகவே இதைப் பரிசீலிக்கும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** பக்கிங்காம் கால்வாயை உள் நாட்டு நீர்வழிப் போக்குவரத்து மார்க்கமாக பயன்படுத்த வேண்டும் என்பதிலே அரசுக்கு மிகுந்த அக்கறை இருக்கிறது. ஆனால், அதை மரக்காணத்திற்கு அப்பால் வேதாரண்யம் வரை நீட்டிப்பதற்கான திட்டம் தீட்டப்படவில்லை. ஏனெனில் ஆந்திர மாநிலத்தில் உள்ள கிருஷ்ணா மாவட்டத்தில் [illegible]





என்ற இடத்திலிருந்து தமிழ் நாட்டில் தென்னாற்காடு மாவட்டம் மரக்காணம் வரை இருக்கிறது. இதன் மொத்த தூரம் 418 கிலோமீட்டர். தமிழ் நாட்டில் உள்ள நீளம் 161 கிலோ மீட்டர். இதை மேம்பாடு செய்து இங்கே போக்கு வரத்திற்குப் பயன்படுத்த வேண்டியது அவசியம் என்பதால், அதைச் செய்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, தெற்கு பக்கிங்காம் கால்வாய் பகுதியில் உப்பு உற்பத்தித் தொழிற்சாலைகள் அதிகமாக இருப்பதால், அதிகமான கவனம் செலுத்த வேண்டுமென்பதில் அரசு தீவிரமாக முயற்சி மேற்கொண்டிருக்கிறது.

**திரு. சி. இராமலிங்கம் :** பக்கிங்காம் கால்வாயை ஆரம்பித்தபோது, வெள்ளைக்காரர்கள் காக்கிநாடாவிலிருந்து கடலூர் வரையில் வெட்டினார்கள். மரக்காணம் வரையில்தான் இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தவறானதொரு தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். சமீபத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட ஆலப்பாக்கத்தில் அடிக்கல் நாட்டும்போது, " பக்கிங்காம் கால்வாயின் மேல் மேம்பாலம் " என்றுதான் அறிவிக்கப்பட்டது. மாண்புமிகு தலைவர் அவர்களுக்கேகூட தெரியும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** எனக்கு நிரம்ப தெரியும். ஆனால் வாய் திறக்கக் கூடாது.

**திரு. சி. இராமலிங்கம் :** ஆகவே மீண்டும் தூர் எடுத்து, காக்கிநாடாவி லிருந்து அல்லது சென்னையிலிருந்து கடலூர் வரையில் போக்குவரத்திற்குப் பயன்படுத்த முடியும். அதற்குப் பிறகு வேதாரண்யம் வரையில் போகலாம். இப்படி தவறான தகவலைக் கொடுத்த அதிகாரிகள்மீது அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு உறுப்பினர், "தென்னாற்காடு மாவட்டத்தில் மரக்காணம் வரை அமைக்கப்பட்டுள்ளது" என்கிற கருத்து தவறு என்று சொல்லுகிறார்கள். அது தவறாக இருக்கு மானால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது அரசு நிச்சயமாக நடவடிக்கையை மேற்கொள்ளும்.

இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில், அதை உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து மார்க்கமாக மாற்ற கிட்டத்தட்ட ஐந்தாறு ஆண்டுகளாக முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். இவற்றை விரைவாக முடிக்க அரசு [illegible] நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திரு. க. இராமமூர்த்தி : பக்கிங்காம் கால்வாயின் முக்கியத்துவத்தை உணர்ந்து இதுபற்றி எப்போது கேள்வி கேட்டாலும் "சீரமைப்புப் பணி பரிசீலனையில் இருக்கிறது, நடவடிக்கை எடுக்கப்படுகிறது" என்று பதில் வருகிறது. இதிலே இருக்கின்ற உண்மையான சிக்கல் என்ன ? சீரமைப்புப் பணி தொடர்பாக இதுவரையில் ஏதாவது செலவு செய்யப்பட்டிருக்கிறதா ? எவ்வளவு செலவு செய்யப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கேள்வி கேட்க வேண்டும் என்பதற்காகத்தான் முதலிலே பதில் சொல்கின்றபோது விளக்கமாகச் சொல்லாமல் சுருக்கமாகச் சொன்னேன். தமிழ் நாட்டு எல்லைக்குள் உள்ள 161 கி.மீ. தூரமுள்ள பக்கிங்காம் கால்வாயை உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து மார்க்கமாக மாற்ற 1976 ஆம் ஆண்டிலேயே 560 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டம் தயார் செய்து அதை மத்திய அரசின் ஒப்புதலுக்காகவும், உதவிக்காகவும் அனுப்பினோம். இத்திட்டத்திற்கு இன்று வரை மத்திய அரசு உதவி செய்ய முன்வரவில்லை.

1979 ஆம் ஆண்டு மீண்டும் கொஞ்சம் அதிகமான, கடுமையான முயற்சிகளை மேற்கொண்டதன் விளைவாக மத்திய அரசினர் சமாதானத்திற்கு வந்தார்கள். அதாவது மத்திய அரசும், மாநில அரசும் சம அளவிலே நிதி பங்கீடு செய்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம் என்று சொன்னார்கள். இத்திட்டத்தை ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்க வேண்டுமென்று நாம் வலியுறுத்திய போது, "நிதிநிலை சரியில்லை, பிறகு பார்த்துக்கொள்ளலாம்" என்று மத்திய அரசு சொல்லிவிட்டது. பிறகு மத்திய அரசு உதவி செய்தாலும், செய்யாவிட்டாலும், மாநில அரசே நிறைவேற்றலாம் என்று முடிவு எடுத்து, பாசனத் தலைமைப் பொறியாளருக்கு ஓர் உத்தரவை அனுப்பியிருக்கிறோம். இதிலே இரண்டு இருக்கின்றன. ஒன்று வடக்கு பக்கிங்காம் கால்வாய், இரண்டாவது தெற்கு பக்கிங்காம் கால்வாய். வடக்கு பக்கிங்காம் கால்வாயைப் பொறுத்த வரையில், 210 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு மதிப்பீட்டுத் திட்டமும், தெற்குப் பக்கிங்காம் கால்வாயைப் பொறுத்தவரையில் 190 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டத்தையும் தயாரிக்க வேண்டுமென்று சொன்னோம். கிட்டத்தட்ட 400 இலட்சம் ரூபாய்க்கு வருகிறது. இதை நிறைவேற்றும்போது, 400 இலட்சம் ரூபாய் அளவிற்கு வரலாம். இதுதான் இப்போதுள்ள நிலைமை; இது வரையில் நடந்த கடிதப் போக்குவரத்து, மாநாட்டில் பேசியது, இந்த குழுவுடன் விவாதம் நடத்தியது ஆகியவற்றுக்கு ஆன செலவைப் பார்த்தால்,





அதைக் கொண்டு 10 கி.மீ. தூரத்திற்கு மேம்பாடு செய்திருக்கலாம் என்று தெரிகின்றது. ஆகவே அப்படி காத்திருந்து விளக்கிக் கொண்டிராமல், மாநில அரசே செய்துவிடலாம் என்று கருதி, பாசனத் தலைமைப் பொறியாளரைக் கலந்து பேசி நடத்தலாம் என்ற முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறோம். அந்த முடிவு எடுத்ததற்குப் பிறகு, இந்தத் திட்டத்தை நாம் விரைவிலே நிறைவேற்றலாம்.

THIRU G. VASANTHA PAI : Sir, since the Hon. Minister has expressed certain difficulties about finance, may I request the Hon. Minister at least to clear the silt from the Buckingham canal down to Mahabalipuram, because Buckingham Canal is proverbial for peculiar stink which has been existing for the last 40 years?

(முற்பகல் 10-00)

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கருத்தை அரசு ஏற்றுக் கொள்கிறது. கூடுமானவரை இந்தத் திட்டத்தை ஒட்டுமொத்தமாக நிறைவேற்ற வேண்டுமென்று கருதினோம். இப்போது உடனடியாகச் செய்ய வேண்டுமென்பதைப் பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : பாரதியார், 'தோணிகள் ஓட்டி மகிழ்ந்திடுவோம்' என்று பாடியிருப்பதைப் போல, இந்த பாரதியார் நூற்றாண்டு முன்னுரிமையளித்து செய்ய வேண்டும். அது உறுப்பினர்களுக்குப் பயன் அளிக்கும். இந்த அரசு கவனிக்குமா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பாரதியார் அவர்கள் காதலருக்காகப் பாடினார், வடக்குப் பகுதியிலே பஞ்ச நதிப் பகுதியை வைத்துப் பாடினார்.

*Rebuilding Kodaganar Dam*

*18. Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Irrigation be pleased to state—

(a) whether there is any proposal with the Government to rebuild the Kodaganar Dam in Vedasandur Taluk, Madurai District; and

(b) if so, the stage at which the matter now stands?

[1982 பிப்ரவரி 4

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: (அ) மற்றும் (இ) குடகனாறு அணையை மீண்டும் கட்ட அரசிற்கு ஒரு செயற்குறிப்பைத் தலைமைப் பொறியாளர் (பாசனம்) அனுப்பியுள்ளார். இது பரிசீலனையில் உள்ளது.

திரு. பா. ரா. தாமஸ்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அநேக ஆண்டுகளாக அந்த அணையானது பயனற்ற நிலையில் இருக்கிறது. ஏற்கெனவே அந்த நீர்ப்பிடிப்புப் பகுதி நிலச் சொந்தக்காரர்கள் பணத்தையெல்லாம் கொடுத்துவிட்டதாகத் தெரிகிறது. இந்த நிலையிலே காலம் கடந்து போவதால், இப்போதுள்ள பகுதிகளும் பழுதடையக்கூடிய நிலை இருக்கிறது. எவ்வளவு துரிதமாக அதை அரசு நிறைவேற்றும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த குடகனாறு ஏன் உடைந்தது என்ற கருத்தை அறிய குழு ஒன்று நியமிக்கப்பட்டது. மாண்புமிகு அங்கத்தினர் திரு. நீலநாராயணன் அவர்கள்கூட சிரிக்கிறார்கள். யார் மீதும் குற்றம் சாட்டும் போக்கில் நான் சொல்லவில்லை. ஒரு கால்வாய் செயல்பட ஆரம்பித்து முதன்முறையாக உடைந்துவிட்டது. அதற்குக் காரணம் என்ன என்று தெரிந்துகொண்டால், அது ஒரு படிப்பினையாக இருக்கும் என்ற அளவில் அந்தக் குழுவைப் போட்டோம். அந்தக் குழுவினர் பரிந்துரைப்படி, கிட்டத்தட்ட 90 ஆயிரம் கன அடி நீர் ஏக காலத்தில் போகும் அளவில் அதன் வடிவு, அமைப்பு இருக்க வேண்டும். அதன் மேல்பகுதியிலிருந்து வரக்கூடிய சிற்றாறுகளின் நீரால்தான் குடகனாறுக்குத் தண்ணீர் வந்து சேருகிறது. எனவே திடீரென்று வெள்ளம் வருவதைத் தவிர்க்க முடியாது. இந்த வெள்ள ஓட்டத்தின் வேகத்தைப் பார்த்தால், 90 ஆயிரம் கன அடி தண்ணீர் ஏககாலத்தில் வரும்போது அதைத் தாங்கும் அளவுக்கு அதன் வடிவம் இருக்க வேண்டும் என்ற கருத்து சொல்லப்படுகிறது. தலைமைப் பொறியாளர் அவர்கள் ரூ. 14 கோடி அளவுக்குச் செலவு செய்தால்தான், அதை நிறைவேற்ற முடியும் என்று சொல்கிறார்கள். ரூ. 14 கோடி அளவுக்குச் செலவு செய்தால், 5 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்குத்தான், அது பயன்படும். 'காஸ்ட் பெனிபிட் ரேஷியோ' என்று பார்க்கிறோம் இருந்தாலும் வேடசந்தூர் பகுதி பின்தங்கிய பகுதியாக இருப்பதால், இப்போது விகிதாச்சாரத்தை, வருகின்ற லாப நஷ்டத்தைப் பற்றிப் பார்க்காமல், பின்தங்கிய பகுதிகளுக்கு நாம் வாய்ப்புக்களைக் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையிலே, அரசு அதைச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் இருக்கிறது. விரைவிலே முடிவெடுக்கப்படும்.



1982 பிப்ரவரி 4]

விடு கட்ட நன்செய் நிலங்களைக் கையகப்படுத்துதல்.

*19 வினா—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 26—2—1981-ல் சட்டமன்ற மேலவையில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் நன்செய் நிலங்களை விடு கட்டப் பயன்படுத்தக் கூடாது என்று அறிவித்த கொள்கைக்கு மாறாக கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், தாழக்குடி கிராமத்தில் நீர்வளம் மிக்க இருபோக நன்செய் நிலங்களை, வீடு கட்டுவதற்காக அரசு கையகப்படுத்தும் முயற்சியை நிறுத்த வேண்டுமென்று அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அரசு அதுபற்றி எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ம. சங்கரலிங்கம்: கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை தாலுக்கா, தாழக்குடி என்ற ஊரில் இருக்கும் நிலச் சொந்தக்காரர் முன்னாள் தோவாளை ஊராட்சி மன்றத் தலைவர் ஏகாம்பரம் அவர்கள் அரசுக்கு, முதலமைச்சர் அவர்களுக்கு, ஒரு மனு அனுப்பியிருக்கிறார்கள். அதனுடைய நகலைக்கூட என்னிடம் தந்திருக்கிறார்கள். சட்டமன்ற மேலவையில் 26—2—1981-ல்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'நஞ்சை நிலங்களை வீடு கட்டப் பயன்படுத்தக்கூடாது' என்று அறிவித்திருக்கிறார்கள். அது செய்தித்தாள்களில் வந்திருக்கிறது. அதே செய்தித்தாளினை மனுவுடன் இணைத்து முதலமைச்சர் அவர்களுக்கு முறையீடு செய்திருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அப்படி இல்லை என்று சொன்னால், அவருக்குத் தவறான தகவல் தரப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். அதைப்பற்றி அரசு மறு பரிசீலனை செய்து வேண்டிய ஆணைகளைப் பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவர் அவர்களே, 26—2—1981 அன்று சட்டமன்ற மேலவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசி[illegible] கொள்கையை வைத்திருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கக்கூடிய இந்தக் குறிப்பிட்ட நிலமானது கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை தாலுக்கா, தாழக்குடி கிராமத்தில் 1980-ஆம் ஆண்டு தனி தாசில்தாரால் மேற்குறிப்பிட்ட வழக்கில் விசாரணை செய்யப்பட்டு 17—11—1980-ல் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு

உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கக்கூடிய கருத்தின் அடிப்படையில் சொல்வதென்றால், அந்த நில உரிமையாளர் அவர்கள், மறுப்பு தெரிவித்திருக்கக்கூடிய நிலையில், அதற்கான இழப்பீட்டினைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தகவல் தந்திருக்கிறார்கள். ஆயினும், உரிமையாளர் அந்த முறையீடு செய்திருக்கிறார். அந்த முறையீட்டின்படி, அதுபற்றி அரசு பரிசீலனை செய்யுமா? அவர் மறுப்பு தெரிவித்திருக்கக்கூடிய நிலையில்தான், அந்தப் பணத்தைப் பெற்றிருக்கிறார்கள். எனவே, அவருடைய வேண்டுகோள் மறுபடியும் பரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கக்கூடிய அந்த நிலையைப் பற்றிச் சொல்கிறேன். அந்த உரிமையாளர்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதன்படி அவருக்கு வேறு நிலங்கள் உள்ளன என்றும், எண் 608 சாலை புறம்போக்காக இருப்பதாலும், சர்வே எண் 566-ல் சுடலை மாடன் கோயில் இருப்பதாலும், அந்த மேற்குறிப்பிட்டிருக்கக்கூடிய சர்வே எண் 555-2, சர்வே எண் 555-3 ஆகிய நிலங்களை கட்டாயமாகக் கையகப்படுத்தியதாகவும் அவருடைய மறுப்பை ஏற்பதற்கில்லை என்ற கருத்தையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்திருப்பதில் உள்ள நஞ்சை நிலங்கள்பற்றி நான் சொல்லவில்லை. இப்போது அரசு தெரிவிப்பது, உற்பத்தி செய்கின்ற நஞ்சை நிலங்களை வீடு கட்டப் பயன்படுத்தக் கூடாது என்பதுதான். அந்தக் கருத்தைத்தான் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால், மனு போட்டவர் எடுத்திருக்கின்ற நிலத்திற்குப் பக்கத்திலேயே அவருடைய நஞ்சை நிலமில்லாத புஞ்சை நிலங்கள், தரிசாக இருக்கின்ற நிலங்கள் அவரே தருவதாக மனுவிலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, அரசுக் கொள்கைக்கு ஏற்ப, இதில் மாவட்ட ஆட்சித் தலைவரின் முடிவு வந்திருந்தாலும், அரசு அதை மறு பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** அரசு வருவாய்த் துறை எண் 1979—கடிதத்தின்படி, 28—5—1980-ல், ஏற்கெனவே 4 (1) நோட்டிபிகேஷன் பிரசுரத்தின்படி, நஞ்சை நிலங்கள் விஷயங்களில், வேறு தகுதியான புஞ்சை நிலங்களோ, புறம்போக்கோ இருக்கிறது என்ற ஆட்சேபணை வராமல் இருந்தால், நில ஆர்ஜித நடவடிக்கைக்கு முன் அனுமதி தேவையில்லை என்று தாங்கும் அளவுக்கு அதன் வடிவம் இருக்க வேண்டும் என்று கருத்து சொல்லப்



கருத்தினை அரசு ஆணையாகப் பிறப்பித்திருக்கிறது. ஆனால் மேற்குறிப்பிடுகின்ற அந்த நில உரிமையாளர் அரசினுடைய கவனத்திற்கோ, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கவனத்திற்கோ ஒன்றும் கொண்டு வரவில்லை என்று கருதுகிறேன். அதன் அடிப்படையிலேதான் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அப்படி குறிப்பிட்டிருக்கிறார்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** அவ்வாறு அவர் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அரசு மறுபரிசீலனை செய்யுமா என்றுதான் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தால், அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, அவர் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தாலும், வராவிட்டாலும், நஞ்சை நிலங்களை வீடு கட்டுவதற்காகக் கையகப்படுத்துவது என்பது சரியல்ல. இந்த நிலைமைகளைத் தவிர்க்க வேண்டும் என்று நேற்றுகூட பாரதப் பிரதமர் அவர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கருத்தின் அடிப்படையில், இது போன்ற நடவடிக்கைகளை அரசுத் துறைகள் எடுக்க வேண்டாமென்று ஆணையிடப்படுமா?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** நஞ்சை நிலங்களை வீடு கட்டுவதற்காகக் கையகப்படுத்தக்கூடாது என்ற கொள்கையை இந்த அரசு கொண்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தினைப் போன்ற சில மாவட்டங்களில் நஞ்சை நிலங்களைத் தவிர வேறு நிலங்களை எடுக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூட அறிந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். அத்தகைய நிலங்களை எடுக்க பிரத்தியேகமான ஆணைகள் பெற அத்தகைய கோப்புகள் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பிரத்தியேக ஆணைகளைப் பெறுவதற்கு அனுப்பப்படுகின்றன.

## *Staff Grant to Aided Industrial Schools*

*20. Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Adi Dravidar Welfare be pleased to state—

(a) whether it is a fact that the staff of Aided Industrial Schools have made a request for the sanction of cent per cent staff grant; and

(b) if so, the steps taken thereon?

[1982 பிப்ரவரி 4

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(இ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த உதயபுரம் தனியார் பள்ளியிலே பணியாற்றக்கூடியவர்களுக்கு, தொழில் நுட்பப் பள்ளிகளில் கொடுக்கப்படுகின்ற சலுகைகள் அனைத்தும் அரசு அளிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : இந்தப் பிரச்சினையைப் பற்றி தஞ்சையைச் சார்ந்த தொழில் நுட்பப் பணியாளர்கள் சங்கத் தலைவர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் தற்போது பள்ளி இயக்குநர் கீழ் இயங்கி வருகின்ற, தனியார் பள்ளிகளிலும், தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின் கீழ் இயங்கி வருகின்ற தனியார் பாலிடெக்னிக் பள்ளிகளிலும் என்ன விதிமுறைகளைக் கையாண்டு கொண்டிருக்கிறார்கள் என்று கேட்டிருந்தோம். அவர்கள் கடைப்பிடிக்கக்கூடிய முறைகளைப் பற்றி அறிவதற்காக கோப்பு கல்வித் துறைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. அங்கிருந்து பதில் பெறப்பட்டவுடன், அந்தச் சங்கத் தலைவர் அவர்கள் தெரிவித்திருக்கக்கூடிய கருத்தின் அடிப்படையில், அவர்கள் என்னென்ன குறைபாடுகளை எடுத்துச் சொல்லியிருக்கின்றார்களோ அவைகளை அரசு பரிவோடு பரிசீலனை செய்து தேவையான ஆணைகளை விரைவிலே வெளியிடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

செல்வி ஆ. லீலாவதி : உதவி பெறும் தனியார் பள்ளிகள் மாநிலத்தில் எத்தனை இருக்கின்றன என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் தருவார்களா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மொத்தமாகத் தமிழகத்தைப் பொறுத்தவரையில், தனியார் பள்ளிகள் 76 இருந்து வருகின்றன. அவற்றில் 51 தொழில் பள்ளிகளுக்கு தற்போது அரசின் மூலமாகப் பராமரிப்பு மானியம் வழங்கப்படுகிறது.

(முற்பகல் 10-10)

டாக்டர் இரா. சனார்த்தனம் : தொழிற் கல்வியின் முக்கியத்துவத்தைக் கருதி, தனியார்கள் இது போன்ற தொழிற் பள்ளிகளை மேலும் துவக்க விரும்பினால், அதற்கு அரசு ஊக்கம் தருமா ?



1982 பிப்ரவரி 4]

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தற்போது இருக்கக்கூடிய விதிமுறைகளை அனுசரித்து ஊக்கம் தரும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

## 2. ஒழுங்குப் பிரச்சினை.

### ஆளுநர் உரையில் நிலச் சீர்திருத்தச் சட்டம் குறித்து குறிப்பிட்டுள்ள வாசகம் குறித்து.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு தலைவரவர்களே, சட்ட மேலவை விதி 83 (2)ன்கீழ் நான் ஓர் ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்புகிறேன். இப்போது நம்முடைய அவையிலே மேதகு ஆளுநர் அவர்களுடைய உரை விவாதிக்கப்படுகிறது. அந்த உரையில், ஒன்பதாவது பாராவில் 1980 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாவது திருத்தச் சட்ட வரைவுக்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் தரவில்லை என்றும், மத்திய அரசு அதற்கு ஒப்புதல் தராததற்கு எந்தக் காரணமும் குறிப்பிடவில்லை என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையிலே, அதைப்பற்றி நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். நேற்றைய தினம் வருவாய்த் துறை அமைச்சரவர்கள், மத்திய அரசிடமிருந்து 30 ஆம் தேதி பதில் வந்திருக்கிறதென்று கூறி, சில விளக்கங்களையும் குறிப்பாகச் சொல்லியிருக்கிறார்கள். பிப்ரவரி 1 ஆம் தேதி மேதகு ஆளுநர் அவர்கள் உரையாற்றினார்கள். ஆனால், சனவரி மாதம் 30 ஆம் தேதியே மத்திய அரசிடமிருந்து பதில் வந்திருக்கிறது. சனவரி 30, 31 இரண்டு நாட்கள் கழிந்த பிறகும், தவறாகவே ஆளுநர் உரை வைக்கப்பட்டிருக்கிறது. எனவே இந்த அடிப்படையிலே தவறான முறையிலே விவாதித்துக் கொண்டிருப்பது மட்டுமல்ல, அரசியல் விதிப்படி தவறாகக்கூட அமையும். எனவே, இது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து ஒரு குறிப்பு அனுப்ப அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். அல்லது மத்திய அரசிடமிருந்து வந்த கடிதத்தை அவையில் வைத்து, அதையும் இதோடு சேர்த்துக்கொண்டு, விவாதிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இது ஒழுங்கீனமாக அமைந்துவிடக் கூடாதென்பதற்காக மேலவை விதி 83 (2)ன் கீழ் ஒழுங்குப் பிரச்சினையாகக் கொண்டு வருகிறேன்.

[1982 பிப்ரவரி 4

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இதை உற்று நோக்குகிறபோது, வேண்டுமென்றே நடந்த ஒரு தவறில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்ளுவார்கள். 30 ஆம் தேதி பதில் வந்தது என்பதை 2 ஆம் தேதி தெரிவித்திருக்கிறேன். 30 ஆம் தேதி காலையோ, மாலையோ வந்திருக்கலாம். 31 ஆம் தேதி விடுமுறை என்பது எல்லோருக்கும் தெரியும். 1 ஆம் தேதி ஆளுநர் அவர்கள் உரை. அது முன்கூட்டியே அச்சடிக்கப்பட்டிருக்கிறது என்பதும் எல்லோருக்கும் தெரியும். தவறான விஷயங்கள் இருக்கக் கூடாதென்பதற்காகத்தான் உறுப்பினர்கள் கேட்காமலேயே முன்கூட்டியே சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு சொன்னேன். 30 ஆம் தேதி கடிதம் வந்தது. அதற்கு முன்னாலேயே ஆளுநர் அவர்கள் உரை அச்சடிக்கப்பட்டு விட்டது. 30 ஆம் தேதி தபால் வந்து, மாலை 4 அல்லது 5 மணிக்குக்கூட பார்த்திருக்கலாம். 31 ஆம் தேதி விடுமுறை. 1 ஆம் தேதி ஆளுநர் அவர்கள் உரை வாசிக்கிறார்கள். 2 ஆம் தேதி நான் சொல்லிவிட்டேன். அதனாலே இந்த அரசு எதையும் மறைக்க விரும்பவில்லை. மறைக்க வேண்டிய விஷயமுமில்லை ஆகையால் வந்துள்ள மத்திய அரசின் கடிதத்திலுள்ள விவரங்களை பேரவையில் சொல்லியிருக்கிறேன். அது செய்தித்தாள்களில் வந்திருக்கிறது. கடிதத்திலுள்ள விவரங்களை வேண்டுமானால் குறிப்பாகச் சொல்லி விடுகிறேன். தேவையில்லை என்றால் ‘ நோட் ’ ஆக வைக்கிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, சனவரி 30 ஆம் தேதி மத்திய அரசிடமிருந்து பதில் வந்திருக்கிறது, தபால் பிரிப்பதிலே காலதாமதமாயிற்று என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். மேலும் பிப்ரவரி 2-ஆம் தேதி தெரிவித்துவிட்டேன் என்றும் சொன்னார்கள். அரசுத் தரப்பிலேயிருந்து அதிகாரபூர்வமாக ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் முன்மொழிந்தார்கள். அவர்கள் முன்மொழிவார்கள் என்று முன் கூட்டியே அறிவித்து, பின்னர் உரையாற்றியிருக்கிறார்கள். அவர்கள் பேசும்போது, மத்திய அரசு பதில் தரவில்லை என்ற குற்றச்சாட்டு சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அரசு வேண்டுமென்றே இப்படி ஒரு குற்றச்சாட்டை மத்திய அரசு மீது சுமத்துவதற்கு வாய்ப்பளித்து, பேச வைத்து, அவை பத்திரிகைகளில் வெளிவர வைத்து, அதற்குப் பிறகுதான் பதில் வந்து விட்டதென்ற தகவல் வந்திருக்கிறது. வேண்டுமென்றே அரசுத் தரப்பிலேயிருந்து உண்மையை வெளியிட எந்த நடவடிக்கையும் எடுக்காமல் ஆளும் கட்சி உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்களைப் பேசவிட்டு பார்த்துக் கொண்டிருந்தது என்பதையும் ஒழுங்குப் பிரச்சினையாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.



1982 பிப்ரவரி 4]

(திரு. ஆ. நல்லசிவன் எழுந்தார்)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இது விவாதமாகக் கூடாது. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர், ஒழுங்குப் பிரச்சினைதான் கிளப்பியிருக்கிறார்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மத்திய அரசுமீது குற்றம் கண்டு பிடிக்க வேண்டுமென்பதற்காக அல்ல. அதைக் குறையாகத்தான் சொல்லி வந்திருக்கிறோம். குறிப்பிட்ட சட்ட வரைவு குறித்து தேவையற்ற அளவிலே காலதாமதம் செய்து வருகிறது மத்திய அரசு என்றும், உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு இதனால் பெரும் பலன் கிடைக்குமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலே குறையாகத்தான் சொல்லி வந்தோம், குற்றமாகச் சொல்லவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : எதிர்க் கட்சித் தலைவரவர்கள் எழுப்பிய பிரச்சினை ஒரு பிரச்சினைக்குரியதுதான் என்பதை ஒப்புக் கொள்கிறேன். வருவாய்த் துறை அமைச்சரவர்களும், அவை முன்னவர் அவர்களும் விளக்கங்களை எடுத்துச் சொன்ன பிறகு, கெட்ட எண்ணத்தோடு திட்டமிட்டுச் செய்ததில்லை என்பது தெரிகிறது. சனவரி மாதம் 30 ஆம் தேதி வந்ததால், தபாலைப் பார்ப்பதிலே ஏற்பட்ட அவகாசமின்மை இதற்கு ஒரு காரணமாக இருக்கிறது. ‘ நானே எழுந்துதான் அதை விளக்கிறேன். தப்பெண்ணம் வரக்கூடாது என்பதற்காகத்தான் சொன்னேன் ’ என்று வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் விளக்கியதால், இதில் எந்தவித ஒழுங்குப் பிரச்சினையும் இல்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

3. கவன ஈர்ப்பு.

அண்ணாமலை நகர் முத்தையா பாலிடெக்னிக் மாணவர்கள் வேலை நிறுத்தம் காரணமாக அந்த பாலிடெக்னிக் காலவரையறையின்றி மூடப்பட்டிருப்பது குறித்து.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன் :

“அண்ணாமலை நகர் முத்தையா பாலிடெக்னிக் மாணவர்களின் வேலை நிறுத்தத்தின் காரணமாக அந்த பாலிடெக்னிக் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது குறித்தும், அதைத் திறப்பதற்கான வழிவகை குறித்தும்”

## அண்ணாமலை நகர் முத்தையா பாலிடெக்னிக் மாணவர்கள் வேலை நிறுத்தம் காரணமாக அந்த பாலிடெக்னிக் காலவரையறையின்றி மூடப்பட்டிருப்பது குறித்து

[1982 பிப்ரவரி 4

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர்களே, ஒரு விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** விவர அறிக்கையில் மாணவர்களுடைய முக்கிய கோரிக்கைகளாக 6 கோரிக்கைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. தமிழகத்திலுள்ள பிற பாலிடெக்னிக் மாணவர்களும் இவ்வாறு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர்களுடைய 6 கோரிக்கைகள் எந்த அளவிற்கு அரசின் பரிசீலனையில் இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன். அதில் ஏதேனும் ஏற்கப்பட அரசால் முடிவு செய்யப்பட்டிருக்கிறதா ? எந்தெந்தக் கோரிக்கைகள் அரசின் பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கின்றன ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இப்போது பெரும்பான்மையான பாலிடெக்னிக்குகள் திறந்து, வேலை செய்து கொண்டிருக்கின்றன. பெரும்பாலான மாணவர்களும் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளை அரசு பரிசிலிக்கிறது. சில கோரிக்கைகள் அகில இந்திய தொழில் நுட்பக் கல்விக் குழுவால் பரிசீலிக்கப்பட வேண்டியவையாகும். அதை அவர்களுக்கு அனுப்புகிறோமென்று சொல்லியிருக்கிறோம்.

இந்தப் போராட்டத்தின் அடிப்படையாக ஒரு கருத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பாலிடெக்னிக்கில் படிக்கும் மாணவர்கள் இது போன்ற வாய்ப்பை தமிழகத்தில் உள்ள மற்ற இளைஞர்கள் பெறக்கூடாதென்ற உணர்வை இந்தப் போராட்டத்தின்மூலம் வெளிக்காட்டியிருப்பது வேதனைக்குரியதாகும். ஷிப்ட் முறை கூடாது, புதிய பாலிடெக்னிக்குகள் கூடாது, இது போன்ற வாய்ப்புகள் தமிழ் நாட்டு மாணவர்களுக்குக் கிடைக்கக் கூடாது என்ற உணர்வை, சமுதாயத்தில் ஒரு ஆதிக்க உணர்வைப்போல தெரிவிப்பதென்பது எல்லோரும் கண்டிக்கக்கூடியதாகும். மற்றபடி அவர்கள் கோரிக்கைகளைப் பரிசீலித்து, தேவையான நடவடிக்கைகள் எடுக்கலாம்.

**மாண்புமிகு திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மேல் நிலைப் பள்ளிகளில் படிக்கின்ற, தொழிற் கல்வி பயில்கின்ற மாணவர்களுக்கு விரோதமாகவும், பொருளாதார நெருக்கடியில் இருக்கின்ற வசதிகளைப் பயன்படுத்தி அதிகமான வாய்ப்புகளைக் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் ஷிப்ட் முறை கொண்டு வருவதை வேண்டாமென்று சொல்லுவதை நிச்சயமாக நாங்கள் ஆதரிக்கவில்லை. இருந்தாலும் இப்படி தேவையில்லாத முறையில்

---

@ 205 ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிட்டப்பட்டுள்ளது.



1982 பிப்ரவரி 4] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

மற்ற மாணவர்களுக்கு எதிராக, தமிழ் நாட்டுப் பொது நன்மைக்கு எதிராக வைக்கும் கோரிக்கைகள் நியாயமற்றவை என்று சொல்லி, மேற்கொண்டு பிரச்சினைகள் இல்லாமல் முற்றுப்புள்ளி வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அவர்களுடைய கோரிக்கைகளில் நியாயமானவற்றை அரசு பரிசீலிக்குமென்று சொல்லும் அதே நேரத்தில் இப்படி ஆதிக்க உணர்வு இருக்கின்ற நிலைமைக்கு மாணவர்கள் ஆளாகக் கூடாது, தமிழ் நாட்டின் பொது நலனுக்கு எதிராகப் போகக்கூடாது, அரசு அதைக் கண்டிக்கிறது என்று தெளிவாக மாணவர்களிடத்தில் சொல்லியிருக்கிறேன்.

(முற்பகல் 10-20)

### 4. ஆளுநர் உரையின்மீது விவாதம்—தொடர்ச்சி.

*** செல்வி ஆ. லீலாவதி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது விவாதிக்க வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுநர் உரையிலே 1981 ஆம் ஆண்டு பெரும்பாலான பகுதிகளிலே வறட்சி நிலை ஏற்பட்டது என்றும், இருந்தாலும் உணவு தானியங்களைப் போதிய அளவில் மாநில அரசு கையிருப்பில் வைத்து உறுதி செய்திருப்பதாகவும் கூறியிருப்பதை நான் ஆசிரியர்கள் சமுதாயத்தின் சார்பாகப் பாராட்டுகிறேன்.

அடுத்து, அரசு பாரதியார், பாரதிதாசன் ஆகியோரின் பெயரில் பல்கலைக் கழகங்களை அமைப்பதற்கு சட்டங்கள் இயற்றியும், குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று அதற்காக அந்தப் பல்கலைக் கழகங்களைத் திறப்பதற்கான ஆவன செய்து வருவதையும் நான் வெகுவாகப் பாராட்டுகிறேன். ஆனாலும், ஆசிரியர்கள் சமுதாயத்திற்கு இந்த உரையின் மூலம் ஒரு பெரிய ஏமாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் நான் ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். ஆசிரியர்களுடைய பல கோரிக்கைகள் நீண்ட காலமாக அப்படியே இருந்து வருகின்றன. மேல் நிலை, நடு நிலை, தொடக்க நிலை ஆசிரியர்களின் பல இன்றியமையாத கோரிக்கைகள் நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் அப்படியே இருந்து வருகின்றன. அவற்றில் அவசரமும் முக்கியத்துவமும் வாய்ந்த கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து அவற்றுக்கு உடனே தீர்வு காண்பது என்கிற ஒரு நல்ல முறையை

[செல்வி ஆ. லீலாவதி] [1982 பிப்ரவரி 4

இனிமேலாவது கல்வித் துறை பின்பற்றி சிறிது சிறிதாக முக்கியமான கோரிக்கைகளுக்குத் தீர்வு காண வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன். ஆனால் அவ்வாறு இல்லாமல் பல முக்கியமான கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமல் நீண்டகாலமாக அப்படியே இருந்து கொண்டு வருகின்றன. இந்த அவைக்கு நான் வந்து 2 ஆண்டுகள் ஆகிவிட்டன. நான் மீண்டும் மீண்டும் இந்த அவையில் அக்கோரிக்கைகளைச் சொல்ல வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது.

அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் இவர்களுடைய சம்பள முரண்பாடு பற்றிப் பரிசீலிக்க அரசு நியமனம் செய்த ஒரு நபர் குழுவின் அறிக்கை அரசுக்கு வந்தும்கூட, அந்த அறிக்கையை அரசு இன்னும் வெளியிடாமலிருப்பது குறித்து ஆசிரியர் சமுதாயத்திற்கு ஒரு பெரிய ஏமாற்றம் ஏற்பட்டிருக்கிறது. எப்போது பணிக்கர் குழுவின் அறிக்கை வரும் என்று ஆசிரியர்கள் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

நடுநிலை ஆசிரியர்களுக்கு அவர்களுடைய இரண்டாண்டுப் பயிற்சிக்காக ஊக்க ஊதியம் கொடுத்திருப்பதற்காக நான் அரசைப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். அதே மாதிரி அனைத்து ஆசிரியர் பிரிவுகளுக்கும் வழங்க வேண்டும். அவர்களும் இரண்டாண்டு பயிற்சி, இன்னும் சிலர் ஓராண்டு பயிற்சி பெற்றிருப்பதால், அவர்களுக்கும் இந்த ஊக்க ஊதியத்தை அளிக்க அரசு உத்தரவிட வேண்டுமென்று நான் இத்தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அரசு ஊழியர்களுக்கு ஈட்டிய விடுப்பு வழங்குவது போல் ஆசிரியர்களுடைய பணி நாட்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டு ஆண்டுக்கு 23 நாட்கள் ஈட்டிய விடுப்பு அளிக்க அரசு உத்தரவிட வேண்டுமென்று நான் இத்தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன். விடுமுறை நாட்களில் கூட ஆசிரியர்கள் பள்ளிக்கு வருகிறார்கள். பெயருக்குத் தான் விடுமுறை என்பது இருக்கிறது. விடுமுறை நாட்களில் பரிட்சைகளை ஆய்வு செய்ய பள்ளிக்கு வருகிறார்கள். அதுபோல் விடுமுறை நாட்களில் மாணவர்களின் தேர்வுகளை நிர்ணயிக்க பள்ளிக்கு வருகிறார்கள். இன்னும் எஸ்.எஸ். எல்.சி., ஹையர் செகண்டரி பரீட்சைத்தாள்களைத் திருத்த அவர்கள் 20 அல்லது 30 நாட்கள் செலவிட வேண்டியிருக்கிறது. இன்னும் பள்ளி தொடங்குவதற்கு 10 அல்லது 15 நாட்களுக்கு முன்பே பள்ளிக்கு வந்து மாணவர்களை பள்ளியில் சேர்க்கும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர்கள் என்றாலே அவர்கள் வருடத்தில் 200 நாட்கள்தான் பணி செய்கிறார்கள் என்கிற ஒரு பரவலான எண்ணம் நாட்டில் இன்றைய தினம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. முன்பு இருந்த ஆட்சியும் ஆசிரியர்



1982 பிப்ரவரி 4] [செல்வி ஆ லீலாவதி]

களைப் பார்த்து "வருடத்தில் பாதி நாட்கள் தூங்கிக் கொண்டிருக்கிறீர்கள்" என்று ஏளனம் செய்தது. ஆனால் ஆசிரியர்கள் 365 நாட்களும் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று நான் சொல்கிறேன். நிலைமை இவ்வாறு இருக்கையில் இரண்டே இரண்டு நாட்கள்தான் அவர்களுக்கு வருடத்திற்கு ஈட்டிய விடுப்பு வழங்கப்படுகிறது. அவ்வாறு இல்லாமல் வருடத்திற்கு 23 நாட்கள் ஈட்டிய விடுப்பு ஆசிரியர்களுக்கு உண்டு என்று அரசு ஆணையிட்டால், ஆசிரியர்கள் மிகவும் மகிழ்ச்சியடைவார்கள்.

அடுத்து, ஆசிரியர்களுக்கு எந்தவித உயர்ந்த பதவி உயர்வும் இல்லை. தலைமை ஆசிரியர் என்ற உயர்ந்த பதவியைத் நான் ஆசிரியர்கள் அடைய முடியும். ஏறத்தாழ 200 அல்லது 300 ஆசிரியர்களுக்கு ஒருவர் வீதம் தலைமை ஆசிரியராகும் நிலையில்தான் தலைமை ஆசிரியர் ஆகின்ற வாய்ப்பு கிட்டுகிறது. நிலைமை இவ்வாறு இருப்பதால் அவர்களுக்கு உயர்ந்த பதவி கிடைக்கின்ற வாய்ப்பு இல்லை. மாணவர்கள்தான் ஆசிரியர்களை ஏணிகளாகப் பயன்படுத்திக் கொண்டு உயர்ந்த நிலைக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், ஆசிரியர்கள் என்றைக்கும் ஆசிரியர்களாகவே இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர்களின் ஓய்வு வயதை 60 வருடமாக உயர்த்த வேண்டுமென்று நான் அரசை இத்தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்தப் பொங்கல் தினத்தன்று ஓய்வு பெறுகின்ற அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அரசாங்கம் 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கும் என்கிற அறிவிப்பு வரும் என்று மிகவும் ஆவலுடன் ஆசிரியர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் ஏமாற்றமடைந்தார்கள். இந்தக் காலத்தில் 10 ஆயிரம் ரூபாய் என்பது ஒன்றுமே இல்லை. அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அவர்கள் ஓய்வு பெறும்போது 10 ஆயிரம் ரூபாய் அளிக்கப்படும் என்கிற அறிவிப்பை அரசு அறிவிக்க வேண்டுமென்று நான் இத்தருணத்தில் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அகவிலைப் படி உயர்வைப் பொறுத்தவரையில், மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக மாநில அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கொடுக்கவில்லை என்பதை நான் சுட்டிக்காட்டுவதோடு அதனையும் உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்

[செல்வி ஆ. லீலாவதி] [1982 பிப்ரவரி 4

அடுத்து, ஓர் ஆசிரியர் அல்லது பள்ளி அலுவலர் பணிக் காலத்தில் வியாதிக்கு உள்ளாக்கப்பட்டு, வேலை செய்ய முடியாத நிலை ஏற்பட்டு அல்லது உடல் ஊனமுற்று, முடமாகி வேலை செய்ய முடியாத நிலை ஏற்பட்டால், அவர்களுக்கு முழு ஓய்வூதியம் அளிப்பதோடு இன்னும் அது தொடர்பான அனைத்துச் சலுகைகளையும் அளித்தால், ஆசிரியர் சமுதாயம் இந்த அரசிடம் நன்றியுடன் இருக்கும் என்பதை நான் இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, அரசு வழங்குகின்ற சலுகைகள் சம்பந்தமான அனைத்து அரசு ஆணைகளும் அரசு ஊழியர்கள், அரசுப் பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியர்கள் அல்லாதவர்கள், மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியர்கள் அல்லாதவர்கள், நகராட்சிப் பள்ளிகள், நலப் பள்ளிகள் மற்றும் அனைத்துப் பள்ளிக்கூடங்களின் ஆசிரியர்களுக்கும் ஆசிரியர்கள் அல்லாதவர்களுக்கும் பொருந்தும் என்கிற முறையில் நிரந்தரமானதோர் ஆணையைப் பிறப்பிக்க ஆவன செய்யவேண்டுமென்று நான் அரசை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு ஓர் ஏற்பாடு இப்போது இல்லாததால், அரசுப் பள்ளி ஆசிரியர்கள் அடைகின்ற சில சலுகைகளை தனியார் பள்ளி ஆசிரியர்கள் அடைய முடியாத நிலை இருக்கிறது. உதாரணமாக வீடு கட்ட முன்பணம் எல்லோருக்கும் வழங்கப்படுகிறது. ஆனால், தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு வீடு கட்ட கடன் கொடுப்பது நிராகரிக்கப்படுகிறது. கொடுக்க வேண்டுமென்று ஒரு நிரந்தரமான ஆணை பிறப்பிக்கப்பட்டால், பாரபட்சம் இல்லாமல் எல்லோரும் பயனடைவார்கள். அரசுத் துறையில் பணிபுரிபவர்கள் மட்டும் தான் ஆசிரியர்கள் என்பதல்ல. மற்ற எல்லாத் துறைகளிலும் பணியாற்றும் ஆசிரியர்களும் ஆசிரியர்கள்தான். ஆகவே எல்லாச் சலுகைகளையும் அவர்களுக்கும் வழங்குவதுதான் நியாயம். தமிழக அரசைப் பொறுத்தவரையில், இப்போது தனியார் பள்ளிகளுக்கும் அது பல சலுகைகளை அளித்து வருகிறது. முக்கியமாக சைக்கிள் அட்வான்ஸ் வழங்குகிறது. முன்பெல்லாம் பிராவிடன்ட் பண்டிலிருந்துதான் அவர்களுக்கு விழாக்கால முன்பணம் கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது அவ்வாறு இல்லாமல் விழாக்கால முன்பணத்தையும் அரசே கொடுக்கிறது. அதற்காக நான் என்னுடைய நன்றியை அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் இதுபோன்று மற்ற சலுகைகளையும் அரசு தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு விரிவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மேல்நிலைப் பள்ளிகள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன என்பது எல்லோரும் அறிந்த ஓர் உண்மை. மேல்நிலைப்பள்ளிகளில் ஆய்வுக் கூடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அநேகம் பள்ளிகளில்



1982 பிப்ரவரி 4] [செல்வி ஆ. லீலாவதி]

மிகச் சிறந்த முறையில் ஆய்வுக் கூடங்கள் இருக்கின்றன. உபகரணங்களும் மிக நல்லமுறையில் இருக்கின்றன. ஆனால் ஆய்வாளர்கள்தான் அங்கு இல்லை. நான்கு ஆய்வுக் கூடங்களுக்கு ஓர் ஆய்வாளர் என்ற முறையில்தான் ஆய்வாளர்கள் இருக்கிறார்கள். அவ்வாறில்லாமல் ஒவ்வொரு ஆய்வுக் கூடத்திற்கும் ஓர் ஆய்வாளர் விதம் நியமிக்க வேண்டும். அவ்வாறு நியமித்தால், அது அங்கு வேலை செய்கின்ற ஆசிரியர்களுக்கு வேலைப்பளு குறையும். ஆர்வம் மட்டுமல்லாமல், மாணவர்கள் இப்போது தொழிற்கல்வியில் மிகவும் போதுமான உடையவர்களாக இருக்கிறார்கள். இந்த ஆய்வுக் கூடங்களில் மாணவர்களும் ஆய்வாளர்கள் இல்லாமல் இருப்பதால், அங்கு படிக்கின்ற பாதிக்கப்படு பாதிக்கப்படுகிறார்கள், அங்கு பணியாற்றுகின்ற ஆசிரியர்களும் கிறார்கள். மேல்நிலைப் பள்ளிகளை ஆரம்பித்து, 2, 3 ஆண்டுகள் ஆகி விட்டன. ஒவ்வொரு ஆய்வுக் கூடத்திற்கும் ஓர் ஆய்வாளர் விதம் நியமிக்க வேண்டுமென்று, சொல்லியும், அதை அரசு பரிசீலிப்பதாகச் சொல்லியும் ஓராண்டு ஆகிவிட்டது

(முற்பகல் 10-30)

இன்னும் அவற்றைக் கவனிக்காமலிருப்பது ஆசிரியர்களுக்கு மிகவும் வருத்தத்தைத் தருகிறது. ஆகையால், ஆய்வாளர்களை அரசு நியமிக்க வேண்டும். அப்படிச் செய்தால், மேல்நிலைப் பள்ளிகளில் கல்வியின் தரம் மேலும் உயரும். உட்படுத்தப்பட்ட (இன்டக்டட்) பட்டதாரி ஆசிரியர்களுக்கு ரூ. 40 சிறப்பு ஊதியமாக அரசு கொடுக்கிறது. அதை ரூ. 25-லிருந்து ரூ. 40 ஆக உயர்த்தியதற்காக அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் ஈர்க்கப்பட்ட இதர ஆசிரியர்களுக்கும் இந்த சிறப்பூதியம் அளிக்கப் படவில்லை. அவர்களுக்கும் இதனை வழங்க வேண்டும். ஆனால், அந்த உட்படுத்தப்பட்ட ஆசிரியர்கள் 4 ஆண்டுகளாக மாணவர்களைப் பரிட்சைக்கு அனுப்புகிறார்கள். அப்படி மாணவர்களுக்குச் சொல்லிக்கொடுத்து அவர்களைப் பரிட்சைக்கு அனுப்பும்போது, அந்த ஆசிரியர்களும் ஓரளவுக்கு நல்ல முறையில் அந்தப் பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். இப்போது அந்த ஆசிரியர்கள் அனைவரும் 1983 ஆம் ஆண்டுக்குள் எம். எஸ்சி. தேர்வு பெற வேண்டும் என்றும், இல்லாவிட்டால் பதவியிலிருந்து இறக்கம் செய்யப் படுவார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 45 வயதைத் தாண்டியவர்கள் இன்றைக்கு அந்தப் பரிட்சையை எழுத வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். அவர்கள் இப்போது கல்லூரிகளிலே சென்று படிக்கும் போது, அங்கிருக்கும் கல்லூரி ஆசிரியர்கள் ' நீங்கள்தான் 4 ஆண்டுகளாக மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கிறீர்களே, இன்னும் உங்களுக்கு ஏன் பரிட்சை ? ' என்று சொல்கிறார்கள். ஆதலால், இன்டக்டட் ஆசிரியர்களுக்கு

ஒரு 'சர்டிபிகேட் கோர்ஸ்' மாதிரி வைக்க வேண்டும். அவர்கள் ஏற்கெனவே தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். மாணவர்கள் திறம்படத் தேர்ச்சியடையும் அளவுக்கு அவர்களைப் பயிற்றுவிக்க இவர்களுக்குத் திறமை இருக்கிறது. அந்த அளவுக்குத் திறமை பெற்றிருக்கும் இந்த ஆசிரியர்கள் எம்.எஸ்ஸி' படிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தாமல் இருக்க வேண்டும். முதுகலைப் பட்டம்பெற்ற ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தை இந்த ஆசிரியர்களுக்கும் கொடுக்க வேண்டும். மேல் நிலைப் பள்ளிக்கூடங்களை தொடங்கிய போது அப்போது 'உங்களைக் கீழே இறக்க மாட்டோம்' என்று உறுதி அளிக்கப்பட்டது. அந்த ஆசிரியர்கள் 25 ரூபாய்க்காக பல இன்னல்களை அடைந்து, பல ஊர்களுக்கு மாற்றம் செய்யப்பட்டு இந்தப் பதவியை ஏற்றுக் கொண்டார்கள். அப்படி இருக்கும்போது, அந்த உட்படுத்தப்பட்ட ஆசிரியர்களுக்குச் சலுகைகள் காட்டி, அவர்களை பதவியிலிருந்து இறக்காமல் அவர்களுக்கு ஒரு சர்டிபிகேட் கோர்ஸ் நடத்தி, அவர்களை மேல்நிலைப் பள்ளிகளில் பாடம் நடத்தத் தகுதியுள்ளவர்களாக ஆக்க வேண்டும்.

தனியார் பள்ளிகளில் இப்போது நடக்கும் கொடுமைகள் கொஞ்சமும் ஓயவில்லை. அவைகளைப்பற்றி இந்த அவையில் சொல்ல வேண்டுமென்று சொன்னால், மிகவும் வருத்தமாக இருக்கிறது. தனியார் பள்ளிகளில் ஆசிரியர்கள் மிகவும் கேவலப்படுத்தப்படுகிறார்கள். இப்போது அநேக ஓட்டைகள் சட்டத்திலே இருக்கின்றன. காரைக்குடியிலே 1 ஆண்டுக்கு முன்பு ஆசிரியர்—பிரதிநிதிகள் அனைவரையும் வைத்து தனியார் பள்ளி சட்டதிட்டங்களில் என்னென்ன ஓட்டைகள் இருக்கின்றன, அவைகளை எப்படி நிவர்த்தி செய்யலாம் என்று ஆராய, பல குழுக்கள் அமைக்கப்பட்டன. நிர்வாகம், பணிப் பாதுகாப்பு, பதவி உயர்வு ஆகியவற்றை எப்படி சீர்திருத்தம் செய்யலாம் என்று ஆராய்ந்து பின்னர் நாங்கள் அரசுக்குச் சொன்னோம். ஆனால், இதுநாள் வரையில் அது குறித்து எந்தவிதமான நிவாரணமும் கிடைக்கவில்லை. தனியார் பள்ளி ஆசிரியர்கள் அவ்வப்போது வேலையிலிருந்து நீக்கப்படுகிறார்கள். அவர்களை மீண்டும் வேலையில் நியமிக்க வேண்டும் என்று அதிகாரிகள் சொன்னாலும், தனியார் பள்ளி நிர்வாகிகள் அதற்கு இணங்கவில்லை. அதிகாரிகளின் கட்டளைகளுக்கு தனியார் பள்ளி நிர்வாகம் அடிபணியவில்லை. மைனாரிட்டி பள்ளிகள் மாத்திரம் அல்ல, மற்றும் சில பள்ளிகளும் கொடுமையான ஆட்சி நடத்திக்கொண்டிருக்கின்றன. நாம் சுதந்திரம் பெற்று இன்றைக்கு 33 ஆண்டு காலமாகியும், பள்ளியாசிரியர்களுக்கு இன்னும் சுதந்திரம் கிடைக்கவில்லை. அவர்களுக்கு சுதந்திரம் அளிக்கப்படாமல், அவர்கள் மிகவும் கேவலமாக நடத்தப்படுகிறார்கள்.





சுதந்திரம் பெறுவதற்கு முன்பு இருந்த அதே நிலையிலேதான் இன்றைக்கு தனியார் பள்ளி ஆசிரியர்களும் இருக்கிறார்கள். பல சட்ட திட்டங்களை வைத்திருந்தும், அவற்றை தனியார் பள்ளி நிர்வாகிகள் ஏற்றுக்கொள்ளாமல், ஆசிரியர்களைக் கொடுமைப்படுத்துகிறார்கள். கோவையில் அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி முதல்வர், திருமதி ராஜம்மாள் தேவதாஸ் என்ற ஆசிரியை கர்ப்பவதியாக இருந்ததற்கு அவருடைய கர்ப்பத்தைக் கலைக்க வேண்டுமென்று அந்தத் துணை ஆசிரியர் பலமுறை அந்தப் பள்ளியின் காம்பவுண்ட் சுவரைச் சுற்றி வரவேண்டும் என்று சொல்லியிருக்கிறார். ஈரோடு செங்குந்தர் மகாஜன உயர்நிலைப்பள்ளியில் 17 வருடம் அனுபவம் உடைய ஆசிரியர் இருந்தும், அந்தப் பள்ளியில் ஏற்பட்ட தலைமையாசிரியர் காலியிடத்தில் அவரை நியமிக்காமல், அதற்குரிய சட்ட விதி 15 இருந்தும் அவரை அந்தத் தலைமையாசிரியர் பதவியில் அமர்த்தாமல், செய்தித்தாள்களிலே விளம்பரம் செய்து, மற்றொரு ஆசிரியரைத் தலைமையாசிரியராக நியமித்திருக்கிறார்கள். மற்ற ஆசிரியர்களை வைக்கக்கூடாது என்று கல்வித் துறை அவர்களுக்குச் சொல்லியிருக்கும் அந்த அறிவுரையைக் காதில் போட்டுக்கொள்ளாமல், கடந்த ஜூன் மாதத்திலிருந்து இன்றுவரை அந்தப் புதிய ஆசிரியர்தான் அங்கே தலைமையாசிரியராக இருந்து வருகிறார். நிலைமைகள் இவ்வாறு இருந்தும், கல்வித் துறை அவர்களை ஒன்றும் செய்ய முடியவில்லை. அது மைனாரிட்டி பள்ளி அல்ல. மைனாரிட்டி பள்ளிகளிலே இந்தமாதிரி தவறுசெய்யும் பள்ளிகளை அரசே ஏற்று நடத்தினால், நிச்சயமாக இந்தமாதிரி அநியாயம் பள்ளிகளில் நடக்காது. இந்தமாதிரி அநியாயங்கள் நடக்காமல் அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஈரோடு கல்வி அதிகாரிகளுக்கும், கல்வித் துறையிலே மற்ற அதிகாரிகளுக்கும் பலமுறை விண்ணப்பங்கள் கொடுத்தும், இதுவரையிலும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

சிவகாசி ஐயன்-நாடார் ஜானகி அம்மாள் கல்லூரியில்—அக் கல்லூரியின் நிர்வாகம் தொடங்கி 16 ஆண்டுகள் ஆகின்றன. இந்த 16 ஆண்டுகளில் 185 ஆசிரியர்களை வீட்டுக்கு அனுப்பி உலக ரெக்கார்டை தனக்கென்று அமைத்துக்கொண்டிருக்கிறது இந்தக் கல்லூரி. இந்தக் கல்லூரியில் ஒவ்வொரு ஆண்டும் இரண்டு-மூன்று ஆசிரியர்கள் வேலைநீக்கம் செய்யப்படுகிறார்கள். இப்போது இரண்டு நாட்களுக்கு முன்பு வேலைநீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர் ஒருவர் உண்ணாவிரதம் இருந்தார். அவர் கடந்த 4 ஆண்டுகளாக வேதியியல் துறையில் பேராசிரியராக இருந்தவர். இந்தமாதிரி கொடுமைகளிலிருந்து விடுதலை கிடைக்க வேண்டும். ஆசிரியர்களுக்கு இந்த

மாதிரி கொடுமைகள் இழைத்தால், நல்ல சமுதாயம் எப்படி உருவாக்கப்படும்? ஆசிரியர்களின் மனநிலை சரியாக இல்லை என்று சொன்னால், அவர்கள் மாணவர்களுக்கு எப்படி பாடம் சொல்லிக்கொடுக்க முடியும்? ஆகவே தக்க நடவடிக்கை எடுத்து ஆசிரியர்களுக்கு அளிக்க வேண்டிய உரிமைகளை அவர்களுக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணி யடிக்கப்பட்டது.)

இப்போது காவலர்களுக்கு வழங்கப்படுவதுபோல ஆசிரியர்களுக்கும் அத்தியாவசியப் பொருள்களை மலிவு விலையில் வழங்க வேண்டும். பேருந்துப் படி ஆசிரியர்களுக்கும் வழங்க வேண்டும். ஆசிரியர்களுக்குத் தேவையான அளவுக்கு வீட்டு வசதி அளிக்க வேண்டும். போலீஸ்காரர்களுக்கு இப்போது அரசு அதிகமான சலுகைகளை அளிக்கிறது. அவர்களைப் போல் ஆசிரியர்களும் மிகவும் முக்கியமானவர்கள். ஆசிரியர்களுக்கும் அந்த மாதிரி சலுகைகள் தந்தால் நாட்டின் நிலை நிச்சயமாக உயரும்.

பள்ளிக் குழந்தைகளுக்கிடையிலே தொழுநோய் பரவி உள்ளதா என்று கண்டறியும் திட்டம் வரும் கல்வியாண்டிலிருந்து தொடங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய ஒன்று. நான் அரசை மிகவும் வரவேற்கிறேன். இப்போது ஒவ்வொரு மாணவரிடத்திலும் 'ஸ்பெஷல் பீஸ்' 15 ரூபாய் வாங்குகிறார்கள். அதில் 1 ரூபாய் 'மெடிக்கல் செக்-அப்' க்கு என்று வாங்குகிறார்கள். இத்தனை ஆண்டுகளாக மாணவர்களுக்கு 'மெடிக்கல் செக்-அப்' நடத்தப்படும் என்று சொன்னாலும், அது நடத்தப்பட வில்லை. அம்மாதிரி இந்தத் திட்டமும் போகாமல் பள்ளிக் குழந்தைகளுக்குச் சீரான முறையிலே 'மெடிக்கல் செக்-அப்' நடத்த வேண்டும். அதை அரசு மிகவும் வற்புறுத்த வேண்டும். தொழிலாளர்களின் நன்மைக்காகவும் இந்த அரசு பல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறது. அதை மிகவும் வரவேற் கிறேன். அதுபோன்று ஆசிரியர்களின் நன்மைக்காகவும் பல திட்டங்களைக் கொண்டு வந்து, ஆசிரியர்களின் நிலையை உயர்த்துவதன் மூலம், சமுதாயத் தையும் உயர்வடையச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன்.

(முற்பகல் 10-40)

**திரு. ஜேப்பியார்** : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற இந்த விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகிற வாய்ப்பு கிடைத்தமைக்கு நான் முதலிலே நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.



ஆளுநர் உரைக்கு, ஒரே வரியில் "நன்றி" என்று சொல்லிக்கூட முடித்துக் கொள்ளலாம்—சொல்லிமுடித்து உட்கார்ந்து கொள்ளலாம். ஆனால், ஆளுநர் உரையை விமர்சிக்கவோ அல்லது ஆளுநர் உரை தன்னு டைய கொள்கைகளுக்கு உகந்ததாக இல்லை என்ற காரணத்தால் அதற்கு நன்றி தெரிவிக்க முடியாது என்று அவையில் எடுத்துச் சொல்லப்படுகிற நேரத்தில்தான், ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கிற நாங்கள், அவ்வாறு நன்றி தெரிவிக்க முடியாது என்ற வாதத்தைக் கிளப்புவோருக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்களுடைய வாதங்கள் எப்படிப் பட்டவை என்பதையும், எவ்வாறு ஆளுநர் அவர்களின் உரை நன்றி தெரி விக்க வேண்டிய அளவுக்கு பல்வேறு அம்சங்களைக் கொண்டிருக்கிறது என்பதையும் எடுத்துச் சொல்லி, அவர்கள் எழுப்பிய வினாக்களுக்கும் பதில் கொடுத்து, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்க முற்படுகிறோம்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிற பல்வேறு கருத்துக்களைக் குறிப்பிட்டு அவர்களுக்குத் தெரிந்த வகையில், அல்லது அவர்கள் இப்படித்தான் சொல்ல வேண்டும், அல்லது இப்படிச் சொன்னால்தான் எதிர்க்கட்சியாக இயங்க முடியும் என்று எண்ணி ஒவ்வொன்றாகச் சுட்டிக்காட்டினார்கள். அவர்களுக்கெல்லாம் ஒன்றை நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. நிலநாராயணன் அவர்கள் நேற்றைக்கு முன்தினம் இங்கே பேசியபோது அவர் கூறிய பல்வேறு கருத்துக்களையும் குறிப்புகளையும் நான் கேட்டுக் கொண்டிருந்தேன். ஓர் அரசியல் கட்சியில் பல்வேறு ஆண்டுகளாகப் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர் அவர். அது மட்டுமல்ல, இந்த அவை யில் கூட பல ஆண்டுகளாக இருந்து அனுபவம் பெற்றவர். அப்படிப்பட்ட அவர் பேசும்போது ஒவ்வொரு கருத்தாகச் சொல்லிக் கொண்டு வந்ததை நாம் கேட்டோம். நேற்றைக்கு அவர் அப்படித்தான் பேச வேண்டும் என்ற காரணத்திற்காக அவர் அப்படிப் பேசினார் என்றுதான் நான் எடுத்துக் கொண்டேன்

அவர் ஆளும் கட்சியில் பல ஆண்டுகள் இல்லை என்றாலும், 7, 8 ஆண்டு கள் ஆளும் கட்சியின் உறுப்பினராக இருந்த அனுபவம் உள்ளவர். இந்த மாமன்றத்தில் ஆளும் கட்சியின் உறுப்பினராக அவர் இருந்தபோது, ஆளும் கட்சியின் சார்பில் கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் எழுப்பிய வினாக்களுக்கும் அவர்களே சில நேரங் களில் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அப்படிப்பட்ட அவர் பேச

ஆரம்பித்த உடனேயே இங்கே உள்ள பத்திரிகை சுதந்திரம் பற்றியும், ஒரு பத்திரிகையோடு சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்ததுபற்றியும் "எவ்வளவு பெரிய கொடுமை பார்த்தீர்களா?" என்று அவருக்கே உரிய தெளிவான குரலில், கேட்கும் யாவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவுக்குப் பேசினார்கள்.

சுதந்திரம் கிடைத்த பிறகு பல்வேறு கட்சிகள் ஆட்சிப் பீடத்திற்கு வந்தபோது, பத்திரிகையில் எழுதியவர்களும், பத்திரிகையை நடத்தியவர்களும் எத்தகைய சூழ்நிலைகளுக்கெல்லாம் ஆளாக்கப்பட்டார்கள் என்பதையும் கடந்த காலத்தில் நன்றாக அறிந்தவர் அவர். அதிலும் குறிப்பாக, 1975 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 ஆம் தேதிக்குப் பின்னால் இந்த நாட்டில் நடைபெற்ற நிலைமைகளை நாம் அறிவோம். அதிலும் பல்வேறு மாநிலங்களைச் சுட்டிக்காட்டாமல் நம்முடைய தமிழகத்தில் மட்டும் நடைபெற்றவைகளை நாம் அறிவோம். அது மட்டுமல்ல. 1972 அக்டோபர் மாதத்திற்குப் பின்னால், 1975 ஆம் ஆண்டு ஜூன் 25 ஆம் தேதிக்கு முன்னால் நம் மாநிலத்தில் உள்ள பல்வேறு பத்திரிகையாளர்கள், பத்திரிகை நடத்துபவர்கள் எல்லாம் எத்தகைய சூழ்நிலைகளுக்கு ஆளாக்கப்பட்டார்கள் என்பதையும் அவர் அறியாமல் இல்லை. 1972 ஆம் ஆண்டு முதல் 1975 ஜூன் 25 ஆம் தேதிக்குட்பட்ட இடைவெளியில் பத்திரிகைகளில் எழுதிய எத்தனையோ எழுத்தாளர்களும் பத்திரிகையாளர்களும் எத்தனை எத்தனையோ வழக்குகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. நீதி மன்றங்களுக்குச் சென்று வழக்குகளை நடத்த முடியாத நிலைமைகூட அவர்களுக்கு உருவாக்கப்பட்டது என்பதை நான் அவருக்குச் சொல்ல வேண்டியதில்லை.

1972 ஆம் ஆண்டு முதல் 1975 ஆம் ஆண்டு வரை அரசின் சில தவறான கருத்துக்களையும் கொள்கைகளையும் விமர்சித்த காரணத்திற்காக அவைகளை எழுதியவர்களையும் அவைகளை வெளியிட்ட பத்திரிகைகளையும் எந்த அளவுக்கு வழக்குமன்றத்தில் கொடுமைக்குள்ளாக்கினார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொல்வதை என்னுடைய கடமையாக நான் கருதுகிறேன். அப்போது அவர் சார்ந்திருக்கும் கட்சிதான் ஆட்சி செய்து கொண்டிருந்தது என்பதை அவர் நன்கு அறிவார். பொதுமக்களுடைய பிரச்சினைகளை, அரசியல் கட்சியில் இடம் பெற்ற காரணத்தால், வெளியே எடுத்துச் சொன்ன குற்றத்திற்காக நீதிமன்றங்களைச் சந்திக்க வேண்டிய அவசியத்திற்கு உள்ளாக்கப்பட்டவர்கள், அவர் சார்ந்த கட்சி ஆட்சி செய்த



போது எத்தனை எத்தனை பேர் என்பது அவருக்குத் தெரியும். 1972 ஆம் ஆண்டில் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர், இன்று இந்த மாநிலத்தின் முதல்வராக இருப்பவர், பொதுமக்களால் தரப்பட்ட கருத்துக்களை, சம்பவங்களைப் பொதுக் கூட்டத்தில் எடுத்துச் சொன்னார் என்ற காரணத்திற்காக நீதிமன்றங்களின் நெடிய படிக்கட்டுகளை ஏறி இறங்க வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டார் எத்தனை இடங்களில் எத்தனை எத்தனை வழக்குகள்? திருப்பூரிலும், தஞ்சையிலும், சென்னையிலும் பல்வேறு வழக்குகள், சென்னையில் மட்டும் 7, 8 வழக்குகள். அது மட்டுமல்ல "இன்-கேமரா" என்ற முறையில் தனி நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டு அவர் எழுதிய எழுத்துக்களுக்காக, அவர் பேசிய பேச்சுக்களுக்காக வழக்கு மன்றங்களின் முன் நிற்கவேண்டிய சூழ்நிலை உருவாக்கப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள் மறந்திருக்க மாட்டார் என்றே நம்புகிறேன்.

இன்றையதினம் ஒரு அமைச்சரைப்பற்றியும், அவர்தம் குடும்பத்தினரைப் பற்றியும் ஒரு பத்திரிகையில் அவதூறாக எழுதினார்கள் என்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எழுதவும் பேசவும் உரிமை பெற்ற இந்த நாட்டில் எதை எழுதுவது, எப்படி எழுதுவது என்றில்லாமல், அதையெல்லாம் மறந்து எழுதுகிறபோது, வழக்கு தொடர்ந்துதான் நிரபராதி என்று நிரூபிக்க வேண்டிய அவசியம் எல்லோருக்கும் ஏற்படுகிறது. இதன் காரணத்தால்தான் அவர்கள் நீதிமன்றத்திற்குப் போக வேண்டியிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, தவறு செய்தால் கைது செய்யும்போது, இவர் யார், இவர் எந்தக் குடும்பத்தைச் சார்ந்தவர், இவர் எவ்வளவு பெரிய பதவி வகித்தவர் என்று நினைத்துச் செயல்படுவது என்றால், இந்த நாட்டில் உண்மையிலேயே அரசாங்கம் நடத்த முடியாது. ஒருவர் எவ்வளவு பெரியவராக இருந்தாலும், எவ்வளவு பெரிய பொறுப்பில் இருந்தவரானாலும், அவர் தவறு செய்தால் கைது செய்துதான் ஆக வேண்டும் என்ற அடிப்படை உணர்வோடு அவர்கள் எல்லாம் தங்களைச் சட்டத்திற்குள் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தால், இப்படிப்பட்ட பிரச்சினைகளே ஏற்பட்டிருக்காது என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

[திரு. ஜேப்பியார்] [1982 பிப்ரவரி 4

இன்னாரைப் பிடிக்கலாமா, இன்னாரை இப்படிச் செய்யலாமா, இன்னாருக்கு இதைச் செய்யலாமா என்றெல்லாம் கேட்பதிலேயே எந்த நியாயமும் இல்லை. இந்த இன்னார்கள் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிறபோதுதானே இப்படிப்பட்ட சூழ்நிலைகள் உருவாகின்றன என்பதை நான் இந்த மாமன்றத்திற்கு எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

சட்டத்தைப் பற்றி, சமத்துவத்தைப் பற்றிக்கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார். அவருக்கு நான் ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். சட்டத்தை மதிக்க வேண்டும், சமத்துவத்தை மதிக்க வேண்டும் என்பதில் அக்கறை உள்ளவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? ஜனநாயகத்தின் முதுகெலும்பாக உள்ள நீதிமன்றத்திலே அவர் சார்ந்திருக்கிற கட்சியானாலும் சரி, அல்லது வேறு அரசியல் கட்சியை சார்ந்தவர்கள் ஆனாலும் சரி வழக்கு மன்றத்திற்கு நீதி கோரி செல்லும்போது, நீதி மன்றத்திற்கு முன்னாலே, நீதிபதிக்கு முன்னாலே நின்றுகொண்டு, "எங்கள் தலைவர் வாழ்க" என்று கோஷம் போட்டு நீதிபதியையே அச்சுறுத்துவது என்பது நியாயம்தானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். 'தலைவர் வாழ்க' என்று கோஷம் போடுவதன் மூலம் நீதிபதிகளே பயப்படுகிற அளவுக்கு இப்படிப்பட்டவர்களுக்கு எதிராக நாம் தீர்ப்பு சொல்லிவிட்டால் நமக்கு ஏதாவது ஆபத்து வந்துவிடும் என்று எண்ணத்தக்க அளவுக்கு நீதிபதிகளையெல்லாம் அச்சுறுத்தத்தக்க அளவுக்கு செயல்படுவது நியாயம்தானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நமக்கு உணர்வுகள் தேவைதான் என்பதை நான் மறுக்கவில்லை. நம்முடைய தலைவர் வாழ்க என்று சொல்வது நம்முடைய கடமை. ஒப்புக்கொள்கிறேன். அவர்களை முறைப்படி கோர்ட்டுக்கு அழைத்துச் செல்வது நம்முடைய கடமைதான் என்பதையும் ஒப்புக் கொள்கிறேன். ஆனால், இவையெல்லாம் கோர்ட்டுக்கு வெளியேதான் இருக்க வேண்டும். அவர்களும் ஆட்சி பீடத்தில் இருந்தவர்கள்தான். அப்படிப் பட்ட கட்சியைச் சார்ந்தவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று நீதிபதியின் முன்னால் "இன்னார் வாழ்க" என்று கோஷமிடுவோமானால், நாம் எப்படி சமத்துவம் பற்றிப் பேச முடியும்? இதையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் எண்ணிப் பார்த்திருந்தால் சமத்துவம் பற்றியும், சுதந்திரம் பற்றியும் இங்கே பேசியிருக்க மாட்டார் என்று நினைக்கிறேன்.

(முற்பகல் 10-50)

இலங்கை தூதுவர் அலுவலகத்திற்கு முன்னால் நடந்த மறியலைப் பற்றியும் இங்கே குறிப்பிட்டார். ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேச வேண்டிய பிரச்சினை இது இல்லையென்றாலும்,



1982 பிப்ரவரி 4] [திரு. ஜேப்பியார்]

அவர் பேசிய காரணத்தால், நான் பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன். "அங்கே போராட்டம் நடத்திய மற்ற கட்சியினரையெல்லாம் விட்டுவிட்டு எங்களை மாத்திரம் பிடித்தார்கள், கைது செய்தார்கள்" என்று சொன்னால், இதற்கு முன்பு ஆளும் கட்சியாக இருந்த அவர்களுக்கு தூதுவர் அலுவலகங்களுக்கு முன்னால் இப்படி மறியல் போராட்டம் செய்யக் கூடாது என்பது தெரியாதா? அப்படித் தெரியாமலிருக்க இடம் இருக்காது என்று நினைக்கிறேன். அப்படி தூதுவரகம் தாக்கப்படுகிற காலகட்டத்திலே, அதை எந்த அரசும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. தூதுவரகத்தைக் காக்கக் கூடிய பொறுப்பு ஆளுகிற அரசுக்கு இருக்கிறது. மனுக்களைத் தந்தார்கள். மனுக்களைப் பெறுவது கடமை, அவர்களும் பெற்றார்கள். ஆனால் மறியல் செய்வோம், போராட்டம் செய்வோம் என்ற என்றால், அப்படிச் செய்வதன் மூலம் அசம்பாவிதங்கள் உருவாகும் என்ற காரணத்தால், அதை அரசு தடை செய்ய வேண்டியது அவசியம் என்பதை நாம் மரபாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம். தடை செய்யும்போது, சிலரைக் கைது செய்து நீதிமன்றத்தின் முன்னாலே நிறுத்துவது என்பதும் மரபாகும். ஒரு சிலரை அப்படிக் கைது செய்து உள்ளே வைத்ததன் மூலம் அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி, மீண்டும் அதே இடத்திற்குச் சென்று மறியல் செய்வது என்பது எந்த ஜனநாயகத்தில் இருக்கிறது என்பது எனக்குத் தெரியவில்லை. இலங்கை தூதுவரகத்தில் உள்ளவர்கள் கைது செய்யவில்லை. தமிழக அரசுதான் கைது செய்தது. அப்படி இருக்கும் போது அவர்கள் தமிழக அரசைத்தான் கேட்டிருக்க வேண்டும். அதற்கு மாறாக ஏதும் அறியாத இலங்கை தூதுவரகத்தின் முன் சென்று 'கைது செய்தவர்களை விடுதலை செய்' என்று கூறி மறியல் செய்வது, போராடுவது என்ற நிலை வரும்போதுதான் சட்டம், ஒழுங்கு குறுக்கிடுகிறது. கைதுசெய்த அரசை எதிர்த்து இந்தக் கோட்டைக்கே ஊர்வலமாக வந்திருக்கலாம். இந்த அரசிடம் கேட்டிருக்கலாம். இந்த அரசிடம் முறையிட்டிருக்கலாம். அதற்கு மாறாக நடந்ததால்தான் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்களின் மேலான கவனத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்களை நாம் எல்லோரும் தலைவராக ஏற்றுக் [illegible]கொண்டிருக்கிறோம். பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் அன்றைக்குக் [illegible] போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். அண்ணா அவர்களுக்கு மாலை போட உரிமையில்லையா? அண்ணாவுக்காக எடுக்கிற விழாவே நடக்க [illegible]

முடியாத அளவிற்கு, அவருடைய பெயர் நாட்டுக்குத் தெரியக் கூடாது, நாம் நடத்துகிற காரியங்கள்தான் நாட்டுக்குத் தெரிய வேண்டுமென்று சொல்லுகிற அளவிற்கு, அண்ணா பிறந்த நாள் அன்றே மறியல் செய்திருக்கிறார்கள். அண்ணா பிறந்திருந்தார் என்பதே வெளியே வரக்கூடாது என்றும் தாங்கள் எடுக்கிற நடவடிக்கைகள்தான் மேலோங்கி நிற்க வேண்டும் என்றும் கருதி, அண்ணா பிறந்த நாள் அன்று பிரச்சினைகளை உருவாக்கியிருக்கிறார்களே, அவர்களைப் பார்த்து, அண்ணா மீது இருக்கின்ற நம்பிக்கை எங்கே போய்க் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்கிறேன். மூத்தவராக இருக்கின்ற திரு. நீலநாராயணன் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அண்ணா பிறந்த நாளன்று இந்தப் பிரச்சினை வேண்டாம், இன்னொரு நாள் வைத்துக் கொள்ளுங்கள் என்று தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தெளிவாகக் கேட்டுக் கொண்டார்கள். ஆனால், அண்ணா பிறந்த நாளில் இப்படியொரு அசம்பாவிதம் நடக்க வேண்டும், அண்ணாவுக்குக் களங்கம் உருவாக்க வேண்டும் என்று யார் நினைத்தாலும், அதைத் தடுக்க வேண்டுமென்று கருதி, அதை நிரூபிக்கக் கூடிய வகையிலே புரட்சித் தலைவர் அவர்கள் நடவடிக்கை எடுத்தார்கள். எப்படியாவது இவர்களை சிறைச்சாலைக்கு அனுப்பி, அதன் மூலம் இந்த அரசை நடத்த வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை என்பதை மிகத் தெளிவாகக் கூற விரும்புகிறேன்.

அண்ணன் நீலநாராயணன் அவர்கள் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி ஆங்காங்கே சுட்டிக்காட்டினார்கள். அவர் பேசும்போது. குற்றங் குறைகள் ஏதாவது சொல்லுவார் என்று எதிர்பார்த்தேன். ஒன்றிலேகூட அவர் குறை கண்டதாகத் தெரியவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அண்ணன்—தம்பி பிரச்சினை போதும்.

திரு. ஜேப்பியார் : அண்ணன் தம்பிகளாகத்தான் இருக்க விரும்புகிறோம். ஆனால், பங்காளிகளாக மாறும்போதுதான் பிரச்சினைகள் வருகின்றன.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அண்ணன்—தம்பி உறவில் இரண்டு வகை உண்டு, ஒன்று உடன் பிறந்தவர்கள். பங்காளிகளும் அண்ணன்—தம்பிகள்தான்.







திரு. ஜேப்பியார் : மத்திய அரசுக்கு நாங்கள் பயப்படுகிறோம் என்று சொன்னார்கள். இந்த வார்த்தையைக் கேட்டபோது, அது எனக்குப் புரியாத புதிராக இருந்தது. "மத்திய அரசுக்குப் பயப்படுகிறார்கள்" என்று அவர் சொன்னபோது, உண்மையிலே வேதனையடைந்தேன். நானும், அவரும், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சீதாபதி மற்றும் திரு. வீராசாமி ஆகியோரும் 1976 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் 1 ஆம் நாள் அன்றைக்கு மத்திய சிறைச்சாலையிலே இருந்தவர்கள். திரு. நீலநாராயணன் அவர்களுக்குப் பல்வலி வந்து வேதனைப்பட்டு அவர் வெளியே போக வேண்டுமென்று முயற்சி செய்தபோது, அதற்கு அனுமதி கிடைக்காத சூழ்நிலை அவருக்கு ஏற்பட்டது. அதைப் போலவே, திரு. வீராசாமிக்குக் காது வலி வந்தபோது, சிறைச்சாலையை விட்டு போகக்கூடாது என்று முடிவெடுத்த நேரமும் உண்டு. அப்போது தமிழ்நாடு மத்திய அரசு ஆட்சியில் இருந்த நேரம். மத்திய அரசு மிசா சட்டம் வந்தபோது, அது வரக்கூடாது என்று தீர்மானங்கள் போட்டவர்கள். அப்படிப்பட்டவர்கள் இன்றைக்கு மத்திய அரசுக்கு பயப்படுகிறார்கள் என்று சொல்லுவதன் மூலம் தமிழக அரசுக்கும், மத்திய அரசுக்கும் இடையே இருக்கின்ற சுமூகச் சூழ்நிலையை எப்படியாவது குலைக்க வேண்டுமென்றும், அதிலே தங்களுக்கு ஏதாவது ஆதாயம் வருமா என்ற சிந்தனையின்பேரிலும் சொல்லப்பட்டிருக்கும் என்று கருதுகிறேன். அவர்களே அடிக்கடி சொல்லுவார்கள், "உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்" என்று. இத்தகைய இலட்சியங்களை இவர்கள்தானே நாட்டிலுள்ள இலட்சோப இலட்சம் மக்களின் உள்ளங்களில் ஊற வைத்தவர்கள். அந்த உரிமையும், உறவும் சமீப காலத்திலே எங்கே அடமானம் வைக்கப்பட்டன, அந்த உரிமையும், உறவும் இப்போது எங்கே ஓடி ஒளிந்து கொண்டன, என்ற கேள்விகளை மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். ஆனால், இன்றைக்கு இருக்கின்ற அரசைப் பார்த்துக் கேட்கிறார் கள்.....நேற்று கூட புரட்சித் தலைவர் தலைமையில் சென்று அண்ணா சமாதியில் உறுதிமொழியை எடுத்துக் கொண்டோம். இந்தி மொழியோ அல்லது வேறு எந்த மொழியோ தமிழை ஆட்சி செய்ய விட மாட்டோம் என்ற உறுதிமொழியை எடுத்துக் கொண்டோம். யாருக்கும் அடிமை இல்லை, சம நிலையில் வாழ்வோம் என்ற தத்துவங்களைத் தந்திருக்கிறார் புரட்சித் தலைவர். அத்தகைய தத்துவங்களைத் தந்த அனைத்திந்திய அண்ணா தி. மு. க. எவருடைய ஆதிக்கத்திற்கும் கட்டுப்பட்டதல்ல என்பதைத் தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

தமிழன் என்று பேசினார்கள், தமிழ் என்று பேசினார்கள், தமிழைப் பற்றிப் பேசினார்கள். ஆனால், அவர்களுடைய 7 ஆண்டுக் கால ஆட்சியில் தந்தை பெரியார் சீர்திருத்த எழுத்தை எண்ணிப்பார்க்காத நேரம் இருந்தது. நீதிமன்றத்தின் படிக்கட்டுகளில் தமிழ் ஏறவிடாமல் தடுத்த நேரம் இருந்தது. ஆனால் இன்றைக்கு, பல்கலைக் கழக மானியக்குழுவின் அனுமதியைப் பெறாமலே தமிழ்ப் பல்கலைக் கழகத்தை ஆரம்பித்து விட்டார்கள் என்று பேசினார்கள். அவர் சீர்திருத்தவாதியாகப் பேசினார்.

திரு. நீலநாராயணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பல்கலைக் கழக மானியக் குழுவின் அனுமதியைப் பெறாமலே தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாக பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது; அந்தச் செய்தியைப்பற்றி அரசு எதுவுமே குறிப்பிடவில்லையே என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. இப்போது நிலவரம் எப்படி இருக்கிறது என்பதைத்தான் நேற்று நான் கேட்டேன்.

(முற்பகல் 11-00)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே இந்தப் பிரச்சினை தமிழ்நாட்டின் உரிமையினுடைய அடிப் படையிலே, இந்தச் சட்ட மன்றத்திலே பேசப்பட்ட பிரச்சினையாகும். தமிழ்நாடு அரசுக்கு ஒரு பல்கலைக் கழகத்தை ஆரம்பிக்க உரிமை இருக்கிறதா இல்லையா என்பதையும், அத்தகைய உரிமை இருக்கிறது என்ற அடிப் படையிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தமிழ்ப் பல்கலைக் கழகத்தைத் தொடங்குவது என்றும், ஏழாண்டுக் காலம் ஆட்சியிலே இருந்த திராவிட முன்னேற்றக் கழகம் அந்த உரிமையைப் பயன் படுத்திக்கொள்ளவில்லை என்றும் அந்த நேரத்திலேயே சொல்லித்தான் நாம் அதைக் கொண்டு வந்தோம். பல்கலைக் கழக மானியக் குழுவினுடைய அனுமதி பெற்றுத்தான் ஒரு பல்கலைக் கழகம் ஆரம்பிக்க வேண்டுமென்பது இல்லை என்பதைத்தான் இப்போது ஆரம்பித்திருப்பது காட்டுகிறது. பல்கலைக் கழக மானியக்குழுவினுடைய அனுமதி தேவையில்லை. அவர்களிடத்திலே நிதி தேவை என்று நாம் போவோம். அவர்கள் போடுகின்ற நிபந்தனைகளின்படி, அவர்கள் சொல்லுகின்ற கருத்துக்களின்படி இருந்தால், நிதி தருவார்கள். இன்னும் சொல்லப்போனால், பல்கலைக்கழகத்தினுடைய மானியக்குழுத் துணைத் தலைவர் திருமதி மாதுரி ஷா அவர்களுடைய சடிதத்தின் அடிப்படையிலேதான், இந்தப் பல்கலைக்கழகத்தினைத் தொடங்கியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





திரு. ஜேப்பியார் : இப்போது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாரா யணன் அவர்கள் கூட ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆக தமிழைப் பற்றிப் பேசி, நாங்கள்தான் தமிழர்கள் என்று நாடு முழுவதும் பேசிப் பேசி, கடைசியில் தமிழைப் பற்றியே பேசுகின்ற நிலைமையில் துருப்புச் சீட்டைப் போடுவதுபோல, தமிழகத்தின் பட்டாவும், பாத்தியதையும் தங்க ளுக்குத்தான் என்பது போலவும் இருக்கிறார்கள். நாடு முழுவதும் அப்படி யெல்லாம் பேசி வந்தார்கள். நம்மைத் தலைமை தாங்கி நடத்துகின்ற ஐயா அவர்கள் கூட, 'நீதி மன்றத்திலே வழக்கறிஞர்கள் ஆங்கிலத்திலே பேசி [illegible] என்ன [illegible]. அப்போது கட்சிக்காரர்கள் அவர்கள் வழக்கில் என்ன பேசுகின்றார்கள் என்பதுகூடத் தெரியாமல் இருப்பார்கள்' என்ற கருத்தை [illegible] இருக்கிறார்கள். தமிழகத்திலே பேசினார்கள். 'அவர்கள் எல்லாம் தமிழிலேயே பேசினால்தான் புரியும்' என்று சில இடங்களிலே கொள்கை விளக்கங்களை வைத்துப் பேசுகிறபோது, இந்தக் கருத்தினை வைத்துப் பேசியிருக்கிறார்கள். அப்படிப் பேசக்கூடிய அவர்களே இங்கே தலைமை தாங்கிக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப் பேசி, அதை ஆதரித்து வந்த தமிழ் அரசு வந்தபோதுகூட, அது நீதிமன்றங்களில் நுழையவே இல்லை. அறிஞர் அண்ணா பல்கலைக்கழகம் என்பதை எண்ணிப் பார்க்கவில்லை. ஆட்சியிலே இருந்த அவர்கள் 1969-லே சென்ற பிறகு, 1976 வரைக்கும் தமிழை வளர்ந்த அண்ணா, போதும் கூட, அண்ணா அவர்கள் பெயரிலே, [illegible] அண்ணா அவர்கள். [illegible] மாநாடு கண்ட அண்ணா, தமிழ் நாட்டை ஆண்ட அண்ணா அவர்களின் [illegible] எங்கேயாவது எந்த இடத்திலாவது நினைவு கூறும் அளவிலே [illegible] சொல்கின்றார்கள். [illegible]? உறுப்பினர் அவர்கள் குறுக்கிட்டுச் [illegible] நம் [illegible]. மக்கள் நினைவுகூர்கின்ற அளவிலே, எதிர்காலத்திலே உருவாகியிருக்கிறதா? [illegible] எல்லாம் பயன்பெறுகின்ற வகையிலே ஒத்துக்கொண்டிருக் [illegible] தீர்மானங்களை, கொள்கைகளை [illegible] நிலையில், அவருடைய எண்ணங்களை இந்த நாட்டிலே நிறைவேற்றி [illegible]? அப்படி இல்லை என்றாலும் இன்றைக்கு இந்த அரசு செய்கின்ற [illegible]க்கு நன்றியாவது கூறுவதுண்டா? கவர்னர் உரைக்குக் கூட நன்றி [illegible]. இந்த தஞ்சைத் தரணியைப் பாருங்கள். தஞ்சையில் [illegible] என்று பேசினார்கள். அந்த தஞ்சைத் [illegible] விளையாடுகிறது [illegible] தமிழ்ப் பல்கலைக்கழகம் இருக்கிறது. இப்போது அதற்கு ஒரு [illegible] வார்த்தை சொல்லவில்லை. தமிழ்ப் பல்கலைக்கழகம் கொண்டு வந்தீர்கள் என்றுகூட ஒரு வார்த்தை சொல்ல விரும்பவில்லை. இவ [illegible]

காரியங்களை விமர்சிக்கின்றார்கள். இந்தப் பிரச்சினை விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டது. தமிழ்தான் எங்கள் சொத்து, தமிழை விட்டால் வேறு வழி யில்லை என்று சொல்கிறோம். கட்சிக்குக் கிடைத்த மூலதனமே, சொத்தே அதுதான். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை வந்திருக்கிறது. அதையும் நான் வரவேற்கிறேன். ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகம் வந்திருக்கிறது. அதற்கு ஒரு பாராட்டு சொல்ல வேண்டாமா, நன்றி சொல்ல வேண்டாமா? இப்படிப்பட்ட ஒரு பல்கலைக் கழகம் வந்திருக்கிறது, ஆயினும் இடையிலே சில சிக்கல்கள், தவறுகள் ஏற்பட்டிருக்கலாம் என்று ஆறுதலாக ஒரு வார்த்தை சொல்லியிருக்க வேண்டும். அப்படிச் சொல்லியிருந்தால்கூட, நான் ஒத்துக் கொள்வேன். அதற்காக நான் பெருமைப்பட்டிருப்பேன். பாவேந்தர் பாரதி தாசனைப்பற்றி நாட்டிலே பேசியிருக்கிறோம். அவர் பாடிய கவிதைகளைப் பற்றி பேசியிருக்கிறோம். பாரதிதாசன் யார் தெரியுமா என்று கேட்டிருக் கிறோம். அவர் கவிதைகளை மேடைகளிலே, கூட்டங்களிலே எடுத்துப்பேசி வந்தோம். அவருக்கு உலகத் தமிழ் மகாநாட்டிலே ஒரு சிலை எழுப்பினோம். அதைப்பற்றிக் கூட ஒரு வார்த்தை சொல்லவில்லை. அவர் பெயரிலே இன்றைக்கு ஒரு பல்கலைக்கழகம் வருகிறது. அதற்குப் பாராட்டு சொல்லி யிருக்கலாம். பிறகு ஆறுதலாக, அதிலே சிக்கல்கள் இடையிலே ஏற்பட் டிருக்கின்றன என்று சொல்லியிருக்கலாம். அப்படிச் சொல்லியிருந்தால், நான் பெருமைப்பட்டிருப்பேன். அறிஞர் அண்ணா பெயரிலே ஒரு பல்கலைக் கழகம் வருகிறது என்று பாராட்டிச் சொல்லியிருக்கலாம். அப்படிச் சொல்லி யிருந்தால், அவர்கள் நெஞ்சில் அந்த நல்ல எண்ணம் இருக்கிறது என்று சொல்வேன். அப்படிச் சொல்லும்போது, இப்போது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கங்கள் போன்று விளக்கங்களைக் கொடுக்கலாம். இப்படி விளக்கங்களைச் சொல்லி முழுமையான நன்றியை எதிர்பார்த்தேன். அவர்கள் இங்கே நன்றியைச் சொன்னால், பின்னாலே சோதனை ஏற்பட்டுவிடும் என்று கருதித்தான் நன்றி சொல்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இன்று தமிழ்ப் பல்கலைக் கழகம், பாரதிதாசன் அவர்கள் பெயரிலும், அறிஞர் அண்ணா அவர்கள் பெயரி லும் வந்திருக்கிறது. தமிழ், தமிழ் என்று சொல்லி இன்று சட்டமன்றத் திலும் தமிழ் வந்திருக்கிறது. அன்றைக்கு ஏறி இறங்கி, அடைக்கப்பட்டு உள்ளே தமிழ் நுழையமுடியாது இருந்தது. அப்படி இருந்த நிலைமை மாறி, இன்றைய முதல்வர் அவர்கள், எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் நீதிமன்றத்திலே வீட்டு, "தமிழே நீ கொஞ்சி விளையாடு, தமிழே நீ பேசு" என்று சொல்லியிருக்கிறார்கள். [illegible]





இன்றைக்கு அதற்கும் குறை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அரசு நல்ல நோக்கத்தோடு கொண்டு வந்தது என்று சொல்லிவிட்டு, அந்த நோக்கம் செயல்படும்போது, இடையிலே தவறுகள் வந்திருக்கக்கூடும் என்று சுட்டிக் காட்டியிருந்தால், தமிழ், தமிழ் என்று சொல்லிக்கொண்டிருப்பவர்களுக்கு, தமிழைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்றவர்களுக்கு, இது ஒரு நல்ல சந்தர்ப்பத்தைக் கொடுத்திருக்கும். பேச்சே போலியானதாக இருக்கிறது. இதை உதட்டிலே பேசிவிட்டு உள்ளத்திலே மறைத்து வைத்திருக்கிறார்கள். நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, தன்னிறைவுத் திட்டம். அதைச் சொல்கின்றபோது, ஒத்துக் கொள்ளமாட்டார்கள். அது என்ன தன்னிறைவுத் திட்டம், அதிலே என்ன நடந்துவிட்டது என்று நினைக்கின்றார்கள். தலைநகரிலே இருந்துகொண் டிருப்பவர்கள் அப்படி நினைக்கிறார்கள். ஆனால், கிராமத்திலிருந்து வந் திருப்பவர்கள், "ஏதோ வேலைகள் நடக்கின்றன. ஆனால், அதிலே தப்பு நடக்கிறது" என்றுதான் சொல்வார்கள். அது இயற்கை. அது வாடிக்கை. எதிர்க் கட்சியிலே இருப்பதால் அப்படித்தான் பேசவேண்டும் என்று இருக் கின்றதோ என்னவோ எனக்குத் தெரியாது. அங்கே வேலை நடக்கிறது. சேர்ந்து போடுகிறார்கள், கட்டிடங்கள் கட்டுகிறார்கள், பள்ளிக்கூடங்கள் கட்டு கிறார்கள். ஆனால், அங்கே வேலை நடந்தாலும், அதிலே சில தவறுகள் ஏற்பட்டுவிடுகின்றன என்று சொல்லியிருக்கலாம். இந்த எண்ணம் நல்ல எண்ணம் என்று சொல்கின்ற அளவுக்குக்கூட நெஞ்சிலே நல்ல எண்ணம் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அதற்காக நான் வருத்தப் படுகிறேன்.

இன்னொன்றைக் கடைசியாகச் சொன்னார்கள். சட்டம் ஒழுங்கே இல்லை என்று சொன்னார்கள். நிம்மதியாக இருக்க முடியவில்லை என்று சொல்கின்றார்கள். இந்த ஆட்சியிலே என்னதான் செய்வது என்று அவரே [illegible] சொல்கிறார் இன்றைக்கு சபைக்கு வருகிறார், பேசுகிறார். பொதுக்கூட்டத்தில் பேசுகிறார். "சட்டம் ஒன்றும் இல்லை. நாடே ஸ்தம்பித்து விட்டது. ஒழுங்குமே இல்லை" என்று சொல்கின்றபோது, நாம் ஒன்றை [illegible] ஆட்சி பீடத்திலே இல்லாமல் இருந்திருந்தா [illegible] பேசினால் ஒருவேளை தெரியாமல் புதிதாக உள்ளே வந்திருந்து இப்படிப் [illegible] பெரிய [illegible] பேசுகிறார்கள் என்று சொல்லலாம். [illegible]

[திரு. ஜேப்பியார்] [1982 பிப்ரவரி 4

பொறுப்புகளிலே இருந்தவர்கள், இங்கே இருந்து ஆட்சி செய்தவர்கள், அத்துறையையும் தொடர்ந்திருப்பவர்கள் இப்படிப் பேசுகிறார்கள். எங்களுடைய தலைவர் வீட்டிலே என்று சொன்னார்கள். அவர் பெயரைச் சொல்லக் கூடாது. அந்தத் தலைவர் இருக்கின்ற பகுதியிலேதான் நானும் இருக்கிறேன். பக்கத்தில் இரண்டாவது தெரு 5 ஆம் நெம்பர் வீட்டிலேதான் குடி இருந்தேன். நான்கூட கோபாலபுரத்தில்தான் கிட்டத்தட்ட 12 ஆண்டுகளா இருக்கிறேன். அங்கே என்னைத் தேடுகிறபோது, நான் கிடைக்காத நேரத்திலே, நான் படுக்கின்ற கட்டிலுக்குக் கீழே ஒளிந்திருக்கிறேன் என்று தேடினார்கள். என்னுடைய மனைவியிடம் கூட கேட்டார்கள். மனைவிகளை உதாரணம் காட்டிச் சொல்வது நாட்டிலே மலிந்துவிட்டது. தொட்டுத் தாலி கட்டிய மனைவியைக் கைபிடித்துவிட்டார்கள் என்று நாம் சொல்வது சரியல்ல. அப்படிப்பட்ட உதாரணங்களைச் சொல்வது விரும்பத்தக்கதல்ல. தொடாமல் இருந்தால்கூட தொட்டான் என்று சொல்லி, அந்தத் தாய்மார்களுக்குக் களங்கம் உருவாக்கக்கூடாது. மனைவியை உதாரணம் காட்டி அதையெல்லாம் ஆசிரியருக்குக் கொண்டுவந்து அதற்கு ஒரு களங்கம் உருவாக்கவேண்டாம். மனைவியைப் பிடித்தார்கள், தங்கையைப் பிடித்தார்கள் என்று சொல்வது சரியல்ல. இப்படியெல்லாம் உதாரணம் சொல்வது ஜனநாயக நாட்டிலே தேவையில்லை என்று கருதுகிறேன். என் வீட்டிலேகூட நடந்தது. அன்றைக்கு சொல்வதற்கில்லை. என்னுடைய கட்டிலையே உடைத்தார்கள். இந்த மாமன்றத்திலே நான் இல்லை, சொல்ல முடியவில்லை. நான் சொன்னால் அதை அன்று அரசு ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. நானும் சொல்லவில்லை. ஆனால், இன்று சொன்னால் கேட்கின்ற இடத்திலே சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். இந்த அரசு பணியை செய்யும் என்று சொல்கின்றார்கள். தனக்கு இருக்கின்ற திறமை, அந்த ஆற்றலை மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறார்கள். அப்படிச் சொல்லிக்கொண்டே, தள்ளிப்போட்டுக் கொண்டே அரசியலைத் தொடர்ந்து கொண்டிருக்கிறோம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி** : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஜேப்பியார் அவர்கள் பேசும்போது குறுக்கிட வேண்டாம் என்றுதான் இருந்தேன். ஆனால், அவர் வேண்டுமென்றே உண்மைகளை மறைத்து தவறான கருத்துக்களை அவைக்குக் கொடுத்துக் கொண்டிருப்பதால் குறுக்கிட்டுப் பேசவேண்டியிருக்கிறது. முன்னாள் முதல்வர் அவர்கள், எங்கள் கட்சியினுடைய தலைவர், கலைஞர் அவர்கள் வீட்டுப் பெண்களை, காவல்துறை நடத்திய முறைபற்றி பத்திரிகைகளில் செய்திகள் வந்தன. பாதிக்கப்பட்டவர்களே பத்திரிகை நிருபர்களிடம் அங்கே



1982 பிப்ரவரி 4] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

நடந்த சம்பவங்களின் விவரங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த விவரங்கள் பத்திரிகைகளிலே வந்திருக்கின்றன. ஆனால், உறுப்பினர் அவர்கள் காவல் துறையினர் சொல்வதை மட்டும் வைத்துக்கொண்டு இந்த அவையிலே சொல்லிக்கொண்டிருக்கிறார். உண்மையிலேயே உண்மைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால், பெரிய விசாரணை வேண்டாம். அன்றையதினம் விமான தளத்தில் கலைஞர் அவர்களுடைய வீட்டுப் பெண்களைக் காவல் துறையினர் எப்படி நடத்தினார்கள் என்பதை முதலமைச்சர் அளவுக்காவது ஒரு விசாரணை நடத்தி, அவர் உண்மைகளைத் தெரிந்துகொண்டு அறிக்கை ஒன்று தருவாரானால், அதை நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். ஆனால் நடந்துவிட்ட ஒன்றைத் திரித்து, ஏதோ பெண்களைப் பற்றியெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நான் பிரச்சினைக்குள்ளே போக விரும்பவில்லை. வேண்டுமென்றே திட்டமிட்டு அவமானப்படுத்த வேண்டுமென்ற அளவில் காவல் துறையினர் கைபிடித்து இழுத்து, தள்ளி, கேவலமான வார்த்தைகளைப் பேசியதைப் பார்த்த அந்த விமான நிலையத்தில் இருந்தவர்கள், அங்கே இருக்கின்ற பணியாளர்கள், இருக்கின்றார்கள். தாங்கள் எப்போது எங்கே நிரூபிக்க வேண்டுமென்று சொல்கின்றீர்களோ அங்கேயே அத்தனை பேரையும் அழைத்துக்கொண்டு வருகிறோம். இங்கே அவையிலே வந்துகூட சொல்ல ஏற்பாடு செய்கிறோம். அந்தப் பொறுப்பை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11.10)

எப்போது, எங்கு நிரூபிக்க வேண்டுமென்று சொல்லுகிறார்களோ, அப்போது அத்தனை பேரையும் அழைத்துக்கொண்டு வருகிறேன். இந்த அவையிலேகூட பார்த்தவர்களைச் சொல்லச் சொல்ல ஏற்பாடு செய்கிறேன். அந்தப் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்** : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் முதல்வர் அவர்களே விசாரித்து, இங்கே அறிக்கை சமர்ப்பித்தால் நன்றி உடையவனாக இருப்பேன் என்று சொல்லிவிட்டு, பிறகு எதிர்க் கட்சி என்ற நிலையிலே ஒரு விளக்கத்தையும் தந்திருக்கிறார்கள். அந்த விளக்கத்தை அவர்கள் ஆதாரத்தோடு கருவதாகவும் சொல்லிவிட்டு, முதலமைச்சர் விசாரித்துச் சொன்னால் அந்த அறிக்கையை ஏற்றுக்கொள்கிறேன் என்று சொன்னால், எப்படிப் பொருத்தமாக இருக்குமென்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

I would like also to bring to the notice of the Government my special subject, namely, the homes for children and I am the president of the Association. We have 375 homes in the State of Tamil Nadu and the grant that is given to these homes is only Rs. 14 per child per mensem. When the prices of food and other articles are going up, it has become impossible for these homes to run with the grant of Rs. 14 in the City and Rs. 13 in the districts. We would be happy if this grant is increased to a reasonable amount, not less than Rs. 45, as we find that the running of these homes is very difficult. These homes are looking after more than 60,000 orphans. This service is not possible only by the Government and the existence of voluntary agencies is very necessary. I am reminded of the words of the great Churchill that voluntary effort is the outcome of individuals' labour, blood and sweet and such voluntery effort has to be recognesed. Unless the support of voluntary organisations is sought, it is not going to be possible for the Government to run these institutions.

Sometimes I feel very sorry when some of our honourable Members, in season and out of season, criticise the efforts of voluntary organisations. They go on saying this and that and they even mention the names of individuals conected with voluntary organisations and those individuals are not in a position to protect themselves in this august body. I would request them not to do that because those voluntary organisations are equally interested in the welfare of teachers. I would like to tell them that it is not proper to mention the name of an individual and say that he did this an that, without knowing the fact. Voluntary work is not so easy and when this State is very well known for its voluntary effort, bringing in names of individuals in this august body is not quite proper. With these words, I thank the Hon. Deputy Chairman for having given me this opportunity to speak on the Governor's Address.

(முற்பகல் 11-20)

* திரு. ஆர். டி. சித்தாபதி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்தியதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதற்கு முன்பு, தஞ்சை மாவட்டத்திலே மார்க்சிஸ்ட்





கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சார்ந்த நண்பர்
கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த, கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சார்ந்த நண்பர் காரணமாக 3 பேர் மாண்டது
கள், அண்மையில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு காரணமாக 3 பேர் மாண்டது
குறித்து, நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே,
இந்த அவைக்கு என்னை அனுப்பி வைத்த கழகத் தலைவர் டாக்டர் கலைஞர்
அவர்கள் சார்பிலே, என்னுடைய இரங்கலையும் அவர்களுடைய குடும்பத்
திற்கு ஆறுதலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு, ஆளுநர்
உரையில் அதுகுறித்து சுட்டிக்காட்டாமல் விடுபட்டிருப்பதற்கு என்னுடைய
கண்டனத்தைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையைத் துவக்க
முற்படுகிறேன்.

இந்த அவையில் பல்வேறு அரசியல் இயக்கத்தைச் சார்ந்த வல்லுநர்கள்
இருக்கிறார்கள். இந்த அவையை எந்த முறையில் முறையாக நடத்த
வேண்டுமென்று ஒத்துக்கொள்ளப்பட்டதோ, அந்த முறையிலிருந்து சற்றும்
பிறழாமல் பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலிருந்து நடத்தப்பட்டு
வருகிறது. அதுமட்டுமல்ல. பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலிருந்து
நான் இந்த இயக்கத்தில் உறுதியான கொள்கையோடு அதே இயக்கத்திலே
தொடர்ந்து பணியாற்றுகின்ற தொண்டன் என்கிற முறையில் அவையடக்கத்
தோடு சில எண்ணங்களை, கருத்துக்களை நான் ஆளுநர் உரையின் மீது
தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். நான் முன்னரே சுட்டிக்காட்டி
யிருக்கிறேன். விலைவாசி உயர்வு சம்பந்தமாக இந்தியத் துணைக் கண்டம்
பூராவும் கதவடைப்பு ஏற்பட்டது. ஒரு நாள் மறியல் என்ற முறையில்
இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த
வர்கள் அதனை நடத்தினார்கள். அந்த மறியலைப் பொறுத்தவரையில்,
அது சரியா அல்லது தவறா என்கிற விவகாரத்திற்குள் நான் போகாமல் சில
விவரங்களை மட்டும் சொல்கிறேன். அந்தச் சம்பவம் நடைபெற்றது தொடர்
பாக மத்திய அரசு 400 தொழிலாளர்களைத் தற்காலிகமாக நடவடிக்கை
எடுத்து வேலையிலிருந்து நீக்கியது. இதனை நாடறியும். அவர்களை
வேலையில் மீண்டும் மத்திய அரசு அமர்த்திக்கொண்டதையும் நாடறியும்.
ஆனால், தமிழக அரசு இதுசம்பந்தமாக 400 பேர்களைத் தற்காலிகமாக
வேலையிலிருந்து நீக்கியது. இன்னும் அவர்களை வேலையில் திரும்ப அமர்த்திக்
கொள்ளவில்லை. மத்திய சர்க்கார், மாநில சர்க்காருக்கு இதில் ஈடுபடுபவர்
கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டாலும்
கூட, தன்னுடைய தொழிலாளர்களைத் தற்காலிகமாக வேலையிலிருந்து
நீக்கினாலும் கூட, பின்னர் அவர்களை வேலையில் இணைத்துக்கொண்டது.
அது போல், இந்த அரசும் ஏன் செய்யக் கூடாது? அதை விரைவில் செய்ய
வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

[திரு. ஆர். டி. சித்தாபதி] [1982 பிப்ரவரி 4

அடுத்தாற்போல், 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதாகவும் வாக்
குறுதிகளை அரசு நிசயமாகப் பேணிக் காக்கும் என்றும் ஆளுநர் உரையிலே
சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அதிலே குறிப்பாக ஒன்றைச் சொல்ல
வேண்டும். சுகாதார மேம்பாட்டு நாள் மேற்கொள்ளப்படும் என்று ஆளுநர்
உரையிலே எண்ணங்களைத் தெரிவித்திருக்கிறார்கள். நான் ஒன்றைக்
கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். சுகாதாரப் பிரச்சினை என்று வருவதால்
ஒன்று சொல்கிறேன். தமிழகத்தினுடைய தலைநகராம், சிங்காரச் சுந்தர
சென்னை மாநகராம் சென்னையினுடைய சுகாதார நிலைமை இன்றையதினம்
எப்படி இருக்கிறது என்பதை நான் சொல்கிறேன். அரசியல் காழ்ப்புணர்ச்சி
யுடன் நான் பேசுகிறேன் என்று என்னுடைய எதிர் வரிசையில் அமர்ந்திருக்
கின்ற நண்பர்கள் கருதமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். ஏனென்று
சொன்னால் நான் மிகப் பெரிய தலைவரும் அல்ல, கீழே இருக்கின்ற தொண்ட
னும் அல்ல, இடையிலே இருக்கின்ற ஒரு சாதாரண ஊழியன் என்றுகூட
என்னைச் சொல்லலாம். ஆனால், சென்னை மாநகரம் இன்றைய தினம் எந்த
அளவுக்குச் சீர்கேடு அடைந்திருக்கிறது என்பதையும், அதனை இந்த அரசு
எந்த அளவுக்குக் கண்காணித்துக் கொண்டு வருகிறது என்பதையும் நான்
சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். ஓரிரு கருத்துக்களை
மட்டும் சொல்கிறேன். மாநகரிலே இருக்கின்ற வட்டங்கள் மொத்தம் 150.
சென்னையிலே இருக்கின்ற வட்டங்கள் 141. புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்ப
பட்ட புறநகர் வட்டங்கள் 9. இந்த வட்டங்களில் கார்ப்பரேஷனைச் சார்ந்த
மேல்மட்ட அதிகாரிகள் முதல் கீழ் நிலை ஊழியர்கள் வரை பணியாற்றுகிறார்
கள். ஆனால் அவர்கள் உண்மையில் பணியாற்றுவதில்லை. பல்வேறு பணிகளை
அவர்கள் செய்யாமல் தட்டிக் கழித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தந்த வட்
டங்களில் முறையாக நடைபெற வேண்டிய துப்புரவுப் பணிகள், சுகாதாரப்
பணிகள், கொசுத் தொல்லையை ஒழித்தல், மருத்துவ மனையை ஒழுங்காகப்
பராமரித்தல், மாநகராட்சிப் பள்ளிகளைச் சரிவர நடத்துதல் போன்றவை
களைச் சரியாகச் செய்யவில்லை. இப்படிப்பட்ட குறைகளைக் களைய அரசு
உடனடியாக சர்வ கட்சிகளையும் சேர்ந்த ஓர் உயர் மட்டக் குழுவை நியமிக்க
வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். யார் ஆட்சியில் இருக்கிறார்கள்
என்பதல்ல முக்கியம். யார் ஆட்சியில் இருந்தாலும், பொதுமக்களுக்காகப்
பணியாற்றுகிறோம் என்கிற எண்ணத்தோடு செயல்பட வேண்டும். இன்றை
க்கு இருக்கின்ற குறைபாடுகளைத் தீர்க்க வேண்டாமா? அதுவும் திராவிட
முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பேசுகின்ற சித்தாபதியின் கருத்துக்கு
மதிப்பு கொடுத்து அந்தக் காரியத்தை வெற்றி பெறச் செய்ய வேண்டுமா
என்று கருதுகின்ற நிலைக்கு, எதிர் வரிசையில் இருக்கின்ற என்னுடைய
பழைய திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களும், திராவிட முன்னேற்றக்
கழகத்தின் முன்னாள் பொருளாளரும் இந்நாள் முதலமைச்சர் ... வர்



1982 பிப்ரவரி 4] [திரு. ஆர். டி. சித்தாபதி]

மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். மாநகராட்சித் தேர்தலை உடனே
நடத்த வேண்டுமென்று நாங்கள் சொன்னால், அந்தக் கருத்தை அவர் எந்த
வகையில் புரிந்துகொண்டு வைத்திருப்பார் என்பதை எங்கள் பழைய நண்பர்
என்கிற முறையில் மிக நன்றாக அறிந்து வைத்திருக்கிறோம். ஆகவே தான்,
நான் தேர்தலை விரைவிலே நடத்த வேண்டுமென்று சொல்ல மாட்டேன்.
ஆனால் வட்டங்களில் பணியாற்றுகின்ற அதிகாரிகளை அரசாங்கம் உடனடி
யாக முடுக்கி விட வேண்டும். அதிகாரிகள் எங்கே கவனம் செலுத்துகிறார்
கள் என்றால், மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு.
வீரப்பன் அவர்களுடைய பகுதியிலும், அண்ணா சாலை, பூந்தமல்லி,
மாம்பலம் போன்ற பகுதிகளிலும்தான். என்னுடைய வீடு இருக்கின்ற தெரு
வுக்கு அவர்கள் வருவார்கள் என்று கருத வேண்டாம். குறிப்பாக நான் இருக்
கின்ற வட சென்னையை எந்த முறையிலும் அதிகாரிகள் அணுகுவதே இல்லை.
நான் மேலே சொன்ன மாதிரி, மேட்டுக்குடி மக்கள் வாழ்கின்ற இடங்களைக்
கணக்கெடுத்துக்கொண்டு அந்த மக்களுக்காக கார்ப்பரேஷன் அதிகாரிகள் பணி
யாற்றுவதால்தான், இருக்கின்ற குறைபாடுகளை உள்ளபடியே அவர்களால்
கவனிக்க முடியவில்லை. இது உள்ளபடியே வருந்தத் தக்கது. அதற்கான
நிலைமைகளைப் பற்றி ஆளுநர் அவர்களும் தன்னுடைய உரையிலே சொல்லா
தது உள்ளபடியே கண்டிக்கத்தக்கது. அது சம்பந்தமாக அண்மையில் அரசின்
கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக நான் மாநகராட்சி முன்னால் உண்ணா
விரதம் இருப்பதற்காக சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின்
சார்பாக அனுமதி கேட்டிருந்தேன். முந்தைய ஆட்சிக் காலத்தில் யார்
யாரெல்லாமோ 80 நாள், 90 நாள் என்று நாட்கணக்கில் 'டென்ட்' போட்டுக்
கொண்டு இருந்திருக்கிறார்கள். ஆனால், நான் மாநகராட்சி முன்னால்
உண்ணாவிரதம் இருக்கப்போவது முதலமைச்சருக்குப் பிடிக்கவில்லை.
ஆகவே, ஒரு பத்திரமான இடத்தில், அதாவது கார்ப்பரேஷன் காம்பவுண்டுக்கு
உள்ளே உண்ணாவிரதம் இருக்கச் சொன்னார்கள். நான் உள்ளே செல்ல
வேண்டுமென்று நம்முடைய முதல்வர் அவர்கள் விரும்பியிருக்க வேண்டும்.
ஆகவே உள்ளே போய் உட்கார் என்று சொன்னார்கள். ஆனால் நான்
சொல்கிறேன், "நான் எந்த நிலையிலும் அந்த 'பில்டிங்' உள்ளே போக
விரும்பவில்லை". தேர்தல் நடைபெற்ற பிறகும் நான் உள்ளே போக விரும்ப
வில்லை. மேலும் அவ்வாறு செய்வது ஒரு மரபாக ஆகிவிடும் என்பதால்,
அதற்குள் போக விரும்பவில்லை. அவ்வாறு போனால் நாளை எல்லா அரசியல்
கட்சிகளும் உள்ளே போக வேண்டியிருக்கும். மாநகராட்சியில் நடை
பெற வேண்டிய பணிகள் தடைபடும். அப்படிப்பட்ட மரபு வேண்டாம்
என்கிற அடிப்படையில் எங்கள் தலைவர் சொன்ன ஆலோசனையின் பேரில்
காவல்துறை அதிகாரியிடம் 150 பேர்தான் உண்ணாவிரதம் இருக்கிறோம்
என்று சொல்லி அனுமதி கேட்டோம். ஆனால், அனுமதி கொடுக்காமல்

என்னை சிறையில் அடைத்தார்கள். பிறகு 6 மணிக்கு திருப்பி அனுப்பி விட்டார்கள். இலங்கைத் தமிழர் பிரச்சினையிலும் இதேமாதிரி அரசு அணுகு முறையைப் பின்பற்றியிருந்தால், 7 பிணங்கள் விழுந்திருக்குமா ? பல பேர் தீயில் கருகிப் போன விரும்பத்தகாத சூழ்நிலை ஏற்பட்டிருக்குமா ? இதை யெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

(முற்பகல் 11.30)

அடுத்து, இன்றைக்கு இருக்கின்ற ஆளுநர் அவர்கள் எதற்கெடுத்தாலும் அவசரச் சட்டங்களைப் போடுகிற அசகாய சூராய் இருக்கிறார் என்று நான் கருதுகிறேன். அவரை நான் நேரில் பார்த்தபோது இதுபற்றிக் கேட்டேன். அவர் அதற்கு ' அரசு செய் ' என்று சொன்னால் செய்ய வேண்டிய நிலையில் அரசியல் சட்டம் இருக்கிறது என்று என்னிடம் தெரிவித்தார்கள். அந்த விவகாரத்தில் நான் போகாமல் ஒன்றைச் சொல்கிறேன். அரசு போடும் சட்டங்கள் மக்களுக்குப் பணியாற்றுவதற்கு இருக்கவேண்டுமேயல்லாமல் சிலரைப் பழி வாங்க வேண்டும் என்ற நோக்கத்துடன், சிலரை மனதில் வைத்துக்கொண்டு பழி வாங்கும் போக்குடன் இருக்கக்கூடாது. ஒரு பத்திரிகை மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால், அந்தப் பத்திரிகை ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் புதிய முறையிலே போய், அந்தப் பத்திரிகைக்கு டைரக்டராக இருக்கும் திரு. வீராசாமி போன்றவர்களை யெல்லாம் கைது செய்வதன் மூலம் இன்பம் காணலாம் என்று நினைக்க வேண்டாம். அண்ணா அவர்கள் அன்றைக்கே சொன்னார்கள். எந்த ஒரு அரசானாலும், எந்த இயக்கத்தை நசுக்கலாம் என்று நினைத்து அதற்கு நடவடிக்கை எடுக்கிறதோ அப்படி நசுக்கப்படும் அந்த இயக்கம் என்றைக்குமே அழியாது என்று சொன்னார்கள். அதை நான் இப்போது நினைவுபடுத்து கிறேன். இந்தப் பத்திரிகையைவிட மிகவும் உயர்ந்த பத்திரிகை கூட இந்த அரசைப் பற்றி மிகவும் தாழ்ந்த முறையில், உயர்நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் இந்த அரசின் மீது கொண்டு வந்த பல குற்றச்சாட்டுக்களைப் பற்றியெல்லாம், தன் ஏட்டில் விமர்சனம் செய்தபோதெல்லாம் அதன் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை ? அதன்மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசுக்கு பயமா ? நடுக்கமா? தயக்கமா? பார்த்தவுடனே பகட்டம் ஏற்படுத்தும் அந்தப் பத்திரிகை மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? ஆளும் கட்சித் தரப்பிலே ஆபாசமான



பத்திரிகைகள் நடத்தவில்லையா? அப்படி நடத்தவில்லை என்று சொல்ல முடியுமா? மாண்புமிகு அமைச்சர் திரு. வீரப்பன் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன், வேண்டுமானால் ஆளும் கட்சிக்காரர்கள் நடத்தும் ஆபாச மான பத்திரிகைகளை நான் தருகிறேன். அவர்கள் மீது இந்தப் பாதுகாப்புச் சட்டம் பாயுமா? நடுநிலையாக யார் தவறு செய்தாலும், அதைத் தெரிந்து செய்தாலும், அவன் தேவனாக இருந்தாலும் விடமாட்டேன் என்று எங்க ளுடைய பழைய பொருளாளர் பேசியிருக்கிறார். அதை நினைவில் வைத்துக் கொண்டுதான் இப்போது பேசுகிறேன் என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

பால் கமிஷன், அறிக்கையைத் தந்தார்கள். நான் பால் கமிஷன் அறிக்கை பற்றிய விவாதம் வரும்போது, அதுபற்றி விரிவாக விவாதிக்கலாம் என்று இருக்கிறேன். ஆனால் அதுசம்பந்தமாக இந்த அவையிலே இருந்து பணி யாற்றியவரை, எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு நீங்கள் தந்தவரை, இங்கேயிருந்து அனுப்பிய ஷண்முகநாதன், பி.ஏ. அவர்களைக் கைது செய் திருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அறிக்கையை வெளியிட் டால், அவரைக் கைது செய்திருக்கலாம். அவரோடு என்னைப் போன்றவர்கள் இருக்கிறோம், நாங்கள் கூட அதிலே சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று நீங்கள் நினைத்தால், எங்களையும் கைது செய்திருக்கலாம். ஆனால் நீங்கள் அனுப்பிய பி. ஏ. அவர்களை வேலையிலிருந்து நீக்குவதும் அவர் மீது வழக்கு போடுவதுமான நடவடிக்கைகளைத் தவிர்க்க வேண்டும். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு பி. ஏ. இல்லாவிட்டாலும் பரவாயில்லை, திரு. ஷண்முக நாதன் அவர்களை மீண்டும் இந்த அவைக்குக் கொண்டு வர வேண்டும் என்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஆளுநர் அவர்களுடைய உரையில் காவிரி நீர்ப் பிரச்சினைபற்றி மிகவும் விரிவாக எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற முறையில், அல்லது நம்புகிறோம் என்ற முறையில் குறிப்பிடப்பட்டிருக் கிறது. காவிரி நீர்ப் பிரச்சினை சம்பந்தமாக இந்த அரசு எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி நான் ஓரிரு எண்ணங்களைத் தெரிவிக்க விரும்பு கிறேன். நாட்டில் நீர் இருந்தால்தான், குடிமக்கள் உயர்வடைவார்கள். நம் முடைய தமிழகத்தில் காவிரி நீர் வர வேண்டும் என்று விரும்பும்போது, தேசிய நீரோட்டம் வரவேண்டும் என்று விரும்புகிறார்கள். தேசிய நீரோட்டத்தைப்பற்றிப் பேசுபவர்கள் எல்லாம் இந்த அரசுக்கு வேண்டியவர் களே. அந்த நண்பர்களோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்து பேசி

தேசிய நீரோட்டத்தைப் பற்றி பேசுவதோடு மட்டும் நிற்காமல், காவிரி நீரோட்டத்தைப் பற்றியும் பேசி, காவிரி நீரைக்கொண்டு வர முயற்சிக்க வேண்டும். நான் அப்படிச் சொல்லும்போது 'நீர் என்ன நீரோட்டம்' என்று மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் மனதிலே நினைக்கலாம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** நான் நினைப்பதாக உறுப்பினர் அவர்கள் நினைக்கலாம்.

**திரு. ஆர். டி. சித்தாபதி :** என்னைப் பொறுத்தவரையில், நான் மொழியில் தமிழன், இனத்தில் திராவிடன், நாட்டில் இந்தியன் என்ற உணர்வோடு தான் இருக்கிறேன். நாம் இந்தப் பிரச்சினையை அணுகும்போதும் இந்த உணர்வோடு இருக்க வேண்டும், நாமெல்லாம் ஒரே நாட்டைச் சேர்ந்தவர்கள், தேசிய உணர்வு நம்மிடம் இருக்க வேண்டும், தேசிய ஒருமைப்பாடு வேண்டும் என்றெல்லாம் சொல்லிக்கொண்டே நமது உரிமைகளை மத்திய சர்க்கார் பறிப்பது நியாயம் அல்ல. அதிலே என்ன நிலைமை எடுத்தாலும், நமது உரிமைகளைப் பெற தக்க நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்தால், நாங்கள் உறுதுணையாக இருப்போம்.. இதுசம்பந்தமாக சமீபத்திலே ஆளும் கட்சியோடு பணியாற்றிய திண்டிவனம் திரு. இராமமூர்த்தி அவர்களுடைய ஒப்புதல் கிடைக்கும் என்றும் நான் நம்புகிறேன். இதுபற்றி நிச்சயமாக அவர்கள் ஒத்துக்கொள்வார்கள். இது சம்பந்தமாக எந்தத் தீர்மானம் கொண்டு வந்தாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், என்னுடைய தலைவர் அவர்கள் சார்பில் நான் சொல்கிறேன், நிச்சயமாக அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் பக்கபலமாக இருக்கும்.

**திரு. க. இராமமூர்த்தி :** மத்திய அரசிடம் கேட்பதிலே எப்போதும் எந்தக் கட்சிக்கும் மாறுபாடு இருந்ததில்லை. இன்னும் சொல்லப்போனால், சென்னையை தமிழகத்தின் தலைநகராக ஆக்கவேண்டும் என்ற நிலை வந்த போது, மறைந்த திரு. இராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். ஆனால் சென்னை தமிழகத்தின் தனித் தலைநகராகும் நிலை இல்லை என்ற நிலை வந்தால், 'நான் முதலமைச்சர் பதவியிலிருந்து விலகுவேன்' என்றும் 'கடுமையான முறையில் போராட்டங்கள் நடத்துவோம்' என்றும் டெல்லிக்குச் சொன்னார்கள். திரு. காமராசர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும், பல போராட்டங்கள் நடத்தி மாநிலத்தின் உரிமைகளைக் காக்கும் நிலை ஏற்பட்டது. எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் காங்கிரஸ் கட்சிக்கு இதுதான் நிலையாக இருந்து வருகிறது. இப்போது காவிரி நீர்ப் பிரச்சினை இருக்கிறது. இந்தப் பிரச்சினையில் நம்முடைய நிலை என்ன என்பதுபற்றி நாம் தெளிவாக இருக்க வேண்டும். நம்மிடையே குழப்பம் இல்லாமல் இருக்க



வேண்டும். காவிரி நீர்ப் பிரச்சினையில் என்ன நம்முடைய நிலை என்று பார்க்க வேண்டும். அந்த நிலையை எல்லோரும் கடைப்பிடிக்கிறோமா என்று பார்க்க வேண்டும். ஒரு சமயம் கலந்து பேசலாம் என்று சொல்லி கலந்து பேசுவது, பிறகு சரியாகப் போய்விட்டது என்று தெரிவிப்பது, இன்னொரு சமயம் கர்நாடக அமைச்சரிடம் பேசலாம் என்பது இப்படியெல்லாம் அரசே தடுமாறும்போது பிரச்சினையும் முடிவடையாமல் தடுமாறுகிறது.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் காவிரி நீர்ப் பிரச்சினையில் . . .

**திரு. க. இராமமூர்த்தி :** இதை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மட்டும் என்று சொல்லவில்லை, அதற்கு முன்னே இருந்தவர்களுக்கும் சேர்த்துத்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தெளிவாக நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது என்று விளக்கிச் சொல்ல விரும்புகிறேன். மாநில அளவிலே கர்நாடக முதலமைச்சர் அவர்களும், தமிழக முதலமைச்சர் அவர்களும் கலந்து பேசலாம், பேச வேண்டும் என்ற முடிவுகூட தமிழக அரசு எடுத்த முடிவல்ல. மத்திய அரசு, 'கடைசியாக ஒரு வாய்ப்பு கொடுங்கள், அவர்களும் நீங்களும் மனம்விட்டுப் பேசுங்கள்' என்று சொன்னதன் பேரில்தான், அந்தப் பேச்சுவார்த்தை நடந்தது. நம்முடைய உரிமையைப் பாதுகாப்பதில் தெளிவாக இருக்கிறோம்.

பிருக்கிறது. பின்தங்கிய மாணவர்களை அப்போதுதான் முன்னுக்குக் கொண்டு வருவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. வாரத்திற்குத் தேர்வுத் தாள்களைத் திருத்துவதும் அப்போதுதான். உண்மை [illegible] நாள்தோறும் 5½ மணி நேரம் மட்டும் பணியாற்றிவிட்டால் போதும் என்று வைத்துவிட்டால், அவர் சொல்வது சரியாக இருக்கும். இன்றைய தினம் ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், எப்படி கணிக்கப்படுகிறார்கள் என்றால், சமுதாயத்தில் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள குறைகளுக்கெல்லாம் ஆசிரியர்கள்தான் பொறுப்பு என்கிறார்கள். எனவே விடுமுறை நாட்களிலும் வேலை செய்வதைக் கணக்கில் எடுத்துக் கொண்டால், ஆசிரியர்கள் 220 நாட்கள் வேலை செய்கிறார்கள் என்பது புலப்படும். சாதாரணமாக அரசுத் துறையில் பணியாற்றுபவர்கள் 200 நாட்கள் வேலை செய்கிறார்கள் என்றால், 52 நாட்கள் ஞாயிற்றுக்கிழமைகளாகும். 12 நாட்கள் இரண்டாவது சனிக்கிழமை விடுமுறை நாட்கள். பொதுவாக அரசு விடுமுறை நாட்கள் 20 இப்படிக் கணக்கிட்டால் . . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** விட்ட விடுமுறை, விடாத விடுமுறை நாட்கள் என்றெல்லாம் வேறு இருக்கின்றனவே!

**திரு. பா. ரா. தாமஸ்:** அவ்வாறு ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், ஆசிரியர்கள் பணியாற்றும் நாட்களின் எண்ணிக்கை அதிகம் என்பதால்தான், ஆசிரியர்களுக்கு ஆண்டிற்கு 23 நாட்கள் ஈட்டியவிடுப்பு தரப்பட வேண்டும் என்று கோருகிறோம்.

**திரு. க. அருணாசலம்:** நான் ஆசிரியர்களை அரசு ஊழியர்களோடு ஒப்பிடவில்லை, 80 சதவிதம் மக்களோடு சேர்த்து ஒப்பிட்டுப் பேசுகிறேன். யார் உண்மையிலே இந்த நாட்டில் உடலுழைப்பு செய்கிறார்களோ, யார் நெசவு, விறகு வெட்டுதல் போன்ற தொழில்களைச் செய்கிறார்களோ, யார் சம்மட்டி எடுத்து நெய்தல் போன்ற பணிகளைச் செய்கிறார்களோ, அவர்களோடு ஒப்பிட்டுப் பேசுகிறேன். அந்தப் பணியாற்றுகிறார்களோ [illegible] மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது தான் கடந்த கால நிலைமையைக்

கருத்தில் கொண்டு பேசுவதாகக் குறிப்பிட்டார். நான் இப்போதுகூட பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். நான் ஆரம்பப் பள்ளிகளில் பாடம் சொல்லிக் கொடுத்திருக்கிறேன், கல்லூரிக்கும் முதல்வராக இருந்திருக்கிறேன். அப்படியெல்லாம் பணியாற்றியதால் எனக்குச் சில விஷயங்கள் தெரியும். எனவே 180 நாள் என்று சொல்லும்போது, மூன்று மாதங்கள் அவர்கள் ஓய்வு எடுத்துக் கொள்கிறார்கள். அப்படி விசேஷ உரிமை அங்கே உண்டு. அதற்குத்தான் அங்கே சண்டை. இவையெல்லாம் தனியாகப் பேசிக்கொள்ள வேண்டிய விஷயங்கள் என்பதால் இதோடு விட்டுவிடுகிறேன்.

இறுதியாக, நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். சமுதாயத்தில் சமதர்மம் வேண்டும். உழைப்புக்கும் அறிவுக்கும் சமமான மதிப்பு கொடுக்கப்படவேண்டும். அப்போதுதான் உண்மையான மக்களாட்சி இருக்க முடியும். அறிவாளி எல்லாவற்றையும் எடுத்துக் கொள்வதென்பதும், உடல் உழைப்பாளிகள் 10 அல்லது 15 சதவிதம் மட்டுமே எடுத்துக் கொள்வதென்பதும் சரியான சமதர்மத்திற்கு உறுதுணையாக இராது. எனவே ஆசிரியர்களுக்காகப் பரிந்து பேசுவது என்பது சரியில்லை. ஜாதி, சமயம், இனம் ஆகிய அனைத்தையும் தாண்டி இவைகளையெல்லாம் மறந்து, தனி மனித உரிமைகளுக்காகப் போராடுவது என்பதை மறந்து, சமுதாயத்திற்காகப் பாடுபடும் உணர்வு நமக்கு ஏற்பட வேண்டும். நான் பல்வேறு கருத்துக்களையும் இங்கே எடுத்துச் சொல்ல விரும்பினேன் என்றாலும், நேரம் இல்லை என்ற காரணத்தால், இதோடு முடித்துக்கொள்கிறேன். அதற்கு முன்னால், இது ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் என்பதால், நானும் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை காலை 9-30 மணிக்குக் கூடும்.

**அவை, பின்னர் ஒத்தி வைக்கப்பட்டது.**



(பிற்பகல் 12-46)

**5. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.**

## A. STATUTORY RULES AND ORDERS.

85. Notifications issued with G.O. Ps. No. 1133, Commercial Taxes and Religious Endowments, dated the 6th October 1981 regarding exemption from levy of sales tax on the transfer of buses from one Tamil Nadu Transport Corporation to another in the State. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

86. Notification issued with G.O. Ps. No. 1010, Commercial Taxes and Religious Endowments, dated the 11th September 1981 regarding exemption from the levy of sales tax on sale of Bakery products. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

87. Notification issued with G.O. Ps. No. 1097, Commercial Taxes and Religious Endowments, dated the 28th September 1981 regarding reduction in the rate of tax payable by State and Central Government Departments including Indian Railways on sale of cement. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

88. Notification issued with G.O. Ps. No. 1099, Commercial Taxes and Religious Endowments, dated the 28th September 1981 regarding exemption from sales tax on the sale of iron safe, empty gunnies and broken vessels by Daya Sadan, Madras-12. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

89. Notification issued with G.O. P. No. 1022, Commercial Taxes and Religious Endowments, dated the 14th September 1981 regarding reduction in rate of sales tax on sale of transformer oil feed stock to Madras Petroleum Limited, Madras from eight per cent to three per cent [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

90. Notification issued with G.O. P. No. 531, Commercial Taxes and Religious Endowments, dated the 15th May 1981 regarding exemption from levy of sales tax on the sale of finished goods manufactured by the Anaikaraipatti Unit of Thiruvalargal Enfied India Limited in Ramanathapuram District. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

*B. Reports, Notifications and Other Papers.*

Nil.





## இணைப்பு

(146-ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

பெருமபாலான பல்தொழில் பயிற்சி நிலையங்களில் படித்து வரும் மாணவர்கள் பல் கோரிக்கைகளை முன் வைத்து 5—1—1982 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இம்மாணவர்களின் முக்கிய கோரிக்கைகள் பின்வருமாறு :—

1. பொறியியல் பட்டப்படிப்பில் பாலிடெக்னிக் மாணவர்களுக்கு இரண்டாம் ஆண்டில் 25 சதவிகிதம் இடம் அளிக்க வேண்டும்.

2. தற்போது பொறியியல் பட்டப்படிப்பு நான்காண்டுகளாகக் குறைக்கப்பட்டுள்ளதால், பாலிடெக்னிக்கில் மூன்றாண்டு படித்த மாணவர்களை பொறியியல் பட்ட வகுப்பில் இரண்டாம் ஆண்டு சேரும் வகையில் திருத்தம் செய்ய வேண்டும்.

3. பகுதி நேரப் பொறியியல் பட்டப்படிப்பில் சேர மூன்றாண்டு முன் அனுபவத் தேவை என்பது நீக்கப்பட வேண்டும்.

4. பாலிடெக்னிக்கல் படித்து முடித்த மாணவர்களுக்கு பயிற்சிக் கால உதவித்தொகையை உயர்த்த வேண்டும்.

5. ஐந்தாம் பருவம் தவறி ஆறாம் பருவத்திற்குள் பூர்த்தி செய்து இரண்டிலும் சேர்ந்து முதல் வகுப்பு மதிப்பெண் பெற்றிருந்தால் முதல் வகுப்பு கொடுக்க வேண்டும்.

6. ஷிப்டு (Shift) முறை கொண்டு வருவதை நிறுத்த வேண்டும்.

அண்ணாமலை பல்தொழில் பயிற்சி பயிலக மாணவர்களுடன் சேர்ந்து 29—12—1981 அன்று ஒரு அடையாள வேலைநிறுத்தம் செய்தார்கள். இதைத் தொடர்ந்து அவர்கள் பிற பல்தொழில் பயிற்சி பயிலக மாணவர்களைப் போல் 5—1—1982 முதல் தொடர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வகுப்புக்கு வராமல் இருந்தனர்.

நகர் முத்தையா பல்தொழில் பயிற்சி பயிலக மாணவர்களும் 29—12—1981

மாணவர்கள் வகுப்புக்கு வாராததால் கல்வி நிலையத்தின் முதல்வர் கல்வி நிலையத்தை மூடி கல்லூரி விடுதியை விட்டும் அன்றே மாணவர்களை வெளியேறுமாறு உத்தரவு இட்டார். சென்னை தொழில் நுட்பக்கல்வி இயக்குநர் அலுவலகத்திலிருந்து இதற்கிடையில் கொடுக்கப்பட்ட அறிவுரையைத் தொடர்ந்து, கல்வி நிலையத்தின் முதல்வர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்களை வகுப்புகளுக்கு ஒழுங்காக வரச்சொல்லும்படி அவர்களுடைய பெற்றோர்களுக்கு ஒரு முறையீடு அனுப்பினார். அதன் பயனாக தற்போது 27—1—1982 முதல் மேற்சொன்ன கல்வி நிலையம் திறக்கப்பட்டு சுமுகமான முறையில் இயங்கி வருகிறது.

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

வெள்ளிக்கிழமை, 1982 பிப்ரவரி 5.

தை 23, துன்மதி, திருவள்ளுவர் ஆண்டு 2013:

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்:

### பாலில் மஞ்சள் நிறப்பொடி.

*21. வினா—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1981 ஆம் ஆண்டு ஜூலை மாதம் மதுரை பால் விநியோகத் திட்டத்தால் (Madurai Milk Project) வழங்கப்படும் பாலில் மஞ்சள் நிறப்பொடி படிந்திருந்தது என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா?

(இ) ஆம் எனில், அது என்ன பொருள்?

(உ) அது எப்படி பாலில் கலந்தது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) பாலில் ஏற்பட்ட நிற மாறுதல் சிறியது. இதனால் கெடுதல் ஒன்றுமில்லையென்பதாலும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை.

(இ) மஞ்சள் நிறப் பொடி, ஆய்வு செய்ததில் கொழுப்பு நீக்கிய பால் பொடி (Skimmed Milk Powder) எனத் தெரிய வந்தது.

(உ) பாலிலிருந்து தயாராகும் கொழுப்புச் சத்து நீக்கிய பால் பொடி பற்றாக்குறையுள்ள பால் வற்றும் காலத்தில் மீண்டும் பாலாகச் சீர் செய்து வாடிக்கையாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய உபயோகப்படுகிறது. இப்பொடி மஞ்சள் நிறமாகவிருந்தாலும் அதனால் எந்தவிதமான கெடுதலும் இல்லை.

[1982 பிப்ரவரி 5

திரு. ம. சங்கரலிங்கம் : கொழுப்பு நீக்கிய பால்பொடியை பற்றாக்குறைக் காலங்களில் மீண்டும் பாலாக ஆக்கி விநியோகிக்கும்போது, மஞ்சள் நிறம் வருகிறது என்று சொல்லப்பட்டது. பாலில் அதிக மஞ்சள் நிறம் வரக் காரணம் இலாப நோக்கோடு அதில் வேறு பல பொருள்களைச் சேர்த்து விநியோகிப்பதுதான் என்று சொல்லப்படுகிறது. பால் விநியோகத் துறைக்குத் தெரியாமலே இது போன்ற தவறுகள் நடப்பதாகக் கருதப்படுகிறது. இது பற்றி அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : சில நேரங்களில் பால்பொடி மிகவும் பழையதாக ஆகிவிட்டால், அதன் நிறம் மாறுகிறது. அதைப் பரிசோதனை செய்த நேரத்தில் இப்படி நிறம் மாறுவதன் காரணமாக எந்த விதமான கெடுதலும் இல்லையென்று அறியப்பட்டது. என்றாலும் மாண்பு மிகு உறுப்பினர் சொன்னது போல, பல நிலைகளில் பரிசோதனைகள் செய்து எச்சரிக்கையாகப் பயன்படுத்த அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. ம. சங்கரலிங்கம் : கொழுப்புச் சத்து எடுக்கப்பட்டுவிட்ட பாலில் ஊட்டச் சத்து என்று சொல்லி எதையெல்லாமோ சேர்த்து பொது மக்களுக்கு விநியோகம் செய்கிறார்கள். சட்டமன்ற விடுதியிலே தரப்படுகிற பாலைக் கூட தொடர்ந்து நாள்தோறும் ஒருவர் சாப்பிட்டு வந்தால், அதிலுள்ள மாற்றம் தெரிகிறது. ஆகவே, இதில் சேர்க்கிற பொருள்களை நல்ல முறையில் சுகாதார நிலையில் மருத்துவர்களைக் கொண்டு பரிசோதனை செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தற்போது நடைமுறையில் கூட எல்லாக் கட்டங்களிலும், மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப் போல எச்சரிக்கையாக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. குறிப்பாக பால் உள்ளே வரும்போது, பால்பொடியைச் சேர்க்கும்போது, இரண்டும் சேர்த்து கலக்கப்படும்போது ஆகிய எல்லா நிலைகளிலும் பரிசோதனை செய்யப்படுகிறது. பதப்படுத்தப்பட்ட பிறகும் பரிசோதனை செய்யப்படுகிறது. பிறகு புட்டி, பை ஆகியவற்றை நிரப்பி அனுப்பும்போதும் பரிசோதனை செய்யப்படுகிறது. அதற்கப்பாலும் பொது மக்கள் மத்தியிலேயிருந்து முறையீடுகள் புகார்கள் தெரிவிக்கப்படும்போது, சம்பந்தப்பட்ட விவரங்களைப் பரிசீலனை செய்ய அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளையும் மனதிலே வைத்துக்கொண்டு எதிர்காலத்திலே தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



1982 பிப்ரவரி 5]

டாக்டர் இரா. சனார்த்தனம் : பால்பொடி எவ்வளவு வாங்கப்படுகிறது? அவைகள் எல்லாம் எங்கிருந்து வாங்கப்படுகின்றன? பாலில் தவறு இருக்கிறதா என்பதை எந்தெந்தக் கட்டங்களில் கண்டுபிடிக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தமிழ் நாடு பால்வள நிறுவனத்திற்கு வேண்டிய பால்பொடியை வெளிநாட்டிலிருந்து இந்தியன் டெய்ரி கார்ப்பரேஷன் மூலமாகப் பெற்று வருகிறோம். ஆண்டொன்றுக்கு 3,000 டன் பால் பொடியை இறக்குமதி செய்து வருகிறோம். இன்றைக்குள்ள நிலவரப்படி ஒரு டன்னின் விலை ரூபாய் 12,000. ஏறத்தாழ ரூபாய் மூன்று கோடியே அறுபது இலட்சம் அளவிற்கு பால்பொடியை இந்தியன் டெய்ரி கார்ப்பரேஷன் மூலமாக வெளிநாட்டிலிருந்து பெற்றுக் கொண்டிருக்கிறோம்.

திரு. க. இராமமூர்த்தி : பால்பொடி பழையதாகிவிட்டால் கலக்கும்போது மஞ்சள் நிறம் வந்துவிடுகிறது என்று தெரிவித்தார்கள். அந்தப் பால் பொடியை எவ்வளவு காலத்திற்குள் பயன்படுத்த வேண்டுமென்று ஏதாவது வரையறை இருக்கிறதா? இதுவரை பாலாக்கப்பட்ட பால்பொடி குறிப்பிட்ட கால்வரையறைக்குள் பயன்படுத்தப்பட்டிருக்கிறதா என்பதைத் துறை பரிசீலனை செய்ததா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : ஏறத்தாழ ஓராண்டு, ஒன்றரை ஆண்டுக்குத் தேவையான அளவிற்கு இறக்குமதி செய்வதால், அப்போதைக்கப்போது பயன்படுத்தி விடுகிறோம். அப்படி ஏதாவது குறைபாடுகள் இருந்தாலும்கூட, அவற்றைப் பரிசோதனையில் காணுகிறபோது ஒதுக்கி வைத்து விடுகிறோம்.

### பூம்புகாரின் ஆண்டு வருமானம்.

* 22 வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பூம்புகாரில் பார்வையாளர்கள் மூலமாக இதுவரை வந்த வருமானம் ஆண்டுவாரியாக எவ்வளவு?

(இ) அங்கு ( i ) உணவு வசதியுடன் கூடிய சுற்றுலா விடுதியை அமைக்கும் கருத்தும் ( ii ) சிலப்பதிகார ஒலி-ஒளிக் காட்சி அமைக்கும் கருத்தும் அரசின் பரிசீலனையில் இருக்கின்றனவா?

(உ) ஆம் எனில், அவை எப்பொழுது அமைக்கப்படும்?

[1982 பிப்ரவரி 5

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : (அ) பூம்புகார் சுற்றுலா வளாகத்தில் 1973-74 முதல் 1980-81 வரை பெறப்பட்ட வருமானம்.

| வருடம் | மொத்த வருமானம் ரூபாய் |
|---|---|
| 1. 1973-74 | 26,262-10 |
| 2. 1974-75 | 35,494-30 |
| 3. 1975-76 | 86,870.70 |
| 4. 1976-77 | 62,040-65 |
| 5. 1977-78 | 93,273.40 |
| 6. 1978-79 | 1,02,468-30 |
| 7. 1979-80 | 98,543-50 |
| 8. 1980-81 | 96,511.15 |

(இ) மற்றும் (உ) இல்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விவரப்படி, ஒவ்வொரு ஆண்டும் கணிசமான அளவிற்கு பூம்புகாரில் வருமானம் வருகிறது என்று தெரிகிறது. ஏராளமான அளவிற்கு சுற்றுலாப் பயணிகள் பூம்புகாருக்கு நாள்தோறும் சென்று கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்த இடத்திலே சுற்றுலாப் பயணிகளுக்கு வேண்டிய உணவு வசதி, தங்கும் வசதி, குறிப்பாக நடுத்தர மக்கள், ஏழை எளிய மக்களுக்கு ஏற்றாற்போல் கிடையாது. ஆகவே, அங்கே வருகின்ற வருமானத்தைப் பெருக்குகின்ற வகையிலும், பொதுமக்களுக்குப் பயன் கிட்டுகின்ற வகையிலும், சுற்றுலா விடுதியை அமைக்கும் கருத்தை வருங்காலத்திலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா? சிலப்பதிகார ஒலி, ஒளிக் காட்சி அமைக்கப்படுமானால், இன்னும் வெளிநாட்டுப் பயணிகளையும், வட நாட்டுப் பயணிகளையும் கவரும். ஆகவே, அதையும் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : வருமானத்தைப் பற்றி மாத்திரம் கேள்வி கேட்கப்பட்டதால், வருமானத்தைத் தந்திருக்கிறேன். அதற்கென்ன செலவு என்று கேட்டிருந்தால், செலவையும் சொல்லியிருப்பேன். சென்ற மூன்றாண்டுகளுக்கான செலவை மட்டும் சொல்லுகிறேன்.

1978-79 ஆம் ஆண்டுக்கு—ரூ. 1,18,752.34.

1979-80 ஆம் ஆண்டுக்கு—ரூ. 1,35,253.00.

1980-81 ஆம் ஆண்டுக்கு—ரூ. 1,80,337.00.



1982 பிப்ரவரி 5]

ஆகவே வருமானத்தைவிட செலவு அதிகமாக இருப்பதை மாண்புமிகு உறுப்பினர் தெரிந்து கொண்டிருக்கலாம். இருந்தாலும் வரவு-செலவு அடிப்படையில் நிர்வகிக்கப்படுவதல்ல இது. இப்போது அங்கே வருகிற பயணிகள் வந்து பார்வையிட்டுவிட்டு சில மணி நேரங்களில் திரும்புகிற அடிப்படையிலே தான் வருகிறார்கள். ஒலி, ஒளிக் காட்சியென்பது கிட்டத்தட்ட 40 லட்சம், 50 லட்சம் ரூபாய் முதலீட்டில் செய்ய வேண்டிய காரியமாகும். அப்படி முதலீடு செய்தால், அதன் மூலம் பலன் கிடைக்குமா என்பதைப் பரிசீலித்துத் தான் நடவடிக்கை எடுக்க முடியும்.

இப்போது அங்கே தங்குவதற்குச் சில விடுதிகளை நாம் கட்டியிருக்கிறோம். அங்கே வாடகை 5 ரூபாய், 15 ரூபாய் என்றுதான் வசூலிக்கப்படுகிறது. அதிலேகூட சுமார் 46 சதவீதம்தான் தங்குவதாகக் கணக்கு இருக்கிறது. ஆகவே, வருகிற பயணிகள் தங்க முடியாமல் திரும்புகிறார்கள் என்ற விவரம் இல்லை. வருங்காலத்தில் வளர்ச்சியை, தேவையைக் கருதி, அவ்வப்போது பரிசீலித்து தக்க நடவடிக்கைகளை எடுக்க இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-40)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி வருங்காலத்தில் பரிசீலனை செய்வதாகச் சொன்னதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே ஒலி-ஒளிக் காட்சி தற்போது இல்லையென்றாலும், சிலப்பதிகாரம் பற்றிய ஒரு கருத்தரங்கை மாதத்திலே ஒரு நாள், மாதம் ஒரு முறை ஆன்ற தமிழறிஞர்களை வைத்து நடத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ? சிலப்பதிகாரம் பற்றிய கருத்து அறிய விரும்புபவர்களுக்கு அது வாய்ப்பாக இருக்கும். இதை அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுடைய கருத்து சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. மாணிக்கம் : அங்கே அழகிய கடற்கரை இருக்கின்ற காரணத்தினாலே, அதிலே தமிழ் மக்களுக்கு ஆர்வம் பிறந்திருக்கிறது. எனவே இப்போதுள்ள வரவு செலவை மட்டும் பார்க்காமல் அங்கு உணவு வசதி செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொள்ளுமா ? அந்த அம்சத்தையும் சேர்த்து அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : இந்தக் கேள்விக்குத்தான் முன்னாலே நான் பதில் அளித்திருக்கிறேன். அங்கு அரசுப் பொறுப்பிலே உணவு விடுதி நடத்த முடியாது. சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அப்படி ஒரு

விடுதியை நடத்துமா என்பதைப் பற்றித் தகவல் கேட்கப்பட்டிருக்கிறது. அவர்கள் விரும்பினால், அப்படிப்பட்ட முயற்சியை மேற்கொள்வதற்கு அரசு அவர்களுக்கு அனுமதி வழங்குவதுபற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பா. ரா. தாமஸ் : இந்தப் பூம்புகார் பகுதியில் கடற்கரைச் சாலையையொட்டிய பாதைகள் பயணிகள் போக முடியாத அளவுக்குப் பழுதடைந்திருக்கின்றன. அரசு தக்க நடவடிக்கைகள் எடுத்து, அதைச் சீர் செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : அந்தப் பாதை பழுதடைந்திருக்கிறது என்பதைவிட அந்தப் பாதையே பறிபோய்க்கொண்டிருக்கிறது என்பதுதான் உண்மை. கடல் முன்னர் பூம்புகாரை விழுங்கியது. இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கின்ற பூம்புகாரையும் கடல் அரிப்பு விழுங்கிக் கொண்டிருக்கிறது. அந்தக் கடல் அரிப்பைத் தடுக்க வேண்டுமானால், லட்சக் கணக்கான, கோடிக்கணக்கான ரூபாய்களை முதலீடு செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. மத்திய அரசிடம் தெரிவித்திருக்கிறார்கள். மாநில அரசில் பொதுத்துறையினுடைய கவனத்திற்கு அதைப்பற்றிக் கொண்டு வந்திருக்கிறார்கள். இப்போது அங்கே கடல் அகழ்வு ஆராய்ச்சி நடக்கின்றது. மிகப்பெரிய முதலீடு செய்து கடற்கரையைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் இருக்கிறது என்றும், எதிர்காலத்திலே தக்க நடவடிக்கைகள் எடுத்தால், அது பலன் அளிக்கும் என்றும் நான் கருதுகிறேன்.

THIRU G. VASANTHA PAI: Sir, will the Hon. Minister, now that he is present in the House, consider the request that I made yesterday for having a glass-bottomed boat to go through these places? The tourists may be charged o fee for that. It would not cost the Government much. But, at the same time, it will earn sufficient income. What is under the sea could be seen from the glass-bottomed boat and it will not cost more than Rs. 5 lakhs or Rs 10 lakhs for the Government.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : கடலுக்கு அடியிலே எவையெவை இருக்கின்றன, புதைந்து கிடக்கின்றன என்பது பற்றிய ஒரு மேற்போக்கான கருத்து மாத்திரமே இப்போது தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆராய்ச்சி முடிவு பெற்று முடிவான கருத்துக்கள் கிடைத்த பிறகு, அப்படிப்பட்ட முயற்சிகளையும் அதைப் பார்ப்பதற்கு மக்களை அனுமதிக்கின்ற முயற்சிகளிலும் ஈடுபடலாம். இப்போதுகூட, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் நீர் மட்டத்திலே படகுகளில் போனால், கடலுக்கு அடியிலே இருப்பதைக் கண்டு பிடிக்கலாம் என்று சொல்கின்றார்கள். நீர் மட்டத்திலே போனால்,



அப்படிப் பார்க்க முடியாது என்று கருதுகிறேன். ஒருவேளை கடலுக்குள் போனால், அமிழ்ந்து கிடக்கின்ற பொருள்களை பார்க்கின்ற வாய்ப்பு இருக்கலாம். அப்படி கடலுக்குள்ளே சென்று பார்க்கும் அளவுக்கு மக்களுக்குத் துணிவு இருக்க வேண்டும். கடலுக்குள்ளே மக்களைக் கொண்டு சென்று பார்க்கின்ற அளவுக்கு நாம் சோதனை ஏற்படுத்தவேண்டுமானால், மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொல்வதுபோல, 4 லட்சம் 5 லட்சம் ரூபாயிலே அமைத்துவிட முடியாத காரியமாக அது இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIBU G. VASANTHA PAI: Sir, may I make a clarification? Will the Hon. the Minister note that in place like Rotnest island near Perth the glass-bottomed boats do not go inside the sea? Even superficially, while going over the ocean, we are able to see up to a depth of 200 feet. I want to make this clear because I have seen it myself.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : நான் அதைத்தான் சொல்கிறேன். அது 200 அடியிலே இருக்கிறதா அல்லது ஆயிரம் அடியிலே இருக்கின்றதா என்ற விவரங்கள் இன்னும் நமக்குச் சரியாகத் தெரியாது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னதுபோல, நீர் மட்டத்திலே, மேலேயே போகின்றபோதே அதைப் பார்க்க இயலுமா என்பதை நாம் பரிசீலித்துத்தான் முடிவு எடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## மதுரையில் வானொலி நிலையம்

* 23 வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மதுரையில் வானொலி நிலையம் அமைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக அரசுக்குத் தகவல் ஏதும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : (அ) மற்றும் (இ) மதுரையில் வானொலி நிலையத்தை 6-வது திட்டக்காலத்தில் அமைத்திட இந்திய அரசு ஒப்படைசெய்யப் பட்டுவிட்டது. தற்போது வானொலி நிலையப் பொறியாளர்கள் அமைப்புப் ஒத்துக்கொண்டு அதற்கான நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

**திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இப்போது மதுரையில் அமைக்கப்படவிருக்கின்ற வானொலி நிலையத்தின் சக்தி அளவு என்ன? அதைப் பற்றிய விவரங்கள் அமைச்சரிடம் இருக்கின்றதா? அதைப்பற்றி நான் அறியலாமா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** அதுபற்றிய முழு விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால் முழுமையாக தானே இயங்குகின்ற தனி நிலையமாக அமைக்கப்படுகிறது என்ற விவரம் தான் இங்கே இருக்கிறது.

**திரு. சி. இராமலிங்கம் :** தற்போது அமைந்துள்ள வானொலி நிலையங்கள் எல்லாம் கடற்கரை ஓரமாகவே இருக்கின்றன. திருச்சியைத் தவிர. வேலூர், திருவண்ணாமலை, சேலம் பகுதிகளில் அப்படிப்பட்ட வானொலி நிலையம் அமைக்கின்ற உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா? அதற்கு அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** வானொலி நிலையம் அமைப்பது என்பது மாநில அரசுப் பொறுப்பிலே செய்கின்ற காரியம் அல்ல. மத்திய அரசு இப்போது அவர்கள் பொறுப்பிலே செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் இப்போது திருச்சியிலே ஆரம்பித்து மதுரை, திருநெல்வேலி, நாகர்கோயில் பகுதிக்குத் தொடர்கின்ற அளவுக்கு திட்டங்களை உருவாக்கி வருகிறார்கள். மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுடைய கருத்தையும் மத்திய அரசுக்கு எடுத்துச்சொல்லி, தமிழ் மாநிலத்தினுடைய இதர பகுதிகளாகிய வட ஆற்காடு, சேலம் பகுதிகளிலும் இப்படிப்பட்ட நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தை இந்த அரசு தெரிவிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** கோடைக்கானலில் ஒலி-ஒளிக் காட்சி எப்போது அமைக்கப்பட இருக்கிறது. அப்படி கோடைக்கானல் ஒலி-ஒளிக் காட்சி அமைக்கப்பட்டால் அதைக் கோவையிலே காண வசதி ஏற்படுமா?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கேள்வியை விட்டுவிட்டு கொஞ்சம் அதிகமாகவே விவரங்கள் கேட்பது உறுப்பினர் அவர்களுக்கு வழக்கமாக இருக்கிறது.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** கோடைக்கானலில் தொலைக் காட்சி நிலையம் அமைக்க நிலம் கையகப்படுத்தி மத்திய அரசிடம் ஒப்படை செய்துவிட்டோம். மற்ற வேலைகளை மத்திய செய்தி ஒலி பரப்பு அமைச்சகம் மேற்கொள்ள இருக்கிறது. அநேகமாக கோவைப் பகுதிக்கும் அந்த நிலையம் பயன்படும் என்பதை மத்திய அமைச்சகத்தினர் தெரிவித்திருக்கிறார்கள்.





## Artificial Rains.

* 24 Q—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(a) whether it is a fact that expert opinion has been taken about the feasibility of artificial rains, as a measure for averting periodical drought due to the failure of monsoons; and

(b) if so, the results thereof?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** (அ) & (இ) 1975 ஆம் ஆண்டு பொதுவாக தமிழ்நாட்டில் குறிப்பாக சென்னையில் பருவ மழை பொய்த்ததின் காரணமாக கலிபோர்னியாவில உள்ள அட்மாஸ்பிரிக் இன்கார்ப்பரேடட் என்னும் அமெரிக்க நிறுவனத்தின் மூலமாக சென்னைக்கு அருகிலுள்ள செங்குன்றம் ஏரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் நீலகிரி மாவட்ட நீர் மின் உற்பத்திப் பகுதிகளிலும் செயற்கை மழை பெய்விக்கும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அவை வெற்றிகரமாக அமைந்தன. எனவே, 1976 ஆம் ஆண்டு கடுமையான வறட்சிக்கு இலக்காகும் முகவை மாவட்டத்திற்கு விரிவுபடுத்தலாம் என்று கருதி அதற்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் எதிர்பாராதவிதமாக இராமநாதபுரம் மாவட்டத்தில் அப்போதுள்ள வானிலை, சோதனைகள் நடத்த சாதகமற்றதாக இருந்ததால் பரிசோதனைகள் கைவிடப்பட்டன.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** இந்தச் சோதனைகளுக்காக தமிழக அரசு செலவழித்த பணம் எவ்வளவு? எவ்வளவு தொகை வருமான வரியாகச் செலுத்தப்பட்டிருக்கின்றது? அப்படிச் செலுத்தப்பட்டிருந்தால் அந்தத் தொகையை விலக்காகப் பெற மத்திய அரசுக்கு விண்ணப்பம் அனுப்பும் யோசனை அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** இதற்காகச் செலவான தொகை ரூ. 16,54,000. இது தவிர மத்திய அரசுக்கு வருமான வரியாகக் கொடுத்தது ரூ. 46,15,109. மத்திய அரசிடம் அதற்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்கப்பட்டு, மத்திய அரசு அதற்கு மறுத்துவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1982 பிப்ரவரி 5

**பொறியாளர்களை அயல்நாடுகளுக்கு அனுப்பும் திட்டம்.**

* 25. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) வெளிநாட்டு தொழில் நுட்பங்களை அறிந்து வர நெடுஞ்சாலைத் துறை பொறியாளர்களை அயல்நாடுகளுக்கு அனுப்பும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) ஆம்.

(இ) நெடுஞ்சாலைத் துறை சம்பந்தப்பட்ட பயிற்சித் திட்டங்கள் அயல் நாடுகளில் நடத்தப்படும்பொழுது அதற்கான அறிவிப்பு மத்திய அரசிட மிருந்து கிடைத்தவுடன் சில பொறியாளர்களைத் தகுதியின் அடிப்படையில் தேர்ந்தெடுத்து தலைமைப் பொறியாளரால் அவ்வப்போது அரசிற்குப் பரிந் துரைகள் அனுப்பப்படுகின்றன. அந்தப் பரிந்துரைகள் அரசால் பரிசீலிக்கப் பட்டு மத்திய அரசிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இது வரை இந்தத் திட்டத்தின் கீழ் கடந்த 3 ஆண்டுகளில் எத்தனை பொறியாளர் கள் எந்தெந்த நாடுகளுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள் ? எந்தெந்த நோக்கத்திற்காக அனுப்பப்பட்டார்கள் என்ற விவரங்களை அமைச்சர் அவர் கள் தருவார்களா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, கடந்த 21—12—1978-ல் திரு. குருராஜ், பொறியாளர் அவர்கள், நிலையத் துணை இயக்குநர், ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டங்களின்கீழ், யு.எஸ்.ஏ. மற்றும் யு.கே. நாடுகளுக்கு 'டிசைன் ஆஃப் ப்ரீ ஸ்ட்ரெஸ்ட் கான்கிரீட் பிரிட்ஜ் கோர்ஸ்' என்ற அந்தப் பணிக்காக அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 9-50)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இந்தத் திட்டத்தின்கீழ் பொறியாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பும்போது, பொறியாளர்களின் மனுக்கள் உரிய நேரத்தில் சேராத காரணத்தால், பல பொறியாளர்கள் இந்த வாய்ப்பை இழப்பதாக எனக்குச் செய்திகள் வந்துள்ளன. இனிமேலாவது உரிய



1982 பிப்ரவரி 5]

நேரத்தில் அவர்களுடைய விண்ணப்பங்களை அனுப்பி, அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்பு கிடைக்க அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார் களா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** உரிய நேரத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** 1978 ஆம் ஆண்டில் ஒருவர் அனுப்பப்பட்டதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அவர்கள் அங்கு பயின்று விட்டு வந்து, அரசுக்குக் கொடுத்த அறிக்கையின் விவரம் என்ன ? அதன் மூலம் நெடுஞ்சாலைத் துறைக்கு ஏற்பட்டுள்ள நன்மைகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன். 'டஸ்ட்லஸ் ரோட்' நெடுஞ்சாலைகளில் அமைக்க மேலை நாடுகளில் ஆராய்ச்சி செய்கிறார்கள். பெரிய கார்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள்கூட அதை ஊக்குவிக்க ஸ்காலர்ஷிப் வைத்திருப்ப தாகச் சொல்லுகிறார்கள். ரப்பர் பாலைக் கலந்து சாலைகள் போடுவதாகச் சொல்லுகிறார்கள். எனவே மேலை நாடுகளுக்குப் போய் வந்தவர் இதை சொல்லாம் பற்றிச் சொல்லியிருக்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** அது பற்றிய குறிப்புகள் என்னிட மில்லை. தனிக் கேள்வி கேட்டால், விவரமாக விளக்குகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** குறிப்பிட்ட துறைகளிலிருந்து மேலை நாடு களுக்குச் சென்று பயின்று வருவதற்காக அனுப்பப்படுபவர்கள் திரும்பி வந்த பிறகு, அதே துறையில் நிலைத்து நின்று செயல்பட்டு, அவர்கள் பயின்று வந்ததை அந்தத் துறை அனுபவிக்கும் வகையில் செயல்படுகிறார் களா அல்லது அவர்கள் வேறு துறைகளுக்கு மாற்றப்பட்டு, சென்று வந்தது உல்லாசப் பயணம் என்ற முறையில் அமைந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** சென்று, அவர்கள் பெற்று வந்த அனுபவம் நாட்டுக்கு உபயோகப்படும் அளவிற்கு அவர்களுடைய பணி சிரமைக்கபட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல பயிற்சி ஒரு பக்கம், பார்வை ஒரு பக்கம் என்ற முறையில் பல நடை முறைகள் நடந்து வந்திருக்கின்றன. அப்படி நடக்காமல் செல்லுகின்ற அலுவலர்கள் ஓய்வு பெறுகின்ற அளவில் இருக்கக்கூடாதென்றும் வலியுறுத்தி வருகிறோம். வெளி நாடுகளுக்குப் போய் வந்தால், ஏறத்தாழ 10 ஆண்டுக் காலம் அவர்களுடைய அனுபவம் இந்த நாட்டுக்குக் கிடைக்கும் அளவிற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

[1982 பிப்ரவரி 5

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இன்று அயல் நாடுகளில் ஒரு முக்கிய ஆராய்ச்சி மூலம் massive section என்பதற்கு பதிலாக Slender Section என்ற முறையைப் பயன்படுத்தி கற்களையும், சிமென்டையும் ஏராளமாக மிச்சப்படுத்த வழி முறைகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இன்றைக்கு தமிழ் நாட்டில் சிமென்ட், கற்கள் பற்றாக்குறை இருப்பதால், நான் குறிப்பிட்ட முறையை அறிந்து வர தமிழ் நாடு அரசு சில பொறியாளர்களை அந்த நாடுகளுக்கு அனுப்பி, நம்முடைய மாநிலத்திலும் அந்த முறையைப் பயன்படுத்த முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** உறுப்பினர் அவர்களின் யோசனையைப் பரிசிலனை செய்யலாம்.

பொறியாளர்களுக்கு குடியிருப்புகள்.

*** 26. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நெடுஞ்சாலைத் துறையில் பணிபுரியும் பொறியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டித்தரும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) ஆம்.

(இ) 15 கோட்டப் பொறியாளர்கள் (நெடுஞ்சாலை) மற்றும் 10 உதவிக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) களுக்கான குடியிருப்புகள் கட்டும் பிரேரணை அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு அமைச்சரவர்கள் குடியிருப்புகள் கட்டித் தருவதற்கான ஒரு சில முயற்சிகள் எடுத்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். பொதுப் பணித் துறையை எடுத்துக் கொண்டால், அத்துறை ஒரு திட்டத்தைத் தொடங்கும்போது, அந்தத் திட்டத்தில் பணியாற்றும் பொறியாளர்களிலிருந்து கடைநிலை ஊழியர்கள் வரை அனைவருக்கும் குடியிருப்புகளை முதலிலே அமைத்துவிட்டுத்தான் திட்டப் பணிகளைத் துவங்குகிறது. இப்படிப்பட்ட முறை நெடுஞ்சாலைத் துறையில் இல்லை. எனவே இப்படி ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க அமைச்சரவர்கள் முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** It is a Non-Plan Scheme. ஆகையால்தான் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. 1982-83-ல் இது எடுக்கப்பட வேண்டுமென்று பரிசிலனையில் இருக்கிறது. பட்ஜெட் வரும்போது அறிவிக்கப்படும்.



1982 பிப்ரவரி 5]

பொறியாளர்களுக்கு தனிப் பயிற்சிக் கல்லூரி.

*** 27. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நெடுஞ்சாலைத் துறையில் பணிபுரியும் பொறியாளர்களுக்கு, நவீன தொழில் நுட்பங்களைக் கற்றுக் கொடுப்பதற்கு, தனிப் பயிற்சிக் கல்லூரி (Staff Training College) தொடங்கும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) மற்றும் (இ) ஆம். இது குறித்து நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித்துறை தலைமைப் பொறியாளர் சமர்ப்பித்துள்ள செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** உத்தேசிக்கப்பட்டுள்ள பொறியாளர்களுக்கான தனிப் பயிற்சிக் கல்லூரி எந்த இடத்தில் அமைக்கப்பட இருக்கிறது ? அந்த நிலையத்தின் தலைவர் எந்தப் பதவி அந்தஸ்தில் நியமிக்கப்பட இருக்கிறார் ? எத்தனை துறைகள் அதிலே அமைக்கப்பட இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** இந்த ஆண்டிலே அமைப்பதற்கு பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம். அதற்காகுண்டான வழி வகைகளைப் பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம். ஏறக்குறைய 50 லட்சம் ரூபாய் எஸ்டிமேட் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை எந்தெந்தப் பகுதிகளிலே அமைத்துக் கொள்ளலாமென்பதும் பரிசீலனையில் இருந்து வருகிறது. எவ்வளவு சீக்கிரம் நடவடிக்கைகள் எடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** நெடுஞ்சாலைத் துறையில் பணி புரியும் பொறியாளர்களுக்குப் பயிற்சி அளிக்க தனிப் பயிற்சிக் கல்லூரி நிறுவுவதில் தமிழ்நாடு தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்தின் ஆலோசனை பெறப்படுமா ? தமிழ்நாட்டிலே தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டிருப்பதால், அங்கேயே ஒரு யூனிட்டாக இதை வைத்தால், செலவைக் குறைக்க வழி ஏற்படும். இது குறித்து அரசின் கருத்து என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** இவைகளை எல்லாம் பரிசீலித்துத் தான் இந்தப் பயிற்சிக் கல்லூரியை ஆரம்பிக்கிறோம்.

[1982 பிப்ரவரி 5

**கள்ளச் சாராயம்.**

* 28. **வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, அண்ணா நகரில் ஏ.ஜி. பிளாக்கில், ஆரவில் குடியிருப்புக்கு எதிரில், வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான இடத்தில், குடிசைகள் போடப்பட்டுள்ளன என்பதும் அங்கு சாராயம் காய்ச்சப்படுவதோடு விற்கப்படுகிறது என்பதும், உண்மையா ?

(இ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** (அ) கள்ளச் சாராயம் காய்ச்சப்படுவதாகத் தகவல்கள் இல்லை. ஆனால் கள்ளச்சாராயம் விற்கப்பட்டதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

(இ) காவல் துறையினரால் சோதனைகள் நடத்தப்பட்டன. 1—1—1981 முதல் 20—1—1981 வரை 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் பிரிவுகள் 4(1) ( ), மற்றும் 4 (1) ( ) கீழ் மொத்தம் 21 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு அமைச்சரவர்கள் அளித்த பதில் எனக்கு அதிர்ச்சியைத் தருகிறது. இது குறித்து முன்பே சில புகார்களை நான் மேலவையிலே கூறியிருக்கிறேன். அங்கு இன்றுகூட சட்ட விரோதமான செயல்கள் நடக்கின்றன. அங்கே கள்ளச் சாராயம் காய்ச்சப்படுகிறது, விற்பனை செய்யப்படுகிறது. வேண்டுமென்றால் அமைச்சரவர்களே திடீர் சோதனை நடத்துவதன் மூலம் தெரிந்துகொள்ளலாம். அது மட்டுமல்ல. வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான இடத்திலே இந்தக் காரியம் நடந்துகொண்டிருக்கிறது. இதையும் அமைச்சரவர்கள் சென்று பார்வையிட்டால் அறிந்துகொள்ளலாம். ஆகவே அமைச்சரவர்கள் நேரடியாகச் சென்றோ அல்லது அதிகாரிகளை அனுப்பியோ, இன்று நடைபெறும் சட்ட விரோதச் செயல்கள் நடப்பதைக் கடுமையான நடவடிக்கைகள் மூலம் நிறுத்த முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு சொ நீ. இராசேந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர்கள் அதிர்ச்சி அடைந்ததாகச் சொன்னார்கள். தகவல்படி அங்கே காய்ச்சுவதாக இல்லை, விற்பனை செய்வதாகத் தகவல்கள் இருக்கின்றன. எந்தப் பகுதி என்று குறிப்பாகச் சொன்னால், சம்பந்தப்பட்ட அதிகாரியை அனுப்பி. தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1982 பிப்ரவரி 5]

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** அங்கே காண்டீபம் அச்சகம் என்று இருக்கிறது. அந்தக் காண்டீபம் அச்சகத்திற்கு அருகிலே நடக்கிறது. இதைக் கண்காணிக்க போலீஸ் வேன் எண் 5 இலக்கமிட்ட டி.எம்.வி. 9282 வேன் 27—9—1981 அன்றும், பிறகும் 24—12—1981 பிறகு டி.எம்.வி. 8023 வேனும், 28—1—1982 க்குப் பிறகு டி.எம்.பி.டி. 3314 எண்ணுள்ள வேனும் சென்று பார்த்த பிறகும், அறிஞர் அண்ணா அவர்களின் சொல்லிலே சொல்ல வேண்டுமென்றால், காட்ட வேண்டியதைக் காட்டி, பெற வேண்டியதைப் பெற்றுக்கொண்டு, வந்திருக்கிறார்கள். எனவே இதை உடனடியாக நிறுத்த அமைச்சரவர்கள் நடவடிக்கைகளை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** வீட்டு வசதி வாரிய இடத்திலே நடக்கிறதென்று சொன்னார்கள். எந்த இடத்தில் என்று சொன்னால், நடவடிக்கை எடுக்கலாம். காண்டீபம் அச்சகம் இருக்குமிடம் வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்த இடமா ?

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** அங்கே ஆசிரியர்களுக்குச் சில இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன. கேள்வியிலே குறிப்பிட்டிருக்கிறேன். ஏ.ஜி. பிளாக்கில், ஆரவில் குடியிருப்புக்கு எதிரில் என்று.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அமைச்சரவர்கள் கேட்டது, வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான இடத்தில் காண்டீபம் அச்சகம் இருக்கிறதா என்பதுதான்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** எந்த இடம் என்பது கேள்வியிலேயே விவரமாக இருக்கிறது.

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** உறுப்பினர் கொடுத்த தகவலின் பேரில் கண்டிப்பாகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** சென்னை நகரில் அரசுக்குச் சொந்தமான குடியிருப்புக் கட்டடத்திலே கள்ளச் சாராயம் காய்ச்சப்படுவதோடு விற்கப்படுவதாகவும் இங்கே குறிப்பிட்டார்கள். அதுமட்டுமல்லாமல், மாநிலம் பூராவும் இன்றையதினம் கள்ளச் சாராயம் காய்ச்சி விற்கப்படுகிறது. இப்படி கள்ளச் சாராயம் காய்ச்சி விற்கப்படுவதால், சாராயக் கடைகளைக் குத்தகைக்கு எடுத்திருப்பவர்கள் நஷ்டம் வருவதால், "நாங்கள் குத்தகைப் பணத்தைக் கட்ட மாட்டோம்" என்று மறுத்திருக்கிறார்கள். அப்படி அவர்கள் மறுத்ததன் காரணமாக சாராயக்கடைகளைக் குத்தகைக்கு எடுத்திருக்கிறவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிராந்தி கடை வீதம் ஒப்பன்

மன்னிக் கொள்ளுங்கள், அதற்குக் கட்டணம் கட்ட வேண்டாம், ஆனால் சாராயக் கடைக்கான குத்தகைக் கட்டணத்தை மட்டும் தந்தால் போதும் என்று அரசு சொல்லியதாகச் சொல்லப்படுகிறது என்பது உண்மையா?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** அதுமாதிரி தகவல் அரசுக்கு இல்லை. ஆனால் அப்படிப்பட்ட குற்றங்கள் செய்பவர்கள் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் சொல்லிய அந்தப் பகுதியிலே தொடர்ந்து கள்ளச் சாராயம் காய்ச்சுதல் மற்றும் விற்பனை நடைபெறுவதாகத் தகவல் வந்திருக்கிறது. காவல் துறைக்கு அதைப்பற்றித் தெரிவித்த பிறகும், அவர்களுடைய கண்காணிப்புக்குப் பிறகும் தொடர்ந்து நடைபெறுகிறது. அங்கு குடியிருப்பவர்கள் சங்கடத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். தொடர்ந்து புகார் செய்ய அஞ்சுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களே நேரடியாகச் சென்று பார்வையிட்டு அங்கு குடியிருப்பவர்கள் சங்கடம் இல்லாமல், அச்சமில்லாமல், பயமில்லாமல் வாழ ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** பொதுமக்களிடமிருந்து இது சம்பந்தமாகப் புகார் எதுவும் வரவில்லை. ஆனால் அப்படிப்பட்ட அவசியம் ஏற்பட்டால், நேரில் போகவும் நான் அஞ்சவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** அப்படிப்பட்ட தகவல் அரசுக்கு இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் எல்லா இடங்களிலும் இப்படி கள்ளச் சாராயம் காய்ச்சி விற்கப்படுவதால், சாராயக் கடைகளைக் குத்தகைக்கு எடுத்திருப்பவர்களுக்கு நஷ்டம் ஏற்படுவதால், ஒரு பிராந்தி கடையை அவர்கள் எல்லாம் திறக்க இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு சாராயக் கடையை ஒருவர் குத்தகைக்கு எடுத்திருக்கிறார் என்றால், பக்கத்திலே இரண்டு மூன்று பிராந்தி கடைகளையும் அவரே நடத்தி வருவதை நான் பார்க்கிறேன். அது பற்றி அரசு பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** இதைப்பற்றி வருவாய்த் துறை அமைச்சரிடம் கேட்க வேண்டும்'



## *Engineering Graduates.*

*29 *Q*.—THIRU K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Khadi and Public Works be pleased to state :

(*a*) the number of Engineering Graduates who have been recruited by the Department every year, from 1977;

(*b*) the number of those (i) who were recruited directly and (ii) who were recruited through the Tamil Nadu Public Service Commission;

(*c*) whether it is a fact that the Public Works Department asked for the regularisation by the Tamil Nadu Public Service Commission of the services of those, who were directly recruited as Engineers; and

(*d*) if so, the number of those whose services have been regularised as on 7th May 1981?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** (அ) மற்றும் (இ). (1) துறையால் ஆண்டுதோறும் தற்காலிகமாகத் தேர்வு செய்யப்பட்ட பொறியியல் பட்டதாரிகளின் எண்ணிக்கை—

| ஆண்டு. | நியமனம் செய்யப்பட்டோர். | பணியில் சேர்ந்தோர். |
|---|---|---|
| 1977 | 15 | 9 |
| 1978 | 178 | 153 |
| 1979 | 257 | 131 |
| 1980 | 326 | 183 |
| | | 476 |

(இ) (2) 1977-80 ஆண்டுகளுக்கென தேர்வாணைக் குழு 328 உதவிப் பொறியாளர்களைத் தேர்வு செய்துள்ளது. அவர்களுள் 1977-80 ஆண்டுகளில் நியமனம் செய்யப்பட்டு துறையில் தற்காலிகமாகப் பணியாற்றும் 204 உதவிப் பொறியாளர்களும் அடங்கியுள்ளனர்.

(உ) துறையால் நேரடியாக நியமனம் செய்யப்பட்டவர் பணியினை வரன்முறைப்படுத்தும்பொருட்டு தனித் தேர்வு ஒன்று நடத்தும் செயற்குறிப் பின் மீது கருத்துரைகளை வழங்குமாறு தேர்வாணைக் குழு கேட்டுக் கொள்ளப்பட்டது. ஆனால், தேர்வாணைக் குழு அதற்கான ஒப்புதலை அளிக்கவில்லை.

(எ) துறையால் நேரடியாக நியமனம் பெற்று தற்காலிகமாகப் பணியாற்றி வருபவர் பணியினை வரன்முறைப்படுத்த தனித் தேர்வு எதையும் தேர்வாணைக் குழு நடத்தவில்லை. இருப்பினும், 1977-80 ஆண்டுகளுக்கான தேர்வாணைக் குழுவின் முறையான தேர்வில் 328 உதவிப் பொறியாளர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். அவர்களுள் துறையால் நேரடி நியமனம் பெற்றுத் தற்காலிகமாகப் பணியாற்றும் 204 பேர் அடங்கியுள்ளனர்.

**திரு. க. இராமமூர்த்தி :** இப்படி நேரடியாக வேலைக்கு அமர்த்தியதன் காரணமாக வகுப்புவாரி பிரதிநிதித்துவமுறை பின்பற்றப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அதற்கான பாதுகாப்பு தரும் வகையில் இந்த நடவடிக்கை அமையவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** அதுபற்றித் தகவல் இல்லை. தனிக் கேள்வி கேட்டால், சொல்லலாம்.

**திரு. க. இராமமூர்த்தி :** தேர்வாணைக் குழுவின் மூலம் இந்த நியமனங்களைச் செய்யாதது குறிப்பிட்ட சிலருக்குச் சலுகைகளைத் தருவதற்காகவும், வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையை மீறவும் அதிகாரிகள் செய்த செயல் என்பது அரசுக்குத் தெரியுமா? இது தொடர்பான தகவல்களைச் சேகரித்து அப்படி நடைபெறாத வகையில் அரசு உத்தரவாதத்தைத் தருமா?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** அவசியம் மற்றும் சூழ்நிலையையொட்டி இப்படிப்பட்ட நியமனங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே இதிலே வகுப்புவாரி பிரதிநிதித்துவம் மீறப்படவில்லை. அப்படி ஒன்றும் நடைபெறவில்லை. அப்படி நடைபெறாத அளவுக்கு இந்த அரசு பார்த்துக் கொள்ளும்.

**திரு. க. இராமமூர்த்தி :** நேரடி நியமனத்தில் எவ்வளவு பேர் நியமனம் செய்யப்பட்டார்களோ அவ்வளவு பேரும் பணியில் சேரவில்லை. தேர்வாணைக் குழுவைத் தவிர்க்கக் கூடிய கட்டாய சூழ்நிலை எப்படி, எதனால் ஏற்பட்டது? இதுபோன்று நேரடியாக நியமனம் செய்கின்ற அவசியமற்ற ஒரு முறையை ஒருசில அதிகாரிகள் ஏன் கையாண்டார்கள்? அவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** அதிகாரிகளிடம் இதுபற்றிக் காரணம் கேட்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சமூக நலத் துறை அமைச்சர் பெயரில் உள்ள 30 ஆம் எண் உள்ள வினா-விடைக்கு நிதியமைச்சர் ஒப்புதல் அளித்துள்ளதாக அறிவிப்பு வந்துள்ளதால், இந்த வினா பிறிதொரு நாளில் எடுத்துக் கொள்ளப்படும்.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி ( * ) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

## 2. கவன ஈர்ப்பு.

**பட்டதாரி ஆசிரியர்கள் தங்களுடைய ஏழு அம்சக் கோரிக்கையை வலியுறுத்தி மூன்று கட்ட நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது குறித்து.**

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, பிழக்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"பட்டதாரி ஆசிரியர்கள் தங்களுடைய ஏழு அம்சக் கோரிக்கையை வலியுறுத்தி மூன்று கட்ட நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது குறித்து".

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, அவைமுன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

* **திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையில் முக்கியமாக ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் அரசு அதிகாரிகளுடன் நடத்திய விவாதத்தைப் பற்றிய குறிப்புகள் மட்டும் காணப்படுகின்றன. அதிலே எந்தெந்தக் கோரிக்கைகள் மீது என்னென்ன மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன, எந்தெந்தக் கோரிக்கைகள் நிதித் துறையுடன் கலந்து ஆலோசிக்கப்படுகின்றன, எந்தெந்தக் கோரிக்கைகள் கல்வித் துறையின் ஆலோசனையில் இருக்கின்றன என்பது பற்றிய குறிப்புகள் இல்லை. அதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா? பட்டதாரி ஆசிரியர்களுக்கு குறுகிய காலப் பயிற்சியை அளிப்பதைப் பொறுத்தவரையில், ஆசிரியர் சங்கமே ஒரு பல்கலைக் கழகப் பேராசிரியர்களைக் கலந்து பேசி சென்னைப் பல்கலைக் கழகம் திட்டத்தை ஏற்கெனவே கொடுத்திருக்கிறது.

@ [illegible]—294 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. சி. ரா. வெட்சுமிகாந்தன்] [1982 பிப்ரவரி 5

ஏற்று 10 மாதச் சான்றிதழை முன்பே ஆசிரியர்களுக்குக் கொடுத்திருக்கிறது. அதற்கு அரசும் முதுகலைப் பட்டதாரிக்கு இணையாக அங்கீகாரம் கொடுத்திருக்கிறது. ஆதாரம் இல்லாமல் நான் கேட்கவில்லை. இதுபற்றியும் மாண்புமிகு அமைச்சர் விளக்குவாரா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஆசிரியர் சங்கத்தைப் பொறுத்தவரையில், அதன் பிரதிநிதிகளோடு எவையெவை பற்றிப் பேசப்பட்டது, எந்தெந்தத் துறையோடு ஆலோசனை செய்யப்பட்டிருக்கிறது என்பது போன்ற விவரங்கள் குறிப்பிலேயே இருக்கின்றன. இன்டக்டட் ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்குக் குறுகிய காலப் பயிற்சி கொடுப்பது பற்றி இரண்டு மூன்று அடிப்படையில் பரிசீலிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். 10 மாதப் பயிற்சி சென்னைப் பல்கலைக் கழகத்தால் தரப்பட்டது என்று உறுப்பினர் சொன்னார். கல்லூரி ஆசிரியர்களுக்காக நடத்தப்பட்ட பயிற்சி வகுப்புதான் அது என்று நான் நினைக்கிறேன். ஆனால் மேல்நிலைப் பள்ளியைப் பொறுத்தவரையில், ஆசிரியர்களுக்கு நல்ல கல்வித் தகுதியைக் கொடுக்க வேண்டும். அவர்கள் நல்ல கல்வித் தகுதி உடையவர்களாக இருப்பது நல்லது என்ற நோக்கத்தில் அரசு இருக்கிறது. ஆனால் அது குறித்து இன்னும் ஒரு சரியான முடிவுக்கு வரவில்லை. மற்றபடி அவர்கள் கல்வியை மாலை நேரம் மற்றும் கான்டாக்ட் வகுப்பில் சேர்ந்து படிக்க நாம் வாய்ப்புக் கொடுத்திருக்கிறோம். அத்தகைய வாய்ப்பை அவர்கள் பயன்படுத்தி கல்வித் தகுதியை உயர்த்திக்கொள்ள வேண்டும். தவிரவும் இப்போது கல்வியின் தரமும் உயர்த்தப்பட்டிருக்கிறது. 4 ஆண்டுகளுக்கு முன்பு எம். ஏ. படித்தவர்களை விட இப்போது எம். ஏ. படிப்பவர்கள் கல்வியை ஓர் ஆண்டு அதிகமாகப் பெறுகிறார்கள்.

(முற்பகல் 10-10)

4 ஆண்டுகளுக்கு முன்னால் எம்.எஸ்ஸி. படித்தவரைவிட இப்போது படிப்பவர்கள் ஒரு ஆண்டு அதிகமாகப் படிக்கிறார்கள். இப்போது படிப்பே அதிகரிக்கும்போது, இதற்கு முன்னாலே இருந்த எம்.எஸ்ஸி. படிப்பில் ஒரு தரத்தைக் குறைத்துப் படித்துவிட்டு ஆசிரியர்களாக வந்திருக்கும் அவர்களைக் கொண்டு மேல்நிலைப் பள்ளிகளை நடத்துவது என்பது வரவேற்கத் தக்கதல்ல. கல்வியின் தரத்தை உயர்த்தும் நோக்கம் அரசுக்கு இருப்பதால் தான், இந்தக் கோரிக்கையை இதுவரை ஏற்கவில்லை.

**திரு. பா. ரா. தாமஸ் :** ஏழு அம்சக் கோரிக்கையில் மூன்றாவதுபடி அனைத்து ஆசிரியப் பெருமக்களுக்கும் 1—6—1981 அன்று சிறப்பூதியம் வழங்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். இந்தத் தேர்வு நிலை



982 பிப்ரவரி 5] [திரு. பா. ரா. தாமஸ்]

1—4—1973-லே 10 ஆண்டு —1—1971-லே சதவீத அடிப்படையிலும், 1—4—1973-லே 10 ஆண்டு அடிப்படையிலும், 1—1—1974-லே வேறு சிலருக்கு 10 ஆண்டு அடிப்படையிலும், 1—4—1975-லே முதுநிலை உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு அடிப்படையிலும் அளிக்கப்பட்டது. இந்த ஆண்டு வேறுபாடு 0 ஆண்டு அடிப்படையிலும் அளிக்கப்பட்டது. இந்த ஆண்டு வேறுபாடு ...ளைத் தவிர்க்கும் வகையில் நல்லமுறையிலே அரசு ஒரு ஆணையை வெளியிட்டிருக்கிறது. அனைத்து ஆசிரியர்களுக்கும் 1—6—1981-லே 20 ஆண்டு ...ள் முடிந்திருந்தால், தேர்வுநிலை வழங்கலாம் என்று இப்போது போட்டிருக்கும் அரசாணையை நான் மிகவும் வரவேற்கிறேன். இந்த அரசாணை கொண்டு வந்திருக்கும் உணர்வோடு, எல்லா ஆசிரியப் பெருமக்களுக்கும் அவர்கள் 20 ஆண்டு முடித்திருந்தால் 1—6—1981-லே வழங்க வேண்டும். மேலும் ...ம்பி, ஆர். 22-பி. படி இதுபற்றி ஆராயப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதையும் ஆராய்ந்து உடனடியாக ஆணை பிறப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இந்தக் கோரிக்கையைக் குறித்து சம்பந்தப்பட்ட துறையுடன் கலந்து பேசி முடிவெடுக்கப்படும்

3. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் மீனாட்சிசுந்தரம், நல்லசிவன், இராமமூர்த்தி, தாஸ், முனுசாமி, லெட்சுமிகாந்தன், முத்துசாமி, ஆனந்தம் ஆகியோர் ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குத் திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள். திருத்தங்கள் கொடுத்திருக்கும் உறுப்பினர்கள் திருத்தங்களை முன்மொழிந்து வேறொரு உறுப்பினர் அதை வழிமொழிய கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, என் பெயரில் உள்ள கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன் :—

"தீர்மானத்தின் கடைசியில் கீழ்க்கண்டதைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் :—

(1) மத்திய அரசு வரும் ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் தனது ஊழியர்கட்கு வழங்க உள்ள அகவிலைப்படி உயர்வு 3 தவணைகளையும், மாநில அரசு ஊழியர், ஆசிரியர்கட்கும் அதே தேதியில் வழங்குவது ;

(2) ஆசிரியர்களின், அரசு ஊழியர்களின் நீண்ட நாள் கோரிக்கையாகிய ஓய்வுபெறும் போது ரூ. 10 ஆயிரம் வழங்கும் திட்டத்தை வெளியிட்டு அமுல்படுத்துவது ;

(3) வீட்டுவசதி வாரிய ஊழியர்கட்கு வழங்கப்பட்டுள்ள போனஸ் திட்டத்தை அனைத்து அரசு ஊழியர், ஆசிரியர்கட்கும் விரிவுபடுத்துவது;

(4) அரசு சென்ற ஆண்டு சாதனைப் பட்டியலில் வெளியிட்டவாறு ஆசிரியர்கட்குத் தனியான வீட்டுவசதி வாரியம் ஏற்படுத்துவது, தனியார் பள்ளி ஆசிரியர்கள் அனைவருக்கும் நேரடி ஊதியம் வழங்குவது ;

(5) ஈராண்டு பயிற்சியைக் கருத்தில் கொண்டு இளநிலை, இடைநிலை ஆசிரியர்கட்கு வழங்கப்பட்ட ஒரு கூடுதல் ஊதிய உயர்வை ஏனைய நிலை ஆசிரியர்கட்கும் விரிவுபடுத்துவது;

ஆகியவை பற்றி மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் ஏதும் குறிப்பிடாததற்கு இந்த அவை தன் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது ".

**திரு. ஆ. நல்லசிவன் :** இதை நான் வழிமொழிகிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, என் பெயரில் உள்ள கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்.

" தீர்மானத்தில் கடைசியில் கீழ்க்கண்டதைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்:—

1. 1982 ஜனவரி 19 ஆம் தேதி நடந்த பொது வேலை நிறுத்தத்தில் தமிழகத்தில் கலந்துகொண்ட உழைக்கும் மக்கள் மீது அரசு அடக்குமுறையை கட்டவிழ்த்துவிட்டு துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியது. மேலும் பழி வாங்கும் எண்ணத்துடன் தற்காலிக வேலை நீக்கம் செய்திருப்பதைப் பற்றி;

2. கரும்பு விவசாயிகளுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் கரும்புக்கு கட்டுபடியாகும் விலை நிர்ணயம் செய்யாதது பற்றி ,

3. கைத்தறி நெசவாளர்கள் சட்டத்தின்கீழ் வகுக்கப்படவேண்டிய விதிகள், பல மாதங்களாகியும் வகுக்கப்படாதது பற்றி ;

4. தமிழகத்தின் பல பகுதிகளில், குறிப்பாக, குமரி மாவட்டத்தில் நடந்த வகுப்புவாத, மதக் கலவரங்களைப் பற்றி;

5. தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு வீட்டுமனைப் பட்டாவுக்கு நில ஆர்ஜிதம் செய்யும் சட்டத்தை சென்னை உயர்நீதி மன்றம் செல்லாது என்று அளித்த தீர்ப்பின் மேல் தகுந்த மேல் முறையீடு செய்யாதது பற்றி ஆகியவற்றைப் பற்றி மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் ஏதும் குறிப்பிடாததற்கு இந்த அவை தன் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது."

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** இதை நான் வழிமொழிகிறேன்.





**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, என் பெயரில் உள்ள கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன் :—

" தீர்மானத்தின் கடைசியில் கீழ்க்கண்டதைச் சேர்த்துக் கொள்ளவும் :—

தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு [illegible] (இரண்டாவது திருத்தச் சட்ட வரைவுக்கு) குடியரசுத் தலைவரின் இசைவு தராததற்கான காரணங்கள் 30—1—1982-லேயே மாநில அரசுக்குக் கிடைத்திருந்தும் 1—2—1982-ல் அரசுக்கு இதுவரை அறிவிக்கப்படவில்லை என்று தெரிவித்ததற்கும், அந்த வாசகங்களைத் திரும்பப் பெறாமைக்கும் இந்த அவை தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது."

**திரு. பா. ரா. தாமஸ்** நான் இதை வழிமொழிகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, என் பெயரில் உள்ள கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன் :—

" தீர்மானத்தின் கடைசியில் கீழ்க்கண்டதைச் சேர்த்துக் கொள்ளவும்—

1. ஆசிரியர்களுடைய கோரிக்கைகள் குறித்தும் குறிப்பாக ஆசிரியர்களுக்கான தனி ஊதியக் குழு அறிவிப்பு, ஆசிரியர்களுக்கான வீட்டுவசதி வாரிய அறிவிப்பு ஆகியன இடம் பெறுவது குறித்தும், தனியார் பள்ளி கல்லூரி ஆசிரியர்களுடைய பாதுகாப்புக்கு அரசு எடுக்கப்போகும் நடவடிக்கைகள் குறித்து எந்தக் குறிப்பும் காணப்படாதது குறித்தும்;

2. மாணவர்களுக்கான தேர்வுமுறை சீர்திருத்தம், பல்கலைக் கழகங்களை ஜனநாயகப்படுத்துவது ஆகியன குறித்தும்;

3. ஆசிரியர் பயிற்சி பெற்று வேலையில்லாமல் தவிக்கும் ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை அளிப்பது குறித்து எந்தத் திட்டமும் அறிவிக்கப்படாதது குறித்து;

ஆகியவைபற்றி மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் ஏதும் குறிப்பிடாததற்கு இந்த அவை தன் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது ".

**செல்வி ஆ. லீலாவதி :** இதை நான் வழி மொழிகிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, என் பெயரில் உள்ள கீழ்க்காணும் திருத்தங்களை முன்மொழிகிறேன் —

'தீர்மானத்தின் கடைசியில் கீழ்க்கண்டதைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்

1. அகவிலைப்படி வழங்கப்பட வழிவகை ;

2. ஓய்வு பெற்றால் பத்தாயிரம் ரூபாய்;

3. அரசு சாதனைப்பட்டியலில் இடம் பெற்றுள்ள ஆசிரியர்களுக்கென தனியாக வீட்டு வசதி வாரியம் அமைத்தல், தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு [illegible] வழங்குதல்;

4. வேலையில்லாத பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்கட்கு வேலை அளிக்கும் திட்டம்.

5. வங்காள மாநிலம் போல ஆரம்பப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, அரிசன மாணவர்களுக்கு இலவச உணவு அரிசன உயர்பள்ளி மாணவர்கட்கு [illegible] வழங்குதல்;

6. ஆசிரியர்களுக்கென இல்லம் சென்னை நகரில் அமைக்கப்படாதது;

7. ஊராட்சி ஒன்றியப்பள்ளி ஆசிரியர்கட்கு 1—6—1981-க்கு முன்னைய [illegible] நடைமுறைக்கு வராதது;

8. பல்கலைக் கழக அமைப்புக்களை ஜனநாயகப்படுத்துதல்;

ஆகியவைபற்றி மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் எதும் குறிப்பிடாததற்கு இந்த அவை தன் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.”

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** இதை நான் வழிமொழிகிறேன்.

**திரு. வி. வி. வி. ஆனந்தம் :** தலைவர் அவர்களே, என் பெயரில் உள்ள கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

“ தீர்மானத்தின் கடைசியில் பின்கண்டவற்றைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்:

“ மத்திய அரசின் வேலை நிறுத்தத் தடைச் சட்டம், தேசிய பாதுகாப்புச் சட்டம், விலைவாசி உயர்வு ஆகியவற்றை எதிர்த்து 19—1—1982 ஆம் தேதி நடைபெற்ற பொது வேலை நிறுத்தத்தை முறியடிக்க தமிழக அரசு கையாண்ட அடக்கு முறையின் விளைவாக துப்பாக்கிப் பிரயோகத்தில் மூவர் மரணமடைந்துள்ளனர், பலர் படுகாயம் அடைந்தனர். ஆயிரக்கணக்கானவர்கள் சிறை பிடிக்கப்பட்டனர். இந்தத் துப்பாக்கிப் பிரயோகங்களைக் குறித்து உயர்மட்ட நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பது பற்றியும் இவ்வேலை நிறுத்தப் போராட்டத்தையொட்டி தொழிற்சங்க அரசியல் ஊழியர்கள் மீது போடப்பட்டுள்ள வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டும் என்பது பற்றியும், காவல்துறை, போக்குவரத்துத் துறை போன்றவற்றில் ஊழியர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பழிவாங்கும் நடவடிக்கைகள் அனைத்தையும் ரத்து செய்ய வேண்டும் என்பது பற்றியும்; மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் எதும் குறிப்பிடாததற்கு இந்த அவை தன் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது ”.

**திரு. ஆ. நல்லசிவன் :** இதை நான் வழிமொழிகிறேன்.





**திரு. ஏ. ஜே. தாஸ் :** தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது நன்றி
தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.
தேசியக்கல்வி சுப்ரமணிய பாரதியின் நூற்றாண்டு நிறைவு விழாவை ஆண்டு
முழுவதும் கொண்டாட திட்டமிட்டுள்ளதைப் பாராட்டுகிறேன். உழவர்
களுக்கு உபரி நிலம் 1980 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு
உச்சவரம்பு நிர்ணயித்தல்), இரண்டாவது திருத்தச் சட்ட வரைவு குடியரசுத்
தலைவரின் இசைவு பெறுவதற்காக மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்
டது. அதனால் உபரி நிலங்களை உழவர்களுக்குப் பகிர்ந்தளிக்கலாமென
கருதப்பட்டது. ஆனால் நமது எண்ணத்திற்கு மாறாக, குடியரசுத் தலை
வர் அதற்கு இசைவு தரவில்லை என்ற குற்றச்சாட்டை வைத்து, ஏதோ இந்த
அரசு ஏழைகளுக்கு உதவி செய்வதை மத்திய அரசு தடுப்பதுபோல விளம்
பரத்திற்காக கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அரசு உண்மையிலேயே
உழவர்களுக்கு உதவி செய்வதாக இருந்தால், சட்டத்திலே ஓட்டைகள் இருந்
திருக்காது. இதை அமுல் செய்ய வேண்டும் என்று எண்ணியிருந்தால்,
நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள் இலங்கை தமிழர் பிரச்சினைக்
காக எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்து வைத்து டெல்லி சென்று
பிரதமரைச் சந்தித்தாரே அதுபோல் இந்தப் பிரச்சினையையும் வைத்து
விளக்கம் அளித்து பிரதமரின் இசைவு பெற்றிருக்கலாம். இந்த அரசு ஏழை
யெளிய மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று விரும்பினால், இதே
முறையிலே எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசி நடவடிக்கை
எடுக்கலாம். அப்படிச் செய்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

மின் கட்டணத்தைப் பொறுத்தவரையில், மக்கள் மீது மின் கட்ட
ணத்தை உயர்த்தும் நோக்கம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மின் வாரியத்தின்
ஊதாரிச் செலவினங்களாலும், திறமையற்ற நிர்வாகத்தின் காரணமாகவும்,
அரசு 100 கோடி ரூபாய் நிதியுதவி செய்தும், அதன் முழுப்பயனை மக்கள்
அடைய முடியவில்லை. சாதாரணமாக தனியார் நிறுவனத்தில் ஒரு நபர்
செய்த வேலையை இன்றைக்கு மின் வாரியத்தில் ஐந்து பேர் செய்தால், ஒரு
நபருடைய வேலையை முழுமையாகச் செய்ய முடியவில்லை. காரணம் இந்த
மின் வாரியத்திலே 40 தொழிற் சங்கங்கள் இப்போது இருக்கின்றன. இந்த
40 தொழிற் சங்கங்களையும் வைத்துக்கொண்டு எப்படி நிர்வாகம் சீராகச்
செயல்பட முடியும் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். ஒரு தொழி
லுக்கு ஒரு தொழிற் சங்கம் என்று அறிவித்தார்கள். ஆனால் அதை நடை
முறைப்படுத்த முடியவில்லை. அட்டைப்பட்டியல் முறையை அறிவித்து,
அதில் பல்வேறு குழப்பங்களையும் ஏற்படுத்தி, ‘அட்டைப்பட்டியலில் அலங்
கோலம்’ என்ற நிலையில் இன்று மின் வாரியம் இயங்கிவருகிறது. அதில்

சிலர் வேலை செய்வதும், சிலர் வேலை செய்யாமல் உட்கார்ந்துகொண்டிருப்பதும் புரிந்துகொள்ள முடியாததாக இருக்கிறது. 3—2—1982 'தினமணி' பத்திரிகையில் "அட்டைப்பட்டியல் முறை", மின்வாரியம் மீது கோர்ட் அவமதிப்பு வழக்கு தாக்கல், என்றெல்லாம் போட்டிருக்கிறார்கள். பல காசாளர்கள் வேலை இல்லாமல் உட்காரும் நிலை இப்போது ஏற்பட்டுள்ளது. இதை அவர்களே கூறியிருக்கிறார்கள். இந்த அளவிற்கு நிர்வாகச் சீர்கேட்டையும் வைத்துக்கொண்டு மின்வாரியம் மின்கட்டணத்தையும் உயர்த்துகிறது. எற்கெனவே மின் கட்டணம் இருப்பதை வசூல் செய்ய முடியாமல் பல கோடி ரூபாய் பாக்கி இருக்கிறது.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஜே. தாஸ் அவர்கள் பேசும்போது தொழிலாளர்களுக்குச் சம்பளம் கிடைக்காதது இப்போது நிர்வாகத்தில் இருக்கும் கோளாறுகளின் காரணமாகத்தான் என்று சொன்னார்கள். அதனால்தான் மின் கட்டணத்தையும் உயர்த்தும் நிலை என்றும் சொன்னார்கள். காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்யும் மாநிலங்களிலே கூட, ஐ.எம்.எஃப்.-லே வாங்கும் கடனைக் கொடுக்க மின் கட்டணத்தை உயர்த்தியிருப்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. ஏ. ஜே. தாஸ் : தமிழகத்தைப் பொறுத்தவரையில் தான் நாம் பேசவேண்டும், அகில இந்திய ரீதியிலே பேசக்கூடாது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மேலவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசைப் போய் ஏன் பார்க்கவில்லை, ஏன் ஒன்றாகப் போய் பேசக்கூடாது என்றெல்லாம் சொன்ன மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அகில இந்திய அளவிலே பேசக்கூடாது என்று இப்போது சொல்வது வேடிக்கையாக இருக்கிறது.

* திரு. க. இராமமூர்த்தி : நிர்வாகச் சீர்கேட்டின் அடிப்படையில் தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் மத்திய அரசு மின் கட்டணத்தை உயர்த்தச் சொல்லியிருக்கிறது என்று சொன்னார்கள். மத்திய அரசு சொன்னதாலும் உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் இங்கே அதிகச் செலவினங்கள் நிர்வாகச் சீர்கேட்டின் அடிப்படையிலே ஏற்பட்டிருக்கிறது. அந்த அளவிலே இப்போது சொல்லப்படும் கருத்துக்கள் இருப்பதால், அதற்கு எதிர்ப்பு தேவையில்லை.



மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பிரச்சினை எதுவானாலும் மத்திய அரசை ஒட்டியதாகத்தான் வருகிறது என்பதை ஒப்புக்கொள்கிறோம். அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொன்னார்கள். மத்திய அரசினிடம் நான் சொல்லும்போது அவர்கள் விரும்புவதைத்தான் நியாயம் என்ற அளவிலே அவர்கள் சொல்கிறார்கள். மின் கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்றும், பஸ் கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்றும் அவர்கள் வற்புறுத்துகிறார்கள். நிர்வாகச் சீர்கேடு ஒட்டியதென்றால், அதற்குள்ள பதில் வேறு இருக்கிறது. மத்திய அரசைக் கலக்காமல் பேசுவது என்பது முடியாது என்ற நிலையில்தான் இன்றைக்கு இந்தியத் துணைக்கண்டம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி : மத்திய அரசு மின்சாரக் கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்று சொல்வது மட்டுமல்ல, சென்ற ஆண்டு நான் பேசும்போது மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவது அவசியம் என்று சொன்னால் அதற்கு நடவடிக்கை எடுங்கள் என்று சொன்னேன். அந்தக் கருத்தில் மாறுபாடு இல்லை. அதே நேரத்தில் இந்த அரசுக்கு ஒரு பொறுப்பு இருக்கிறது. செலவினங்களைக் கட்டுப்படுத்தி, நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தும் பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது. மத்திய அரசைச் சொல்வதோடு மட்டுமல்ல, மத்திய ஆட்சியிலே இருப்பவர்கள் என்ற காரணத்தினாலும், தேசிய அளவிலே என்னுடைய கண்ணோட்டம் இருப்பதாலும் சொல்கிறேன். எப்போது பிரச்சினை முற்றுகிறதோ அப்போது அதை அணுகலாம் என்றல்ல. இப்போதே அதை அணுக வேண்டும். நடவடிக்கை எடுக்கும்போது, நிர்வாகத்தில் தவறு செய்து செலவை அதிகப்படுத்திவிட்டு, அதற்குப் பரிகாரமாக, மின் கட்டணத்தை உயர்த்தியிருப்பது சரியல்ல என்றுதான் சொல்கிறோம்.

(முற்பகல் 10.20)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இங்கே உள்ள பிரச்சினை மத்திய அரசைப்பற்றி இந்த அவையில் குறிப்பிடலாமா கூடாதா என்பதே தவிர, மின்வாரியத்தின் மீது சொல்லப்படும் குற்றச்சாட்டுக்களைச் சொல்லலாமா கூடாதா என்பதல்ல.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்போது, எனக்கு உற்சாகத்தைத் தரும் கருத்து ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது செலவைக் குறைக்க வேண்டும் என்பதையும், அதை மத்திய அரசு சொன்னால் யாரும் ஒப்புக் கொள்கிறோம் என்றும் குறிப்பிட்டார். ஒரு பக்கத்தில் ஒரு சாராருக்கு மின்கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு,

இன்னொரு பக்கத்தில் மின்கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்று சொல்வதுதான் விசித்திரமாக இருக்கிறது. இதைப்பற்றி என்னுடைய பதிலில் முழுமையாக விவரிக்கிறேன் என்பதை மட்டும் இப்போது சொல்லி, முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. ஜே. தாஸ்:** ஏற்கெனவே மின்கட்டணம் வசூல் செய்யாமல் போனதன் காரணமாக பல கோடி ரூபாய் பாக்கி இருக்கிறது. அதுமட்டுமல்ல, பல பகுதிகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டு ஒரு வருடத்திற்கு மேலாகியும்கூட அவர்களுக்கெல்லாம் இன்னும் 'பில்' போய்ச் சேரவில்லை என்ற நிலை இருக்கிறது. ஏன் இந்த நிலை என்று நான் கேட்க விரும்புகிறேன். இத்தகைய நிர்வாகச் சீர்கேட்டினால் மின்சார வாரியம் 60 லட்சம் ரூபாய் அளவுக்கு வரியை பாக்கியாகச் செலுத்த வேண்டியிருக்கிறது. இந்த அளவுக்கு வரியை பாக்கி செலுத்த வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

பல கோடி ரூபாய் செலவு செய்து கட்டப்படும் மின்சார வாரியத்திற்குச் சொந்தமான கட்டிடம் இன்னும் முடிவு பெறாமல் இருக்கும் காரணத்தால், பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் பல மின் வாரிய அலுவலகங்கள் இன்னும் வாடகைக் கட்டிடங்களிலேயே இயங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல. மின்வாரிய ஊழியர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்காக "அட்கோ" மூலம் பணம் பெற்று பல ஆண்டுக் காலமாக வியாசர்பாடி எருக்கஞ்சேரி சாலையில் கட்டிடம் கட்டி முடிக்கப்படாத அலங்கோல நிலைமையே மக்கள் நாள்தோறும் பார்க்க வேண்டியிருக்கிறது. கடந்த 5 ஆண்டுகளாக மின் வாரிய ஊழியர்களுக்கு அந்தக் கட்டிடங்கள் கட்டப்படாமலிருப்பது வேதனை தரத்தக்கது. எனவே இந்தப் பணியையாவது உடனடியாகச் செயல்படுத்த வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இத்தகைய நிர்வாகச் சீர்கேடுகளைச் சீர் செய்வதாலே மின்சார வாரியம் மின்கட்டண உயர்வைத் தவிர்க்க இயலும். அதோடு மின்சார வாரியத்தின் நிர்வாகத்தில் அதிகாரிகளை மட்டும் உறுப்பினர்களாக நியமிப்பதைவிட ஏற்கெனவே தனியார் துறையில் நல்ல அனுபவம் உள்ளவர்களையும் "போர்டு மெம்பர்களாக" நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இத்தகைய முறை மின்சார வாரியத்திற்கும் நன்மை பயப்பதாக இருக்கும். எனவே, மக்கள் மீது மின்கட்டண உயர்வைத் திணிப்பதைக் கைவிட்டு அதை எந்த அளவுக்குக் குறைக்க முடியுமோ அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



தமிழ் நாட்டைத் தொழில் மயமாக்க, தொழில் அமைச்சர் அவர்கள் மகாராஷ்டிரம், குஜராத் போன்ற மாநிலங்களுக்குச் சென்று தமிழகத்தில் வழங்கப்படும் சலுகைகள், வசதிகள் ஆகியவற்றை அங்கேயுள்ள தொழிலதிபர்களுக்கு எடுத்துரைக்கிறார்கள். தமிழ் நாட்டில் உள்ளவர்களுக்கு இங்கே தொழில் நடத்த விருப்பம் இல்லையா? இருக்கிறது. ஆனால் இங்குள்ள பல்வேறு நிர்வாகச் சிக்கல்கள் காரணமாக அவர்கள் அவ்வளவு உற்சாகத்தோடு புதிய தொழில்களைத் தொடங்குவதற்கு முன்வரவில்லை. உதாரணமாக "சேஞ்ச் ஆப் கான்ஸ்டிடியூஷன்" பெறுவதற்குள் தொழிலே வேண்டாம் என்று நினைக்கும் நிலை உருவாகிவிடுகிறது. ஒரு தொழிலை ஒருவரிடமிருந்து இன்னொருவர் வாங்கி நடத்த விரும்பினால், இதற்கு அதிகாரிகள் கொடுக்கும் சிக்கல்கள் காரணமாக பலர் தொழில்களையே நடத்த முடியாமல் இருக்கிறார்கள். இப்படி 'சேஞ்ச் ஆப் கான்ஸ்டிடியூஷன்" காரணமாக ஒருவர் கடந்த நான்கு ஆண்டுக் காலமாக அவதிப்பட்டுக் கொண்டிருக்கிற நிலைமையை நான் அறிவேன். எனவே சிறு தொழில்களுக்கு இவ்வகையில் உள்ள சிக்கல்களை அரசு போக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாப் மாநிலத்தைப் பொறுத்த வரையில், அங்கே அன்றாடம் தொழில் உற்பத்தி பெருகி வருவதைப் பார்க்கிறோம். சிறு தொழில் உற்பத்திக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அந்த மாநிலத்தில் உள்ளவர்கள் செய்து கொடுக்கிறார்கள். இதன் காரணமாக பஞ்சாப் மாநிலம் சிறு தொழில் வளர்ச்சியில் முன்னணியில் இருப்பதைப் பார்க்கிறோம். பஞ்சாப் மாநிலத்தில் உள்ளதைப்போல் நமது மாநிலத்திலும் சிறு தொழில் வளர்ச்சிக்கான அனைத்து உதவிகளையும் அரசு கொடுத்து, மாநிலத்தை தொழில் துறையில் முன்னேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வேலையில்லாப் பட்டதாரிகள், ஆசிரியர்கள் ஆகியோர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தருவது குறித்து ஆளுநர் அவர்களின் உரையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. தொழிலாளர்களுக்குப் பயன்படும் வகையில் பல சட்டங்கள் கொண்டு வரப்பட்டதைப் பாராட்டுகிறேன்.

ஜாதி ஒழிப்புக்கு கலப்புத் திருமணம் மிக முக்கியமானது. சமுதாயத்தில் ஒரு புரட்சியை உருவாக்குகின்ற தம்பதிகளுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமையை உடனடியாகக் கொடுத்தால்தான், இளைஞர் சமுதாயத்தை நாம் உற்சாகப்படுத்த முடியும். இந்தப் புரட்சிகரமான காரியத்தைச் செய்யும் போது, அவர்கள் வீட்டைவிட்டுக்கூட வெளியேறுகின்ற நிலைமை உருவாகிறது. அவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்பில் முன்னுரிமை கொடுப்பதால், அவர்களின் வாழ்க்கைக்கு உதவி செய்ய முடியும்.

[திரு. ஏ. ஜே. தாஸ்] [1982 பிப்ரவரி 5

அடுத்து, ஏழை எளிய மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கும்போது,
ஒரு தென்னங் கன்று மட்டும் கொடுக்கப்படுகிறது. குடும்ப நலத் திட்டத்
லதப்பற்றிக் குறிப்பிடும்போது கூட, இரண்டு குழந்தைகள் வைத்துக்கொள்ள
லாம் என்று சொல்லுகிறோம். ஆனால் தென்னங்கன்று கொடுக்கும்போது
மட்டும் ஒன்றைத்தான் தருகிறோம். ஒரு கன்று தருவதற்குப் பதிலாக
இரண்டு தென்னங் கன்றுகளையாவது கொடுக்க முன் வரவேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** "பிள்ளைகள்" என்ற பெயர் உள்ள
வைகள் எல்லாமே இரண்டு இரண்டு என்று அமையுமானால் அதனால் சங்கடம்
தான் வரும்.

**திரு. ஏ. ஜே. தாஸ் :** இறுதியாக, சட்டம் ஒழுங்குபற்றி நான் அதிகமாகக்
குறிப்பிட விரும்பவில்லை. காரணம் இன்றையதினம் நாள்தோறும் பத்திரி
கைகளில் வரும் செய்திகளை நேரில் பார்க்கிறோம். சட்டம் ஒழுங்கு
இந்த நாட்டில் எந்த அளவுக்கு இருக்கிறது என்பது நமக்கு நன்கு தெரியும்.
எங்கள் கட்சியின் பிரிவான இளைஞர் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள்
விலைவாசி உயர்வை எதிர்த்துப் போராட்டம் நடத்தினார்கள். அந்தப்
போராட்டத்தின்போது இளைஞர் ஒருவரை காவல் நிலையத்திற்கு அழைக்
துச் சென்று அவரை அடித்துத் துன்புறுத்தி அவருக்குக் கடுமையான
காயத்தை உண்டாக்கியிருக்கிறார்கள். இதுவரை அந்தக் காவல் துறையினர்
மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது குறித்து உரிய நட
வடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில்
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் நாட்டில் சட்டம் ஒழுங்கு பொதுவாகச் சீராக
இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. எந்த ஒரு நாட்டிலும் சட்டம்
ஒழுங்கு என்பதில் சில பல குறைபாடுகள் இருக்கத்தான் செய்யும்.
தமிழகத்தைப் பொறுத்த வரையில், சட்டம் ஒழுங்கு என்பது நல்ல முறையில்
இருந்தது. ஆனால் அது இப்போது எங்கே போய்க் கொண்டிருக்கிறது
என்பதை நாம் கவனிக்க வேண்டும். மிக வேகமாக அந்த நல்ல நிலைமை
யிலிருந்து பின்னோக்கிப் போவதைப் பார்க்கிறோம். எனவே இத்தகைய
நிலைமைகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று சொல்லிக்கொண்டு என்னு
டைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,
ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நடக்கும் விவாதத்
தில் கலந்துகொண்டு, எனது கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு
கிடைத்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.



1982 பிப்ரவரி 5] [திரு. பா. ரா. தாமஸ்]

கடந்த ஆண்டு ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டை பழமையும் பெருமை
யும் மிக்க மதுரை மாநகரத்தில் நடத்தி, மொழிப்பற்றையும், மொழி வளர்ச்சி
யையும் ஆணித்தரமாகத் தெரிவிக்க மேற்கொள்ளப்பட்ட அனைத்து நட
வடிக்கைகளையும் பாராட்டி, அதனையொட்டி இந்த நடப்பாண்டின் மொழிப்
பற்றோடு, நாட்டுப்பற்றையும், ஒருமைப்பாட்டையும் இணைத்து நமக்குத்
தந்த தேசிய கவி சுப்பிரமணிய பாரதியின் ஆண்டாக நடத்துவதோடு, அகில
இந்திய அளவில் பாரதியின் நூற்றாண்டு விழாவை ஒருமைப்பாடு ஆண்டாக
அறிவித்து, நமது மாநிலத்தில் அதற்காக விழா எடுப்பது மட்டுமல்லாமல்
இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் ஒருமைப்பாட்டை வலியுறுத்தும்
வகையில் பாரதியார் நூற்றாண்டு நிறைவு விழாவை ஏற்பாடு செய்து கொண்
டாடி வருவதன் மூலம், இந்தியா முழுவதற்கும் ஒருமைப்பாட்டிற்கு நாங்கள்
தான் முன்னோடிகள் என்று சொல்லிக் கொண்டிருப்பவர்களுக்கு பதில் அளிக்
கும் நிலையை உருவாக்கியிருப்பதை நான் பாராட்டுகிறேன்.

வங்க மொழியில் கவி ரவிந்திரநாத் தாகூர் அவர்கள் அருமையான
"கீதாஞ்சலியை"ப் படைத்து அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தமைக்
காக நோபல் பரிசு பெற்றார் என்று அறிகிறோம். அதைப் போலவே அன்
றையதினம் நமது பாரதியாரின் பாடல்களையும் கவிதைகளையும், புரட்சிக்
கருத்துக்களையும் சமுதாய மாற்றங்களுக்கான கருத்துக்களையும்கூட ஆங்கில
மொழியில் பெயர்த்திருந்தால், ஒருவேளை அவருக்கும் கூட நோபல் பரிசு
கிடைத்திருக்கும் என்று நான் நம்புகிறேன். அப்படிப்பட்ட
ஒருவரின் ஒருமைப்பாட்டு உணர்வுகளை இந்தியா முழுமைக்கும்
எடுத்துக் காட்டும் வகையில் அகில இந்திய அடிப்படையில் நாம்
இன்றையதினம் விழா எடுப்பது உண்மையிலேயே பிற மாநிலங்களுக்கும் ஒரு
எடுத்துக்காட்டாக இருக்கும். அண்மையில் ஒரிசா மாநிலத்தில் நமது கல்வி
அமைச்சர் அவர்கள் பாரதியார் விழாவில் கலந்து கொண்டு பேசியதைப் படித்
தேன். அந்த விழாவில் ஒரிசா மாநில முதல்வரும் கலந்து கொண்டு அங்கே
கூறப்பட்ட கருத்துக்களோடு இணைந்து அவர் கூறிய கருத்துக்களையும் வர
வேற்கிறேன். இந்த ஆட்சியின் முன்னேற்றகரமான இந்தத் திட்டத்தை
நான் வாழ்த்திப் பாராட்டுகிறேன்.

அடுத்து, வறட்சி நிவாரணம், பொது விநியோகம், மாநில வளர்ச்சி பற்றிய
துறைகளில் நல்ல முன்னேற்றம் கண்டிருந்தாலும், நமது மாநிலத்தில் விவ
சாயிகளின் இன்னல்கள், அவர்களுடைய கடன் சிக்கல்கள் ஆகியவை இன்னும்
தீர்க்கப்படாமல் இருக்கின்றன என்ற கருத்தில் நுகர்வோருக்கும் இன்னல்கள்
விளைவிக்கக்கூடாது என்ற அடிப்படையில் "உற்பத்தியாளர் கூட்டுறவு
விற்பனைச் சங்கம்" அமைப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால் இந்த

[திரு. பா. ரா. தாமஸ்] [1982 பிப்ரவரி 5

(முற்பகல் 10.30)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இரண்டு சாரார்களுடைய உணர்வுகளும் முரண்பாடாக இருக்கின்றன. நுகர்வோர் பொருள்களை குறைந்த விலையில் வாங்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். உற்பத்தியாளர்கள் கட்டுப்படியாகக் கூடிய விலையைப் பெற ஆவலாக இருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் முழுமையாக இந்தச் சிக்கல் இயங்க முடியுமா என்ற ஐயப்பாடு எனக்குத் தோன்றுகிறது. அறுவடை காலங்களில் உழவர்களின் விளைபொருள்களை வாங்க கூட்டுறவுச் சங்கங்கள் முன்வருவதில்லை. உற்பத்தியாளர்கள் தனியார் பிடியில் அகப்பட்டுக்கொண்டு தாங்கள் உற்பத்தி செய்த பொருள்களைக் குறைந்த விலையில் விற்றுவிட்டு இழப்பை அனுபவித்துக் கொண்டிருக்கும்போது, இடைத்தரகர்கள் மூன்று நான்கு மாதங்கள் கழித்து அவர்கள் கொள்முதல் செய்த உணவு தானியங்களை அதிகமான விலைக்கு விற்கக் கூடிய நிலை இருக்கிறது, நம்முடைய மாநிலத்தில். இந்தப் பிரச்சினை அகில இந்திய பிரச்சினையாக இருக்கிறது. சென்ற ஆண்டு அகில இந்திய அளவிலே ஒரு புள்ளிவிவரத்தைப் பார்த்தேன். அகில இந்திய அளவிலே வறுமைக் கோட்டிற்குள் உள்ள நகர்ப்புற விவசாயிகள் 41 விழுக்காடு என்றால், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், அது 52 விழுக்காடாக இருக்கிறது. கிராமப்புற விவசாயிகளைப் பொறுத்த வரையில், அகில இந்திய அளவில் வறுமைக்கோட்டிற்குள் உள்ளவர்கள் 54 விழுக்காடு என்றால், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் 63 விழுக்காடாக இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் நம்முடைய மாநிலத்திலுள்ள விவசாயப் பெருமக்களுடைய நல்ல திறமைகளை நாம் பாராட்டித்தான் ஆக வேண்டும். அண்டை மாநிலங்களிலுள்ள சாகுபடியைப் பார்க்கும்போது, நம்முடைய விவசாயிகள் முன்னேற்றகரமான வழியில், நவீன முறைகளைக் கையாண்டு, கடுமையான உழைப்புடன் விவசாயம் செய்கிறார்கள். ஆகவே கட்டுப்படியாகக் கூடிய விலையில் இடுபொருள்களை வழங்குவதும், நட்டம் ஏற்படாத வகையில் கட்டுப்படியாகக் கூடிய விலையைக் கொடுத்து அவர்களுடைய விளைபொருள்களை வாங்குவதும் சிறந்ததாகும். பொதுவாக அறுவடைக் காலத்தில் விளைபொருளை 95 ரூபாய்க்குக் கொள்முதல் செய்து மூன்று நான்கு மாதங்கள் கழித்து அதை 130 ரூபாய், 140 ரூபாய்க்கு விற்கிறார்கள். இதற்கு அரசு தகுந்த பரிகாரத்தைக் காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் அவர்கள் இரண்டு மூன்று தென்னங்கன்றுகளாவது கொடுக்க வேண்டாமா என்று கேட்டார்கள். பொதுவாக அநேக தேசங்களில் மரம் நடு விழாவை தேசிய விழாவாக நடத்துகிறார்கள்.



1982 பிப்ரவரி 5] [திரு. பா. ரா. தாமஸ்]

தேசிய விழா நடைபெறும் காலங்களில் மரம் நடுகிறார்கள். பெருந்தலைவர்கள் பிறந்த நாள் விழாவின்போது மரம் நடுகிறார்கள். குடி மக்கள் கூட தங்களுக்குக் குழந்தை பிறந்தால் மரம் நடுகிறார்கள். குடும்பத்திலே யாராவது மறித்துப் போனாலும் மரம் நடுகிறார்கள். இவ்வாறு நம்முடைய நாட்டிலும் மரம் நட வேண்டிய நிலை இருக்கிறது. நம் நாடு அதிக வளமிக்க நாடாக வர வேண்டுமென்றால், தேசிய விழா நாட்களிலும், பெருந்தலைவர்கள் பிறந்த நாட்களிலும், குடும்பத்தில் குழந்தைகள் பிறக்கும்போதும், மறையும்போதும் மரம் நடுவதை வழக்கமாகக் கொள்ள வேண்டும். அரசைப் பொறுத்தவரையில், ஆற்றின் கரைகளிலும், கால்வாய் ஓரங்களிலும், சாலைப் புறம்போக்குகளிலும் தென்னங் கன்றுகளைப் பயிரிடும் வாய்ப்பு இருக்கிறது. இந்தப் பொறுப்பை ஊராட்சி ஒன்றியங்களிடம் கொடுக்காவிட்டாலும் கூட, கிராமப் பஞ்சாயத்துக்களிடம் இந்தப் பொறுப்பைக் கொடுத்து ஏராளமான தென்னங் கன்றுகளை விருத்தி செய்தால், ஏராளமான வருவாய் வரும் வாய்ப்பு இருக்கிறது என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்து, தொழிலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க இருப்பதன் மூலம் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதால், அதை நான் வரவேற்கிறேன்.

பல்கலைக் கழகங்களைப் பொறுத்த வரையில், நம்முடைய மாநிலத்தில் ஏராளமான பல்கலைக் கழகங்களை உருவாக்கியிருப்பது பெருத்த முன்னேற்றகரமான செயலாகும். பல்கலைக் கழகங்கள் எல்லாம் உருவாகிக் கொண்டிருக்கும்போது, "sanctum sanctorum" என்று சொல்லி பல்கலைக் கழகங்களைப்பற்றிப் பேசக்கூடாது, சிந்தனை செய்யக்கூடாது என்று சொல்லுவதை பிற்போக்குச் செய்தியாக நான் நினைக்கிறேன். ஆதிக்க சக்திகளை அழித்ததை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். இரண்டு முறைகள் பதவியில் இருந்தவர் வெளியேற வேண்டும் என்று சொன்னால், "முடியாது, ஆயுள் முழுவதும் நானே ஆட்சி செய்வேன்" என்று சொன்ன மன்னர் ஆட்சியை, சமஸ்தான மன்னர் ஆட்சியை ஒழித்ததை ஆசிரியர்கள்-பட்டதாரிகள் முற்போக்கு முன்னணியின் சார்பில் நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். இப்படிச் செய்வதன் மூலம் புதுமையான கருத்துக்களைப் பரப்பவும், நன்மையைச் செய்யவும் பல்கலைக் கழகங்களுக்கு வாய்ப்பு ஏற்படும். பல்கலைக் கழகங்களில் தேர்தலை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதனால் மக்கள் தொல்லைகளை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். பல்கலைக் கழகங்களில் தேர்தல் நடந்த ஆறு, ஏழு மாதங்களுக்குப் பிறகும் முடிவு தெரியாவிட்டால், மாணவர்களுடைய நிலை என்ன? ஆறேழு மாதங்களாகத் தேர்வு முடிவு வராமல் மாணவர்கள் தொல்லை படுவதைப் பார்த்து இந்த அரசு எடுத்த முயற்சியை பெரிதும் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன்.

[திரு. பா. ரா. தாமஸ்] [1982 பிப்ரவரி 5

தொழு நோயைப் பொறுத்த வரையில், அது மாணவர்கள் மத்தியிலே இருக்கிறதா என்பதைக் கண்டறிய சிறப்புக் கட்டணம் வசூலிப்பதன் மூலம் மருத்துவ சோதனை செய்து வருகிறோம். சோதனை செய்த மருத்துவர் ஓர் அட்டையைக் கொடுக்கிறார். அந்த அட்டையை எடுத்துக்கொண்டு மருத்துவ மனைக்குச் சென்றால், அங்கே சிகிச்சையளிக்க மறுக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்த வரையில், சில மாவட்டங்களில் தொழுநோய் இருப்பதாகவும், குறிப்பாக மதுரை மாவட்டத்தில் அதிகமாக இருப்பதாகவும் சொல்கிறார்கள். தொழுநோய்க் கிருமிகளால் குழந்தைகள் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே தொழுநோய் இருப்பதைக் கண்டறிவதோடு 'நிறுத்திவிடாமல், அது தொடர்பான சிகிச்சையை சிறப்பாக அளிக்க நாம் வழிவகையைக் காண வேண்டுமென்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

பொதுவாக நாட்டிலே விலைவாசி அதிகமாக இருக்கிறது. மத்திய அரசு பிப்ரவரி முதல் மூன்று அகவிலைப்படியை வழங்குவதாக அறிவித்திருக்கிறது. மாநில அரசும் காலம் தாழ்த்தாமல் அந்த அகவிலைப்படியை வழங்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் ஏமாற்றம்தான். 1—1—1982 அன்று பீகார் மாநிலத்தில் நான்காவது ஊதியக் குழுவின் பரிந்துரையை ஏற்று புதிய ஊதிய விகிதங்களை அமுல்படுத்தியிருக்கிறார்கள். பீகார் மாநிலத்தில் இடை நிலை ஆசிரியர்கள் 285 ரூபாய் அடிப்படைச் சம்பளமும், 965 ரூபாய் அதிகப்படி சம்பளமும் பெறுகிறார்கள். ஆனால் நம் மாநிலத்தில் இடை நிலை ஆசிரியர்கள் 350 ரூபாய் அடிப்படைச் சம்பளமும், 600 ரூபாய் அதிகப்படிச் சம்பளமும் பெறுகிறார்கள். அதேபோல பட்டதாரி ஆசிரியர்கள் பீகாரில் 850 ரூபாய் அடிப்படைச் சம்பளமும், உச்ச ஊதியமாக 1,360 ரூபாயும் பெறு கிறார்கள். ஆனால் நம் மாநிலத்தில் 450 ரூபாய் அடிப்படைச் சம்பளமும், உச்ச ஊதியமாக 800 ரூபாயும்தான் பெறுகிறார்கள். ஆகவே காவல் துறைக் கென்று தனியாக ஊதியக் குழு வைத்ததைப்போல, ஆசிரியர்களுக்கென்று தனியாக ஓர் ஊதியக் குழுவை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே அரசை வேண்டிக் கொள்கிறேன்.

இராமேஸ்வரம் பகுதியை முற்படுத்த வேண்டும். அங்குள்ள ஆசிரியர்கள் எல்லாம் மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள். அங்கே 20 சதவிகிதம் அதிக செலவினப்படி முன்பு வழங்கி வந்ததை இப்போது இந்த ஆட்சியில் நிறுத்தி யிருக்கிறது. மீண்டும் அந்த 20 சதவிகித அதிக செலவினப்படியை அவர் களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



பிப்ரவரி 5] [திரு. பா. ரா. தாமஸ்]

சேதுசமுத்திரக் கால்வாய் திட்டத்தை நம்முடைய மாநில அரசு மத்திய ...டம் பரிந்துரை செய்து அமுல்படுத்த வேண்டிய நிலை இருக்கிறது. ...நம் கப்பல்கள் 320 மைல் இலங்கையைச் சுற்றிக்கொண்டு வரவேண்டிய ...ல இப்போது இருக்கிறது. உலகத்தில் பனாமா கால்வாய், சூயஸ் ...ல்வாய் போன்றவற்றை அமைத்து கப்பல் போக்குவரத்தில் பெரும் ...ன்னேற்றங்களைச் செய்திருப்பதைப்போல நம்முடைய மாநிலத்தின் தென் ...குதியில் உள்ள சாத்தாங்குடி துறைமுகத்தில் கால்வாயை வெட்டி ஏற்படுத்தி ...னால், கப்பல் போக்குவரத்தில் 320 மைல் தூரம் குறையும், இதனால் ...ரசுக்கும் அதிகமான நன்மை கிடைக்கும். சேதுசமுத்திரத் திட்டத்தை ...ரம்பித்தால், அதனால் வேலை வாய்ப்பும் கிடைக்கும், பயனற்ற நிலையில் ...ருக்கும் தனுஷ்கோடியையும் பயன்படுத்தும் நிலை வரும். இராமேஸ்வரம் ...திகமாக வளர்ச்சி அடையும், கப்பல் போக்குவரத்து வளரும், அண்டை ...நாடுகளோடு போக்குவரத்து அதிகமாகும் வாய்ப்பு ஏற்படும். ஆயிரம் ...லோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையுள்ள நம் மாநிலத்தில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10.40)

வளமான நதிகள் வடக்கிலே இருக்கின்றன. உதாரணமாக, மஹாநதியை எடுத்துக்கொண்டால், எவ்வளவு நீர் வீணாகப் போகிறது என்பதைப் பார்க் கிறோம். வடக்கிலே உள்ள மாநிலங்கள் ஏராளமான நீரைப் பெற்றிருக் கின்றன. நம்முடைய மாநிலம் நீர் வளமில்லாத நிலையில் இருக்கின்றது. மத்திய அரசு அந்த நீர் வளங்களை மாநிலங்களிடையே பகிர்ந்து கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறது. ஆகவே அரசியல் சட்டத்திலேயேகூட இடம் இருக்கிறது. திட்டவட்டமான வகையில் எந்தெந்த முறையிலே இணைக்கலாம் என்று பார்க்க வேண்டும். மத்திய அரசு இதிலே தயக்கம் காட்டுகிறது. நாம் விடாப்பிடியாக இருந்து அனைத்து மாநிலக் கட்சிகளும் சேர்ந்து, இந்த மாநிலம் மட்டுமல்ல, அனைத்து இந்திய மாநிலங்களின் அடிப்படையில், எல்லா ஆறுகளையும் இணைத்து தென் மாநிலத்திலே, மேற்கிலே உள்ள நீர் வளர்ச்சியைக் கொண்டு வரவேண்டும். அதற்கு அரசியல் சட்டத்திலேகூட வழி செய்யப்பட்டிருக்கிறது என்று கூறிக் கொள்கிறேன். ஒருவேளை 'புளூ பிரிண்ட்' தயாரிக்கப்பட்டால் மாநிலம் மாநிலமாகவே அதை முடித்து விடலாம். அதிகப்படியான செலவோ, பணமோ, ஆட்பலமோ தேவையென் றால், அதைப் பெற்று நிறைவேற்றலாம். ஐரோப்பா கண்டத்திலே 13 நாடுகள் கூடிய அளவில் போக்குவரத்தை உருவாக்கியிருக்கிறார்கள். இந்த நிலைமை நம்முடைய மாநிலத்திலும் உருவாக்கலாம். ஐரோப்பாவில் அப்படி நதிகளை இணைத்து போக்குவரத்தை உருவாக்கியிருக்கிறார்கள். இந்த

[திரு. பா. ரா. தாமஸ்] [1982 பிப்ரவரி 5

மாதிரி நம்முடைய மாநிலத்திலும் உருவாக்கி, மாநிலத்தில் முன்னேற்றமான காரியங்களைச் செய்து அதிகமான நீரைப் பெற வாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.

வேலை வாய்ப்புத் திட்டம் என்று நாம் கடந்த இரண்டு மூன்று ஆண்டுக் காலமாக ஆளுநர் உரையிலே பார்த்து வந்திருக்கிறோம். வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் படித்த பட்டதாரிகள், கிராமத்திலுள்ள வாலிபர்கள் இவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்பு அளிப்பதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. அந்நிய நாடுகளிலும் பணி வாய்ப்பு ஏற்பாடு செய்திருக்கிறது. அவர்களேகூட 'கல்ஃப் கண்ட்ரீஸ்'-க்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

நம்முடைய மாநிலத்திலே படித்தவர்களுக்கு மாதத்திற்கு 50 ரூபாய் படி கொடுப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலேயும் சில முட்டுக்கட்டைகள் ஏற்பட்டுவிட்டன. ஐந்து ஆண்டுக் காலம் அவர்கள் தங்கள் பெயரை வேலை வாய்ப்பகத்திலே பதிந்திருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். குடும்பத்தில் குறைந்தது 5 ஆயிரம் ரூபாய் வருமானம் இருந்தால் இந்தச் சலுகை கிடையாது என்று இருக்கிறது. அதைப் பார்க்கும்போது, தினக்கூலி சம்பாதிப்பவர்கள் கூட மாதம் 500 ரூபாய் வருமானம் பெறுகிறார்கள். இந்த நிலையிலே இந்தப் படியை மறுத்தோம் என்றால், வாலிபர்கள் விரக்தி அடைகிறார்கள். வாலிபர்களுக்கு இது ஒரு சோதனையான கட்டம். ஆதலால் படித்த வாலிபர்களுக்கு, பட்டதாரி ஆசிரியர்களுக்கு எல்லாம் வேலை வாய்ப்பு கொடுக்கக்கூடிய அளவில் இந்தத் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டும்.

மின் உற்பத்தியைப் பொறுத்துத்தான் நாட்டினுடைய வளம், தொழில் வளம், உற்பத்தி, வேலை வாய்ப்பு அதிகமாகும் என்பதை நாம் அறிவோம். நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில், அதிகமான நீர் மின் நிலையங்களை உருவாக்கிவிட்டோம். அனல் மின் நிலையங்கள் மூன்று உருவாக்க இருக்கிறோம். அதே சமயத்திலே நம்முடைய மாநிலத்திலே அணு மின் நிலையம் உருவாக்க வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறோம். அதிலேயும் எனக்கு ஒரு ஐயப்பாடு இருக்கிறது. அனல் மின் நிலையங்களை உருவாக்குவதிலே பல ஆண்டுக்காலம் ஆகிறது. பல ஆண்டுகள் கழித்தும்கூட கல்பாக்கம் மின் நிலையம் இருக்கின்ற நிலைமையைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அதிகமான நன்மை பெறாத நிலையிலே இருக்கிறோம். கூடங்குளத்திலே திருநெல்வேலி மாவட்டத்தில் ஆரம்பிக்க வேண்டுமென்று மத்திய அரசை வேண்டிக்கொள்கிறோம். 'டீசல் ஃபெட் காஸ் டர்பைன்' முறையிலே, டீசல் ஆயிலை வைத்து அதிகமான அளவிலே மின்சாரம் உற்பத்தி செய்ய மாநில



1982 பிப்ரவரி 5] [திரு. பா. ரா. தாமஸ்]

அரசு திட்டம் வகுத்திருப்பதாக பத்திரிகையிலே பார்த்தேன். அது மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு, அதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பதாகவும் பார்த்தேன். அதைப்பற்றி ஆளுநர் அவர்கள் உரையிலே இல்லை. அரசு அதைத் தொடர்ந்து நிறைவேற்ற வேண்டும். ஒவ்வொரு மாநிலத்திற்கும் மின்சாரப் பற்றாக்குறை ஒரு சோதனையாக இருக்கிறது. சிறு சிறு நீர் மின் நிலையங்களை உருவாக்குகிறோம். அப்படி அணைகள் வளர்ச்சி அடையும்போது, அனல் மின் நிலையங்கள் வளர்ச்சி அடையும்போது, நிலக்கரிப் பற்றாக்குறை உண்டாகிவிடுகிறது. இப்படி எல்லா மாநிலங்களிலும் நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. கடல் நீரிலிருந்து, அதன் வெப்பத்திலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யப் போகிறோம் என்று சொன்னோம். அது என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. கடல் அலையிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யப் போகிறோம் என்றும் சொன்னோம். நம் மாநிலம் கடற்கரை உள்ள மாநிலம். ஆகையால் இது குறித்து முன்னேற்றமான காரியங்களைச் செய்து மின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஓய்வு பெறும்போது ரூபாய் 10 ஆயிரம் வேண்டுமென்று அனைத்து ஆசிரியர்கள் பெருமக்களும், அலுவலர்களும் கேட்டிருக்கிறார்கள். அதற்கு அரசு ஆணை வழங்க வேண்டும்.

பணிப் பாதுகாப்பைப் பொறுத்தவரையிலும், இன்று ஒரு மாறுபாடான நிலை உருவாகியிருக்கிறது. பொதுவாக, பணிப் பாதுகாப்போடு, உயிர் பாதுகாப்பு இல்லா நிலை தனியார் பள்ளிகளிலே இருக்கின்றது. நாலுமாவடி என்ற ஊரில், திருநெல்வேலி மாவட்டத்தில் 20—11—1981 ஆம் தேதி அன்று பள்ளி நிர்வாகிகள் ஆசிரியர்கள் அனைவரையும் அழைத்து தேதியிடாத ராஜிநாமா கடிதம் கேட்டிருக்கிறார்கள். ஆசிரியர்கள் 7 பேர்கள் அப்படிக் கொடுக்க மறுத்திருக்கிறார்கள். ஆகவே அந்த 7 ஆசிரியர்களும் 21—11—1981 அன்று அதை மேல் அதிகாரிக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார்கள். 25—11—1981 அன்று அந்த ஆசிரியர்களை நன்றாக உதைத்திருக்கிறார்கள். செருப்பு செங்கல் எல்லாம் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்காக நாங்கள் வேதனைப்படுகிறோம். பணிப் பாதுகாப்பு இல்லை என்றாலும், உயிர் பாதுகாப்பு தர வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே இந்த நேரத்தில் இங்கே இருக்கிறார்கள். அதை நான் பெரும்பேறாக நினைக்கிறேன். இதுகுறித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பா. ரா. தாமஸ்] [1982 பிப்ரவரி 5

அடுத்து, ஒரு வருத்தத்தைத் தருகின்ற சம்பவத்தைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். 1—2—1981 அன்று மதுரை மாவட்டத்திலே வாடிப்பட்டி என்ற ஊரிலே தொடக்கப் பள்ளியிலே பணி புரிகின்ற திருமதி சினியம்மாள் அவர்களுக்கு நிகழ்ந்ததைச் சொல்கிறேன். அவருக்கும் ஒரு காவல் துறையைச் சேர்ந்த ஒருவருக்கும் ஏதோ கொள்முதல் கொடுக்கலிலே கோளாறு ஏற்பட்டிருக்கிறது. அந்த அம்மையார் அந்தக் காவல் துறையைச் சேர்ந்தவரிடம் ஒரு வீட்டை ஒத்திக்கு வாங்கியிருக்கிறார்கள். அதற்காக அந்தக் காவல் துறையைச் சேர்ந்த அலுவலகமோ அந்த காவல் துறையைச் சேர்ந்தவருக்குச் சாதகமாக மாறி, அந்த அம்மையாரை பள்ளி நேரத்திலே அழைத்துவரச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அம்மையார் தலைமை ஆசிரியர் அனுமதியில்லாமல் வர முடியாது என்று அறிவித்திருக்கிறார்கள். அதற்குப் பின் பெண் போலீசார் மூன்று பேர்களை அனுப்பி பள்ளியிலிருந்து அந்த அம்மையாரைக் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு காவல் நிலையம் சென்றிருக்கிறார்கள். அங்கே அவர்கள் அவமானப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அவருடைய கணவர் ஒரு முன்னாள் ராணுவத்தினர். அவர் அங்கே சென்றபோது, ஏதோ பேச்சு வார்த்தை முற்றியிருக்கிறது. அங்கே அந்தப் பெண்மணியைக் கேவலமான முறையில் நடத்தியிருக்கிறார்கள். சேலையை உருவி அறையிலே அடைத்திருக்கிறார்கள். அந்த நிலையில்தான் அங்கே கணவர் சென்று பார்த்திருக்கிறார்கள். இதையெல்லாம் நான் ஏன் சொல்கிறேன் என்றால், இதே மாதிரி திருமங்கலத்திலே பாண்டி என்று ஒரு ஆசிரியரையும் செய்திருக்கிறார்கள். கையிலே விலங்கிட்டு, தெருவிலே நாயைப் போல இழுத்துச் சென்றிருக்கிறார்கள். இதுபோல வாடிப்பட்டியிலே, மதுரை மாவட்டத்திலே நடக்கிறது. அதற்கு மறுநாள் ஆசிரியர்கள் அனைவரும் ஊர்வலம் சென்று இதைக் கண்டித்திருக்கிறார்கள். 3 ஆம் தேதி அர்த்தால் நடந்திருக்கிறது. அதைத் தொடர்ந்து சர்வ கட்சியினர் 6 ஆம் தேதி கண்டன ஊர்வல ஆர்ப்பாட்டம் செய்ய இருப்பதாக எனக்குத் தந்தி வந்திருக்கிறது. இந்த நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருப்பதை நான் பெரும்பேறாகக் கருதுகிறேன். அதில் அருள் கூர்ந்து நியாயம் வழங்க வேண்டும், உயிர்ப் பாதுகாப்பை அளிக்க வேண்டும் என்று உருக்கமாக ஆசிரியர்கள் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன். தவறு எங்கே இருக்கிறது என்பது எனக்குத் தெரியாது. ஒருவேளை இந்தச் சொத்தை வாங்குவதிலே அந்த அம்மையாருக்கும், அந்தக் காவல் துறையைச் சேர்ந்தவருக்கும் தகராறு இருந்தால், அவர் சிவில் கோர்ட்டுக்குச் செல்ல வேண்டும். காவல் துறையின் அதிகாரத்தையும், அரசு அதிகாரத்தையும் இதிலே பயன்படுத்தியிருக்கக்கூடாது. பள்ளி நேரத்திலே அழைத்துச் சென்று ஒரு ஆசிரியரை, பெண்ணை அவமானப்படுத்தியிருக்கக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன். மீண்டும் என்னைப் பேச அனுமதித்ததற்கு நன்றி கூறி அமைகிறேன்.



## 4. அறிவிப்பு.

### அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழு கீழ்க்கண்ட முடிவு எடுத்திருக்கிறது :—

| | |
|---|---|
| 6—2—1982 (சனிக்கிழமை) | ஆளுநர் உரையின் மீது விவாதம் |
| 7—2—1982 (ஞாயிற்றுக்கிழமை) | விடுமுறை |
| 8—2—1982 (திங்கட்கிழமை) மற்றும் 9—2—1982 (செவ்வாய்க்கிழமை) | ஆளுநர் உரையின் மீது விவாதம் |
| 10—2—1982 (புதன்கிழமை) | ஆளுநர் உரையின் மீதான விவாதத்திற்கு பதிலுரை |
| 11—2—1982 (வியாழக்கிழமை) முதல் 14—2—1982 (ஞாயிற்றுக்கிழமை) வரை | மேலவை கூட்டம் இல்லை |
| 15—2—1982 (திங்கட்கிழமை) மற்றும் 16—2—1982 (செவ்வாய்க்கிழமை) | தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1981-82-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீதும், 1980-81-ம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கையின் மீதும் விவாதம். |
| 17—2—1982 (புதன்கிழமை) | நீதிபதி திரு. பால் கமிஷன் அறிக்கையின் மீது விவாதம் |
| 18—2—1982 (வியாழக்கிழமை) மற்றும் 19—2—1982 (வெள்ளிக்கிழமை) | அரசின் சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல் |

மேலவை வழக்கம்போல் காலை 9-30 மணி முதல் 12-30 மணி வரை கூடும்.

[1982 பிப்ரவரி 5

* திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது நன்றி தெரிவிக்கும்போது, இருக்கின்ற நன்மைகளைச் சுட்டிக்காட்டி அதிலே உள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுவது பின்னர் இருக்க வேண்டும் என்று நம்முடைய மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் நேற்று இங்கே பேசினார்கள். ஆசிரியர் சமுதாயத்தின் சார்பிலே பேசுகின்றபோது, எப்போதுமே நல்ல செயல்களைப் பாராட்டி, அதற்குப் பின்னாலே என்னுடைய குறைகளை எல்லாம் எடுத்து வைக்கின்றது என்பதுதான் என் வழக்கம். அந்த வகையிலேதான் நான் இங்கே இன்று பேச முற்படுகிறேன்.

முதலிலே ஒரு சந்தேகம். ஆளுநர் உரையைத் தயாரிக்கின்ற காலத்திலே அதிலே சில குறைபாடுகள் இருக்கின்றன என்று நேற்றுகூட எதிர்க்கட்சித் தலைவர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். அந்த உரையைத் தயாரிக்கும்போது, அலட்சியமாக இருக்கக்கூடாது என்று எடுத்துச் சொன்னார்கள். அதற்கு ஒரு எடுத்துக்காட்டாக நான் இங்கே ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எடுத்த எடுப்பிலே இதிலே, நான் சென்ற முறை சட்டமன்றக் கூட்டு அவையிலே மூன் உரையாற்றிய போது' என்று ஆரம்பிக்கப்படுகிறது. 'நான்' என்று சொல்வது வழக்கம் இல்லை என்று நான் கருதுகிறேன். அப்படி 'நான்' என்ற சொல்லை பயோகித்தாலும் கூட, ஏற்கெனவே மேதகு திரு. பட்வாரி அவர்கள் ஆளுநராக இருந்தார்கள். இப்போது மேதகு திரு. சாதிக் அலி அவர்கள் இருக்கிறார்கள். இதிலே மேதகு திரு. சாதிக் அலி அவர்கள்தான் உரை யாற்றுவதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே ஏற்கெனவே உரையாற்றியது அவர் அல்ல. ஆனால் அந்தப் பிழைகூட இதிலே கவனிக்கப்படாமல் 'நான்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி இருப்பது மிகவும் வருந்தத்தக்கது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

அதற்கடுத்து, இந்த உரையிலே காணக்கூடிய நன்மைகளாக சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நீதி மன்றங்களில் தீர்ப்புகளும், ஆணைகளும் தமிழில் வரையப்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருப்பதையும், காரைக்குடியில் உள்ள கல்வி நிறுவனங்களை ஒருங்கிணைத்து பல்கலைக் கழகம் ஒன்றைத் தொடங்க நடவடிக்கைகள் எடுத்திருப்பதையும் பாராட்டு கிறேன். அறிஞர் அண்ணா அவர்களின் உறுதிமொழியை நிறைவேற்றும் அரசு, அறிஞர் அண்ணா அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த காலத்திலே, என்னாலேயே இந்த நோயைத் தீர்த்துக்கொள்ள முடியவில்லையே, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் என்ன செய்வார்கள் என்று வருத்தப்பட்டு, அவர் களுக்கு மருத்துவ ஈட்டுப்படி தருகிறேன் என்று சொன்னார்களே, அந்த



1982 பிப்ரவரி 5] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

உறுதிமொழி என்னவாயிற்று? பள்ளிக் குழந்தைகளிடையே தொழு நோய் பரவியுள்ளதா என்று கண்டறிய சோதனைத் திட்டம் தொடங்கிருப்பதை வரவேற்கிறேன். கலப்புத் திருமணத் தம்பதிகளுக்கு வேலை வாய்ப்பிலே முன்னுரிமை வேண்டுமென்று நான் கேட்டபோது, அதற்கு பதிலளிக்காமல் விடப்பட்டுவிட்டது. அதற்கு பதிலாக, அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப் படுமென்று ஆளுநர் அவர்கள் உரையிலே இருக்கிறது. இதை வரவேற்கிறேன். ஊனமுற்றவர் களும் காவலருக்கு வீடு கட்டும் திட்டத்தை வரவேற்கிறேன். வேலைவாய்ப்பில் முன்னுரிமை களுக்கு மறு வாழ்வு அளிக்கும் வகையிலே அவர்களுக்குப் பக்கத்திலே அவர்களுக்கு அளிப்பதை வரவேற்கிறேன். ஆனால் அவர்களுக்குப் பக்கத்திலே அவர்களுக்கு அவசியம் இருக்கிறது. கண் -தலியாக ஒருவர் சொல்லப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது. அரிமழம் மேல் பார்வையற்ற ஒருவருக்கு புதுக்கோட்டை மாவட்டத்தில் அளிக்கப்பட்டிருக்கிறது. அவர் நிலைப் பள்ளியில் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அவர் 00 ரூபாய், 150 ரூபாய் ஊதியத்தில் ஓர் உதவியாளரை நியமித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. திருச்சி அவருடைய சொந்த ஊர். திருச்சியிலேயே அவருக்கு வேலை வாய்ப்பு இருக்கிறது. அங்கேயே வேலை தந்திருந்தால், அவருடைய குடும்பத்திலேயே ஒருவர் அவருக்கு உதவிகரமாக இருப்பார். எனவே இதனையும் பரிசீலிக்க வேண்டும். உடல் ஊனமுற்றவர்களுக்கு அவர் களுடைய குடும்பத்திலேயுள்ள ஒருவரே உதவி செய்யும் அளவிற்கு கூடுமான வரை அவருடைய சொந்த ஊருக்குப் பக்கத்திலேயே வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும்.

(மாற்றுத் தலைவர் திரு. ஜி. ஆர். லெட்சுமிகாந்தன் தலைமை)

ஆளுநர் அவர்கள் உரையில் நிறைய இருக்கிறது. இதைப் படித்துப் பார்க்கும்போது, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பற்றி அவ்வளவு பெரிய உரையில் ஒரு வார்த்தைகூட வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆசிரியர்கள் என்றோ, அரசு ஊழியர்கள் என்றோ ஒரு இடத்திலேகூட வரவில்லை. காவலர்களைப்பற்றி வந்திருக்கிறது. காவலர்களை அரசு ஊழியர்கள் என்று நாங்கள் கருதினாலும், அவர்களை அரசு ஊழியர்களாக அரசு கருதவில்லை. அவர்களுக்கு ஏதோ நன்மை செய்யப் பட்டிருக்கிறது. ஆனால் ஏனைய அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் வர்க்கத்திற்கு ஒன்றுமில்லை. அப்படி எதுவும் இல்லாவிட்டாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்கள் குறிப்பிட்டதுபோல, அவர்கள் அடிக்கடி வேலைநீக்கம் செய்யப்பட்டு, அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, கொடுமைப்படுத்தப்பட மாட்டார்கள் என்பதற்கு உத்தரவாதமாவது இருக்கிறதா என்றால், அதுவுமில்லை என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். புரட்சிக் கவி, புதுமைக் கவி பாரதியார் கூறிய சுதந்திரம், சமத்துவம், உடன் பிறப்பு உணர்வு—சகோதரத்துவம் என்பதற்கு தமிழில் உடன் பிறப்பு

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1982 பிப்ரவரி 5

உணர்வு என்று போட்டிருக்கிறார்கள்—எல்லோருக்கும் வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த உடன்பிறப்புணர்வு இப்போதாவது வந்திருக்கிறதே என்று மெத்த மகிழ்ச்சியடைகிறேன். ஆனால், அந்தச் சமத்துவம், சுதந்திரம், உடன்பிறப்பு உணர்வு எல்லாம் எங்கே இருக்கின்றன என்று நான் பார்த்தால், அவை உண்மையிலேயே இல்லை. நான் பேசுகின்ற நேரத்திலே ஒன்றைக் குறிப்பிடவேண்டும். ஆசிரியர் பிரதிநிதிகள் பேசுகிறார்களா என்று அறிந்துகொண்டு, கல்வி அமைச்சரவர்கள் அவையிலே இருக்க வேண்டுமென்று சொல்வதுண்டு. இப்போது அவைக்கு ஓர் ஆசிரியர் பிரதிநிதி தலைமை வகிக்கிறார். அதற்காக மகிழ்ச்சியடைகிறேன். ஆசிரியர் பிரதிநிதிகள் பேசும்போது, கல்வி அமைச்சரவர்கள் கட்டாயம் இருக்க வேண்டுமென்று மீண்டும் வற்புறுத்திட விரும்புகிறேன்.

இங்கே ஆசிரியர்களுக்குச் சங்கம் அமைப்பதிலே சுதந்திரம் இருக்கிறதா, அவர்களுக்கு எழுத்திலே சுதந்திரம் இருக்கிறதா, அவர்களை அதிகாரிகள் உடன்பிறப்பு உணர்வோடு நடத்துகிறார்களா, அரசு அவர்களுக்கு சமத்துவம் காட்டுகிறதா—இவையெல்லாம் ஆளுநர் அவர்கள் உரையிலே காணப்படுகிறதே தவிர, உண்மையிலேயே இல்லை. அரசு ஆணைகளைப் பிறப்பிக்கிறது. மேலவை உறுப்பினர்களுக்கு அரசு ஆணைகளை அனுப்ப வேண்டுமென் பல முறை எடுத்துச் சொல்லியும்கூட, மாற்றுத் தலைவராக வீற்றிருக்கும் மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொல்லியும்கூட—ஒருவேளை அவருக் வருகிறதோ என்னவோ. தெரியாது—எனக்கு வருவதில்லை. அரசு உத்தர போட்டாலும், அதிகாரிகள் அதை அமுல்படுத்துவதில்லை. ஆனா வேண்டியவர்களுக்கு முன்னாலேயே ஆணைகள் கிடைக்கின்றன. எனவே இந்த ஆட்சியில் சமத்துவம் இல்லை, சுதந்திரமில்லை, உடன்பிறப்பு உணர் இல்லை என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒ நிகழ்ச்சி. நம்முடைய கல்வி அமைச்சரவர்களே அதில் கலந்துகொண் பேசுகிறார்கள். ஆசிரியர் தினம் 5—9—1981-லே நடக்கிறது. அந்த ஆசிரி தின விழாவிலே கலந்துகொள்ளும் கல்வி அமைச்சரவர்கள் இரண் அறிவிப்புகளைச் செய்கிறார்கள். ஒரு அறிவிப்பாக, ஆசிரியர் சங்கங்களி இரண்டு சங்கங்களுக்கு அங்கீகாரம் அளிக்கிறோம் என்று அவசர அவசரமாக அறிவிப்பு செய்கிறார். அந்த அறிவிப்பைச் செய்ததோடு மட் மல்ல. அந்த அறிவிப்போடு நிறுத்தியிருக்கலாம். இரண்டு சங்கங்க மாத்திரம் ஆசிரியர் தினத்தில் கலந்துகொள்ளவில்லை. இரண்டு சங்கத்தின மாத்திரம் மனம் குளிர வைத்து, ஏனைய ஆசிரியப் பெரு மக்களின் ம புண்படும்படியான நிலை அங்கே வரலாமா என்று கேட்க விரும்புகிறே அந்த சங்கங்களுக்கு அங்கீகாரம் தந்ததோடு மட்டுமல்ல. இனி எல்லா நி ஆசிரியர்களும் இவர்கள் மூலமாகத்தான் கோரிக்கைகளை வெளிப்படு



1982 பிப்ரவரி 5] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

வேண்டும், அப்போதுதான் அரசு கவனிக்கும் என்றால், எங்கே சமத்துவம் இருக்கிறது? குடிமக்கள் அமைச்சர்களிடத்தில், அதிகாரிகளிடத்தில் விண்ணப்பம் தந்தால், அதை ஆராய்ந்து பரிசீலித்து பதில் தர வேண்டுமென்பது நாட்டிலுள்ள சுதந்திர உரிமை. "நீ தந்தால் பதில் தர மாட்டோம், அவர்கள் தந்தால் பதில் தருவோம்" என்று சொல்லும் நிலை எப்படி சமத்துவமாகும் என்று கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இரண்டு சங்கங்கள், தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றம் போராட்டம் நடத்தியது; கூட்டணியும் போராட்டம் நடத்தியது. போராட்டம் நடத்தியதற்குப் பின்னாலே, இந்த அரசால் தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின்மீது நடவடிக்கை எடுங்கள் என்று ஆணை போடப்படுகிறது. ஒரே விதமான போராட்டம், ஒரே விதமான நடவடிக்கை, ஒரே விதமாக சிறைக்குச் செல்லுகிறார்கள். ஆனால் மன்றத்தினர்மீது நடவடிக்கை எடுங்கள், தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணிமீது நடவடிக்கை கிடையாது, அவர்கள்மீது எடுத்திருக்கும் நடவடிக்கைகளை ரத்து செய்யுங்கள், வேலை நாளிலே வேலை செய்யாமல் சிறைக்குச் சென்றிருந்தாலும் அவர்கள்மீது நடவடிக்கைகளை ரத்து செய்யுங்கள்; இவர்கள்மீது அதாவது மன்றத்தினர் மீது நடவடிக்கை எடுங்கள் என்று உத்தரவு வருகிறது. இதை எண்ணிப் பார்க்க வேண்டும். இது எப்படி சமத்துவமாகும்? அதற்கடுத்து, அவ்வாணைமீது நாங்கள் உயர்நீதி மன்றத்தில் இடைக்கால தடையுத்தரவு பெற்றோம். இடைக்கால தடையுத்தரவு பெற்ற பின்பும்கூட இன்றைக்கு ஆசிரியர்கள் நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். மீண்டும் 'கன்டெம்ப்ட் ஆஃப் கோர்ட்' என்று நீதி மன்றத்திற்குப் போக வேண்டியிருக்கிறது. குடியாத்தம், நாகை, வத்திராயிருப்பு போன்ற இடங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அரிசன நலத் துறையிலே பணியாற்றும் ஆசிரியர்கள்மீது, குறிப்பாக திருச்சி மாவட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, போராட்டத்தில் கலந்துகொண்டதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு சம்பளம் பிடிக்கப்பட்டு, தொடர்ந்து நடவடிக்கைகள் வருகின்றன. உயர்நீதி மன்ற உத்தரவை அரசு மதிப்பதில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அமைச்சரவர்களே ஒரு சார்பாகப் பேசுகிறார்கள்—"ஆசிரியர்கள் அல்லாதார் ஆசிரியர்கள் சங்கங்களுக்குத் தலைவர்களாக வந்தால் அரசியல் நுழைகிறது, அவர்கள் சுயநலத்திற்காகப் பாடுபடுகிறார்கள், அந்தச் சங்கங்கள் ஒடுக்கப்படவே நாங்கள் உங்களுக்கு அங்கீகாரம் அளிக்கிறோம்" என்ற பொருள்பட சென்னிமலையிலே பேசுகிறார்கள் கல்வி அமைச்சரவர்கள். குறிப்பாக நாங்கள் ஆசிரியர் பிரதிநிதியாக வந்ததால், சட்டத்தின் காரணமாக வேலை இழந்தாலும், "திரு. மீனாட்சிசுந்தரம், திரு. முத்துசாமி ஆகியோர் அமைப்பிலே இருக்கக்

கூடாது என்பதற்காக உங்களுக்கு அங்கீகாரம் தந்திருக்கிறேன்" என்ற பொருள்படும்படி கல்வி அமைச்சரவர்கள் பேசியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு அதிகாரிகள், அவர்கள்தான் அரசுக்கு வேண்டியவர்கள் என்று எண்ணி, அவர்களுக்குச் செயலாளர்களாக மாறிவிடுகிறார்கள் . . .

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் ஏதோ கல்வி அமைச்சரவர்கள் இரண்டு சங்கங்களை அடக்குவதற்கு அல்லது ஒழிப்பதற்கு இன்னொரு சங்கத்தை அங்கீகரித்ததாகக் கூறுகிறார். அப்படி கல்வி அமைச்சரவர்கள் பேசியிருப்பாரா என்பது சந்தேகம். அதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** ஆதாரத்தை நான் படிக்க விரும்புகிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** ஆதாரம் என்று சொல்லும்போது, சபைக்கு ஏற்ற வகையிலே குறிப்பிட்டுக் காட்ட வேண்டும். ஏதோ ஆதாரம் என்று ஒன்றைக் காட்டி, சபையின் கவனத்தைத் திருப்புவதாக அமையக்கூடாது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவரின் அனுமதி பெற்று, படிக்க விரும்புகிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் பேசியதாக, யாருக்கு ஆதரவாகப் பேசினாரோ அவர்கள் நடத்தும் பத்திரிகையில் வந்திருக்கிறது. "ஆசிரியர் இயக்கங்களுக்கு ஆசிரியராக இல்லாத மற்றவர்கள் தலைமைப் பொறுப்புக்கு வந்தால், தங்களுடைய நலனை முதலில் கவனிப்பார்களே தவிர, உங்களுடைய நலனைக் கவனிக்க மாட்டார்கள். இந்தச் சூழ்நிலையைத் தடுக்கவே அந்த நிபந்தனையைப் போட்டு தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணிக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளோம்" என்று வந்திருக்கிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** அமைச்சரவர்கள் குறிப்பிட்டதில், அந்தந்தத் துறையிலே பணியாற்றுகிறவர்கள் எந்த அளவிற்குத் துணையாக இருப்பார்கள், தேவையாக இருப்பார்கள் என்ற கருத்துதான் பிரதிபலிக்கிறது. யாரையோ ஒடுக்க வேண்டுமென்ற கருத்து அதிலே பிரதிபலிக்கவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தொழிற் சங்கங்களில்கூட வேலை செய்கின்ற ஒருவரே தலைமை தாங்கி நடத்துவதுதான் நல்லதென்று அரசு சொல்லுகிறது.

(முற்பகல் 11-00)

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தொழிலாளராகப் பணியாற்றுகின்றவர் தான் தொழிற் சங்கத்திற்குத் தலைவராக இருக்க வேண்டுமென்று சொன்னால், நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இன்றையதினம் அமைச்சராக வந்திருக்க முடியுமா?



**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** நான் ரெயில்வேயில் பணியாற்றிய 23½ வருட காலத்தில் 21 ஆண்டுகள் தொழிற் சங்கத் தலைவராக இருந்திருக்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** பணியில் இல்லாமல் இருந்த காலத்திலும் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தொழிற் சங்கத் தலைவராக இருந்திருக்கிறார் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல. இன்றைக்கு ராணுவ அமைச்சராக இருக்கின்ற திரு. வெங்கட்ராமன், முன்னாள் ஜனாதிபதி திரு. கிரி, அமரர் திரு. வி.க., போன்ற தலைவர்கள் எல்லாம் ஒரு காலத்திலே தொழிற் சங்கத் தலைவர்களாக இருந்தவர்கள் தான்.

**திரு. செ. முத்துசாமி :** அமைச்சர் ஒரு அருமையான கருத்தைச் சொன்னார். மத்திய அரசின் சட்டத்தின் அடிப்படையில் "reasonable restriction can be made for recognising orgnisations" என்று தான் சொல்லியிருக்கிறார்கள். அது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் "கம்பிளீட் ரெஸ்டிரிக்சன்ஸ்" (COMPLETE RESTRICTIONS) தேவையா என்பது பற்றித்தான் உறுப்பினர் சொல்கிறார் என்று நினைக்கிறேன். அது தேவையா என்பது தான் என்னுடைய கேள்வியும்.

* **மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** நான் ஆலோசனை என்று தான் சொன்னேன். மேலும் மத்திய அரசைப் பொறுத்தவரையில், ஒரு தொழிற் சங்கத் தலைவர் ஐந்து சங்கங்களுக்குத் தலைவராக இருக்கக் கூடாது என்று சட்டம் கொண்டு வரப்போவதாக இந்தியத் தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டில் ஆலோசனை செய்யப்பட்டது. "These are all food for thought" அதாவது சிந்தனைக்குரியவை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** நான் எழுப்பிய பிரச்சினை அமைச்சர் அப்படி அங்கே பேசியிருக்கிறாரா, அதற்குரிய ஆதாரம் உறுப்பினரிடம் இருக்கிறதா என்பது தான். ஆசிரியராக உள்ளவர் தான் சங்கத் தலைவராக இருக்க வேண்டுமா இல்லையா என்பதெல்லாம் கொள்கைப் பிரச்சினை. அதற்குள் நான் போக விரும்பவில்லை. ஆனால் அமைச்சர் அப்படி நிச்சயமாகப் பேசினார் என்று பேசுவது சரியல்ல. அப்படி நிச்சயமாகப் பேசியிருந்தார் என்றால், ஆதாரத்துடன் விவாதத்திற்கு எடுத்திருக்கலாம். அமைச்சர் அவையில் இல்லாத நேரத்தில் அமைச்சரைப் பற்றித் தவறான தகவல்கள் குறிப்பேட்டில் இடம்பெறக் கூடாது என்பதால், நான் உறுப்பினரின் பேச்சை ஆட்சேபிக்கிறேன். தயவுசெய்து உறுப்பினர் அவ்வாறு பேசுவதை மாற்றிக் கொள்ள வேண்டும்.

[1982 பிப்ரவரி 5

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** என்னுடைய பேச்சின்போது குறுக்கீடு அதிகமாக இருப்பதால் என்னுடைய நேரத்தை அதிகமாக ஒதுக்க வேண்டுமென்று மாற்றுத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நான் சொல்ல வந்ததைச் சொல்கிறேன் அமைச்சர் இதைப்பற்றி என்ன சொல்கிறாரோ அதற்கு நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அமைச்சர் ஒரு சார்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார். சாதாரண ஒன்றியங்களில் நடைபெறுகின்ற கூட்டங்களுக்குக் கூட அமைச்சர் சென்று, சங்கத் தலைவரைப் பாராட்டி, மாலை அணிவிக்கிறார் என்பதால், கல்வித் துறையில் இருக்கின்ற அத்தனை அதிகாரிகளும் இந்தக் குறிப்பிட்ட சங்கம் தான் ஆட்சிக்கு வேண்டிய சங்கம் என்று சொல்லி, மற்ற சங்கங்களை ஒடுக்குகின்ற வகையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு ஆதாரமாக அச்சரப்பாக்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கூட்டணியினர் நடத்திய அந்த நிகழ்ச்சிக்காக அங்குள்ள உதவிக் கல்வி அதிகாரி ஒருவர் ஓர் உத்தரவு போடுகிறார். பள்ளித் தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, சிறைக்குச் சென்றவர்களைப் பாராட்டும் விழாவிலே அனைத்து ஆசிரியர்களும் கலந்துகொள்ள வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். மூன்று நான்கு சங்கங்கள் இருக்கின்றன. ஆனால் ஒரு குறிப்பிட்ட சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட விழாவில் "அனைத்து ஆசிரியர்களும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும்" என்று ஆணையிடுகிறார் என்றால், இது முறைகேடானது இல்லையா? அப்படி கலந்துகொள்ளாத ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று மறைமுகமாகச் சொல்வதாக இல்லையா? இதிலே எங்கே சுதந்திரம் இருக்கிறது? எங்கே ஜனநாயகம் இருக்கிறது? எங்கே உடன்பிறப்புத் தத்துவம் இருக்கிறது. மூன்று இறந்து விட்ட ஆசிரியர்களுடைய குடும்பத்திற்கு அரசு நிதியை அமைச்சர் அவ்விழாவில் வழங்குகிறார்கள். அது என்ன அரசாங்க நிகழ்ச்சியா? அப்படி வழங்க? நாங்கள் கூப்பிட்டால் நிகழ்ச்சிகளுக்கு கல்வி அமைச்சர் வருவதாக இல்லை. ஆனால் அரசு சார்பாக வழங்கப்படுகின்ற நிதியை ஒரு குறிப்பிட்ட, ஒரு தனிப்பட்ட இயக்கத்தின் சார்பாக நடத்தப்படும் நிகழ்ச்சியில் அமைச்சர் வழங்கினால், அந்த இயக்கம் தான் அரசாங்கத்து சார்பான இயக்கம் என்று அரசாங்கமே சொல்வதாக ஆகாதா? ஆகவே தான் மற்ற சங்கங்களையெல்லாம் கல்வி அதிகாரிகள் பயமுறுத்துகிறார்கள். ஆகவே தான் இங்கே சமத்துவம் இல்லை என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கீகாரம் கூட அவர்களுக்கு அவசர அவசரமாக, இரவோடு இரவாகத் தயாரிக்கப்பட்டு 5—9—1981 அன்று அறிவிக்கப்பட்டது.



1982 பிப்ரவரி 5]

**திரு. ஜேப்பியார் :** குறுக்கிடுவதற்காக உறுப்பினர் பொறுத்துக் கொள்ள வேண்டும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி உட்பட ஆசிரியர்களுடைய கூட்டணி ஒரே அணியாக இருந்த அந்தக் காலத்திலே பேரறிஞர் அண்ணா அவர்களை அழைத்து, அதன் பிறகு அவர்கள் அதைச் சிறப்பித்து, அது வளர்ந்த நேரத்திலே தான், மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் அங்கேயிருந்து தனியாகப் பிரிந்து ஆசிரியர் மன்றம் என்ற ஒன்றை அமைத்து அன்றைக்கு ஆண்டு கொண்டிருந்த கட்சியைத் தன் பக்கம் ஈர்க்க, ஆளும் கட்சி அமைச்சரை அழைத்து மாநாடு நடத்தினார் என்பதை நான் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அதையும் நினைவுகூர்ந்து பேச வேண்டும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அன்றைக்கு இருந்த ஆளும் கட்சிக்கு துணை செல்ல வேண்டுமென்பதற்காக மீனாட்சிசுந்தரம் பிரிந்தார் என்று மாண்புமிகு உறுப்பினர் இங்கே சுட்டிக்காட்டினார். அவர் ஆசிரியராக இருந்தவர் அல்ல. அதனால் யாரோ சொல்லிக் கொடுத்ததை இங்கே பேசுகிறார். ஆனால் அன்றையதினம் ஆசிரியர்களால் ஒரு போராட்டம் நடத்தப்பட்டது. அன்றைக்குக் கோட்டை முன்னால் மறியல் செய்ய முடிவு செய்யப்பட்டது. ஆனால் சங்கத் தலைமை அன்றைக்கு கல்வி அமைச்சராக இருந்த நாவலர் அவர்கள் வீட்டுக்கு முன்னால் மறியல் செய்வோம் என்று முடிவு செய்தபோது ஓர் அமைச்சர் வீட்டுக்கு முன்னால் ஆசிரியர் பண்புக்கு மாறாக மறியல் செய்யக் கூடாது என்று தஞ்சை மாவட்டக் கிளையினர் சொன்னோம்.

**திரு. செ. முத்துசாமி :** அன்றைக்கு அந்தப் போராட்டத்தை முன் நின்று நடத்தியவன் என்ற முறையில் உறுப்பினர் அவர்கள் சொன்ன செய்தி தவறாக இருக்கக் கூடாது என்கிற முறையில் நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அன்றைக்கு அமைச்சர் அவர்களுடைய வீட்டுக்கு முன்னால் மறியல் செய்ய நாங்கள் செல்லவில்லை. பிரச்சினைகளைப்பற்றி அமைச்சரிடம் கேட்க, பேசத் தான் சென்றோம். ஆனால் அப்போது போலீஸ்காரர்கள் மிகவும் அவசரப்பட்டு ஆசிரியர்களைக் கைது செய்து விட்டார்கள். அதனால் தான் எங்களைக் கைது செய்த அதே இடத்தில் நாங்கள் போராட வேண்டுமென்று சிறையில் நாங்கள் எல்லாம் இருந்தபோதே போராட்டக் குழு முடிவு செய்தது. உண்மைத் தகவல் நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெற வேண்டுமென்பதற்காகத் தான் நான் இதைச் சொல்கிறேன். அப்போது நான் பொதுச் செயலாளர். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அப்போது மாவட்டச் செயலாளர். இது அன்று நடந்தது.

மாற்றுத் தலைவர் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்) : உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள். ஆளுநர் உரையின் மீது பேசும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : ஆளுநர் உரையில் "சமத்துவம்" என்கிற வார்த்தை வருவதால், இங்கே சமத்துவமே இல்லை என்பதுபற்றி நான் பேசிக் கொண்டிருக்கிறேன். ஆகவே ஆளுநர் உரைக்கும் நான் பேசுவதற்கும் தொடர்பு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி இங்கே ஒன்றை ஒப்புக்கொண்டார். அவர் சிறையில் இருந்தபோது போராட்டக் குழு அவ்வாறு முடிவு செய்தது என்று சொன்னார். தனிப்பட்ட முறையில் அமைச்சருடைய வீட்டுக்குச் செல்லக் கூடாது, கோட்டைக்குச் சென்று தான் போராட வேண்டுமென்று சொல்லித் தான் நாங்கள் தஞ்சை மாவட்டத்தினர் அப்போது வெளியேறினோம். அதற்குப் பிறகு தான் புதுச் சங்கம் அமைக்கப்பட்டது. இப்பிரச்சினையை இத்துடன் நிறுத்திவிட்டு விஷயத்திற்கு வருகிறேன்.

இப்போது அங்கீகாரம் தந்த பிறகு காஞ்சிபுரத்தில் அங்கீகாரம் பெற்ற சங்கத் தலைவர்களில் ஒருவர் பேசுகிறார். அரசே வலிய வரிந்து கொண்டு வந்து எங்களுக்கு இதைத் தந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். நாங்கள் அடிமை சாசன அங்கீகார விதிகளை ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் பேசியிருக்கிறார். அங்கீகார விதி ஆணையின் கடைசி பாராவில் அங்கீகாரம் அளிக்கப்பட்ட சங்கங்களின் விதிமுறைகளை அரசு ஆணைக் கேற்ப திருத்தி —அதாவது செருப்புக் கேற்றவாறு காலை வெட்டி—ஒட்டி—பின்னர் அரசுக்கு ஒப்புதலுக்கு அனுப்புமாறு இயக்குநர் பணிக்கப்பட்டிருக்கிறார். ஏன் இந்த அவசரம்? அவ்வாறு சரி செய்யப்பட்டதா? அங்கீகாரம் அச் சங்கங்களுக்கு முறைப்படி வழங்கப்பட்டுவிட்டதா? அரசு விளக்கிட வேண்டும். அங்கீகாரத்திற்கான விதியில் நன்கொடை வசூல் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. சந்தாத்தொகையோடு அரசாங்கத்திலிருந்து கொடுக்கின்ற கான்ட்ரிபியூஷனைத் தான் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று இருக்கிறது. ஆனால் அங்கீகாரம் தந்த பிறகும், இப்போதும் தொடர்ந்து நன்கொடை வசூல் செய்யப்பட்டு வருகிறது. அதற்கு ஆதாரம் இதோ அவர்களின் நன்கொடை ரசீது பாருங்கள். அதுமட்டுமல்ல. மற்றொன்றையும் செய்கிறார்கள். "நாங்கள் கருத்தரங்கு நடத்துகிறோம், அதிகாரிகளுக்கு எல்லாம் நாங்கள் மாலையிட வேண்டும் பொன்னாடை போர்த்த வேண்டும்" என்று சொல்லி, ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு ஆசிரிய பெருமக்களிடத்திலும் 20 ரூபாய், 30 ரூபாய் என்கிற விதத்தில் வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். மேல் மட்டம் வரை இந்த வசூலில் பங்கு செல்கிறது என்றும் சொல்லுகிறார்கள். ஆனால் மேல் மட்டம் என்றால் என்ன





என்று எனக்குத் தெரியாது. அவர்களுக்குப் பலவிதமான பொருட்களைக் கொடுத்ததாகவும் சொல்கிறார்கள். அதிகாரிகளும், மற்றவர்களும் எல்லோரும் சேர்ந்துகொண்டு அங்கீகாரத்தின் பேரால் இப்போது கொள்ளை

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 11-10)

அடித்துக்கொண்டிருக்கிறார்கள். 1—1—1971 முதல் 10 ஆண்டு பணிக்கால அடிப்படையிலே தேர்வு நிலை அனைவருக்கும் வழங்க வேண்டுமென்று தீர்ப்பு வந்திருக்கிறது. அங்கிகரிக்கப்பட்ட சங்கத்தைச் சார்ந்தவர்களாக இருக்கக் கூடிய கூட்டணியினர், அதை அமுல்படுத்துங்கள் என்று அரசிடம் சொல்லு வதற்குப் பதிலாக, இன்றைக்கு வழக்கு மன்றம் சென்று தான் அத்தீர்ப்பை அமுல்படுத்த வேண்டும் எனக்கூறி அந்த அங்கீகாரத்தை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு பலவகையில் கொள்ளையடிக்கிறார்கள். அதற்காக நெல்லை மாவட்டத்திலே ஒரு ஆசிரியரிடம் 100 ரூபாய் விதமும், தென்னாற்காடு மாவட்டத்திலே ஒரு ஆசிரியரிடம் ரூ. 70 விதமும் வட-ஆற்காடு மாவட்டத்தில் ஒரு ஆசிரியரிடம் ரூ. 40 விதமும் அவரவர் திறமைக்கேற்ப பணத்தை வசூலித்துக் கொள்ளை அடித்துக்கொண்டிருக்கிறார்கள். (திரு. மாணிக்கம் அவர்கள் பத்திரிகை படித்துக்கொண்டிருந்தார்கள்.)

திரு. ஆர். டி. சீத்தாபதி : துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே நியூஸ்பேப்பர் படிக்கலாமா என்று அறிய விரும்புகிறேன். இப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் படித்துக்கொண்டிருக்கிறார்கள். படிக்கலாம் என்றால், நானும் 'முரசொலி' படிக்கலாமா?

திரு. க. இராமமூர்த்தி : அவை நடவடிக்கை தொடர்பான ரெஃபரன்ஸ்க்காகப் பார்க்கலாம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : எனக்கு அடிக்கடி ஓய்வு கிடைக்கிறது. அதற்கு மிகவும் நன்றி. அவர்கள் நீதிமன்றத்திலே வழக்கு தொடர வேண்டும் என்று சொல்கிறார்கள். அரசாலே அங்கீகரிக்கப்பட்ட சங்கம் அதாவது தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி, ஒவ்வொரு ஆசிரியரிடத்திலேயும் 100 ரூபாய், 70 ரூபாய், 40 ரூபாய் என்று வசூலிக்கிறார்கள். அவர்களை ஏன் இப்படி வசூலிக்கிறீர்கள் என்று கேட்டால், 'இது மேலிடம் வரையிலும் போகிறது' என்று சொல்கிறார்கள். நான் கேட்கிறேன் "அங்கீகார விதிகளுக்கும் புறம்பாகச் செயல்படும் அந்தக் கூட்டணியினருக்கு அளித்த அங்கீகாரத்தை ரத்து செய்யப்போகிறீர்களா? அல்லது இவ்வாறு தொடர்ந்து அவர்கள் கொள்ளை அடிக்க அனுமதிக்கப்போகிறீர்களா?" அவர்களுக்கு அளிக்கப்பட்ட அங்கீகாரத்தில் உள்ள விதிகளில் அவர்கள் போராட்டம் நடத்தக்கூடாது, ஊர்வலம் போகக்கூடாது என்றெல்லாம் இருக்கிறது.

இந்த நாட்டிலே 19—1—1982 ஆம் நாளன்று பொது வேலைநிறுத்தம் நடைபெற்றது. அரசால் அங்கிகரிக்கப்படாத சங்கத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் இந்தப் போராட்டத்திலே பங்குகொள்ளவில்லை. அவர்கள் போராட்டத்திலே ஈடுபடவில்லை. அரசால் அங்கீகரிக்கப்பட்ட தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியினர் வேலைநிறுத்தத்திற்கு ஆதரவு அறிக்கை வெளியிட்டிருந்தார்கள். "இந்த வேலை நிறுத்தத்தை ஆதரிப்போம், கூட்டங்களிலே பேசுவோம், பாட்ஜ் அணிவோம், துண்டு அறிக்கைகள் வெளியிடுவோம்" என்று சொன்னார்கள். அதற்கேற்ப துண்டு அறிக்கைகளையும் வெளியிட்டிருந்தார்கள். ஆனால் அரசின் கொள்கையை ஏற்று நடக்கும் எங்களுக்கு அங்கீகாரம் கிடையாது. . .

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** எந்த மாதிரி சங்கங்களுக்கு அங்கீகாரம் அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிறார்கள்? அரசுக்கு ஆதரவாக இருப்பவர்களுக்கு அங்கீகாரம் வேண்டும் என்று சொல்லுகிறாரா? உங்களுக்கு ஆதரவு தருபவர்களுக்கு அங்கீகாரம் தருகிறீர்கள் என்பதன் மூலம் இதோ ஆதரவு தந்த நாங்கள் இருக்கிறோம் என்று சொல்வது போல இருக்கிறது. எங்களுக்கு ஆதரவு தந்தவர்கள் யார்?

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நான் "உங்களுக்கு ஆதரவு தந்தவர்கள்" என்று சொல்லும்போது அரசியல் கட்சியைக் குறிப்பிடவில்லை. அரசைக் குறிப்பிடுகிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** பொது வேலை நிறுத்தத்தில் பள்ளி ஆசிரியர்கள் கலந்துக்கொள்ளக்கூடாது என்று விதி இருக்கிறது. அங்கிகரிக்கப்பட்ட சங்கத்திற்கு அந்த விதி இருக்கிறது. பொது வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்ளக்கூடாது என்று தெளிவாக விதி இருக்கிறது. அந்த விதிக்கு மாறாக அந்தச் சங்கத்திலே இருப்பவர்கள் அந்த வேலை நிறுத்தத்திலே கலந்துகொண்டு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசு ஆதரவு தருகிறதா இல்லையா என்பதுதான் கேள்வி. அதைப்பற்றிக் கருத்து சொல்லவேண்டும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** இப்போது இருக்கிற பிரச்சினை சங்கங்களுக்கு அங்கீகாரம் பற்றிய விஷயம். இதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து முரண்பாடானதாக இருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** டாக்டர் அவர்களுக்கு அப்படிப் படுகிறது. அவர் சற்று நிதானமாக ஆய்ந்து பார்த்தால், அப்படிப் படாது. நான் சொல்ல விரும்புவது; தமிழ் நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணிக்கு அரசு அங்கீகாரம் அளித்து ஆதரவு தருகிறது. அவர்கள் நன்கொடை என்ற





பெயரில் கொள்ளையடிக்கிறார்கள். வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தருகிறார்கள். ஆனால் 'ஆசிரியர் மன்றம்' வேலை நிறுத்தத்துக்கு ஆதரவு கொடுக்கவில்லை. ஆனால் அதே நேரத்தில் திருவாரூருக்குப் பக்கத்தில் தென்னவராயநல்லூர் என்ற இடத்தில் இருக்கும் பள்ளியின் தலைமையாசிரியர் பள்ளியை நடத்துகிறார். அந்தப் பகுதிக்கு போலீசார் வருகிறார்கள். அந்தப் பகுதிக்கு வந்து தலைமையாசிரியரையும், உதவி ஆசிரியரையும் வெளியே கூட்டிவந்து நீங்கள் ஏன் பந்தில் கலந்துகொள்ளவில்லை, பள்ளியை ஏன் நடத்துகிறீர்கள் என்று கேட்டு, இரண்டு ஆசிரியர்களையும் அடித்து, உதைத்து . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களுக்கு நல்ல தமிழ் தெரியும். பந்த்—பந்த் என்று அதையே பந்தாடிக்கொண்டிருக்கிறார்கள். ஏன்?

**மாண்புமிகு திரு. க. மீனாட்சிசுந்தரம் :** சிலருக்கு வேலை நிறுத்தம் என்று சொன்னால் தெரியாது. அதனால்தான் இப்படிச் சொல்கிறேன். ஏன் நீங்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடவில்லை என்று இரண்டு ஆசிரியர்களையும் அடித்து, உதைத்து திருவாரூருக்குக் கொண்டு வந்து அடைத்து வைத்தார்கள். இரவு 8½ மணிக்கு மேல், இந்த விவரங்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, நான் தலையிட்டு அந்த இரண்டு ஆசிரியர்களையும் வெளியே கொண்டு வந்தேன். அங்குள்ள காவல்துறை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களுக்கு ஆதரவு அளித்தது. வேலைநிறுத்தத்தில் ஈடுபடாதவர்களை உதைத்தது. ஆகவே, இந்த அரசு அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். உண்மையாக இந்த அரசு வேலை நிறுத்தத்தை ஆதரிக்கவில்லை என்று சொன்னால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**திரு. ஜே. எம். மியாகான் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைப் பொதுமேடை என்று நினைத்துக்கொண்டு பேசுகிறார்களா, அல்லது ஆளுநர் அவர்களின் உரை மீது நடக்கும் விவாதம் என்று நினைத்துக் கொண்டு பேசுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அரசியல்வாதிகள் தனிப்பட்ட பல்வேறு பிரச்சினைகளிலேயெல்லாம் பேசுகிறார்கள். நாங்கள் ஆசிரியர் பிரதிநிதிகள், ஆசிரியர் பிரச்சினைகளைப்பற்றித்தான் பேசுகிறோம்.

**திரு. செ. முத்துசாமி** பட்ஜெட் உரையிலே நாட்டில் இருக்கும் பிரச்சினைகளைப்பற்றியெல்லாம் பேச வேண்டும். அதிலே யாருக்கும் சந்தேகம் வரக்கூடாது. எல்லாப் பிரச்சினைகளையும் குறித்துப் பேசுவதற்காகத்தான் நாம் இருக்கிறோம்.

[1982 பிப்ரவரி 5

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் பேசவிருக்கிறார்கள். இப்போது பேசிய அந்தப் பகுதிகளுக்கான நேரத்தைக் கொஞ்சம் குறைத்துக்கொள்வதற்கு அவர் வாய்ப்பு தரவேண்டும். (சிரிப்பு).

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** ஆசிரியரல்லாதார் தலைமை வகித்தால் சுயநலம் தான்வரும் என கல்வியமைச்சர் பேசுகிறார். எனவே தரவில்லை என்கிறார். ஆசிரியர் இணைப்பு இயக்கம் என்ற ஒன்றாம். அதன் பொதுச்செயலர் ஆசிரியராக உள்ளவர்தான். அந்தச் சங்கத்திற்கு எந்தவிதமான கோரிக்கையும் இல்லை. நாகர்கோவிலிலேயிருந்து தொடங்கி சைக்கிளிலேயே சென்னைக்கு அவர் வருகிறார். அண்ணா செங்கோலை அங்கிருந்து கொண்டு வந்து சைக்கிளிலே வந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே செங்கோல் தந்திருக்கிறார். கோரிக்கை எதுவும் வைக்கவில்லை. அவருக்குக் கோரிக்கை முக்கியமல்ல. தனக்கு ஏதும் பதவி கிடைக்காதா என்பதுதான் முக்கியம். எங்களைப் பொறுத்தவரையில், நாங்கள் கோரிக்கைக்காகவும், பிரச்சினைகளுக்காகவும் போராடுகிறோம், வாதாடுகிறோம். நாங்கள் சுயநலவாதிகளாம். கோரிக்கை இல்லாமல் அண்ணா செங்கோல் கொடுத்தவரை அரசு தமிழக ஏட்டிலே விளம்பரப்படுத்தியிருக்கிறது. செங்கோல் கொடுத்தவர் சுயநலவாதியா? நான் சுயநலவாதியா? இதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். இப்படியெல்லாம் அரசு செய்வது சமத்துவம் அல்ல என்பதை நான் இந்தக் தருணத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது கல்வி நிலையங்களில் ஆளும்கட்சியின் அரசியல் ஆதிக்கம் இருக்கிறது. கல்வி நிலையங்களிலே பணியாற்றிக்கொண்டிருக்கும் ஆசிரியர்களிலே ஆளும் கட்சிக்குச் சார்பாக இருப்பவர்களுக்கு ஒரு நடவடிக்கையும், மற்றவர்களுக்கு ஒரு நடவடிக்கையும் என்ற அளவில் நிலைமைகள் இப்போது இருக்கின்றன.

* * *

**திரு. எஸ். ஆர். இராதா :** இந்த அவையிலே இல்லாதவர்களுடைய பெயரைச் சொல்லி பேசுவது நிச்சயமாக ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல. அவர் எனக்கு வேண்டியவர், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு வேண்டாதவர். அப்படி எதிரியானவர் மீது இப்படிப் பேசுவது நல்லதல்ல. ஆகவே, அவர் மீது பேசிய பகுதிகளை அவைக்குறிப்பிலேயிருந்து எடுத்துவிடும்படி கோருகிறேன்.

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



1982 பிப்ரவரி 5]

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பெயரைக் குறிப்பிட்டு பேசிய அந்தப் பகுதிகளை அவைக்குறிப்பிலேயிருந்து எடுக்கலாம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** இந்த அவையிலே பலமுறை பலருடைய பெயர்களைக் குறிப்பிட்டுப் பேசப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** என்னுடைய கவனத்திற்கு அப்போது கொண்டு வரப்படாமல் இருந்திருக்கலாம்; இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11.20)

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையில் ஒரு தவறான அடிப்படையில் தீர்ப்பு வழங்கிவிடக் கூடாதே என்ற எண்ணத்தில் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். உறுப்பினர்கள் பேசும்போது அவையில் இல்லாத ஒருவரைப்பற்றிக் குறிப்பிட்டுப் பேசினால் அதற்கு உறுப்பினர்கள் பொறுப்பேற்க வேண்டும். அவ்வாறு உறுப்பினர்கள் தாங்கள் பேசுவதற்குப் பொறுப்பேற்கத் தயார் என்றால், அவைகளைத் தெரிவிக்கலாம் என்ற மரபு இந்த அவையில் இருக்கிறது. எனவே தீர்ப்பு அளிப்பதற்கு முன் யோசித்துச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இல்லையென்றால் அக்கிரமங்கள் நடைபெறுவதைக்கூட இந்த அவையில் யாரும் குறிப்பிட முடியாமல் போய்விடும். அவர்களுக்கெல்லாம் ஒரு பாதுகாப்பு ஏற்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் எதைச் சொன்னாலும், பொறுப்பேற்றுக் கொண்டால், அவையில் சொல்லலாம் என்ற முறையில் இங்கே பேசினார்கள். பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு பொறுப்புகளை நிறைவேற்றாமல் இருப்பது சகஜமாகிவிட்டது. அதோடு பொறுப்பே தெரியாமல் பொறுப்பேற்றுக் கொள்கிறேன், ஆகவே பேச அனுமதிக்க வேண்டும் என்று சொல்வதும் சரியல்ல.

**திரு. ஆற்காடு. நா. வீராசாமி :** மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் குறிப்பிட்டதைப் போல், இந்த மன்றத்தில் மட்டுமல்ல, சட்டமன்றப் பேரவையிலும் சரி, நாடாளுமன்ற இரு அவைகளிலும் சரி, விவாதத்தின்போது அவையில் இல்லாதவர்களின் பெயரைக் குறிப்பிடவே கூடாது என்று சொல்லும் விதிமுறை ஏதுமில்லை. அதைப்போன்ற ஒருவிதிமுறை ஏதுமில்லை. ஆனால் அப்படிப் பெயர்களைக் குறிப்பிடும்போது,

பேசும் உறுப்பினர்கள் ஆதாரத்தோடு தெரிவிக்க வேண்டும் என்பதோடு, அதற்கான பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்றுதான் தீர்ப்புகள் அளிக்கப் பட்டிருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், அரசாங்கம் ஒரு உத்தரவைப் போட்டால், அதில் தனியார் ஒருவரின் பெயர் இருக்கு மாயின், அவர் மன்றத்தில் இல்லை என்ற காரணத்திற்காக அவர் பெயரைப் படிப்பதையே தடை செய்ய முடியாது. ஆகவே ஒருவரைப் பற்றிக் குற்றச் சாட்டுக்களைச் சொல்லும்போதும், பேசும்போதும், உறுப்பினர்கள் அதற்கான பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். இந்த முறையில் உறுப்பினர்கள் இதுவரையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அரசாங்கம் உத்தரவு போடுகிறபோது அதில் உள்ள பெயரைப் படிக்கக்கூடாது என்பது வேறு; அவையில் இல்லாத ஒருவரின்மீது குற்றச்சாட்டுக்களைச் சொல்லும்போது, அவருக்குப் பதில் சொல்ல வாய்ப்பு இல்லாத நிலையில், கூடுமான வரையில் அவருடைய பெயரை அவையில் சொல்லாமலிருப்பது நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** நான் குறிப்பிடுவது இந்தப் பிரச்சினையைத் தாண்டிய ஒன்றாகும். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் பேசும்போது, அவையில் உள்ள அனைத்து உறுப்பினர்களையும் பாதிக்கும் வகையில் ஒட்டுமொத்தமாக, ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார். அதாவது "பொறுப்பை அறியாதவர்கள் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்" என்று சொல்லியிருப்பது நல்லதல்ல. இந்த அவையில் பொறுப்பேற்றுக் கொண்ட வர்கள் தங்கள் பொறுப்பை நிறைவேற்றியிருக்கிறார்கள். பொறுப்பேற்றுக் கொண்டு எப்போதும் அதை நிறைவேற்றத் தவறியதே இல்லை. அப்படித் தவறியதாக இதுவரை அவையின் கவனத்திற்கு எதுவும் கொண்டு வரப் பட்டதுமில்லை. அப்படிப்பட்ட நிலையில் "பொறுப்பே தெரியாதவர்கள் பொறுப்பேற்றுக் கோள்கிறார்கள்" என்று குறிப்பிடுவது ஆளும் கட்சி உட்பட அனைத்துக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களையும் பாதிக்கும் வகையில் சொல்லப்படும் கருத்தாகும். அவ்வாறு அவர் குறிப்பிட்டிருப்பது அவைக் குறிப்பில் இருப்பதென்பது அவையின் மரியாதையைக் குறைப்பதாக இருக்கும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இதைத் தனிப்பட்ட முறையில் எடுத்துக் கொண்டிருக்கிறார் என்று எண்ணுகிறேன். நான் தனிப்பட்ட முறையில் யாரையும் குறிப்பிடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**திரு. க. இராமமூர்த்தி :** இது ஒன்றும் என்னைப்பற்றிய பிரச்சினையல்ல. நான் தனிப்பட்ட முறையிலும் இதை எடுத்துக்கொள்ளவில்லை. திரு. இராதா அவர்கள் குறிப்பிட்ட கருத்து அவை உறுப்பினர்கள் அத்தனை பேரையும் குற்றம் சாட்டுகிற முறையில் இருக்கிறது. ஆளும் கட்சியில் இருப்பவர்கள் கூட பல நேரங்களில் தாங்கள் பேசுவதற்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக் கிறார்கள். அந்தப் பொறுப்பை நிறைவேற்றியிருக்கிறார்கள். அதைப் போலவே மற்ற உறுப்பினர்களும் ஏற்றுக்கொண்ட பொறுப்பை நிறைவேற்றி யிருக்கிறார்களே தவிர, பொறுப்பை நிறைவேற்றாமல் விட்டதில்லை. எனவே இப்படிப்பட்ட நிலைமையில் "பொறுப்பே தெரியாதவர்கள் பொறுப்பேற்றுக் கொள்கிறார்கள்" என்று பொதுவாகச் சொல்வது முறையானதாக இருக்காது என்பதைத்தான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**DR. M. A. MUTHIAH CHETTIAR:** On a point of order, Sir. I am really surprised at the discussion that is now going on. In all my fifty years' experience in the Legislature and also in Parliament as a Member of the Lok Sabha and also of the Constituent Assembly, I have never come across such a discussion. I assure you, Sir, that the view that has always been held is that no reference should be made to an individual who is not present in the House to defend himself. As the Hon. Deputy Chairman observed, reading out a Government Order is quite another thing. It is not right to mention the name of an individual who is not present in the House, even if the hon. Member who mentions that name takes the responsibility. Who is to find out whether he fulfils that responsibility? This is not a House to make enquiries about all those things. The ruling which you gave earlier is perfectly right and I hope you will stick to it. It is clearly laid down in "May's Parliamentary Practice" that personal references should not be made against persons who could not defend themselves in the House. This view has been held even by the late Thiru Vithalbai Patel and by Parliamentary institutions all over the world.

**திரு க. இராமமூர்த்தி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அவைத் தலைவரின் அனுமதியோடு, அவர்கள் சொல்லும் குற்றச்சாட்டுகளுக்கும் கருத்துக்களுக்கும் பொறுப்பேற்றுக் கொண்டு விவரங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவ்வாறு அனுமதிக்கப்படுவதில்லை என்று சொல்வது சரியல்ல. நடைமுறையில் அவ்வாறு கிடையாது என்பது ஜனநாயகத்திற்கே எதிரான நடவடிக்கையாகும். ஜனநாயக மரபுகளின் அடிப்படையில் இதை நாம் ஏற்கெனவே அனுமதித்து வருகிறோம்.

உறுப்பினர்கள் சில நேரங்களில் பொறுப்பேற்றுக் கொள்கிறோம். சில நேரங்களில் தலைவரின் அனுமதியோடு பெயரைத் தெரிவிக்கிறோம்.

அதேபோல் நான் குறிப்பிட்டது பொதுவாக அவையில் உறுப்பினர்கள் பொறுப்பேற்றுக் கொண்டுவிட்டு, பின்னால் அதை நிறைவேற்றாமல் விட்டு விடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு சரியில்லை என்பதுதான். அந்தக் குற்றச் சாட்டு எந்தக் கட்சியைச் சார்ந்தவர் மீதானாலும் சரியானது அல்ல என்பதைத்தான் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு இராமமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டதை பொறுப்பேற்றுக் கொண்டு நிறைவேற்றாமல் விட்டதில்லை என்பதுதானே தவிர, நான் கூறிய தீர்ப்புக்கு முரணானது அல்ல. திரு மீனாட்சிசுந்தரம் தொடர்ந்து பேசலாம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** உறுப்பினர் என்ற முறையில் அவையில் பேசுகிற அனைத்திற்கும் நான் பொறுப்பேற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் "கூடுமானவரை பெயரைச் சொல்ல வேண்டாம்" என்று சொன்னதை நான் ஏற்றுக் கொள்கிறேன். பெயரையே சொல்லக் கூடாது என்றால் பல நேரங்களில் சம்பவத்தையே சொல்ல வாய்ப்பில்லாமல் போய்விடும் என்பதையும் தலைவரின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்தில், ஒரத்தநாடு மேல் நிலைப்பள்ளியில் பணியாற்றிய அந்த ஆசிரியர் வகுப்பில் பாடமே நடத்துவதில்லை. செல்வதேயில்லை. எப்போதும் அவருடைய வகுப்பு காலி யாகத்தான் இருக்கிறது. எனவே மாணவர்களின் சத்தம் அதிக மாகயிருக்கிறது. எந்த நேரத்திலும் அவர் சாராய வியாபாரத்திற்காக வெளியே சென்றுவிடுகிறார். அந்த நேரத்தில் அங்கே உள்ள தலைமையாசிரியரிடம் - பெயரைச் சொல்லக் கூடாது என்று சொன்னதால் நான் பெயரைச் சொல்ல வில்லை - பக்கத்து வகுப்பின் ஆசிரியர் போய் புகார் செய்தார். ஆசிரியர் புகார் செய்ததையொட்டி வகுப்புக்கே போகாத அந்த ஆசிரியருக்கு ஒரு மெமோ கொடுக்கப்படுகிறது. ஒழுங்காக நீங்கள் வகுப்புக்குச் செல்ல வேண்டும் என்று அந்த ஆசிரியருக்கு மெமோ கொடுத்ததன் காரணமாக, கோபமுற்ற அவர் அதற்கடுத்த நாள், அவருடைய நண்பர்கள் இருவருடன் சேர்ந்துகொண்டு புகார் கொடுத்த ஆசிரியரை ஆசிரியர்களின் அறையிலேயே செருப்பால் அடித்தார். செருப்பால் அடித்த அவர் பள்ளி ஆசிரியர் மட்டுமல்ல, அ.தி.மு.க. கிளைச் செயலாளர்கூட. அவர் புகார் கொடுத்த ஆசிரியரைச் செருப்பால் அடித்தார். இதனையொட்டி அடிபட்ட ஆசிரியர் கல்வித் துறை அதிகாரிகளுக்குப் புகார் செய்தார். அந்தப் புகாரின் அடிப்படையில், அடி-



பட்ட ஆசிரியரை ஒரு இடத்திலும், அடித்த ஆசிரியரை ஒரு இடத்திலுமாக கல்வித் துறை அதிகாரி மாறுதல் செய்தார். பெயரளவில் தண்டனையாக — அடித்தவர் தப்பு, அடிபட்டவரும் இருவருக்குமே மாறுதல் தரப்பட்டது. ஆனால் அதற்குப் பின்னர் என்னவாயிற்று என்றால், மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் தஞ்சையில் ஒரு மாநாட்டிற்குச் சென்றபோது முக்கியமான ஆளும் கட்சியின் பொறுப்பில் உள்ள பலர் அடித்த அந்த ஆசிரியரை அவர் விரும்பும் இடத்திற்கே மாற்ற வேண்டும் என்று வேண்டுகோள் விடப்பட்டி ருக்கிறது. மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களும் "இது முறையல்ல, மேலவையில் விவாதத்திற்கு வந்துவிட்டதே" என்று கூட குறிப்பிட்டார்கள் என்று அறிகிறேன். இருந்தபோதும் எப்படியாவது அவரை மாற்றியாக வேண்டும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் அந்த ஆசிரியர் தஞ்சையில் எங்கே சாராயக் கடை வைத்து நடத்துகிறாரோ அந்த இடத் திற்குப் பக்கத்திலுள்ள பள்ளிக்கு மாறுதல் செய்யப்பட்டிருக்கிறார். ஆனால் அடிபட்ட ஆசிரியருக்கு அத்தகைய மாறுதல் தரப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. அவருடைய மகன் மனநோய் கண்டு மருத்துவ மனையில் இருந்து சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தபோது அதைச் சுட்டிக்காட்டி மாறுதல் கேட்டும்கூட அவருக்கு மாறுதல் அளிக்கப்படவில்லை. இப்படி ஆளும் கட்சிக்கு ஆதரவாக இருப்பவர்கள் என்ன செய்தாலும் அவர்களுக்குப் பாதுகாப்பு உண்டு என்ற நிலை இன்றையதினம் ஏற்பட்டிருக்கிறது. சாராயக் கடை வைத்து நடத்தும் அவ்வாசிரியர், ஆசிரியர் தொகுதி தேர்தலிலே போட்டியிட்டார். இங்கே தேர்தலிலே நின்ற செல்வி லீலாவதி மீது நடவடிக்கை எடுத்து. அவர் வழக்கு மன்றம் சென்று 'ஸ்டே' வாங்கி அவர் இன்று இங்கே உறுப்பினராகவும் இருக்கிறார். ஆசிரியர் பணியும் ஆற்றுகிறார். ஆனால், என் தொகுதியில் நின்று போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்த அவர்மீது அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை; மாறாக நடுநிலைப் பள்ளியிலிருந்து உயர்நிலைப்பள்ளி, அதன்பின், மேல்நிலைப் பள்ளிக்கு பதவி உயர்வு தரப்பட்டுள்ளார். இது எந்த விதத்தில் நியாயம்? ஆனால் வெளியே என்ன சொல்லப்படுகிறது. கல்வி நிலையங்களுக்குள் அரசியலே வரக்கூடாது. ஆனால் பள்ளியில் பாடமே சொல்லித் தராமல் சாராயக் கடை நடத்துபவரின்; கடைக்குப் பக்கத்திலேயே மாறுதல் தந்து அவருக்குப் பாதுகாப்பும் அளிக்கப் படுகிறது என்றால் சமுதாயத்தில் எப்படி சமத்துவமும் ஒருமைப்பாடும், சுதந்திரமும் நட்புணர்ச்சியும் அரசால் செயல்படுத்தப்படுகிறது என்று கேட்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, மல்லிப்பட்டினம் என்னுமிடத்தில் நடைபெற்ற ஒரு சம்பவத்தையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அங்கே ஒரு ஆசிரியர் என்னுடைய ஆசிரியர் மன்றத்தைச் சார்ந்தவர். எங்கள் மன்றத்தைச்

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1982 பிப்ரவரி 5

சார்ந்தவர்களையெல்லாம் அடித்து நொறுக்கி அவர்களின் உயிரைப் பலி வாங்கச் சொல்லி இந்த அரசு உத்தரவிட்டிருக்கிறதா என்னவோ எனக்குத் தெரியவில்லை. திருட்டு வழக்கொன்றில் குற்றப் புகார் கொடுத்த நபர் அந்த ஆசிரியரின் பெயரைச் சொல்லாத நிலையில் அங்கே உள்ள ஆளும் கட்சியைச் சார்ந்த நபர்கள் அவருடைய பெயரையும் அந்த வழக்கில் சேர்த்து அவருக்குக் கொடுமைகளை இழைத்திருக்கிறார்கள். சேதுபாவா சமுத்திரம் ஒன்றியத்தில் ஒன்றியப் பெருந்தலைவருக்குரிய தேர்தலில் போட்டியிட மனுச் செய்த ஒருவர் ஆளும் கட்சியைச் சார்ந்தவர். அவர் அந்தப் பகுதியில் உள்ள பெருந்தனக்காரர் உதவியோடு ராமையன் என்ற இந்த ஆசிரியரை முன்விரோதம் காரணமாக உண்மைக்கு மாறாக அந்தத் திருட்டு வழக்கில் சேர்த்து வைப்புட்டுத் தந்து தூண்டியதன் விளைவாக அதிராம்பட்டினம் காவல் நிலையத்தில் அவரை இரண்டு நாட்கள் அன் ஆதரைஸ்டாக காவலில் வைத்து, சொல்ல முடியாத கொடுமைகளை இழைத்திருக்கிறார்கள். இங்கே பெண்கள் இருக்கிறார்கள் என்ற காரணத்தால், என்னால் அங்கே நடந்தவற்றை முழுமையாக விவரிக்க இயலவில்லை. மிசா காலத்தில் நடந்ததைவிடக் கொடுமையாக காவல் துறையினர் அவரிடம் நடந்து கொண்டிருக்கிறார்கள். அந்தச் சம்பவத்தை நினைத்தாலே நான் உணர்ச்சி வசப்படுகிறேன். அந்த அளவுக்கு காவல் நிலையத்தில் அந்த ஆசிரியர் கொடுமைப்படுத்தப்பட்டிருக்கிறார். சிறையில் நடத்தப்பட்ட கொடுமையின் காரணமாக அவர் அங்கே ரத்த வாந்தியே எடுத்திருக்கிறார். அதற்குப் பின்னாலே அரசு ஊழியர் ஆசிரியர் கூட்டமைப்பிலே உள்ளவர்களே வந்து அந்த ஆசிரியர் குற்றமற்றவர் என்று சொல்லியும், புகார் கொடுத்தவரே அவர் குற்றமற்றவர் என்று சொல்லியும், அப்பிரமுகர்கள் சிலர் கூறியும் அவர் வெளியே விடப்படவில்லை. 2 நாள் கொடுமைப்படுத்தப்பட்ட பிறகுதான் அவர் வெளியே விடப்பட்டுள்ளார். அப்படி அவர் ஊர் வந்த பிறகும் அவரை போலீஸ்காரர்கள் தேடி வந்து அடித்திருக்கிறார்கள். அதன் காரணமாக அந்த ஆசிரியர் நோய் வாய்ப் பட்டார். அந்த நிலையிலும் கூட முதலில் சொன்ன நபர்கள் போலீஸ் துணையுடன் போய் அந்த ஆசிரியரை ஊரிலேயே நையப் புடைத்திருக்கிறார்கள். அவர் அன்றிரவே இறந்தார். அவர் வீட்டு வாசலில் இறந்தார். இறந்த இரவு 1½ மணிக்கு அங்கே ஒரு டாக்சி வந்தது. அங்கே அப்போது திடீரென ஒரு டாக்சி வரவேண்டிய அவசியம் என்ன என்பதைப் பார்க்க வேண்டும். வந்த டாக்சியில் சடலத்தை எடுத்துப் போட்டுக் கொண்டு பட்டுக் கோட்டைக்குச் செல்கிறார்கள். மருத்துவ மனையில் போஸ்ட்மார்ட்டம் செய்யச் சொல்கிறார்கள். இரவு 1½ மணிக்கு அந்த குக்கிராமத்துக்குள்ளே ஏன், எப்படி அந்த டாக்சி வந்தது என்று புரியவில்லை. ஒன்றரை மணிக்கு



1982 பிப்ரவரி 5] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

(முற்பகல் 11.30)

அங்கே டாக்சி வருகிறது. போலீஸ்காரர்கள் வருகிறார்கள். அவர் அடிக்கப் பட்டதற்குப் பின்னாலே அதிகாரிகளுக்கு எழுதிய மடல், அவருடைய டைரி ஆகியவற்றை வீட்டிற்குள் சென்று போலீசார் கைப்பற்றியிருக்கிறார்கள். மருத்துவ மனையிலேயே அவருடைய தாயாரிடத்திலும், மனைவியிடத்திலும் "மறுகாலை" என்று எழுதி வாங்கிக்கொண்டு சென்று அவசர அவசரமாக சடலத்தை எரித்துவிட்டிருக்கிறார்கள். அவருடைய தாயாரும், மனைவியும் தங்களிடம் கையொப்பம் பெற்று அதிலே என்ன எழுதியிருந்தது என்று தங்களுக்குத் தெரியாது என்று சொல்கிறார்கள். அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், அவருக்கு உதவியாக இருந்தவர்கள் எல்லாம் வருவதற்கு முன்பாகவே அவர் சடலத்தை எரித்துவிட்டார்கள். ஆசிரியர் ராமையன் சாவில் மர்மம் இருக்கிறது, அது குறித்து நீதி விசாரணை செய்ய வேண்டும் என்று கேட்டு 11—1—1981 அன்று பேராவூரணியில் அரசு ஊழியர் ஆசிரியர் கூட்டமைப்பினர் கண்டனக் கூட்டம் நடத்தியிருக்கிறார்கள். அரசுக்கும் கோரிக்கை அனுப்பியிருக்கிறார்கள், அமைச்சருக்கும் அனுப்பியிருக்கிறார்கள், எனக்கும் அனுப்பியிருக்கிறார்கள், மற்றவர்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கட்சி வேறுபாடு, சங்க வேறுபாடு கருதாமல், தங்களுக்கும் சொல்லிக் கொடுத்தவர் ஓர் ஆசிரியர்தான் என்று கருதி, அமைச்சராக இருப்பவருக்கும் ஓர் ஆசிரியர்தான் கல்விக் கண்ணைத் திறந்திருக்க வேண்டும் என்று கருதி, ஆசிரியர் இனம் காப்பாற்றப் படவேண்டும், பழி வாங்குதலுக்கு ஆளாகக் கூடாது என்று கருதி உடனடியாக நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவலர்களுக்குப் பல சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. காவலர்கள் இந்த அரசாலே ஒரு நேரத்தில் அடித்துத் துன்புறுத்தப்பட்டார்கள். அவர்கள் சங்கம் அமைக்கக் கூடாது என்று என்னென்னவோ கொடுமைகள் செய்தீர்கள். இப்போது அவர்கள் மீது அலாதி பிரியம் ஏற்பட்டு காவலர் களுக்குப் பல சலுகைகளை அளித்துக் கொண்டிருக்கிறீர்கள். ஒருவேளை ராமையன் போன்ற ஆசிரியர்களைக் கொல்ல வேண்டும் என்றோ, அதிகாரி பொன் சதாசிவம் போன்றவர்களைக் கொடுமைப்படுத்த வேண்டும் என்றோ, சண்முகநாதன் போன்றவர்களை ஒடுக்க வேண்டும் என்றோ, 19 ஆம் தேதி வேலை நிறுத்தத்தில் ஈடுபடாத ஆசிரியர்களை உதைக்க வேண்டும் என்றோ என்னவோ தெரியவில்லை, காவல் துறையினருக்குச் சலுகைகள் வழங்கப் பட்டிருக்கின்றன

[திரு. க. மீனாட்சிசுந்தரம்]　　[1982 பிப்ரவரி 5

மாண்புமிகு உறுப்பினர் திரு நாயகம் அவர்கள் வாடிப்பட்டி பற்றி சொன்னார்கள். அதுபற்றி எனக்கும் தந்தி வந்திருக்கிறது. அங்கே மூன்று நாட்களாக கடையடைப்பு நடைபெறுகிறது. கண்டன ஊர்வலம் ஆசிரியர்களால் நடத்தப்பட்டிருக்கிறது. 6ஆம் தேதி சர்வ கட்சி கூட்டம் நடைபெறப் போகிறது. போலீசாரைக் கொல்ல வந்தவர் ஆரம்பப் பள்ளி ஆசிரியை என்று அவர் மீது பிரிவு 307—ன் கீழ் வழக்குப் போட்டிருக்கிறார்கள். எதற்கெடுத்தாலும் இந்தப் பிரிவு 307—ஐப் பயன்படுத்துவதைப் பார்த்தால், எனக்கே கூட பயமாக இருக்கிறது. அரசியல் காரணங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட இந்த பிரிவு இப்போது ஆசிரியர்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது. ஆகவே அங்கே 6ஆம் தேதி சர்வ கட்சிக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னதாக உரிய விசாரணை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அங்கீகாரம் பெற்ற சங்கத்திலுள்ளவர்கள் அடிக்கின்ற கொள்ளையைப் பற்றியெல்லாம் சொன்னேன். முகவை மாவட்டத்திலேயிருந்து கல்வியமைச்சர் அவர்களுக்குக்கூட புகார் வந்திருக்கிறது. தமிழ் நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி பொதுச் செயலாளர், இராமநாதபுர மாவட்ட கல்வி அலுவலர் அலுவலகத்தை ஆட்சி செலுத்துகிறார். அவ்வதிகாரி நீதியாக நேர்மையாக ஆசிரியர் நியமனத்துக்கான இண்டர்வியூ செய்ய வில்லை, ஆசிரியர்களுடைய நியமனத் தேர்வில் ஊழல் நிறைந்திருக்கிறது. அவர் பல்வேறு நிலைகளிலே ஊழல் செய்திருக்கிறார் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1974ஆம் ஆண்டில் தேர்ச்சியுற்ற ஆசிரியர்களுக்கு வேலை கொடுக்கவில்லை. 1976, 1977, 1979 ஆம் ஆண்டுகளிலே தேர்வுற்றவர்களுக்கு வேலை அளிக்கப்பட்டிருக்கிறது. போட்டிக்கு வருபவரிடம் தொடக்கப்பள்ளி ஆசிரியர் பொதுச் செயலாளரின் பெயரைக் கூறி அந்த அதிகாரி அவரை போய்ப்பார் என்று சொல்லுகிறார். அங்கே போனால் 300 ரூபாய், 50 ரூபாய், ஆயிரம் ரூபாய், இரண்டாயிரம் ரூபாய் என்று தரத்திற்கேற்ப கூட்டணி பொதுச் செயலாளர் கேட்கிறார். கேட்டதைப் பெற்றுக்கொண்ட பிறகு சட்டத்திற்கு புறம்பான முறையில் நியமனம் செய்யப்படுகிறது. இதுபற்றி கல்வியமைச்சருக்குக்கூட புகார் வந்திருக்கிறது. அந்தப் புகாரை மக்கள் நல முன்னணி, இளைஞர் நல மன்றம், அகமுடையார் சங்கம், முஸ்லீம் சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் அனுப்பியிருக்கிறார்கள். அங்கீகரிக்கப்பட்ட சங்கம் இப்படியெல்லாம் கொள்ளையடித்தாலும் நடவடிக்கை எதும் இருக்காது என்று நான் எண்ண இடம் அளிக்கலாமா? அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாமா? அவர்கள் மீது இன்றுவரை நடவடிக்கை எடுக்காதது காரணம் என்ன என்பதைக் கேட்க விரும்புகிறேன்.



1982 பிப்ரவரி 5]　　[திரு. க. மீனாட்சிசுந்தரம்]

மூன்று தவணை அகவிலைப் படியை ஏப்ரல் 1 ஆம் நாள் முதல் மத்திய
அரசு ஊழியர்களுக்கு வழங்கப்போவதாக அறிவிப்பு வந்திருக்கிறது. ஆளுநர்
உரையில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பெயரே இடம் பெறவில்லையே.
அகவிலைப்படி வழங்குவது பற்றிப் பரிசீலிக்கப்படும் என்றாவது ஒரு
வார்த்தை அதில் வந்திருந்தால் ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் மன
மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள். ஆகவே அந்த அகவிலைப் படியை வழங்க
வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன்.

போனஸ் கோரிக்கையை வைத்திருக்கிறோம். இப்போது வீட்டு வசதி
வாரியத்தில் ஊழியர்களுக்குப் போனஸ் வழங்குகிற நிலையை அரசு ஏற்படுத்தி
யிருக்கிறது. அதை மற்றவர்களுக்கும் விரிவாக்க வேண்டும். அனைவருக்கும்
தர வேண்டும். போனஸ் வழங்கும் அந்தத் திட்டத்தை அனைவருக்கும் விரிவாக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஓய்வு பெற்றால் பத்தாயிரம் ரூபாய் வழங்குவது குறித்து பரிசீலனை செய்ய
மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது.
அக்குழு ஒரு முறை கூடியதாக தகவல் தரப்பட்டது. அதனுடைய முடிவு
என்னவாயிற்று என்று தெரியவில்லை. நிதிநிலை அறிக்கை வருவதற்குள்ளா
வது அதை அமலாக்க முயற்சிக்க வேண்டுமென்று வேண்டுகோள்
விடுக்கிறேன்.

சென்ற ஆண்டு அரசினரால் வெளியிடப்பட்ட சாதனை மலரில், ஆசிரியர்
களுக்கென்று வீட்டு வசதி வாரியம் அமைக்கப்பட்டு விட்டதாகவும், தனியார்
பள்ளி ஆசிரியர்களுக்கு நேரடி ஊதியம் வழங்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டு
விட்டதாகவும் பார்த்தேன். இன்றைக்கு சாதனையும் செய்யவில்லை,
எதுவுமே செய்யவில்லை. வீட்டு வசதி வாரியம் அமைக்கப்படவில்லை.
தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு நேரடியாக ஊதியம் வழங்கும் திட்டம் முறை
மையாக நடைபெறவில்லை. ஆகவே செய்யாத சாதனைகளை விளம்பரத்திற்
காக செய்ததாக விளம்பரம் செய்தால், அதற்கான செலவை யார் ஏற்பது?
இப்படி தவறான தகவல்களை விளம்பரத்திற்காக செய்திருப்பதை,
வன்மையாகக் கண்டிக்கிறேன். அந்த இரண்டு சலுகைகளையும் இனியாவது
உடனடியாக அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூடுதல் ஊதிய உயர்வு இப்போது பயிற்சிக்கேற்ப தரப்படுகிறது.
1—6—1981 முதல் ஈராண்டு பயிற்சி பெற்றவர்களுக்கு இது தரப்படுகிறது.
இடைநிலை ஆசிரியர்கள் ஓராண்டு பயிற்சி பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்குத்
தரப்படுவதில்லை. இரண்டாண்டு பயிற்சி பெற்ற சிறப்பாசிரியர்கள் எல்லா
நிலைகளிலும் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் கூடுதல் ஊதியம்

இல்லையென்ற முரண்பாடு இருக்கிறது. இந்த முரண்பாட்டைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எல்லா நிலை ஆசிரியர்களுக்கும் அந்தக் கூடுதல் ஊதியஉயர்வை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

ஆசிரியர் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி வேண்டும் என்று சொல்லி எல்லா நிலை ஆசிரியர்களுக்கும் வழங்க வேண்டுமென்ற கோரிக்கை நாங்கள் வைத்து, தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டும் உண்டு என்று அரசு சொல்லி நாங்களும் விண்ணப்பம் அனுப்பியுள்ளோம். தேசிய நல நிதியிலிருந்து வழங்கப்படும் என்று சொன்னார்கள். தேசிய நல நிதியில் நிதியில்லை. நாங்கள் எங்கிருந்து வழங்குவது என்று அத்துறையினர் சொல்லியிருக்கிறார்கள். இப்படி விளம்பரத்திற்காக ஆசிரியர் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, உண்மையாக அது நிறைவேற்றப்படவில்லை. ஆகவே இந்தச் சலுகையை எல்லா ஆசிரியர்களின் குழந்தைகளுக்கும் எந்தவித நிபந்தனையுமின்றி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தலைமையாசிரியர்கள் பதவி உயர்வு வேண்டாமென்றால், அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய செலக்ஷன் கிரேட், ஸ்பெஷல் கிரேட் தரக்கூடாது என்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. செலக்ஷன் கிரேட், ஸ்பெஷல் கிரேட் ஆகியவை பணிக்கால அடிப்படையில் வழங்கப்படுவது. இதற்கும் பதவி உயர்வுக்கும் எந்த விதமான தொடர்பும் கிடையாது. ஆகவே அந்த உத்தரவைத் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியத் தேர்தல் நடைபெறப் போகிறது என்று கருதி பல ஆசிரியர்கள் பணியைத் துறந்துவிட்டு வேட்பாளர்களாக மனு தாக்கல் செய்தார்கள். ஆனால் இன்றைக்கு தேர்தலும் நடைபெறவில்லை. அவர்களின் பணியும் போயிற்று. அவர்களுடைய நிலை என்ன? மீண்டும் அவர்களுக்குப் பணி கொடுக்கப்படுமா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் தேர்தலை நடத்தப் போவதாகத் தெரியவில்லை ஆகவே அவர்களுக்கும் பணியாவது கொடுத்தால், நலமாக இருக்கும்.

கர்நாடக மாநிலத்தில் பயிற்சி பெற்ற இடைநிலை ஆசிரியர்களை தற்போது இங்கே பணிக்கு எடுத்துக்கொள்வதில்லை. ஆனால் அங்கே பயிற்சி பெற்ற டாக்டர்கள், பொறியியல் வல்லுநர்கள் ஆகியவர்களை மற்ற துறைகளில் ஏற்றுக்கொள்கிறார்கள். இதனால் ஆசிரியர்கள் இங்கே பாதிக்கப்படுகிறார்கள். அங்கே உள்ளவர்கள், நம் மாநிலத்தில் பயிற்சி பெற்று செல்பவர்களுக்குப் பணி தராமல் தடுக்கும் நிலை உருவாகும். ஆகவே அந்த ஆணையைத் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



"சுதந்திரம்", "சமத்துவம்", "உடன் பிறப்பு உணர்வு" ஆகியவைகள் எல்லாம் ஏட்டளவில் இல்லாமல், எழுதிக் கொடுத்ததைப் படித்தது போல் இல்லாமல், உண்மையிலேயே செயல்படுத்துகிற வகையிலே இருக்க வேண்டும். காந்தியடிகள் சுதந்திரம் பெறுவதற்காக உண்ணாவிரதம் இருந்தார்கள். இப்போது நம் நாட்டில் உண்ணாவிரதம் இருப்பதற்கே கூட சுதந்திரம் இல்லை. அரசு அவர்களைக் கைது செய்கிறது. ஒருவன் பட்டினி கிடக்கிறேன் என்று சொன்னால் கூட அதற்கு அவனுக்குச் சுதந்திரம் இல்லை. இது விசித்திரமாக இல்லையா! அப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்து ஆசிரியர் பெரு மக்கள் அரசு ஊழியர்கள் ஆகியவர்களுடைய வேண்டுகோள்களை நிறைவேற்றுவதோடு, அவர்களுக்குப் பாதுகாப்பும் தர வேண்டுமென்று சொல்லி, நான் சுட்டிக்காட்டிய குறைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி இந்த அளவோடு அமைகிறேன்.

(முற்பகல் 11-40)

**திரு. காடுவெட்டி கண்ணப்பன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே இருக்கும் ஆன்றறிந்த மூத்த பெருமக்கள், அறிஞர் பெருமக்கள் எல்லாம் இங்கே தரப்பட்டிருக்கின்ற ஆளுநர் உரையின் மீது தங்களுடைய விவாதங்களைத் தொடுத்து சில அங்கத்தினர்கள் ஆலோசனை கூறினார்கள். சிலர் அதிலே இருக்கின்ற குறைபாடுகளைச் சொல்வது போலச் சொல்லி, புதிதாக பல குற்றங்களைக் கண்டுபிடித்து இங்கே எடுத்து வைத்தார்கள். இங்கே இப்போது எனக்கு முன்னாலே பேசிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் முழுக்க முழுக்க ஆசிரியர்களைப் பற்றியே பேசித் தீர்த்துவிட்டார்கள். நான் அவர்களைப் பார்த்து பணிவோடு சொல்வதெல்லாம் இங்கே மாண்புமிகு அங்கத்தினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் ஆசிரியர்கள் தரப்பின் ஒட்டுமொத்தமான ஒரு பிரதிநிதியாக இருந்து பேசினார்களா அல்லது தன்னை ஆதரிக்கின்ற [illegible] அவருக்குச் சாதகமாக இருக்கின்ற மன்றத்தை ஒட்டிய ஆசிரியர் [illegible] சாதகமாகப் பேசினார்களா என்று என்னாலே புரிந்துகொள்ள முடியவில்லை. ஆசிரியர்கள் படுகின்ற கொடுமைகளைப் பற்றியும் அவர்களுக்குச் செய்கின்ற தவறுகளைப் பற்றியும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஆசிரியர் [illegible] அவர்களுக்குச் சாதகமாக இருக்கின்ற ஆசிரியர்கள் படுகின்ற தொல்லைகளைப்பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். அவருக்குச் சாதகமான ஆசிரியர்கள் சென்ற சில இடங்களிலே நடந்த அசம்பாவிதங்களில் தாக்கப்பட்டார்கள் என்பதைத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். ஆசிரியர்களைச் சொன்னால், தாய், தந்தை, குரு என்று சொல்வார்கள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் இறுதியாக கோரிக்கைகளை வைத்துப் பேசியது அனைத்து ஆசிரியர்களுக்கும் பொருந்தும் என்பதை உறுப்பினர் அவர்கள் உணருவார்கள் என நம்புகிறேன்.

திரு. காடுவெட்டி கண்ணப்பன் : தாய், தந்தை, குரு என்று சொல்வார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஆசிரியர்களுக்கு மூன்றாம் இடத்தினை வைத்து வணங்குகின்ற பேறு பெற்றவர்களாக மதிப்புக் கொடுத்து வருகின்றோம். தமிழகத்தில் ஆசிரியர்களுக்கு எந்த அளவுக்கு அந்தஸ்தினைக் கொடுக்கிறோம் என்பது, 'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும், பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே' என்ற பாடலில் தெரியும். அந்த ஆசிரியப் பெருந்தகைகளின் சிறப்பை தமிழகம் ஒரு காலத்திலே உச்சாணிக் கொம்பிலே வைத்திருந்தார்கள். அதற்கான வரலாறு இந்த நாட்டிலே ஏராளமாக இருக்கிறது. ஆனால் தமிழகத்திலே உள்ள ஆசிரியர்கள் பெருமக்கள் எல்லாம் கெட்டவர்கள் என்று நான் சொல்ல மாட்டேன். அதே போல ஆசிரியப் பெருமக்கள் எல்லாம் நல்லவர்கள் என்றும் நான் சொல்ல மாட்டேன். இரண்டு தரப்பிலும் நியாயம் இருக்கலாம், தவறுகளும் இருக்கலாம் என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் உணர்ந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். சில இடங்களிலே காவல் துறை சில ஆசிரியர்களைத் துன்புறுத்தியதாகச் சொன்னார்கள். இதிலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நாம் ஆசிரியர்களை மூன்றாம் இடத்திலே வைத்திருக்கிறோம். அப்படி [illegible] நிலையில் வைக்கப்பட்டிருக்கின்ற ஆசிரியப் பெருமக்களே கூட சில தவறுகளைச் செய்திருக்கிறார்கள் என்பதை இந்த அவையிலே சொல்லிக் கொள்கிறேன். 'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும், பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே' என்று சொல்லி உச்சமான அந்தஸ்திலே வைத்து, ஆசிரியப் பெருமக்களை மூன்றாம் இடத்திலே வைத்துப் பார்க்கக்கூடிய அவர்களில் சிலர் இப்படி தவறுகளைச் செய்கிறார்கள். நான் எல்லோரும் அப்படிச் செய்கிறார்கள் என்று சொல்ல மாட்டேன். சிலர் செய்திருக்கிறார்கள். அதையெல்லாம் இங்கே சொல்வதற்குக் கூச்சப்படுகிறேன். அவ்வளவு அசிங்கமான காரியங்களைச் செய்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த அவையிலே சொல்லக் கூட பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். மாண்புமிகு அங்கத்தினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் எடுத்துச் சொன்ன [illegible] சமுதாயத்திற்கு வழிவாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். நான் பச்சையாகச் சொல்ல வேண்டுமானால், ஆசிரியர்களை நம்பி நாம் பிள்ளைகளை [illegible] ஆசிரியர்களிடம் ஒப்படைக்கிறோம்.



திரு. க. மீனாட்சிசுந்தரம் : இப்போது நான் ஒரு கருத்தைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எம்.எல்.ஏ.-க்கள் எம்.எல்.சி.க்கள், அமைச்சர்கள் இவர்களிலேகூட சிலர் அவ்வாறு இருக்கலாம். இருக்க முடியாது என்று சொல்ல முடியாது.

திரு. காடுவெட்டி கண்ணப்பன் : ஆனால் ஆசிரியர்கள் யார் ? அதைத் தான் நான் இப்போது சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : ஆசிரியர்களும் மனிதர்கள்தான். அவர்களும் தொழில் செய்பவர்கள்தான். ஆசிரியர்களுக்கு மரியாதை எங்கே இருக்கிறது என்பதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் ஆசிரியர்களில் சிலர் என்று சொல்கின்றார்கள். அந்த சிலர் பலர் என்ற அளவுக்கு ஆகக்கூடாதே என்பதற்காகத்தான் சொல்கின்றார்.

திரு. எஸ். ஆர். இராதா : அங்கத்தினர் அவர்கள் எம்.எல்.ஏ., எம்.எல்.சி.க்களில் கூட இருக்கலாம் என்று சொல்கிறார்கள். அதுதான் மோசம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : நான் ஆசிரியர் சமுதாயத்தைப் பற்றித்தான் சொன்னேன். ஒட்டுமொத்தமாகச் சொல்லவில்லை.

திரு. காடுவெட்டி கண்ணப்பன் : சில ஆசிரியர்கள் என்று அவரே சொல்லியிருக்கிறார். தனக்கு வேண்டாதவர்கள் தவறு செய்திருக்கிறார்கள், அதற்கு இந்த அரசு துணை போகிறது என்று சொன்னார். அவரே தன் மன்றத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்குத் தவறு நடந்திருக்கிறது என்று முதலிலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் ஆசிரியர்கள் தவறே செய்யக்கூடாது என்று சொல்லவில்லை, சில தவறுகளை ஆசிரியர்கள் செய்திருக்கிறார்கள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : முன்னவர் அவர்கள் குறுக்கிட வேண்டாம் என்பதற்காக உட்காரச் சொல்கிறார். இப்போது என்னுடைய பேச்சுக்கு அங்கத்தினர் அவர்கள் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : உங்களுடைய பேச்சிலே குறுக்கிடவே வேண்டாமென்று சொல்லியிருந்தால், அது சரியல்ல. உறுப்பினர் அவர்கள் குறுக்கிட வேண்டாமென்று யாரும் இப்போது சொல்லவில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** ஒருவர் மன்றத்தைச் சேர்ந்தவர் என்பதற்காகவோ மற்றவர் வேறு இயக்கத்தைச் சேர்ந்தவர் என்பதற்காகவோ நான் அப்படிச் சொல்லவில்லை, நடுநிலைமையாகத்தான் பேசினேன். மல்லிப்பட்டினம் ஆசிரியர் மன்றத்தைச் சேர்ந்தவர், வாடிப்பட்டி ஆசிரியை கூட்டணியைச் சேர்ந்தவர். நான் அனைவருக்காகவும் தான் பேசினேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** சில ஆசிரியர்கள் செய்த தவறுகளுக்காக உறுப்பினர் அவர்கள் எழுந்து நிற்காமல் இருப்பது அவர்களுக்குப் பெருமையைத் தரும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** நான் பேசி முடித்ததற்குப் பின்னர் உறுப்பினர் குறுக்கிட விரும்பினால் குறுக்கிடலாம். நான் சொல்வது சில நேரங்களில் ஆசிரியர்கள் தாக்கப்படுகிறார்கள். சமுதாயத்திலே பல இடங்களிலே பல சமயங்களிலே மக்களும் தாக்கப்படுகிறார்கள். இதை நாம் உணர்ந்தேயாக வேண்டும். சில இடங்களில் காவல் துறையினர் அடிக்கப்பட்டிருக்கிறார்கள். மக்களின் உடைமைகளுக்கு, மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கவேண்டியவர்களே தாக்கப்படுகிறார்கள். ஆசிரியர்கள் என்று சொன்னால், அவர்கள் எல்லோருமே ஒரு மேல் நிலையிலே வைத்துப் பார்க்கப்படவேண்டியவர்கள். அவர்கள் தான் தாழ்ந்து போகின்றார்கள். அப்படித் தான் தாழ்ந்து தவறு செய்பவர்களைத் தண்டித்துத்தான் ஆக வேண்டும். அதுதான் சட்டம், நியாயம். அவர்கள் மேலான ஸ்தானத்தில் இருப்பவர்கள். குரு ஸ்தானத்தில் இருப்பவர்கள். மூன்றாம் ஸ்தானத்தில் இருப்பவர்கள் அந்த மூன்றாம் இடத்திலே வைக்கப்பட்டு வணங்கப்படுபவர்கள். அவர்கள் தவறு செய்தால் தண்டிக்கக்கூடாது என்பது தவறு. அது ஒரு தவறான வர்தமாகும். நான் பெயர்களைச் சொல்லக்கூடாது. ஆரம்பத்திலேயே சில பள்ளிகளில் நடந்த கொடுமைகளைச் சொல்ல விரும்பவில்லை. ஆசிரியர் பெருமக்கள் பற்றி, 'உற்றுழி உதவும் உறுபொருள் கொடுத்தும் பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே' என்ற அரிய பாட்டை கடந்த காலத்தில் நெடுஞ்செழியன் பாடியிருக்கிறார்கள். அத்தகைய பெருமையுள்ள ஆசிரியப் பெருமக்களை நம்பித்தான், அவர்கள் மீது வைத்திருக்கின்ற மரியாதை காரணமாகத் தான் நம் வீட்டிலே இருக்கின்ற பிள்ளைகளை, பெண்களை நாம் அனுப்பி வைக்கிறோம். சில இடங்களில் செய்த கொடுமைகளை நான் விரிவாகச் சொல்லவேண்டுமானால், இங்கே தலைவர் அவர்கள் அனுமதித்தால் யார் அப்படிச் செய்தார்கள் என்பதைக்கூட எடுத்துக் காட்ட முடியும். இதை நான் விளையாட்டாகச் சொல்லவில்லை. இப்படி பல குற்றங்கள் நாட்டில் நடந்துகொண்டிருக்கின்றன. இந்தக் குற்றங்கள்





நடக்கவில்லை என்று யாரும் சொல்ல முடியாது. சொல்ல முடியாத அளவுக்கு குற்றங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. நான் மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்வதெல்லாம் இரண்டு தரப்பிலேயும் நின்று பாருங்கள். ஒரு தரப்பிலேயே ஒரு முடிவை அங்கத்தினர் அவர்கள் எடுத்துவிட்டால், அதையே ஒரு முடிந்த முடிவாக எடுத்துக்கொள்வது அவ்வளவு சிறப்பாக இருக்காது.

இந்த ஆளுநர் உரையில் மிகப் பெரிதான நல்ல காரியங்களைப் பற்றி சிலர் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்திய தேசிய காங்கிரசைச் சேர்ந்த அருமை நண்பர் திரு. வ. ஜெ. தாஸ் அவர்கள் தமிழ் நாட்டிலே சட்டம் ஒழுங்கு எந்த நிலையிலே இருக்கிறது என்பதைச் சந்தேகத்தோடு சொல்லியிருக்கிறார்கள். நேற்று முன்தினம் பேசிய மதிப்பிற்குரிய திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் கூட தமிழகத்திலே சட்டம் இருக்கிறதா, நீதி இருக்கிறதா என்று இங்கே விவாதத்தைக் கிளப்பியிருக்கிறார்கள். நான் அவர்களுக்கு மெத்த பணிவோடு சொல்வேன். 'கிரைம்ஸ் இன் இந்தியா' என்ற புத்தகம் ஆண்டுக்கு ஒரு முறை வெளியிடப்படுகிறது. 1971ஆம் ஆண்டு அகில இந்திய அடிப்படையில், தமிழகம் குற்றப்பிரிவில் 10-ம் இடத்திலே இருந்தது. ஆனால் 1975ஆம் ஆண்டு ஆட்சியில் 7ஆம் இடத்திலே தள்ளப்பட்டது என்பதை நான் இங்கே கோடிட்டுக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோலவே 1971 ஆம் ஆண்டு இந்திய அளவில் மொத்த குற்றங்கள் குறியீடு எண் 144 அன்றைக்கு இருந்தது. நான் முதலிலே சொன்னதுபோல் 1975 ஆம் ஆண்டு குற்றம் குறியீடு எண் 193 ஆக உயர்ந்தது. இதை நான் இப்போது கோடிட்டுக் காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். அதுபோலவே 31—8—1981-ல் இந்துஸ்தான் டைம்ஸ் பக்கம் 1, காலம் 4-ல் டெல்லியில் குற்றங்கள் என்ற தலைப்பின் கீழ் 'டெல்லி' என்று இருந்தது. இப்படி ஒவ்வொரு நகரமாகக் குற்றங்களைக் கணக்கிட்டுச் சொல்லி, இந்தியாவிலேயே சென்னை ஒன்று தான் குற்றம் குறைவாக உள்ள நகரம் என்பதை 'இந்தியன் டைம்ஸ்' என்ற பத்திரிகையிலே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நேரத்திலே

(முற்பகல் 11-50.)

நான் டெல்லியை உற்று உற்றுப் பார்க்கிறேன். சென்னையைவிட கொலைகளாக இருந்தாலும், கற்பழிப்புகளாக இருந்தாலும், மற்ற எந்தவகைய குற்றங்களானாலும் தலைநகரிலேதான் அவை தலையாய இடத்தைப் பெற்றிருக்கின்றன என்று சொல்லிக்கொள்வது பொருத்தமாக இருக்கும்.

[illegible] [1982 பிப்ரவரி 5

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்துஸ்தான் [illegible] பத்திரிகையில் [illegible] சொல்லுகிறார்கள். இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் [illegible] நடந்திருந்த கொடுமைகள், சட்ட ஒழுங்குப் [illegible] வைத்து, ஓட வைத்துச் சுடுகின்ற [illegible] தமிழகத்திலேதான் நடக்கின்றன என்று செய்தி வந்திருக்கிறது. இந்தியா முழுமையிலும் அதிகமாக விற்பனையாகும் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் அப்படிச் செய்தி வந்திருக்கிறதென [illegible] தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : டெல்லியிலே இப்படி நடக்கிறதென்று டெல்லியிலிருந்து வரும் இதழில் வருகிறது. பஸ் ஸ்டாண்டுகளில் போக முடியாது, குண்டர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கு அரசியல்வாதிகளின் ஆதரவு இருக்கிறதென்று அங்கிருந்து வரும் பத்திரிகைகளில் வருகின்றன. அவற்றை மாண்புமிகு உறுப்பினரவர்கள் படிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : சென்னையிலிருந்து வெளிவரும் பத்திரிகை 'இந்தியன் எக்ஸ்பிரஸ்'. இதற்கு இந்தியா முழுவதும் விநியோகமுண்டு. இந்தப் பத்திரிகை இங்கேயுள்ள தகவல்களைத் தந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : பத்திரிகையிலே வரக்கூடிய விஷயங்கள்பற்றி ஒரு கருத்து. சில நேரங்களில் 'லெட்டர் டு தி எடிட்டர்'-ஐக்கூட பத்திரிகையில் வந்த கருத்தாகச் சொல்லிவிடுகிறார்கள். பத்திரிகையின் உண்மையான கருத்து என்பது வித்தியாசமானதாக இருக்கும். மராட்டிய மாநிலத்தில் அருண் ஷவுரிக்குக் கிடைத்த வரவேற்பு திரு. இராமமூர்த்தி அவர்களுக்குத் தெரியும். ஜனநாயக அமைப்புகளைப் பயன்படுத்தி நிருபர்களை அச்சுறுத்தும் நிலைமை தமிழகத்தில் நடைபெறவில்லை என்பதும் உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். சில சம்பவங்களை, ஒன்றை இரண்டாகக் காட்டி, இதுதான் சட்டம் ஒழுங்குக்கு அடிப்படை என்றால், அதை யாரும் எடுத்துக்கொள்ள மாட்டார்கள். குறிப்பாக தென் மாநிலங்களில் அமைதியான மாநிலமாகத் தமிழகம் இருக்கிறது. வட மாநிலங்களில் நடைபெறுவதில் கால்வாசிகூட இங்கே நடைபெறவில்லை என்பது யதார்த்தமான கருத்து என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லுவதை வாதத்திற்கு ஒப்புக்கொள்வதாக இருந்தாலும், இவ்வளவும் அனுபவித்த பத்திரிகை. அதற்குப் பிறகு சொல்லுகிறது. தமிழகத்தில் நடக்கும் இந்தக் கொடுமை வேறு எங்கும் நடக்கவில்லை என்று . . .



[1982 பிப்ரவரி 5]

[illegible] டெல்லி என்று கூறுவதாலே, [illegible] சிக்கப்பட வேண்டாம்.

திரு. எஸ். ஆர். இராதா : 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் வரும் [illegible] கருத்துக்களையும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் [illegible]றாரா ?

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருக்குச் சாதகமான பத்திரிகையை மட்டுமே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நினைக்கிறார். உலகில் மற்ற பத்திரிகைகளும் [illegible] ஏற்கிறார்களா ? இல்லையா ?

[illegible] மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் [illegible] இந்தியாவில் எந்த நகரத்தில் அதிகமான குற்றங்கள் [illegible] என்று புள்ளி விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன என்று சொல்லி, [illegible] புள்ளி விவரங்கள் வந்த பத்திரிகையின் பெயரைச் சொன்னாரே தவிர, [illegible] பத்திரிகையின் கருத்து என்று சான்று காட்டிப் பேசவில்லை. புள்ளி விவரம் சரியா, தவறா என்பதைக் கூற முன்வர வேண்டும். டைம்ஸ் ஆஃப் இந்தியா கருத்தாக வந்து, அதை ஆதரித்து மாண்புமிகு உறுப்பினர் பேசுவதாக மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் எடுத்துக்கொண்டு, டெல்லி என்ற பெயரைக் கேட்டவுடனேயே அவர்கள் அதில் [illegible] பத்திரிகையில் [illegible] என்று கேட்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்களும், [illegible] கருத்துக்களை உறுப்பினர் அவர்கள் ஏற்றுக்கொள்கிறாரா என்று கேட்டார். அவர்கள் எடுத்துக் காட்டியது [illegible] எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் [illegible] கட்டுரை [illegible] எடுத்திருக்கும் [illegible] ஆராய்ச்சிக் கட்டுரை. இது உண்மையா, தவறா [illegible] விஷயம். 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையிலே [illegible] வந்திருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் [illegible] புள்ளி விவரம்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு [illegible] அமைச்சரவர்களுக்குத் தெளிவாகத் தெரியும். பத்திரிகைகளிலுள்ள புள்ளி விவரங்களைப் [illegible] அவற்றை [illegible] பலமுறை நமக்கு [illegible]. [illegible] ஆனால் பத்திரிகைப் [illegible] புள்ளி [illegible] தெரியும். ஆகவே முடிந்த முடிவாகாது அது. [illegible]

மாண்புமிகு உறுப்பினருக்குச் சொன்னேனே தவிர, வேறு ஒன்றுமில்லை. பொதுவாக இந்தியாவிலே உள்ள மாநிலங்களின் தலைநகரங்களுக்கு நான் பொறுப்பு என்பதல்ல . . . .

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** ஒரு நல்ல கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். புள்ளி விவரங்கள், பத்திரிகையில் வருவது சரியா, தவறா என்பது நாம் ஆராய வேண்டிய ஒன்று என்று சொல்லும்போது, பத்திரிகையில் எழுதும் கட்டுரைகளை நம்பி எப்படி நாம் ஒரு முடிவிற்கு வர முடியுமென்பதை எடுத்து வைத்த வாதத்தின்மூலம் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

* **திரு. க. இராமமூர்த்தி :** புள்ளி விவரங்கள் சேகரிக்க பணத்தைச் செலவிட்டு, அவர்களுடைய நிருபர்களை அனுப்பி சேகரிக்கிறார்கள். அது போன்றுதான் கட்டுரைகளையும் நிருபர்களை அனுப்பி, நேரத்தைச் செலவிட்டு, பணத்தைச் செலவிட்டு, பத்திரிகைகளில் எழுதுகிறார்கள். எனவே, புள்ளி விவரங்களுக்கு என்ன மரியாதையோ அதே மரியாதைதான் கட்டுரைகளுக்கும் உண்டு.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** நாம் இப்போது அதிகமாக நேரத்தைச் செலவிட்டுக்கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** துப்பாக்கியை எடுத்துக்கொண்டு, பத்து அரிசனங்களை வட மாநிலம் ஒன்றில் சுட்டார்கள் என்று 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது . . .

* **திரு. க. இராமமூர்த்தி :** மற்ற மாநிலங்களில் இருப்பதைக் குறிப்பிட்டுச் சொல்வதாகச் சொல்கிறேன். அந்த மாநிலங்கள் இருந்த நிலைமையிலிருந்து வளர்ந்து வந்திருக்கின்றன. அவர்கள் எப்படி குற்றங்கள் நிகழ்வதைத் தவிர்த்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். ஆனால் தமிழ் நாட்டில், சட்டம் ஒழுங்கு நிலைமை எப்படி குறைந்து தாழ்ந்திருக்கிறது அல்லது உயர்ந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டினால் நன்றாக இருக்கும். மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுத் திருப்திப்படுவதென்பது தன்னைக் [illegible] வழியாகும்.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** நாமெல்லாம் ஒன்றுபட்ட இந்தியா இருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறோம். இந்த நிலையில் கன்னியாகுமரியில் குறைத்துக்கொண்டோமா அல்லது கூட்டிக் [illegible] என்பதல்ல. [illegible] காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரி வரையில் பார்க்க வேண்டும்.



**திரு. க. இராமமூர்த்தி :** இந்தியா போன்ற பெரிய நாட்டிலே சில துறைகளிலே நாம் வளர்ந்திருக்கிறோம். சில துறைகளிலே குறைந்திருக்கிறோம். தற்போதைய பிரச்சினை, சட்டம் ஒழுங்கு தமிழ் நாட்டில் எப்படி இருந்தது, அது இப்போது எந்த அளவிற்குச் சீர்குலைந்திருக்கிறது என்பதுதான். அந்தக் கோணத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர்களுடைய புள்ளிவிவரத்தைச் சொன்னால், நன்றாக இருக்கும்.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** பத்திரிகையிலே தனிப்பட்டவர்களுடைய விமர்சனத்தை வைத்து நான் சொல்லவில்லை. மத்திய அரசினுடைய உள்துறை அமைச்சகத்தின் புள்ளிவிவரம் இது. இந்தியன் எக்ஸ்பிரஸ், டைம்ஸ் ஆஃப் இந்தியா, இந்து போன்ற பத்திரிக்கைகளின் கருத்தல்ல. ஒரு கட்சியைச் சார்ந்தவர்கள், ஒரு இனத்தைச் சார்ந்தவர்கள் எழுதியதாகச் சொல்லவில்லை. நான் சொல்லுகின்ற புள்ளிவிவரம் மத்திய உள்துறை அமைச்சகம் கொடுத்துள்ளதாகும். எனவே அது தனிப்பட்ட பத்திரிகை ஆசிரியர் கொடுத்ததாகாது. சிலர் நடுநிலைமை என்று சொல்லுகிறார்கள். எந்த அர்த்தத்தில் அவ்வாறு சொல்லுகிறார்கள் என்பது புரியவில்லை. ஒரு கட்சியிலே இருந்துகொண்டு, நடுநிலைமை என்று பத்திரிகையிலே தலைப்பிட்டு, பத்திரிகை வெளியிடுகிறார்கள். அது எனக்குப் புரியவில்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் அதற்கு ஏதாவது அர்த்தம் சொன்னால், பரவாயில்லை. . . .

**திரு. க. இராமமூர்த்தி :** நடுநிலைமை பற்றிய பேச்சு நான் பேசியதாகத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஏதோ பிரமையில் இருப்பதாக நினைக்கிறேன்.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** காலைப் பத்திரிகை, மாலைப் பத்திரிக்கைகள் வெளிவருகின்றன. நடுநிலைமை ஏடு என்று ஒன்று வருகிறது. ஆனால் அதை நடத்துகிறவர்கள் தனிப்பட்ட இயக்கத்தை நடத்துகிறவர்கள். அந்தப் பத்திரிக்கையிலே அவர்களைப் பற்றியே முழுக்க முழுக்க வருகிறது. இந்த நிலைமையிலே நடுநிலைமை என்றால் என்ன என்றே புரியவில்லை. . .

(நண்பகல் 12-00)

**திரு. ம. சங்கரலிங்கம் :** அவர்களைப் பற்றி இவர்கள் சொல்லவில்லை என்று சொல்லிவிட்டார்கள். அவர்களும் இவர்களைப்பற்றிச் சொல்லவில்லை என்று சொல்லிவிட்டார்கள். (சிரிப்பு) பத்திரிக்கையின் பெயரை மாண்புமிகு உறுப்பினர் சொல்லிவிட்டால், விளக்கம் சொல்ல வாய்ப்பாக இருக்கும்.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** அவசியம் ஏற்படும்போது சொல்கிறேன். இப்போது அவசியமில்லை. (சிரிப்பு)

[1982 பிப்ரவரி 5

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** ஊர் பெயரைச் சொன்னாலே போதும்.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** சென்னையிலிருந்து தான் வந்து கொண்டிருக்கிறது.

அடுத்து, நாட்டிலே சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது என்று சொல்கிறார்கள். நாட்டிலே இன்றையதினம் நெடும் பயணத்தைத் தொடங்குகிற கட்சியைக் கூட பார்க்க முடிகிறது. இதைப் பார்க்கும்போது தென்சீனாவின் ஞாபகம் தான் உடனே வருகிறது. ஒரு காலத்திலே மாவோ அவர்கள் சீனாவில் 'லாங் மார்ச்' என்று சொல்லக்கூடிய நெடும் பயணத்தைத் தொடர்ந்தார்கள். எண்பது கோடி மக்களுடைய விடுதலைக்காக 'லாங் மார்ச்' என்று சொல்லக்கூடிய நெடும் பயணத்தை திரு. மாவோ அவர்கள் நடத்திக் காட்டினார்கள். ஏதோ தங்களையும் மாவோவுடன் இணைத்துக்கொள்வதாக நினைத்து, இங்கேயும் நெடும் பயணம் போகிற கட்சியை என்னால் பார்க்க முடிகிறது. எனக்கு இருக்கிற அச்சம் எல்லாம் தயவுசெய்து அந்தத் தலைவருடைய பெயருக்கு மாசு கற்பித்து விடாதீர்கள் என்பது தான். பேரறிஞர் அண்ணா ஒன்றைச் சொல்வார். செஞ்சிக்கோட்டையில் ஏறியவர்கள் எல்லாம் ராஜா தேசிங்கு ஆகிவிட முடியாது என்று சொன்னார் பேரறிஞர் அண்ணா. ஆகவே தான் சொல்கிறேன். 'லாங் மார்ச்' நடத்துகிறவர்கள் எல்லாம் மாவோ ஆகிவிட மாட்டார்கள். இங்கே ஒரு மாயையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். சாவதற்கு முன்பே சாவுச் சடங்கை நடத்திக் கொண்டிருக்கும் "சாவுச் சடங்கு" நாட்டிலே இன்றைய தினம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நான் பால் கமிஷனின் உள்ளே போக விரும்பவில்லை. நேற்றையதினம் மரியாதைக்குரிய திரு. சித்தாபதி அவர்கள் பால் கமிஷனைத் தொட்டு விட்டிருந்தார்கள். அவர்கள் அதைத் தொட்டுவிட்ட காரணத்தாலே நானும் தொட்டு விட்டுவிடுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இப்போது தொட்டுவிட வேண்டாம் ; பின்னால் வருகிறது. (சிரிப்பு)

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** 1952-வது ஆண்டு கமிஷன் சட்டப்பிரிவு 4-ன்படி அந்தக் கமிஷனுடைய அறிக்கையைச் சட்ட மன்றத்திற்குத் தர 6 மாத கால அவகாசம் இருக்கிறது. ஒருவர் சாவதற்கு முன்பே சாவுச் சடங்கு தேவைதானா ? 6 மாத கால அவகாசம் இருக்கும்போது அதற்காக சடங்கு வைத்து, நெடும் பயணம் செல்வது தேவைதானா ? சட்டம் ஒழுங்கு காப்பாற்றப்பட வேண்டும் என்பதில் இந்த அரசுக்கு தீவிரமான நாட்டம் இருக்கிறது. அது காப்பாற்றப்பட்டேயாக வேண்டும். அதிலே நம்பிக்கையுடையவர்கள்தான் நாங்கள்.



1982 பிப்ரவரி 5]

**திரு. ம. சங்கரலிங்கம் :** உறுப்பினர் நெடும் பயணம்பற்றிக் குறிப்பிட்டார். அது தேவை தானா என்றும் கேட்கிறார். அது தேவையில்லையென்று உறுப்பினர் கருதுவாரேயானால், நாங்கள் செல்கின்ற நெடும் பயணத்திற்குப் பின்னால் இவர்கள் வருவதாக ஏன் அறிவித்திருக்கிறார்கள் ? ஒன்று எங்களைக் கண்டு இவர்கள் அஞ்சி நெடும் பயணம் வர வேண்டும் அல்லது நெடும் பயணம் தேவை என்கிற எண்ணத்தில் வர வேண்டும். ஆகவே உறுப்பினர் தான் நெடும்பயணம் தேவையா இல்லையா என்பதைப்பற்றி யோசித்துச் சொல்ல வேண்டும். (சிரிப்பு).

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** மரியாதைக்குரிய உறுப்பினர் இங்கே நெடும் பயணம் தேவை தானா என்று என்னைப் பார்த்துக் கேட்கிறார்.

**திரு. க. இராமமூர்த்தி :** முருகன் அருள் பெற இரண்டு பேருக்கும் இன்றையதினம் நெடும் பயணம் தேவை. (சிரிப்பு)

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** நெடும்பயணம் தேவை தான். ஆனால் அதற்கான அடிப்படைக் காரணத்தில் நியாயம் இருக்கிறதா என்பது தான் பிரச்சினை. நாங்களாக அது தேவை என்று நிச்சயமாகச் சொல்ல மாட்டோம். நெடும்பயணம் என்றால், அது முடிந்து விட்டது என்று பொருள். (சிரிப்பு) அதிலுள்ள தமிழ் அர்த்தமே வேறு. நாங்கள் செய்திருக்கிற காரண காரியங்களை நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்காக பாத யாத்திரை நடத்துகிறோம். காந்தியடிகள் கூட பாத யாத்திரை நடத்தி காண்பித்திருக்கிறார்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** பாத யாத்திரை என்பது வட மொழிச் சொல்.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** நெடும் பயணம் என்றால், தமிழில் வேறு பொருள் இருக்கிறது. இப்படி நெடும் பயணம் செல்கின்ற நேரத்தில் இடையிலே ஒரு பிரச்சினை வந்தால், எப்படி சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற முடியும் ? சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற உறுதுணையாக இருக்க வேண்டிய காரண கர்த்தாவே சட்டம் ஒழுங்கைக் குலைக்கும் விதத்தில் இருந்தால், எப்படி சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற முடியும் ?

அடுத்து, இங்கே முன்பு உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சித்தாபதி அவர்களும், திரு. நீலநாராயணன் அவர்களும் மின்சார நிலைமைகளைப் பற்றியெல்லாம் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். நான் அதற்குள் அதிகமாகப் போக விரும்பவில்லை. மின்சாரம் ஒரு நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு அடிப்படையான சாதனம். அதை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். எங்களுடைய புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்பு இந்த நாட்டிலே எங்கெங்கெல்லாம் புனல் மின்

திட்டங்களை உருவாக்கி மின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய முடியுமோ அங்கேயெல்லாம் புனல் மின் திட்டங்களை உருவாக்கி மின் உற்பத்தியை உருவாக்கியிருக்கிறார்கள். மேட்டூருக்குக் கீழே 4 இடங்களில் தண்ணீரைத் தேக்கி, மேட்டூர் கீழ் புனல் மின் திட்டம் என்கிற அடிப்படையில், ரூபாய் 120 கோடி செலவிட்டு, இன்றைய தினம் கம்பீரமாக இத்திட்டம் உருவாகிக் கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் கடந்த காலத்தையும் நான் எண்ணிப் பார்க்கிறேன். மதுரைக்குப் பக்கத்திலே சமயநல்லூர் மின் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றாமல் அதனுடைய நட்டைக்கூட கழற்றி விட்டவர்கள் இன்றைக்கு நாட்டிலே எதை எதையோ பேசிக் கொண்டிருக்கிறார்கள். காடம்பாறை நீர் ஏற்று மின் நிலையம் பற்றிச் சொன்னால், அது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே கொண்டு வரப்பட்டது

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** நான் தேசியமயம் பற்றிய கொள்கையைத் தான் குறிப்பிட்டேன்.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** அதுபற்றி பின்னால் பேசுகிறேன். தேசியமயம் ஆக்குவது தொடர்பாக முடிவான எண்ணத்தோடு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இன்னும் முடிவெடுக்கவில்லை. ஆனால் கடந்த காலத்தை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். காடம்பாறை நீர் ஏற்று மின் நிலையம் என்கிற திட்டத்தை நாங்கள் நாட்டுக்காகச் செய்கிறோம் என்றும் 7 கோடி ரூபாய் செலவுசெய்து நிறைவேற்றிக் கொடுக்கப்போகிறோம் என்றும் நாட்டு மக்களிடத்திலே சொன்னார்கள். ஆனால் 7 கோடி ரூபாய் செலவு செய்து, அதை அப்படியே மூடிவிட்ட பெருமை முந்தைய ஆட்சியாளர்களைச் சாரும். ஆனால் எங்களுடைய புனித புரட்சித் தலைவர் அவர்கள் அதற்காக 70 கோடி ரூபாய் செலவிட்டு இன்றைக்கு அது கம்பீரமாக காட்சியளித்துக் கொண்டிருப்பதை நாமெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அதோடு மட்டுமல்லாமல், இந்த நாட்டிலே மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்காக பல திட்டங்களை இன்றைய தினம் மத்திய அரசினுடைய பார்வைக்கு அனுப்பியிருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு தேசிய காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்த உறுப்பினர் திரு. தாஸ் அவர்கள் மின்சாரக் கட்டணத்தை உயர்த்துகின்றபோது மிகவும் குறைவாக உயர்த்த வேண்டுமென்று சொன்னார்கள். எங்கள் புரட்சித் தலைவர் அவர்கள் கூட அதிலே உறுதியாக இருப்பவர்கள்தான். உயர்த்த வேண்டுமென்று சொல்பவர்களும் அரசியல் வாதிகள்தான். அதே சமயத்தில் குறைக்க வேண்டுமென்று சொல்கிறவர்களும் அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் தான். நல்லதைச் செய்தாலும் அதைக் கெட்டது என்று பேசுகிறவர்கள் நம்முடைய



அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் தான் என்பதையும் நாம் இந்த சந்தர்ப்பத்தில் எண்ணிப் பார்க்க வேண்டும். இதிலுள்ள யதார்த்த நிலையைத் தான் நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைய தினம் அரசியல் ஆதாயம் வேண்டியும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப வாதங்களைப் புரிய வேண்டுமென்பதற்காகவும் எதிர்க் கட்சிகள் பேசுகின்றன. யதார்த்த நிலையை அவர்கள் அணுகுவதே இல்லை.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** உறுப்பினர் சொல்லியதற்காக நானும் ஒன்றைச் சொல்கிறேன். 1972 ஆம் ஆண்டில் ஒரே ஒரு பைசா மின்சாரக் கட்டணத்தை உயர்த்தியபோது, இன்றைக்கு ஆளும் கட்சியாக இருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எப்படிப்பட்ட போராட்டங்களை நடத்தியது, விவசாயிகளை எந்த வகையில் தூண்டிவிட்டு போராட்டம் நடத்தியது, அதிலும் கோவையிலே எப்படிப்பட்ட முறையில் போராட்டத்தை நடத்தினார்கள் என்பதை உறுப்பினர் எண்ணிப் பார்த்து பேச வேண்டும்.

(பிற்பகல் 12-10)

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** 1972-லே 10 பைசாவிலிருந்து வந்தது. அப்போது அந்தக் கட்டணத்தை உயர்த்தியபோது ஏற்பட்ட போராட்டத்தில் 15 உயிர்களைப் பலி கொண்டார்கள். இப்போது, ஏதோ மறியல், அர்த்தால் என்று சொல்லி 3 பேர்கள் செத்தார்கள் என்று சொல்லி பிரச்சினைகளைக் கிளப்பினால், அவர்களுடைய ஆட்சியில் உயர்த்தலாமா என்று கேட்டு கட்டைவண்டி போராட்டம் நடத்தியவர்களிலே 16 பேர்களைக் கொன்றார்களே, அப்போது இந்த வாதம் எங்கே போயிற்று ?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அதைத்தான் கேட்கிறேன், இப்போது எதிர்க் கட்சிக்காரர்கள் ஏதோ மின்சாரக் கட்டணத்தை உயர்த்த வேண்டாம் என்று சொல்கிறார்கள். இந்த நாட்டின் நிலை என்ன ? அன்றைய தினம் போராட்டம் நடந்தபோது, அதைத் தூண்டியவர்கள் யார், அதற்குக் காரணம் யார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்க வேண்டும்

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தூண்டிவிட்டதாகக் குறிப்பிட்டார்கள். போராட்டம் நடக்கின்ற போது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கப்படவில்லை என்று கருதுகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கப்பட்டு நாராயணசாமி நாயுடு அவர்களின் தலைமையிலே நடந்த சங்கம் போராட்டம் நடத்தியபோது, அதிலே தான் துப்பாக்கிச் சூடு நடந்தது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** நான் இதிலே சொல்லலாமோ என்னவோ, செய்திக்கு வேண்டி சொல்கிறேன். அப்போது நான் காஞ்சியினுடைய பொறுப்பாசிரியராக இருந்தேன். அந்தப் போராட்டத்தைத் தாண்டிவிட்டவர்கள் மீது கடுமையான தலையங்கங்கள் எழுதியிருக்கிறேன். அப்போது கட்சி பிரியவில்லை.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** போராட்டங்கள் இரண்டு கட்டங்களிலே நடைபெற்றது. அதிலே துப்பாக்கிச்சூடும் நடந்தது. நாராயணசாமி நாயுடு பொதுக் கூட்டங்களிலே பேசியிருக்கிறார். "தி.மு.க.-வை இறக்க வைக்க வேண்டும் என்பதற்காக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் எம். ஜி. ஆர். தாண்டிவிட்டு, விவசாயிகள் போராட்டங்களை நடத்தச் சொல்லியிருக்கிறார் என்று சொல்லவில்லையா? அந்தந்த இடங்களிலே அண்ணா தி.மு.க. ஆட்களை விட்டு இந்தப் போராட்டங்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும் என்று சொல்லவில்லையா?" என்று அவர் அறிக்கை விட்டிருக்கிறார். அதைத்தான் நான் சொல்கிறேன். ஒரு எதிர்க் கட்சி மீது குற்றம் சொல்ல வேண்டும் என்பதற்காக, கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்று ஒரு கட்சியும், ஏற்ற வேண்டும் என்று இன்னொரு கட்சியும் இந்த நாட்டிலே நிலைமைகள் உண்டாக்கியிருக்கின்றன என்று சொன்னதால்தான் சொல்கிறேன். ஒரு பைசா ஏற்றியதற்காக ஒரு போராட்டம் போட்டு, மறுபடியும் தி.மு.க. ஆட்சிக்குத் தொல்லை கொடுக்க வேண்டும் என்பதற்காக போராட்டம் நடத்தினார்கள். இதுபற்றி எல்லாக் கட்சியினர்களும் அவரவர்களுடைய கருத்துக்களை பின்னர் சொல்வார்கள்.

**திரு. எஸ். முத்து :** இப்போது எழுந்திருக்கிற வாதம் எல்லாம் அந்த இடத்தில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தின்போது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இருந்ததா, இல்லையா என்பதுதான். நான் சொல்கிறேன் அப்போது ஒன்றாகத்தான் இருந்தது. முதலிலே குறிப்பிடுகிறபோது, தாண்டிவிட்டவர்கள் என்று சொன்னார். தாண்டிவிடுகிறபோது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்கப்பட்டதா இல்லையா என்பதுதான் வாதம். அதற்கு என்ன சொல்கிறார் மாண்புமிகு உறுப்பினர்?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அதைத்தான் தெளிவாகச் சொன்னேன். அப்போது இரண்டு கட்டங்களிலே போராட்டம் நடந்தது. முதல் கட்டப் போராட்டம் நடந்தபோது கட்சி பிரியவில்லை. இரண்டாவது கட்டப் போராட்டம் நடந்தபோது, விவசாயிகள் சங்கத்தை இன்றைய முதலமைச்சர் அவர்கள் தாண்டிவிட்டார்கள் என்று நாராயணசாமி நாயுடு அவர்களே அறிக்கை விட்டார்கள்.

**திரு. எஸ். முத்து :** தாண்டிவிட்டார்கள் என்றுதான் முதலிலே சொன்னார்கள். இப்போது மாற்றிப் பேசுகிறார்கள்.





**திரு. ஆர். டி. சீத்தாபதி:** நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. காடுவெட்டி கண்ணப்பன் 16 பேர்களைச் சுட்டுத் தள்ளியது என்று சொன்னதன் பேரில்தான் இந்த விவாதம் எழுந்தது. 16 பேர்களைச் சுட்டுத் தள்ளியபோது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பழைய பொருளாளரும் அந்தக் கழகத்திலே இருந்தார்கள். அப்போது கடற்கரையிலே ஒரு கூட்டம் நடத்த வேண்டும் என்று நாங்கள் ஏற்பாடு செய்தோம். இன்றைய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் இது தெரியும். பின்னர் அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்களும், அன்றைய பொருளாளரும்—இன்றைய முதலமைச்சர் அவர்களும் கலந்து பேசி அந்தக் கூட்டத்தை ரத்து செய்தார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. காடுவெட்டி கண்ணப்பன் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

* **திரு க. இராமமூர்த்தி :** திராவிட முன்னேற்றக் கழகம் பிரிவதற்கு முன் ஒன்றாக இருந்தபோதும் எங்களைத்தான் சுட்டிருக்கிறார்கள். பிரிந்த பிறகு, நீங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகும், எங்களைத்தான் சுடுகிறீர்கள். ஆத்தூருக்குப் பக்கத்தில் எங்கள் கட்சியைச் சார்ந்த ஒருவரும் இறந்திருக்கிறார். அன்றைக்கு துப்பாக்கியிலிருந்து குண்டு வராமல் மலர் மாலையா வந்து விழும் என்று இன்றைய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்குத் தனியாகப் பிரிந்து வந்து நீங்கள் ஆட்சியை அமைத்த பிறகும், இப்படியே சுட்டுக்கொண்டிருந்தால், சுடுவதற்கு யார் பின்னணி என்று ஆராய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

**திரு. எஸ். முத்து :** 1965 ஆம் ஆண்டு இராணுவத்தை வைத்துச் சுட்டவர்கள் யார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்ல வேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி :** அன்றைக்கு அந்த நிலையை உருவாக்கிய போது நாங்கள் பொறுப்பேற்றுக்கொண்டோம். ஆனால், அன்றைக்கு மாலையா வந்துவிழும் என்று சொல்லிவிட்டு, குண்டை வைத்துச் சுடும் காட்சியை இப்போது பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இங்கே சூடு அதிகமாகி விட்டது.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** உத்தரப்பிரதேசத்தில் தாழ்த்தப்பட்ட பெரு மக்கள் எல்லாம் தங்களுடைய பாதுகாப்புக்காக துப்பாக்கி வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லும் அளவுக்கு காங்கிரஸ் ஆளும் மாநிலங்களிலே நிலை இருப்பதைப் பார்க்க வேண்டும்.

[1982 பிப்ரவரி

(மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் எழுந்தார்கள்)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : மாண்புமிகு உறுப்பின திரு. இராமமூர்த்தி அவர்கள் உட்கார வேண்டும். உறுப்பினர் அவர்களுக் மிகவும் உரிமையுடையது தமிழகம்தான். அதனால் உறுப்பினர் அவர்கள் அதிகமாகக் கவலைப்பட வேண்டாம்.

**திரு. செ. முத்துசாமி** : எல்லா மாநிலத் துப்பாக்கிகளிலும் குண்டு தான் வரும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : எல்லாத் துப்பாக்கியிலும் குண்டு வராது. திருவள்ளுவர் அவர்களின் "துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்கு" என்ற துப்பாக்கியில் குண்டு வரவில்லை.

**திரு. ஆர். டி. சீத்தாபதி** : இப்போது புதிய முறையிலேயும் துப்பாக்கி குண்டு தயாரிக்கப்படுகிறது.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன்:** உத்தரப்பிரதேசமானாலும், தமிழ் நாடானாலும் நாம் ஒருமுகமாகப் பார்க்க வேண்டும். அங்கேயுள்ள நிலை களைப்பற்றிப் பேசக்கூடாது, இங்கேயுள்ள நிலைமைகளைப்பற்றிப் பேசலா என்ற நிலை இருக்கக்கூடாது. இங்கே 3 பேரைச் சுடலாமா என்ற பிரச்சினை சினை வந்தது. நான் இந்த நிகழ்ச்சிகளுக்குள்ளே அதிகமாகப் போகவில்லை வந்தது. இப்போது சுடலாமா, அப்போது சுடவில்லையா என்றெல்லாம் பிரச்

தமிழகத்தைப் பொறுத்தவரையில், பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் விலைவாசிப் பிரச்சினையைப் பற்றிச் சொன்னார்கள். ஆளுநர் உரையில், ஏறிவருகின்ற விலைவாசி ஏற்றத்தை நாங்கள் கவனத்தோடு உன்னிப் பாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே ஏறிவருகின்ற விலைவாசியை, தமிழகத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய அரசு ஒரு நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன் 1975 ஆம் ஆண்டு தமிழ் நாட்டிலே உற்பத்தியான உணவுப் பொருள்கள் எந்த அளவிற்கு உற்பத்தியானதோ, அதைப்போலவே சென்ற ஆண்டு, தமிழகத்திலே வறட்சி இருந்தாலும், 1975 ஆம் ஆண்டு எய்திய உற்பத்தியை நம் மாநிலம் சென்ற ஆண்டும் எட்டியிருக்கிறது. அதே நேரத்தில் 1975 ஆம் ஆண்டு விளை பொருட்களுக்கு இருந்த விலை என்ன என்றும், இப்போது விளைபொருட் களுக்கு என்ன விலை இருக்கிறது என்றும் ஒப்பிட்டுப் பார்த்தால், நிர்வாகம் எந்த அளவிற்குச் சிறப்பாக இருக்கிறது என்பதை நாம் நிச்சயமாக உண மூடியும். வறட்சி என்பது தமிழ் நாட்டிற்குப் புதியதல்ல. அதுவும் சென்ற

(பிற்பகல் 12-20)

ஆண்டு மட்டும் தமிழ் நாட்டிற்கு வறட்சி வந்துவிடவில்லை. வறட்சி என்பது காலத்தின் ஓட்டத்தின் இடையிலே வருகிற இடைச் செருகல் என்றால், அத



1982 பிப்ரவரி 5] [திரு. காடுவெட்டி கண்ணப்பன்]

மிகையாகாது. இந்த நிலையில் சென்ற ஆண்டு தமிழகத்தில் ஏற்பட்ட வறட்சியை இந்த ஆட்சி எப்படிச் சமாளித்தது என்பதுதான் பிரச்சினை. அதுதான் கேள்வி. அந்த வறட்சியின்போது தமிழக அரசு சுமார் 55 கோடி ரூபாயைச் செலவு செய்து மிக உன்னதமான முறையில் வறட்சியைச் சமாளித் தது என்பதை நான் சொல்லித்தான் மற்றவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற நிலை இல்லை. அதற்கு மத்திய அரசே நற்சான்றிதழ் கொடுத்திருக் கிறது. எனவே அதைவிட வேறு நற்சான்றிதழ் தேவையில்லை என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்களின் ஆட்சியைப்பற்றியும் எங்களின் நிர்வாகத்தைப்பற்றியும் குறை சொல்வோருக்கு நான் ஒன்றைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். நேற்றையதினம் பேரவையில் நடைபெற்ற விவாதத்தின்போதுகூட, இப் பொருள்பற்றி விவாதிக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு ஏற்பட்ட வறட்சியை நாங்கள் மிகச் சிறப்பாகச் சமாளித்திருக்கிறோம். வறட்சி நேரத்தில் தமிழகத்தில் வேலைக்கு உணவு திட்டம் கொண்டு வந்து அமுல் படுத்தி இந்த நாட்டில் இருந்த பசிப் பிணியைப் போக்குகிற மருத்துவனாக எங்கள் புரட்சித் தலைவர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் இந்த நாட்டில் நல்லாட்சியை மேற்கொண்டிருக்கிறார்கள்.

அதைப்போலவே 1975 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் ஏற்பட்ட வறட்சியின் போது இருந்த நிலைமையையும் எண்ணிப் பார்க்கிறேன். அன்றையதினம் அன்னை இந்திரா காந்தி அவர்கள் இந்தியத் துணைக் கண்டத்தின் பிரதமர் என்ற முறையில் தமிழகத்திற்கு வந்திருந்தார்கள். அப்போது மத்திய அரசில் மதிப்பிற்குரிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் நிதியமைச்சராக இருந்தார் சரியாக என்னால் இப்போது சொல்ல முடியாவிட்டாலும் கூட—சுமார் 17 கோடி ரூபாய் என்று நினைக்கிறேன் அந்த அளவுக்கு மத்திய அரசாங்கத்தி லேயிருந்து தமிழக வறட்சி நிலைக்கு நிவாரண நிதியாக அளிக்கப்பட்டது. அதுவும் பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்கள் வறட்சிப் பகுதி களைப் பார்வையிட்ட பிறகு இந்தத் தொகை அளிக்கப்பட்டது. அப்படிக் கொடுத்த பணத்திற்கு திரு. சுப்பிரமணியம் அவர்கள் கணக்குக் கேட்டார். எப்படி இந்தப் பணம் செலவிடப்பட்டது என்பதற்கு அவர் மாநில அரசைப் பார்த்துக் கணக்குக் கேட்டார். அப்போது என்ன சொன்னார்கள் இங்கே ஆட்சியில் இருந்தவர்கள்? 17 கோடி ரூபாய்க்குக் கணக்கு எங்கே என்று கேட்கிறார்கள். 'இந்த மத்திய அரசின் பணம் எங்களுக்குத் தேவையில்லை. இந்தப் பணத்தை நாங்கள் தமிழகத்தில் உண்டியல் ஏந்தி வசூல் செய்து கொள்வோம். அந்தப் பணத்திலேயிருந்து நாங்கள் காரியத்தை ஆற்றுவோம். இந்திரா கேட்டாலும் சரி, யார் கேட்டாலும் சரி, கணக்குக் கேட்டால் முடியாது என்று சொல்லிய முன்னாள் ஆட்சியாளர்களை நான் எண்ணிப்

பார்க்கிறேன். அப்போதிருந்த வறட்சியின்போது ஏற்பட்ட நிலைமைகளையும்
பார்க்கிறேன். இப்போது தமிழகத்தில் வந்து போன வறட்சியின்போது
ஏற்பட்ட நிலைமைகளையும் பார்க்கிறேன். கடந்த ஆண்டு ஏற்பட்ட
வறட்சியின்போது தமிழகத்தில் எந்த ஒரு நேரத்திலும் ஒரு கிலோ அரிசி
ரூ. 3 க்கு மேல் போகாத நிலையை எங்கள் புரட்சித் தலைவர் அவர்கள்
உருவாக்கினார்கள். அந்த அளவுக்கு விலைவாசியைக் கட்டுப்படுத்தும் நல்ல
நிர்வாகத் திறமையை எங்கள் தலைவர் பெற்றிருந்தார். இவர்களுக்கெல்லாம்
நிர்வாகம் தெரியுமா என்று அப்போது கேட்டவர்களுக்குச் சொல்கிறேன்.
இதோ அதற்கு ஒரு சான்று என்பதை தயவு செய்து எண்ணிப் பாருங்கள்.

அதுமட்டுமல்ல, 1971 ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழ் நாட்டில் ஒரு பெரிய
தொழிற்சாலை உண்டா? ஒரு கோடி ரூபாய் அல்லது இரண்டு கோடி ரூபாய்
மூலதனம் போட்டு தொடங்கப்பட்ட தொழிற்சாலை எத்தனை? விரல் விட்டு
ஒன்றைக்கூட சொல்ல முடியாது. ஆனால் எங்கள் புரட்சித் தலைவர்
ஆட்சியில் என்ன நடக்கிறது? நாட்டில் எங்கே பார்த்தாலும் பெருகி வரும்
தொழிற்சாலைகளைப் பார்க்கிறோம். ஏறத்தாழ 80-க்கும் மேற்பட்ட பெரிய
தொழிற்சாலைகள் குறித்து மத்திய அரசின் பார்வைக்காக அனுப்பி
வைத்திருக்கிறோம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, 1971 ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழகத்தில் தொழில் வளர்ச்சி
இல்லை, ஒரு கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு செய்த தொழிற்சாலை
ஏதுமில்லை என்று உறுப்பினர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார். தயவு
செய்து பக்கத்தில் உள்ள இராணிப்பேட்டைக்குப் போய் பாருங்கள். 1971 ஆம்
ஆண்டுக்குப் பிறகு தான் அங்கே தொழிற்பேட்டை உருவாக்கப்பட்டு,
ஏறத்தாழ 80 கோடி ரூபாய்க்கு அதிகமான மூலதனத்தில் பல்வேறு
தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. அது மட்டுமல்ல, 10,000 க்கும்
அதிகமான தொழிலாளர்கள் அங்கே வேலை வாய்ப்பைப் பெற்று பணியாற்றிக்
கொண்டிருக்கிறார்கள். அதைப் போலவே தருமபுரி மாவட்டத்தில் ஓசூர்
பகுதியில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில்தான் பெரிய
தொழிற்பேட்டையே ஆரம்பிக்கப்பட்டது. அங்கேயும் பல கோடிக்கணக்கா
மூலதனத்தில் பல்வேறு தொழிற்சாலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்ற
என்பதை உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திரு. காடுவெட்டி கண்ணப்பன்: நான் தொழிற்சாலைகள் ஆரம்பிக்க
படவில்லை என்று சொல்லவில்லை. எத்தனை சதவிகிதம் என்றுதா
கேட்டேன்.



திரு. ஆற்காடு நா. வீராசாமி: அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 4 ஆண்டுக் காலத்தில் உருவாக்கப்பட்டிருக்கிற தொழிற்சாலைகளைவிட சில மடங்கு அதிகமாகவேதான் எங்கள் ஆட்சியின்போது தொடங்கப்பட்டன என்பதை இன்னும் ஆதாரத்தோடு என்னுடைய பேச்சின் போது அவருக்கு விளக்க விரும்புகிறேன்.

திரு. காடுவெட்டி கண்ணப்பன்: நான்கூட புள்ளிவிவரங்களை நாளைக்குக் கொண்டு வந்து சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இதை அடுத்த ஆண்டில் சொல்லிக்கொள்ளலாம்.

திரு. காடுவெட்டி கண்ணப்பன்: இன்றையதினம் கிராமங்கள்தோறும் ஊரகத் தொழில்கள் செழித்தோங்கி வருகின்றன என்பதை என்னால் இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது. அந்த வகையில் இந்த அமைச்சு மிகுந்த முனைப்போடு செயல்பட்டுக்கொண்டு வருகிறது. தமிழகத்தை தொழில் துறை மையமாக்க வேண்டும் என்ற கருத்தில் இன்றையதினம் ரூ. 50 லட்சத்திலிருந்து ஒரு கோடி ரூபாய் அளவுக்கு விற்பனை வரிக்கான கடன் வசதிகளைச் செய்ய அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.

இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். நாடு விடுதலை பெற்று 30 ஆண்டுகளாகியும் இந்த நாட்டில் உள்ளோரின் நிலைமை என்ன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்று இந்த வாசகத்தை கிராம மக்களிடம் ஓட்டுக்கேட்கச் செல்லும்போது மட்டுமே நாம் பயன்படுத்திக் கொண்டு வந்திருக்கிறோம். இந்த 30 ஆண்டுக் காலத்தில் கிராமங்களில் குடியிருப்போருக்கு நல்ல பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியில்லை. நல்ல பஸ் வசதி கிடையாது, நல்ல போக்குவரத்துச் சாலைகள் கிடையாது, நல்ல ஆரம்ப சுகாதார மருத்துவ மனைகள் கிடையாது. நல்ல ஆரம்பப் பள்ளி வசதி கிடையாது. இதுதான் கடந்த 30 ஆண்டுகளாக இருந்து வரும் நிலைமை, ஓட்டு வாங்குவதற்கு மட்டும்தான் நாம் கிராம மக்களை அணுகினோமே தவிர, அவர்களுடைய நல்வாழ்வுக்கு உத்தரவாதம் கொடுக்கக்கூடிய வகையில் நல்ல திட்டங்கள் உருவாக்கப்பட்டதா என்றால், 1980 ஆம் ஆண்டு வரை தமிழகத்தைப் பொறுத்த வரையில், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். கிராமத்தில் உள்ளவர்களும் மனிதர்கள் தான். அவர்களுக்கும் நல்ல சுகாதாரமான வாழ்க்கை வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்ற எண்ணம் நமக்கு ஏற்படவே இல்லை. அந்த எண்ணம்.

[திரு. காடுவெட்டி கண்ணப்பன்] [1982 பிப்ரவரி 5

எங்கள் புரட்சித் தலைவரின் ஆட்சியில்தான் ஏற்பட்டது. அதன் விளைவு தான் தன்னிறைவுத் திட்டம். அந்தத் திட்டம் இன்றையதினம் இந்தியாவுக்கே ஒரு முன்னோடியாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. பல பகுதிகள் இன்றையதினம் அந்தத் தன்னிறைவுத் திட்டத்தால் பயன் பெற்றுக் கொண்டிருக்கின்றன. என்னுடைய ஊருக்குப் பக்கத்தில் அந்தியூர் என்ற பகுதி இருக்கிறது. அது மலைப்பகுதி, அங்கே மலைவாழ் மக்கள் வாழ்கிறார்கள். 20 மைல் நடந்து வந்தால் அல்லது கட்டை மாட்டு வண்டியில் வந்தால்தான், பேருந்தைப் பார்க்க முடியும் என்ற நிலைமை இருந்தது. இன்றையதினம் புரட்சித் தலைவரின் ஆட்சியில் அப்படிப்பட்ட கிராமங்களுக்கெல்லாம் பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதி மக்களுக்கு நல்ல பாது காக்கப்பட்ட குடிநீர் கிடைக்கிறது. வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளை இன்றையதினம் அவர்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே மெத்தப் பணிவன்போடு சொல்லிக்கொள்கிறேன். மகாத்மா காந்தி யடிகள் இந்த நாட்டு ஏழை எளிய மக்களை வாழ வைப்பதற்காக 18 அம்ச நிர்மாணத் திட்டம் ஒன்றைக் கொடுத்ததாக நான் படித்திருக்கிறேன். அப்படி கிராம ராஜ்யம் அமைவதற்கு நாட்டின் முதுகெலும்பாக உள்ள கிராமங்கள் நல்ல நிலைமையைப் பெற வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப் படையில் அவர் அந்த 18 அம்ச நிர்மாணத் திட்டத்தைக் கொடுத்தார். அந்தத் திட்டத்தை இன்றையதினம் முதன் முதலாக அமுல் செய்து கொண்டிருப்பவர் மாண்புமிகு முதல்வர் எங்கள் புரட்சித் தலைவர் என்றால், அது மிகையாகாது.

எனவே அப்படிப்பட்ட ஆட்சியில் குறைகள், கோளாறுகள் இருக்குமானால் சுட்டிக்காட்ட வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. எதிர்க்கட்சியாகச் செயல்படுவது என்பது மக்களுக்கு நாம் ஆற்றுகிற ஜனநாயகக் கடமையாக இருக்க முடியும். ஆனால் எதிர்க்கட்சியாக மாறி செயல்படுவோமானால், அது நாட்டு மக்களுக்கு ஆற்றக்கூடிய கடமையிலிருந்து தவறிய நிலையாகும். எதைச் செய்தாலும், குறையைச் சொல்லிக் கொண்டிருப்பது என்பது நல்ல தல்ல. அண்ணா அவர்கள் சொல்லி வந்த வகையில் "எங்கும் தமிழ் எதிலும் தமிழ்" என்று தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைத்தால்கூட, அதிலே குறைகள் சொல்லுகிற போக்குதான் இருக்கிறது. தமிழகத்தின் நீதிமன்றத்தின் நெடிய படிக்கட்டுகளில் கம்பீரமாக தமிழ் அன்னையை ஏற்றி வைத்த பெருமை புரட்சித் தலைவரைச் சாரும். அதைக்கூட வரவேற்பதற்கு மனமில்லை என்றால், என்னவென்று சொல்வது? குறைகளைப் பற்றியே சொல்லிக் கொண்டிருப்பதை விட்டு நிறைகளையும் மனதார வரவேற்க வேண்டும் என்ற பண்பு நாட்டில் அழிந்து வருகிறது என்ற வேதனையை வெளியிடுகிறேன். அப்படிப்பட்ட நிலைமைகள் இனியும் இல்லாமல் மக்களின் நன்மையைக்





1982 பிப்ரவரி 5]

படிப்பு முறைகள் சாத்திம் இல்லை என்ப

குறைந்த (watered down) ... எம்.எ/எம்.எஸ்.சி முதுகலைப் பட்டம்

தால் உட்படுத்தப்பட்ட ஆசிரியர்கள் ... ஒரு சிறப்பு விடுமுறைக் கால மற்றும்

பெறுவதற்கு உதவி செய்திடும் பொருட்டு ... பல்கலைக் கழகங்கள் தற்போது

அஞ்சல் வழி முதுகலைப் பட்டப் படிப்பு

நடத்தி வருகின்றன.

பட்டதாரி ஆசிரியர் கழகம் அரசுக்கு சில கருத்துருக்களை அனுப்பி

புள்ளது. அந்தக் கருத்துருக்கள் அரசின் ஆய்வில் உள்ளன.

**கோரிக்கை 2 :**

பிற அரசுத் துறை ஊழியர்களுக்கு ஈட்டிய விடுப்பு வழங்குவது போல் ஆசிரியர்களுக்கும் அவர்களின் பணி நாட்களைக் கணக்கிட்டு ஆண்டுக்கு 23 நாட்கள் ஈட்டிய விடுப்பு வழங்க வேண்டும்.

**விவாதத்தின் போது எடுக்கப்பட்ட முடிவு**

ஆசிரியர்கள் கோடை விடுமுறையில் (Central Valuation) மத்திய மதிப்பீட்டுப் பணி செய்யும் காலத்தை ஈட்டிய விடுப்புக்கு கணக்கு எடுத்துக் கொள்வதில்லை எனவும், மற்றும் ... (Centre Valuation Period) மத்திய பீடுக்காக பணிபுரிகிறார்கள் என்றும் ... போதும், பள்ளியில் ... கூட்டங்களின் ... ஆசிரியர்கள் பணி மாணவர்களை அனுமதிக்கப்பட தேர்வு செய்யும்போதும் ... வேண்டும் என புரிவதால் ஆண்டுக்கு 23 நாட்கள் ஈட்டிய விடுப்பு வழங்க வேண்டும் என கழகப் பிரதிநிதிகள் கூறினார்கள்.

இக்கோரிக்கை பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையுடனும், நிதித் துறையுடனும் கலந்து ஆலோசிக்கப்படும்.

**கோரிக்கை 3 :**

பணியில் சேர்ந்த நாளிலிருந்து 20 ஆண்டுகள் பணி முடித்த பட்டதாரி ஆசிரியர் அனைவர்க்கும் மற்றும் 10 ஆண்டுகள் தேர்வுநிலை பணி முடித்த பட்டதாரி ஆசிரியர்களுக்கும் சிறப்பு நிலை தகுதி தரப்படல் வேண்டும், தேர்வுநிலை, சிறப்பு நிலை பெறும் ஆசிரியர்களுக்கும் எப்.ஆர். 22 (பி) விதி யின்படி ஊதியம் நிர்ணயம் செய்யப்படவேண்டும். எம்.எட். பட்டம் பெற்ற பெண்ணிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு அளிக்க வேண்டும்.

விவாதத்தின் போது எடுக்கப்பட்ட முடிவு [illegible]

இடைநிலை ஆசிரியர்களுக்குத் தரப்பட்ட 20 ஆண்டு பணி சிறப்பு நிலை பட்டதாரி ஆசிரியர்களுக்கும் தரப்பட வேண்டும் என கழகத்தின் சார்பில் கூறப்பட்டது.

இக்கோரிக்கை சம்பந்தப்பட்ட துறைகளுடன் கலந்து ஆலோசிக்கப்படும்.

**கோரிக்கை 4:**

மேல்நிலை உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு கல்வி, மருத்துவம், தொழில் மற்றுமுள்ள கல்லூரிக் கல்வி அனைத்தும் இலவசமாக அளிக்க வேண்டும். அக்கல்லூரிகளிலும், மேல்நிலை, உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கென 10 சதவிகித இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும்.

**விவாதத்தின்போது எடுக்கப்பட்ட முடிவு**

மருத்துவம் மற்றும் தொழில் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு என்பது பெற்றோரின் பணிகளின் அடிப்படையிலோ அல்லது சம்பந்தப்பட்ட பணியில் அவர்கள் இருக்கிறார்கள் என்பதற்காகவோ கொடுக்கப்படுவதில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டது. அதன் பின், இலவசக் கல்வி அளிப்பதைப் பரிசீலிக்க வேண்டும் என பிரதிநிதிகள் கூறினர். இதைச் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, நிதித் துறை ஆகியவற்றுடன் கலந்து ஆலோசிக்க வேண்டும்.

இதுவும் சம்பந்தப்பட்ட துறைகளுடன் கலந்து ஆராய்ந்து முடிவெடுக்கப் பட வேண்டும்.

**கோரிக்கை 5:**

பட்டதாரி ஆசிரியர்களின் அடிப்படை ஊதிய விகிதத்தைத் திருத்தி உயர்த்தி அமைத்திட வேண்டும். இடைநிலை ஆசிரியர்களுக்கு வழங்கப் பட்டதைப் போன்று பி.டி., பி.எம். பயிற்சிக்காக பட்டதாரி ஆசிரியர்களுக்கு கூடுதல் ஊதிய உயர்வு வழங்கப்படல் வேண்டும்.

**விவாதத்தின்போது எடுக்கப்பட்ட முடிவு**

ஒரு நபர் குழுவின் பரிந்துரைகளில் இதுபற்றிச் சொல்லப்படவில்லை என்றும், அரசு இதை ஆராய்ந்து, பட்டதாரி ஆசிரியர்களின் அடிப்படை ஊதிய விகிதத்தை மாற்றி அமைக்கலாமென பிரதிநிதிகள் தெரிவித்தனர். மற்றும் இடைநிலை ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டதைப் போல், பயிற்சியின் அடிப் படையில் கூடுதல் ஊதிய உயர்வு அளிக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரினர்.



கருத்தில் கொண்டு எதிர்க் கட்சிகளும் தலைவர்களும் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அப்படிப்பட்ட நிலைமைதான் நமக்கும் நல்லது, நாட்டுக்கும் நல்லது என்று சொல்லி, பல திட்டங்களையும் நல்ல பல குறிக்கோள்களையும் கோடிட்டுக் காட்டும் மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவித்து, என்னை இவ்வளவு நேரம் பேசுவதற்கு அனுமதித்த நல்லவர்களுக்கும் நன்றி தெரிவித்து அமைகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை காலை 9-30 மணிக்குக் கூடும்.

(பிற்பகல் 12-30)

அவை, பின்னர் ஒத்தி வைக்கப்பட்டது.

5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

## A. *Statutory Rules and Orders.*

91. Report of the Comptroller and Auditor General of India for the year 1979-80 (Commercial). [Laid on the table of the House under Article 151 (2) of the Constitution of India].

## B. *Reports, Notifications and Other Papers.*

**Nil**

இணைப்பு

(19 ஆம் பக்கத்தில் இனம் 2-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கழகத்திடமிருந்தும் மற்றும் அதன் சில மாவட்ட அமைப்புகளிடமிருந்தும் ஏழு அம்சக் கோரிக்கைகள் கொண்ட மனுக்கள் அரசால் பெறப்பட்டன. இக்கழகம் அரசு அங்கீகாரம் பெற்ற கழகமாதலால், அதன் பிரதிநிதிகளுடன் 10—12—1981 அன்று கல்வித் துறை ஆணையாளர் மற்றும் அரசுச் செயலாளர் மற்றும் கல்வித் துறையின் சம்பந்தப்

பட்டதாரி ஆசிரியர் கழகத்தில் ஏழு அம்சக் கோரிக்கைகளும் விவாதத்தின் முடிவுகளும் கீழ்க்கண்டவாறாகும் :— இதர அலுவலர்களுடன் கூடி விவாதம் நடத்தினார். பட்டதாரி

**கோரிக்கை 1 :**

மேல்நிலைப் பள்ளிகளில் உட்படுத்தப்பட்ட (இண்டக்டட்) ஆசிரியர்களுக்கு குறுகிய கால (கண்டென்சுடு) சுருக்கப்பட்ட பாடத்தில் பயிற்சி அளித்து எம்.ஏ./எம்.எஸ்.சி பெற வாய்ப்பு அளிக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் முதுகலைப்பட்டம் பெற்ற நாளிலிருந்து அவர்களை முழுத் தகுதி பெற்ற மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களாக பதவி உயர்வு செய்ய வேண்டும். உட்படுத்தப்பட்ட ஆசிரியர்கள் மேல்நிலைப் பள்ளியில் பணியிற் சேர்ந்த நாள் முதல் பணி வரன்முறைப்படுத்த வேண்டும்.

**விவாதத்தின் போது எடுக்கப்பட்ட முடிவு :**

மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் உட்படுத்தப்பட்ட (இண்டக்டட்), பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஒரு குறுகிய கால (கண்டென்சுடு) சுருக்கப்பட்ட பயிற்சி அளித்து அவர்கள் எம்.ஏ./எம்.எஸ்.சி பட்டம் பெற வழிவகை செய்ய வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. இந்தப் பயிற்சியைப் பிற பட்டதாரி ஆசிரியர்களுக்கும் (அதாவது, உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்களுக்கும்) அளிக்க வேண்டும் எனவும் கழகத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

குறுகிய காலப் பயிற்சி என்றால் என்ன ? எந்தப் பாடத்திட்டங்கள் அவைகளில் மேற்கொள்ள வேண்டும் ? கல்வியின் தரம் குறையாதவாறு அதை எப்படி அமைக்க வேண்டும் ? என்பதைக் குறித்து விரிவான தகவல்கள் அரசுக்குத் தரப்பட்டால் அதைப்பற்றி பரிசீலனை செய்ய ஏதுவாகும் என அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

எம்.ஏ./எம்.எஸ்.சி போன்ற பட்டப் படிப்புத் தகுதிகள் பல்கலைக் கழகங்களால் நிர்ணயிக்கப்படுபவை ஆகும். அரசு நிர்ணயிப்பது அல்ல. பல்கலைக் கழகத் துணை வேந்தர்களுடன் கலந்து பேசி ஏற்கனவே அமைக்கப்பட்ட இரண்டாண்டு விடுமுறைப் பாடத் திட்டத்தை (Four Semester Vacation Course) ஒரு செமஸ்டர் பலர் சென்று படித்த பிறகு இரண்டாவது செமஸ்டருக்குப் போனவர்களைப் போகாதபடி தடுத்து பட்டதாரி ஆசிரியர் கழகம் நிறுத்தியதாக தகவல் வந்துள்ளது என பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.



இந்த இரு அம்சங்களையும், நிதித் துறையுடன் கலந்து ஆலோசிக்க வேண்டும். இது நிதித் துறையுடன் கலந்து ஆலோசிக்கப்படும்.

**கோரிக்கை 6 :**

1—4—1970-க்குப் பின் தற்காலிகப் பணியில் அமர்த்தப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் அனைவரையும் அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் பணி வரன் முறைப்படுத்தப்பட வேண்டும். அவர்கள் ஆண்டு ஊதிய உயர்வு பெறத் தடையாக இருக்கும் "துறைத் தேர்வு" நிபந்தனை நீக்கப்பட வேண்டும். மாற்றல் உத்தரவினாலும் கோடை விடுமுறையில் பணி நீக்கம் செய்யப்பட்டதாலும் ஏற்பட்ட பணித் துண்டிப்புக்கு (பிரேக் ஆப் சர்வீஸ்) தவிர்ப்பு (கன்டொனேஷன்) அளிக்கப்பட வேண்டும்.

**விவாதத்தின் போது எடுக்கப்பட்ட முடிவு :**

துறைத் தேர்வு நிபந்தனையை நீக்க அரசு ஏற்கனவே முடிவு எடுத்து விட்டது. பணி விதிகளை மாற்றி ஆணைகள் வெளியிட தேர்வாணைக் குழுவின் இசைவு கேட்கப்பட்டுள்ளது. தேர்வாணைக் குழுவின் இறுதியான நிலையைப் பெற்று விதிகளை மாற்றியமைக்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

**கோரிக்கை 7:**

1. அரசு விதிகளை மீறுகின்ற, தவறு செய்கின்ற அரசு ஆணைகளை நடைமுறைப்படுத்தாத தனியார் பள்ளி நிர்வாகிகளை நிர்வாகப் பணியிலிருந்து நீக்கவும்;

2. தனியார் பள்ளிகளில் பணிபுரிகின்ற ஆசிரியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை நிர்வாகிகளிடமிருந்து நீக்கி கல்வித் துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கும் வகையிலும் தனியார் பள்ளி ஒழுங்கு படுத்தும் சட்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டும்.

3. தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு அரசு நேரிடையாக ஊதியம் வழங்க வேண்டும்;

4. அரசு ஊழியர்களுக்கான அனைத்து சலுகைகளும் உள்ளாட்சித் துறை தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

**விவாதத்தின் போது எடுக்கப்பட்ட முடிவு**

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு திருமணக் கடன், வீட்டு வசதிக் கடன், கல்விக் கடன் வழங்கப்பட வேண்டும் என கழகச் சார்பில் கூறப்பட்டது.

இது ஆராயப்படும்.

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு நேரடி ஊதியம் வழங்குவது குறித்து ஏதாவது ஒரு மாவட்டத்தில் இதைச் செயல்படுத்தி அந்த அனுபவத்தின் அடிப்படையில், மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தலாம் என்ற கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது.

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குத் திருமணக் கடன் வழங்க ஏற்கனவே ஆணைகள் வெளியிடப்பட்டு விட்டன.

இதர கடன் வசதிகள் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்குவது பற்றிய கருத்துருக்கள் பரிசீலனையில் உள்ளன.

தனியார் பள்ளியின் நிர்வாகப் பொறுப்பு, சட்ட விதிகளின்படி பள்ளிக் குழுவைச் சார்ந்ததாகும். தவறு செய்கின்ற நபர்களைக் குற்றச் சாட்டுகளுக்கு உட்படுத்தி பள்ளிக் குழுவில் இடம் பெறாதிருக்கச் செய்ய சட்டத்தில் ஏற்கனவே வகை செய்யப்பட்டுள்ளது.

பள்ளி நிர்வாகப் பொறுப்பு பள்ளிக் குழுவிடம் உள்ள போது ஆசிரியர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் பொறுப்பை கல்வித் துறை அதிகாரிகளிடம் ஒப்படைப்பது ஒழுங்கிற்கு முரண்பட்டது என்றும் மேல் முறையீடு அதிகாரியாக கல்வி அதிகாரி இருக்க, ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் அதிகாரியாக அவரே இருப்பது சட்டப்படி சரியன்று என பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

பட்டதாரி ஆசிரியர்களின் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்து மேற்கண்ட கோரிக்கைகளின் மீது அவசியமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், ஆசிரியர்கள் நேரடி நடவடிக்கையில் ஈடுபடும் அவசியம் எழவில்லை.



# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை

சனிக்கிழமை, 1982 பிப்ரவரி 6.

தை 24, துன்மதி—திருவள்ளுவராண்டு 2013.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### *Pensionary Benefits to Invalids*

* 31. *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that representations have been made to the Government to sanction full pensionary benefits to those who have become invalid, due to accidents or sickness; and

(*b*) if so, the action taken thereon ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) அம்மாதிரியான முறையீடுகள் எதுவும் பெறப்படவில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

திரு. பா. ரா. தாமஸ் : தலைவர் அவர்களே, அத்தகைய முறையீடுகள் வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினாலும், இத்தகைய சூழ்நிலையில் ஏலாமையுறுவோருக்கு முழு ஓய்வூதியம் வழங்கும் செயற்குறிப்பை ஆராய்ந்து அறிவிக்குமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஒருவர் உடல் நலம் இல்லாமல் இருந்திருந்தால் அல்லது நிரந்தரமாக ஏலாமைக்குட்பட்டு அவர் பணிக்குத் தகுதியற்றவராக இருந்தால், அத்தகைய சூழ்நிலையில் அவர் மருத்துவக் குழுவிற்கு அனுப்பப்பட்டு, அவர் பணிக்குத் தகுதியற்றவர் என்று மருத்துவக் குழு அறிவித்தால், அந்த மருத்துவக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் அவருக்கு ஏலாமை ஓய்வூதியம் வழங்க ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன. இவ்வோய்வூதியம் பெற ஒருவர் பதவியில் தொடர்ந்து பத்தாண்டுக் காலம் பணி புரிந்திருக்க வேண்டுமென்று விதி இருக்கிறது. சாதாரணமாக ஓய்வு பெற இருபது ஆண்டுகள், இருபத்தைந்து ஆண்டுகள் பணி இருக்க வேண்டுமென்று விதி வகுக்கப்பட்டிருக்கிறது,

திரு. பா. ரா. தாமஸ்: ஒருவேளை அவ்வாறு விபத்துக்குள்ளானவர் பத்தாண்டிற்குள்ளாகப் பணி புரிந்தவராக இருந்தால், அவர் ஏலாமையுற்றிருந்தால், அத்தகைய சூழ்நிலையில் விதிமுறைகளைத் தளர்த்தி முழு ஓய்வூதியம் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படி பொதுவாக விதிமுறை வகுத்து வைக்க முடியாது. வேண்டுமென்றால் அப்படிப்பட்ட பிரச்சினை வரும்போது, "மெரிட் ஆஃப் தி கேஸ்" என்ற முறையிலே ஆலோசித்து கருணையின் அடிப்படையில் விதிகளைத் தளர்த்தலாம். ஆனால் பொதுவாக விதிகளை ஏற்படுத்த இயலாது.

திரு. ம. சங்கரலிங்கம் : ஊனமுற்றோர் ஆண்டினை உத்தேசித்து பணியில் இருக்கிறவர்களுக்கு விபத்து ஏற்பட்டு அதன் மூலம் ஊனம் ஏற்பட்டால், அவர்களுடைய பணிக் காலத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் எத்தனை ஆண்டுகள் பணி புரிந்திருந்தாலும் முழு ஓய்வூதியம் அளிக்கிற வகையில் அரசு வழி வகுக்குமா? கருணையின் அடிப்படையில் வழங்க வேண்டுமென்றாலும் கூட, அரசாணை வெளியிடுவதுதான் பயன் தரும். எனவே அரசு அத்தகைய ஆணையைப் பிறப்பிக்க பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஊனமுற்றோர் ஆண்டு முடிந்து விட்டது போலும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது எந்த அளவிற்குக் கொடுக்கப்படுகிறது என்ற விவரம் என்னிடத்திலே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதை வேண்டுமென்றால் பரிசீலிக்கலாம். பரிசீலித்து முடிவு எடுக்கின்றபோது ஒருவருடைய தன்மையின் அடிப்படையிலே, அவருடைய பிற்கால வாழ்க்கை அடிப்படையிலே, காலத்தின் நிலைமையை அறிந்து முடிவு எடுக்கலாம். வேண்டுமென்றால் பரிசீலிக்கலாம்.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் கூறியதைப் போல், விதியை முதலில் ஏற்படுத்தவில்லையென்றால், ஒருவர் ஊனமுற்ற பிறகு அவருடைய பிரச்சினையை அமைச்சருக்கோ, உயர் மட்டக் குழுவிற்கோ அனுப்பித்தான் முடிவு எடுக்க வேண்டுமென்ற நிலை வரும். அப்போது நியாயத்திற்கு இடம் இல்லாமல் போகும். விபத்து ஏற்பட்டு ஒருவருக்கு ஊனம் ஏற்பட்டால், அது குறித்து மருத்துவர் சான்றிதழ் கொடுத்தால், அதைப் பரிசீலிக்கலாம் என்று விதி ஏற்படுத்துவதுதான் பாதுகாப்பாக இருக்கும். அதைச் செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலே குறிப்பிட்டபடி ஏலாமை நிலை ஏற்பட்டு, உடல் ஊனமுற்ற நிலை ஏற்பட்டு, ஒருவர் வேலை செய்ய முடியாது என்று மருத்துவத் துறையினர் சான்றிதழ் வழங்கினால், அவர் பத்தாண்டுக் காலம் பணிபுரிந்திருந்தால், அவருக்கு ஓய்வூதியம் தரும் ஏற்பாடு இருக்கிறது. பத்தாண்டுக்கும் குறைவாகப் பணி புரிந்தவர்கள் விபத்துக்குள்ளாகி உடல் ஊனமுற்றால், அவர்களைப் பற்றிய பிரச்சினைக்கு முடிவு என்ன என்பது தான் கேள்வி. அதுபற்றி அவருடைய தன்மையை ஆராய்ந்து தனித்தனியாகக் கவனிக்க வேண்டும். அதற்கும் சேர்த்து பொதுவாக விதி வகுக்க இயலாது. பொதுவாக பத்தாண்டுக் காலம் பணி என்று வரும்போது, ஓய்வூதியம் பெற வாய்ப்பிருக்கிறது.

## தமிழ் நாடு பரிசுச் சீட்டுத் திட்டம்.

* 32. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாடு பரிசுச் சீட்டுத் திட்டத்தை சீரமைப்பது குறித்து, அரசிடம் ஏதும் செயற்குறிப்பு உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) தமிழ் நாடு பரிசுச் சீட்டுத் திட்டத்தின் பல அம்சங்களும் அவ்வப்போது மக்களின் விருப்பத்தினையும், சந்தை நிலையையும் அனுசரித்து மாற்றப்படுகின்றன. முன்பு இத்திட்டத்தின் கீழ் சாதாரண குலுக்கல்களில், ஒரு வரிசைக்கு ரூ. 50,000 வீதம் இரண்டு முதற் பரிசுகள் வழங்கப்பட்டன. பொதுவாக ரூபாய் ஐந்து சிறப்புக் குலுக்கல்களில் எல்லா வரிசைக்கும் ரூபாய் ஒரு இலட்சம் இலட்சம் வீதம் இரண்டு சிறப்பு முதற் பரிசுகளும், இரு குலுக்கல் வீதம் 3 இரண்டாவது சிறப்புப் பரிசுகளும் வழங்கப்பட்டன. இப்பரிசுத் தொகை திட்டங்களை களிலும் மற்ற பரிசுகளும் வழங்கப்பட்டன. மாற்றியமைக்கவும் குலுக்கல்களின் எண்ணிக்கையைக் கூடுதலாக்கவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

பொதுமக்களின் விருப்பத்திற்கிணங்க 12—5—1981 மற்றும் 27—5—1981 ஆகிய தினங்களில் இரு வாரத்திற்கு ஒரு முறை குலுக்கல்கள் சோதனை அடிப்படையில் நடத்தப்பட்டன. ஒவ்வொரு வரிசைக்கும் இரண்டு ரூ. 50,000 முதற் பரிசுகளுக்குப் பதிலாக ஒரே பரிசாக ரூபாய் ஒரு இலட்சம் பரிசு வழங்கப்பட்டது. இவ்வாறு இரு வாரத்திற்கு ஒரு முறை நடத்தும் குலுக்கல்கள் தொடர்ந்து நீடிக்கப்பட்டன.

தற்காலிகமான சிறப்புக் குலுக்கல்களிலும் இரண்டு சிறப்புப் பரிசுகளான ரூ. 5 இலட்சத்திற்குப் பதிலாக ஒரு சிறப்புப் பரிசாக ரூ. 10 இலட்சம் வழங்கப்படுகிறது.

1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முதல் பத்து நாட்களுக்கு ஒரு முறை சாதாரண குலுக்கலை மேற்கொள்வது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

முன்பு முகவர்களுக்குக் கழிவுத் தொகை 11½ சதவீதமாக இருந்ததை அண்மையில் 15 சதவீதமாக உயர்த்தி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய மாநிலத்தில் பரிசுச்சீட்டுத் திட்டம் மாநில அளவில் நடைபெறுகிறது. இதை மாவட்ட அளவில் மாற்றி குலுக்கல்கள் அந்தந்த மாவட்ட அளவில் நடைபெறவும், பரிசுச் சீட்டுகள் அந்தந்த மாவட்ட அளவிலேயே விற்கவும் ஏற்பாடு செய்தால், இன்னும் அதிகமான அளவிற்கு விற்பனையாகும். அது குறித்து அமைச்சர் அவர்கள் பரிசிலனை செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாவட்ட அளவிலே நடத்த இயலாது. இதனால் பல்வேறு நிர்வாகச் செலவுகள் அதிகமாக ஏற்படும். அகில இந்திய அளவிலே 22 மாநிலங்களும் மாநில அளவில்தான் நடத்திக் கொண்டிருக்கின்றன. நம்முடைய பரிசுச் சீட்டுக்களை அவர்களுக்குத் தருவதும், அவர்களுடைய பரிசுச் சீட்டுகளை நாம் பெற்றுக் கொள்வதும் என்ற முறையிலே நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே அந்தந்த மாநில அளவிலேதான் நடத்தப்படும். மாவட்ட அளவிலே வரையறுக்க முடியாது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : பல மாநிலங்கள் பரிசுத் தொகையை 50 இலட்சம் ரூபாய் வரையில் உயர்த்தியிருக்கின்றன. அந்த அளவிற்கு நம் மாநிலத்திலும் உயர்த்துகிற உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன் : இப்போதைக்கு இல்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : பல்வேறு மாநில பரிசுச் சீட்டுக்களைக் காணும்போது, நம்முடைய மாநிலத்தின் பரிசுச் சீட்டுக்களில் கவர்ச்சி குறைவாகத் தெரிகிறது. அவைகளைக் கவர்ச்சிகாமான முறையிலே வெளியிட முன்வருமா ?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப் போன்று நானே ஒப்பிட்டுப் பார்த்து, கவர்ச்சிகரமாக ஆக்கு வதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று துறையினருக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அரசு அச்சகத்தில் நாம் பரிசுச் சீட்டுகளை அச்சிடுவதன் காரணமாக, வசதிக் குறைவுகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். மற்ற மாநிலத்தவர்கள் எல்லாம் சிவகாசி போன்ற நம் மாநிலத்தில் உள்ள இடங்களில்தான் அச்சடித்துக் கொண்டு போகிறார்கள். பரிசு விழாவிட்டாலும் படத்தையாவது வீட்டிலே ஒட்டி வைத்துக்கொள்ள லாம். (சிரிப்பு.) ஆகவே கவர்ச்சிகரமாக ஆக்குவது நல்லது என்று சொல்லியிருக்கிறேன்.

திரு. சோ. ஆறுமுகம் : பரிசுச் சீட்டைக் கவர்ச்சிகரமாக ஆக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறைக்கு ஆலோசனை வழங்கியிருப்பதாகச் சொன்னார்கள். அந்தக் கவர்ச்சி ஆண் படமா அல்லது பெண் படமா என்பதை அறிய விரும்புகிறேன். (சிரிப்பு.) பல்வேறு மாநில பரிசுச் சீட்டுக்கள் நம்முடைய மாநிலத்தில் ஒரு ரூபாய் முதல் ஐந்து ரூபாய் வரையில் விற்கப்படுகின்றன. குலுக்கலுக்கு முந்தைய நாள் ஐந்து ரூபாய், இரண்டு ரூபாய், ஒரு ரூபாய் சீட்டுக்கள் ஐம்பது பைசாவிற்கும் அதற்குக் குறைவாகவும் விற்கப்படுகின்றன. இப்படி விற்பதால் அவர்களுக்கு எப்படி கட்டுப்படியாகிறது ? போலிச் சீட்டுக்கள் நிரம்ப நம்முடைய தமிழ் நாட்டில் நடமாடுவதாகப் புகார்கள் வருகின்றன. அதைப் பற்றி மாநில அரசு பரிசிலனை செய்ததா, நடவடிக்கை எடுக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சாதாரண பரிசுச் சீட்டு இரண்டு ரூபாய் ஒரு ரூபாய் என்றும் சிறப்புக் குலுக்கல் பரிசுச் சீட்டு என்றும் அரசு நிர்ணயிக்கிறது. முகவர்கள் மொத்தமாக அதற்குரிய பணத்தைக் கட்டிவிட்டு அதாவது கழிவுத் தொகை போக மீதியைக் கட்டி விட்டு சீட்டுக்களை எடுத்துச் செல்வதால், அவர்கள் திரும்ப சீட்டை அரசுக்குத் தர இயலாது. அவர்களே தான் விற்றுத் தீர வேண்டும். கிராக்கி அதிகமாக இருந்தால், அதிகமான விலைக்கு விற்கும் நிலையும், கிராக்கி அதிகமாக இல்லாத சூழ்நிலையில், குறைவான விலைக்கு விற்கிற நிலையும் வந்துவிடுகிறது. அவர்களிடம் தேக்கம் ஏற்பட்டால், குறைந்த விலைக்கு விற்றுவிடுகிறார்கள். இதை எந்தவிதத்தில் அரசு தடுக்க முடியும் என்று தெரியவில்லை. பொது மக்கள் ஒத்துழைப்பு இருக்குமானால், ஓரளவிற்குத் தடுக்க முடியும். சட்டப்படி நடவடிக்கை எடுத்து தடுக்க இயலாது.

[1982 பிப்ரவரி 6

(முற்பகல் 9-40)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, இந்தப் பரிசுச் சீட்டுத் திட்டங்களைச் சீரமைக்கும்போது, இந்தத் திட்டத்தின் மூலமாகக் கிடைக்கின்ற வருவாய் இப்போது எந்தெந்தத் துறைகளுக்கு அதிகமாகச் செலவழிக்கப்படுகிறதோ அதை மாற்றி இனி வேறு துறைகளுக்கு, செலவழிக்க வேண்டிய துறைகளுக்கு ஒதுக்க அரசு பரிசிலனை செய்யுமா ? பிற மாநிலங்களிலிருந்து வருகின்ற சீட்டுக்களைத் தடுக்க சட்டபூர்வமாக என்னென்ன நடவடிக்கைகளை அரசு எடுக்க இருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலே சொன்னபடி, பிற மாநிலங்களிலிருந்து வருவதைத் தடுப்பதற்கு வழி செய்தால் நம்முடைய மாநிலச் சீட்டுக்களை அந்த மாநிலங்களில் விற்க இயலாது என்ற நிலைமைகள் ஏற்படும். அந்த அடிப்படையிலேயும் நாம் பார்க்க வேண்டி யிருக்கிறது. நம்முடைய மாநிலச் சீட்டுக்களை மற்ற மாநிலங்களிலும், மற்ற மாநிலங்களின் சீட்டுக்களை இங்கே விற்கவும் அனுமதிக்கப்பட்டிருக் கிறது. அப்படிப்பட்ட நிலைமைகள்தான் இப்போது ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் பாண்டிச்சேரி பரிசுச் சீட்டுத் திட்டத்தை அரசு நடத்தவில்லை. ஒரு ஏஜெண்ட் எடுத்து நடத்துகிறார். அவர் தமிழக அரசின் அனுமதி பெறாமல் நடத்த முடியாது. அதனால் தடுத்து நிறுத்தினோம். அவர் உயர்நீதி மன்றத்தில் வழக்குப் போட்டு தற்காலிகத் தடை வாங்கியிருக்கிறார். வழக்கு விசாரணையில் இருக்கிறது. பொதுவாக எல்லா மாநிலச் சீட்டுக்களையும் எல்லா மாநிலங்களிலும் விற்பது என்ற சூழ்நிலையில் விற்றுக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் மற்ற மாநிலங்களின் சீட்டுக்கள் விற்கின்ற அளவுக்கு நம் மாநிலத்தின் சீட்டுக்கள் பிற மாநிலங் களில் விற்பனை ஆகவில்லை. மத்திய அரசு உதவி செய்யுமானால், அதைச் செய்யலாம். இருந்தாலும், ஒவ்வொரு மாநிலச் சீட்டையும் அந்தந்த மாநிலத்திலேயே விற்க வேண்டுமென்று வந்தால், பிற மாநிலங்களின் சீட்டுக்கள் யாராவது ஒருவர் பெயரில், அங்கேயுள்ள அட்டரசில் இருக்கும். ஆகவே ஒரு காலத்தில் அந்தத் தடை கடைப்பிடிக்கப்பட்டு, பிறகு கைவிடப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பா. ரா. தாமஸ் : பரிசாகக் கொடுக்கப்படுகின்ற மொத்தத் தொகையை பிரிவுகள் அதிகமாக்கி, பரிசுகள் எண்ணிக்கையை அதிமாக்கிக் கொடுப்பதன் மூலம் மக்களுக்கு அதிகமான பலன் கிடைக்கும். ஏற்கெனவே இருப்பதைவிட அதிகமாகக் கொடுக்க அரசு பரிசிலனை செய்யுமா ?



1982 பிப்ரவரி 6]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்ததைப் பெருமளவிற்கு அதிகமாக்கியிருக்கிறோம். ஏற்கனவே 6, 7 திங்களுக்கு முன்னால் பரிசினுடைய மொத்த எண்ணிக்கை ஒரு வரிசைக்கு 2652 பரிசுகள். அப்போது 10 ரூபாய்க்குப் பரிசு இல்லாமல் ரூ. 50 அளவில் நின்றது. வேறு சில மாநிலங்கள் ரூ. 10, ரூ. 5 என்று கொடுத்து வருகின்றன. மக்களுக்கு அதிலே திருப்தி ஏற்படும் என்று கருதி நாமும் இப்போது ரூ. 10 என்று 10 ஆயிரம் பரிசுகள் என்று கொடுக்க விருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மொத்தம் 11,567 பரிசுகள் மக்கள் பெறுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறோம். இரு வாரத்திற்கு ஒரு முறை என்று இருப்பதை 10 நாட்களுக்கு ஒரு முறை பரிசுக் குலுக்கல் என்று அதிகமாக்கியிருக்கிறோம். மக்களுக்கு அதன் மூலமாக அதிக நன்மை ஏற்படும்.

## Sales Tax Advisory Committee

* 33. *Q.*—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the date on which the meeting of the Sales Tax Advisory Committee was last convened;

(*b*) whether it is a fact that the meeting is not being convened as per the rules; and

(c) if so, the reasons therefor ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) 25—6—1981.

(இ) மற்றும் (உ) : மாநில விற்பனை வரி ஆலோசனைக் குழு கூட்டப்படுவதற்கான கால கட்டம் பற்றிய விதிகள் இல்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, இந்த விற்பனை வரியை மூலப்பொருள் அளவிலேயே விதிக்கின்ற எண்ணம் அரசுக்கு உண்டா? அது வணிகர்களுக்கு நலமாக இருக்கும் என்று அரசுக்குத் தெரியுமா ? விற்பனை வரி விதிப்புப் பற்றி 1961 ஆம் ஆண்டு 46-வது திருத்தச் சட்டம், மாநில அரசுக்கு அதிகாரம் வழங்குகின்ற அந்தச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கிறதா ? அதைத் தாமதப்படுத்துவதால் அரசுக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்படுகிறது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : விற்பனை வரியை மூலப் பொருள்களின் மீதே விதிப்பதால் சில இடங்களிலே நன்மை ஏற்படுகிறது. சில இடங்களிலே நஷ்டம் ஏற்படுகிறது. அதைப் பற்றி அரசு ஆராய்ந்து

எவ்வெப்போது எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்து வருகிற என்பதை மட்டுமே இப்போது தெரிவித்துக் கொள்கிறேன். உறுப்பின அவர்கள் வேறு ஒரு கேள்வியையும் கேட்டுவிட்டார்கள். இந்த விற்பனை வரிச் சட்டம், 1981 ஆம் ஆண்டு 46-வது திருத்தச் சட்ட முன்வடிவு அரசிய சட்டத்தில் பிரிவு 366-ல் என்னவாயிற்று என்று கேட்டிருக்கிறார்கள். இது மத்திய நாடாளுமன்றத்தில் 2 ஆண்டுகளுக்கு முன்னால் முன்மொழியப்பட்டு இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

திரு. க. இராமமூர்த்தி : இந்த விற்பனை வரி ஆலோசனைக் குழுக் கூட்டம், அவ்வப்போது கூடுகிறதா ? இப்போது இந்த ஆலோசனைக் குழுக் கூட்டம் கூடி ஏதாவது பரிசீலிக்க வேண்டிய பொருள்கள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பொதுவாக அதை எப்போது கூட்ட வேண்டுமென்று சட்ட விதிமுறை இல்லை. மூலச்சட்டம் எப்போது முதன்முதலில் போட்டார்களோ அப்போதே எவ்வப்போது கூட்ட வேண்டும் என்று போடவில்லை. 1956-ல் தான் முதலிலே இந்தக் குழுக்கூட்டம் கூட்ட வேண்டுமென்று அரசு உத்தரவு போட்டது. இந்த அரசு வந்த பிறகுதான், குறைந்தது ஆண்டுக்கு மூன்று முறைகளாவது கூட்டவேண்டும் என்றும், அதுவும் துறையின் மற்ற வேலைகளுக்கு குந்தகம் எதுவும் இல்லாத அளவில் கூட்ட வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வகையில் தான் இந்தக் கூட்டம் கூட்டப்படுகிறது.

திரு. வி. வி. வி. ஆனந்தம் : எந்தப் பொருள் பற்றி கூட்டம் போடப் படுகிறது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : எவ்வப்போது எந்தப் பொருள்கள் பற்றிப் பேசுவது என்று வருகிறதோ, அந்தப் பொருள்களைப் பற்றிச் சொல்கிறார்கள். அதன்படி பேசுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. வி.வி. ஆனந்தம்: தலைவர் அவர்களே, மாவட்ட அளவிலான விற்பனை வரிக்குழுக் கூட்டங்கள் நடைபெறுவதே இல்லை. அதைத் [illegible] நடைபெறச் செய்ய அரசு முன்வருமா ?



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாவட்டத்தில் இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் அந்தக் குழுக்கள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. எங்கே இயங்கவில்லையென்று குறிப்பிட்டால் அதற்கு அரசு அறிவுரை வழங்கும். குறிப்பிட்ட மாவட்டத்தில் நடக்க வில்லை என்று உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்தால், அதை எடுத்துச் சொன்னால், அதன் மீது அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(டாக்டர் இரா. சனார்த்தனம் எழுந்தார்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இந்தக் கேள்வி விற்பனைவரிக் குழுவைப் பற்றிய கேள்வி. அதைப் பற்றிக் கேட்கலாம். அதைப் பற்றிக் கேட்கவில்லை. அதை விட்டுவிட்டு வேறு கேட்கிறார்கள். எதையும் விற்பனை வரி தொடர்பாகக் கேட்கலாம் என்றால் அதற்குக் காலம் இருக்காது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : விற்பனை வரிச் சட்டத்தை அமுல் படுத்தாததால், மாநில அரசுக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : டாக்டர் சனார்த்தனம் கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் தருகிறாரா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இப்படிப்பட்ட சட்டம் கொண்டுவரப்படுகிறது என்றால், நம் மாநிலத்திற்கு மட்டும் அல்ல, இருக் கின்ற எல்லா மாநிலங்களுக்கும் சேர்த்துத்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது. என்ன காரணத்தினாலேயோ அது இன்னும் நிறைவேற்றப் படவில்லை என்பதுதான் வருத்தத்திற்குரியதாக இருக்கிறது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் இதிலே பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. சொல்லவேண்டு மானால் இன்டர்ஸ்டேட் கன்சூமர் கூட்ஸ் விஷயத்தில் சங்கடம் வருகிறது. எங்கேயாவது கோடவுனை வைத்து விட்டு, அத்துடன் வேறு வேறு மாநிலங்களிலும் கோடவுனை வைத்துக் கொள்வார்கள். அதற்குப் பிறகு இங்கே அதற்கு வரி செலுத்தாமல் விட்டுவிடுவார்கள். வரி செலுத்தாததற்குக் காரணம் கேட்டால், 'ஓர்க் கான்ட்ராக்ட்' என்று சொல்லிவிடுவார்கள் 'ஓர்க் கான்ட்ராக்ட்' என்றால், கான்ட்ராக்டர்களே அந்த வேலையை பொருளை வாங்கிச் செய்வது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால், லிப்ட், ஏர் கண்டிஷனர் இவையெல்லாம் வருகிறது. அவரே கான்ட்ராக்ட் எடுத்து செய்துவிட்டால், அதற்கு நாம் வரி போட முடியாது. இப்படிப் பட்ட நிலைமைகள் இருக்கின்றன. அது மட்டுமல்ல. ஹயர் பர்சேஸ். ஹயர் பர்சேஸ் என்றால் தவணை முறையிலே ஒருவர் ஒரு பொருளை

வாங்கிக்கொள்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்தப் பொருளுக்கான தொகையை 10 ஆண்டுகளுக்கு தவணை முறையில் கொடுப்பார்கள். பத்து ஆண்டுகள் கழித்து அதன் விலையை மதிப்பிட்டு வரி போடும்போது பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. அரசுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. இதை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். இதிலே மத்திய அரசு இன்றும் தயக்கம் காட்டிக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. நம் மாநிலத்தில் மட்டும் குறைந்தது ஆண்டுக்கு 25 கோடி ரூபாய் அளவிற்கு நஷ்டம் ஏற்படுகிறதென்று உத்தேசமாக எண்ணப்படுகிறது.

### Single Point Sales Tax on Foodgrains

*34. Q.—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the Government are aware that, due to the difference in single point sales tax on foodgrains in this State and Pondicherry, trade in foodgrains has been diverted from Tamil Nadu; and

(b) if so, the action proposed to be taken thereon by the Government?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) மற்றும் (இ) : உணவு தானியங்களான நெல், அரிசி, சோளம், கம்பு, கேழ்வரகு இப்படிப்பட்ட பொருள்களுக்கு விற்பனை வரி இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு வி. வி. வி. ஆனந்தம் : தலைவர் அவர்களே, அண்மையில் கர்நாடக முதல்வர் திரு. குண்டு ராவ் அவர்கள் தென்னக மாநிலங்களில் உள்ள சில பொருள்களுக்கு ஒரே விகிதத்தில் விற்பனை வரியை வைத்துக்கொண்டால் நலமாக இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும் எண்ணத்தில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் : மாநில முதலமைச்சர்கள் அவரவர்கள் மனதிலேபடுவதைச் சொல்லிக்கொண்டிருப்பார்கள். அதையெல்லாம் பரிசீலித்துக்கொண்டிருப்பது நம்முடைய வேலையில்லை. நம்முடைய மாநிலத்திற்கு அது எப்படிப் பொருந்தும் என்றுதான் இந்த அரசு யோசிக்கும்.





### விருதுபெற்ற ஆசிரியர்களை கௌரவித்தல்

*35. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தேசிய மற்றும் மாநில நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியர்களை கௌரவிக்கும் வகையில், காவல் மற்றும் இராணுவம் போன்ற துறைகளில் விருது பெற்றவர்களுக்கு வழங்கப்படுவதைப்போல, இரண்டு கூடுதல் ஊதிய உயர்வுகள் வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்போதிருந்து அமுலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை. காவல், இராணுவம், போன்ற துறைகளில் விருதுபெற்றவர்களுக்கு ஊதிய உயர்வு ஏதும் வழங்கப்படுவதில்லை.

(இ) இக்கேள்விக்கிடமில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, ஆசிரியர்களுக்கு தேசிய மற்றும் மாநில அளவிலே நல்லாசிரியர் விருதுகள் வழங்குகிறார்கள். விருது வழங்குவதனாலே மட்டும், அப்படிப்பட்ட விருதுகளை எனையோரும் பெற வேண்டுமென்ற ஊக்கம் அதிக அளவுக்கு வந்துவிட முடியாது. ஆகவே காவல், இராணுவம் ஆகிய துறைகளில் விருதுபெற்றவர்களுக்கு, இரண்டு கூடுதல் ஊதியம் கொடுப்பது போல், இப்போது அதுபற்றி எந்தச் செயற்குறிப்பும் அரசிடத்திலே இல்லை என்றாலும், அந்த எண்ணத்தை ஊக்குவிக்கின்ற வகையிலே இனியேனும் அரசு அதைப்பற்றிப் பரிசீலனை செய்யுமா ?

(முற்பகல் 9—50)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நல்லாசிரியர் விருது பெற்றவர்களைக் கௌரவிக்கும் வகையில் நாம் சில நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறோம். அது ஆசிரியர்கள் மத்தியில் ஊக்கமளிக்கின்ற வகையில் இருக்கிறதென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் இது போதாது, பணம் என்ற அடிப்படையில் ஏதாவது உதவி அளிக்க வேண்டுமென்று கேட்டார்கள். காவல், இராணுவம் போன்ற துறைகளில் ஊதிய உயர்வு தரப்படுவதில்லை என்று நான் குறிப்பிட்டேன். ஆனால் அங்கே படியாக ரூபாய் 60 தந்து கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் அவர்கள் ஊக்கம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர்கள்

என்று வரும்போது, நாம் அத்தகைய படி எதுவும் தருவதில்லை. ஊதிய உயர்வு அங்கேயும் இல்லை, இங்கேயும் இல்லை என்ற அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினரவர்களின் யோசனையைப் பரிசீலிக்கலாம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** படியை உயர்த்தும் நிலைமை இல்லாவிட்டாலும்கூட நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கு வேலை வாய்ப்பிலே முன்னுரிமை அளித்தல், பணிக் காலத்தை நீட்டித்தல், கல்விக் குழுக்களில் அவர்களை நியமித்தல் போன்ற சலுகைகளை அளிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அவர்களுடைய குழந்தைகளுக்குச் சலுகை அளிப்பதென்பது, முன்னுரிமை அளிப்பதென்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. கல்விக் குழுக்களில் அவர்களுடைய அனுபவத்தைப் பயன்படுத்திக் கொள்வது என்பது சிறந்த யோசனை. அதைப் பரிசீலிக்கலாம்.

**திரு. பா. ரா. தாமஸ் :** நமது மாநிலத்தில் 1976-77லே, அவசரகால நிலை வருவதற்கு முன்னதாக தேசிய விருது பெற்ற ஆசிரியர்களுக்கு மூன்று ஆண்டுக் காலம் அவர்கள் பணியை நீட்டித்துக் கொடுத்தார்கள். மாநில விருது பெற்றவர்களுக்கும் அப்படி பணி நீட்டிப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். ஆனால், அது நிறுத்தப்பட்டுவிட்டது. அதை மீண்டும் பரிசீலித்து அத்தகைய வாய்ப்பை நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியர்களுக்குக் கொடுக்க ஆலோசனை செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அதை மத்திய அரசிலே கொண்டு வந்தார்கள். அவர்கள் நிறுத்திவிட்டார்கள். அவர்களிடத்திலே கேட்டு, பரிசீலிக்க வேண்டும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** நல்லாசிரியர் விருது வழங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள குழுக்கள் திட்டவட்டமான கோட்பாடுகளின் அடிப்படையில் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கவில்லை என்பதால் பல குறைகள் ஏற்படுகின்றன. தெளிவான திட்டவட்டமான கோட்பாடுகளை வரையறுக்கவும், அந்தக் குழுக்களை மாற்றி சீரமைக்கவும் அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து நல்லாசிரியர் என்று நாம் பெருமைப்படுத்துகிறோம். இந்த விருதைத் தர நினைக்கின்றபோது, ஆசிரியர்களிடையே தாங்கள் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறோம், சம்பளத்திற்காக வேலை செய்து கொண்டிருக்கிறோம்



என்ற உணர்வை மாற்றி, மக்களுக்காக, மாணவர்களுக்காகப் பாடுபடுகிறோமென்று நினைக்கும் விதத்திலே செய்ய வேண்டும். யார் அப்படி மாணவர்கள் நலன் கருதிப் பாடுபடுகிறார்களோ, அக்கறை எடுத்துக் கொண்டு பாடுபடுகிறார்களோ அவர்களைத் தேர்ந்தெடுத்துப் பாராட்டும்போது, அந்த முறையில் அத்தகைய ஆசிரியர்கள் அதிகமாக வருவார்கள் என்று எண்ணி, இந்த முறையைப் பயன்படுத்துகிறோம். இதுதான் பொதுவான கைட்லைன்ஸ் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மேலும் ஆசிரியர்களுடைய அனுபவம் என்று ஒன்றை வைத்திருக்கிறோம். அனுபவம் உள்ள, நல்லபடியாகப் பணியாற்றும் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கும் குழுக்கள் இதுவரை நல்முறையில்தான் தேர்ந்தெடுத்திருக்கின்றன. புகார்கள் வரும்போது பார்க்கிறோம். கூடுமானவரையில் எந்தவிதத் தலையீடும் இல்லாத அளவிற்கு அரசு பார்த்துக்கொள்ளும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** பல்கலைக் கழகங்களிலே ஓய்வு பெற்ற ஆசிரியர்களில் 'ப்ரபொசர் எமெரிடஸ்' என்று வருடத்திற்கு 5,000 ரூபாய் கொடுத்து, பல கல்லூரிகளிலே அவர்களுடைய கல்வித் திறனையும், அனுபவத்தையும் வைத்துக்கொண்டு போதிக்க வசதி செய்யப்பட்டிருக்கிறது. அதுபோல நல்லாசிரியர்கள் விருது பெற்றவர்கள் ஓய்வு பெற்ற பிறகு, 2 ஆண்டுகள் அவர்கள் விரும்பினால் வேலை பார்த்த அந்த வட்டத்திலேயே ஆய்வாளர்களோடு சேர்ந்து பள்ளிச் சீரமைப்பு, பள்ளிகளில் புதிய முறையில் கல்வி கற்பித்தல் போன்றவற்றுக்கு வாய்ப்பளித்து, வருடத்திற்கு இவ்வளவு என்று கொடுக்கின்ற முறையில் ஒரு புதிய திட்டத்தை அரசு பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியர்களின் அனுபவம், அறிவு ஆகியவற்றைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சொன்னபோதே, பரிசீலிக்கிறோமென்று சொன்னேன். அந்த அடிப்படையிலேதான் எதிர்க் கட்சித் தலைவரவர்களும் சொன்னார்கள். அதைப் பரிசீலனை செய்யலாம்.

**திரு. சி. இராமலிங்கம் :** ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருது கொடுப்பதை வரவேற்கிறேன். ஆசிரியர்களைப் போன்றே பள்ளிகளில் எழுத்தர்கள், மற்றவர்கள் பணி புரிகிறார்கள். அவர்களுக்கும் விருது கொடுக்கும் ஆலோசனை அரசுக்குண்டா ?

[1982 பிப்ரவரி 6

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆசிரியர்கள் மாணவர்கள்மீத
அக்கறை, ஈடுபாடு கொண்டு பணியாற்ற வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தி
அவர்களை ஊக்கப்படுத்தத்தான் நல்லாசிரியர் விருது கொடுக்கிறோம்
எழுத்தர்கள் என்று வரும்போது அவர்கள் நடைமுறைக் காரியங்களைத்தான்
செய்கிறார்கள். அவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் தனி விருதுகள் த
வேண்டாமென்று கருதுகிறேன்.

## பட்டதாரி ஆசிரியர்களுக்கு தலைமை ஆசிரியர் பதவிகள்.

* 36. வினா—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்ச
அவர்கள் 28—2—1979 அன்று சட்டமன்ற மேலவையில் வினா எண் 72-க்கு
அளித்த விடையினையொட்டி, கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க
வேண்டுகிறேன் :

(அ) அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்களில், சிறப்பு
மொழித் தேர்வு எழுதி வெற்றி பெற்றவர்கள் அனைவருக்கும் தலைமை
ஆசிரியர் பதவிகள் கொடுக்கப்பட்டு விட்டனவா ?

(இ) ஆம் எனில், அவர்களுடைய தலைமை ஆசிரியர் பணியின் மூப்பு
அவர்களுடைய முன்னாள் பணி மூப்பை ஒட்டியே வழங்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) தமிழ்நாடு பள்ளிக் கல்வி
சார்நிலைப் பணி விதி 11 (சி)-இன் கீழ் சிறப்பு மொழித் தேர்வு தேறியிருக்க
வேண்டிய பள்ளி உதவி ஆசிரியர்கள் அவ்வாறு சிறப்பு மொழித் தேர்வில்
தேர்ச்சி பெற்றிருப்பதுடன் ஏனைய தகுதிகள் பெற்றிருப்பின் அவ்வாறான
பட்டதாரி ஆசிரியர்களுக்கு தலைமை ஆசிரியர் பதவி கொடுக்கப்பட்டு
உள்ளது.

(இ) தலைமை ஆசிரியர் பதவி உயர்வு சமயத்தில் மொழித் தேர்வில்
தேர்ச்சி பெற்றிருப்பின் அவர்களுக்குத் தலைமை ஆசிரியர் பணியில் மூப்பு
அவர்களுடைய முன்னாள் பணி மூப்பை ஒட்டியே வழங்கப்படுகிறது
தலைமை ஆசிரியர் பதவி உயர்வு சமயத்தில் சிறப்பு மொழித் தேர்வில் தேர்ச்சி
பெறாமல், பின்னர் தாமதமாக சிறப்பு மொழித் தேர்வு எழுதி வெற்றி பெற
பவர்கள் அவ்வாறு தேர்ச்சி பெற்ற பிறகு தலைமை ஆசிரியர் பதவி அளிக்கப்
படுகிறார்கள். அப்பொழுது முன்னாள் பணி மூப்பு தேதியிலிருந்து வேறுபட்டு
பின்னிட்ட தேதியில் தலைமை ஆசிரியர் பதவியில் பணி மூப்பு பெறும் நிலை
ஏற்படும்.



982 பிப்ரவரி 6]

திரு. ம. சங்கரலிங்கம் : 1979 பிப்ரவரி 28 ஆம் தேதி நாள் கேட்ட ஒரு
வினாவை ஒட்டியது இது. ஒரு ஆசிரியர் சிறப்பு மொழித் தேர்வு எழுதுவதற்கு
விண்ணப்பம் செய்து, பப்ளிக் சர்வீஸ் கமிஷன், தேர்வு எழுத வேண்டிய
தேவையில்லை, பி.டி. யில் தமிழ் படித்திருப்பதால், தமிழ்த் தேர்வு எழுத
வேண்டாமென்று சொல்லிவிட்டதால், அவர் எழுதாமல் போய்விட்டது.
பின்னால் அதை அவர் அரசுக்குச் சொல்லி, தலைமை ஆசிரியர் பதவி
பெற்றாலும், அவருக்கு சீனியாரிட்டி கொடுக்கப்படவில்லை என்று
சொன்னேன். அது பரிசீலிக்கப்படுமென்று சொன்னார்கள். அவருக்கு பணி
மூப்பு கொடுக்கப்பட்டிருக்கிறதா ? கொடுக்கவில்லை என்றால், அவரிடமிருந்து
முறையீடு வந்தால் கவனிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : வினா பொதுவாக உள்ளது
தனிப்பட்ட ஒருவருடைய பிரச்சினைபற்றி என்னிடத்தில் எழுதிக் கொடுத்தால்
விசாரிக்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : 28—2—1979 அன்று மேலவை வினா 72-ல்
அந்த ஆசிரியர் பெயர் எல்லாம் இருக்கிறது. இருந்தாலும் இன்னும் ஒரு
முறை முறையீடு செய்யச் சொல்கிறேன். அதை அரசு கருணையோடு
கவனிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கோரிக்கை நியாயமானதாக
இருந்தால், கருணை இருக்கும்.

## போதுமான கட்டிட வசதி இல்லாத பள்ளிகள்.

* 67. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் (செல்வி ஆ. லீலாவதி
சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப்
பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள பெரும்பான்மையான அரசுப்
பள்ளிகள், போதுமான கட்டிட வசதியில்லாத நிலையில் உள்ளன என்பதை
அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், கட்டிட வசதியைப் பெருக்க அரசு எடுக்கக்
கருதியுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (இ) செங்கல்பட்டு
மாவட்டம் மட்டுமல்ல தமிழ் நாட்டில் உள்ள பல பள்ளிகளுக்குப் போதுமான
கட்டிட வசதிகள் இல்லை, இவை அனைத்திற்கும் கட்டிடவசதி செய்ய
தற்குத் தோராயமாக ரூ. 53 கோடி ஆகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இவ்வளவு பெரிய செலவினத்தை அரசு உடனடியாக ஏற்க இயலாது. ஆண்டு தோறும் வரவு-செலவுத் திட்டத்தில் உயர்நிலைப் பள்ளிகளுக்குப் புதிய கட்டிடம் கட்டுவதற்கென ஒதுக்கப்படும் தொகையில் எல்லாப் பள்ளிகளின் தேவையையும் கருத்திற்கொண்டு முன்னுரிமை அடிப்படையில் ஆண்டுதோறும் மிகத் தேவையான பள்ளிகளுக்குக் கட்டிடம் கட்ட அரசு உத்தரவு பிறப்பித்து மேல் நடவடிக்கை எடுத்து வருகிறது. அரசு உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்படும்போது ஒரு வகுப்பறையும் ஒரு அறிவியல் ஆய்வுக் கூட அறையும் கொண்ட கட்டிடம் கட்டிக் கொடுக்கப்படுகிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் தொடக்கப் பள்ளிகளுக்கான கட்டிடங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடக்கின்றன. ஆனால், அந்தத் திட்டத்தில் உயர்நிலைப் பள்ளிகளும், மேல்நிலைப் பள்ளிகளும் வரவில்லை. தனியார் பள்ளிகளின் தரத்தை அரசுப் பள்ளிகளோடு ஒப்பிட்டுப் பேசும்போது, கட்டிட வசதிகள் இல்லாமல் அரசுப் பள்ளிகளிலே நாம் தரத்தை உயர்த்த வேண்டுமென்று பேசுவதால் பயனிராது. ஏற்கெனவே ஒன்றைக் கல்வி அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அரசுப் பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் கட்ட ஆயுள் காப்பீட்டுக் கழகத்தோடு கலந்து பேசுவதாகச் செய்தி வந்தது. அண்மையில் ரிசர்வ் வங்கியின் பிரதிநிதிகளோடு கலந்து பேசுவதாகச் செய்தி வந்தது. அந்தப் பேச்சு வார்த்தை எந்த அளவிற்கு இருக்கிறது? வெற்றி பெற்று விட்டதா? வெற்றி பெறுவதற்கான நம்பிக்கை அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தொடக்கப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் கட்டிட வசதி இல்லாத பள்ளிகளுக்குக் கட்டிடம் கட்டும் சிறப்புத் திட்டம் கடந்த 2 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வருகிறது. ஆகவே, இம்மாதிரி பள்ளிகளுக்குக் கட்டிட வசதி இல்லையென்ற குறை விரைவில் நீங்கிவிடும். இப்போது மேல் நிலைப் பள்ளிகளை எடுத்துக்கொண்டால், இதுமாதிரி குறைகள் இல்லை. தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் விரைவில் திட்டங்கள் யாவும் நிறைவுற வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரும்புகிறார்கள். ஆகவே, அதிலே மேல்நிலைப் பள்ளிகளையும் சேர்த்துக் கொள்ளலாம். ஆனால், இதற்காக 52 கோடி ரூபாய்க்கு மேல் தேவைப்படுகிறது. செங்கல்பட்டு மாவட்டத்தினுடைய நிலைமையை நான் சொல்ல



126பி பிரிவு பள்ளிகளும் ஆக,
ற்படுகிறேன். 27ஏ பிரிவு பள்ளிகளும், 23 பள்ளிகள்
ரத்தத்தில் 153 அரசுப் பள்ளிகள் உள்ளன. அதில் 5 பள்ளிகள்
பாதுமான கட்டிட வசதியில்லாமல் இருக்கின்றன. இந்த 23-ல் நடக்கின்றன.
ரியான கட்டிட வசதியில்லாமல் ஓலைக் கொட்டகைகளில் 8 பள்ளிகள்
ஒரு பள்ளி தனியார் கட்டிடத்தில் நடைபெறுகின்றது. நடைபெறுகின்றன.
வசதியில்லாதபடியால் கட்டிடம் மற்றும் கொட்டகைகளில் நடைபெறுகின்றன.
பள்ளிகள் வசதிக் குறைவான கட்டிடங்களில் இயங்கி
பள்ளிகள் இன்றுக் கொட்டகை மற்றும் தனியார் கட்டிடங்களில் இயங்கி வருகின்ற
வருகின்றன. இது இன்றையதினம் உயர்லைப் பள்ளிகள் அவைகளுக்குக் கட்டிடங்களைக்
மோசமான நிலையாகும். ஆனால் சீக்கிரமாக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இது
கட்டித் தரும் வகையில் இந்த நிதி உதவி பெற அணுகினோம்.
சம்பந்தமாக எல்.ஐ.சி.யிடமிருந்து என்பது ஒரு இன்வெஸ்ட்மெண்ட்
அவர்களும் கல்விக்காக நிதி உதவி செய்வது செய்து சென்ட்ரல் கேபினெட்டில்
என்கிற அடிப்படையில், அதற்கேற்ப முடிவு இருக்கிறார்கள். அதுபோல்
டவெடுத்துச் சொன்னால், தரத் தயாராக நிதி உதவி பெற முயற்சி செய்தோம்.
சியமயமாக்கப்பட்ட வங்கியிலிருந்து ஆனால், அவர்கள் வட்டி
வர்களும் தரத் தயாராக இருக்கிறார்கள். அதாவது வெளியில் அவர்கள் பெறுகின்ற வட்டி
திகமாகக் கேட்கிறார்கள். நமக்கு வட்டியைக் குறைத்துத் தர
தத்தை இதற்கும் கேட்கிறார்கள். ரிசர்வ் பாங்குதான் முடிவு செய்ய வேண்டும்.
வண்டுமென்றால், அதுகுறித்து செய்து அவர்களுக்கு அனுமதி தர
தற்கும் சென்ட்ரல் கேபினட் முடிவு மேற்கொண்டிருக்கிறோம். இது
வண்டும். அதற்கான முயற்சிகளையும் கல்வி அமைச்சர்கள் மாநாட்டில்
பான்று நிதி உதவி செய்ய வேண்டுமென்று ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.
ட பேசப்பட்டு, அதை அனைவரும் நல்ல முடிவை எடுத்தால்,
அவர்களிடம் இதுகுறித்து வற்புறுத்தி அவர்களும் இத்தகைய கட்டிடங்களைக்
அதன்மூலம் நமக்கு நிதி உதவி வரும்போது
கட்டிக் கொடுக்க அது வாய்ப்பாக இருக்கும்.

திரு. ஜே. எம். மியாகான் : தலைவரவர்களே, செங்கல்பட்டு ஜில்லாவில் 23 பள்ளிகளில் போதிய அளவு கட்டிட வசதியில்லை என்று மாண்புமிகு அமைச்சர் இங்கே சொன்னார். குரோம்பேட்டையில் உள்ள அரசுப் பள்ளியில் 3,200 மாணவ மாணவியர்கள் பயில்கிறார்கள். ஆனால் அவர்களுக்குத் தேவையான அளவில் கால் பங்கு கூட இட வசதி இல்லை. மழை பெய்தால் அவர்கள் சேற்றில், சகதியில் உட்கார வேண்டியிருக்கிறது, அதன் காரணமாக அவர்களுக்கு நிம்புனியா வருகிறது. கட்டிடம் கட்ட அரசு நிதி உதவி

செய்யும்போது, இம்மாதிரிப் பள்ளிக்கூடங்களுக்கு முதலில் வசதி செய்து கொடுக்க வேண்டும். மேலே கூரையும், கீழே நல்லமாதிரி தரையும் போட்டுக் கொடுக்க வேண்டும். முக்கியமாக, அத்தியாவசியமாகத் தேவைப்படும் பள்ளி களுக்கு முதலில் இவ்வசதியைச் செய்து கொடுக்க வேண்டும். அவர்கள் பாடம் படிக்கிறார்களா இல்லையா என்பது வேறு விஷயம். முக்கியமாக அவர்களுக்கு வேண்டிய வசதி வாத்தியார்கள் இருப்பது. அதற்குத் தேவையான வாத்தி யார்கள் இருக்கிறார்கள். பிரையாரிட்டி முறையில் அப்பள்ளிக்கு மேலே கூரையும், கீழே தரையும் அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? எவ்வளவு நாள் அதற்கு ஆகும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நான் சொன்ன 23 பள்ளிகளில் குரோம்பேட்டை பள்ளி வராது. அதைவிட மோசமான நிலையில் 23 பள்ளிகள் இருக்கின்றன என்பதைத்தான் நான் இங்கே சொன்னேன். அவற்றிற்கு வேண்டிய வசதிகளைச் செய்த பிறகுதான் இதைப்பற்றிப் பேச வேண்டும். அதுமட்டுமல்லாமல், அறைகளைக் கொண்ட கட்டிடங்களைக் கட்டி, அவற்றின் மூலம்தான் கல்வியைத் தர வேண்டும் என்பது இதுவரை இருந்த முறை. ஆனால், இப்போது புதிதாகத் தோன்றியிருக்கிற ஒரு கருத்து அறைகள் இல்லாமல் திறந்த வெளியில் கல்வியைச் சொல்லித் தருவது அறிவு வளர்ச்சிக்கு நல்லதாக இருக்கும் என்பது. இப்படிப்பட்ட ஒரு நல்ல கொள்கையைப் பின்பற்றி, மாணவர்களுக்கு நல்ல அறிவு வளர்ச்சியைத் தரத் தக்க முயற்சியைப் பற்றிப் பேசுவதுகூட நல்லது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** போதிய கட்டட வசதியில்லாத பள்ளிகளைப் பற்றிச் சொல்லும்போது அமைச்சர் அவர்கள் மாநிலம் பூராவும் உள்ள நிலைமையைச் சொன்னார்கள். பொறியியல் வல்லுநர்களால் இனி இந்தக் கட்டிடத்தில் பாடங்கள் நடத்தினால், மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஆபத்து என்று அறிவிக்கப்பட்ட பின்னரும் அந்தப் பள்ளிகளிலே வேறு வசதியில்லாத காரணத்தால், வகுப்புகளை அங்கேயே தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி அமைச்சர் அறிவாரா? அப்படிப் பட்ட பள்ளிகள் குறித்து உடனடியாக உரிய நடவடிக்கை எடுத்து பிரச் னைக்குத் தீர்வு காண அமைச்சர் முன்வருவாரா? உதாரணத்திற்கு புதுக் கோட்டையில் உள்ள பள்ளிக்கூடத்தைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சென்னை செங்கல்பட்டு மாவட்டத்தி லுள்ள பள்ளிகளைப் பற்றியது.



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, பொறியியல் வல்லுநர்கள் கட்டிடங்கள் தகுதியற்றவை என்று சொல்லிய பிறகும், அப்படிப்பட்ட கட்டிடங்களிலே வகுப்புகள் நடத்தக் கூடாது என்று சொன்ன பிறகும், வகுப்புகள் நடத்து வருவதாக இங்கே உறுப்பினர் சொன்னார். ஆனால், எந்தப் பள்ளிக்கூடம் என்கிற விவரம் இல்லை. அப்படிப்பட்ட விவரம் இருந்தால், குறிப்பிட்டுத் தருமாறு உறுப்பினரைக் கேட்டுக்கொள்கிறேன். ஆனால், ஒன்றைச் சொல்கிறேன். பொறியியல் வல்லுநர்கள் ஒரு பள்ளிக்கூடத்தில் தொடர்ந்து வகுப்புகள் நடத்தினால் ஆபத்து என்று சொன்ன பிறகும், மாணவர்கள் அங்கு இருக்கக்கூடாது என்று சொன்னதற்குப் பிறகும், அங்கு வகுப்புகள் நடத்துவது நல்லதல்ல, எந்தக் காரணத்தைக் கொண்டும், அவர்கள் எந்த நிலைமையில் இருந்தாலும், அதைப் பயன்படுத்தக்கூடாது என்பதுதான் அரசின் கருத்தும். யாராக இருந்தாலும், அப்படிப் பயன்படுத்தக்கூடாது, ஆனால் அதற்குப் பதிலாக அவர்கள் வேறு மார்க்கத்தைக் கையாள அரசின் உதவியைப் பெற முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி :** கட்டிடங்கள் வசதி இல்லாத நிலையில் அல்லது திறந்த வெளிப் பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கின்ற பள்ளிகளுக்குத் திறந்த வெளிப் பள்ளி முறையை அரசு தீவிரப்படுத்துமா? அப்படிச் செய்கின்றபோது வெயில் அடிக்கின்ற காலங்களிலும் மழை காலங்களிலும், அதிகமாக அவற்றைத் தடுக்கின்ற முறையில் ஷெல்ட்டர் போட்டு அதாவது வலுவான கீற்றுக் கொட்டகைகள் போட்டு ஏற்பாடு செய்துகொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** நல்ல கட்டிடங்கள் என்று சொல்கிறபோது, நாம் 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் செலவு செய்து கட்டிக் கொடுக்கிறோம். மற்றபடி தற்காலிகமாக மற்றவர்கள் இத்தகைய வசதியைச் செய்து தந்தால், அதைப் பயன்படுத்திக் கொண்டும் இருக்கிறார்கள். ஆனால் அரசாங்கம் அப்படிச் செய்யவில்லை. கீற்றுக் கொட்டகை என்று வரும் போது, நம்முடைய மாநிலத்தில் பல்வேறு கல்வி நிலையங்களில் 40, 50 ஆண்டுகளுக்கு மேலாக கீற்றுக் கொட்டகையைப் பயன்படுத்திக்கொண்டு வருகிறார்கள். ஆனால் இடையிடையே அவற்றில் சில மாறுதல்களைச் செய்து கொண்டு அவற்றை நல்லமுறையில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மாணவர்கள் அங்கே நல்ல முறையில் உட்கார்ந்து கல்வி பயிலக்கூடிய சூழ்நிலையும் இருக்கிறது. நான் சமீபத்தில் கலாட்சேத்திராவிற்குப் போன போதும் இத்தகைய பள்ளிகளைப் பார்த்தேன். அங்கே ஒரு குறைபாடும்

இல்லை; நல்ல முறையில், பெரிய சிமெண்ட்டு கட்டிடங்களாக அரசாங்கம் செய்து தர வேண்டுமென்று நினைத்து கேட்டுக் கொண்டிருப்பதாலும் அதற்கேற்ப நாம் செய்துகொண்டும் இருப்பதால், எல்லாக் கட்டிடங்களையும் கட்டிக் கொடுக்க முடியாத தேக்க நிலை இருக்கிறது. ஆனால் பொதுமக்களும் இருக்கின்ற நிலைமைகளை உணர்ந்து உள்ளூரிலேயே கிடைக்கின்ற வசதிகளைப் பயன்படுத்திக்கொண்டு இத்தகைய முறையைப் பின்பற்ற முன்வந்தால், இதுவும் 40, 50 வருடத்திற்குமேல் நல்லமுறையில் இருக்கும். அவர்கள் இதற்கு முன்வந்து அரசுக்குத் துணையாக இருந்தால், ஓராண்டுக்குள்ளேயே நாம் வசதிகளைச் செய்து தரலாம்.

### கலைமகள் உயர்நிலைப்பள்ளி, வையம்பட்டி

* 38. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் (திரு. செ. முத்துசாமி சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், வையம்பட்டியிலுள்ள கலைமகள் உயர்நிலைப் பள்ளியை வேறு ஒரு ஊரில் நடத்திக்கொள்ள அனுமதி வழங்கப் பட்டதா ?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு மறு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) வையம்பட்டியிலிருந்து கலைமகள் உயர்நிலைப் பள்ளியை வெங்கடாசலபுரத்திற்கு மாற்றுவதற்கு சில நிபந்தனைகளோடு அனுமதி வழங்கப்பட்டது. இதன்படி அப்பள்ளி தற்பொழுது வெங்கடாசலபுரத்தில் நடைபெற்று வருகிறது.

(ஆ) வையம்பட்டியில் அப்பள்ளியும், அரசு உயர்நிலைப்பள்ளியும் ஆக இரு பள்ளிகள் நடக்க ஏதுவில்லை. கலைமகள் உயர்நிலைப்பள்ளியில் போதிய மாணவர் பதிவின்மை காரணமாக நிர்வாகியின் வேண்டுகோளின் பேரில் அப்பள்ளியை வெங்கடாசலபுரத்திற்கு மாற்ற அரசு விதிகளின்படி ஆணையிட்டுள்ளது. இது குறித்து மறுபரிசீலனை செய்யும் கருத்து எதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, இதைப்போல் வேறு இடங்களுக்கு மாற்ற வேண்டுமென்று அனுமதி கேட்டால், அரசு அனுமதி தருமா ? நகரில் போக்குவரத்து நெரிசல் மிகுந்த இடங்களிலுள்ள, முக்கிய பகுதிகளிலுள்ள பள்ளிகளை விற்றால், அவர்களுக்கு நல்ல வருமானம் கிடைக்கும், அவர்களும் வெளியே வேறு இடத்தில் பள்ளிகளை நடத்த முன் வருவார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு அரசு அனுமதி தருமா ?



(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தனிப்பட்டவர்கள் லாபம் சம்பாதிக்கும் வகையில் நாம் ஒத்துழைப்பு தருவதற்கு இல்லை.

### *Kodaikanal Reservoir*

* 39. *Q.*—THIRU P. R. THOMAS (on behalf of THIRU A. R. DAMODARAN): Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether it is a fact that, in Kodaikanal, owing to the defective water distribution system, there is considerable wastage of water due to leakage;

(*b*) if so, whether there is any scheme to improve the storage of water in the reservoir there; and

(*c*) if so, when the scheme will be implemented ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) கொடைக்கானல் நகரிய குடிநீர் வழங்கும் திட்டத்தில் நீர்க் கசிவோ அல்லது கழிவோ ஏற்படவில்லை;

(ஆ) 1976 ஆம் ஆண்டில் கொடைக்கானல் குடிநீர் வழங்கும் திட்டத்தை மேம்படுத்த ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், மூன்று தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு 56 கி.மீ. நீளமுள்ள குடிநீர் பகிர்மானக் குழாய்கள் பதிக்கப்பட்டன. 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ரூ. 30.11 இலட்ச செலவில் தலைமைப் பணியிட மேம்பாட்டுக்கான திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

(உ) தலைமைப் பணியிட மேம்பாட்டுத் திட்ட வேலை நடந்து கொண்டிருக்கிறது.

### *Industries kept closed as on 1st March 1981*

* 40 *Q.*—THIRU K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) the number of Industries with a labour strength of more than 300 which stand closed in our State for more than three months, as on 1st March 1981; and

(*b*) the stand of the Government towards the re-opening of these Industries ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இரண்டு.

(1) பாலு கார்மெண்ட்ஸ், சென்னை, மற்றும்

(2) வீர் இளாள் பேக்டரி, சென்னை.

(இ) பாலு கார்மெண்ட்ஸ்—

பாலு கார்மெண்ட்ஸ் நிறுவனத்தை மீண்டும் திறக்க அரசு கவனமுடன் பரிசிலனை செய்தது, எனினும் இத் தொழிற்சாலையை வெற்றிகரமாக நடத்த இயலாது என்பதால், திட்டம் கைவிடப்பட்டது.

வீர் கிளாஸ் பேக்டரி—

வீர் கிளாஸ் நிறுவனத்தில் தொழிலாளர்களின் வேலையின்மை பற்றிய தொழில் தாவாவினை சென்னை தொழில் நடுவர் மன்றத் தீர்ப்புக்கு அரசு அனுப்பியது. தொழில் நடுவர் மன்றம் தன்னுடைய தீர்ப்பில் தொழிலாளர்களின் வேலையின்மை பற்றிய கேட்பு மனு (claim petition) தொழிலாளர்களின் சார்பில் தாக்கல் செய்யப்படவில்லை மற்றும் வீர் கிளாஸ் ஒர்க்ஸ் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் முறையீடு இல்லை என்ற காரணங்களைக் காட்டி, தொழிலாளர்கள் எந்த ஒரு நிவாரணத்திற்கும் உரிமையுள்ளவர்கள் இல்லை என்று தீர்ப்பளித்துள்ளது.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கேட்டு ஏறத்தாழ ஓராண்டாயிற்று. பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் தாங்களாகவே வேறு தொழிலை ஏற்படுத்திக் கொள்வதற்கேற்ப அரசு அவர்களுக்கு உதவி செய்துள்ளதா ? அப்படி ஒரு முன்மாதிரியான முயற்சியில் அரசு ஈடுபடுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இந்த கார்மெண்ட்ஸ் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில், கணக்கைத் தீர்த்துக்கொள்ளாத தொழிலாளர்களுக்கு, 275 பேர்களுக்கு இந்த அரசு தலா 200 ரூபாய் விதம் 55 ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறது. அந்தத் தொழிற்சாலை The Government in the Industries Department in consultation with the Director of Handlooms and Textiles and the Director of Industries and Commerce took up the question of reviving the firm. Both of them reported that it would not be possible to re-open and successfully run the factory. இருந்தாலும் தொழிற் சங்கத் தலைவர்களை அழைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசினார்கள். அப்போது அவர்கள் சில யோசனைகளைச் சொன்னார்கள். துரதிருஷ்டவசமாக இந்தத் தொழிற்சாலையில் பணி செய்யும் மகளிர் அவருடைய யோசனையை ஏற்றுக் கொண்டார்கள். ஆனால், அந்தச் சங்கத்தை வழிநடத்தும் தலைவர்களும் தலைவியர்களும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே அந்தப் பிரச்சினை அத்தோடு முடிந்தது.



திரு. க. இராமமூர்த்தி : பாலு கார்மெண்ட் தொழிற்சாலையில் பணியாற்றியவர்கள் 300 பேர்கள் என்று கணக்கு இருக்கிறது. பொதுவாகவே கார்மெண்ட் (ஆடை) தொழிற்சாலைகளிலே தொழிலாளர்களைப் பிழிந்து வேலைவாங்கிக்கொண்டு அவர்களுக்கு ஏற்ற ஊதியம் தராமல் ஆதிக்கம் நடத்துகிறார்கள். அதைத் தவிர்க்க இந்த அனுபவத்தின் அடிப்படையில் அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, 300-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலைசெய்யும் தொழிற்சாலையை மூட வேண்டும் என்று சொன்னால், 90 நாள் அரசுக்கு முன்னறிவிப்பு கொடுக்க வேண்டும் என்று பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் முன்பு பிரதமராக இருந்தபோது, திரு. இரகுநாதரெட்டி அவர்கள் தொழிலாளர் நலத்துறை அமைச்சராக இருந்தபோது, சட்டம் கொண்டு வந்தார்கள். 90 நாள் நோட்டீஸ் கொடுத்தால் அதுபற்றி விசாரித்து தொழிற்சாலை மூடப்படாமல் இருப்பதற்கும், அல்லது அதை அரசே ஏற்றுக்கொள்ளலாமா என்பதைப் பற்றி விசாரிக்கவும் ஏதுவாக இருந்தது. துரதிருஷ்டவசமாக சுப்ரீம் கோர்ட் அந்தச் சட்டம் செல்லாது என்று சொல்லிவிட்டது. இப்போது யார் வேண்டுமானாலும் எந்த நேரத்திலும் மூடலாம். இன்றைக்கு 6 ஆம் தேதி நடக்கும் ஒரு தொழிற்சாலையை 7 ஆம் தேதி மூடினால், அவர்களை ஒன்றும் கேட்க முடியாது. டெல்லியிலே இதுபற்றிப் பேசியபோது எப்படியாவது இதற்கொரு மாற்றுச் சட்டம் கொண்டு வந்து தொழிலாளர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய அரசு அப்படி ஒரு சட்டம் விரைவில் கொண்டு வரும் என்று நினைக்கிறேன். ஆனால், இப்போது சற்று மெத்தனம் ஏற்பட்டிருக்கிறது. அந்த மெத்தனம் இல்லாமல் திரு. இராமமூர்த்தி போன்றவர்கள் எல்லாம் சுறுசுறுப்பாகச் செயல்பட்டால் மிகவும் நல்லது.

திரு. ம. சங்கரலிங்கம் : இப்போது கார்மெண்ட் தொழிலுக்கு நல்ல கிராக்கி இருக்கிறது. மிடில் ஈஸ்ட் கன்ட்ரீஸ்க்கு அதிக அளவில் ஏற்றுமதியாகிறது. இப்போது ஏதோ ஒரு காரணத்தினால் மூடியிருந்தாலும், அந்தத் தொழிற்சாலையில் பணிபுரியும் 300 பேர்களுக்கும் இந்தத் தொழிலை கூட்டுறவுத் துறையில் செய்யும் வாய்ப்பை ஏற்படுத்தவோ அல்லது அந்தத் தொழிற்சாலையை அரசே எடுத்துச் செய்யவோ தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கையை மேற்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கார்மெண்ட் தொழிலை பொறுத்தவரையில், இப்போது 55 ஆயிரம் பேர்கள் இந்தத் தொழிற்சாலைகளில் வேலை செய்கிறார்கள் என்ற தகவல் இருக்கிறது. இந்தத் தொழிற்சால

களில் பெரும்பாலும் பெண்கள் தான் வேலை செய்கிறார்கள். இந்த கார் மெண்ட்க்கு வெளிநாடுகளில் கிராக்கி இருப்பதும் உண்மைதான். இந்த தொழிற்சாலைகளை நடத்திச்செல்பவர்கள் இப்போது மிகவும் குறைவாகக் கொடுக்கிறார்கள். ஊதியத்தை உயர்த்திக்கேட்டால், தொழிற்சாலையை மூடிவிடுகிறார்கள். பின்னர் வெகு நாட்கள் கழித்து அவர்களின் உறவினர் களையோ மற்றவர்களையோ வைத்து வேறொரு இடத்தில் ஆரம்பிக்கிறார்கள். தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பாக இருந்த சட்டத்தை சுப்ரீம் கோர்ட் 'in their own wisdom' செல்லாது என்று சொல்லிவிட்டது. இதற்குப் பாதுகாப்பு கொடுக்கும் அளவிலே சட்டம் கொண்டு வரலாமா என்று அரசு இப்போது ஆராய்ந்துகொண்டிருக்கிறது. நாம் சில சட்ட முன் வடிவுகளை மத்திய அரசுக்கு அனுப்புகிறோம், சிலவற்றை அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள், சிலவற்றை ஏற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்படுகிறது. இது பற்றி குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் யோசனை சொன் னார்கள். அவர்கள் சொன்ன யோசனையை பெண்கள் ஏற்றுக்கொண்டார் கள். ஆனால், தலைமைதாங்கிய ஆண் தலைவரும், பெண் தலைவரும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆதலால் தலா 200 ரூபாய் வீதம் கொடுத்து நம்முடைய கடமையைச் செய்து முடித்திருக்கிறோம். அதற்கு மேல் எங்களால் போக முடியவில்லை.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஓர் அவதூறு சொல்கிறார்கள். அந்த கார்மெண்ட் தொழிற்சங்கம் ஒரு சி.ஐ.டி.யு. சங்கம். அந்தத் தொழிற்சாலை திறக்கப்பட வேண்டும் என்று பெண்கள் கோட்டைக்கு வந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் மனு கொடுத்தார்கள். தாங்கள் திறப்பதற்கு ஏற்பாடு செய்வோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களிடம் சொன்னார்கள். சர்க்கார் தன்னுடைய பொறுப்பை நிறைவேற்றவில்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டு. முதலமைச்சர் அவர்கள் கூறிய யோசனையை தொழிலாளர்கள ஏற்றுக கொண்டார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கேள்வி நேரத்தில் குற்றச் சாட்டு சொல்லக்கூடாது.

**திரு. ஆ. நல்லசிவன் :** அந்தத் தொழிற்சாலையிலுள்ள தொழிலாளர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த யோசனையை ஏற்றுக் கொண்டார்கள் என்றும், தொழிற்சங்கத் தலைவர்கள், தலைவிகள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் அது என்னவென்று சொல்ல வேண்டும்.



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : * * *

* * *

* * *

* * *

* * *

திரு. ம. சங்கரலிங்கம் :

திரு. ஆ. நல்லசிவன் : * * *

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : * * *

* * *

திரு. ஆ. நல்லசிவன் :

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : * * *

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஒருவருக்கொருவர் எதிரெதிராகப் பேச இந்த அவை அனுமதிக்காது. இடம் தராது. (மணியடிக்கப்பட்டது)

(கூச்சல்—குழப்பம்).

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தலைவர் அவர்களே, இதை அவைக்குறிப்பிலேயிருந்து எடுத்துவிட வேண்டும.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** யார் பேசினாலும் அவையிலே பேசும் போது, தலைவரைப் பார்த்துப் பேசவேண்டுமேயொழிய, ஒருவரையொருவர் நேராகப் பார்த்துப் பேசுவது மரபாகாது. கேள்வி நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருந்து, அமைச்சர்கள் பேசி முடித்த பிறகு, அமைச்சர்கள் சொன்னதற்குக் கேள்வி எழுப்பித்தான் ஆட்சேபணை சொல்ல வேண்டுமேயொழிய எதிராக விவாதம் கூடாது. மரபல்லாத மரபை இன்றைக்கு ஏதோ படைத்துவிட்டார்கள். தயவுசெய்து இப்படி மேற்கொண்டு தொடராமல், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டியதைச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

(முற்பகல் 10-20)

இன்னொன்றையும் சொல்லிக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களும் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்ட வாசகங்களும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும் என்று ஆணையிடுகிறேன். அமைச்சர் அவர்கள் தாம் சொல்ல விரும்பிய பதிலைத் தரலாம்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமான கோப்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுதியிருப்பதை மட்டும் தான் இங்கே படிக்கிறேன் : "முன்பு பணியாற்றிய மகளிர் எனது யோசனையை ஏற்க முன்வரினும், அவர்களை வழி நடத்திச் செல்லும் தலைவர்களும், தலைவியும் போன்றவர்கள் அதை ஏற்க மறுத்ததால் இன்னும் அதே நிலைதான். எனவே அவர் உண்மை நிலையை உணர்ந்து ஒத்துழைக்க முன்வந்தாலன்றி, வெற்றி பெற முடியாது என்று கைவிடப்பட்டுள்ள தொழிற்சாலையை ஏற்று நடத்த இயலாது. காலம் கனியட்டும், காத்திருப்போம்."

**திரு. ஆ. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் என்ன யோசனையைச் சொன்னார், தொழிற்சங்கத் தலைவர்கள் எந்த யோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை என்றுதான் நான் கேட்டேன். அதைச் சொன்னால் நல்லதாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன யோசனையைக் கொடுத்தார் என்பது சமயம் வரும்போது தேவைப்பட்டால் சொல்லப்படும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன

**(குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)**



## 2. அறிவிப்பு.

**மதுரை-காமராஜ் பல்கலைக் கழகப் பொதுக் குழுவிற்கு மேலவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மதுரை காமராஜ் பல்கலைக் கழகப் பொதுக் குழுவில் ஏற்பட்ட இரண்டு காலியிடங்களுக்கு திரு. ப. மாணிக்கம் மற்றும் திரு. எஸ். முத்து ஆகிய இருவர் மட்டுமே வேட்பு மனு தாக்கல் செய்திருப்பதால், அவர்கள் அப்பொதுக் குழுவிற்கு உரியவாறு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்கள் என அறிவிக்கிறேன்.

## 3. கவன ஈர்ப்பு.

**திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், நாலுமாவடி காமராசர் மேல்நிலைப் பள்ளி நிர்வாகத்தினர் ஆசிரியர்களிடமிருந்து வலுக்கட்டாய மாகப் பதவி விலகல் கடிதங்களைப் பெற்று, முரட்டுத்தனமாகத் தாக்கி நான்கு ஆசிரியர்களைப் பணியிலிருந்து நீக்கியது குறித்து.**

**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒழுங்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்—

"திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், நாலுமாவடி காமராஜர் மேல்நிலைப்பள்ளி நிர்வாகத்தினர் ஆசிரியர்களிடமிருந்து வலுக்கட்டாயமாகப் பதவி விலகல் கடிதங்களைப் பெற்றது, ஆசிரியர்களை முரட்டுத்தனமாகத் தாக்கியது, நான்கு ஆசிரியர்களைப் பணியிலிருந்து நீக்கியது போன்றவை குறித்து."

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, இது குறித்து விவர அறிக்கை @ ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவரவர்களே, விவர அறிக்கையில் அவ்வாறு வலுக்கட்டாயமாக ஆசிரியர்களிடமிருந்து பதவி விலகல் கடிதங்கள் வாங்கப் படவில்லை என்றும், குறிப்பிட்ட ஒரு நாளில் ஆசிரியர்கள் வந்து பணியில் அமர வேண்டும் என்று சொன்னபோது அந்த ஆசிரியர்கள் பணிக்கு வரவில்லை என்றும், பேச்சுவார்த்தையின்போது நிர்வாகம் பங்கு பெற வில்லை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், உண்மையிலேயே நிர்வாகம் முரட்டுத்தனமாக, மனிதத் தன்மைக்குப் புறம்பாக நடந்து, ஆசிரியர்களிடம் வலுக்கட்டாயமாகப் பதவி விலகல் கடிதங்களை வாங்கியிருக்கிறது.

---

@ 377-379 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

THIRU J. M. MIAKHAN: Hon. Chairman, Sir, I thank you for giving me this opportunity to speak on the Governor's Address.

As usual, some promises have been made in the Governor's Address that certain things will be carried out during the current year. But, similar promises were given in the previous Addresses also. On previous occasions also, I wanted to know what would happen if such assurances were not fulfilled. At least for the assurances given by Ministers on the floor of the House, there is a vigilant Assurances Committee which takes note of those assurances and pursues the matter whereas in the matter of the Governor's Address the assurances could not be pursued. In this Governor's Address, it has been stated that some improvements will be made and several assurances have been given. What will happen if such assurances are not carried out? I request the Government to ponder over this matter and at least request the Governor to give periodical reports as to what happens to the assurances given in the Address. I am not finding fault with the Governor and I am only giving a suggestion which may be considered.

In the Governor's Address, mention has been made about the starting of new Universities. A University is going to be started exclusively for ladies and some technical institutions are also going to be started. I am very glad about that and I congratulate the Government on having decided to do so.

Sir, mention has also been made in the Governor's Address about distribution of foodgrains and other things through the Fair Price Shops. But, I have to state that the quantity of supply is inadequate. Even the people who man the Fair Price shops complain that the foodgrains and other commodities allotted to the Fair Price Shops are inadequate. If foodgrains, etc. are not allotted



to those shops in quantities sufficient enough to cover all the cardholders in a particular area, people will come and picket the shops and they will also find fault with the clerks and other people who are actually in charge of the shops, saying that they are misappropriating the foodgrains, etc., without supplying them to the public. Therefore, I request the Government to see that the Fair Price Shops in various areas are stocked with sufficient quantities of foodgrains, kerosene and other things which are normally sold in the Fair Price Shops. The persons who are actually manning these Fair Price Shops have all along been given a remuneration of only Rs. 100 per mensem. It seems that the Government have promised to increase the remuneration to Rs. 150 per mensem, but it has not been implemented so far. Those people have made a representation that their posts be made permanent and that they be treated like all other Government servants in the matter of Provident Fund, casual leave and other things. Moreover, their working hours also need to be revised. Now, it is stated that they work only for 8 hours. But, actually they spend two or three hours more on going to various offices for making remittances of money. The time thus spent by them should also be reckoned as working hours and some remedial measures should be taken.

Regarding agriculture also, the Government have done something progressive and have promised to do something more. In Tamil Nadu, next to paddy, sugarcane is the largest quantity of foodcrop that is grown. Cane-growers in Papanasam and other places in Thanjavur district are not getting proper price and the Sugar Mills refuse to accept their cane, for the reason that their have not registered themselves previously. Moreover, there is not much illicit distillation and, therefore, there is not much demand for gur, etc. They want alternative market for their produce. Proper remunerative return must be guaranteed for these agriculturists who grow sugarcane. Ninety per cent of the population depend upon agriculture and they must be given adequate protection and there should be proper markets for their produce, or else the country will be the loser.

They have also done several things to improve industries and other things and they have stated that they are going to give incentives for people from outside to come and start industries in this State, and they have also mentioned a few categories of industries for which they intend giving incentives. At the outset, I would like to say that the Government should treat the industrialists properly, hear their grievances and try to redress them first and

இது எவ்வாறு உண்மை என்றால், [illegible] குறித்து முதன்மைக் கல்வி அதிகாரி போய் விசாரணை செய்திருக்கிறார். இது தெளிவாகியிருக்கிறது. எனவே அந்த நிர்வாகத்தை அரசு ஏற்றுக்கொள்ளும் பொறுப்பேற்பு பற்றி அமைச்சர் அவர்கள் ஆலோசிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நிர்வாகத்தைப்பற்றிச் சொல்லப் பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து ஒரு வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. ஆகவே, அதைப்பற்றிய முழு விவரம் தெரிந்த பின்னால், அரசு அப்படிப்பட்ட நடவடிக்கை எதுவும் எடுக்க முடியாது.

* திரு. சி. ரா. வெ. ஸ்ரீகாந்தன்: வினா அறிக்கையில் பள்ளி நிர்வாகம் 4 ஆசிரியர்கள் மீது குற்றம் சாட்டி 15—1—1982-ல் அவர்களைப் பணிநீக்கம் செய்து அரசு செயலாளர் ஆணை பெறாமல் நீக்கியுள்ளனர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தனியார் பள்ளிகள் ஒழுங்குமுறைச் சட்ட விதிகளின்படி ஓர் ஆசிரியரைப் பணி நீக்கம் செய்வதற்கு முன் தொடர்புடைய அதிகாரியின் முன் அனுமதி பெறப்பட வேண்டும் என்று இருக்கிறது. இந்த ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், தொடர்புடைய அதிகாரியிடம் முன் அனுமதி பெற்றுத்தான் பணிநீக்கம் செய்யப்பட்டனரா? அப்படியென்றால் அந்த அதிகாரி இதற்கு எப்படி முன் அனுமதி கொடுத்தார்? அவர் அவ்வாறு முன் அனுமதி கொடுக்கவில்லை என்றால், அத்தகைய பணி நீக்கம் சட்ட விரோதமானது. எனவே அதற்கு விசாரணையே தேவையில்லை. அதை ஒரு
Procedural flaw என்று கருதி அரசாங்கம் அந்த உத்தரவையே ரத்து செய்ய வேண்டாமா? எனவே இது குறித்து கல்வித் துறை நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆசிரியர்களின் பணி நீக்கம் குறித்து எந்தப் புகாராக இருந்தாலும், அதற்கு மேல்முறையீடு செய்தால், அது தக்கபடி கவனிக்கப்படும்.

* திரு. ம. சங்கரலிங்கம்: வினா அறிக்கையில் 25—11—1981 அன்று ஆசிரியர்கள் பள்ளி நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது தாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது மறைமுகமாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அது குறித்து ஒரு வழக்கு இருக்கிறது என்பதால், நான் அதன் விவரத்திற்குள் செல்ல விரும்பவில்லை. ஆனாலும், ஒரு பள்ளி நடைபெறும்போது, பள்ளியில் பணி புரியும் ஆசிரியர்கள் வெளியாரால் தாக்கப்படுகிற நிலை



ஏற்படுகிறது என்றால், அது குறித்த வழக்கு ஒருபுறம் இருந்தாலும், பள்ளிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் பாதுகாப்பு தரவேண்டிய கல்வித் துறை இது குறித்து என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். சமரசம் பேசப்படுகிறது என்பதிலிருந்து ஏதோ பூசி மெழுக முயற்சி நடைபெறுகிறது என்றுதான் தெரிகிறது. எனவே கல்வித் துறை இதில் தெளிவாக என்ன நடவடிக்கையை மேற்கொள்ள இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் தாக்கப்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் வழக்கு நடை பெறுகிறது. அது உண்மையா இல்லையா என்பதைத் தெரிந்துகொள்வதற்கு முன்னால் அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பது சரிப்பட்டு வராது. மற்றபடி பணிநீக்கம் செய்யப்பட்டவர்கள் மேல் முறையீடு செய்தால், நாங்கள் அதற்கு ஓர் உத்தரவு போடுவது என்பது ஒருபுறம் இருந்தாலும், இரு தரப்பாரிடமும் பேசி சமரசம் காணும் முயற்சியில் கல்வித் துறை அதிகாரிகள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. தகவல் கோரல்.

### அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட பகுதிகள் குறித்து.

* திரு. க. இராமமூர்த்தி: On a point or Order, Sir. என்னுடைய கேள்வியையொட்டி அமைச்சர் அவர்கள் இங்கே பதிலளித்தார்கள். அதைத் தொடர்ந்து சிறு அமளியும் ஏற்பட்டு இரு தரப்பிலும் சில தேவையற்ற வார்த்தைகள் வந்துவிட்டன. இது குறித்து அவைக் குறிப்பிலிருந்து சில பகுதிகள் நீக்கப்பட வேண்டுமென்று தாங்கள் ஆணையிட்டீர்கள். அவ்வாறு நீக்கப்படும் பகுதிகள், அமைச்சர் அவர்களின் பதிலுக்குப் பிறகு நடைபெற்றவைகளே அன்றி அவருடைய பதிலும் சேர்ந்து அல்ல என்றே கருதுகிறேன். தாங்கள் அதனைத் தெளிவுபடுத்த வேண்டுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அமைச்சர் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களும் ஒருவருக்கொருவர் உரையாடிக் கொண்ட அந்தப் பகுதிகள் மட்டும் நீக்கப்படுகின்றன. கேள்வியும் பதிலும், துணைக் கேள்வியும் அதற்கான பதில்களும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் படமாட்டா.

then they may go in for starting new industries. I do not say tha new industries should not be started. I have already suggested during my speech last year that the trouble of the industrialists, in zettin licences, etc., should be reduced to the minimum. Now they have to go from pillar to post to obtain forms and licences from various authorities before starting an industry. The Government should at least form a single agency where the industrialists could give their applications, where those applications would be processed and through which the licences of various authorities could be easily obtained. Then it will be easy for new industrialists to come in and start new industries. Many pepole are not aware of the rules and regulations and restrictions that are in existence in Tamil Nadu and a new entrepreneur will find it very difficult to start an industry. He may then lose interest and he will go to some other place where he may find that he can easily invest his capital and earn money.

Sir, there is no mention here about the Wakf Board. Though there is no mention about the Wakf Board, a mention about the law and order situation has been made. In that connection, I would like to speak about the Wakf Board. On the floor of the House, the Hon. Minister has stated that the present Wakf Board has got a big overload of work. I mentioned that it should be bifurcated into force or five Regional Boards. In that case people having knowledge about the local wakfs and local conditions would be there to dispose of matters quickly. Of course, the Government could nominate their own representatives to such Boards and being local persons, they will be in a better position to dispose of matters and the pending disputes will be settled quickly. Moreover, the people who come from the southernmost districts like Kanyakumari and Madurai have often to return, because of adjournments and consequently they get frustrated. If the Board is divided and Regional Boards were constituted, the Wakf Board in Madras can be an apex body to deal with matters which have not been satisfactorily dealt with. They can clear off the pendency to a great extent. These wakfs, if they are properly administered, will be useful not only to the Muslim community but also to the entire Tamil Nadu. Even though the Hindu Temples are administered by the Hindu Religious and Charitable Endowments Department, the schools run by those temples are beneficial not only to the Hindus but to the entire community. In the same way, the Wakf Board schools, etc, are meant not merely for the Muslims but for the people of the entire country. Therefore, if the properties of the wakfs are administered properly and if



they are relieved of the litigations that now exist, they would prove to be beneficial to the entire country. Even after making several representations, the Hon. the Chief Minister somehow has felt that we should have the same person as the Chairman of the Wakf Board. Of course, the present Chairman is a very honest and straightforward man; but he is not suited for that particular job. We cannot just ask an ordinary lay person to go and perform a Ceaserian operation on a woman. The person who performs that operation must be fully qualified for that job. If a person wants to be a Judge, he must know the law of the land. Moreover, the people should have confidence in him that he knows the various laws and that he would give proper judgments. Similarly, to be the Head of the Wakf Board, a person should know and follow the tenets of Islam and should also appear to be doing so. There are people who are Muslims but who do not follow all the tenets of Islam. But the Head of the Wakf Board should be a man who really follows all the tenets of Islam and also appears to follow those tenets. He must know all religious matters very well. The Government can honour the present Chairman of the Wakf Board in several other ways, probably, by making him Head of a Corporation. I request the Hon. the Chief Minister to reconsider the matter and remove the present incumbent from the Chairmanship of the Wakf Board and post him elsewhere. We do not have any personal grudge against that person. What we say is that he is not the proper person because he is not suited for that job. That particular job requires a person who knows not only the law of the land but also the Shariat and other things pertaining to Islam.

Sir, several suggestions were made regarding tourism. The hon. Member Thiru Vasantha Pai suggested that we might keep glass-bottomed boats in certain places in the sea-coast. It is a very good idea which may be pursued. Recently, as a Member of the Assurances Committee, I had been to the Kolli Hills on Government business. There is an ancient Temple in the Kolli Hills but there is no proper road to reach the place. Though the people there are tribals, they are highly civilistd and their children attend schools. There are about 15 schools there and there is also one Higher Secondary school. But, sufficient facilities are not available to the teachers and other Government servants. I hope that the Government would look into the matter. There are more than 26,000 tribal people there. They do not get proper return for what they produce. Pineapple is the main crop there. Besides, guava and produce. Pineapple is the main crop there. Besides, 8,000 tonnes of pineapples in a year. But, they get only something

between 5 paise and 20 paise per pineapple when they sell it at the Hills whereas a pineapple fetches something between Rs. 2 and Rs. 5 when sold in the plains. This shows that something is wrong somewhere and that some middlemen are making porfits. In this somewhere and that some middlemen are making profits. In the co-operative society of the producers of these fruits. That society may be provided with a van of a powerful type which could ply in hilly tracts. The expenditure on the van may be borne by the Government in the Tourism Department or some other Department. If that is done. it would be very helpful to these tribal people. Unlike other places, the Kolli Hills are the one place where the tribal people are concentrated in one place and are engaged in agriculture. Of course, the Horticulture Department is rendering yeoman services to these tribals and the Hon. the Agriculture Minister has to be congratulated on that. The authorities of the Horticulture Department say that the present yield of pineapples which is about 400 kg. per acre can be increased five times if proper manuring is done and if proper spacing of the plants and such other things are followed. Encouragement should be given in every way to these tribals and necessary funds should be allotted for that purpose. The Kolli Hills should be made a tourist spot because it is a beautiful place with a loss of scenery. In the waterfalls at Courtallum we can water only during three or four months in a year. But, in the Kolli Hills, there is water in the waterfalls throughout the year. There is a waterfall coming from a spring 'Sunai' called 'Akasa Gangai' and there is also a small water fall near an ancient temple. There is a private individual who is doing good services in the place, without expecting any Government aid, and he has spent about 3 to 4 lakhs of rupees. He may be given encouragement in his work. These falls, temple, etc. may be developed into tourist attractions and then people will be able to go there. But good roads must be provided up to the top of the hill. There is an idea of having an observatory and it is being though that it may be had in Yercaud. I think the same could be located in Kolli Hills instead of in Yercaud, because the visit of a larger number of people to this place will help the tribals to improve their position and standard of living. If they see the people coming in cars, they may also think why they also should not have a car and they will get enthusiasm to improve themselves. This Government have given them some money but it is not sufficient. The infra-structure facilities should be created so that they may earn more and improve their standard of living. Mere giving of doles will not be sufficient.



In this connection, I would like to say that there was a proposal to start a canning industry of 150 tons capacity per year at a cost of Rs. 6.2 lakhs. If it works two shifts the capacity will be 300 tons and even this will be meagre. We should have a canning industry with 2 to 3 thousand tons capacity. The rest of the fruits may be brought down in vans and preserved for some days before they are sold. As a matter of fact, there is a ready market for the fruits and they are not so quickly perishable as tomatoes and they can stay fresh for a few days. There is one new variety is sour in taste, and it is grown in large quantities. People growing it will get considerable return. Since the place is capable of being developed into a tourist spot, with waterfalls, temple and scenic beauty, I request the Government to bear this in mind and bestow their attention on these things.

Regarding electricity, I fully appreciate the difficulties of the Electricity Board. The prices of coal, etc. have gone up. They have to bring coal from North India because coal is not available locally. For that also, there is difficulty in getting railway wagons. We have practically exhausted all our hydel capacity and, naturally, we have to depend on thermal electricity or atomic electricity. At present, we have one atomic power plant. It seems that there is a scheme for opening one in Tirunelveli district. I do not know how far it is going to be useful. Only if it functions, we will know its usefulness. Unless the people get electricity, there is no use for it. But, let not our Tamil Nadu miss the opportunity of having a power station and let them have this power station also. Still I do not think that all these power stations would cover the needs of Tamil Nadu. We should explore the possibilities of having alternative sources of power. I have been saying time and again, that we have in Tamil Nadu many alternative sources of power which we can fruitfully tap. We have a long coast-line and we can make use of the tidal waves and the difference in temperature for generating electricity. Wind power can also be utilised for this purpose. When I had been to the Kolli Hills, the local M. L. A. of that area was saying that the Government were having schemes to put up hydel stations to generate 20 MW of electricity. Though the generation would be only 20 MW, it would serve to meet the local requirements of that area, instead of taking electricity from the plains and thus incurring transmission losses. There are 13 'Nadu's in the Kolli Hills and the entire area is about 200 sq. Km. If a hydel power station is put up there, it would be very beneficial to that area. Therefore, I request the Government to bestow some special attention on this.

[Thiru J. M. Miakhan] 

Sir, in these days, several people from Kerala and Tamil Nadu go to the Middle East countries in search of jobs. Even illiterate people go to these countries and they get good salaries. But, some people get stranded in those countries and are exploited. These people spend Rs. 5,000 or Rs. 10,000 on going to those countries because they have to pay large sums of money to middlemen. For raising the money, they sell their properties and even raise loans in the hope that they could repay them later. But, sometimes, they are not able to reach those countries. Even after going there, sometimes, they are not paid proper wages. Recently, the Government of Tamil Nadu started a separate organisation for the benefit of the people who seek employment in those countries. A nominal amount of about Rs. 1 lakh was also set apart in the last year's budget for that purpose. I do not know how well that organisation is functioning. There are very good opportunities in those countries for professionals like doctors, civil engineers, engineers trained in drilling operations, etc. Technically trained people like plumbers, etc., also have very good opportunities in those countries. It will be very useful if there is a separate Government set up to process the applications of such people and send them to those countries. In places like Dubai, Jeddah, etc., we can have small offices manned by two or three persons to look after the welfare and working conditions of people hailing from Tamil Nadu who are employed in those places. If those people have any problems, they may make representations to these offices so that the matter may be taken up through the Consulates. The Kerala Government have got a very good set-up to look after the interests of the people from Kerala who are living in those countries. Tamil Nadu also may bestow some attention on this and see that a set-up is there to see that the people who go from Tamil Nadu are not stranded in those countries and are not put to difficulties there.

(முற்பகல் 10-52)

Many people who will not be able to earn even Rs. 200 are going to Gulf countries and are able to earn Rs. 1000 and more. By such earning, they are in a position to improve their standard of living. But there are a few cases, as I said earlier, where the people get standard and do not get employment. Last year the Government accepted the idea of forming an organisation to send people for Overseas employment. Though I do not know do names they have started an organisation. I also do not know what its functions are. I request the Government to pursue to matter to see that such things are taken care of.



 [Thiru J. M. Miakhan]

There are a few controversial things that have happened. I do not want to dwell at length on the Report of the Paul Commission. The Government should not always stand on prestige. They should bring the culprits to book. It is accepted all over the world that a Leader of the Opposition would bring out any information from the Government Departments, if the Government were a little lax. Dr. Karunanidhi has given the information about the Report of the Paul Commission to the public. The Government should not choose some persons who, they consider, are responsible for the affair and victimise them. The Government should act on the recommendations in the Report and see what best can be done.

There is one more case that should be looked into. One gentleman, Dr. Afzal Khan, who is no more, was a doctor in Dindigul. He was unnecessarily victimised saying that he took a bribe of Rs. 100. He is worth much more and his personal income is much more. As a matter of fact, he may be considered to be doing the doctor's job in an honorary capacity. He was unnecessarily implicated in the case and he died of broken heart. There was an enquiry instituted in the matter and I want the Government to place the finding of the enquiry on the table of the House and take action against those who are found guilty. If that doctor is really not guilty, at least posthumously he may be declared innocent.

There is a grouse that the minority pepole are not being treated properly. I am only espousing the cause of the Muslims and I am not communal. The representatives of teachers mention the grievances of teachers. I am mentioning the grievances of Muslims whom I represent. I bring to the notice of the Government their problems so that the Government may consider them and do the needful. In the case of recruitment, the Muslims do not get proper representation. The recent census shows that we constitute 6 per cent of the population. Should we not be given 6 per cent representation in the appointments? In the Police Department our representation is very low, while in the C. I. D. there is not even a single Muslim in the top position. Do you mean to say that we are unreliable? The Government should reconsider the matter and see that propr recruitment of Muslims is made. Even when they come to the top, for some reason or other, the Muslims are not given promotion. Recently when a Muslim Officer was in the first rank to be promoted as chief of the department, he was not given that post but was given some other equal assignment. I was told that he did not have the required push and, therefore, he was given an alternative position. Of course he

is getting equal salary but he does not get the status. In the Agriculture Department also a particular person who was to become the Chief Engineer was given some other position. Why should there be this distrust towards the Muslim minority community?

If there is anything against us, let it be mentioned in the House. Let them tell us how we are unfaithful and why we should not be trusted. Then we will try to rectify the mistake. But the vicnisation which now exists in all Departments should not be there.

With these few words, I thank you for having given me the opportunity to speak on the Governor's Address. Thank you.

**திரு. ஆ. நல்லசிவன்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்கள் உரைமீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். பிப்ரவரி மாதம் 1 ஆம் தேதி நடைபெற்ற சட்டமன்றக் கூட்டுக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் தனதுடைய உரையைத் துவங்குவதற்கு முன்பாக எங்கள் கட்சியின் சட்டமன்றத் தலைவர் திரு. சங்கரய்யா அவர்கள் ஒரு குறிப்பை வாசித்துவிட்டு, வெளி நடப்பு செய்தார். அதைத் தொடர்ந்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்களும் சட்டமன்றக் கூட்டுக் கூட்டத்திலிருந்து வெளி நடப்பு செய்தார்கள். அந்த வெளி நடப்புக்குப் பிரதான காரணம் சொல்ல விரும்புகிறேன். சென்ற மாதம் 19 ஆம் தேதி நாடு தழுவிய முறையில் நடைபெற்ற அகில இந்திய பொது வேலை நிறுத்தம் தமிழ் நாட்டில் நடந்தபோது, தமிழக அரசு அந்த வேலை நிறுத்தத்தில் கையாண்ட முறையை ஆட்சேபிக்கிற முறையில்தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் வெளிநடப்பு செய்தார்கள். அந்தப் பிரச்சினை வரும்போது, ஆளுநர் அவர்கள் உரையிலிருந்து ஒரு பகுதியைக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். "இந்த அரசின் முற்போக்கான தொழிலாளர் நலக் கொள்கையை ஒட்டி, தொழிலாளர்களின் நன்மைக்காகப் பல சட்டங்கள் கொண்டுவரப்பட்டன" என்று 25 ஆவது பாராவிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. முற்போக்கான தொழிலாளர் நலக் கொள்கை என்று சொல்லும்போது, அரசு எத்தனை சட்டங்கள் போட்டிருக்கிறது என்று பட்டியல் வைத்து, அதை முடிவு செய்வதா அல்லது அரசு நிறைவேற்றிய சட்டங்களை அது எப்படி அமல் நடத்தியிருக்கிறது என்பதை வைத்து முடிவு செய்வதா? எப்படி அமல் நடத்தியிருக்கிறார்கள் என்பதை வைத்து முடிவு செய்வதாக இருந்தால், ஓர் உதாரணத்தைக் கூற விரும்புகிறேன். கைத்தறித் தொழிலாளர்களுக்கான பாதுகாப்புச் சட்டம் ஒன்று 10 மாதங்களுக்கு முன்பு நிறைவேற்றப்





பட்டது. நிறைவேற்றி 10 மாதங்கள் ஆகியும்கூட, சட்டத்தை அமல் நடத்த விதிகள் இயற்றப்படவில்லை. நான் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இந்த மன்றத்தில் 1980 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் திருமதி சுப்புலட்சுமி ஜகதீசன் அவர்கள் கைத்தறித் துறை அமைச்சராக இருந்தபோது, தாக்கல் செய்யப்பட்டு, போன ஆண்டு நிறைவேற்றப்பட்டு, 10 மாதங்கள் ஆன பிறகும் விதிகள் இயற்றப்படவில்லை. அதன் காரணமாக அதை அமல் நடத்த முடியவில்லை என்று சொல்லும்போது, சட்டங்களைப் பட்டியல் போட்டுக் காட்டி, தொழிலாளர் நலத்தில் முற்போக்குக் கொள்கையைக் காட்ட முடியாதென்று எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, தொழிலாளர் வர்க்கத்தின்பால் அரசின் அணுகுமுறை எப்படி இருக்கிறது என்பது பிரதான விஷயம். குறிப்பாக 19—1—1982 வேலை நிறுத்தம் அகில இந்தியாவில் நடைபெற்ற வேலை நிறுத்தமாகும். குறிப்பாகச் சொல்வதானால், 1947-ல் சுதந்திரம் பெற்ற பிறகு நாடு தழுவிய முறையில். மாநிலங்களில் உள்ள தொழிலாளர்கள், உழைப்பாளிகள் மத்திய அரசின் கொள்கையை ஆட்சேபித்து ஒரு நாள் கண்டனப் போராட்டம் நடத்தியது இதுதான் முதல் தடவை. நம்முடைய நாட்டிலே தேசிய சுதந்திரப் போராட்டத்திற்குப் பிறகு, சுதந்திரம் பெற்று 34 ஆண்டுகளுக்குப் பிறகு, இப்போதும் தேசிய ஒருமைப்பாடு என்று சொல்லுகிறோம். சுதந்திரம் பெற்று 34 ஆண்டுகளுக்குப் பிறகும், தேசிய ஒருமைப்பாட்டிற்காக தனி வாரம் வேண்டியிருக்கிறது. அஸ்ஸாமியர்கள் 'இந்திய நாய்களே வெளியேறுங்கள்' என்று சொல்லுகிறார்கள். குஜராத்தில் நடந்த கலவரத்தைப் பார்த்தோம். மத்திய அரசை ஆளும் காங்கிரஸ் கட்சியின் தலைவர்களே 'மண்ணின் மைந்தர்கள்' கோஷத்தைக் கிளப்புகிறார்கள். இந்திய சுதந்திரப் போராட்டத்தின்போது வெள்ளைக்காரர்களை எதிர்த்த நேரத்தில். மாதிரி. நான் தேசியவாதி, நான் இந்தியன் என்ற எண்ணம் ஏற்பட்ட சுதந்திரம் பெற்ற 34 ஆண்டுகளுக்குப் பிறகு பல்வேறு உழைப்பாளிகள், தொழிலாளர்கள் இந்திய நாட்டினுடைய தேசிய ஒருமைப்பாட்டை அமல் படுத்தும் நிலைமையிலே, 22 மாநிலத் தொழிலாளர்கள், உழைப்பாளிகள் ஒரு லட்சத்து 80 ஆயிரம் பேரில் 1 லட்சத்து 20 ஆயிரம் பேர் வேலை நிறுத்தத்தில் பங்கு எடுத்துக்கொண்டார்கள் என்பது எங்களுடைய கணக்கு. இதை வெற்றி என்று நாங்கள் சொல்லுகிறோம். ஆனால், போராட்டத்திற்கு ஒரு வாரம் முன்பிலிருந்து அகில இந்திய ரேடியோ—இதை அகிலப் பங்கு ரேடியோ என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது—இந்த நாட்டிலே இல்லாத தொழிற் சங்கங்களை எல்லாம் இருப்பதாகச் சொல்லி, இவர்கள் பங்கு எடுத்துக்கொள்ளவில்லை, அவர்கள் பங்கு எடுத்துக் கொள்ளவில்லை என்று சொல்லி, இந்த நாட்டிலே இருக்கும் மாஸ் மீடியாவை கையில் வைத்துக்

சொல்லு, அடக்குமுறையின் மூலம் வேலை நிறுத்தத்தைத் தடை செய்த போதுங்கூட, 1.80 லட்சம் உழைப்பாளிகளில், தொழிலாளர்களில் 1.20 லட்சம் பேர் பங்கெடுத்துக்கொண்டார்கள் என்பது எங்களுடைய கணக்கு.

(முற்பகல் 11-00)

இந்த வேலை நிறுத்தம் ஏன் நடந்தது? குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், விலைவாசி உயர்வை எதிர்த்து நடந்தது. ஆளுநர் உரையில் 11-வது பாராவில் "விலைவாசிப் பிரச்சினை நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளுடன் பின்னிப் பிணைந்து நிற்பதால், இக்கொள்கைகளை வகுக்கும் உரிமை பெற்றுள்ள மத்திய அரசே விலைவாசிப் பிரச்சினைக்கு நிரந்தரமாக ஒரு தீர்வு காண முடியும் என்பது பொருளாதார வல்லுநர்கள் கண்ட முடிவு" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏன் அப்படிச் சொல்ல வேண்டும்? மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கைதான் விலைவாசி உயர்வுக்குக் காரணம் என்பதை பிரத்தியட்சமாக உணர்ந்திருக்கிற ஓர் அரசு ஏன் பொருளாதார வல்லுநர்கள் கூறியிருக்கிறார்கள் என்று சொல்ல வேண்டும்? அப்படிச் சொல்வதை இந்த அரசு ஏற்றுக் கொள்கிறதா? மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகள்தான் விலைவாசி உயர்வுக்குக் காரணம் என்பதை ஏன் ஏற்றுக்கொள்ளத் தயங்க வேண்டும்? அதை நேரடியாக இந்த அரசே ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக ஏன் மறைமுகமாகக் குறிப்பிட வேண்டும் என்பது தான் என்னுடைய கேள்வி. இந்த அரசே விலைவாசி உயர்வைச் சமாளித்திருக்க வேண்டும். ஆனால், நாடு தழுவிய முறையில் விலைவாசி உயர்வை எதிர்த்து தொழிலாளர்கள் போராடினார்கள். நேற்றையதினம் குறிப்பாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். பஸ் கட்டணம், மின்சாரக் கட்டணம் போன்றவற்றை அதிகப்படுத்த வேண்டுமென்று மத்திய அரசு வற்புறுத்துவதாக இங்கே குறிப்பிட்டார்கள். அதே நேரத்தில் விலைவாசி உயரும்போது, இந்த அரசுதான் சமாளித்தாக வேண்டுமென்றும் குறிப்பிட்டார்கள். இப்படிப்பட்ட நிலையில் மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கை காரணமாக விலைவாசி உயரும்போது, மாநில அரசுகளே அதனை எதிர்த்துப் போராட்டம் நடத்த வேண்டும். அதுதான் முறை. விலைவாசி உயர்வுக்கு மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கை தான் காரணம் என்று நாட்டு மக்களிடத்தில் மாநில அரசு எடுத்துச் சொல்ல வேண்டும். அதைச் செய்ய வேண்டிய மாநில அரசு அதைச் செய்யவில்லை. ஆனால் எங்களுடைய கட்சி அந்த நடவடிக்கையில் ஈடுபட்டுப் போராடும் வேண்டிய ஒரு போராட்டத்தை நாங்களே ஏற்பச் செய்தால், இந்த அரசு போகிறதென்றால் இந்த அரசு அதை அடக்க வேண்டும்? அரசே பங்கேற்க



அதனை அடக்குவது முறைதானா? பஞ்சப்படி, போனஸ், சம்பள உயர்வு வேண்டுமென்று இவைகளைப்பற்றி மட்டும்தான் தொழிலாளர்கள் கவலைப்பட இந்த அரசு சொல்கிறதா?

* மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பொதுவாக தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களின் நன்மைக்காக, அதற்காக வகுக்கப்பட்டுள்ள முறையில் போராடும்போது, அரசின் அணுகுமுறை வேறு. அதே நேரத்தில் அவர்கள் பொலிடிக்கலைஸ்' பண்ணும்போது, அரசின் அணுகுமுறையே வேறாக இருக்கும். நாம் அண்மைக் காலத்தில் போலந்தில் நடைபெற்ற சம்பவத் தைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அங்கு வாலேசா என்பவருடைய தலைமையில் சாலிடாரிட்டி என்கிற ஓர் அமைப்பின் பேரால் போராடி னார்கள். அங்கு போராட்டம் எல்லையை மீறிச் சென்றபோது அரசாங்க இயந்திரத்தைக் கவிழ்க்க முயற்சி செய்தார்கள் என்று சொல்லி, தொழிற் சங்கத் தலைவர்களையெல்லாம் இராணுவ ஆட்சி சிறையில் அடைத்தது. ஆகவேதான் சொல்கிறேன், எதற்கும் ஒரு எல்லை இருக்கிறது. அமெரிக்கா விமான இந்தியா பூராவும் உள்ள தொழிற்சாலைகளை 19 ஆம் தேதி அன்று மூட வேண்டுமென்று சொல்லி போராட்டம் நடத்தினார்கள். இந்தப் போராட்டம் கூட அந்த வகையைச் சார்ந்ததாகையால்தான் அரசாங்கம் அதற்கு இடம் கொடுக்கவில்லை. சட்டம் ஒழுங்கும் அதற்கு இடம் கொடுக்கவில்லை.

திரு. ஆ. நல்லசிவன் : அமெரிக்க ஏகாதிபத்தியத்தினுடைய குரல் அமைச்சருடைய குரலில் எதிரொலிக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அங்கே அரசு சொன்ன வாதத்தை ஏற்றுக்கொண்டுதான் பேசுகிறேன். தொழிற் சங்கங்கள் எல்லையை மீறிக் கொண்டிருக்கின்றன என்று சொல்லி அங்கே இராணுவ ஆட்சி நடவடிக்கை எடுத்தது. அமெரிக்காவின் பக்கம் நான் இங்கே பேச வில்லை. அதற்குத் தேவையும் இல்லை.

திரு. ஆ. நல்லசிவன் : நாங்கள் அரசாங்க இயந்திரத்தைக் கவிழ்க்க வேண்டுமென்று சொன்னால், தயங்கக்கூடியவர்களும் அல்ல. அப்படி புரட்சி நடத்த நடத்துகிற புரட்சியைச் செய்யவில்லை. ஆனால், நாங்கள் அதைப் காகப் போராட்டத்தை நடத்தவில்லை. விலைவாசி உயர்வை எதிர்த்துத் தான் போராடினோம்.

திரு. க. இராமமூர்த்தி : போராட்டத்தின் விளைவாக ஏற்படுகிற பொருளாதாரப் பாதிப்பு எவ்வளவு கடுமையானது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தொழிற்சாலைகள் மூடப்படுவதால் எந்த அளவுக்கு இந்தியாவினுடைய பொருளாதாரம் பாதிக்கப்படும் என்பதுதான் பிரச்சினைக்குரியது.

திரு. ஆ. நல்லசிவன்: இந்த வேலை நிறுத்தம் நடைபெறுமானால் நாட்டில் பொருள்களின் உற்பத்தி பாதிக்கப்படும், விநியோகம் பாதிக்கப்படும், அல்லது தடைப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வேலை நிறுத்தம் நடைபெற்றால், உற்பத்தி தடைப்படும், விநியோகம் தடைப்படும் என்பது உண்மைதான். ஆனால் நான் ஒன்று கேட்க ஆசைப்படுகிறேன். கடந்த 34 ஆண்டுகளாக சுதந்திரம் அடைந்ததிலிருந்து உற்பத்தி செய்து, உற்பத்தி செய்து கொடுத்தோமே அதன் பலன் என்ன ஆயிற்று? எப்போதாவது விலைவாசி இறங்கியிருக்கிறதா? தமிழ் நாட்டிலே 1939 ஆம் வருடம் 'காஸ்ட் ஆப் லிவிங் இன்டெக்ஸ்' 80 என்று இருந்தது இன்றைக்கு 2 ஆயிரத்தைத் தாண்டிவிட்டது, அரசே ஒத்துக்கொண்டிருக்கிற புள்ளிவிவரப்படி. இன்றையதினம் நாட்டிலே ஏகாதிபத்திய முதலாளித்துவம்தான் வளர்ந்துகொண்டே இருக்கிறது. நாட்டிலுள்ள ஏழைகள் முன்னேறவில்லை. ஏழ்மை நிலை வளர்ந்துகொண்டே இருக்கிறது. மத்திய அரசு வெளிநாடுகளிலிருந்து கடன் வாங்குவதுதான் இதற்குக் காரணம். மின்சாரம், சிமெண்ட், சர்க்கரை போன்றவற்றின் விலையை உயர்த்த வேண்டும். இல்லையென்றால், சப்சிடி கிடையாது என்று சொல்லக்கூடிய அடிமை சாசனத்தை ஏற்றுக்கொள்ளவே கூடாது. மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கையால் வந்த விளைவுகள்தாம் இவை. "நீங்கள் ஒருநாள் போராட்டம் நடத்துவதால் நாட்டின் உற்பத்தி, விநியோகம் ஆகியவை தடைப்படும்" என்று சொல்கிறார்கள். இலங்கைத் தமிழர் பிரச்சினை எழுந்தபோது இவர்கள் போராடினார்களே அப்போது உற்பத்தி, விநியோகம் ஆகியவை தடைப்படவில்லையா? நாங்களாவது அகில இந்திய அளவில் இண்டஸ்ட்ரியல் ஒர்க்கர்ஸ் ரீதியில்தான் ஸ்டிரைக் செய்தோம். அன்றைக்கு இந்த ஆட்சி போராட்டம் நடத்தியபோது நாங்களும் கூட சேர்ந்து துணை நின்றோம். முழு பந்த் என்றுதான் அதைச் சொன்னார்கள். அன்றைக்கு உற்பத்தி மட்டுமல்ல, விநியோகமும் நடைபெறவில்லை. அதோடுகூட போக்குவரத்து கூட கிடையாது என்று சொன்னார்கள். அன்றைக்கு ஒருநாள் முழு பந்த் அனுசரித்ததினாலேயே குடி மூழ்கிப் போய்விட்டதா என்ன? அமைச்சர் அவர்கள் சாலிடாரிட்டி பற்றி சொன்னார்கள். இங்கேயும் அதுமாதிரி இராணுவ ஆட்சியைப் பிரகடனம் செய்திருக்கிறார்கள்? விலைவாசி உயர்வை எதிர்த்து நாடு



தழுவிய அளவில்தான் வேலை நிறுத்தம் நடைபெற்றது. விலைவாசி உயர்வை எதிர்த்து, மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கையை எதிர்த்துத்தான் வேலை நிறுத்தம் செய்தார்கள். ஆனால், இந்த அரசு முழு பந்த் நடத்தியது. அப்படியென்றால் மாமியார் உடைத்தால் மண் குடம், மருமகள் உடைத்தால் அது பொன்குடமா? வேலை நிறுத்தமும், பந்தும் இன்றைய தினம் உலகம் பூராவும் நாகரிகமான ஒன்று என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு செயல். இந்த ஆட்சியாளர்கள் கூட அதை நடத்திக் காட்டியிருக்கிறார்கள். அப்போதெல்லாம் பாதிக்கப்படாத உற்பத்தியும், விநியோகமும் தொழிலாளர்கள் ஒருநாள் நடத்திய வேலை நிறுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டது என்று கூறுவது வேடிக்கையானது. அதோடு மட்டுமல்லாமல் 5 ஆயிரத்திலிருந்து 10 ஆயிரம் பேர் வரை கைது செய்யப்பட்டதாகப் பத்திரிகையில் செய்தி வந்தது.

(முற்பகல் 11-10)

* திரு. க. இராமமூர்த்தி : இதுமாதிரி வேலை நிறுத்தம் நடைபெறுகிற போது, கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி நடைபெறும் மாநிலங்களிலே அந்த வேலை நிறுத்தத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவில்லையா அல்லது பொறுப்பிலே இருக்கும் அரசுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்களா?

திரு. ஆ. நல்லசிவன் : வங்காளத்திலே, திரிபுராவிலே இந்தப் போராட்டங்கள். . .

* திரு. க. இராமமூர்த்தி : தொழிலாளர்கள் நடத்திய வேலை நிறுத்தங்களிலே துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சி நடைபெறும் வங்காளம், கேரளம் ஆகிய மாநிலங்களிலே நடந்திருக்கிறது.

திரு. ஆ. நல்லசிவன் : வேறு கலவரங்கள் காரணமாக துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கலாம்.

திரு. க. இராமமூர்த்தி : நீங்கள் நடத்தினால் கலவரங்கள், மற்றவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : சென்ற மாதம் 19 ஆம் தேதி மேற்கு வங்காளத்திலே நடைபெற்ற போராட்டத்திலேகூட போலீஸ் சுட்டு தொழிலாளர்கள் இறந்திருக்கிறார்கள்.

திரு. ஆ. நல்லசிவன் : இறந்துபோனது துப்பாக்கிச் சூட்டிலே அல்ல. துப்பாக்கிச் சூட்டிலே இறந்தது முதலிலே தமிழ் நாட்டில், இரண்டாவது காசி பனாரசில், உத்தரப் பிரதேசத்தில் இந்த இரண்டு இடங்களிலேதான் துப்பாக்கிச் சூடு நடைபெற்றிருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மேற்கு வங்காளத்திலேயும் துப்பாக்கிச் சூட்டிலே இறந்திருக்கிறார்கள் என்பதை இன்றும் 11 திபேடம் கேளில பாரத்துக்காட்டுகிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : மேற்கு வங்காளத்திலே ஆட்சி செய்யும் கட்சி இதற்கு ஆதரவளித்தது. பரிபூரண ஆசி கூறிற்று. நீங்கள் செய்திருப்பது போல, சஸ்பெண்ட் செய்யப்போகிறோம், சம்பளப் பிடித்தம் செய்யப்போகி றோம் என்றெல்லாம் சொல்லவில்லை.

* திரு. க. இராமமூர்த்தி : இந்த 19 ஆம் தேதிப் போராட்டம் என்பது மட்டுமல்ல, இதற்கு முன்னாலே நடைபெற்ற வேலை நிறுத்தங்கள், கம்யூ னிஸ்ட் ஆட்சியிலே நடைபெற்ற வேலை நிறுத்தங்கள் பற்றிப் பார்த்தால். அந்த வேலை நிறுத்தங்களை அங்கீகரிக்காதபோது, கடுமையான நடவடிக்கை எடுத்ததா, இல்லையா என்பதுதான் பிரச்சினை. கம்யூனிஸ்ட் அங்கீகாரம் பெற்றுத்தான் வேலைநிறுத்தம் நடைபெற வேண்டும், இல்லையென்று சொன் னால் நசுக்கவேண்டும் என்றா கொள்கை வகுக்க முடியும் ?

திரு. ஆ. நல்லசிவன் : வேலைநிறுத்தம் செய்ய எல்லோருக்கும் உரிமை யுண்டு. கம்யூனிஸ்ட் ஆட்சியிலே கூட வேலைநிறுத்தம் செய்ய உரிமை புண்டு. போலந்து நாட்டிலே 5 மாத காலம் தொடர்ந்து வேலைநிறுத்தம் நடைபெற்றது. சோஷலிச ஆட்சியைக் கவிழ்க்க பழம் பெருச்சாளித்தன மான கிறிஸ்துவ மதபீடத்தின் ஆசியோடு கவிழ்க்க முயற்சித்தபோதுதான், அந்த நிலைமை ஏற்பட்டது. நாட்டு நடப்பை உண்மை நிலைமையோடு பார்ப்பவர்களுக்கெல்லாம் இது புரியும். இதெல்லாம் வாதத்திற்கு வரும் போதுதான் புலப்படாது அல்லது மனதார ஒத்துக்கொண்டாலும் வெளியே பேசமாட்டார்கள். 6 மாதம், 8 மாதம் என்று போலந்து நாட்டிலே வேலை நிறுத்தம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அங்கேயும் தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. போலந்திலே இப்போது வந்திருக்கின்ற இராணுவ ஆட்சி வருவதற்கு முன்னால் இருந்த பிரதம அமைச்சர் அவர் களால் தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.



திரு. ஆ. நல்லசிவன் : இப்போது இராணுவ ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சோஷலிச அரசைக் கவிழ்க்க அமெரிக்காவின் ஏஜென்டுகள் [illegible] அடக்குவதற்குத்தான் புரட்சி செய்து இப்போது [illegible] ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆட்சியைக் கவிழ்க்க துப்பாக்கியை எடுத்துக் காட்ட அங்கே அனுமதிப்பார்களா ? அங்கெல்லாம் பூப்போட்டுக் கும்பிட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள். போலந்திலே இருக்கும் வேலை நிறுத்த உரிமையைப் பறிக்கவில்லை. நீங்கள் எங்களுக்குப் பதில் சொல்ல வேண்டும். நீங்கள் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக வேலை நிறுத்தம் செய்தீர்களே, அது ஏன் ?

* மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்ல சிவன் அவர்கள் நடந்து முடிந்த ஒரு நாள் கடையடைப்பு, பொது வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தாராதவர்கள். இலங்கைத் தமிழருக்காக ஒரு நாள் போது வேலைநிறுத்தம் நடந்த வேண்டுகோள் விடுத்தீர்களே என்று கேட் டார்கள். இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக நடத்தியது என்பது ஒரு கட்சிக்கோ, ஒரு தொழிற் சங்கத்திற்கோ, ஒரு பிரிவினருக்கோ ஆதர வாக நடத்திய வேலை நிறுத்தமல்ல. ஒரு நாட்டில் மக்களில் பெரும் பான்மையான ஒரு இனத்தவருடைய பிரச்சினையாகக் கருதப்பட்டு, பொது மக்கள், தொழிலாளர்கள். அதிகாரிகள், அரசு அலுவலாளர்கள் இப்படி எல்லாத் தரப்பினராலும், நாட்டு மக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப் பட்ட ஒரு பிரச்சினையாகக் கொண்டு, மக்கள் எடுத்த முடிவு. ஆனால் சில தொழிற் சங்கங்களில் இருக்கின்றவர்கள் ... சில தொழிற் சங்கங்கள் எடுத்த முடிவு. நாட்டு மக்களைக் கட்டுப்படுத்துவது என்பது தவறு என் பதுதான் இதனுடைய பொருள்.

திரு. ஆ. நல்லசிவன் : தொழிற் சங்கங்கள் மக்களைக் கட்டுப்படுத்த லாமா என்பதல்ல பிரச்சினை. முதலமைச்சர் அவர்கள் கூறியிருப்பது என்ன ? உற்பத்தி பாதிக்கப்படுகிறது. விநியோகம் பாதிக்கப்படுகிறது, போக்குவரத்து பாதிக்கப்படுகிறது. இதனால் பந்த் நடைபெறக்கூடாது என்று சொன்னால், நீங்கள் பந்த் நடத்தியபோது இதெல்லாம் நடந்ததா இல்லையா? அப்படியென்றால் அன்றைக்கும் பந்த் நடத்தாமல், நாடு பூராவும் சாயந்திரம் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கலாமே ! மாண்புமிகு முதலமைச்சர் அவர் களின் தலைமையிலே அந்தப் போராட்டம், அந்த ஆர்ப்பாட்டம் சென்னை நகரத்திலே நடத்தியிருக்கலாமே ! தமிழ் நாட்டிலே இருக்கும் 12 மாவட்டங் களிலேயும் முக்கிய நகரங்களிலே எல்லாம் ஒவ்வொரு அமைச்சராகச் சென்று மற்ற முக்கியமானவர்களையும் வைத்து ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தால்,

[திரு. ஆ. நல்லசிவன்] [1982 பிப்ரவரி 6

அது இன்னும் நன்றாக இருந்திருக்குமே! ஏன் பந்த்க்குப் போக வேண்டும்? ஆனால் அரசியல் நாகரிகம் என்ற அளவிலே நீங்கள் அதை ஒத்துக்கொண்டு. . .

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** நான் சொன்னதை இப்போது 'சப்ஸ்டான்ஷியேட்' செய்கிறேன். 20—1—1982 ஆம் தேதி 'இந்து' பத்திரிக்கையில்

"One person died at Kulna in Burdwan District when the police fired this morning to disperse two rival groups. The police also opened fire at Entally in Central Calcutta on rival groups resulting in injuries to one person Minor violence was reported from East Calcutta where the police fired 8 rounds, resulting in injuries to10 persons."

**திரு. ப. மாணிக்கம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னால் குறிப்பிடும்போது, கப்பாக்கிச் சூட்டிலே தொழிலாளர்கள் இறந்தார்கள் என்றும் இப்போது 'பெர்சன்ஸ்' என்றும் சொல்கிறார்கள். இது சரிதானா? ஆங்கிலமும், தமிழும் அறிந்தவர் அமைச்சர் அவர்கள். அவர் அவையிலே சொன்னதை 10 நிமிஷத்திலே மாற்றலாமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பெரிய பந்த் நடக்கும்போது, சாகிறவர்கள் 'பெர்சன்ஸ்' என்று சொன்னால், சாகிறவர்கள் பட்டினிப் பட்டாளமாக இருக்க முடியாது. ஆகவே தான் 'பெர்சன்ஸ்' என்று சொன்னேன். ஒருவர் செத்திருக்கிறார் என்று மாற்ற வேண்டும் என்று சொன்னால் மாற்றிக்கொள்கிறேன். ஆக, துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் இறந்திருக்கிறார்.

**திரு. ப. மாணிக்கம் :** அப்படியென்றால் முதலிலே சொன்ன கருத்து, பிரித்துப் படிக்கக்கூடிய வகையிலே பதிவேட்டில் ஏறவேண்டும்.

**திரு. ஆ. நல்லசிவன் :** துணைத் தலைவர் அவர்களே, தயவு செய்து ...ளக்குக் கொடுத்திருக்கும் நேரத்தைக் குறைக்கக்கூடாது. நான் சொல்ல விரும்புவது. இந்தப் பொது வேலைநிறுத்தம் என்பதும், பந்த் ...ன்பதும் . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் வைநகை ...ல் போக வேண்டும் என்று சொன்னதால்தான், முதலிலே பேசவிட்டோம்.



1982 பிப்ரவரி 6]

**திரு. ஆ. நல்லசிவன் :** போகுமுன் பேசி முடித்துவிடுகிறேன். (சிரிப்பு)
பந்த் என்பதும், வேலை நிறுத்தம் என்பதும் அங்கீகரிக்கப்பட்ட முறை,
ஆதலால் அதில் பங்கெடுப்பவர்களை 'ஆன்டி-சோஷல் எலிமென்ட்ஸ்' என்று
தயவுசெய்து சொல்லக்கூடாது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்
தலைமை தாங்கி 1980 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3ஆம் தேதி ஊர்வலம்
நடத்தியது என்று சொன்னால், அது 'ஆன்டி-சோஷல்' நடவடிக்கையா?
இப்போது பந்த் நடைபெற்றபோது, இதுசம்பந்தமாகக் கைது செய்யப்
பட்டவர்கள் 5 ஆயிரம் பேர் முதல் 10 ஆயிரம் பேர் வரையில் அனைவரும்
தொழிலாளர்கள், ஊழியர்கள். ஆனால் இந்த 10 ஆயிரம் பேர்களையும்
'ஆன்டி-சோஷல் எலிமென்ட்ஸ்' என்று ஏன் எழுதுகிறீர்கள்? இதே நபர்கள்,
இந்த 'ஆன்டி-சோஷல் எலிமென்ட்ஸ்' இலங்கை இந்தியர்கள் பிரச்சினை
வந்தபோது, எப்படி சோஷல் ஒர்க்கர்கள், சமூக ஊழியர்கள் ஆகிவிட்டார்
கள்? ஏன் இந்த டபிள் ஸ்டான்டர்டு? இந்தப் போராட்டங்களைப் பொறுத்த
வரையில், இது அங்கீகரிக்கப்பட்ட முறை என்பதை ஏற்றுக்கொள்ள
வேண்டும். இந்த ஆண்டி-சோஷில் எலிமென்ட்ஸ் என்பது வெள்ளைக்
காரனை எதிர்த்துப் போராடியபோது, அப்படிப் போராடியவர்கள் கைது
செய்யப்பட்டபோது, அவர்களை ஆண்டி-சோஷில் எலிமென்ட்ஸ் என்று
சொல்வார்கள். அதைக் கடன் வாங்கிக்கொண்டு இப்போதும் அப்படியே
பேசிக்கொண்டிருப்பது என்பது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு மேலவைத் துணைத்
தலைவர் அவர்களே, அவையில் மாறுபட்ட கருத்து சொல்லப்படுவதால்,
ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். பந்தின் போது தமிழகத்தில் கைது
செய்ததைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர்கள் ஆட்சி செய்யும் இடத்தில்
என்ன நடக்கிறது என்பதை மட்டும் இங்கே நான் படித்துக் காட்ட விரும்பு
கிறேன் :

"Hindu", dated 21st January 1982

"The State Government spokesmen said the score-sheet on yesterday's bandh read:

Dead—5 ; Arrested 300 ;

Wounded including policemen 209, police firing in six areas. 26 rounds having been used, and tear-gassing in 5 places.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1982 பிப்ரவரி 6

எனவே அவர்களுடைய மாநிலத்திலும் நிறைய பேர் கைது செய்யப்பட்
டிருக்கிறார்கள். துப்பாக்கிச் சூடு நடைபெற்றிருக்கிறது. அப்படி
இருக்கும்போது, தமிழ் நாட்டைப்பற்றி மட்டும் குறிப்பிடுவதேன் ? அவர்
களைவிட நாங்கள் குறைவாகத்தான் துப்பாக்கிச் சூட்டை நடத்தியிருக்
கிறோம். அவர்கள் ஆட்சியில் செத்தவர்களின் எண்ணிக்கைதான் 5.

**திரு. ஆ நல்லசிவன் :** அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவது, வேலை நிறுத்
தம் வேண்டும் என்று ஒரு சாராருக்கும், வேலை நிறுத்தம் வேண்டாம்
என்று சொன்ன மற்றொரு சாராருக்கும் இடையில் ஏற்பட்ட கலவரத்தின்
போது ஏற்பட்ட துப்பாக்கிச் சூடு. ஆனால் நான் சொல்வது ‘பந்த்’
நடைபெறுவதற்கு முன்னால், 17, 18 ஆகிய தேதிகளில் 5,000 முதல் 10,000
பேர்களைத் தமிழகத்தில் இந்த அரசு இரவோடு இரவாகக் கைது செய்திருக்
கிறது. அதாவது 19-ம் தேதி நடைபெற்ற “பந்த்” பற்றி நான் குறிப்பிடு
கிறேன். 5,000 பேர் என்று பத்திரிக்கைகளில் செய்தி வருகிறது.
ஆனால், இன்றுவரை எவ்வளவு பேர் முன்கூட்டியே கைது செய்யப்பட்டார்
கள் என்ற விவரத்தை அரசின் தரப்பில் யாரும் தரவில்லை. பத்திரிக்கைச்
செய்தியையும் இதுவரை அரசு மறுக்கவுமில்லை. தமிழ் நாட்டில் நான்கு
கோடி மக்கள் வாழும்போது, ஒரு வேலை நிறுத்தத்தின்போது 5,000 முதல்
10,000 பேர்களை அரசாங்கமே முன்கூட்டியே கைது செய்கிறது என்றால்,
வேலை நிறுத்தத்தை இந்த அரசாங்கமே ஆதரித்திருக்கிறது என்றுதான்
பொருள். வேலை நிறுத்தம் இந்த ஆட்சியில் இருப்பவர்களுக்குத் தேவைப்
படும்போது ஆதரிப்பதும், உங்களுக்குத் தேவையில்லாதபோது அதை எதிர்ப்
பதும் என்கிற போக்கு எந்த வகையிலும் சரியில்லை. கைது செய்யப்
படுகிறவர்களையெல்லாம் “ஆண்டி சோஷல் எலிமென்ட்ஸ்” என்று சொல்
லுவதும் எந்தவகையிலும் சரியில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன்.

துப்பாக்கிச் சூடு நடைபெற்றதைப்பற்றி அரசாங்கத்திலே ஒரு
‘வெர்ஷனை’க் கொடுத்திருக்கிறார்கள். துப்பாக்கிச் சூடு நடைபெற்ற
இரண்டாவது நாள் நானும், சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. உமா
நாத் அவர்களும் அந்த இடத்திற்குப் போய்ப் பார்த்தோம். திருமெய்
ஞானம் என்னும் ஊரில்தான் துப்பாக்கிச் சூடு நடைபெற்றது. மாயூரம்-
திருக்கடையூர் பாதையில் “அம்மனாத்தாப் பாலம்” அருகில் மறியல் நடந்
தது என்று சொல்லப்பட்டது. அங்கே மறியல் ஏதும் செய்யவில்லை.
அங்கே வந்த பஸ்ஸின் காற்றைப் பிடுங்கிவிட்டார்கள். அதுகூட காலை 6
மணிக்கு நடந்தது. அதற்காக 8½ மணிக்கு செம்பனார்கோயில் சப்-
இன்ஸ்பெக்டர் திரு. நடராஜன் என்பவர் ஆக்கூர்—முக்கூருக்குச் சென்று



1982 பிப்ரவரி 6] [திரு. ஆ. நல்லசிவன்]

அங்கேயிருந்து போலீஸ்காரர்களை அழைத்து வந்திருக்கிறார்கள். திருமெய்
ஞானம் என்னும் அந்த ஊர் அதிகமாக ஹரிஜனங்கள் வாழும் கிராமம.
அந்தக் கிராமம் ரோடிலிருந்து 3 மைல் தள்ளி இருக்கிறது. அந்த இடத்
திற்குச் சென்று அங்கிருப்பவர்களைத் தாக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியிருக்
கிறார்கள். ஆனால், போலீஸ் தரப்பில் என்ன சொன்னார்கள் என்றால்
“பஸ்ஸை மறித்தவர்களைப் பார்த்து நீங்கள் கலைந்து போக வேண்டும்
என்று கேட்டுக்கொண்டோம். அவர்கள் கேட்கவில்லை. எனவே கூட்டத
தைக் கலைக்க துப்பாக்கிச் சூடு பிரயோகம் நடந்தது” என்பதுதான்.
போலீஸ்காரர்கள் சொல்லும் இந்த ‘வெர்ஷன்’-ஐ அரசாங்கம் அப்படியே
சொல்லுகிறது. இதுதான் உண்மை என்கிறது. ஆனால் உண்மையில்
நடந்தது என்னவென்றால், ரோடிலிருந்து மூன்று மைல் தள்ளியுள்ள திரு
மெய்ஞானம் கிராமத்தில், ஹரிஜன மக்களே வாழும் அந்த இடத்தில், செம்ப
னார்கோயில் சப்-இன்ஸ்பெக்டர் நடராஜன் 22 போலீஸ்காரர்களை அழைத்
துப் போய் தாக்கியிருக்கிறார். அவர் காலையில் வந்தபோது மறியல் செய்த
ஒரு தோழரைக் கம்பு கொண்டு தாக்கியதால் அந்தத் தோழருக்கு ரத்த
காயம் தலையில் ஏற்பட்டிருக்கிறது. அதைக் கண்டு வேறு ஒரு தோழர்
அந்த சப்-இன்ஸ்பெக்டர் மீது கல் எறிந்திருக்கிறார். அதனால் சப்-இன்ஸ்
பெகடருக்கும் தலையில் காயம் ஏற்பட்டது. அதன காரணமாக அந்த
சப்-இன்ஸ்பெக்டர் ஆத்தூர்-முக்கூருக்குச் சென்று போலீஸ்கார்களை
அழைத்து வந்திருக்கிறார். ஆர்.டி.ஓ. வைக் கூப்பிடாமல் போலீஸ்கார
களை அழைத்து வந்து அந்தக் கிராமத்திற்குள் சென்று அங்குள்ளவர்களைத்
தாக்கியிருக்கிறார். அதன் காரணமாக 4 குழந்தைகளுக்குத் தகப்பனான
நாகூரான் என்ற ஒரு விவசாயியும், அஞ்சான் என்ற இன்னொரு விவசாயத்
தொழிலாளியும் சுடப்பட்டார்கள். அந்த இரு தொழிலாளர்களுக்கும் மறி
யலுக்கும சம்பந்தமே இல்லை. அந்தக் கிராமத்தில் இருக்கும் நிலச்சுவான்
தார்கள் தொழிலாளர்களை அடக்க இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்
கொண்டார்கள். அத்தகைய நிலச்சுவான்தார்களுக்கு அந்த சப்-இன்ஸ்
பெக்டர் நடராஜன் சாதகமாக இருந்து கொண்டு தொழிலாளர்களுக்குத்
தொல்லை அளிக்கிறார் என்று கடந்த 5, 6 மாதங்களுக்கு முன்னாலேயே
முதலமைச்சர் அவர்களுக்கு மனு கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழக அரசு
இந்தப் போராட்டத்தை, வேலை நிறுத்தத்தை எதிர்க்கிறது என்று தெரிந்து
கொண்டு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, தஞ்சை ஜில்லாவில் உள்ள
நிலச்சுவான்தார்கள் விவசாயத் தொழிலாளர்களைப் போலீஸ் துணை
கொண்டு தாக்க முனைந்தார்கள். தஞ்சை மாவட்டத்தில் சி.பி.எம்.,
சி.பி.ஐ., ஆகிய கட்சிகளின் கீழ் உள்ள சுமார் 7,00,000 தொழிலாளர்கள்

(திரு. ஆ. நல்லசிவன்) [1982 பிப்ரவரி 6

இந்தப் 'பந்த்'ல் ஈடுபட்டார்கள். எனவே இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொண்டு செம்பனார்கோயில் சப்-இன்ஸ்பெக்டர் நடராஜன் என்பவர் திருமெய்ஞானத்தில் உள்ள ஹரிஜனங்கள்மீது இந்தத் தாக்குதலைத் தொடர்ந் தார். எனவே இது சாதாரண துப்பாக்கிச் சூடு சம்பவம் அல்ல. ஒரு ஆர்.டி.ஓ., சம்பந்தப்பட்டது, ஒரு டி.எஸ்.பி., சம்பந்தப்பட்டது, பொறை யார் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் சம்பந்தப்பட்டது. இப்படிப்பட்ட ஒரு சம்பவத்தில் ஒரு டி.ஆர்.ஓ., விசாரணை வைத்திருப்பது சரியல்ல. எனவேதான் உண்மையைக் கொண்டுவர வேண்டுமென்றால், நீதி விசாரணை தேவை என்று நாங்கள் வலியுறுத்துகிறோம்.

போலீஸ் தரப்பில் என்ன சொல்லப்பட்டது என்றால், அந்த மக்கள் ரோட்டை மறித்தார்கள், ஆகவே துப்பாக்கிச் சூடு செய்ய வேண்டிய அவ சியம் ஏற்பட்டது என்பதாகும். இதை நாம் ஒப்புக்கொள்ளக் கூடாது. சென்ற முறை அண்ணா தி.மு.க. அரசு சர்வாதிகார மத்திய அரசால் கலைக்கப்பட்டபோது, அதை எதிர்த்து முதலமைச்சர் தலைமையில் ஒரு போராட்டம் நடைபெற்றபோது, போலீஸ் அத்துமீறல்கள் நடைபெற்றன. அவைகளைப் பற்றி போலீஸ் தரப்பில் அறிக்கை வெளியிட்டபோது, அதற்கு தற்போதைய முதலமைச்சர் மறுப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டார். போலீஸ்காரர்களே ஊர்வலத்தினர் மீது கல் கொண்டு எறிந்தார்கள் என்று அப்போது சொன்னார். ஆனால் அவர் மீண்டும் முதலமைச்சராக ஆன போது, அதே போலீஸ்காரர்கள் எழுதி வைத்த அறிக்கையைத்தான் படித் தார். அப்போதே பேரவை உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் இதைப் பற்றிக் கேட்டார். இந்த அரசு வெளியேற்றப்பட்டபோது கடற்கரையில் பேசிய பேச்சு என்ன? "அப்போது போலீஸ்காரர்கள் கல் கொண்டு எறிந் தார்கள் என்று பேசிவிட்டு, இங்கே சட்டமன்றத்திற்கு வந்து போலீஸ்கார ர்கள் அன்றையதினம் தடியடிப்பிரயோகம் செய்தது நியாயம்" என்று எப் படிப் பேசுகிறீர்கள் என்று கேட்டார். எனக்கும் மனச்சாட்சி இருக் கிறது என்று ஒப்புக்கொண்ட முதலமைச்சர் என்ன செய்வது, போலீஸ் அமைச்சர் என்ற முறையில் எழுதிக் கொடுப்பதைப் படிக்க வேண்டியிருக் கிறதே என்று குறிப்பிட்டதை மறந்திருக்க மாட்டார் என்று நம்புகிறேன். எனவே இது முதலமைச்சர் அவர்களுக்கு மட்டும்தான் பொருந்துமா அல்லது திருமெய்ஞானம் கிராமத்து ஹரிஜன மக்களுக்கும் பொருந்துமா என்று கேட்க விரும்புகிறேன். எனவேதான் மீண்டும் மீண்டும் கேட்கிறோம், இதற்கு போலீஸ் ரிபோர்ட் அடிப்படையில் ஆர்.டி.ஓ. விசாரணை நடத்து வதைக் கைவிட்டுவிட்டு, நீதிவிசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





(திரு. ஆ. நல்லசிவன்)
982 பிப்ரவரி 6]

தமிழ் நாட்டுப் போலீஸ் துறையைப் பொறுத்த வரையில், அது எப்படியும்
தமிழ்நாடு அரசுக்குக் கெட்ட பெயர் உண்டாக்க வேண்டும் என்று செயலாற்று
கிறதோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. இம்பீரியலிஸ்ட்டிக் வர்க்கத்
தால், ஏகாதிபத்திய வர்க்கத்தால் உருவாக்கப்பட்டது அந்த போலீஸ்.
அதைப் போய் "டிஃபெண்டு" செய்வது சரியல்ல. நாய் வாலைப் பட்டுத்
துணி போட்டு கட்டுவதால் அது நிமிர்ந்துவிடாது. இதை நான் மட்டும்
சொல்லவில்லை. சில தினங்களுக்கு முன்னால் "இந்தியன் எக்ஸ்பிரஸ்"
பத்திரிகையில் "தமிழ்நாடு கவர்ன்மெண்ட்—எ போலீஸ் ஸ்டேட்" என்று
உண்மையை அப்படியே படம்பிடித்துக் காட்டி எழுதியிருக்கிறது. பத்திரி
கையில் வரும் சம்பவங்கள் எல்லாம் உண்மையா என்று என்னைக் கேட்க
லாம். அதில் பல நேரங்களில் உண்மையும் இருக்கிறது, சில நேரங்களில்
மிகைப்படுத்தப்பட்டும் இருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்றைக் குறிப்பிட்
டிருக்கிறார்கள். 'நக்சலைட் என்கவுண்ட்டர்' என்கிற பெயரில் போலீஸ்
துறையைச் சார்ந்தவர்கள் தாங்கள் விரும்பாதவர்களையெல்லாம் கொன்றிருக்
கிறார்கள் என்று விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இதைப்பற்றியெல்
லாம் ஏன் ஒரு 'ஜுடிஷியல் என்கொயரி' துவக்கக்கூடாது என்று கேட்க
விரும்புகிறேன். அந்தப் பத்திரிகையைச் சார்ந்தவர்கள் "நாங்கள் இன்
னின்ன ஊருக்குப் போனோம், இன்னின்ன மனிதர்கள் இப்படி இப்படி
யெல்லாம் சொன்னார்கள், அங்கே இப்படி இப்படியெல்லாம் நடைபெற்றிருக்
கிறது" என்று எழுதியிருக்கிறார்கள். எனவே போலீஸ்காரர்களின் செய்கை
களையெல்லாம் நியாயப்படுத்துவதை விட்டு, இவைகளைப்பற்றி உண்மை
களைக் கண்டறிய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வாடிப்பட்டியில் ஒரு சம்பவம் நடைபெற்றிருக்கிறது. அங்கே பிரேம்குமார்
என்று ஒரு சப்-இன்ஸ்பெக்டர் இருக்கிறார். சினியம்மாள் என்ற ஓர் ஆசிரியை
அங்கேயுள்ள போலீஸ்காரர் ஒருவரின் வீட்டில் குடியிருந்து வருகிறார்.
அவரை அந்த வீட்டிலிருந்து காலி செய்யக் கேட்டுக்கொண்டும், காலி
செய்யாமல் தாமதப்படுத்திக் கொண்டிருந்தார் என்ற காரணத்திற்காக, அந்த
ஆசிரியையும் அவர்தம் கணவரையும் 24 வயது பையனையும் அடித்து
வீட்டிலிருந்து கைவிலங்கு போட்டு நடுத் தெருவில் ஊர்வலமாக அழைத்து
வந்திருக்கிறார். கேட்டால், அவரைக் கொலை செய்ய முயன்றார்கள் என்று
ஒரு வழக்கைப் பதிவு செய்திருக்கிறார். இதை எதிர்த்து 2 ஆம் தேதியன்று
அந்த வட்டாரப் பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் ஸ்டிரைக் செய்திருக்
கிறார்கள். 3 ஆம் தேதியன்று அந்த ஊரில் அனைவரும் கடையடைப்பு
செய்திருக்கிறார்கள். இன்றைக்கு 6 ஆம் தேதி சர்வகட்சி ஆர்ப்பாட்டம்
வைத்திருக்கிறார்கள். எனவே இப்படிப்பட்டவர்களின் போலீஸ் ரிப்

(திரு. ஆ. நல்லசிவன்) [1982 பிப்ரவரி 6

போர்ட்டைத்தான் சரி என்று சொல்லுவது நல்லதல்ல என்று குறிப்பிட விரும்புகிறேன். எனவே திருமெய்ஞானம் சம்பவம்பற்றி போலீஸ் ரிப்போர்ட்டை அங்கீகரிக்காமல் ஒரு ஜுடிஷியல் என்கொயரிக்கு உத்தர விடுங்கள் என்று மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

இந்த அளவுக்கு எதற்காக அடக்குமுறை என்று கேட்க விரும்புகிறேன். நாங்கள் ஆதரிக்கிற சர்க்காரான நீங்கள், இந்திராவின் சர்வாதிகாரக் கொடுமையிலிருந்து உங்களைக் காக்க வேண்டும் என்று இருக்கிற தொழிலாளர்களுக்கு விரோதமாக ஏன் செயல்படுகிறீர்கள் என்பதுதான் புரியவில்லை. அது மட்டுமல்ல. எப்போது பார்த்தாலும் ஆர்கனைஸடு லேபருக்கு எதிராக அன் ஆர்கனைஸ்டு லேபரைச் சுட்டிக்காட்டும் பழக்கம் இருந்து வருகிறது. ஆர்கனைஸ்டு தொழிலாளர்கள் கூலி உயர்வு கேட்டால் உடனே அன் ஆர்கனைஸ்டு லேபரைக் காட்டி, "இவர்கள் ஒரு நாளைக்கு 3½ ரூபாய் கூட இல்லாமல் இருக்கும்போது நீங்கள் 500 ரூபாய் மாதம் சம்பளம் வாங்குகிறீர்களே" என்று கூறுவது எந்த வகையிலும் சரியல்ல. ஆர்கனைஸ்டு லேபருக்கு எதிராக அன் ஆர்கனைஸ்டு லேபரைக் காட்டும் போக்கு சரியல்ல. இந்த நிலையில் மத்திய அரசில் இருப்பவர்களுக்கு யோசனை போதாது என்று இங்கே இருக்கிற மாநில அமைச்சர் அங்கே சென்று இதற்கு யோசனை சொல்கிறார் என்றால் . . . .

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** ஆர்கனைஸ்டு லேபருக்கு எதிராக அன்-ஆர்கனைஸ்டு லேபரை இந்த அரசு ஏவுகிறது என்று கூறுவது சரியல்ல. இன்ன இடத்தில் இப்படி நடந்தது சரியல்ல என்று சான்று சொல்வதுதான் உகந்ததாக இருக்கும். பொதுவாகச் சொல்வது சரியல்ல என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** ஒன்றா இரண்டா குறிப்பிட்டுச் சொல்வதற்கு. கடந்த 4 ஆண்டுக் காலத்தில் எனக்கும் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சருக்கும் ஏற்படும் வாக்குவாதத்தில் பெரும்பான்மையான வாதம் இதன் காரணமாகத்தான் நடந்திருக்கிறது என்பதை எல்லோரும் அறிவர்.

(முற்பகல் 11.30)

இந்த அரசு ஆர்கனைஸ்ட் லேபருக்கு எதிராகப் போகக்கூடிய அரசாக இருக்கிறது. இது ராஜாவுக்கு மேல் ராஜ விசுவாசம் என்பதைப் போல இருக்கிறது. இவர்களே, "நாங்கள் வேலை நிறுத்தத் தடைச் சட்டம்



(திரு. ஆ. நல்லசிவன்)

1982 பிப்ரவரி 6]

போட்டிருக்கிறோம்" என்று சொல்லுகிறார்கள். கல்வி நிறுவனங்களிலும், மருத்துவ மனைகளிலும் வேலை நிறுத்தம் செய்யக் கூடாது என்று நாங்களே தடைச் சட்டம் போட்டிருக்கிறோம் என்று நம்முடைய லேபர் மினிஸ்டர் டில்லியில் உள்ள மந்திரிக்கு யோசனை சொல்லியிருக்கிறார்கள். இப்படி தொழிலாளர்களுக்கு எதிரான சட்டத்தை இவர்களே கொண்டு வந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** துணைத் தலைவர் அவர்களே, 'எசென்ஷியல் சர்வீஸ்' என்ற வகையிலே மருத்துவ மனைகளிலும் பள்ளிக் கூடங்களிலும் வேலை நிறுத்தம் செய்யக்கூடாது என்று நாங்கள் சொல்லும் போது, மாண்புமிகு உறுப்பினர், அவர்களுக்கும் வேலை நிறுத்த உரிமையைக் கொடுத்து சர்வீசை 'பாரலைஸ்' செய்ய வேண்டுமென்று கருதுகிறார்களா? அங்கே வேலை நிறுத்தம் இருக்கக் கூடாது என்பதுதான் இந்த அரசின் கருத்து என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். உங்களுக்கு இதிலே கருத்து வேறுபாடு இருக்கலாம். பழுத்த கம்யூனிஸ்ட் ஆட்சி இருக்கும் நாட்டில் ஏதோ ஒரு காரணத்தைக் காட்டி வேலை நிறுத்தத்தைத் தடை செய்தார்களா இல்லையா? தொழிற் சங்கங்களை உடைத்தார்களா இல்லையா? தொழிற் சங்கங்கள் அரசாங்கத்தை நிர்ப்பந்தப்படுத்தியிருக்கிறார்கள். திரு. ஜெயப் பிரகாஷ் நாராயணன் 1975 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 ஆம் தேதியன்று நடத்தியதைப் போல, பெரிய போராட்டமாக சென்ற மாதம் 19 ஆம் தேதி நடத்த முயற்சித்தார்கள் என்பது இந்த அரசின் கருத்து என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** இது அரசின் கருத்து என்பதை முதலமைச்சர் அவர்கள் சொன்னால் பரவாயில்லை. இவர் சொல்லுவதை அரசின் கருத்து என்பதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு வேளை எனக்குப் பதில் சொல்ல வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் அவ்வளவு வேகமாகச் சொல்லுகிறார்களோ என்னவோ தெரியவில்லை. யூ.ஜி.சி. ஊதிய விகிதத்தை அமுல் நடத்த வேண்டுமென்று கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம் நடத்தினார்களா இல்லையா? போராட்டம் செய்வதற்கு முன்பாகவே இதை அமுல் நடத்தியதா? ஆகவே பிராக்டிகலாகப் பார்க்க வேண்டும். ஆகவே அரசாங்கத்தை நிர்ப்பந்தப்படுத்த வேலை நிறுத்தம் தேவைப்படலாம். யூ.ஜி.சி. ஊதிய விகிதத்தை அமுல் நடத்த தமிழ் நாட்டில் ஸ்ட்ரைக் நடக்க வேண்டியிருந்ததா இல்லையா? அதைப் போலவே ஆஸ்பத்திரியிலும் ஸ்ட்ரைக்

பண்ணினால்தான், உரிமையைப் பெற முடிகிறது. அரசு ஊழியர்களைப் பொறுத்த வரையில், விலைவாசி உயர்ந்துகொண்டே போவதால், அவர்கள் போராட அனுமதிக்க வேண்டுமா வேண்டாமா ?

தமிழ் நாட்டில் அ.தி.மு.க. ஆட்சி இப்படி நடந்துகொள்வதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. சமீப காலமாக மத்திய அரசுடன் இணக்கமாகப் போக முயற்சி செய்கிறது. அதற்குக் காரணம் மத்திய அரசிடம் நிறைய அதிகாரங்கள் இருக்கின்றன என்பதும் அவற்றை மத்திய அரசு சர்வாதிகாரப் போக்கில் பயன்படுத்தும் என்ற அச்சம் இந்த அரசுக்கு இருப்பதும்தான். இப்படி அச்சப்பட்டால், ஆட்சியை நடத்த முடியாது என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். இல்லையென்றால் இந்த அரசு 19 ஆம் தேதி நடந்த போராட்டத்தில் ஏன் பங்கேற்க பயப்படுகிறார்கள் ? திரிபுராவிலும், மேற்கு வங்காளத்திலும் ஸ்ட்ரைக் செய்தவர்களைக் கைது செய்யவில்லையே, ஸ்ட்ரைக்கை ஒடுக்க எந்தவித ஏற்பாடும் செய்யவில்லையே ? இங்கே மட்டும் இவர்கள் ஏன் கைது செய்கிறார்கள் ? ஸ்ட்ரைக் நடந்தால் என்ன குடி மூழ்கிப் போகும் ? தாங்கள் நல்ல பிள்ளை என்று மத்திய அரசுக்குக் காட்டிக் கொள்வதற்காக முயற்சி செய்கிறார்கள். இந்திரா காங்கிரசோடு இணைந்து கொள்ள முயற்சி செய்கிறார்கள். 19 ஆம் தேதி நடக்கவிருந்த ஸ்ட்ரைக்கைத் தடை செய்திருக்கிறோம், கைது செய்திருக்கிறோம், துப்பாக்கிப் பிரயோகம்கூட செய்திருக்கிறோம் என்று சொல்லி மத்திய அரசைத் திருப்திப்படுத்த நினைக்கிறார்கள்.

அடுத்து, தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம்தான் பிரதான எதிர்க் கட்சி என்று நினைக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகமும் இந்திரா காங்கிரசும் சேர்ந்து போனால், தங்களை இருக்கவிடாது என்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நினைக்கிறது. அதனால்தான் இந்திரா காங்கிரசோடு சேர வேண்டுமென்ற எண்ணம் இவர்களுக்கு உண்டாகிறது. இவர்களுக்கு மார்க்சிஸ்ட், லெனின், ஸ்டாலின் தத்துவங்களில் கொஞ்சம் நம்பிக்கை இருக்கிறது. பகுத்தறிவாளர்கள் ஸ்டாலின் பெயரைக் கூட வைத்திருக்கிறார்கள். ஆகவே லெனின் சொன்னதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். லெனின், மார்க்ஸ், என்ஜெல்ஸ் போன்றவர்கள் எவ்வளவோ சொல்லியிருந்தாலும், இந்தக் காலக் கட்டத்திற்கேற்ப நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இது தமிழ் நாட்டில் உள்ள திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் பயன்படும் என்று நினைக்கிறேன். லெனினுடைய யோசனை எல்லாக்



காலத்திற்கும் பொருந்தும் என்று நினைக்கிறேன். ஆகவே அதைச் சொல்கிறேன். எலியிடம் போய் "உலகத்திலேயே மிகப் பெரிய ஆபத்து எது" என்று கேட்டால், "பூனை" என்று சொல்லும், புலியைச் சொல்லாது. "எலிக்குப் பூனையிடம்தான் உடனடியாக பயம்" என்று சொல்லும். அப்ஜெக்டிவாகப் பார்த்தால், உலகிலேயே மிகப் பெரிய ஆபத்து விளைவிக்கக் கூடியது புலிதான். அதைப்போலவே தி.மு.க. அ.தி.மு.க. ஆகிய இரு கட்சிகளும், மக்களுக்கு முட்டுக்கட்டையாக இருக்கக் கூடிய இந்திரா காங்கிரசைக் கண்டுதான் பயப்படுகிறார்கள்.

* **திரு. க. இராமமூர்த்தி :** துணைத் தலைவர் அவர்களே, கட்சிகளுக்கு அடைமொழி கொடுத்துப் பேசுவதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. அவர் உணர்ச்சி வசப்பட்டு பேசிக்கொண்டிருக்கிறார். தேசத் துரோகக் கட்சியை வைத்துக்கொண்டு அவர்கள் எப்படி நாட்டைக் காட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாங்களும் பேச முடியும்.

**திரு. ஆ. நல்லசிவன் :** தேசத் துரோகக் கட்சி என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி சொன்னால் பிரயோஜனம் இல்லை. தேசத் துரோகமா, நிலப்பிரபுகளுக்குத் துரோகமா, பெரு முதலாளிகளுக்குத் துரோகமா என்பதைப்பற்றி மக்கள் கூறுவார்கள்.

* **திரு. க. இராமமூர்த்தி :** உறுப்பினர் சார்ந்திருக்கிற கட்சி ஆட்சி செய்கிற மாநிலத்தில் சுட்டது நியாயமென்றும், இங்கே சுட்டது தவறு என்றும் சொல்லுவது எப்படி ?

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தியின் கேள்விகளுக்கு நான் பதில் சொல்ல நேரம் இல்லை. அதைவிட முக்கியமாகப் பேச வேண்டியது இருக்கிறது. தமிழ் நாட்டில் தி.மு. கழகத்திற்கும், அ.தி.மு. கழகத்திற்கும் பெரிய பகை இருப்பதால், மத்திய அரசுக்குப் பயப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது. மத்திய அரசுக்கு வால் பிடிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகவேதான் இரண்டு பேரும் தேசிய பாதுகாப்புச் சட்டத்திற்கு வரவேற்பு கொடுத்தார்கள். அந்த தேசிய பாதுகாப்புச் சட்டம் அமைச்சர் மீது வாராதா ? தேசிய பாதுகாப்புச் சட்டத்தை இந்த அரசுக்கு எதிராக மத்திய அரசு பயன்படுத்தாது என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது ? 1976 ஆம் ஆண்டிலே மிசா சட்டத்தின் கீழ் தி.மு. கழகத்தினர் இதே அரசாலே சிறையில் தள்ளப்பட்டவர்கள்தானே. தமிழ் நாட்டில் இவர்கள் இருவருக்குள் பகை என்றால், அதைத் தீர்க்க அவர்களுடைய காலடியில்

(திரு. ஆ. நல்லசிவன்) [1982 பிப்ரவரி 6

சரணாகதி அடையும் போக்கு காணப்படுகிறது. ஆகவே அ.தி.மு.க. தலைவருக்கும், இந்த அரசுக்கும் சொல்லிக்கொள்கிறேன், நண்பர் டாக்டர் காளிமுத்துவின் யோசனையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று. "திராவிட இயக்கத்தின் பிணக்கு திராதிருக்க கழுகாகக் காத்துக் கொண்டிருக்கிறது இந்திரா காங்கிரஸ்" என்று அறிக்கை விட்டார்.

* திரு. க. இராமமூர்த்தி : எங்களைக் கழுகு என்று சொல்வதற்காக அவரையும் அவரது கட்சியையும் பிணமாக ஆக்கிக்கொண்டார் டாக்டர் காளிமுத்து.

திரு. ஆ. நல்லசிவன் : இடையில் திசை திருப்பும் இதற்கெல்லாம் நான் பதில் சொல்ல விரும்பவில்லை. நான் சொல்ல விரும்புவது, காங்கிரஸ் பிடியிலிருந்து வெளிவர வேண்டாமா என்று யோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தி.மு.க. வெளி வரும் என்று நினைக்கிறேன். திருப்பத்தூர் தேர்தல் சமயத்தில் அந்தப் பக்கம் போய்விட்டார்கள். தேர்தல்கூட முடிந்துவிட்டது. எங்கள் இஷ்டப்படிதான் போவேன் என்பார்கள். ஆனால் நாங்கள் கேட்பது, 1980 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் தமிழக மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதி என்ன ஆவது என்பதுதான்.

(முற்பகல் 11.40)

தமிழ்நாடு சட்டசபையில் பெரும்பான்மையோடு இருந்தபோது கலைத்ததை எதேச்சாதிகாரமாகச் செயல்பட்டார்கள் என்று தமிழ்நாடு பூராவும் பேசவில்லையா ? அந்தத் திருப்பத்தூர் எலக்ஷனில் திரு. வால்மீகி நிற்கிறார். அவரை எதிர்த்தார்கள். இந்திரா காங்கிரசுக்கு எதிர்ப்பாக இருந்தார்கள். இந்த வால்மீகிக்கு ஓட்டுப் போட்டால், சர்வாதிகாரத்திற்கு போட்ட ஓட்டு என்று சொன்னார்கள். அதை வைத்துத்தான் வோட்டு வாங்கியிருக்கிறார்கள். இன்று அந்தத் தமிழ் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதி என்ன ஆகிறது? 1980-ல் 5 வருடத்திற்குள்ளாகவே உங்கள் கணக்கு தவறாகிவிட்டதா? இன்றைக்கு ஒரு நியாயம் சொல்கிறீர்களே. அது என்ன நியாயம்? ஒருவர் ஒரு தொகுதியில் செத்துப்போனால், அந்தக் கட்சிக்குத்தான் அந்த இடம் என்று சொல்கிறார்கள். ஒரு கோட்பாடு. இருக்கும் உறுப்பினர் செத்துப் போனால் அந்த கட்சிக்குத்தான் அந்த இடம் என்று சொன்னார்கள். அந்தத் தப்பு திண்டுக்கல்லிலேயே ஆரம்பித்தது. திண்டுக்கல்லில், பாராளுமன்ற உறுப்பினர் திரு. இராசாங்கம் அவர்கள் இறந்து போனார்கள். அவர் தி.மு.க.-விலே இருந்தார்கள். அதையும் விட்டுவிடுவோம். 1977-லே நடந்த



1982 பிப்ரவரி 6] (திரு. ஆ. நல்லசிவன்)

பாராளுமன்ற எலெக்ஷனிலே நாகப்பட்டினத்திலே சி.பி.ஐ.-யை ஆதரித்
தார்கள். திரு. முருகையனை 'சப்போர்ட்' பண்ணினார்கள். அவர் இறந்து
போனார். ஆக எங்களை எதிர்த்து நின்றார்கள் என்று சொல்லலாம்.
நாங்கள் பிரிந்துவிட்டோம். தி.மு.க. வேறு, நாங்கள் வேறு என்று சொன்
னார்கள். உங்கள் கட்சியை ஸ்தாபிக்க வேண்டும், அதற்கு நாங்கள் சிந்திக்க
வேண்டும் என்று சொன்னார்கள். திரு. முருகையனை ஆதரித்தார்கள்.
அவரும் இறந்து போனார். அப்போது உங்கள் கோட்பாடு என்ன ஆயிற்று?
அது போகட்டும், அப்போது நிருபர்கள் கேட்டார்களே உங்களிடத்திலே. இனி
வரப்போகின்ற காலத்திலே உங்கள் நிலை என்ன என்று கேட்டார்கள்.
அப்போது தீர்க்கமாக ஏன் சொல்லவில்லை? அப்போது காங்கிரஸ் ஐ-யை
ஆதரிக்கின்ற உண்மையை மறைப்பதற்காக இந்தக் கோட்பாட்டைச்
சொன்னார்களா? அதை மறைக்கத்தான் இந்தக் கோட்பாட்டைச் சொல்லி
யிருக்கிறார்கள். அப்பட்டமான முறையில் சொல்லாமல் சொல்லியிருக்
கிறார்கள். அந்தக் கோட்பாடு முன்னும் பின்னுமாகப் பார்த்தால்
உதைக்கிறது. ஆகவே அந்தக் கோட்பாடு சரியானதாக இல்லை. அப்படி
யெல்லாம் அப்போது செய்தார்கள். காங்கிரஸ் ஐ-ஆவது அதை ஏற்றுக்
கொண்டதா? எங்கள் கட்சி என்றாலும் விட்டுவிடுங்கள். காங்கிரஸ்-ஐ
கட்சியாவது அதை ஏற்றுக்கொண்டதா என்று பார்க்க வேண்டும். நாளைக்கு
உங்கள் கொள்கை என்ன? இறந்து போய்விட்டார்கள் என்றால், விட்டுக்
கொடுத்து விடுகிறதாகச் சொல்கிறார்கள். நான் யாரும் இறந்துபோக
வேண்டும் என்று சொல்லவில்லை. காங்கிரஸ் கட்சி கேட்கவில்லை. காங்கிரஸ்
எப்படி கேட்கும்? காங்கிரஸ் கட்சி, நாடு பூராவும் ஒரு கட்சி சர்வாதிகாரம்,
ஒரு நபர் சர்வாதிகாரமாக இருக்கிறது. கேரளத்திலே 17 பேர்கள் கொண்ட
கட்சியாக அது இருக்கிறது. அங்கே 'டிபெக்ஷன்' ஏற்பாடு பண்ணுகிறது.
பாராளுமன்றத்திலே கட்சி விட்டு கட்சி தாவுவதைத் தடுக்க ஒரு சட்டம்
போட வேண்டும் என்று ஒரு கமிட்டி போடுகிறது. அந்தக் கமிட்டி அதைப்
பற்றிப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. அங்கே 'டிபெக்ஷன்' அடிப்
படையிலே ஒரு சர்க்கார் இருக்கிறது. சபாநாயகர் வோட்டிலே ஒரு சர்க்கார்
நிற்கிறது. இன்று 17 பேரை வைத்துக்கொண்டு 141 உள்ள சபையை
நடத்துகிறது. அசாமிலே 62 பேர் கொண்டது இடதுசாரி கட்சி. அது
மெஜாரிட்டி அல்ல, 38 பேர்களைக் கொண்டதுதான் மெஜாரிட்டி என்று
சொல்லி மந்திரிசபை அமைக்கச் சொல்கிறார்கள். காங்கிரஸ் பார்லிமெண்ட்
மெம்பரை கவர்னராகப் போடுவது, காங்கிரஸ் தலைவரை வெஸ்ட் பெங்கால்
கவர்னராகப் போட்டுக்கொள்வது—இப்படியெல்லாம் சர்வாதிகாரம் பண்ணு

(திரு. ஆ. நல்லசிவன்) [1982 பிப்ரவரி 6

இன்ற கட்சியிடமிருந்து, வேறு யாருமே இந்த நாட்டிலே ஆளக்கூடாது என்று இருக்கின்ற கட்சியிடமிருந்து நன்றியை எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் என்ன சொல்கிறார்கள் ?

* திரு. க. இராமமூர்த்தி : உறுப்பினர் அவர்கள் 'டிபெக்ஷன்', 'சர்வாதிகார வெறி', 'யாரும் ஆளக்கூடாது' என்றெல்லாம் சொல்கின்றார்கள். அவர்கள் தலைமையிலே, அவர்களுடைய ஆட்சியிலேயிருந்து மற்ற கட்சிக்காரர்கள் இந்தக் கொடுங்கோலர்கள் தலைமையிலே ஆட்சி நடத்தக்கூடாது என்றுதான் ஓடிவந்திருக்கிறார்கள். அதற்கு அப்புறம்தான் இந்த நிலைமை வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : இன்னும் 4 மாதம் கழித்துச் சொல்வார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : அந்த சமயத்தில் பார்த்துக்கொள்ளலாம்.

திரு. ஆ. நல்லசிவன் : நான் இதிலே சொல்லிக்கொள்ள விரும்புவது, சட்டசபையிலே 17 பேர்கள் கொண்ட கட்சி, 68 பேர்களை ஆளவிடாமல் செய்வது அவர்களால்தான் முடியும். 38 பேர்கள்தான் 62 பேர்களைவிட அதிகம் என்று சொல்வது அவர்களால்தான் முடியும். இதற்கு ஒரு கவர்னர் அசாமிலே. அப்படிப்பட்டவர்கள் இங்கு உங்கள் உதவியைப் பாராட்டுவார்கள் என்று நினைத்தால் எப்படி ? உங்கள் கட்சியில், ஒரு பாராட்டுக் கூட்டம் போட்ட போது, திரு. அருணகிரி அவர்கள் அவர் காரிலே ஏன் ஏறினார் என்று அவர் மீது நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள்.

* திரு. க. இராமமூர்த்தி : அப்படியெல்லாம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான, * * ஒரு தகவலை இந்த அவைக்குத் தந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் எடுத்துச்சொல்ல வேண்டியது அவருடைய உரிமை. அது வேறு. ஆனால், இந்த அவைக்கு வேண்டுமென்றே ஒரு தவறான, * * தகவலைத் தருவது தவறு. அதாவது உண்மைக்குப் புறம்பான, உண்மைக்கு மாறான அவர் அறியாத தகவலைத் தந்து கொண்டிருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். * * என்று சொன்னதை வேண்டுமானால் உண்மைக்குப் புறம்பானது என்று வைத்துக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய * * என்ற வார்த்தைகளை குறிப்பிலிருந்து எடுத்து விட்டு, 'உண்மைக்கு மாறான' என்ற வார்த்தையை மட்டும் வைத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

* * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



1982 பிப்ரவரி 6]

* திரு. க. இராமமூர்த்தி : அருணகிரி அவர்கள் மீது எந்தவிதமான
ஒழுங்கு நடவடிக்கையும் இல்லை. அப்படிப்பட்ட தகவலை வேண்டுமென்றே
திரித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தந்துகொண்டிருக்கிறார்கள்.
அவருடைய கட்சியிலே அவர் ஒரு பொறுப்பு வகிக்கின்றார். அவர் வகிக்கின்ற
பெரும் பொறுப்புக்கு அது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் விரைவாக முடித்துக்கொள்ள வேண்டும். மற்ற உறுப்பினர்களும
அவர் மறுத்துப் பேசாமல் இருக்கின்ற அளவிலே, மற்றவர்களும் நடந்து
கொள்ள வேண்டும என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : அவர் மேடையில் பேசுவது பற்றியும், பின்னர்
முதல்வர் பாராட்டுக்கூட்டம் நடத்துவது பற்றியும் பத்திரிகையிலேகூட
செய்தி வந்திருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் நான் சொல்கிறேன்.
இன்று வரையிலும் திருப்பத்தூர் தேர்தலுக்கு அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகம் உதவி அளித்ததற்காக நன்றி தெரிவிக்கிறோம் என்று தீர்மானம்
போட்டார்களா ? அப்படிப் போடவில்லை. ஏன் போடவில்லை ? இன்
றைக்கு அவர்கள் என்ன சொல்கின்றார்கள் ? திருப்பத்தூரில் நாங்கள்
சொந்தக் காலிலேயே ஜெயித்தோம் என்று சொல்கிறார்கள். இதைப்பற்றி
நான் ஏன் கேட்கிறேன் ? அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள்
சொல்லலாம். "நாங்கள் இல்லாமல் காங்கிரஸ் ஜெயிக்க முடியுமா ?
எங்கள் உதவியில்லாமல் ஜெயிக்க முடியுமா ?" என்று சொல்கின்றார்கள்.
அதுகூட சரியல்ல. இப்போது நான் ஒன்றை ஞாபகமூட்ட விரும்புகிறேன்.
திருப்பத்தூர் தேர்தல் சாராம்சம் என்ன ? 1980-ல் திருப்பத்தூர் தேர்தலின்
போது, காங்கிரஸ்—தி.மு.க. அபேட்சகர் திரு. வால்மீகி வெற்றி பெற்றார்.
அன்றைக்கு சுயேச்சையாக நின்றவரும், அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகத்தில் நின்ற திரு. சண்முகம் ஆகிய இரண்டு பேர்களின் வோட்டைச்
சேர்ந்தால், திரு. வால்மீகியைவிட 10 ஆயிரம் வோட்டு அதிகமாக வருகிறது.
அந்த எலெக்ஷனில் திரு. மாதவன் அவர்களும், அண்ணா தி.மு.க. வும்
கூட்டணியாகச் சேர்ந்தால், அதிகமான வோட்டு கிடைக்காமல், காங்கிரஸ்
தோற்றுப் போகக்கூடிய வாய்ப்பு இருந்தது. அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகம் வெற்றி பெறுகின்ற வாய்ப்பு இருந்தது. இந்த நிலையில் காங்கிரசார்
தி.மு.க. ஆதரவைப் பெறவும், அண்ணா தி.மு.க. எதிர்க்காமல் இருப்பதற்கும்
என்ன வழி என்று பார்த்தார்கள். அவர்கள் சண்டை போடுவதுபோல் நடித்
தார்கள். எம்.பி.எஸ்.-ஐ எம்.ஜி.ஆர். அவர்கள் பார்த்துப் பேசும்போது,
அ.தி.மு.க. வினர் அவர்களுக்காகத்தான் பார்த்திருக்கிறார்கள் என்று நினைக்

(திரு. ஆ. நல்லசிவன்) [1982 பிப்ரவரி 6

கவும், மூப்பனாரைக் கலைஞர் பார்த்துப்பேசும்போது, தி.மு.க. வினர் அவ களுக்காகத்தான் பேசுவதாக நினைக்கவும் செய்தார்கள். இரண்டு பேர்களை யும் ஆதரிக்க வைத்து பகிரங்கமாக எல்லோருடைய ஆதரவையும் கொண்டு ஜெயித்திருக்கிறார்கள். அப்படி ஜெயித்தவர்கள் தங்கள் சொந்தக் காலிலே ஜெயித்ததாகச் சொல்கின்றார்கள்.

* திரு. க. இராமமூர்த்தி : நேற்றையதினம் கூட இந்த அவையிலே அதைப்பற்றிச் சொன்னார்கள். சபையிலே வந்து பதில் சொல்ல முடியாத வர்கள் பெயரைக் குறிப்பிட்டுப் பேசுவது முறையல்ல என்று குறிப்பிட்டிருக் கிறார்கள். அந்த முறையிலேயே பேச வேண்டும்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : உறுப்பினர் அவர்கள் அந்த மரபை ஏற்றுக்கொள்கிறாரா ?

திரு. க. இராமமூர்த்தி : அந்த மரபை நான் மறுக்கவில்லை. இதுதான் மரபு என்றால், அதை ஏற்றுக்கொள்வோம்.

திரு. ஆ. நல்லசிவன் : உறுப்பினர் அவர்களுக்கு இரண்டு சாராரையும் தெரியும். அவர்கள் யாரும் அவையிலே இல்லை என்பது வாஸ்தவம்தான். இரண்டு பேர்களும் எதிர் வரிசையில் இருப்பவர்கள்தான். தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஆளும் கட்சியையும் எதிர்க் கட்சியையும் சண்டை போடு கின்ற மாதிரி ஒரு சித்திரத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அந்தப் பக்கம் எம்.பி.எஸ. இந்தப் பக்கம் மூப்பனார். இந்தி இரண்டு பேர்களையும் வைத்து, இந்த இரண்டு கட்சியினரையும் சேரவிடாமல் செய்து தமிழ்நாட்டிலே வெற்றி பெற்றிருக்கிறார்கள். எம்.ஜி.ஆர். வேவ், இந்திரா காந்தி வேவ் என்றெல்லாம் கூட பேசியிருக்கிறார்கள். ஆக நான் கூற விரும்புவது, இந்திய நாட்டிலே ஏகபோகமாக காங்கிரஸ் இருக்க வேண்டும் என்று நினைத்தால், தமிழ் நாட்டில் . . . .

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நான் என் அறையில் இருந்து கொண்டே கேட்டேன். உறுப்பினர் அவர்கள் ரொம்ப நேரமாக அதைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கிறார்கள். மேற்கொண்டு பேசலாம்.



1982 பிப்ரவரி 6]

திரு ஆ. நல்லசிவன்: நான் இப்போது கூறிக்கொள்ள விரும்புவது, இந்திய நாட்டில் முதலாளிகளுக்கு ஆதரவாக இருக்கின்ற இந்திரா காங்கிரசுக்கு ஓட்டளிக்க வேண்டும் என்று இந்த இரண்டு கட்சிகளும் கேட்டுக் கொண்டி ருக்கின்றன. அதனால், அவர்கள் திருப்பத்தூர் தேர்தலில் ஜெயித்திருக் கலாம். இப்போது கிராம மக்கள், ஏழை மக்கள் தமிழ் நாட்டில் உள்ள இந்த இரண்டு கட்சிகளிடமும் நம்பிக்கை இழந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆளும் கட்சியினைப் பற்றி ஏழை மக்களுக்கு இன்னும் நம்பிக்கை இருப்பதாகச் சொல்லுவார்கள். ஆனால், தமிழ் நாட்டிலே அரசியல் தெரிந்தவர்கள் இங்கு இருக்கின்ற கட்சிகளைப் பற்றி என்ன நினைப்பார்கள்? இந்த இரண்டு கட்சிகளினுடைய 'கிரெடிபிலிட்டி' பற்றி என்ன நினைக்கிறார்கள் ? திருப்பத்தூர் எலக்ஷனுக்கு முன்னரும், அதற்குப் பின்னரும் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் ? இன்றைக்கு மக்கள் குறைவாகத்தான் மதிப்பிடுகிறார்கள் என்று சொல்ல வேண்டும். இங்குள்ளவர்கள் தேர்ந்த அரசியல்வாதிகள்தான் என்று நாட்டு மக்கள் கருத வேண்டும். நாட்டு மக்கள் நாடியைப் பிடித்துப் பார்க்கின்ற அளவுக்குத் திறமையானவர்கள்தான் என்ற முறையிலே நான் சொல்கிறேன். உண்மையில் உங்கள் மதிப்பு குறைவாகத்தான் ஆகியிருக்கிறது. ஆகவே தான் கூறுகிறேன். இந்த இரண்டு கட்சியினரும் தயவு செய்து இந்திரா காங்கிரசுடன் சேர்ந்து கொள்ளும் தப்பாசையை விட்டுவிட வேண்டும். அதாவது ஆளுங்கட்சியும் இந்திரா காங்கிரசோடு சேர்ந்துகொண்டு தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தடுத்துவிட்டு, ஆளும்கட்சி மட்டும் நீடித்து நிற்கலாம் என்று இருக்க வேண்டாம். இந்த இரண்டு கட்சி களுக்கிடையில் என்ன முரண்பாடு இருந்தாலும், நாங்கள் ஆதரித்துக் கொண்டிருக்கிறோம். ஏனென்றால் அந்த இயக்கங்கள் இரண்டு கொள்கை களை வைத்திருக்கின்றன. தமிழ் நாட்டில் மொழி சமத்துவம் வேண்டும் என்ற கொள்கை. ஆகவே அந்த இயக்கத்திற்கு உதவி செய்ய வேண்டுமென்று நாங்கள் நினைக்கிறோம். அடுத்தது ஒரு கொள்கை. மாநில சுய ஆட்சிக் கொள்கை. இந்தி எதிர்ப்பின் காரணமாக மொழி சமத்துவம் வருகிறது. ஆகவே அதை நாங்கள் ஆதரிக்கிறோம். இந்த இரண்டு கொள்கைகளையும் நாங்கள் ஆதரிக்கிறோம். அப்படிப்பட்ட கொள்கைகளைக் கொண்டுள்ள இரண்டு கட்சிகளும் தமிழ் நாட்டில் குடுமியைப் பிடித்துக் கொண்டிருக்கக் கூடாது. இந்திப் பிரச்சினையை வைத்துத்தான் தமிழ் நாட்டில் 1967-ல் காங்கிரசை நீக்கினோம். மீண்டும் நாம் காங்கிரசை வர இடமளிக்கக் கூடாது என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

(முற்பகல் 11—50)

* திரு. எஸ். முத்து : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திலே நானும் என்னுடைய கருத்துக்களை இங்கே சிறிது நேரம் எடுத்து வைக்க விரும்புகிறேன். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேச்சில் இருந்து ஒன்று தெளிவாகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, திராவிட முன்னேற்றக் கழகமும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் சண்டை போட்டுக்கொண்டாலும் இந்த இரண்டு கட்சிகளினுடைய தயவு இல்லாமல் எந்த அரசியல் கட்சியும் தேர்தலில் வெற்றி பெற முடியாது என்பதை நிரூபிக்கும் வகையிலே அவர்கள் பேச்சு அமைந்திருந்தது. அவருக்கு அதற்காக நன்றி செலுத்துகிறேன்.

இரண்டாவதாக அடிக்கடி கொள்கையை மாற்றிக்கொள்வது பற்றி, என்னைப்போல் வயதானவராக இருந்தாலும், திரு நல்லசிவன் அவர்கள் ஆணித்தரமாகவும், ரொம்ப வேகமாகவும், விறுவிறுப்பாகவும் பேசினார்கள். இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியின் சரித்திரத்தில் எத்தனை தடவை என்னென்ன மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதையெல்லாம் நாம் அடிக்கடி பார்த்திருக்கிறோம். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த அருமை நண்பர் திரு. மாணிக்கம் அவர்கள் என்னோடு சிறைச்சாலையில் இருந்தார்கள். அவர்கள் காங்கிரஸ் கட்சியை ஆதரித்தபோது, பக்கத்தில் இருக்கிற திரு. நல்லசிவன் அவர்கள் எதிர்த்தார்கள். சில முறை ஜனசங்கத்தை ஆதரித்தார்கள். சில முறை ஜனசங்கத்தை எதிர்த்தார்கள். இப்படி இந்திய அரசியல் கட்சிகள் வரலாற்றில் சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி, வாய்ப்பு இருக்கிற சூழ்நிலையை அனுசரித்து, சில நிலைமைகளை உருவாக்கிக்கொண்டார்கள் என்பதை மறுக்க மாட்டார்களென்று கருதுகிறேன். அந்த அடிப்படையிலேதான் திருப்பத்தூர் தேர்தலின்போது நடந்தது. முன்னாலே அந்த நிலைமை இல்லாவிட்டாலும், இனிமேலாவது ஒரு மாபை உருவாக்குவோம் என்ற அடிப்படையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நினைத்து அதன் அடிப்படையில் யார் வெற்றி பெற்று அவர்கள் பதவி இழந்தாலும், மறு தேர்தல் வருகிறபோது அவர்களுக்கே விட்டுக்கொடுக்கலாமென்ற கருத்தைத் தைரியமாக வைத்து, அதற்காகத் தொண்டர்களைப் பணியாற்றச் சொன்னது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாங்கள் இரட்டை வேடம் போடவில்லை. தைரியமாகத் தீர்மானம் போட்டு, தைரியமாக ஆதரித்தோம். திரு. நல்லசிவன் அவர்கள் நீண்ட நாள் அனுபவம் உடையவர்கள். இப்போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக இருக்கிறார்



அதற்காக நான் அவருக்குப் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவருடைய தலைமையில் தொழிற் சங்க இயக்கம் வெற்றி பெறுமென்று நம்புகிறேன். சிறிது நேரத்திற்கு முன்னால் தொழிலாளர் நலத் துறை அமைச்சரவர்களும் அவருக்கும் இங்கே வாக்குவாதம் நடந்தது. அப்போது தொழிலாளர்கள் ஒரு கருத்தையும், தொழிற் சங்கத் தலைவர்கள் ஒரு கருத்தையும் வைத்திருக்கிற காரணத்தால், ஒரு முடிவெடுக்க முடியவில்லை. இருவரும் ஒத்துப்போனால் நலமாக இருக்கும், காலம் கனியும் என்று எதிர்பார்க்கிறேன் என்று முதல்வரவர்கள் எழுதியிருப்பதையும் அவர்கள் படித்துக் காட்டினார்கள். இன்றைக்கு நான் ஒன்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு காலத்தில் தொழிற் சங்க இயக்கத்தை வளர்ப்பதற்காக கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் பல தியாகங்கள் செய்தார்கள் என்பதை நான் மறக்கவில்லை, மறக்க மாட்டேன். அப்படித் தியாகங்கள் செய்த சங்க இயக்கங்களில் வளர்ச்சி குன்றியிருக்கிறது என்பதை ஒத்துக்கொள்ளு கம்யூனிஸ்ட் கட்சி, இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்த வரையில், தொழிற் சங்க இயக்கங்களில் வளர்ச்சி குன்றியிருக்கிறது என்பதை ஒத்துக்கொள்ளுமென்று நம்புகிறேன். அதற்கு என்ன காரணம் என்பதை அவர்கள்தான் ஆராய்ச்சி செய்ய வேண்டும். ஆனால் இன்றைக்கு தொழிற் சங்கத் தலைவர்கள் பற்றிச் சொன்னவுடன் ஆவேசப்பட்டார். பல ஆண்டுக்காலம் தொழிலாளர்களுக்காகப் பாடுபட்ட திரு. நல்லசிவன் அவர்கள். நான் இந்த நேரத்தில் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். மதுரை ஹார்வி மில்லை அவர் நன்கு அறிந்தவர். அந்த ஹார்வி மில் போராட்டத்தில் நானும், திரு. மாணிக்கமும் ஈடுபட்டு, ஓராண்டுக்காலம் சிறையில் இருந்தோம். நாங்கள் மட்டுமல்ல, தோழர்கள் திருவாளர்கள் இராமமூர்த்தி கே.டி.கே. தங்கமணி, சங்கரய்யா போன்றவர்கள் எல்லாம் போராட்டத்தில் ஈடுபட்டு, ஜாமீன் கிடைக்காமல், சிறையில் இருந்து, 1947-ல் ஆரம்பத்தில் தலைவர்கள் விடுதலையாகி, பிறகு அருமை நண்பர் திரு. மாணிக்கம் அவர்களும் நானும் வழக்கு முடிந்ததற்குப் பிறகு அக்டோபர் மாதத்தில் விடுதலை அடைந்தோம். அப்படித் தியாகங்கள் செய்து, ஒரு காலத்தில் தொழிற் சங்கங்கள் வளர்க்கப்பட்டன. ஆனால் இன்றைக்கு நிலைமை என்ன ? தொழிற் சங்கத் தலைவர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் இருக்கிற உறவு என்ன என்பதை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். பலமுறை நான் தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்களிடத்திலும் சொல்லியிருக்கிறேன். இந்தப் பக்கம் அமர்ந்திருக்கும் செட்டிநாட்டார் இன்றைக்கு அவைக்கு வரவில்லை, மதுராகோட்சில் மிகப் பெரிய பார்ட்னர் அவர். ஆனால், அங்கே நடைபெறும் அக்கிரமத்தைப் பார்க்க வேண்டும். தொழிற் சங்கம் என்ற பெயரால், ஒரு தொழிலாளி அந்த ஆலையில் வேலை பார்த்து இறந்துவிட்டால், அவருடைய வாரிசுதாரரை

அங்கே வேலையில் சேர்க்க வேண்டுமென்றால், என்ன செய்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். இரண்டு, மூன்று சங்கங்கள் அங்கீகாரம் என்ற பெயரால் இறந்தவரின் வாரிசு வேலையில் சேர்க்க வேண்டுமென்றால் 14,000 ரூபாய் வாங்குகிறவர்கள். அப்படிப் பணியாற்றும் தொழிற் சங்கத் தலைவர்களை என்னால் ஆதாரபூர்வமாகச் சுட்டிக்காட்ட முடியும். நான் பல முறை அமைச்சரவர்களிடத்தில் சொல்லி, இதற்கு ஏதாவது சட்டம் கொண்டு வர முடியுமா என்று கேட்டேன். செட்டிநாட்டரசர் ஒரு விழாவில் கலந்து கொண்டபோது, "நீங்கள் சம்பந்தப்பட்ட ஆலையில் வாரிசை வேலையில் சேர்க்க 14,000 ரூபாய் வாங்குகிறார்களே, இதைத் தடுக்கக்கூடாதா?" என்று கேட்டிருக்கிறேன். எல்லாத் தொழிற் சங்கங்களும், தொழிலாளர்களும் ஒற்றுமையாக அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்று சொல்ல முடியாது. நேற்று ஆசிரியர்கள் பிரச்சினையில் அங்கீகாரம் அளிப்பது பற்றிப் பேசப்பட்டது. நான் அதில் கருத்து மாறுபட்டவன். இன்றைய தினம் யாராக இருந்தாலும், அங்கீகாரம் என்றபெயரால் அதிகாரத்தை மிரட்டுவதும், அதிகாரத்திற்குத் தொடர்பு உடையவன் நான்தான் என்பதும், அதன்மூலம் லாபமடைவதும்தான் அவர்கள் வேலையாக இருப்பதால், எத்துணை தொழிற் சங்கங்கள் இருந்தாலும் அத்துணை சங்கங்களையும் அங்கீகரிக்க வேண்டும். இல்லாவிட்டால் அத்துணை சங்கங்களையும் நிராகரிக்க வேண்டும். அதுதான் நல்ல முடிவாக இருக்குமென்று கருதுகிறேன்.

இங்கே விவாதத்தின்போது பல நல்ல விஷயங்கள் வெளி வந்தன. போதந்த விவகாரத்தை யாரும் நினைத்துப் பார்க்க மாட்டார்கள். அமைச்சரவர்களும், திரு. நல்லசிவன் அவர்களும் பரிமாறிக்கொண்டதிலிருந்து போலத்தில் எப்படியிருக்கிறதென்று தெரிந்துகொள்ளும் நல்ல வாய்ப்பு கிடைத்தது. அது ஒரு புறம் இருக்கட்டும். அவரும், நானும் நண்பர்கள்தான். தேர்தல் காலங்களில் பல சம்பவங்கள் நடப்பதுண்டு.

அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களும், அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டு ஆசிரியர் தரப்பிலே வந்தவர்களும் ஆளுநர் உரையிலே இருக்கிற நல்லவைகளையும், கெட்டவைகளையும் சுட்டிக்காட்டிப் பேசினார்கள். அவரவர்களுடைய கொள்கைக்கேற்ப அவர்கள் பேசினார்கள். இந்த ஆளுநர் அவர்கள் உரை குறித்து நான் பட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். "சென்ற ஆண்டு உலகத் தமிழ் மாநாட்டை நடத்தி, தமிழ் மக்களுக்குப் பெருமையை ஏற்படுத்தி, உலக மக்களிடையே தமிழ் மக்கள் தலை நிமிர்ந்து நிற்கும் வண்ணம் உலகத் தமிழ் மாநாட்டை நடத்தினோம் மதுரையில்" என்று ஆளுநர் உரையில் சொன்னதை









உரை மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். இந்த ஆண்டு பாரதியைச் சொந்தம் கொண்டாடுகிறவர்கள், விழா கொண்டாடுகிறவர்கள் மறந்து போனாலும், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு மறந்துவிடலாம். பாரதி நூற்றாண்டு விழா கொண்டாடியிருக்கிறது. நூற்றாண்டு விழாவை ஒரு நாள் கொண்டாடி விட்டுவிடாமல், 365 நாட்களும் 365 ஊராட்சி ஒன்றியங்களில் தினசரி கொண்டாட வேண்டுமென்று கட்டளையிட்டு, பாரதிக்கு சிறப்பு ஏற்படுத்திய பெருமை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சாரும் என்பதை மறந்துவிட முடியாது.

(நண்பகல் 13-00)

அதுமட்டுமல்ல தமிழுக்காக ஒரு பல்கலைக் கழகம் வேண்டுமென்று இங்கே அமர்ந்திருக்கிறாரே மாண்புமிகு பேரவைத் தலைவர் சிலம்புச் செல்வர் அவர்க பேசாத இடமே இல்லை. நினைக்காத நேரமே இல்லை. ஆனால், புரட்சி தலைவர் அவர்கள் ஆட்சியில் தஞ்சையில் ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகம் உ வாகிறது. அது வருவதில் ஏதாவது இடையூறு இருக்குமானால், அந்த இடையூறைப் போக்கி தமிழுக்காக அதைக் கொண்டு வாருங்கள் என்று சொல்வதற்குப் பதிலாக, "உங்களுக்கு அனுமதி கிடைத்து விட்டதா, அனுமதி கிடைக்காமல் நீங்கள் எப்படி அறிவிக்கலாம்" என்றெல்லாம் கேள்வியை எழுப்புவது நியாயம்தானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அனுமதி கிடைக்கிறதா இல்லையா என்பதல்ல பிரச்சினை. ஆனால் தமிழ்ப் பல்கலைக் கழக அமைப்பதற்கான அனுமதி கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் அதைத் தந்தே தீருவோம் என்கிற ஓர் உறுதியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டிற்குத் தெரிவித்திருக்கிறார்கள். இதை நினைத்துப் பார்த்திருக்க முடியுமா? தமிழ் பேசுகிறவர்கள், தமிழுக்காக வாழ்கிறோம் என்று எழுதுகிறவர்கள் இதை அன்றைக்குச் செய்தார்களா அல்லது நினைத்துத்தான் பார்த்தார்களா! தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைப்பதுபற்றி ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டிருப்பதை நாம் இன்றைக்குப் பார்க்கிறோம்.

அடுத்து, நீதிமன்றங்களில் தமிழ் வளர வேண்டும். இது எல்லோருடைய ஆசையும்கூட. குறிப்பாக இது மாண்புமிகு பேரவைத் தலைவர் சிலம்புச் செல்வர் அவர்களுடைய முக்கியமான ஆசை, நீதிமன்றங்களிலே நீதிபதிகள் அமர்ந்திருக்கிறபோது, வழக்குமன்றத்தில் வாதாடுகிறபோது, சாட்சியை அழைக்கிறபோது சாட்சி தமிழில் சொன்னால், அதை ஆங்கிலத்தில் நீதிபதிக்கு மொழி பெயர்த்துக் கொடுக்கிற சூழ்நிலையை நாம் எல்லோரும் அறிவோம். அங்கே நடைபெறுகிற வாதத்தை குற்றவாளியைக் கூண்டிலே நிற்பவர் தெரிந்து-

கொள்ள முடியாத வகையில் வாதங்கள் நடைபெற்று வந்தன. சிலம்புச் செல்வர் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும், முத்தமிழ்க் காவலர் அவர்களும் இன்னும் பல தமிழ் அறிஞர்களும் பல ஆண்டுகள் எடுத்துச் சொல்லிய இத்திட்டம் இந்த ஆண்டு ஆளுநர் உரையில் இடம் பெற்றிருக்கின்ற சிறப்பினை நாம் பார்க்கிறோம். இந்த ஆண்டு முதல், இந்த மாதம் முதல் கோர்ட்டுகளிலே அளிக்கப்படுகிற தீர்ப்புகள் தமிழிலே இருக்க வேண்டுமென்று அறிவித்திருப்பதை நாம் பார்க்கிறோம். ஆக, தமிழுக்காக, தமிழ் மொழிக்காக இந்த அரசு எவ்வளவு உயர்ந்த இடத்தை அளித்திருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். இவைகளுக்கெல்லாம் ஒரு நன்றி தெரிவிக்க வேண்டாமா ஓட்டை, ஓட்டை, ஓட்டை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். உண்மையில் ஓட்டை இருந்தால், அந்த ஓட்டையை அடைப்பதற்கான யோசனையை தயவுசெய்து சொல்ல வேண்டும். இப்படியிப்படி இருக்கிறது என்று சொல்ல வேண்டும். அதை நாங்கள் மாற்றிக்கொள்ளலாம். அதை விட்டுவிட்டு நன்றியைத்தான் சொல்லவில்லை. குறை சொல்லாமலாவது இருக்க வேண்டுமென்ற எண்ணம் வர வேண்டாமா யார் செய்தால் என்ன எந்தக் கட்சி செய்தால் என்ன யார் செய்தாலும் செய்யப்படுகிற நன்மைகள் தமிழ் மக்களுக்காக என்ற உணர்வு இருக்க வேண்டும். செய்தவர்கள் யார், அவர்களால் அது செய்யப்படுவதா என்ற உணர்வு ஏற்படுவது எப்போதுமே நல்லதல்ல என்பது தான் என்னுடைய கருத்து.

அடுத்து, சிலர் இங்கே குறைபாடுகளைச் சொன்னார்கள். வறட்சி நிவாரணம் பற்றியும் சொன்னார்கள். வறட்சி நிவாரணம் சரியான முறையில் நடைபெறவில்லை என்று சொன்னார்கள். சரியான முறையில் பங்கீடு நடைபெறவில்லை என்று சொன்னார்கள். நான் சொல்கிறேன். தயவுசெய்து மற்றவர்களைப்பற்றிக் குறை சொல்வதற்கு முன்னால் தாங்கள் யார், எப்படிப்பட்டவர்கள் என்பதை ஒரு கணம் கண்ணாடி முன்னால் நின்று பார்த்துவிட்டுச் சொல்ல வேண்டும். இங்கே பலர் சொன்னார்கள். அதற்கான பதிலையும் இங்கே சொன்னார்கள். வறட்சி நிவாரணப் பணியைப் பொறுத்தவரையில் இந்த அரசு மிக நல்ல முறையில் செயல்பட்டது என்றும் சொன்னார்கள். அப்படிச் சொன்னது யார் மத்திய அரசு எப்படிப்பட்ட நேரத்தில் சொன்னார்கள்? திருப்பத்தூர் தேர்தல் வந்த நேரத்தில் அல்ல. அதற்கு முன்னாலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கும் மத்திய அரசுக்கும் இடையே கருத்து வேறுபாடு இருந்த நேரத்தில்தான் மத்திய அரசிலிருந்து வருகை தந்த அமைச்சர்களும், மற்றவர்களும், தமிழகத்தைப்





பொறுத்தவரையில், வறட்சி நிவாரணப் பணிகள் மிக நல்லமுறையில் நடைபெறுகின்றன என்பதோடு மட்டுமல்லாமல், வறட்சி என்பதே தெரியாத அளவுக்கு செம்மையாக நடைபெறுகின்றன என்றும் எடுத்துக்காட்டினார்கள். ஆனால் இன்றையதினம் குறை சொல்கிறார்களே, இவர்களுடைய ஆட்சிக் காலத்தில் நடந்தது என்ன? எங்களுக்கு மேலும் வறட்சி நிவாரண நிதி தேவை என்றும், இது பற்றாது என்றும் சொன்ன நேரத்தில், நீங்கள் ஏற்கனவே வாங்கிய வறட்சி நிவாரணத் தொகைக்கு இன்னும் கணக்கு தரவில்லை கணக்குத் தராமல் இருக்கிறபோது மீண்டும் கேட்கிறீர்களே, எப்படி நாங்கள் கொடுக்க முடியும்?" என்று அவர்கள் குற்றச்சாட்டைச் சொன்னதையும் இந்த நாடு மறந்திருக்க முடியாது. எங்களைப் பொறுத்தவரையில், அப்படிப்பட்ட குற்றச்சாட்டைச் சொல்லவில்லை. வறட்சி நிவாரணப் பணி சிறப்பாக நிறைவாக நடைபெறுகிறது என்றுதான் சொன்னார்கள் நாங்கள் இன்றையதினம் தன்னிறைவுத் திட்டத்தில் வெற்றி கண்டிருக்கிறோம். "நீங்கள் மத்திய அரசிடம் எங்களுக்கு வறட்சி நிவாரண உதவி தேவை உணவு தானியங்கள் தேவை என்று கேட்கிறீர்களே, அது ஏன்?" என்று கேட்கிறார்கள். ஆம், நாங்கள் கோதுமை வேண்டுமென்று கேட்டோம். நாங்கள் மறுக்கவில்லை. நாங்கள் கேட்ட கோதுமை 10,800 டன் வறட்சி நிவாரணத்திற்காக வேண்டுமென்று கேட்டோம். ஆனால், மத்திய அரசு 4 ஆயிரம் டன் கோதுமையை தந்தது. ஆனால் நாங்கள் 4 ஆயிரம் டன் கோதுமையும் மக்கள் குறை ஒன்றும் சொல்லாத அளவுக்கு மக்களுக்காகவே விநியோகம் செய்தோம். யாருக்காக வாங்னோமோ அந்த மக்களுக்கு விநியோகம் செய்யவில்லையென்ற வாங்கப்பட்ட கோதுமையை மக்களுக்கு சுட்டிக்காட்டிதில்லை. எந்த குற்றச்சாட்டை இந்த நாட்டிலேயுள்ள ஒருவரும் இன்றைய தினம் எங்களைப் ஆசிரியல்லாதியும் சொன்னதில்லை. ஆனால், பார்த்துக் கேட்கிறேன் பார்த்து குற்றச்சாட்டு கூறுகிற நண்பர்களைப் பற்றாக்குறை ஏற்பட்டு உணவு இந்த நாட்டிலே வறட்சி ஏற்பட்டு, உணவுப் மக்கள் மரவள்ளிக் கிழங்கைச் தானியம் சரியாகக் கிடைக்காத நிலையில் வயிற்றுப்போக்கு காரணமாக மத்துவ சாப்பிட்டு ஆயிரககணக்கான பேர் கோதுமையை பஞ்சாப் மனையில் கிடக்கையில் ஆயிரக்கணக்கான டன் மத்திய அரசு அனுப்பியதே. அதை அரியானா போன்ற மாநிலங்களிலிருந்து இன்றைக்கு வரும் மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்களே. குறைந்த விலைக் வாங்கிச் நாளைக்கு வரும், நாளை மருநாள் வரும், தெரியுமா? அதைச் சொன் சாப்டலாம் என்று அதை என்ன செய்தீர்கள் மறுக்க முடியாது அது அந்த னால் இன்றைக்கோ, நாளைக்கோ யாரும்

(திரு. எஸ். முத்து) [1982 பிப்ரவரி 6

க்களுக்காகப் பயன் படுத்தப்பட்டதா கூட்டுறவுத் துறையின்மூலமாக ங்களுக்கு அது விநியோகிக்கப்பட்டதா இல்லவே இல்லை. அதற்குப் றாக அது மார்வாடிக்கு, மொத்த வியாபாரிக்கு விற்கப்பட்டது. தமிழ் ாட்டில் மக்களுக்காகப் பயன்படுத்தாமல் அந்தக் கோதுமையை லாபத் ற்கு விற்று அது இந்த மாநிலத்தை விட்டு வேறு மாநிலத்திற்கு சென்ற பற்றியை இந்த நாடு என்றைக்கும் மறந்துவிட முடியாது. மக்கள் மர ள்ளிக் கிழங்கை சாப்பிட்டுவிட்டு உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருந்த ந்த நேரத்தில் தான் மத்திய சர்க்காரால் அனுப்பப்பட்ட கோதுமை வேறு மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டது என்பதை இந்த நாடும், நாட்டி லுள்ள மக்களும் மறந்திருக்க மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். புவர்கள்தான் "சொல்கிறார்கள், கேட்கிறார்கள், கேட்கிறார்கள்" என்று சால்கிறார்கள்.

(பிற்பகல் 12-30)

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்து அவர்கள் ரு தவறான தகவலை அவைக்குத் தந்துவிடக்கூடாது என்று சொல்லுகிறேன். ஆட்சி நிர்வாணப் பணி நடந்து கொண்டிருந்தபோது, இதற்கு முந்தைய ஆட்சியில் மத்திய அரசிடமிருந்து வாங்கிய கோதுமை மொத்த வியாபாரிக்கு விற்கப்பட்டது என்று குற்றஞ்சாட்டுகிறார். எப்போது எந்த வியாபாரிக்கு எந்த ஆண்டில் விற்கப்பட்டது. அது எந்த மாநிலத்திற்கு போனது என்ற தகவல் எல்லாம் பயனுள்ளதாக இருக்கும்.

**திரு. எஸ். முத்து :** அந்தக் கோதுமை இந்த மக்களுக்கு விநியோகிக்கப் படாமல் தனியாருக்கு விற்கப்பட்டது என்பதை சர்க்காரியா கமிஷன் முன்னாலே எடுத்துக்காட்டியிருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறந்திருக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன். சர்க்காரியா கமிஷனிலே வருகிற குற்றச்சாட்டிலே கோதுமையும் வருகிறது. வேண்டுமானால் எடுத்துப் படித்துப் பார்க்கலாம்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** சர்க்காரியா கமிஷனிலே கொடுக்கப்பட்ட அந்தக் குற்றச்சாட்டு பரிசீலனை செய்து விளக்கப்பட்டுவிட்டது. நிரூபிக்கப்பட வில்லை என்று சர்க்காரியா கமிஷன் குற்றச் சாட்டையே பின்வலித்திருக்கும் போது, அந்தக் குற்றச்சாட்டை இந்த அவையிலே சொல்வது சரியா

மாண்புமிகு மேலவைத் தலைவர் தாங்கள் கொடுத்த விளக்கத்தை ஏற்றுக்கொள்ளலாம். 'சரியா' தவறா' என்று எப்படிச் சொல்லலாம்



1982 பிப்ரவரி 6]

**திரு. ம. சங்கரலிங்கம் :** சர்க்காரியா கமிஷன் விசாரணை செய்ததன் மூலம் நிரூபிக்கப்படவில்லை என்று சொல்லி பின்வலிக்கப்பட்டிருக்கும்போது, அது தவறு என்று சொன்னால் அதைப்பற்றி உச்ச நீதிமன்றத்திற்குப்போக வேண்டுமே தவிர, அதை விட்டுவிட்டு தவறான தகவலை அவைக்குத் தரலாமா ?

**திரு. எஸ். முத்து :** தவறான தகவல் என்று சொல்ல முடியாது. இது நாடறிந்த உண்மை. மத்திய சர்க்காரால் அளிக்கப்பட்ட கோதுமை இந்த மாநில மக்களுக்கு விநியோகிக்கப்படவில்லை. அப்படி விநியோகிக்கப்படா மல், தனிப்பட்ட வியாபாரிகளுக்கு அது விற்கப்பட்டது என்பதை அன் றைக்கு இருந்த பத்திரிகைகளும் எழுதியிருக்கின்றன. அரசியல் கட்சிகள் சுட்டிக்காட்டியிருக்கின்றன. சர்க்காரியா கமிஷன் ரிப்போர்ட்டிலே அந்தக் குற்றச்சாட்டு வருகிறது என்பதை வலியுறுத்துகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** முதலிலே பேசும்போது தனியாருக்குக் கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். இப்போது மாநிலத்தை விட்டே போய்விட்டது என்று சொல்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரையில், அந்த வழக்கை மத்திய அரசே தொடுத்து, மத்திய அரசே அந்த வழக்கைத் திரும்பப் பெற்றுக்கொண்ட பிறகு, எந்த ஆதாரத்தில் எந்த மாநிலத்திற்குப் போய்விட்டது என்று சொன்னால், இப்போது கூட சொல்கிறேன், அப்படி நிரூபித்தால் அதற்குரிய தண்டனையை ஏற்றுக்கொள்ள நான் தயாராக இருக்கிறேன். அந்தக் கோதுமை இந்த மாநிலத்தில் உள்ள மக்களுக்குத் தான் விநியோகிக்கப்பட்டது. வேண்டுமானால் சம்பந்தப்பட்ட கோப்பை எடுத்துப் பார்க்கலாம். வேண்டுமென்றே, ஆட்சி செய்த கட்சியின் மீது பழிசொல்வதை நான் கண்டிக்கிறேன்.

**திரு. எஸ். முத்து :** சர்க்காரியா கமிஷனின் முன் கோதுமை தனியாருக்கு விற்கப்பட்டதா என்ற குற்றச்சாட்டு வந்தபோது, அந்தக் குற்றச்சாட்டுக்கு உரியவர், நாங்கள் அந்தக் காரியத்தைச் செய்யவில்லை, இது தவறான தகவல் என்று அங்கே வந்து சாட்சியம் சொல்லவில்லை. அப்படிச் சொல்லியிருந் தால், நான் வரவேற்றிருப்பேன். ஆனால் அந்த வழக்கு எப்படிப்பட்ட அடிப்படையிலே வாபஸ் வாங்கப்பட்டது, எப்படிப்பட்ட நிலைமையில் வாபஸ் வாங்கப்பட்டது. எப்படிப்பட்ட ஒப்பந்தத்தில் வாபஸ் வாங்கப் பட்டது ?

திரு. ஆற்காடு நா. வீராசாமி : பேசுகின்ற உறுப்பினர் ஆளும் கட்சி உறுப்பினர். நான் திட்டவட்டமாகத் தெரிவிக்கிறேன். ஏதாவது அதிகாரப் பூர்வமாக 'மெட்டீரியல்' இருந்தால் ஒரு வழக்கு போடுங்கள். அரசாங்கத் திற்கு அதிகாரம் இல்லையா ? ஆட்சியிலே இருக்கும் கட்சி உறுப்பினர் அவர் களே இப்படி பேசுவதற்கு வெட்கப்பட வேண்டாமா !

திரு. எஸ். முத்து : நாங்கள் வெட்கப்பட வேண்டியதில்லை. அப்படி யென்றால் சர்க்காரியா கமிஷன் முன்பு ஏன் பேசவில்லை, ஏன் ஓடினார்கள் ?

திரு. ஆர். டி. சீத்தாபதி : * * *

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தலைவர் அவர்களே, அந்த வார்த்தை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவைக் குறிப்பிலேயிருந்து அந்த வார்த்தை நீக்கப்படுகிறது. வார்த்தை பற்றிய மரபு கூட தெரியவில்லை என்று சொன்னால் எப்படி.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்து அவர்கள் சொல்லக்கூடிய கருத்துக்களுக்கு மறுப்பு சொல்ல வேண்டுமென்றால், மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் விரி வாகப் பேசியிருக்கிறார்கள், திரு. ஆறுமுகம் அவர்கள் பேசவிருக்கிறார்கள், அப்போது சொல்லலாம். இடையிலே ஏதாவது ஒரு குறுக்கீடு என்ற அள விலே குறுக்கிட்டால் கூட தவறில்லை. காலையிலிருந்து பார்த்தால் பெரும் பாலும் ஒருவருக்கொருவர் பதில் சொல்லும் அளவிலேதான் அவை நடக் கிறது. இதைத் தவிர்க்க வேண்டும்.

திரு. ஆர்காடு நா. வீராசாமி : சர்க்காரியா தீர்ப்பு பற்றிச் சொல்ல வேண்டாம் என்று சொல்லவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தான் புகார் கொடுத்தார்கள். பேசிக்கொண்டிருக்கும் மாண்புமிகு உறுப் பினர் அவர்கள்மீது கூட புகார் கொடுத்தார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரா சாமி அவர்களுக்குச் சொல்கிறேன். இதே கருத்தை உறுப்பினர்கள் பேசும் போது சொல்லலாம்.

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



திரு. ஆற்காடு நா. வீராசாமி : இப்போது வேறொரு கட்சியிலேயிருந்து சொல்பவர் என்றால், நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் ஆளும் கட்சி யிலேயிருந்து சொல்கிறார். ஆளும் கட்சிக்கு இப்போது அதிகாரம் இருக் கிறது. கோப்புகள் எல்லாம் இருக்கின்றன. தவறு இருந்தால், மத்திய அரசு வாபஸ் பெற்றிருந்தாலும்கூட, இந்த அரசு ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது ? தைரியம் இருந்தால் நடவடிக்கை எடுக்கட்டும்.

திரு. எஸ். முத்து : நான் திரும்பவும் சொல்கிறேன், தைரியம் இருந்தால் அவர்கள் சாட்சியம் சொல்லியிருக்கலாம்.

* திரு. சோ. ஆறுமுகம் : ஒரு விளக்கம் மாண்புமிகு உறுப்பினர் அவர் களிடத்திலே அறிய விரும்புகிறேன். வறட்சி நோக்திலே இந்த மாநில அரசு கோதுமையை பிற மாநிலங்களிலேயிருந்து இந்த மக்களுக்கு விநியோகிக்க வேண்டும் என்று கொள்முதல் செய்தார்கள். அதில் ஒரு பகுதி மத்திய அரசால் ஒதுக்கப்பட்ட கோதுமை. மக்களுக்குத் தேவையான அள வுக்கு ஒதுக்கியது போக மீதம் உள்ள கோதுமையை, மீதம் சர்க்காரிடத் திலே இருந்ததை விற்றார்கள். இதிலே ஊழல் நடந்ததாகப் புகார் செய்யப் பட்டது. அந்தப் புகாரை மறுத்து திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே சட்டமன்றத்திலே அந்தப் புகார் உண்மையானது அல்ல என்று ஓர் அறிக்கை தயார் செய்து வைக்கப்பட்டது. அதன் அடிப்படையிலே தான் சர்க்காரியா கமிஷன் விசாரித்தது. இப்போது மத்திய அரசு ஒதுக்கிய கோதுமையை நியாய விலைக் கடையில் விநியோகம் செய்யவில்லை என்றும் அந்தக் கோதுமையை எல்லாம் ப்ளவர் மில்லுக்கு ஆட்சியாளர் விற்றுவிட் டார்கள், அதனால் பலகோடி ரூபாய் லஞ்சம் பெற்றிருக்கிறார்கள் என்று நாங்கள் சொன்னால். . .

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : இப்போது சொல்வது என்பது கொஞ்சம் உள் நோக்கத்தோடு சொல்வது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது சொல்லலாம். அப்போது நாங்கள் மறுக்கத் தயா ராக இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்து அவர்கள் குற்றச் சாட்டு சொன்னதற்காக நீங்கள் புதிதாகச் சொல்வது தவறு.

திரு. எஸ். முத்து : இந்த ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் ...ட மக்கள் எந்த அளவுக்குப் பயனடைந்திருக்கிறார்கள் என்பதை நாம் ...க வேண்டும். குடிநீர், இணைப்புச் சாலைகள், இவைகளன்றி இன் பல்வேறு துறைகளிலே தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் இந்த நாட் ... இந்த அரசு எவ்வளவு சேவைகள் செய்திருக்கின்றது என்பதை எடுத் சொல்ல முடியும்.

(திரு. எஸ். முத்து) [1982 பிப்ரவரி 6

அடுத்தபடியாக, மின்சாரத்தைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். மின் சாரத்தைப்பற்றி, பெரியார் அண்ணா அவர்களுடைய கொள்கை மைய கொள்கை என்றால் தெளிவாய்க்கும் கொள்கை. அந்த தெளிவான கொள்கைக்கு தனியாருக்கு, தனியார் மின்சார உற்பத்தி செய்வதற்கு நாங்கள் ஆதரவு தருகிறோம், அனுமதி பெற்றுத் தருவோம் என்று இந்த ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கொள்கை அறிஞர் அண்ணா அவர்களின் கொள்கைக்குப் புறம்பான கொள்கை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லநாராயணன் அவர்கள் இங்கே சொன்னார்கள். இன் றைக்கு எந்த அடிப்படையிலே மின்சார உற்பத்திசெய்யப்படுகிறது என்பதை நாம் பார்க்கிறோம். ஒன்று, நீர் மூலம். மற்றொன்று அனல் மின்சாரம். இந்த இரண்டுமே நமக்குத் தேவை. நீர் மின்சாரத்தைப் பொறுத்தவரையில், இன்றைக்கு நமக்குச் சரியான முறையிலே நீர் கிடைப்பது இல்லை.

(பிற்பகல் 12-20)

அண்டை மாநிலங்களில் வீணாகப் போகும் நீரை, தேசியக் கண்ணோட்டத் தோடு பார்க்கும் நண்பர்கள் நமக்குத் தருவதற்கு மறுக்கிறார்கள். அந்தத் தண்ணீர் தமிழகத்திற்குக் கிடைத்தால், இன்னும் அதிகமான மின்சாரத்தை நாம் உற்பத்தி செய்ய முடியும். அடுத்தது அனல் மின்சாரம். அதைப் பொறுத்த வரையில், நிலக்கரி இல்லாவிட்டால், அனல் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாது. நிலக்கரியை வைத்திருப்பவர்கள் மத்திய அரசைச் சார்ந்த வர்கள். அந்த மத்திய அரசு நமக்குப் போதுமான அளவு நிலக்கரி தராத காரணத்தால், அதிகமான அளவுக்கு அனல் மின்சாரத்தையும் நாம் உற்பத்தி செய்ய முடியாத நிலையில் இருக்கிறோம். ஆகவே அந்த நிலக்கரியைப் பெறுவதற்கான சக்தி உடையவர்கள் யாரேனும் இருந்தால், அவர்கள் மின் உற்பத்தி செய்வதற்கு முன்வந்தால், அவர்கள் மின் உற்பத்தி செய்வதற்கு வேண்டிய அனுமதியைப் பெற்றுத்தருவதற்கு இந்த அரசு முன்வரும் என்று தான் ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. இதைத்தான் அண்ணா வின் கொள்கைக்குப் புறம்பானது என்று இங்கே சொன்னார்கள். நான் கேட்கிறேன், 1967ஆம் ஆண்டிலிருந்து 1976ஆம் ஆண்டு வரை இந்த மாநிலத்தை ஆண்டவர்கள் தனியாருக்கு அல்லது தனியார் தொழிற்சாலை களுக்கு இத்தகைய முறையில் மின்சாரம் உற்பத்தி செய்துகொள்வதற்கு அனுமதியே வழங்கவில்லையா? மாண்புமிகு தலைவர்களின் அனுமதியோடு சுருக்கமாக இங்கே அதுகுறித்து விவரத்தைத் தர விரும்புகிறேன். அந்தக்



[1982 பிப்ரவரி 6] [திரு. எஸ். முத்து]

...லத்தில் மட்டும் தனியார் தொழிற்சாலைகளுக்குச் சுமார் 3,880 மெகாவாட் அளவுக்கு உற்பத்தி செய்து கொள்வதற்கான அனுமதி திராவிட முன்னேற்றக் கழக அரசால் வழங்கப்பட்டது. அதன் விவரத்தைச் சொல்ல வேண்டுமென்றால்,

| | |
|---|---|
| 1. பாரி அண்டு கம்பெனி, சென்னை | 1,500 மெகா வாட். |
| 2. டன்லப் கம்பெனி, சென்னை | 1,450 மெகா வாட். |
| 3. சேஷசாயி காகித ஆலை | 5,000 மெகா வாட் |
| 4. சக்தி பைப்ஸ், சென்னை | 1,500 மெகா வாட். |
| 5. கே. சி. பி. நிறுவனம், சென்னை | 2,000 மெகா வாட் |
| 6. மெட்ராஸ் சிமெண்ட்ஸ் | 8,170 மெகா வாட். |
| 7. தமிழ்நாடு சிமிண்ட்ஸ் | 9,800 மெகா வாட். |
| 8. இந்தியன் ஆர்கானிக் கெமிக்கல்ஸ் | 8,200 மெகா வாட். |
| 9. கார்போரண்டம் யூனிவர்சல் | 1,100 மெகா வாட். |
| 10. சாக்தோ இண்டியா | 1,100 மெகா வாட். |
| 11. டி.ஐ.சி. கம்பெனி | 1,100 மெகா வாட். |
| 12. ஸ்ரீ ராம் பைபர்ஸ | 1,100 மெகா வாட். |
| 13. டியூப் புராடக்ட்ஸ் | 1,100 மெகா வாட். |
| 14. செட்டிநாடு சிமிண்ட்ஸ் | 1,100 மெகா வாட். |

இப்படி பல்வேறு நிறுவனங்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் அவர் களே மின் உற்பத்தி செய்துகொள்வதற்காக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் தான் ஆளுநர் உரையில் எங்களுடைய கொள்கையும் சொல்லப்பட்டிருக்கிறது. நாங்களாகவே மின் உற்பத்தி செய்துகொள்ள யார் முன்வந்தாலும், அவர் களுக்கு நாங்கள் உதவி செய்வோம் என்று சொல்லியிருக்கிறோமே தவிர, இது அண்ணாவின் கொள்கைக்குப் புறம்பானது என்ற வேறொன்றுமில்லை. இது அண்ணாவின் கொள்கைக்குப் புறம்பானது என்று எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் எடுத்து வைத்த தவறான வாதத்தை இங்கே தொடர்ந்து கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, எத்தனையோ தனியாருக்கு நூற்பாலைகள் தொடங்கு வதற்கான அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவுத் துறையில் மட்டு மின்றி தனியாருக்கும் அப்போது நூற்பாலைகள் தொடங்குவதற்கான அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவும் செய்த பிறகு மத்திய அரசை நம்பிட்டு இன்னும் பற்றாக்குறைதான் இருக்கிறது.

(திரு. எஸ். முத்து)

மாற்றாந்தாய்ப் போக்கில் நடந்து கொண்டிருக்கிறது. நிலக்கரியும் கொடுக்க மறுக்கிறது. நீரையும் கொடுக்க மறுக்கிறது. இந்தக் காரணத்தால்தான் தனியார்கள் தாங்களாகவே மின் உற்பத்தி செய்வதற்கு முன்வருவார்களா னால், அவர்களுக்குத் தேவையான அனுமதியை இந்த அரசு பெற்றுத் தரும் என்றுதான் நாங்கள் குறிப்பிட்டிருக்கிறோம்.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. ஆறுமுகம் எழுந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் உட்கார வேண்டும். இப்படி குறுக்கிடுவதை நான் அனுமதிக்கப் போவ தில்லை. ஓர் உறுப்பினர் பேசும்போது, ஏதாவது குற்றச்சாட்டைச் சொன் னால், அதை வேண்டுமானால் மறுக்கலாம். அதை விடுத்து எப்போது பார்த் தாலும் பேச்சின் இடையில் குறுக்கிடுவது என்பது சரியல்ல. நான் இதை அனுமதிக்கப் போவதில்லை.

**திரு. சோ. ஆறுமுகம்:** ஓர் உறுப்பினர் அவைக்குத் தவறான தகவலைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார் என்ற நிலையில் அதுவும் எங்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் பேசியதைத் தவறு என்று சொல்லும்போது . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் உட்கார வேண்டும். தவறான தகவல் என்றால், உறுப்பினர் பேசும்போது அதை மறுத்துப் பேச வேண்டுமே தவிர, இப்படி எதற்கெடுத்தாலும் எழுந்து குறுக்கிடுவதை நான் அனுமதிக்க முடியாது.

**திரு. சோ. ஆறுமுகம்:** எங்கள் கட்சி உறுப்பினர் திரு. நீலநாராயணன் சொன்னது அந்தக் கருத்தல்ல . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நான் சொல்லிக் கொண்டிருக்கும் போதே பேசிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் உட்கார வேண்டும்.

**திரு. சோ. ஆறுமுகம்:** எங்கள் கட்சியைப்பற்றித் தவறாக விமரிசனம் செய்யும்போது . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் பேசும்போது அதை மறுத்துப் பேசலாம். அதை விட்டுவிட்டு இப்படி எப்போது பார்த்தாலும் குறுக்கிடுவது சரியல்ல. உட்கார வேண்டும்.







**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினர்
திரு. ஆறுமுகம் என்ன சொல்லுகிறார் என்றால், "எங்கள் கட்சியைச் சார்ந்த
உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள் பேசும்போது இப்படிப்பட்ட
கருத்தைச் சொல்லவில்லை" என்கிறார்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அதை மட்டும் சொன்னால் போதுமே.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா எழுந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. இராதா உட்கார
வேண்டும்.

**திரு. சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன்
அவர்கள் தம் பேச்சில் என்ன குறிப்பிட்டார் என்பதை மட்டும் நான்
குறிப்பிட விரும்புகிறேன். "தொழில் துறையில் தனியார் தங்கள் தொழி
லுக்குத் தேவையான மின் உற்பத்தி செய்வதை அரசு அனுமதிக்க முடிவு
செய்துள்ளது என்பதை நான் வரவேற்கிறேன்" என்று சொல்லிவிட்டு
"தனியார் இலாபகரமாக மின் உற்பத்தி செய்ய முன்வருவார்களானால், அரசு
...தைப் பரிசீலித்துப் பார்க்கவும் விரும்புகிறது" என்று சொல்லியிருப்பதைத்
...ான் அவர் கண்டித்தார்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** சரி. மாண்புமிகு உறுப்பினர் திரு.
...முத்து அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

**திரு. எஸ். முத்து :** அடுத்து, முக்கியமான பிரச்சினை விவசாயப் பிரச்
...சினையாகும். பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களின்
20 அம்சத் திட்டத்தில் விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதை
வலியுறுத்தியிருக்கிறார். ஆனால், இந்த நாட்டில் விவசாய உற்பத்தியை
அதிகரிக்கத் தேவையான தண்ணீர் அவர்களுக்கு இல்லாமல் இருக்கிறது.
அதற்காக நாங்கள் பல ஆண்டுகளாகப் போராடி வருகிறோம். மேற்குத்
தொடர்ச்சி மலையிலிருந்து கேரளத்தின் உபரி நீர் வீணாகப் போய் அரபிக்
கடலில் கலக்கிறது. அந்த உபரி நீரைத் தமிழகத்திற்குத் திருப்பிக் கொடுத்
...தால் சங்கரன்கோயில், கோயில்பட்டி போன்ற தாலுக்காக்கள் செழிப்
...படையும். அதைப்போலவே காவிரி நீரினைக் கொஞ்சம் அதிகமாகக் கொடுத்
...தால், புதுக்கோட்டை, அறந்தாங்கி போன்ற பின் தங்கிய பகுதிகள் செழிப்
...படையக்கூடும். இவைகள் அனைத்திலும் மத்திய அரசுக்குப் பொறுப்பு
...இருக்கிறது. ஆகவேதான் சொல்லுகிறோம், விவசாய உற்பத்தி பெருக
...வேண்டும். 20 அம்சத் திட்டம் வெற்றி பெற வேண்டும் என்றால், விவசாயி

களுக்கு அதிகமான தண்ணீரை வாங்கித் தர வேண்டும். அந்த அரசுகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் மத்தியில் இருக்கிற பிரதமருக்கு இருக்கிறது. எனவே "உங்கள் அதிகாரத்தின் கீழ் உள்ள கருநாடக மாநில அரசுக்கு உத்தரவிடுங்கள்" என்று கேட்டுக் கொள்கிறோம். அதைப்போலவே "இன்றைக்கு உங்கள் அதிகாரத்தின் கீழ் வந்திருக்கிற கருணாகரன் தலைமையில் உள்ள அரசு கேரளத்து நீரைக் கொடுக்க வேண்டும்" என்று சொல்ல வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் அவையில் இல்லை என்று கருதுகிறேன். "உலக மக்களே ஒன்று சேருங்கள், உலகப் பாட்டாளிகளே ஒன்று திரளுங்கள்" என்று கற்றுக் கொடுத்தவர்களுடைய சர்க்கார் அன்றைக்கு இருந்தபோதும் அவர்களாவது தந்திருக்கலாம். அவர்களும் செய்யவில்லை. அதைச் செய்யாததன் காரணமாக விவசாயத்திற்கு மட்டுமல்ல குடி தண்ணீருக்கே நம் மக்கள் கஷ்டப்படும் நிலை இருக்கிறது. மதுரையில் உள்ள எங்களுக்குக் குடிநீர் வேண்டுமென்றால், அது கேரளத்திலிருந்துதான் வர வேண்டும். 12 மைல் தூரத்திலுள்ள கல்லார் நதியிலிருந்து தண்ணீர் வர வேண்டும். அது இடிக்கியாறு மூலம் அரபிக் கடலில் சென்று கலக்கிறது. அதிலிருந்து நமக்குத் தண்ணீர் கொடுத்தால் மதுரைக்கு வருகிற மக்கள் அவர்கள் யாராக இருந்தாலும், எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் அவர்களுக்கெல்லாம் நல்ல தண்ணீர் கிடைக்கும். இன்றையதினம் நாம் பாரதியின் நூற்றாண்டைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். நாட்டின் ஒற்றுமையைப் பற்றிப் பேசுகிறோம். ஒரு பகுதியில் அதிகமாக இருக்கும் ஒரு பொருளை நாட்டின் பிற பகுதிகளுக்கும் கொடுக்க வேண்டும் என்றெல்லாம் பேசுகிறோம் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசி முடியும்வரை, அவையின் அனுமதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 12-30)

**திரு. எஸ். முத்து:** மற்றவர்களுக்குக் கொடுத்து உதவுவதுதான் பண்பு. ஆனால் இன்றைக்கு அது இல்லை. ஆகவேதான் தமிழ் நாட்டிலே சில பகுதிகளில் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. முதுகுளத்தூர், கடலாடி, பரமக்குடி, தென்னாற்காடு மாவட்டத்தில் சிதம்பரம், தஞ்சாவூர் ஆகிய பகுதிகளுக்கு கதிர் அறுக்கப் போக வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தண்ணீர் கிடைத்தால்தானே விவசாயம் செய்ய முடியும். ஆனால் சுதந்திரம் கிடைத்து 34 ஆண்டுகள் ஆகியும்கூட, அதற்காகப் பலமுறை எடுத்துச் சொல்லியும், போராடியும்கூட, இன்றுவரை வீணாகப் போய்க் கொண்டிருக்கும்





தண்ணீரை நமக்கு வாங்கித் தர மத்திய அரசு முயற்சிக்காமல் இருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்று நாங்கள் அறியோம். மத்திய அரசின் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் போராடிப் பெறுவதால் நலமாக இருக்கும். அதுதான் முறை.

அடுத்தபடியாக, இங்கே சட்டம், ஒழுங்கு கெட்டுவிட்டது என்று ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். விமான நிலையத்திலே திரு. கருணாநிதியினுடைய குடும்பம் அவமானப்படுத்தப்பட்டது என்று சொன்னார்கள். அப்படி அவமானப்படுத்தப்பட்டிருந்தால், அதை நான் வரவேற்கவில்லை. இப்போது அவர் இந்த நேரத்திலே ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். "பாராளுமன்றத்தில் களோடு இருக்கும் நாவுக்கரசர் திரு. நாஞ்சில் மனோகரன், கொலை செய்ய ஆளை அனுப்பிக் கொலை செய்ய கட்டத்திற்குச் சென்ற என்னை ஊர் ஊராகப் போய் அன்றைக்குச் கருணாநிதி முயற்சித்தார்" என்று சொன்னார். அப்போது சட்டம் பட்ட பாடு அவர்களுக்குத் தெரியவில்லையா? இப்போது சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சொல்லுகின்றவர்களைப் பார்த்துக் கேட்கிறேன், சேலம் சிறைச்சாலையில் 22 பேரைச் சுட்டார்களே, அப்போது சட்டம் இல்லையா? இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது சிதம்பரத்தில் இராஜேந்திரனைச் சுட்டார்களே, அப்போது சட்டம் இல்லையா? பொள்ளாச்சியில் 40 பேரை இராணுவத்தினரை வைத்துச் சுட்டார்களே அப்போதும்தான் சட்டம் இருந்தது. அதற்குப் பிறகு முதுகுளத்தூரில் ஐந்து பேரைக் கட்டி வைத்து சுட்டு, மூன்று தாலுக்காவே தீப்பற்றி எரிந்தபோதும் சட்டம் இருந்தது. அதற்குப் பிறகு சேலம், கோவை ஆகிய இடங்களில் 16 விவசாயிகளைச் சுட்டார்களே அப்போதும் சட்டம் இருந்தது. நான் சொன்னாலும் கற்பனை கதைகளையெல்லாம் தள்ளிவிடுங்கள். இங்கே அமர்ந்திருக்கி ...ணிச் சொல்லுகிறேன் என்று சொல்லுவார்கள். அறுவை சிகிச்சை செய்து ...ரே 76 வயது பெரியவர், சமீபத்திலே கூட உட்கார்ந்திருக்கிறாரே . . தலைவர் ...ரண்டு வெற்றியோடு தமிழைக் காக்க ... பண்ணி

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** நான் அதை மறக்கும்படி ...ட்டால் நல்லது.

**திரு. எஸ். முத்து:** இந்த மன்றத்திற்குள்ளே நான் நுழைந்தபோது, மற்றவர்கள் எல்லாம் ...ரண்டொருவர் மட்டுமே தமிழிலே பேசுவார்கள், இன்றைக்கு இரண்டொருவர் தவிர ...ங்கிலத்திலேதான் பேசுவார்கள். மற்றவர்கள் எல்லாம் தமிழிலே பேச வைத்த பெருமை, சட்டச் சொற்களை தமிழிலே மாற்றி எங்களுக்குச் சொன்ன பெருமை, யார் ஒத்துக்கொண்...ர்களும், ஒத்துக்கொள்ளாவிட்டாலுங்கூட, அது தலைவர் அவர்களைத்தான் ...ரும் என்பதைச் சொல்வேன்.

இங்கே இருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் எம்.ஏ. படித்திருந்தாலும், நல்ல தமிழிலே பேசுவார். ஏனென்றால் அவர் நாகர்கோவிலிலிருந்து வருபவர். அவருக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். திரு. ஆசைத்தம்பி மறைவுக்கு நானும் தலைவர் அவர்களும் சென்றோம். என்னுடைய கார் அப்போது நொறுக்கப்பட்டது. வண்டியை எரியவிட்டாலும் பரவாயில்லை என்று நான் அன்று போனேன். தலைவர் அவர்கள் அங்கே சென்றபோது, அவருடைய மேல் துண்டை இழுத்து மீசையை இழுக்க சிலர் முயற்சித்தபோது, போலீசார் குறுக்கிட்டுக் காப்பாற்றினார்கள். இது சட்டம், ஒழுங்கைக் காப்பாற்றிய நிலைமையா என்று நான் கேட்கிறேன். இவைகளையெல்லாம் நடத்தியவர்கள்தான் இன்றைக்குச் சட்டம், ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சொல்லுகிறார்கள்.

அதைப்போலவே திரு. இராமமூர்த்தி அவர்கள் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் வரும்போது கறுப்புக் கொடி காட்டினாரோ இல்லையோ எனக்குத் தெரியாது, ஆனால் அவரையும் அடியடியென்று அடித்தார்கள். இது சட்டம், ஒழுங்கைக் காப்பாற்றுகிற தன்மையா? அதைப் போலவே செங்கற்பட்டிலே துரைராஜை அடியடியென்று அடித்து, மண்டையை உடைத்து கை, காலை உடைத்து ஆஸ்பத்திரியில் போட்டதுமல்லாமல் அவர் மீது பிரிவு 307-ன் கீழ் வழக்கையும் போட்டு அனுப்பியது. சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றிய செயலா? அவர்கள் இப்போது, சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது, நாட்டிலே பாதுகாப்பு இல்லையென்று சொல்லுகிறார்கள். நாட்டிலே எங்கே பார்த்தாலும் கொலை, கொள்ளை, திருட்டு, கற்பழிப்பு என்று சொல்லுகிறார்கள். ஆமாம், அதை நான் மறுக்கவில்லை. இமயம் முதல் குமரி வரை அதிகரித்திருக்கின்றன. இதற்கு என்ன காரணம் என்றால் இன்றைக்கு வருகிற சினிமா படம்தான். இன்றைக்கு வருகிற சினிமா படம் 75 வயதுடைய கிழவருக்குக் கூட காம உணர்ச்சியை ஊட்டி ஐந்து வயதுப் பெண்ணைக் கற்பழிக்கச் செய்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தயவுசெய்து வயதைச் சொல்லாமல் இருந்தால் நல்லது. 75 வயதுடைய எல்லோரும் அப்படித்தான் என்று நினைத்துவிடுவார்கள்.

**திரு. எஸ். முத்து :** இப்படி இருக்கிறது சட்டம் ஒழுங்கு. கற்பழிப்பு என்பது 5 வயதுச் சிறுமியைக் கற்பழிப்பது என்பது மட்டுமல்ல. யாராக இருந்தாலும், நண்பர்களாக நடித்து கற்பழித்தாலும், வேறு வகையிலே உதவி செய்கிறேன் என்று சொல்லி கற்பழித்தாலும் சரி, அரபு நாட்டிலே எப்படி நடு ரோட்டிலே வைத்து சுட்டுத் தள்ளுகிறார்களோ அதைப்போல





சிபாரிசு அவர்களை இங்கேயும் சுட்டுத்தள்ள இந்த அரசு மத்திய அரசுக்கு கற்பு செய்து அனுப்பினால்தான், இந்த நாட்டிலே சட்டம், ஒழுங்கு, நீதி, நிச்சயமாகக ஆகியவற்றைக் காப்பாற்ற முடியுமே தவிர, இல்லாவிட்டால் வந்து காப்பாற்ற முடியாது. இன்றைக்குக் கூட பெண்கள் ஊர்வலமாக அதை சினிமா போஸ்டர்கள் மீது சாணியை வீசி எறிந்திருக்கிறார்கள். பூராவும் நான் வரவேற்கிறேன். அந்த அளவிற்கு சினிமாத் துறை இந்தியா அறிவை மோசமாக ஆகிக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு வருகிற சினிமா சினிமாவாக, வளர்க்கிற சினிமாவாக இல்லாமல் ஆபாசத்தை வளர்க்கிற சினிமாவாக, மோசத்தை வளர்க்கிற சினிமாவாக, கற்பழிப்பதை வளர்க்கிற சினிமாவாக, கொள்ளையடிப்பதை வளர்க்கிற சினிமாவாக வந்து கொண்டிருக்கின்றது. நான இவைகளைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

முடித்துக் நேரம் ஆகிவிட்டதால் ஓர் உண்மையை மட்டும் சால்லி என்று கொள்கிறேன். பத்திரிக்கைச் சுதந்திரம் பறிக்கப்பட்டு விட்டது பத்திரிக் சொல்லியிருக்கிறார்கள். இது ரொம்ப நாளாக இருக்கிற பிரச்சினை. என்ன கையிலே கன்னா, பின்னாவென்று எழுதுகிறார்கள். இதற்கெல்லாம் அவதூறாக ஆதாரமோ தெரியாது. ஆனால் என்னைப் பொறுத்த வரையில், ஒருவேளை எழுதினால், சும்மா விடமாட்டேன். கேஸ் போட்டுவிடுவேன். எண்ணி, சென்னைக்கு மாற்றிக் கொண்டு வந்துவிடுவார்களோ என்று அதைப பத்திரிகை ஆசிரியர், ஏஜென்ட், பத்திரிகை விற்பனையாளர், அத்தனை படித்தவன், அதைக் கேட்டு எனக்குச் சொன்னவன் ஆகிய உயர்நீதிமன்றம் பேரையும் சேர்த்து கேஸ் போட்டு கோர்ட்டுக்கு இழுத்து கிடையாது. வரைக்கும் போய் தண்டனை வாங்கிக் கொடுக்காமல் விட்டதே போட்டபோது, முன்பு ஒருமுறை 'அலை ஓசை' பத்திரிகை மீது கூட கேஸ் எழுதி திரு. நீலநாராயணன் வந்து "என்ன அண்ணே, ஏதோ தெரியாமல் விட்டுவிட்டேன். விட்டுவிடு" என்று கேட்டபோது, கடைசியில் அவர் விட்டார்கள், மற்றபடி கரீம் முதல் கண்ணதாசன் வரை யாரையும் விட்டதில்லை. எத்தனையோ கதைபெல்லாம் கோர்ட்டில் சந்திக்காமல் விடுவதே இல்லை. பத்திரிகைகள் வருகின்றன. பத்திரிகை சுதந்திரம் பறிக்கப்பட்டுவிட்டது, குற்றச்சாட்டு. பத்திரிகை சுதந்திரம் இந்த அரசிலே இல்லை என்பது இந்த ஒரு குறிப்பை தலைவர் அவர்களே, தயவுசெய்து மன்னிக்க வேண்டும். நிறைய இருக்கிறது என்றாலும், மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். சொல்வதற்கு நேரம் இல்லை. நானும் ஒக்காளி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அதே கேஸ்தான் நானும்.

(பிற்பகல் 12-40)

திரு. எஸ். முத்து: அவர் சொல்கின்றார். அவசர நிலை பிரகடனத்தை எதிர்ப்பதாக அவர் கூறிக்கொண்டார். பின்னால், எந்த அவசரச் சட்டத்தை எதிர்ப்பதாக அவர் சொல்லிக்கொண்டாரோ அதையே பத்திரிகைகள் மீது அடக்குமுறையாக அவர் ஏவி விட்டார். 1975 ஜூன் 25-ம் தேதி முதல் 1975 டிசம்பர் 23-ம் தேதி வரை, மக்கள் குரல் பத்திரிகை 10 முறை 'கருணாநிதி ஆட்சியில் பறிமுதல் செய்யப்பட்டது; தென்னகம் ஏடு இதே கால கட்டத்தில் 8 முறை பறிமுதல் செய்யப்பட்டது. நவசக்தி ஏடு 4 முறை பறிமுதல் செய்யப்பட்டது.

குறிப்பாக 'மக்கள் குரல்' பறிமுதலுக்கு உட்படும் வகையில் வெளியிட்ட செய்திகளில் சில என்ன தெரியுமா? கேட்டால் சிரிப்பீர்கள், இப்போது கலைஞர் கூட சிரிப்பார், இப்போது,

அரிசி விலை உயர்ந்து வருகிறது என்று தணிக்கைக்கு உட்பட்ட 'இந்து' பத்திரிகை காலையில் செய்தி வெளியிட்டது. இந்த செய்தியை மாலையில் வெளியிட்டதற்காக 'மக்கள் குரல்' பறிமுதல் செய்யப்பட்டது.

அடுத்து சொல்கிறேன். "ஊழலை வெளிப்படுத்தி அரசு நடவடிக்கை எடுக்க மக்கள் குரல் உதவியது" என்று கருணாநிதி ஆட்சிக்கு பாராட்டு தரும் செய்தியை மக்கள் குரல் வெளியிட்டது. இதற்காக 1975 செப்டம்பர் 3-ஆம் தேதி, மக்கள் குரல் ஆண்டு விழா நடந்து கொண்டிருந்தபோது, அதன் அலுவலகத்திற்குள் போலீஸ் படை புகுந்தது. பத்திரிகை பறிமுதல் ஆயிற்று. 'ஊழல்' என்ற வார்த்தை மக்கள் குரலில் வந்ததுதான் ஒரே குற்றம், இந்தப் பறிமுதல் நடப்பதற்கு. இப்போது தி.மு.க. ஏடுகளில் ஊழலைத் தவிர வேறு ஏதாவது இருக்கிறதா?

சுருக்கமாகச் சொல்வதென்றால், கருணாநிதி ஆட்சியில் பத்திரிகை சுதந்திரம் பட்ட பாட்டிற்கு அவர் லட்சிய உறவு என்று பசப்பும் இந்திரா காங்கிரசின் தலைவரும், நாட்டின் பிரதமருமான இந்திரா காந்தி அவர்களே சான்றிதழ் வழங்கியிருக்கிறார்.

1976 ஜனவரி 6-ம் தேதி நாடாளுமன்றத்தில் பேசும்போது, திருமதி இந்திரா இப்படிக் குறிப்பிட்டார்:

"தி.மு.க. உறுப்பினர் பத்திரிகை சுதந்திரம்பற்றிப் பேசுவது எனக்கு வியப்பைத் தருகிறது.



அவர் கட்சியின் ஆளுகையில் இருக்கும் தமிழகத்தில் என்னையும், என் கட்சியையும் ஆதரிக்கும் மக்கள் குரல் பத்திரிகை 9, 10 முறை பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட கட்சியைச் சார்ந்தவர் பத்திரிகை சுதந்திரம் பற்றி பேசலாமா?"

திரு. சோ. ஆறுமுகம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மக்கள் குரல் பத்திரிகையைப் பற்றி, அவர் எழுதி வைத்துக் கொண்டு பேசுகிறாரா, குறிப்புகள் வைத்துக்கொண்டு பேசுகிறாரா?

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவரே குறிப்புக்கள் தயாரித்து வைத்துக் கொண்டுதான் பேசுவார். அவருடைய சொந்தக் கருத்துத்தான்.

திரு. எஸ். முத்து: மேலும் சொல்கிறேன். கருணாநிதி ஆட்சி தனக்கு வேண்டாத பத்திரிகைகளைப் பழி வாங்குகிறது என்பதற்காகவே முன் தணிக்கை அதிகாரத்தை மத்திய அரசு அதனிடமிருந்து பறித்தது. இது 1975 டிசம்பர் 23-ம் தேதி நடந்தது. இதற்குப் பிறகுதான் பத்திரிகை பறிமுதல் பழங்கதையாயிற்று, தமிழகத்தில்.

ஆசிரியர் வெளியிட்டாளர் இருவர் மட்டுமேதான் பத்திரிகையில் வெளி வரும் விஷயத்திற்குப் பொறுப்பு. மற்றவர்களைக் கைது செய்வது என்ன நியாயம் என்று கேட்கப்படுகிறது.

அவதூறு சட்டப்பிரிவு வேறு, பத்திரிகை ரிஜிஸ்திரேஷன் சட்டம் வேறு. அவதூறுக்குக் காரணமாக இருந்த எவர் மீது வேண்டுமானாலும் வழக்கு போடலாம், போடக்கூடாது என்ற தீர்ப்பு இதுவரை வரவில்லை.

ஆசிரியராகவோ, வெளியிட்டாளராகவோ இல்லாத சங்கரேஸ்வரன் என்ற நவசக்தி பத்திரிகையாளரை, பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் பூட்டியவர்தான் இந்த கருணாநிதி.

[illegible] குரல் [illegible] டைரக்டராக இருக்கும் [illegible] சண்முகவேலுவுடன் சேர்த்து கைது [illegible] அதன் ஆசிரியர், வெளியிட்டாளரான [illegible]

[illegible] தான் கருணாநிதி.

[illegible] சித்தப்பா ஒரு விவகாரி. போலீஸ் [illegible] அவர் [illegible] உறுப்பினர்களையும் [illegible]

[illegible] இருப்பதில் [illegible] கருணாநிதி.

[illegible]

ஆனந்த விகடன், குமுதம், கல்கி, ராஜாஜியின் சுவராஜ்யா இவை கருணாநிதி ஆட்சியில் பட்ட பாட்டினை பக்கம் பக்கமாக நீதிபதி சர்க்காரியா தமது கமிஷன் அறிக்கையில் வர்ணிக்கிறார்.

கொஞ்சம்கூட கூச்சம் இல்லாமல், திரும்பிப் பார்த்து தம்மை யார் என்று புரிந்துகொள்ளாமல், பச்சை அவதூறுகளுக்கு பத்திரிகை சுதந்திரம் கேட்கிறார்கள் கருணாநிதியும் அவரது கட்சியினரும். இது வெட்கக்கேடானது.

இதையெல்லாம் கூறி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து, அவை மீண்டும் 8—2—1982 திங்கட்கிழமை அன்று காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 12-46)

### 6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

92. Seventh Annual Report of the Poompuhar Shipping Corporation Limited for the year 1981 (English). (Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).

### B. Reports, Notifications and Other Papers.

19. Twelfth Report of the Committee on Public Undertakings on the action taken by the Government on the Recommendations contained in its First Report (1977-78) on the Audit Report on the Accounts of the Tamil Nadu Electrity Board for the year 1971-72. (Tamil and English).

20. Thirteenth Report of the Committee on Public Unertakings on the Recommendations contained in its First Report (1974-75) on the Annual Accounts of the Tamil Nadu Khadi and Village Industries Board for the years 1960-61 to 1965-66 (Tamil and English).

21. Fourteenth Report of the Committee on Public Unertakings on the action taken by the Government on the Recommendations contained in its Seventh Report (1977-79) on the Report (Commercial) of the Comptroller and Auditor General of India for 1973-74. (Tamil and English).



## இணைப்பு

(32-ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க)

திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் வட்டத்தில் உள்ள நாலுமாவடி, காமராசர் மேல் நிலைப்பள்ளியின் நிர்வாகத்தினர், உதவி பெறும் அப்பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களை 20—11—1981 நாளன்று, தேதியிடப்படாத பணி துறப்பு கடிதங்களை அச்சுறுத்தியும், கட்டாயப்படுத்தியும், அத்தகைய பணி துறப்பு கடிதங்களைப் பெற்றதாகவும், அத்தகைய 25—11—1981 நாளன்று வழங்கிடுவதற்கு மறுப்பு தெரிவித்த சில ஆசிரியர்களை தாக்கிய வகுப்பறையில், பள்ளி நிர்வாகி குண்டர்களின் துணைகொண்டு தாகவும், அவ்விதம் தாக்கப்பட்ட ஆசிரியர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும், இதன் காரணமாக, தூத்துக்குடி ஆசிரியர் சங்கம் இது குறித்து பள்ளி மேலாண்மை மீது நடவடிக்கை எடுக்கும்படி போராட்டம் நடத்தியதாகத் தெரிவித்து ஆசிரியர் மன்றங்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் ஆகியவர்களிடமிருந்து புகார் கடிதங்கள் அரசுக்கு வந்துள்ளன.

2. தூத்துக்குடி மாவட்டக் கல்வி அலுவலர் 20—11—1981 நாளன்றும், நெல்லை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் 18—12—1981 நாளன்றும், அப்பள்ளிக்கு நேரில் சென்று, பணிபுரியும் ஆசிரியர்களையும் தாக்கப்பட்டு சிகிச்சை பெறும் இரு ஆசிரியர்களையும் ஆசிரியர் சங்க நிர்வாகிகள் முதலியவர்களையும் சந்தித்து விசாரணை நடத்தினர். அவர்களது அறிக்கையின்படி பள்ளியில் பணிபுரிந்த இரு பட்டதாரி ஆசிரியர்களான திருவாளர்கள் எபன் சாம்சன் பிராங்க் மற்றும் நடராசன் பள்ளி வளாகத்தில் 27—11—1981 [illegible] பின்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு

அன்று விடுவிக்கப்பட்டதாகவும், இது தொடர்பாக, ஓர் குற்ற வழக்கு ஸ்ரீவைகுண்டம் நீதிமன்றத்தில் நடைபெற்று வருவதாகவும், தூத்துக்குடி மாவட்டக் கல்வி அலுவலர், தெரிவித்துள்ளார். பள்ளியை 18—12—1981 அன்று பார்வையிட்ட நெல்லை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் பள்ளியில் உள்ள மொத்த ஆசிரியர்கள் 25 பேரில் 21 பேர் வருகை தந்திருந்தனர் என்றும், பட்டதாரி ஆசிரியர்கள் திருவாளர் எபன் சாம்சன் பிராங்க் மற்றும் நடராசன் இடைநிலை ஆசிரியை திருமதி மேபல் மற்றும் தையலாசிரியை திருமதி பேரி சுந்தராபாய், ஆகிய நான்கு ஆசிரியர்கள் அன்று பள்ளிக்கு வரவில்லையென்றும் கூறியுள்ளார். அன்று பள்ளிக்கு வந்திருந்த ஆசிரியர்கள் பள்ளி நிர்வாகத்தினரால் தங்களுக்கு எவ்வித இடையூறும் இல்லையென்றும் நிர்வாகி தங்களிடம் தேதியிடப்படாத ராஜிநாமாக் கடிதம் ஏதும் வாங்கவில்லை என்றும் தெரிவித்தனர். பாதிக்கப் பட்ட ஆசிரியர்களை சமரசப்படுத்தி மீண்டும் பணியில் அமர்த்த தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பள்ளி நிர்வாகியிடம் தெரிவிக்கப் பட்டதாகவும் முதன்மைக் கல்வி அலுவலர் கூறியுள்ளார்.

3. மேலும் இது சம்பந்தமாக மேற்படி நான்கு ஆசிரியர்களையும் பள்ளி நிர்வாகத்தினருடன் சமரசம் செய்து மீண்டும் பணியேற்கச் செய்வதற்காக தூத்துக்குடி மாவட்டக் கல்வி அலுவலர், தூத்துக்குடி துணை மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஆகியோர் மூலம் உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கடந்த 6—1—1982 நாளன்று பள்ளிக் கல்வி இணை இயக்குநர், நெல்லைக்கு நேரில் சென்று இச்சம்பவம் குறித்து நேரிடை விசாரணை நடத்தினார். அப்போது பல்வேறு ஆசிரியர் சங்கங்களைச் சார்ந்த பிரதிநிதிகளும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும், சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியரும் வந்திருந்தனர். மேற்படி பள்ளி நிர்வாகக் குழுத் தலைவரும், பள்ளிச் செயலாளரும் சென்னை சென்றிருந்ததால் விசாரணையில் கலந்து கொள்ளவில்லை. 8—1—1982 அன்று மேற்படி பள்ளி நிர்வாகக் குழுத் தலைவர், பள்ளியின் செயலாளர், தலைமை ஆசிரியர் ஆகியோருடன் நெல்லை முதன்மைக் கல்வி அலுவலரின் அலுவலகத்தில் சம்பந்தப்பட்ட உறுப்பினர் பேச்சுவார்த்தை நடத்தி, மேற்படி நான்கு ஆசிரியர்களையும் மீண்டும் பள்ளியில் [illegible]



சம்மதம் தெரிவித்ததாகவும், ஆனால் குறிக்கப்பட்ட தேதியான 11—1—1982 அன்று மேற்படி நான்கு ஆசிரியர்களும் பள்ளிக்கு வரவில்லை என்று தெரிகிறது. அதன் அடிப்படையில் பள்ளி நிர்வாகம் நான்கு ஆசிரியர்கள் மீதும் குற்றம்சாட்டி 15—1—1982 நாளன்று பணி நீக்கம் செய்து பள்ளிச் செயலாளர் ஆணை பிறப்பித்துள்ளார். இவ்விதம் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ள ஆசிரியர்கள் பள்ளிச் செயலாளரின் பணி நீக்க ஆணைகளை எதிர்த்து மேல்முறையீடு செய்வதற்கும் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப் பட்டால் தீர்ப்பாயத்திற்கு இரண்டாவது முறையாக மேல் முறையீடு செய்வதற்கும் தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்தும்) சட்டத்தில் வழிவகையுள்ளது. முறையீடு ஏதும் ஏற்பட்டால் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

# INDEX TO TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES.

## SIXTY-FIRST SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

2nd, 4th to 6th February 1982.

VOLUME CLXXXII (Nos. 1 to 4.)

### A


| | PAGE |
|---|---|
| ABDUL LATIF FAROOKHI, THIRU | |
| Obituary reference *re* death of—, former Member of the Council ... ... ... ... | 1—2 |
| AGRICULTURAL INCOME-TAX RULES, 1955— | |
| Amendments to—, notification laid on the table | 75 |
| AGRICULTURAL PRODUCE MARKETS ACT, 1959— | |
| Declaration of South Arcot district as notified area for trade in brinjal, notification laid on the table ... ... ... ... ... ... | 75 |
| Inclusion of cholam, cumbu, ragi, gingelly, coconut and onion in 27 markets under—, notification laid on the table ... ... ... ... | 81 |
| AGRICULTURAL PRODUCE MARKETS RULES, 1962— | |
| Amendment to—, notification laid on the table ... | 78 |
| AGRICULTURAL UNIVERSITY— | |
| Annual Accounts of—for 1979-80, laid on the table ... ... ... ... ... ... | 45 |
| Audit Report of— for 1979-80, laid on the table ... | 84 |
| THIRU ANANDAM, V.V.V.— | |
| Condolence Resolution *re* death of Kakkan, Thiru P., former Minister of Tamil Nadu and Mohanlal Sukhadia, Thiru, former Governor of Tamil Nadu | 13—14 |
| Governor's Address, discussion on ... ... | 230 |

*A—cont.*

PAGES

ANNAMALAI NAGAR, MUTHIAH POLYTECHNIC—

Minister's attention called to closure of— due to strike of students ... ... ... ... 145—147

AQUARIUM—

Question *re* construction of a bigger—in Madras to attract tourists and educate children ... 124—127

ARANGANAYAGAM, the Hon. THIRU C.—

Annamalai Nagar Muthiah Polytechnic, statement *re* closure of—due to strike of students ... 146—147

Governor's Address, discussion on ... ... 162

Graduate Teachers, statement *re* direct action launched by—pressing their seven point demands 225—227

Kamarajar Higher Secondary School, Naalumaavadi, Tiruchendur taluk, Tirunelveli district, statement *re* certain atrocities committed on teachers by management of ... ... ... ... 321—32

ARRACK (MANUFACTURE) RULES, 1981—

Amendments to—, notifications laid on the table 78, 7

ARRACK (RETAIL SHOPS) RULES, 1981—

Amendment to—, notification laid on the table ... 7

ARRACK SUPPLY (SPECIAL PROVISIONS) RULES, 1981—

Introduction of—, notification laid on the table 7

ARUMUGAM, THIRU S.—

Governor's Address, discussion on ... ... 365, 368, 369, 375

ARUNACHALAM, THIRU K.—

Governor's Address, discussion on ... ... 196—200, 201—202

B

BHOODAN YAGNA ACT, 1958—

Declaration of certain villages as Gramdhan villages, notification laid on the table ... 73

Declaration of certain villages in Tiruchirappalli district and Manaparai taluk as Gramdhan villages, notification laid on the table 75, 78



PAGES

BUCKINGHAM CANAL—

Question *re* widening and deepening of—up to Vedaranyam for ferry service ... ... 134—137

BUSINESS ADVISORY COMMITTEE—

*See* Committees

C

CATERING ESTABLISHMENTS ACT, 1958—

Extension of—to Mamallapuram Township and Kailasapuram Town Panchayat areas, notification laid on the table ... ... ... ... 77

CEMENT—

Question *re* number of — permits and cement bags issued by Panchayat Union Commissioners of Mailam, Olakkur, Vanur and Merkanam in the past two years, monthwise ... ... ... 45

CHAIRMAN, Mr.—

Announcement *re*—

Amendments to Motion of thanks for Governor's Address ... ... ... ... 46

Business Advisory Committee, decision of ... 46, 245

Panel of Vice-Chairmen ... ... ... 47

Senate of Madurai-Kamaraj University, election to ... ... ... ... 321

Swearing in of Shanmugham, Thiru P.U. ... 20,

Condolence Resolution *re*—

Death of Kakkan, Thiru P., former Minister of Tamil Nadu and Mohanlal Sukhadia, Thiru former Governor of Tamil Nadu ... ... 17—20

Governor's Address, discussion on ... ... 160, 168, 227, 354, 362, 364, 368, 369, 370, 371, 372, 373, 374

| | PAGES |
|---|---|
| CHAIRMAN, Mr.—*cont.* | |
| Information *re*— | |
| Council Proceedings, extent of portions expunged by the Chair during Question Hour on 6th February 1982 ... ... ... ... | 323 |
| Madurai-Kamaraj University, election of two members to the Senate of ... ... ... | 47 |
| Obituary reference *re*— | |
| Death of Abdul Latif Farooki, Thiru, former Member of the Council ... ... ... ... | 1—2 |
| Death of Krishna Rao, Dr. M. V., former Member of the Council and Minister of Composite Madras State ... ... ... ... | 1—2 |
| Death of Rangaswamy, Thiru V., former Member of the Council ... ... ... ... | 1—2 |
| Death of Sakthi Mohan, Thiru R., former Member of the Council ... ... ... ... | 1—2 |
| Death of Somasundara Reddiar, Thiru A., former Member of the Council ... ... ... | 1—2 |
| Privilege Issue *re*— | |
| Governor's Address, information contained in—*re* assent by the President to Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1980 ... ... ... ... | 145 |
| HIT FUNDS RULES, 1964— | |
| Amendments to—, notification laid on the table ... | 79 |
| INEMAS (REGULATION) RULES, 1957— | |
| Amendment to—, notification laid on the table ... | 74 |
| OLLEGES— | |
| Question *re* Engineering Colleges, number of Backward Class and Scheduled Caste candidates selected in the general quota for admission in 1980 ... ... ... | 45 |



| | PAGES |
|---|---|
| COMMISSION OF ENQUARIY ACT— | |
| Seventh Interim Report of Justice Thiru W. S. Krishnaswami Naidu Commission, laid on the table | 86 |
| COMMITTEE(S)— | |
| Business Advisory Committee, decision of ... | 46 |
| Committee on Estimates, report on the action taken on recommendations in the report of—on "Co-operative Sugar Mills", laid on the table ... | 85 |
| Public Undertakings Committe— | |
| Fourth Report of—on the Report (Commercial) of Comptroller and Auditor-General of India for 1972-73, report on action taken on—, laid on the table ... ... ... ... | 85 |
| Report on action taken by Government on recommendations in Report on Annual Accounts of Khadi and Village Industries Board for the years 1960-61 to 1965-66 laid on the table laid on the table ... ... ... ... | 376 376 |
| Report on action taken by Government on recommendations in Report on Audit Report on accounts of Electricity Board for 1971-72, table ... ... ... ... ... ... | 376 |
| Report on action taken by Government on recommendations in Report on Report (Commercial) of Comptroller and Auditor-General of India for 1974, laid on the table ... ... | 376 |
| Second Report of—relating to Public Undertakings in the Report of Comptroller and Auditor-General for 1970-71, report on action taken on—, laid on the table ... ... | 85 |
| Question *re* Sales Tax Advisory Committee, holding of meetings of—at regular intervals ... | 301—304 |

D.


PAGES

DEPUTY CHAIRMAN, Mr.

Governor's Address, discussion on ... ... 50, 66, 72, 176, 180, 196, 201, 275, 276, 278, 282, 283, 284, 287, 340, 352, 353

DISTRICT DEVELOPMENT COUNCILS—

Annual Reports on activities of—for 1974-75, 1975-76, 1976-77 and 1977-78, laid on the table 83

DOSS, THIRU A. J.—

Governor's Address, discussion on ... ... 231—232, 234—236


E.


ELECTRICITY BOARD, TAMIL NADU—

Annual Administration Report for 1978-79, laid on the table ... ... ... ... ... ... 83

Audit Report for 1979-80 and Balance-sheet as on 31st March 1980, laid on the table ... ... 83

Budget for 1981-82, laid on the table ... ... 83

EMPLOYMENT EXCHANGES—

Question re number of Post-Graduates in M.A. (Tamil) registered in ... ... ... ... 46




E—*cont.*


PAGES

ENGINEERS—

Question *re*—

Construction of quarters for—of Highways Department ... ... ... ... ... 218

Deputation of—of Highways Department abroad to study the foregin technical know-how ...216—218

Engineering Graduates recruited by the department directly and through Public Service Commission, number of—from 1977 and regularisation of services ... ... ... ... 223—224

Starting of Staff Training College to impart training to the—in Highways Department in modern technical know-how ... ... ... 219

ERADHA, Thiru S. R.—

Governor's Address, discussion on ... ... 178, 250, 251, 258, 259, 260, 271, 275


G.


GENERAL SALES TAX ACT, 1959—

Amendments to Commercial Taxes and Religious Endowments Department Notification No. II (1) Commercial Taxes and Religious Endowments 239 (b)'81, dated 29th April 1981, notification laid on the table ... ... ... ... ... 79

Exemption of transfer of buses from one Tamil Nadu Transport Corporation to another in the State from—, notification laid on the table ... 203

GENERAL SALES TAX RULES, 1959—

Amendments to—, notification laid on the table ... 84

G—*cont.*

PAGES

GOVERNOR'S ADDRESS—

Announcement *re* amendments to Motion of Thanks for ... ... ... ... ... ... ... 46

Discussion on ... ... ... ... ... 48—72, 147—202, 227—288, 324—376

Laid on the table ... ... ... ... ... 86

Point of order *re* statement in—*re* assent by President to Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1980 ... ... ... ... ... ... 143—145

H.

HARIJAN WELFARE DEPARTMENT—

Question re Pre-vocational Instructors serving as Part-time teachers in—, disparity in pay eligibility and actual pay paid ... ... ... 43—44

HOUSING BOARD—

Question *re* rebuilding of—in Vedasendur taluk, Nagar opposite to Auroville quarters, illicit distillation of liquor and construction of huts in ... ... ... ... ... ... 220—222

I

INDIAN STAMP RULES, 1925—

Amendment to—, notification laid on the table 82

INDUSTRIAL UNITS—

Question *re* number of — with more than 300 employees remaining closed for more than three months as on 1-3-1981 and reopening of ... 315—320

INFORMATION *re*—

Council Proceedings, extent of portions expunged by the Chair during Question Hour on 6-2-1982 323



I—*cont.*

PAGES

INTER-CASTE MARRIAGE—

Question *re* supply of gold to — couple for making 'Thali' ... ... ... ... ... 42—43

IRRIGATION—

Question *re*—

Kiliyur-Perumathur Channel Mottanai, Perambalur taluk, Tiruchirappalli district, state of disrepair of ... ... ... ... 33

Number, estimated cost, etc. of—(New) Schemes taken up from 1977 ... ... ... 34—42

J

JANARTHANAM, Dr. T.R.—

Governor's Address, discussion on ... ... 48, 65, 250, 256

JEPPIAR, THIRU—

Governor's Address, discussion on ... ... 66, 154—166, 253

JUNIOR ASSISTANTS—

Question *re* higher start to — acquiring Degree after reaching pay of Rs. 380 in the scale of Rs. 350-10-420-15-600, denial of ... ... 121—123

K

KAKKAN, THIRU P.—

Condolence Resolution *re* death of —, former Minister of Tamil Nadu ... ... ... 2—20

KALAIMAGAL HIGH SCHOOL, VAIYAMPATTI, TIRUCHIRAPPALLI DISTRICT—

*See* Schools

KAMARAJAR HIGHER SECONDARY SCHOOL, NAALUMAAVADI, TIRUCHENDUR TALUK, TIRUNELVELI DISTRICT—

*See* Schools

PAGES

KANNAPPAN, THIRU Kaduvetti—
Governor's Address, discussion on ... ... 269, 270, 271, 272—273, 276, 277, 278, 279—281, 283, 284—286, 287—288

KODAGANAR DAM—
Question *re* rebuilding of—in Vedasendur taluk, Madurai district ... ... ... ... 137—138

KODAIKANAL TOWNSHIP—
Question *re* improvement of water-supply system in ... ... ... ... ... ... 315

KRISHNA RAO, Dr. M.V.—
Obituary reference *re* death of —, former Member of Tamil Nadu Legislative Council and Minister of Composite Madras State ... ... ... 1—2

L

LABOUR WELFARE BOARD—
Reconstitution of —, notification laid on the table 76

LAKSHMIKANDHAN, THIRU C.R.—
Annamalai Nagar Muthiah Polytechnic, calling Minister's attention to closure of—due to strike of students ... ... ... ... 145—147
Governor's Address, discussion on ... ... 229
Graduate Teachers, calling Minister's attention to direct action launched by — pressing their seven-point demands ... ... ... 225—227
Kamarajar Higher Secondary School, Naalumaavadi, Tiruchendur taluk, Tirunelveli district calling Minister's attention to certain atrocities committed on teachers by management of ... 321—323



PAGES

LAND IMPROVEMENT SCHEMES ACT, 1959—
Execution of soil conservation work in Dharmapuri and Salem districts, notification laid on the table ... ... ... ... ... 82

LAND REFORMS (COMPENSATION FOR SURPLUS LANDS) RULES, 1966—
Amendment to —, notification laid on the table 73, 81

LAND REFORMS (DISPOSAL OF SURPLUS LANDS) RULES, 1965—
Amendment to —, notification laid on the table 77, 80

LAND REFORMS (FIXATION OF CEILING ON LAND) RULES, 1962—
Amendments to —, notification laid on the table 75

LANDS—
Question *re* wet — in Thazhakkudi village, Thovalai taluk, Kanniyakumari district, representation *re* stay of proceedings for acquisition of — for construction of houses ... ... ... 139—141

LEELAVATHI, Selvi A.—
Governor's Address, discussion on ... ... 147—154

LEGISLATIVE COUNCIL—
Information *re* extent of portions in proceedings of — expunged by the Chair during Question Hour on 6-2-1982 ... ... ... ... 323

LIQUOR (LICENCE AND PERMIT) RULES, 1960—
Amendments to —, notification laid on the table 74, 75, 80

LIQUOR (LICENCE AND PERMIT) RULES, 1981—
Amendment to—, notification laid on the table ... ... ... ... ... 80,82

M

MADURAI CITY MUNICIPAL CORPORATION ACT, 1971—
Special rules relating to Madurai City Muncipal Corporation Class III Educational Service Rules, 1981, notification laid on the table ... 78
Special Rules relating to posts under Corporation Class I Service under Part III (1981), notification laid on the table ... ... ... 80

M—*cont.*


PAGES

MUNICIPALITIES—

Amendment to Municipal Works (other than Water Supply and Drainage Schemes) Rules, contained in paragraph 77 in Part I of Municipal Manual, Volume-I under section 304(d) of—notification laid on the table ... ... ... 77

MUNUSWAMY, THIRU P.—

Governor's Address, discussion on ... ... 229—230

MUTHIAH CHETTIAR, Dr. M.A.—

Governor's Address, discussion on ... ... 190—196, 261

MUTHU, THIRU S.—

Governor's Address, discussion on ... ... 68, 282, 283, 356—376

MUTHUSWAMY, THIRU S.—

Condolence Resolution re death of Kakkan, Thiru P., former Minister of Tamil Nadu and Mohanlal Sukhadia, Thiru, former Governor of Tamil Nadu ... ... ... ... ... 14—15

Governor's Address, discussion on ... ... 229—230, 251, 253, 256, 257, 259


N


NALLASIVAN, THIRU A.—

Condolence Resolution re death of Kakkan, Thiru P., former Minister of Tamil Nadu and Mohanlal Sukhadia, Thiru, former Governor of Tamil Nadu ... ... ... ... ... 12

Governor's Address, discussion on ... ... 228, 230, 232, 332—355

NEELANARAYANAN, Thiru—

Governor's Address, discussion on ... ... 57—72, 162

NURSERY SCHOOLS—

*See* Schools




O


PAGES

OBITUARY REFERENCE *re*—

Death of Abdul Latif Farooki, Thiru, former Member of the Council ... ... ... 1—2

Death of Krishna Rao, Dr. M.V., former member of Tamil Nadu Legislative Council and Minister of Composite Madras State ... ... 1—2

Death of Rangaswamy, Thiru V., former Member of the Council ... ... ... ... 1—2

Death of Sakthi Mohan, Thiru R., former Member of the Council ... ... ... ... 1—2

Death of Somasundara Reddiar, Thiru A., former Member of the Council ... ... ... 1—2

ORDINANCES LAID ON THE TABLE OF THE HOUSE—

Contingency Fund (Second Amendment) Ordinance, 1981 ... ... ... ... ... 86

Debt Relief (Third Amendment) Ordinance, 1981 86

Indian Penal Code and the Code of Criminal Procedure (Tamil Nadu Amendment) Ordinance, 1981 .. ... ... ... ... ... 85

Madras University, Annamalai University and Perarignar Anna University of Technology (Amendment) Ordinance, 1981 ... ... 85

Panchayat Union Councils (Appointment of Special Officers) Third Amendment Ordinance, 1981 85

Panchayats (Appointment of Special Officers) Third Amendment Ordinance, 1981 ... 85

Panchayats (Fifth Amendment) Ordinance, 1981 85

Panchayats (Fourth Amendment) Ordinance, 1981 85

Prevention of Dangerous Activities of Bootleggers, Drug-Offenders, Goondas, Immoral Traffic Offenders and Slum-grabbers Ordinance, 1982 86

Relief Undertakings (Special Provisions) Amendment Ordinance, 1981 ... ... ... 85

Tamil University Ordinance, 1981 ... ... 85

PAGES

MANDAKINI KRISHNAMURTHI, THIRUMATHI—

Governor's Address, discussion on ... ... 168—170

MANICKAM, THIRU P.—

Condolence Resolution *re* death of Kakkan, Thiru P. former Minister of Tamil Nadu and Mohanlal Sukhadia, Thiru, former Governor of Tamil Nadu ... ... ... ... ... ... 10—11

Governor's Address, discussion on ... ... 52, 340

MATTER OF URGENT PUBLIC IMPORTANCE—

Annamalai Nagar Muthiah Polytechnic, calling attention to closure of— due to strike of students ... ... ... ... ... ... 145—147

Graduate Teachers calling attention to direct action launched by— pressing their seven-point demands ... ... ... ... ... 225—227

Kamarajar Higher Secondary School, Naalumaavadi, Tiruchendur taluk, Tirunelveli district, calling attention to certain atrocities committed on teachers by management of ... ... ... 321—323

MEENAKSHISUNDARAM, THIRU K.—

Condolence Resolution *re* death of Kakkan, Thiru P., former Minister of Tamil Nadu and Mohanlal Sukhadia, Thiru, former Governor of Tamil Nadu ... ... ... ... ... 15—16

Governor's Address, discussion on ... ... 227—228, 247—250, 251, 252—258, 262—269, 270, 271, 272

MAKHAN, THIRU J.M.—

Condolence Resolution *re* death of Kakkan, Thiru P., former Minister of Tamil Nadu and Mohanlal Sukhadia, Thiru, former Governor of Tamil Nadu 12—13

Governor's Address, discussion on ... 257, 324—332



PAGES

MILK—

Question *re* yellowish powder found in— supplied by Madurai Milk Project during July 1981 ... 207—209

MOHANLAL SUKHADIA, THIRU—

Condolence Resolution *re* demise of—, former Governor of Tamil Nadu ... ... ... 2—20

MOTOR VEHICLES ACT, 1939—

Fixing number plates on cars with rivets, notification laid on the table ... ... ... 84

State Transport Appellate Tribunal Rules, 1977, amendment to—, notification laid on the table 77

MOTOR VEHICLES RULES, 1940—

Amendments to —, notification laid on the table 79, 80, 84

MOTOR VEHICLES TAX—

Concessional rate of—on Ambulance Jeep TNM 2303, notification laid on the table ... ... 78

Concessional rate of —on vehicle DEP 3233, notification laid on the table ... ... ... 74

Concessional rate of—on vehicle TND 4981, notification laid on the table ... ... ... 76

Concessional rate of—on vehicles belonging to St. Louis Institute for Deaf and Blind, Adyar, Madras, notification laid on the table ... 76

Exemption of vehicles belonging to Trade Representation of Czechoslovok Socialist Republic at Madras from—, notification laid on the table 8

Exemption of vehicles TMR 5341 and TMR 7392 from—, notification laid on the table ... 8

TAXATION RULES, 1934—

## P

PAGES.

PANCHAYATS ACT, 1958—
Rules for Personal Conduct of Officers and Servants of Panchayat Union Councils, amendment to—, notification laid on the table ... 76
Rules for the personal conduct of officers and servants of Panchayats, amendment to—, notification laid on the table ... ... ... 82

PANEL OF VICE-CHAIRMEN—
Announcement *re* 47

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—
Agricultural Income-Tax Rules, 1955, amendments to—(G.O. Ms. Nos. 18 and 2684, Revenue, dated 5th January 1981 and 1st December 1981 respectively) ... ... ... ... 75
Agricultural Produce Markets Act, 1959—
Amendment for inclusion of cholam, cumbu, ragi, gingelly, coconut and onion in 27 markets (G.O. Ms. No. 1455, Agriculture, dated 28th July 1980). ... ... ... ... 81
Declaration of South Arcot District, as notified area for trade in brinjal [G.O. Ms. No. 77, Agriculture (A.M.II), dated 12th January 1981] ... ... ... ... ... 75
Agricultural Produce Markets Rules, 1962—
Amendment to— (G.O. Ms. No. 2167, Agriculturl, dated 23rd September 1981) ... 78
Agricultural University—
Annual Accounts of—, for 1979-80 ... 45
Audit Report of—, for 1979-80 ... ... 84
Arrack (Manufacture) Rules, 1981, amendment to —(G.O. Ms. Nos. 59 and 65, Prohibition and Excise, dated 15th June 1981 and 21st June 1981 respectively) ... ... ... ... 78, 79
